



# மலைக்க வைக்கும்

# மாடக்கோயில்கள்

**கோ. வேணிதேவி**

**இரா. கலைக்கோவன்**


**டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்**

**சி 87, பத்தாம் குறுக்கு, தில்லைநகர் மேற்கு,**

**திருச்சிராப்பள்ளி-620 018.**

| | |
|---|---|
| நூலின் பெயர்: | மலைக்க வைக்கும் மாடக்கோயில்கள் |
| பொருள்: | கோயிற்கலை ஆய்வு |
| ஆசிரியர்கள்: | முனைவர் கோ. வேணிதேவி |
| | முனைவர் இரா. கலைக்கோவன் |
| பதிப்பாளர்: | டாக்டர் மா. இராசமாணிக்கனார் |
| | வரலாற்றாய்வு மையம், |
| | சி 87, பத்தாம் குறுக்கு, |
| | தில்லைநகர் மேற்கு, |
| | திருச்சிராப்பள்ளி – 620 018. |
| முதற் பதிப்பு: | 2011 |
| உரிமை: | ஆசிரியர்களுக்கு |
| மொழி: | தமிழ் |
| நூலின் அளவு: | 1/8 டெம்மி |
| தாள்: | 18.6 Kg. N. S. மேப்லித்தோ |
| எழுத்து: | 12 புள்ளி |
| பக்கங்கள் : | 384 |
| விலை : | ரூ. 300 |
| அச்சிட்டோர்: | அலமு பிரிண்டிங் ஒர்க்ஸ், |
| | 9, அய்யா தெரு, இராயப்பேட்டை, |
| | சென்னை – 600 014. |

தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை



அன்புடன் அம்மாவுக்கு

## ஆய்வு மைய வெளியீடுகள்

**மு. நளினி, இரா. கலைக்கோவனின்**

| | |
|---|---|
| பெண்தெய்வ வழிபாடு தோற்றமும் வளர்ச்சியும் | ரூ. 120 |
| வலஞ்சுழி வாணர் | ரூ. 120 |
| கோயில்களை நோக்கி . . . | ரூ. 120 |
| வாணன் வந்து . . வழி தந்து . . | (அச்சில்) |

**குடைவரை நூல்கள்**

| | |
|---|---|
| மகேந்திரர் குடைவரைகள் | ரூ. 100 |
| தென்தமிழ்நாட்டுக் குடைவரைகள் | ரூ. 100 |
| மதுரை மாவட்டக் குடைவரைகள் | ரூ. 150 |
| தென்மாவட்டக் குடைவரைகள் | ரூ. 200 |
| புதுக்கோட்டை மாவட்டக் குடைவரைகள் | ரூ. 300 |
| மாமல்லபுரம் குடைவரைகள் | (அச்சில்) |

**அர. அகிலா, இரா. கலைக்கோவனின்**

| | |
|---|---|
| ஒருகல் தளிகள் ஒன்பது | ரூ. 200 |

**இரா. கலைக்கோவனின்**

| | |
|---|---|
| திரும்பிப்பார்க்கிறோம் - தொகுதிகள் 1-4 *(ஒவ்வொரு தொகுதியும்)* | ரூ. 50 |

*நூல்களைப் பெற விழைவோர், நூல்களுக்குரிய தொகையுடன் அஞ்சல் செலவிற்கென ரூபாய் ஐம்பது சேர்த்து டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் என்ற பெயரில் எடுக்கப்பட்ட வரைவோலையாகத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவேண்டும்.*

டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்

சி 87, பத்தாம் குறுக்கு, தில்லைநகர் மேற்கு,

திருச்சிராப்பள்ளி - 620 018.

# முன்னுரை

ஒரு கண் மருத்துவனை வரலாற்றாய்வாளனாக மாற்றிய பெருமை சிராப்பள்ளியின் உறையூர் அருள்தரும் ஐவண்ணப் பெருமான் கோயிலுக்கே உரியதாகும். அந்தக் கோயிலின் சைக்கிள் சிற்பமும் கோயில் பற்றிய பிழையான தலவரலாற்றுக் குறிப்புகளுமே என்னை மாடக்கோயில்கள் பற்றிய ஆய்வில் நுழைய வைத்தன. உண்மைகளை அறிய இலக்கியங்கள், கோயிற் கலை நூல்கள், கல்வெட்டுகள் என ஒன்றன் பின் ஒன்றாய் எத்தனை ஒன்றிணைந்த துறைகளில் பயணப்படவேண்டியிருந்தது! கோச்செங்கணான், கோக்கோதை மார்பன் போன்ற வரலாற்று அரசர்களையும் கற்பனைப் படைப்பான கணைக்கால் இரும்பொறையையும் காண நேர்ந்த அந்தத் தொடக்கக் கால ஆய்வுக்களங்கள் நெஞ்சில் நிறைந்தவை. அவற்றின் விளைவாய்ச் செந்தமிழ்ச் செல்வியில் ஏறத்தாழ ஓராண்டளவிற்கு நான் எழுதிய முதல் ஆய்வுக் கட்டுரைதான், 'கோச்செங்கணான் யார்?'.

அந்தக் கட்டுரையைத் தொடர்ந்து மாடக்கோயில் ஆய்வு வளர்ந்தது. பதினெட்டு மாடக்கோயில்களை அடையாளப்படுத்தி அவற்றை ஒப்பீட்டாய்வு செய்த நிலையில்தான் மாடக்கோயில் என்ற கட்டுமான அமைப்பை விளங்கிக் கொள்ள முடிந்தது. தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை சிராப்பள்ளியில் நிகழ்த்திய துறை சார்ந்த மாநிலக் கருத்தரங்கில் அப்போதைய தொல்லியல்துறை இயக்குநர் முனைவர் இரா.நாகசாமியின் தலைமையில் என்னால் படிக்கப்பட்ட முதல் கட்டுரையாக, 'மலைக்க வைக்கும் மாடக்கோயில்கள்' அமைந்தது. 'தரமான ஆய்வுக் கட்டுரை' என்று அதைப் பாராட்டி என்னை உற்சாகப்படுத்திய முனைவர் இரா. நாகசாமிக்கு நான் கடமைப்பட்டுள்ளேன். ஆய்வுக்களத்தில் தொடர்ந்து நிற்கும் துணிவை அவருடைய அந்தப் பாராட்டும் தொடர்ந்து அவர் அளித்த வாய்ப்புகளுமே எனக்குத் தந்தன.

மாடக்கோயில்களைப் பற்றிய என்னுடைய கட்டுரைகளுள் பெரும்பான்மையானவற்றை வெளியிட்டு என்னை உற்சாகப்படுத்தியவர் செந்தமிழ்ச் செல்வியின் ஆசிரியர் திரு. இரா. முத்துக் குமாரசாமி ஆவார். அக்கட்டுரைகளின் வாயிலாக அறிமுகமான

உயரிய பண்பாளர் திரு. ந. ரா. முருகவேள், அறநிலையத்துறை வெளியிட்ட திருக்கோயில் திங்களிதழின் ஆசிரியராக அப்போது பொறுப்பில் இருந்தார். என் தந்தையாரின் அன்பிற்குரியராக இருந்த அப்பெருந்தகை சிராப்பள்ளி வந்து என்னைச் சந்தித்துத் திருக்கோயில் இதழில் தொடர்ந்து எழுதுமாறு வேண்டிக் கொண்டார். அவரது அன்பும் பழகிய பாங்கும் என்னைக் கவர்ந்தன. மாடக்கோயில்களைப் பற்றிய கட்டுரைகளைத் திருக்கோயில் இதழுக்குத் தந்தேன். அனைத்துக் கட்டுரைகளையும் வெளியிட்டு வாழ்த்தினார். சைவ சித்தாந்த அறிஞரான அப்பெருந்தகையுடன் எனக்கு ஏற்பட்ட நட்புறவு திருக்கோயில் ஆய்வுகளில் பெரிதும் துணைநின்றது.

தினமணிசுடரில் வெளியான தொல்லியல் கட்டுரைகளைப் படித்திருந்தமையால், மாடக்கோயில் ஆய்வுகளுள் ஒன்றாக மலர்ந்த வலிவலம் மனத்துளநாதர் கோயிலைப் பற்றிய கட்டுரையை அவ்விதழிற்கு அனுப்பிவைத்தேன். முன் பின் அறிமுகமற்ற நிலையிலும் சுடர் அக்கட்டுரையை வெளியிட்டு என்னைப் பெருமைப்படுத்தியது. அதன் வழி, தொடர்ந்து சில ஆண்டுகள் சுடரிலும் தினமணியிலும் கதிரிலும் எழுதும் வாய்ப்பமைந்தது. திருவாளர்கள் கி.கஸ்தூரிரங்கன், ஐராவதம் மகாதேவன், திருப்பூர் கிருஷ்ணன் ஆகியோரைச் சந்தித்துப் பழகும் வாய்ப்பும் கிடைத்தது.

மாடக்கோயில்கள் ஆய்வைத் தொடர்ந்து கரை உடைத்துப் பாயும் வெள்ளமென என் ஆய்வுப் பார்வைகள் பல திசைகளிலும் பயணித்துக் கரணங்கள், ஆடற்கலை, இலக்கியம், சிற்பங்கள், கல்வெட்டுகள், கட்டுமானக் கலை எனப் பல துறைகளிலும் பயன் நுகரத் தொடங்கியதில், மாடக்கோயில்கள் உள்ளத்தின் ஓர் ஓரம் சென்று ஒதுங்கின. பல ஆண்டுகள் அவற்றை நான் முற்றிலுமாய் மறந்திருந்தேன்.

1985ல் வாணி வழி எனக்கு அறிமுகமானவர் சீதாலட்சுமி ராமசாமி கல்லூரியின் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் கோ. வேணிதேவி. தம்முடைய அறச்சிந்தனைகளாலும் வரலாற்றின் பாலிருந்த அளவற்ற ஈடுபாட்டாலும் எங்கள் ஆய்வு மையத்துடன் ஒன்றிணைந்து உறவான நிலையில், மையத்தின்

பல்வேறு களப்பயணங்களில் கலந்துகொண்டு அவர் பணியாற்றியுள்ளார். முனைவர் ஆய்வு செய்யும் எண்ணம் மலர்ந்தபோது, 'கி. பி. 300க்கும் கி. பி. 600க்கும் இடைப்பட்ட தமிழகம்' அவருடைய தலைப்பாக அமைந்தது. அந்தக் காலகட்டத்து இலக்கியங்கள், கல்வெட்டுகள், அரசமரபுகள், கோயிற் கட்டுமானங்கள் குறித்துத் தரவுகள் தொகுப்பதென முடிவு செய்தோம். அப்போதுதான் நான் எழுதி வெளியிட்டிருந்த கோச்செங்கணான் பற்றிய கட்டுரையையும் மாடக்கோயில்கள் தொடர்பான கட்டுரைகளையும் வேணிதேவி படிக்கநேர்ந்தது. அவர் உள்ளம் கோச்செங்கணானிடம் தோய்ந்தது. தம்முடைய ஆய்வில் மாடக்கோயில்களை விரிவான அளவில் உட்படுத்திக் கொள்ள விழைந்தார். நான் ஆய்வாளனாக வடிவெடுக்கத் தொடங்கிய காலத்தில் செய்யப்பட்ட முதல் ஆய்வாக மாடக் கோயில்கள் அமைந்தமையால் அவை பற்றிய கட்டுரைகளில் முழுமையில்லாதிருந்தது. கட்டடக்கலைக் கூறுகளும் சிற்பக் கலைத் தரவுகளும் முறையாக அமையாதிருந்தன. அவற்றை வேணிதேவிக்கு உணர்த்தினேன். அவர் சிறிதும் தயங்காமல் மாடக்கோயில்களை மீளவும் ஆய்வு செய்யலாம் எனத் துணை நின்றார். அவரது உந்துதலே மாடக்கோயில்களை மீளாய்வு செய்யும் எண்ணத்திற்குக் காரணமாகி. ஐந்தாண்டுகள் தொய்வின்றி உழைக்கும் ஆற்றலைத் தந்தன.

நானும் என் வாழ்வரசியும் பதிவு செய்த மாடக்கோயில் ஆய்வுகள் கூட்டுப் பார்வையில் புதிய வடிவெடுத்தன. சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி வரலாற்றுத்துறைப் பேராசிரியர்கள் சீ. கீதா, மு. நளினி, மையத்தில் அப்போது மதிப்புறு கல்வெட்டாய்வாளராக இருந்த அர. அகிலா இவர்தம் துணையுடன் நானும் வேணிதேவியும் களஆய்வுகள் மேற்கொண்டோம். கல்வெட்டுகளைப் படிப்பதில் நளினியும் அகிலாவும் முனைய, கட்டமைப்புகளை ஆய்வதில் ஏனைய மூவரும் ஈடுபடுவோம். ஐந்தாண்டுகளில், வாய்ப்பமைந்தபோதெல்லாம் களப்பயணங்கள் நிகழ்ந்தன. பதினெட்டுக் கோயில்களில் பதினைந்து கோயில்களை ஆய்வுசெய்து முடித்த நிலையில், வேணிதேவியின் ஆய்வேடு முடிக்கவேண்டிய காலகட்டத்தை நெருங்கி நின்றது.

அதனால், மாடக்கோயில்கள் ஆய்வைத் தற்காலிகமாகத் தள்ளி வைத்து ஆய்வேட்டை நிறைவு செய்யும் பணியில் அவர் ஈடுபட்டார். முனைவர் பட்டம் பெற்றதும் ஆய்வைத் தொடரக் கருதியிருந்தோம். பல்வேறு காரணங்களால் சூழல்கள் அமையவில்லை. நாங்கள் ஒன்றிணைந்து பெருமுயற்சியுடன் நிகழ்த்திய மீளாய்வு முடங்கிப்போவதை விரும்பாத நான், வேணிதேவியுடன் கலந்துரையாடினேன். ஆய்வைத் தொடர அவர் மகிழ்வுடன் இசைந்தார். மூன்றாவது முறையாக மாடக்கோயில்கள் ஆய்வு முளைவிட்டது.

மூன்றாம் பருவ ஆய்வுக்குப் பெருந்துணையாக நின்றவர் பால. பத்மநாபன். அறநிலையத்துறையைச் சேர்ந்த வரலாற்றாய்வாளரான அவரும் அவருக்குத் அவரும் அவருக்குத் துணையாக துணையாக அமைந்த நாகபட்டினம் வருவாய்த்துறை உதவி வட்டாட்சியர் கா. இராமச் சந்திரனும் மாடக்கோயில்களைக் கண்டறியும் பணியில் போட்டி போட்டுக் கொண்டு கடந்த இரண்டாண்டுகளாக முனைந்து ஈடுபட்டதன் விளைவாக மாடக்கோயில்கள் எண்ணிக்கையில் பெருகி முப்பத்திரண்டாயின. அவ்விருவரின் ஆர்வமும் தேடலும் உடனிருப்பும் பரிவுமே மாடக்கோயில்கள் ஆய்வு முழுமையுறக் காரணமாயின.

இருவருள்ளும் பத்மநாபன் சிறக்கக் குறிக்கத்தக்கவர். திருக்கோயில் அலுவலர்களுடன் முன்கூட்டியே தொடர்பு கொண்டு உரிய ஏற்பாடுகள் செய்வது, பயணத் திட்டத்தை வகுப்பது, தங்குமிடங்களைத் தேர்ந்து பதிவு செய்வது என பத்மநாபனின் கூட்டுறவு எங்கள் களப்பயணங்கள் இனிதே அமையப் பெருந்துணையானது. பெரும்பாலான களஆய்வுகளின்போது உணவிட்டு அன்பு செய்த பத்மநாபனின் துணைவியார் திருமதி முத்துலட்சுமி, மகள் செல்வி உமா பிரியதர்ஷனி இருவரும் நன்றிக்குரியவர்கள். அத்தகு விருந்தோம்பல்கள் ஒன்றின்போது சிறப்புணவு செய்து வழங்கி எங்களைப் பெருமைப்படுத்திய பத்மநாபனின் தம்பி பா.கணேஷ் குமாரின் அன்பு குறிப்பிடத்தக்கது.

மாடக்கோயில் ஆய்வுப் பயணங்களுள் பெரும்பான்மையன குடந்தை நண்பர் சு. சீதாராமனின் துணையுடன்தான்

அமைந்தன. உணவு, உடனிருப்பு இவற்றுடன் நில்லாது மும்முறை ஓட்டுநராகவும் பொறுப்பேற்ற அந்த அன்புள்ளத்தின் பெருமையை இங்குப் பதிவு செய்வதில் மகிழ்கிறேன். எங்கள் பயணங்களுக்கு உறுதுணையாக இருந்த அவரது குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்குமே நாங்கள் நன்றியுடை யோம். வரலாறு மின்னிதழின் ஆசிரியர்கள் ச.கமலக்கண்ணன், ம. இராமச்சந்திரன் ஆகிய இருவரும் சில களப்பயணங்களை அமைத்துத் தந்ததுடன் உடன்வந்தும் உதவினர். அவர்களுக்கும் எங்கள் உளமார்ந்த நன்றி உரியது.

மாடக்கோயில் ஆய்வுக்குத் துணையிருந்த அறநிலையத் துறை இணை, துணை, உதவி ஆணையர்கள், நிருவாக அலுவலர்கள், ஆய்வாளர்கள், சிவாச்சாரியார்கள், பட்டாச்சாரியார்கள், கோயில் அலுவலர்கள், உதவியாளர்கள் ஆகிய அனைவருக்கும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். சுவாமிமலைக் கோயில் துணை ஆணையராக இருந்து இப்போது இணை ஆணையராகப் பொறுப்பேற்றிருக்கும் திரு.ச.இலட்சுமணன் களஆய்வுகளுக்குப் பேருதவியாக இருந்தமையுடன், நல்லூர் ஆய்விற்கு நேரிடையாகவே வந்திருந்து துணையிருந்தார். அவரது அன்பும் உடனிருப்பும் எங்கள் ஆய்வுகளைச் செழுமைப்படுத்தின. சிக்கல், நறையூர், கீழ்வேளூர், வலிவலம் ஆகிய கோயில்களின் அலுவலர்களும் நல்லூர் சிவாச்சாரியார் திரு. கண்ணனும் தலைச்சங்காடு பேராசிரியர் சி. பாலச்சந்திரன், திருவிளையாட்டம் கோயில் அறங்காவலர் இரா. ஜெய்சங்கர் குடும்பத்தாரும் களஆய்வின்போது உணவளித்தும் போற்றியதை இங்குக் குறிப்பிடவேண்டும். இப்பெருமக்களின் துணையிருப்பும் பேரன்புமே எங்கள் ஆய்வுகளைத் தொய்வின்றித் தொடர வைத்தன.

பெரும்பாலான மாடக்கோயில்களில் திருப்பணிகளின் காரணமாகக் கல்வெட்டுகள் பெரிதும் சிதைந்துள்ளன. படிக்க முடியாத நிலையில் உள்ள அவற்றின் பாடங்களை அறிய நடுவண் அரசின் கல்வெட்டு நிறுவனத் துணைக் கண்காணிப்பாளர் சூ. சுவாமிநாதன் துணைநின்றார். தேவைப்பட்ட அனைத்துக் கல்வெட்டுகளின் பாடங்களையும் ஒளியச்சுச்

செய்து அனுப்பிவைத்ததுடன் நாங்கள் புதிதாகக் கண்டறிந்த கல்வெட்டுகளையும் படியெடுத்துள்ள அவரது பேரன்பிற்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். சில மாடக்கோயில்களில் படிக்க இயலாத உயரங்களிலும் வேறு சில இடங்களில் துணுக்குகளாகச் சிதறியும் படிக்கப்படாத கல்வெட்டுகள் உள்ளன. கால நெருக்கடியின் காரணமாக அவற்றைப் படிக்கும் முயற்சி மேற்கொள்ளப்படவில்லை.

இந்நூலாக்கத்திற்கு மகிழ்ந்து வாழ்த்துரைத்த சீதாலட்சுமி ராமசாமி கல்லூரிச் செயலர் திரு. ரா. பஞ்சாபகேசன், ஒருங்கிணைப்பாளர் திருமதி வசந்தா பஞ்சாபகேசன், முதல்வர் முனைவர் கனகாபாஷ்யம் இவர்கள் அனைவருக்கும் உளமார்ந்த நன்றி.

இந்நூல் உருவாக அனைத்து வகைகளிலும் உறுதுணையாக இருந்தவர் மருத்துவர் திருமதி அவ்வை கலைக்கோவன். அவரது அன்பும் ஆற்றலுமே பின்புலமாய் இருந்து இந்நூலை வளர்த்துள்ளன.

அலமு பிரிண்டர்ஸ் திரு.து.இராமநாதன் தமக்கே உரிய தனித்தன்மையுடன் இந்நூலை வடிவமைத்துள்ளார். அவருக்கும் இந்நூலின் அட்டைப்படத்தை அமைத்தளித்த திரு. கிருஷ்ண மூர்த்திக்கும் எங்கள் நன்றி உரியது.

மாடக்கோயில்கள் பற்றிய ஆய்வைத் தொடங்கியபோது, 'இதுதான் மாடக்கோயில்' என்று தெளிவுபடுத்தி வழிகாட்ட எந்தக் கோயிற்கலை நூலும் உதவவில்லை. கட்டுமலை அல்லது மேடை மீது அமைந்த கோயில் என்ற அளவில்தான் தொல்லியல் அறிஞர்கள்கூட மாடக்கோயிலை விளக்கியிருந்தனர். களத்திற்குள் நுழைந்து செயல்பட்ட முதல் ஆய்வின்போதும்கூட தெளிவு கிடைத்துவிட்டதாகக் கூறமுடியாது. கோயிற் கட்டடக்கலை பற்றிய அடிப்படை அறிவு மட்டுமே பெற்றிருந்த அந்தக் காலத்தில் மாடக்கோயில் அமைப்பின் கட்டுமான நுணுக்கங்களை விளங்கிக்கொள்வது இயலுவதாக இல்லை.

இரண்டாம் கட்ட ஆய்வு, பேராசிரியர்கள் வேணிதேவி, கீதா இவர்தம் முனைவர் பட்ட ஆய்வுகளின்போது நிகழ்ந்த

மையால், மாடக்கோயில்களைத் தோழமையுடன் அணுக முடிந்தது. பல்லவர், பாண்டியர் கட்டுமானங்களை ஒருசேரக் கண்டிருந்த களஅநுபவங்கள் பெரிதும் கைகொடுத்தன. முதலாய்வின்போது விளங்காதிருந்த பல அடிப்படைகளை இரண்டாம் பருவ ஆய்வுகள் விளங்க வைத்தன. உரையாடல்கள், விவாதங்கள் இவற்றின் மூலம் நாங்கள் ஐவரும் களங்களில் பெற்ற விளக்கங்களும் விரிவான தரவுகளும் மாடக்கோயில்கள் ஆய்வைச் செழுமைப்படுத்தின. பெரும்பாலான களஆய்வுகளில் இந்நூலின் இணையாசிரியர் வேணிதேவியும் சில இடங்களில் அகிலாவும் நளினியும் முதன்மைப் பதிவாளர்களாக அமைந்து குறிப்புகள் சேர்த்தனர். இப்பருவ ஆய்வுகளின் போதுதான் வைகல், குடவாயில், நல்லூர்க் கோயில்களில் இருந்து புதிய கல்வெட்டுகளை நளினி கண்டறிந்தார்.

மூன்றாம் பருவ ஆய்வுகள் முழுமையும் பேராசிரியர் மு. நளினியின் துணையுடன் நிகழ்ந்தன. வேணிதேவியால் இவ்வாய்வுப் பயணங்களில் கலந்துகொள்ளக்கூடவில்லை. நான்காண்டுக் காலம் தொடர்ந்த இவ்வாய்வுகளின்போது பலரும் துணைநின்றனர். புதிய மாடக்கோயில்கள் பலவாய் இணைந்ததால் உழைப்புப் பெருகியது. மாடக்கோயில்கள் பற்றிய தெளிவான சிந்தனைகள் உருவெடுத்தன. அவற்றின் விளைவுதான் பேராசிரியர் மு. நளினியின் 'மாடக்கோயில்களின் வெற்றுத்தளம் ஓர் ஒப்பாய்வு' எனும் தலைப்பில் அமைந்த ஆய்வுக் கட்டுரை. கோயமுத்தூரில் நிகழ்ந்த தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் படிக்கப்பட்ட இக்கட்டுரை, அரங்கில் இருந்த அனைவர் கவனத்தையும் கவர்ந்து கருத்தில் நிறைந்தது. அதே அரங்கில் கட்டுரை படித்த மற்றோர் ஆய்வாளர் அவர் கட்டுரை தொடர்பாகக் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றிற்கு விடையிறுக்காமல், 'இது போன்ற நுட்பமான கேள்விகளுக்கெல்லாம் பேராசிரியர் நளினிதான் விடையிறுக்க முடியும்' என்று கூறி வியந்த நிலை எங்கள் மாடக்கோயில் ஆய்வுகளின் முழுமைக்குக் கிடைத்த பாராட்டென்றே கருதுகிறேன்.

தமிழ்நாட்டுக் கட்டடக்கலை வரலாற்றில் மாடக்கோயில் கட்டமைப்பு ஒரு மைல்கல். பேரெழுச்சியாக அமைந்த

தமிழனின் சிந்தனை வளம் காட்டும் இக்கட்டமைப்பு முதல் முறையாக விரிவான அளவில் பரந்துபட்ட ஆய்வுகளின் அடிப்படையில் நூலாகப் பதிவாவதில், இப்பணியில் ஈடுபட்ட அனைவரும் பெருமிதம் கொள்கிறோம். பல்லவர்களுக்கு முன்பே தமிழ்நாட்டில் கட்டுமானக் கலை பெருவளம் பெற்றுச் செழுமையுறத் திகழ்ந்தமைக்கும் ஆற்றல்மிகு தமிழ்நாட்டு அரசர்கள் இணையற்ற கலையறிஞர்களாகவும் திகழ்ந்தனர் என்பதற்கும் 'மாடக்கோயில்கள்' கண்முன் சான்றுகளாக நிலைத்துள்ளன. எங்கள் பார்வைகள் விரிந்த அளவில் கிடைத்த கட்டுமானங்கள் அனைத்தையும் இவ்வாய்வில் இணைத்துள்ளோம். விழி வழி வராத மாடக்கோயில்கள் தமிழ்நாட்டு மாவட்டங்களில் ஒளிந்திருக்கலாம். காணுவோர் தெரியப் படுத்தினால் இரண்டாம் தொகுதியை உருவாக்கலாம்.

இரண்டாம் பருவ ஆய்வுகளின் அனைத்துப் பொறுப்புகளையும் ஏற்று இந்நூல் உருவாக முழுமுதற் காரணமாக அமைந்த இதன் இணை ஆசிரியர் பேராசிரியர் முனைவர் கோ. வேணிதேவி இந்நூலின் பதிப்புச் செலவுகளையும் ஏற்றுள்ளார். மூன்றாம் பருவ ஆய்வுகளுக்கு யாதுமாகி நின்றவர் பேராசிரியர் மு. நளினி. இந்நூல் உங்கள் கைகளில் தவழ்வதற்கு இவர்கள் இருவருமே காரணர்கள். வரலாற்றிற்கு வாழ்க்கையையே தந்திருக்கும் இந்த அன்புள்ளங்களின் கையிணைப்பு ஆய்வுப் பயணத்தில் எனக்குக் கிடைத்த பெருங்கொடையாகும்.

அன்புடன்,

இரா.கலைக்கோவன்.

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | மாடக்கோயில்களும் மாமன்னரும் | 15 |
| 2. | பசுபதிகோயில் | 32 |
| 3. | நல்லூர் | 42 |
| 4. | ஆவூர் | 58 |
| 5. | ஆறைவடதளி | 68 |
| 6. | சேய்ஞலூர் | 74 |
| 7. | தலைஞாயிறு | 81 |
| 8. | நாலூர் | 90 |
| 9. | திருநறையூர் | 97 |
| 10. | குடவாயில் | 107 |
| 11. | நன்னிலம் | 116 |
| 12. | அம்பர் | 121 |
| 13. | வைகல் | 131 |
| 14. | மலையீசுவரம் | 137 |
| 15. | சட்டநாதர் கோயில் | 144 |
| 16. | கீழ்வேளூர் | 152 |
| 17. | சிக்கல் | 169 |

| | | |
|---|---|---|
| 18. | வலிவலம் | 178 |
| 19. | தேவூர் | 188 |
| 20. | தலைச்சங்காடு சங்காரண்யேசுவரர் | 198 |
| 21. | தலைச்சங்காடு தட்சிணபுரீசுவரர் | 208 |
| 22. | ஆக்கூர் | 211 |
| 23. | திருவிளையாட்டம் | 222 |
| 24. | பண்டாரவாடை | 234 |
| 25. | பெருவேளூர் | 239 |
| 26. | நாங்கூர் | 249 |
| 27. | நகரி | 254 |
| 28. | இந்தளூர் | 261 |
| 29. | கீழையூர் | 266 |
| 30. | திருப்பேர்நகர் | 273 |
| 31. | ஆலம்பாக்கம் | 279 |
| 32. | எலவானசூர்க்கோட்டை | 284 |
| 33. | பெருங்கடம்பனூர் | 304 |
| 34. | மாடக்கோயில்கள்– ஒப்பாய்வு | 306 |

# 1. மாடக்கோயில்களும் மாமன்னரும்

தமிழ்நாட்டில் மூன்று வகையான தளி அமைப்புகளைக் காணமுடிகிறது. அவற்றுள் குடைவரைகள் பாறையையோ, குன்றையோ அகழ்ந்து உருவாக்கப்பட்ட மண்டபத் தளிகளாக உள்ளன. ஒருகல் தளிகள் பாறையையோ, சிறு குன்றையோ மேலிருந்து கீழாகத் தேவைக்கேற்பச் செதுக்கி விமான அமைப்பில் வடிவமைக்கப்பட்டுள்ளன. செங்கல், கருங்கல், மணற்கல் இவற்றுள் ஏதேனும் ஒன்றையோ, இரண்டையோ கலந்து அடுக்கிக் கட்டப்பட்டுள்ள மூன்றாம் வகையினவான கட்டுத் தளிகளே தமிழ்நாட்டில் மிகுதியாகக் காணப்படுகின்றன. விமான அமைப்பை ஒட்டி வேசரம், நாகரம், திராவிடம், சாலை, தூங்கானைமாடம் என இவை வகைப்படுத்தப்பட்டுள்ளன.

கட்டுத்தளிகள் நிலத்திலோ, பாறை அல்லது குன்றுகளின் மீதோ அமைக்கப்பட்டன. இவ்விரு நிலைகளில் இருந்தும் வேறுபட்டுத் தளம் ஒன்றின்மீது அமைக்கப்பட்ட விமானங்களையே மாடக்கோயில்கள் என்கிறோம். தளம் என்ற சொல் கட்டுமானக் கலைச்சொல்லாகும். ஓர் இறையகத்தை விமானம் என்று அழைக்க வேண்டுமாயின், அக்கட்டுமானம் தாங்கு தளம், சுவர், கூரை, கழுத்து, தலை, உச்சிக்குடம் என்னும் ஆறு உறுப்புகளைப் பெற்றிருக்கவேண்டும். இந்த ஆறு உறுப்புகளுள் முதல் மூன்றும் இணைந்தே இறையகத்தின் தளத்தை உருவாக்குகின்றன. எஞ்சியன தளத்தின் மேல் அமரும் உறுப்புகளாக அமையும். இதனால், தளம் எனும் சொல் தாங்குதளம், சுவர், கூரை எனும் மூன்று உறுப்புகள் இணைந்த கட்டுமானத்தைக் குறிப்பது தெளிவாகும்.

மாடக்கோயில் கட்டுமானத்தில் இத்தகு தளம் ஒன்று நிலஞ் சார்ந்து அமைக்கப்படுகிறது. இத்தளம் இறையகம் பெறாது வெற்றுக் கட்டுமானமாக உருவாக்கப்படுவதால், இதை வெற்றுத் தளம் என்று அழைக்கிறோம். இத்தளத்தின் மீதே மாடக்கோயிலின் இறையகம் அதற்குரிய தளங்கள், உறுப்புகள் பெற்று அமைகிறது.

இவ்வமைப்பிற்கு மாடக்கோயில் எனப் பெயர் வழங்கப் பெறுவதன் காரணமே முதன்மை இறையகம் கீழ்த்தளத்தில் இல்லாமல் மேற்றளத்தில் இருப்பதுதான். மாடம் என்ற சொல்லுக்கு ‘உப்பரிகை', 'மாடி' எனும் பொருட்களை அகராதி கள் சுட்டுவது நினைக்கத்தக்கது. இவ்வகைக் கோயில்களை அவற்றின் அளவு காரணமாகப் பதிகங்களும் கல்வெட்டுகளும் 'பெருந்திருக்கோயில்' என்று கொண்டாடுகின்றன.

பல மாடக்கோயில் வளாகங்களில் பொதுவாக இறைவன் விமானம், சோமாஸ்கந்தர் விமானம் இவை மட்டுமே வெற்றுத் தளத்தின் மீது காணப்பட்டாலும், சில மாடக்கோயில் வளாகங்கள் அம்மன், ஆடவல்லான் விமானங்களையும் வெற்றுத்தளத் தின் மீது கொண்டுள்ளன. நகரி, சேய்ஞலூர் முதலிய மாடக்கோயில்களில் உடன்கூட்டத் தெய்வங்களின் விமானங்கள் கூட வெற்றுத்தளத்தின் மீது கட்டப்பட்டுள்ளன.

மாடக்கோயில்கள் பல்வேறு காலகட்டஞ்சேர்ந்த திருப்பணிகளுக்கு ஆளாகியிருப்பதால், வெற்றுத்தளக் கட்டமைப்பிலும் விமானங்களின் தோற்றத்திலும் எண்ணிறந்த மாற்றங்கள் விளைந்துள்ளன. சில மாடக்கோயில்களில் திருப்பணிகளையும் மீறிய நிலையில் பழங் கட்டடக் கூறுகளும் சிற்பங்களும் கல்வெட்டுகளும் தப்பிப் பிழைத்துள்ளன. மாடக்கோயில்களைப் பற்றிய விரிவான பதிவுகளே இத்தகு பழஞ் சுவடுகளையும் புத்தமைப்புகளையும் வெளிக்கொணர்வதுடன் மாடக்கோயில் வளாகம் பற்றிய கட்டுமானச் சிந்தனைகள், அங்குள்ள சிற்பச் செறிவுகள், செப்புத்திருமேனிகள், கல்வெட்டுகள் பற்றிய தெளிவான இருப்பு நிலைகளையும் தெளிவுபடுத்தமுடியும்.

ஆய்வுகளால் இதுநாள் வரை அறியப்பட்டுள்ள முப்பத்திரண்டு மாடக்கோயில்களில் இறையாநரையூர் விழுப்புரம் மாவட்டத்திலும் ஆலம்பாக்கம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலும் நாலூர், சேய்ஞலூர், பசுபதிகோயில், திருப்பேர்நகர், ஆறைவடதளி, நறையூர் ஆகிய ஆறும் தஞ்சாவூர் மாவட்டத்தி லும் அமைந்துள்ளன. நன்னிலம், ஆவூர், நல்லூர், பெருவேளூர், குடவாயில் ஆகிய ஐந்து கோயில்கள் திருவாரூர் மாவட்டத்தி லும் மலையீசுவரம், சட்டநாதர், சிக்கல், தேவூர், வலிவலம்,

கீழ்வேளூர், கீழையூர், தலைச்சங்காடு சங்காரண்யேசுவரர், தட்சிணபுரீசுவரர், ஆக்கூர், நாங்கூர், நகரி, இந்தளூர், பண்டாரவாடை, தலைஞாயிறு, திருவிளையாட்டம், அம்பர் பெருந்திருக்கோயில், வைகல், பெருங்கடம்பனூர் எனும் பத்தொன்பது கோயில்கள் நாகபட்டினம் மாவட்டத்திலும் இடம்பெற்றுள் ளன. முப்பத்திரண்டு மாடக்கோயில்களில் முப்பது கோயில்கள் தஞ்சாவூர், திருவாரூர், நாகபட்டினம் மாவட்டங்களில் அடங்கி உள்ளமை நோக்க, மாடக்கோயில் எனும் இப்புதிய கலை வடிவை உருவாக்கியதாகப் புலவர்களால் அடையாளப்படுத்தப்படும் சோழ மன்னர் கோச்செங்கணானின் ஆட்சிக்குட்பட்டிருந்த முதன்மை நிலப்பரப்பாக இம்மூன்று மாவட்டங்களை யும் கொள்ளலாம். முற்றிலும் புதியதான இக்கட்டமைப்பைத் தமிழ்நாட்டுக் கலைவரலாற்றிற்கு அறிமுகப்படுத்திய பெருமைக்குரிய இக்கோச்செங்கணான் யார்?

இருண்ட காலம் என்று வரலாற்று ஆசிரியர்களால் ஒதுக்கப்பட்டிருக்கும் கி. பி. 300க்கும் கி. பி. 600க்கும் இடைப்பட்ட தமிழ்நாட்டின் வரலாற்றுக் காலம் பல்வேறு துறைகளில் சிறப்பான மாற்றங்களையும் வளர்நிலைகளையும் உயரங்களையும் தமிழர்கள் பெற்ற காலம். இலக்கியம், எழுத்தியல், வாழ்க்கை, வணிகம், கலைகள் என இக்காலகட்டத்தில் செழுமையுற்ற பண்பாட்டுக் கூறுகளுள் பலவும் கூட்டு முயற்சியால் உயர்நிலை பெற்றவை.

இவர்தான் இப்படித்தான் இதைத்தான் இன்னவாறு வளர்த்தார், மாற்றினார், சிறப்புக்குரியதாக்கினார் என்று சுட்டமுடியாதவாறு பொதுமைக் காட்சிகளை மட்டுமே வரலாறு பார்வைக்கு வைக்கும் இந்தக் காலச் சூழலில்தான், ஒரு தனி மனிதர் புதுமை அவாவிய தம் சிந்தனைப் போக்கால் தமிழ் நாட்டுக் கட்டடக்கலையின் வியத்தகு திருப்புமுனைக்குக் காரணமானார். அவர்தான், நிலத்தளவே இருந்த கோயில் வளாகங்களிலிருந்து மாறுபட்டு வெற்றுத்தளங்களின் மேல் வீறு கொண்டு நிற்கும் மாடக்கோயில்களை உருவாக்கித் தமிழ்நாட்டுக் கலைவரலாற்றின் முதல் இமயமாய்த் திகழும் கோச்செங்கணான்.

சோழர்களின் குலக் கொழுந்தாய்த் தோன்றி இலக்கியம், கல்வெட்டு, செப்பேடு எனும் மூவகை ஆவணங்களிலும் தவிர்க்க முடியாதவாறு இடம்பெற்றுத் தனித்தோங்கி நிற்கும் அம்மாமனிதரைச் சில வரலாற்று ஆய்வாளர்கள் சங்கச் சோழராகக் கொள்ள, 1 வேறு சிலர் சங்கம் மருவிய கால (கி. பி. 300 - 600) அரசராக அடையாளப்படுத்துகின்றனர்?2 இச்சோழ அரசரைக் கணைக்கால் இரும்பொறையுடன் தொடர்புபடுத்துவது போலவே சேரமான் கோக்கோதை மார்பனுடன் இணைத்துப் பேசுவாரும் உளர. 3 சைவத்தில் தழைத்த நாயன்மார்களுள் ஒருவராகக் கோச்செங்கணானைக் கொண்டாடும் அதே நேரத்தில் அவரைத் திருமால் அடியவராகப் படம் பிடிப்பாரும் உளர்.4 செங்கணான் எடுப்பித்த எழுபது மாடக்கோயில்கள் சிவபெருமானுக்கா, திருமாலுக்கா அல்லது இருவருக்குமா என்பதிலும் கருத்தொற்றுமை இல்லை. இவற்றையெல்லாம் ஆவணச்சான்றுகளின் அடிப்படையில் ஆராய்வது தெளிவு தரும்.

செங்கட்சோழனைப் பற்றிய குறிப்புகளைப் புறநானூறு, களவழிநாற்பது, சம்பந்தர், அப்பர், சுந்தரர் தேவாரப் பதிகங்கள், பெரிய திருமொழி, திருத்தொண்டத்தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி, பெரிய புராணம், திருவானைக்கா புராணம், கலிங்கத்துப்பரணி, மூவருலா ஆகிய இலக்கியங்களில் காண முடிகிறது. அன்பில் செப்பேடுகளில் செங்கணான் பற்றிய குறிப்புகள் உள்ளன. திருவாலங்காடு, லெய்டன், வேலஞ்சேரிச் செப்பேடுகளும் கன்னியாகுமரிக் கல்வெட்டும் செங்கணானைக் கரிகாலன் வழித் தோன்றலாகவும் ஒன்பதாம் நூற்றாண்டினரான விஜயாலய சோழருக்கு முன்னோராகவும் அறிமுகப்படுத்துகின்றன.

இவ்விலக்கிய, கல்வெட்டுச் சான்றுகள் செங்கணானைக் கி. பி. ஆறாம் நூற்றாண்டிற்கு முற்பட்டவராக உறுதிப்படுத்து கின்றன. இந்த உறுதிப்பாட்டில் ஆய்வாளர்களுக்குள் கருத்து வேறுபாடு இல்லை. செங்கணான் சங்கச் சோழரா, சங்கம் மருவிய சோழரா என்பதுவே ஆய்வுக்குரிய செய்தியாகும். செங்கணானைச் சங்கச் சோழராகக் கொள்வார் அதற்கான காட்டுகளாக முன்வைப்பவை புறநானூற்றுப் பாடல் ஒன்றின்

அடிக்குறிப்பும் களவழிநாற்பது ஏட்டின் உரைகாரர் எழுதிய பின்குறிப்புமே ஆகும்.

'குழவிஇறப்பினும் ஊன்றடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளில் தப்பார்
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை இன்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணும் அளவை
ஈன்ம ரோஇவ் வுலகத் தானே" 5

இப்புறப்பாடலின் அடிக்குறிப்பில், 'சேரமான் கணைக்கால் இரும்பொறை சோழன் செங்கணானோடு திருப்போர்ப்புறத் துப் பொருது, பற்றுக்கோட்பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையில் கிடந்து, தண்ணீர் தாவென்று பெறாது, பெயர்த்துப் பெற்றுக் கைக்கொண்டிருந்து, உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு' என்று காணப்படுகிறது. இந்த அடிக்குறிப்பு இந்தப் பாடலைப் பாடிய புலவர் எழுதியதன்று என்பது, 'உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு' என்பதால் விளங்கும்.

புறநானூற்றுப் பாடல்களின் கீழ் உள்ள அடிக்குறிப்புகள் பிற்காலத்தில் எழுதப்பட்டவையாகும். அவை பல இடங்களில் பொருத்தமற்று விளங்குவது கண்கூடு. புறம் 389 ஆம் செய்யுளில்,

'ஆத னுங்கன் போல நீயும்
பசித்த வொக்கற் பழங்கண் வீட
வீறுசால் நன்கல நல்குமதி பெரும்'

என வரும் தொடர்களைக் கண்டதும், 'ஆதனுங்கனைக் கள்ளிலாத்திரையனார் பாடிய பாட்டு' என்ற அடிக்குறிப்பு தரப்பட்டுள்ளது. இங்கு, 'ஆதனுங்கன் போல நீயும்' என வரும் தொடரே, ஆதனுங்கன் உவமைக்காகக் கொள்ளப்பட்ட பெயர் என்பதை விளக்குகிறது. இவ்விளக்கத்தைப் பெறாமல், இது ஆதனுங்கனைப் பாடிய பாட்டு எனப் பிழையாக அடிக்குறிப்புச் செய்திருப்பது போலவே பிழைபட்ட இடங்களும் பொருத்த மற்ற அடிக்குறிப்புகளும் புறநானூற்றில் உள்ளன. அவ்வை சு. துரைசாமி உரை பெற்ற புறநானூற்றுப் பதிப்பில், 'இது

நல்லேர் முதியனைக் கள்ளில் ஆத்திரையனார் பாடியது' என இப்பாடலுக்கான அடிக்குறிப்பு மாறியுள்ளது. பதிப்பின் முன்னுரையில் உ. வே. சாமிநாத ஐயர் பதிப்பிற்கும் தம் பதிப்பிற் கும் உள்ள மாறுபாடுகளை விளக்குகையில் உரையாசிரியர் இம்மாற்றங்களைத் தமக்குக் கிடைத்த சுவடிகளில் இருந்து பெற்றதாகக் குறித்துள்ளார். இவ்வாறு பதிப்பிற்குப் பதிப்பு மாறும் அடிக்குறிப்புகள் கொண்டு ஒரு மன்னரின் காலத்தை முடிவு செய்வது சரியாகாது.

களவழிநாற்பது நூலின் இறுதியில் அதன் பழைய உரையாசிரியர், 'சோழன் கோச்செங்கணானும் சேரமான் கணைக்கால் இரும்பொறையும் போர்ப்புறத்துப் பொருதுடைந்தொழிச் சேரமான் கணைக்கால் இரும்பொறையைப் பற்றிக்கொண்டு, சோழன் செங்கணான் சிறை வைத்துழிப் பொய்கையார் களம் பாடி வீடு கொண்ட களவழிநாற்பது முற்றிற்று' என்று குறிப்பிடுகிறார். கணைக்கால் இரும்பொறையால் பாடப்பட்டதாகக் கூறப்படும் புறநானூற்றின் 74ஆம் பாடல், 'இது சேரமான் கணைக்கால் இரும்பொறை, செங்கணானால் குணவாயில் கோட்டத்துத் தளைப்பட்டபோது பொய்கையாருக்கு எழுதி விடுத்த பாட்டு' என்ற அடிக்குறிப்புடன் தமிழ் நாவலர் சரிதையில் காணப்படுகிறது. 6

புறநானூற்றின் அடிக்குறிப்பு கணைக்கால் இரும்பொறை ஒரு பாடலைப் பாடிச் சிறையில் இறந்தான் என்கிறது. தமிழ் நாவலர் சரிதையின் குறிப்பு இப்பாடல் பொய்கையாருக்குச் சேரனால் எழுதி விடுக்கப்பட்டது என்கிறது. களவழிநாற்பதின் குறிப்பு பாடலைப் பற்றி ஒன்றும் கூறாது, சேரன் சிறையில் இருந்தபோது பொய்கையார் போர்க்கள நிகழ்வுகள் பாடி இரும்பொறையை விடுவித்தார் என்கிறது. இம்மூன்று அடிக் குறிப்புகளும் ஒன்றுக்கொன்று முற்றிலும் முரண்பட்டு அடிக்குறிப்புகளின் நம்பகத்தன்மையைக் கேள்விக்குரியதாக்குகின்றன. புறநானூற்றின் அடிக்குறிப்பு கூறுமாறு சேரன் சிறையில் இறந்திருந்தால் களவழிநாற்பதின் உரைகாரர் காட்டும் சேரனின் விடுதலை பொய்யாகும். களவழியாரின் அடிக்குறிப்பை ஏற்போமானால், புறநானூற்று அடிக்குறிப்பு தவறாகிவிடும். இம்மூன்று அடிக்குறிப்புகளையும் அவை அடிப்படையிலேயே

முரண்பட்ட நிலையிலும் விடாது பற்றிய துடிசை கிழார் மூன்றுக்கும் ஒப்பச் சேரன் வரலாற்றை வடிவமைத்துள்ளார். 7

சோழனுக்கும் சேரனுக்கும் இடையில் பல போர்கள் நடந்ததாகக் கூறும் துடிசை கிழார் அவற்றுள் சிறந்தவை நான்கு என்கிறார். முதல் போர் குணவாயிற் கோட்டத்தில் கி. மு. 45ல் நடக்க, சேரன் தோற்றான். அதற்கான சான்றாகத் தமிழ் நாவலர் சரிதை அடிக்குறிப்புக் கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாம் போர் சோழநாட்டு வெண்ணிப்பறந்தலையில் கி. மு. 42ல் நிகழ, அதிலும் சேரன் தோற்றான். அதற்கான சான்றாக நற்றிணை முகவுரை காட்டப்பட்டுள்ளது.

மூன்றாம் போர் கழுமலத்தில் கி. மு. 40ல் நிகழ, அதிலும் தோற்ற சேரனைக் குடவாயிற் கோட்டச் சிறையில் அடைத்தார் சோழன். கடைச்சங்கப் புலவராகவும் செங்கணானின் நண்பராகவும் விளங்கிய பொய்கையார் செய்தி கேட்டுச் சோழன் வெற்றி குறித்துக் களவழி பாடிப் பரிசாகச் சேரனைச் சிறை மீட்டார். இதற்குச் சான்றாகக் களவழிநாற்பதின் உரைகாரர் கூற்று இடம்பெற்றுள்ளது.

நான்காம் போர் கொங்குநாட்டில் திருப்பூருக்கு அருகில் உள்ள கோயில்வெளியில் கி.மு. 35ல் நிகழ, அதிலும் சேரன் தோல்வியுற்றுச் சிறைப்பட்டான். அதுபோழ்துதான், 'குழவி இறப்பினும்' பாடலைப் பாடி உயிர் துறந்தான். இதற்குப் புறநானூற்றின் அடிக்குறிப்புத் துணையானது. அடிக்குறிப்புகளின் உண்மைத் தன்மையை ஆராயாமல் அவற்றை அப்படியே ஏற்று அவற்றிற்கேற்ப போர்களை அமைத்துத் தோல்வியின் முழுவடிவமாகச் சேரனைக் காட்டி இரண்டு முறை அவனைச் சிறையிலடைத்திருக்கும் துடிசை கிழாரின் வரலாற்றுப் பார்வை சரியன்று.

களவழிநாற்பதின் உரைகாரர் தந்திருக்கும் தகவல் பிழையானது என்பதற்குக் களவழி நாற்பதே சான்றாக நிற்கிறது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகக் கொள்ளப்படும் பொய்கையாரின் களவழிநாற்பது செங்கணானைப் பற்றியும் அவருக்கும் சேர வேந்தர் ஒருவருக்கும் கழுமலத்தில் நிகழ்ந்த போரைப் பற்றியும் விரிவாகப் பேசுகிறது. நாற்பது பாடல்களை

யுடைய இந்நூலில் ஐந்து பாடல்களில் செங்கட் சினமால் என்றும் மூன்று பாடல்களில் செங்கண்மால் என்றும் மூன்று பாடல்களில் திண்தேர்ச் செம்பியன் என்றும் பிற பாடல்களில் நீர்நாடன், புனல்நாடன் என்றும் கோச்செங்கட் சோழன் குறிக்கப்படுகிறார். முப்பத்தாறாம் பாடலில்,

'காவிரி நாடன் கழுமலம் கொண்ட நாள்

மாவுதைப்ப மாற்றார் குடையெலாம் கீழ்மேலாய்

ஆவுதை காளாம்பி போன்ற புனநாடன்

மேவாரை அட்ட களத்து'

என வரும் அடிகள் குறிப்பிடத்தக்கன. கழுமலம் கொண்ட நாள் என்னும் தொடர், போர் நடந்த இடத்தைத் தெளிவாகச் சுட்டுகிறது. அப்போரில் சோழனோடு பொருத பகையரசன் சேர வேந்தனே என்பதை,

'மைந்துகால் யாத்து மயங்கிய ஞாட்பினுள்

புய்ந்துகால் போகிப் புலான்முகந்த வெண்குடை

பஞ்சிபெய் தாலமே போன்ற புனநாடன்

வஞ்சிக்கோ அட்ட களத்து'

எனும் களவழியின் 39ஆம் பாடல் நிறுவுகிறது. செங்கணானோடு போரிட்ட இச்சேர அரசன் சிறைப்படுத்தப்பட்டது உண்மையா என்பதறியவும் களவழிநாற்பது உதவுகிறது.

-'அரசர் பிணங்கான்ற நெய்த்தோர் முரசொடு

முத்துடைக் கோட்ட களிறீர்ப்ப எத்திசையும்

பௌவம் புணரம்பி போன்ற புனநாடன்

தெவ்வரை அட்ட களத்து'

எனும் அதன் பாடலுக்கு உரையெழுதும்போது, 'நீர்நாட்டை உடைய கோச்செங்கட் சோழன் பகைவரைக் கொன்ற போர்க் களத்தில் அரசர் பிணங்கள் சிந்திய உதிர வெள்ளங்கள் எல்லா திசைகளிலும் முரசினோடு முத்தினை உடைய கொம்புகளை உடைய யானைகளை இழுப்ப, அவை கடலையும் அக்கடல் சார்ந்த மரக்கலங்களையும் ஒத்தன' என்று வேங்கடசாமி குறிப்பிட்டுள்ளார்.

களவழியின் 35ஆம் பாடலின்,

'உரைசால் உடம்பிடி மூழ்க அரசோடு

அரசுவா வீழ்ந்த களத்து'

என்ற அடிகளும் பொருளார்ந்தவை. 'புகழமைந்த வேல்கள் குளிப்ப அரசரோடு பட்டத்து யானை மறிந்து வீழ்ந்த களத்தின் கண்' என்பது இவ்வடிகளுக்கான உரையாக அமைந்துள்ளது. 39ஆம் பாடலின் இறுதி அடியில், 'வஞ்சிக்கோ அட்ட களத்து என்று பொய்கையார் குறிப்பிடுவதை, 'வஞ்சி அரசனாகிய சேரனைக் கொன்ற போர்க்களத்திலே' என்று உரை விளக்கம் தருகிறார் வேங்கடசாமி.

வேல் பட்டுப் பட்டத்து யானையும் அரசனும் வீழ்வதாக ஒரு பாடலிலும் அரசன் பிணத்திலிருந்து சிதறிய குருதி வெள்ளத்தில் யானை, முரசு முதலியன இழுபட்டுச் செல்வதாக மற்றொரு பாடலிலும் வஞ்சி அரசனாகிய சேரனைக் கொன்ற போர்க்களம் என்று பிறிதொரு பாடலிலும் கோச்செங்கணானுடன் பொருத சேர அரசனின் முடிவைப் பொய்கையார் மிகத் தெளிவாகப் படம் பிடித்திருந்தும் உரைகாரர் தம்முடைய பின் குறிப்பில் தவறான தகவல்களைப் பெய்திருப்பது நினைக்கத்தக்கது. அடிக்குறிப்புகள் நம்பிக்கைக்குரியவை அன்று என்பதற்கு இதனினும் சிறந்த சான்று வேறில்லை. இத்தகு பிழையான அடிக்குறிப்புகளை நம்பியே பின்னால் வந்த புலவர்களும் இருபதாம் நூற்றாண்டு அறிஞர்களும் வழிமாறிப் போயினர்.

ஒட்டக்கூத்தர் தாம் பாடிய மூன்று உலாக்களிலும் களவழி நாற்பதின் உரைகாரர் தந்திருக்கும் செய்தியைக் குறிப்பிடுகிறார்.

'மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப்

பாதத் தளைவிட்ட பார்த்திவனும்'

... பொறையனைப் பொய்கைக்குப் பண்டு

கொடுத்துக் களவழிப்பாக் கொண்டோன்'

'நல்லவன் பொய்கை களவழி நாற்பதுக்கு

வில்லவன் கால்தளையை விட்டகோன்'

இதையே ஜெயங்கொண்டாரும் கலிங்கத்துப்பரணியின் ராசபாரம்பரியத்தில்,

‘களவழிக் கவிதை பொய்கையுரை செய்ய உதியன்
கால்வழித் தளையை வெட்டியர சிட்டவனும்’

என்று குறிப்பிட்டுள்ளார். இப்பாடல்கள் அனைத்தும் அக்காலத்தே வழங்கிய கூற்றை நம்பி விளைந்தனவேயன்றி அவை உண்மையாகா. ஒட்டக்கூத்தருக்குப் பல நூற்றாண்டுகள் முன்னர் உருவாகிக் கோச்செங்கணானைப் பற்றிய விரிவான தரவுகளைத் தரும் பக்தி இலக்கியங்களோ, சோழர் மரபு வழியில் செங்கணானைக் குறிப்பிட்டுப் பேசும் செப்பேடுகளோ, கல்வெட்டுகளோ இப்புனைந்துரையைப் பகிர்ந்து கொள்ளாமை கருதத்தக்கது.

கழுமலத்தில் செங்கணானுடன் போரிட்ட சேரன் போர்க் களத்தில் மடிந்தார் என்பதே களவழி காட்டும் காட்சியாகும். எனில், போரில் சேரன் தோற்க, சோழன் அவனைச் சிறையில் அடைக்க, சேரனைச் சிறை மீட்கப் பொய்கையார் பாடியதே களவழிநாற்பது எனத் தொடுக்கப்பட்டிருக்கும் செய்திச்சுருளும் சிறையில் நீர்கேட்டுப் பெற்றும் அதைக் குடிக்காமல் பாட்டொன்று பாடி மடிந்தான் சேரன் என்பதும் காலங்காலமாய் வாழ்ந்து கொண்டிருக்கும் புனைகதைகளே என்பது தெளிவாதல் காண்க. களவழிநாற்பது சோழனின் வெற்றியைப் போற்றிப் பாடப்பட்டதே தவிர, அதற்கும் கழுமலப் போரில் ஈடுபட்ட சேரனுக்கும் எவ்விதத்தானும் தொடர்பின்மை அறிக.

கோச்செங்கணானைச் சங்கச் சோழராகக் காட்ட அறிஞர்கள் முன்னிருத்தும் இரண்டு காட்டுகளுமே பொருந்தாத நிலையில் சோழனோடு போர் செய்த சேர வேந்தன் கணைக்கால் இரும்பொறைதானா என்பதையும் அறியவேண்டியுள்ளது புறநானூற்றுப் பாடலின் அடிக்குறிப்பு ஒன்று தவிர, சங்கம் சார்ந்த இலக்கியங்களிலோ, கோச்செங்கணானைக் குறிக்கும் பிற இலக்கியங்களிலோ கணைக்கால் இரும்பொறையின் பெயர் இடம்பெறவில்லை. களவழி உரைகாரரின் கதையைப் போற்றிப் பாடும் ஒட்டக்கூத்தரும் ஜெயங்கொண்டாரும்கூட விடுதலை

பெற்ற சேரவேந்தனை உதியன், பொறையன், வில்லவன் என்று சுட்டியுள்ளனரே தவிர, பெயரிட்டு அடையாளப்படுத்தவில்லை. தகுதி வாய்ந்த சான்றேதும் இல்லாத நிலையில் பிழையான ஓர் அடிக்குறிப்பின் அடிப்படையில் செங்கணானோடு போரிட்ட சேரவேந்தன் கணைக்கால் இரும்பொறைதான் எனக் கொள்வது ஏற்புடையதன்று. அடிக்குறிப்பாளரின் கற்பனையில் வடிவம் பெற்ற அரசராகவே கணைக்கால் காட்சிதருகிறார். இந்நிலையில் சங்க இலக்கியங்கள் எவற்றிலும் சுட்டப் பெறாத கோச்செங்கட்சோழன் சங்க காலத்தவர் எனக் கொள்வது பொருந்துவதாகாது.

கோக்கோதை மார்பன் என்ற சேர மன்னனைப் பொய்கையார் பாடிய பாடல்கள் புறநானூற்றில் இரண்டும் நற்றிணையில் ஒன்றுமாய் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் புறநானூற்றுச் செய்யுள் 49,

'நாடன் என்கோ ஊரன் என்கோ

பாடிமிழ் பனிக்கடற் சேர்ப்பன் என்கோ

யாங்கன மொழிகோ ஓங்குவாள் கோதையை’

என அரசனை அடையாளப்படுத்த, 48ஆம் செய்யுள்,

'கண்ணா லும்மே கானலந் தொண்டி

அஃதெம் மூரே அவனெம் இறைவன்’

என அரசனின் ஊரை உறுதிப்படுத்துகிறது. 'என்கோ' என்றும் 'எம் இறைவன்' என்றும் கோக்கோதையைப் போற்றும் பொய்கையார்தான் அச்சேரனைப் போரில் கொன்ற செங்கணானைப் போற்றிக் களவழி பாடியவர் என்பது எங்ஙனம் பொருந்தும்? பாடல் அமைப்பும் ஆளப்பட்டிருக்கும் சொற்களுமே புறநானூற்றுப் பாடல்களும் களவழியும் இருவேறு காலகட்டங்களைச் சேர்ந்தவை என்பதையும் அவற்றைப் பாடியவர்கள் ஒரே பெயருடைய இருவேறு புலவர்கள் என்பதையும் தெளிவாய்ப் புலப்படுத்தும் நிலையில், கழுமலத்தில் உயிர்துறந்த சேரன் கோக்கோதை எனக் கொள்வதும் சரியாகாது.

சங்க இலக்கியங்கள் சுட்டாத கோச்செங்கணானைப் பதினெண் கீழ்க்கணக்கு நூலொன்றும் பக்தி இலக்கியங்களுமே

அறிமுகப்படுத்துகின்றன. முதற் பராந்தகர், சுந்தரசோழர், முதலாம் இராஜராஜர், முதலாம் இராஜேந்திரர் ஆகியோரால் வழங்கப்பட்டிருக்கும் வேலஞ்சேரி, அன்பில், லெய்டன், திருவாலங்காட்டுச் செப்பேடுகள் சோழர் மரபுவழி பேசுமிடத்துச் சங்க காலக் கரிகாலருக்கும் பிற்சோழர் தலைமகனான விஜயாலயருக்கும் இடையில் கோச்செங்கணானை நிலைப்படுத்தியுள்ளன. திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கோச்செங்கணானை பூமியைத் தாங்கும் பேரரசனாகப் படம்பிடிக்க, அன்பில் செப்பேடுகள் நாட்டின் பல பகுதிகளில் சிவபெருமானுக்குக் கோயில்களை எழுப்பியவராகச் செங்கணானை அடையாளப்படுத்துகின்றன. இவ்விரண்டு செய்திகளையும் செங்கணானைப் போற்றிப் பரவும் பக்தி இலக்கியங்களும் முன் வைப்பது எண்ணற்பாலது.

கோச்செங்கணானைப் போற்றிப் பரவும் திருமங்கை யாழ்வார் பெரிய திருமொழியின் திருநறையூர்ப் பதிகத்தில்,

‘வெங்கண்மா களிறுந்தி வெண்ணி யேற்ற
விறல்மன்னர் திறல்அழிய வெம்மா வுய்த்த
செங்கணான் கோச்சோழன்' என்றும் (1501)
'கவ்வைமா களிறுந்தி வெண்ணி யேற்ற
கழல் மன்னர் மணிமுடிமேல் காகமேற' என்றும் (1500)
'மின்னாடு வேலேந்து விளந்தை வேளை
விண்ணேறத் தனிவேலுய்த் துலகமாண்ட
தென்னாடன் குடகொங்கன்' என்றும் (1503)
'பாராளர் அவர்இவரென் றழுந்தை யேற்ற
படைமன்னர் உடல்துணியப் பரிமா வுய்த்த
தேராளன் கோச்சோழன்' என்றும் (1506)

மன்னரின் போர்ச் செயல்கள் குறித்து வண்ணித்துள்ளார். கோச்செங்கணானைக் குறிக்கும்போது தெய்வவாள் வலம் கொண்ட சோழன், தென்தமிழன் வடபுலக்கோன் சோழன், உலக மாண்ட தென்னாடன் குடகொங்கன் சோழன், தேராளன் கோச்சோழன் என்று பல அடைமொழிகள் தந்து சிறப்புச் செய்கிறார். செங்கணானோடு போரிட்ட வேந்தர்களும் கழல்

மன்னர், விறல்மன்னர், படைமன்னர் என்று போற்றப்பட்டுள்ளனர். இப்பாடல்களில் இருந்து செங்கட் சோழன் பல போர்களைக் கண்ட பெருவீரன் என்பதும் பெரும்படை கொண்ட மன்னர் பலரை வென்றவன் என்பதும் தென்னவனாய் உலகாண்ட மாமன்னன் என்பதும் புலனாகின்றன.

ஞானசம்பந்தரும் மூன்றாம் திருமுறையில், 'திறையுடை நிறைசெல்வன்' என்று இம்மன்னரைக் குறிப்பதால் 8 பல அரசர்களை வென்று திறை பெற்ற பெருவேந்தன் கோச்செங்கணான் என்பது தெளியப்படும். மங்கையாழ்வாரின் வடபுலக்கோன் என்ற சொல்லாட்சியும் விதந்து கொள்ளத்தக்கது. இது குறித்த இராசமாணிக்கனாரின் ஆய்வு ஆழ எண்ணத்தக்கது' 9

சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள மன்னர்களுள் கரிகாலர் தவிர வேறு எவரும் கோயில் கட்டுநர்களாக அறிமுகமாகவில்லை. போர்களே மிகுந்திருந்த அக்காலகட்டத்தில் வீரத்தின் வெளிப்பாடே விதந்து பேசப்பட்டது. கோயில்களைச் சுட்டும் மிகச் சில சங்கப் பாடல்களும் அவை வழிபாடு இழந்த நிலையில் இருந்தமையையோ, மக்கள் அக்கோயில்களை வழிபட்டுச் சென்றமையையோ மட்டுமே குறிக்கின்றன. கட்டியவர்களையோ, சீரமைத்தவர்களையோ அவை அடையாளப் படுத்தவில்லை. அந்தக் காலகட்டத்தில் கோயில்களின் பெருக்கத் திற்குத் தேவையில்லாமல் இருந்தது. மாறாகக் கோச்செங்கணானின் காலம் புறச் சமயங்கள் தமிழ்நாட்டில் கோலோச்சிய காலமாக அமைந்தது. அவற்றின் ஆளுகையில் இருந்து உள்நாட்டுச் சமயங்களைக் காப்பாற்ற வேண்டிய கடப்பாடு மன்னனுக்கு இருந்தது. அதனால்தான், கோச்செங்கணான் தம் ஆட்சிக்குட்பட்ட நிலப்பகுதியில் பக்தி இலக்கியங்களும் செப்பேடுகளும் போற்றிப் பெருமைப்படுத்துமாறு கோயில் கட்டும் பணியில் ஈடுபட்டார்.

'இருக்கிலங்கு திருமொழிவாய் எண்டோள் ஈசற்கு
எழில்மாடம் எழுபதுசெய் துலகம் ஆண்ட
திருக்குலத்து வளச்சோழன்' (1505)

என மங்கையாழ்வாரின் பெரிய திருமொழிப் பாசுரங்கள் அவரது கட்டுமானப் பணிகளை விதந்தோத, சைவப் பெரியார்

களான சம்பந்தரும் சுந்தரரும் வைகல், அம்பர், நன்னிலம், திருவானைக்கா, தண்டலை நீள்நெறி எனும் ஐந்து கோயில்களைச் செங்கணான் சிவபெருமானுக்கு எழுப்பியதாகக் கூறுகின்றனர்.

'வம்பியல் சோலைசூழ் வைகல் மேற்றிசைச்
செம்பியன் கோச்செங்க ணான்செய் கோயிலே" 10
'மடவனம் நடைபயில் வைகல் மாநகர்க்
குடதிசை நிலவிய மாடக் கோயிலே' " 11
'ஐயநன் பொருபுனல் அம்பர்ச் செம்பியர்
செய்யகண் சிறைசெய்த கோயில் சேர்வரே12
'அரிசிலம் பொருபுனல் அம்பர் மாநகர்க்
குரிசில்செங் கண்ணவன் கோயில் சேர்வரே'13
'செங்கட் பெயர் கொண்டவன் செம்பியர்கோன்
அங்கட்கரு ணைபெரி தாயவனே
வெங்கண்விடை யாயெம் வெணாவலுளாய்
அங்கத்தையர் வாயினள் பாயிழையே'14
'கோடுயர் வெங்களிற்றுத் திகழ் கோச்செங்கணான்செய்கோயில்
நாடிய நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனை"15

கிடைத்திருக்கும் சான்றுகள் கொண்டு நோக்கும்போது பின்வருமாறு உண்மைகளை வரிசைப்படுத்தலாம்.

1. கணைக்கால் இரும்பொறையைக் குறிக்கும் புறநானூற்றுப் பாடலின் அடிக்குறிப்பும் களவழிநாற்பதின் உரைகாரர் தந்துள்ள பின்குறிப்பும் அவற்றைப் பின்பற்றிய அனைத்து எழுத்துரைகளும் பாடல்களும் தள்ளத்தக்கவை.

2. களவழிநாற்பது செங்கணானின் கழுமல வெற்றி போற்றிப் பொய்கையாரால் பாடப்பட்டது. அப்போரில் செங்கணானோடு போரிட்ட சேர அரசன் களத்தில் வீழ்ந்து மடிந்தான்.

3. களவழி பாடிய பொய்கையாரும் கோக்கோதை மார்பனைப் பாடிய பொய்கையாரும் இருவேறு காலத்தில் ாழ்ந்த இருவேறு புலவர்களாவர்.

4. பொருந்தாத, பிழையான புறநானூற்று அடிக்குறிப்பின் பின் நின்று கோச்செங்கணானைச் சங்கச் சோழனாகக் கருதுவ தினும் பத்திமைக் காலச் சான்றுகள், சோழர் செப்பேடுகள் கொண்டு செங்கணானைக் கி. பி. ஆறாம் நூற்றாண்டுக்கு முற்பட்டும் சங்க காலத்திற்குப் பிற்பட்டும் வாழ்ந்த சோழப் பேரரசனாகக் கொள்வதே முறையாகும்.

செங்கணான் எழுப்பிய கோயில்கள் சிவபெருமானுக்கா, திருமாலுக்கா என்பது குறித்தும் செங்கணான் சிவனடியாரா, மாலடியாரா என்பது குறித்தும் தெளிவு காணும் முன் தமிழ் நாட்டின் வேறெந்த அரசருக்கும் கிடைக்காத பெருமையைச் செங்கணான் பெற்றுள்ளமை பதிவு செய்யத்தக்கது. தமிழ் நாட் டின் இருபெரும் சமயங்களாக விளங்கிய சைவமும் வைணவ மும் தழைக்க இம்மண்ணை ஆண்ட பல வேந்தர்கள் இவ்விரு சமயங்கள் சார்ந்தும் திருக்கோயில்கள் பல எழுப்பியுள்ளனர். எனினும், அவர்களைத் தங்களுக்குரியவர்களாக அடையாளப் படுத்த இச்சமயங்கள் போட்டியிடவில்லை. மாறாக, அதே செயலைச் செய்த கோச்செங்கணானை அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராக இணைத்துச் சுந்தரர் திருத்தொண்டத் தொகை பாட, வேறெந்த மன்னனையும் பாடாத வகையில் பத்துப் பாசுரங்களிலும் அவற்றை முடிக்குமிடத்து ‘செம்பியன் கோச்செங்கணான் சேர்ந்த கோயில் திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே' என்று கோச்செங்கணானைக் கொண்டாடிக் களிக்கிறார் மங்கையாழ்வார்.

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் பாசுரப் போற்றலும் முற்பிறவிக் கதையும் பெற்ற ஒரே மனிதர் கோச்செங்கணான்தான். சிலந்தியாகப் பிறந்து சிவலிங்கத்துக்கு வலையால் பந்தலிட்ட அவருடைய முற்பிறவி பற்றித் தேவாரப் பதிகங்கள் போலவே திருவாலங்காடு, வேலஞ்சேரிச் செப்பேடுகளும் எடுத்துரைக்கின்றன. ஆனால், இந்தச் சிலந்திக் கதையை மங்கையாழ்வார் கொள்ளவில்லை. அவர் கண்ணோட்டத்தில்

கோச்செங்கணான் பெரியதொரு நிலப்பரப்பை ஆட்சி செய்த மாபெரும் பேரரசர். நறையூரில் திருமாலுக்கு மாடக்கோயில் எழுப்பிய பெருந்தகையர்.

கோச்செங்கணான் சைவப் பெரியார்கள் குறிக்குமாறு போலச் சிவனடியாராக இருந்திருப்பின் நறையூர் மணிமாடம் கட்டப்பட்டிராது. மங்கையாழ்வாரும் கோச்செங்கணானைப் போற்றிக் கொண்டாடியிரார். நான்காயிரம் பாசுரங்களுடன் நாலாயிர திவ்வியப் பிரபந்தமாகப் பெருகியிருக்கும் வைணவப் பேரிலக்கியத்தில் பத்துப் பாசுரங்களைப் பெற்ற பெருமைக்குரிய ஒரே அரசன் கோச்செங்கணான் என்பதைக் கருதும்போது, அப்பெருமகனைச் சிவனடியாராக முன்னிருத்த முடியவில்லை. தமிழ்நாட்டுச் சமயங்களான சைவத்தையும் வைணவத்தையும் தம் இரு கண்களாகப் போற்றிய சமயப் பொறையுடைய பெருவேந்தராகவே அவர் காட்சிதருகிறார்.

அவருடைய ஆளுமையிலும் கோயிற்கட்டுமானப் பணிகளிலும் உளமிழந்த சைவர்கள் சிலந்திக் கதையுடன் அவரை நாயன்மார்களுள் ஒருவராக்கி சைவக் கோயில்களில் எழுந்தருளச் செய்தனர். சைவத்திற்கும் வைணவத்திற்கும் அவர் செய்த தொண்டு இரு சமயங்களாலும் ஒன்று போல் ஏற்கப்பட்டமை யால்தான் வேறெந்தப் பேரரசருக்கும் கிடைக்காத பெருமையான இரு சமயப் பேரிலக்கியங்களிலும் இணையான இடம்பெறும் தவப்பேறு அவருக்கு வாய்த்தது. தமிழ்நாட்டில் கடந்த ஈராயிரம் ஆண்டுகளில் அந்தப் பேற்றினைப் பெற்ற ஒரே அரசராக வெளிப்படும் கோச்செங்கணானின் மாடக்கோயில்கள் தமிழ் நாட்டுக் கலைவரலாற்றின் முதல் திருப்புமுனை என்பதைத் தமிழர்கள் பெருமையுடன் கொண்டாடலாம்.

குறிப்புகள்

1.தி.வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, ப. 4.

2.மா. இராசமாணிக்கனார், சோழர் வரலாறு, ப. 13.

3.ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளை அவர்களின் வியாக்கியானம், ப.127.

4.பி. தி. சீனிவாச ஐயங்கார், பல்லவர் சரித்திரம், ப. 114.

5புறநானூறு: 74.

6.தமிழ் நாவலர் சரிதை, ப. 130.

7.துடிசை கிழார், பண்டைக் காலச் சேர மன்னர்கள், ப. 299.

8.திருமுறை 3: 18.

9.மா. இராசமாணிக்கனார், சோழர் வரலாறு, ப. 13.

10.திருமுறை 3: 18.

11. திருமுறை 3: 18.

12. திருமுறை 3: 19.

13.திருமுறை 3: 19.

14.திருமுறை 2: 23.

15.திருமுறை 7: 98.

---

# 1. பசுபதிகோயில்

தஞ்சாவூர் கும்பகோணம் சாலையில் தஞ்சாவூரிலிருந்து 14 கி. மீ. தொலைவில் உள்ளது பசுபதிகோயில். இவ்வூரில்தான் புகழ்பெற்ற புள்ளமங்கலத்து ஆலந்துறையார் கோயில் பிரம்மபுரீசுவரர் என்ற புதுப் பெயருடன் நெடுஞ்சாலையின் இடப்புறத்திலும் கள்ளபசுபதி கோயில் என்றழைக்கப்படும் பசுபதீசுவரர் கோயில் நெடுஞ்சாலையின் வலப்புறத்திலும் அமைந்துள்ளன!1 நெடுங்காலமாகப் பராமரிப்பின்றிப் பழுதடைந்திருந்த பசுபதீசுவரர்கோயில் அண்மைக் காலத்தே திருப்பணிக்காளாகி புதுவடிவம் பெற்றுள்ளது.

கோயில் வாயிலை அலங்கரிக்கும் முத்தளக் கோபுரத்தின் கபோதபந்தத் துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம் பெற்ற கீழ்த்தளம் மட்டுமே கருங்கல் பணியாக உள்ளது. கொடிக்கருக்குப் பாதமும் நாகபந்தமும் பெற்ற எண்முக அரைத்தூண் கள் அணைத்த சுவரும் வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் அலங்கரிப்பற்ற கூரையுறுப்புகளும் கொண்டுள்ள இத்தளத்தின் சாலைப்பத்தி புறந்தள்ளி இருப்பதுடன், தாங்குதளத்தில் தாமரை ஜகதி, உருள்குமுதம், கண்டம், கபோதம், கண்டம், பட்டிகை என மாறுபட்ட உறுப்புகளும் கொண்டுள்ளது. சாலைப் பத்தியின் அணைவுத்தூண்களும் இந்திரகாந்தமாக மாறியுள்ளன.

வாயிலின் இருபுறத்தும் சுவரில், வாயில் நோக்கிய ஒருக்கணிப்பில் சிறிய அளவிலான காவலர் சிற்பங்கள் உள்ளன. மகுடம், குண்டலங்கள், சரப்பளி, தோள், கை வளைகள், இடைக்கட்டுடனான சிற்றாடை, தாள்செறிகள் அணிந்துள்ள இருவருள், தெற்கர் வல முன் கையை அருகில் உள்ள பாம்பு சுற்றிய உருள்பெருந்தடி மேல் இருத்திப் பின்கையால் வியக்க, இடக்கைகள் எச்சரிக்கைக் குறிப்பிலும் போற்றி முத்திரையிலும் உள்ளன. மேலே அமர் சிம்மம். இட முன் கையை உருள் பெருந்தடி மேல் இருத்தியுள்ள வடக்கரின் வலக்கைகள் எச்சரித்துப் போற்றுகின்றன. இடப் பின் கையின் முத்திரையில் தெளிவில்லை. அவர் தடியருகே முகத்தைத் திருப்பியவாறு சிம்மம் ஒன்று நிற்கிறது.

**வாயில் சிற்பங்கள்**

கோபுரவாயிலின் சுவர்களில் சிறிய அளவிலான சிற்பங்கள் பல இடம்பெற்றுள்ளன. சிவலிங்கமும் நந்தியும் காட்டப் பட்டுள்ள ஒரு சிற்பத்தில், இரண்டிற்கும் இடையில் துளைக்கைக் குடத்திலுள்ள நீரால் இலிங்கத்தை முழுக்காட்டும் யானை. இலிங்கத்தின் இடப்புறம் வணங்கிய கைகளுடன் சரப்பளியும் நீள்செவிகளுமாய் மகுடம் அணிந்த ஆடவர் ஒருவர் அர்த்த பத்மாசனத்தில் உள்ளார். இரண்டாம் சிற்பம் சடைமகுடம், மீசை, தாடியுடன் கணுக்கால்வரை நீளும் இடையாடை அணிந்தவராய் இறைக்கோயில் நோக்கி வணங்கிய கைகளுடன் நிற்கும் முதியவரைப் படம்பிடிக்கிறது. இலிங்கபாணத்தைத் தன்னுடலால் சுற்றியபடி, இறைவனுக்குக் குடை பிடிக்குமாறு ஐந்து தலைகளையும் விரித்துள்ள பாம்பும் அதன் அரவணைப்பில் மகிழும் இலிங்கத்திருமேனியும் மற்றொரு சிற்பத்தில் இடம்பெற்றுள்ளன. குருதி கசியும் இறைவனின் கண்ணை அடையாளப்படுத்தத் தம் வலக்காலை இலிங்கத்தில் ஊன்றிய நிலையில் அம்பால் கண்ணகழும் கண்ணப்பரும் அச்செயலைத் தடுக்குமாறு கைநீட்டியுள்ள சிவபெருமானும் நான்காம் சிற்பமாகியுள்ளனர். ஐந்தாம் சிற்பத்தில் இலிங்கத்திருமேனிக்கு யானை ஒன்று மலர் சூட்டுகிறது.

சோழர் காலச் சிற்பமாய்க் காட்சிதரும் இயமனை அழித்த மூர்த்தி சடைமகுடம், முப்புரிநூல், தோள், கை வளைகள், சிற்றாடை, இடைக்கட்டு இவற்றுடன் எட்டுக் கையராய் விளங்குகிறார். வலப்பாதத்தைப் பார்சுவத்தில் திருப்பி, இடக் காலை ஊர்த்வஜாநுவாக்கியுள்ள அவரது வலக்கைகளில் கீழிருந்து மேலாக மழு, முத்தலைஈட்டி, கத்தி இவை காட்சி தருகின்றன. மேற்கைப் பொருளை (?முத்திரை) அடையாளம் காணக்கூடவில்லை. இடக்கைகளில் முன்கை சூசியில் அமைய, பின்கைகளில் பாம்பு, தீயகல், உடுக்கை. சிவபெருமானின் வலப்புறம் இலிங்கத்தை அணைத்தபடி மார்க்கண்டேயரும் இடப் புறம் தரையில் வீழ்ந்து கிடக்கும் இயமனும் காட்டப்பட்டுள்ளனர். சடைப்பாரம், பனையோலைக் குண்டலங்கள், மரமேறி ஆடை இவற்றுடன் உள்ள இயமன் இடக்கையைத் தளத்தின் மேல் ஊன்றி, வலக்கையால் இறைவனைப் போற்றுகிறார்.

ஆறாவது சிற்பம் சடைமகுடம், முப்புரிநூல், உதரபந்தம், சரப்பளி, வலச்செவியில் மகரகுண்டலம், இடச்செவியில் பனையோலைக் குண்டலம், நெற்றிக்கண் இவற்றுடன் முன்கைகளில் காக்கும், அருட்குறிப்புகள் காட்டி, பின்கைகளில் மழு, மான் ஏந்தி, சுகாசனத்தில் உள்ள சிவபெருமானையும் வலக்கையைக் கடகத்தில் இருத்தி, இடக்கையை நெகிழ்த்தி நிற்கும் இறைவியையும் கொண்டுள்ளது.

**சுற்று**

கோபுரவாயிலை அடுத்து விரியும் வெளிச்சுற்றில் இறைவன் திருமுன்னைப் பார்த்தவாறு பலித்தளமும் நந்திமண்டபமும் அமைய, தென்மேற்கில் உள்ள மேடையில் சேட்டைத்தேவி காட்சிதருகிறார். தளம் ஒன்றின் மீது இடக்கையை ஊன்றி அமர்ந்துள்ள சேட்டையின் வலக்கை காக்கும் குறிப்பில் உள்ளது. கரண்டமகுடம், பூட்டுக்குண்டலங்கள், சரப்பளி, பட்டாடை, இளமார்பகங்கள் என விளங்கும் அம்மையின் வலப்புறம் வலக்கையில் தடியுடன் கரண்டமகுடம், சரப்பளி அணிந்து சுகாசனத்தில் காட்சிதரும் நந்திகேசுவரனின் இடக்கை தொடை மீது உள்ளது. சேட்டையின் இடப்புறம் உத்குடியில் உள்ள அக்னி மாதாவின் இடக்கை தளத்தின்மீது ஊன்ற, வலக்கை காக்கும் குறிப்புக் காட்டுகிறது. சிறுமகுடம், சரப்பளி, குண்டலங்கள் அணிந்துள்ள அவரது மார்பகங்களும் இளமை நலத்துடன் காட்டப்பட்டுள்ளன. மூவருமே நேர்நோக்கி அமர்ந்துள்ளனர். வளாகத்தின் வடமேற்கில் உள்ள மேடை மாடத்தில் யானைத் திருமகளும் வடகிழக்கில் பைரவரும் இடம்பெற்றுள்ளனர். அடுத்து ஒன்பான் கோள்களுக்கான மேடை அமைந்துள்ளது.

**அம்மன்கோயில்**

வளாகத்தின் வடமேற்கில் துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, பாதமும் நாகபந்தமும் பெற்ற எண்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் இவற்றுடன் இருதள வேசரமாகத் திகழும் அம்மன்கோயிலின் இறைவி, பால்வள நாயகி என அறியப்படுகிறார். விமானக் கீழ்த்தளச் சுவரில் முப்புறத்தும் உள்ள பஞ்சர அலங்கரிப்புப் பெற்ற கோட்டங்கள்

வெறுமையாக உள்ளன. முதல் தள ஆரச்சாலைகளில் தேவியின் நின்ற வடிவமும் கிரீவகோட்டங்களில் தேவியின் சுகாசனக் கோலங்களும் சுதையில் உள்ளன. விமானத்தின் கட்டமைப்பில் கோட்டங்கள் இன்றிக் காணப்படும் முகமண்டபத்தின் முன் தகரக் கொட்டகை ஒன்று அமைந்துள்ளது.

முகமண்டப வாயிலின் தென்புறம் இலலிதாசனத்தில் உள்ள தலப் பிள்ளையாரின் பின்கைகளில் அங்குசம், பாசம். முன்கைகளில் தந்தம், மோதகம். இடம்புரியாக உள்ள அவரது இரண்டு தந்தங்களுமே உடைந்திருக்க, செவிகளின் மேல் தாமரைப்பூக்கள். வாயிலின் இடப்புறம் அம்மன் திருமேனி ஒன்று இருத்தப்பட்டுள்ளது. கருவறையில் முன்கைகளைக் காக்கும், அருட்குறிப்புகளில் கொண்டுள்ள பால்வளநாயகியின் பின்கைகளில் மலர்மொட்டுக்கள். சடைமகுடம், மகரகுண்டலங்கள், பட்டாடை இவை தேவியை அணிசெய்கின்றன.

**வெற்றுத்தளம்**

முறையான உறுப்புகளற்ற தாங்குதளம், உறுப்பு வேறுபாடு அற்ற நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், போதிகைகள் அற்ற நிலையில் தூண்களின் மீது அமர்ந்துள்ள உத்திரம், வாஜனம், வலபி எனக் கருங்கல்லில் அமைந்திருக்கும் 2.70 மீ. உயரமுள்ள வெற்றுத்தளத்தின் கபோதம் ஆழமற்ற கூடுவளைவுகளுடடன் வடிக்கப்பட்டுள்ளது. மேலே பூமிதேசம். மேலுள்ள இருதளக் கோபுரத்திற்கு ஏற்ப, அப்பகுதியில், மட்டும் கிழக்கில் முன்தள்ளியிருக்கும் வெற்றுத்தளம் மேற்கிலும் வடக்கிலும் தெற்கில் தென்திசைக்கடவுள் வீற்றிருக்கும் திண்ணைவரையும் கிழக்குப் போலவே கட்டமைப்புப் பெற்றுள்ளது. வடக்கில் கிழக்குச் சார்ந்த பகுதியில் கூரையுறுப்புகளை இழந்த நிலையில், வெற்றுத்தளத்தின் அப்பகுதியில் மட்டும் செங்கல் கட்டுமானம் இடம்பெற்றுள்ளது. தெற்கில் தென்திசைக்கடவுளை அடுத்துத் தொடரும் வெற்றுத் தளம் சுவர், கூரையுறுப்புகள் சிதைந்த நிலையில் கலப்புக் கட்டுமானமாகக் காட்சியளிக்கிறது.

வெற்றுத்தளத்தின் தெற்கு, மேற்குச் சுவர்களில் சிறிய அளவுச் சிற்பங்கள் பல செதுக்கப்பட்டுள்ளன. அவற்றுள், கழைக் கூத்தர்கள், கலைக்குழுவினர், ஊர்த்வதாண்டவர், வீணைக்

கலைஞர், ஊரசுப்பெண்டிர், ஆடற்கலைஞர்கள், அடியவர்கள் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கன. அம்மையப்பர் சிற்பம் ஒன்றும் இங்குள்ளது. மேற்குச் சுவர் பலகையொன்றில் குடை, குண்டிகை, செண்டு முதலியன செதுக்கப்பட்டுள்ளன. அதற்கு மேலுள்ள பலகையில் வெட்டப்பட்டுள்ள எழுத்துக்கள் சிதைந்துள்ளன.2

தென்மேற்குச் சுற்றில் வெற்றுத்தளத்தை ஒட்டிக் காணப் படும் மேடையில் தென்திசைக்கடவுளின் சிற்பம் உள்ளது. வலத்திருவடியை முயலகன் மீது இருத்தி, வீராசனத்தில் உள்ள சிவபெருமானின் பின்கைகளில் பாம்பும் தீயகலும் அமைய, வல முன் கை சின்முத்திரையிலும் இட முன் கை ஏடேந்தியும் உள்ளன. சடைமண்டலம், மகர, பனையோலைக் குண்டலங்கள், தோள், கை வளைகள் பெற்றுள்ள இறைவனின் தலைக்குமேல் கல்லால மரம் காட்டப்பட்டுள்ளது. முயலகனின் இரு புறத்தும் பக்கத்திற்கிருவராக வணங்கிய முனிவர்கள்.

வடமேற்குச் சுற்றில் வெற்றுத்தளத்தை ஒட்டிக் காணப்படும் மேடையில் மகிடாசுரமர்த்தனியின் சிற்பம் உள்ளது. பின்கைகளில் சங்கு, சக்கரம் ஏந்தியுள்ள தேவியின் வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இட முன் கை கடியவலம்பிதமாக உள்ளது. கரண்டமகுடம், மகரகுண்டலங்கள், முத்துமாலை, அரும்புச்சரம், கைவளைகள், பட்டாடை அணிந்துள்ள தேவி யின் திருவடிகள் மகிடத்தின் தலைமீது.

**மேற்றளத் திருமுன்கள்**

மேற்றளத்தை அடைய வெற்றுத்தளத்தின் தென்கிழக்குப் பகுதியில் இருபுறத்தும் துளைக்கைப் பிடிச்சுவர் பெற்ற பன்னிரண்டு படிகள் அமைந்துள்ளன. படிகள் முடியுமிடத்துள்ள வாயிலை உறுப்பு வேறுபாடற்ற, கொடிக்கருக்குப் பெற்ற இரண்டு நான்முக அரைத்தூண்கள் பக்கத்திற்கொன்றாகத் தழுவியுள்ளன. மேலே கபோதம் உள்ளிட்ட கூரையுறுப்புகளும் மகரதோரணமும் அமைய, கூரையின்மீது மண்டபமொன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. மடியில் பிள்ளையாருடன் சிவபெருமானும் முருகனுடன் உமையும் அமர்ந்திருக்க, இருபுறத்தும் கூரை மீது நிற்பவர்களாய்த் தெற்கில் வீணையுடன் நாரதரும் வடக்கில் மத்தளத்துடன் நந்தியும் உள்ளனர்.

**நடைமண்டபம்**

வாயிலையடுத்து நீளும் நடைமண்டபம் மேற்கில் ஒரு வாயிலும் வடக்கில் இரண்டு வாயில்களும் ஒரு சாளரமும் பெற்றுள்ளது. முதல் வடவாயில் செவ்வகமாய் அமைந்துள்ள திறந்தவெளிப்பகுதிக்கு வழிவிடுகிறது. சுற்றிலும் பிடிச்சுவர் களால் அணைக்கப்பட்டுள்ள இப்பகுதியின் கிழக்கில், நடுவில் இருக்குமாறு இருதளக் கோபுரம் ஒன்று செங்கல் கட்டுமானமாய் அமைந்துள்ளது. முச்சதுர, இருகட்டு உடல், பாலி, பலகை கொண்ட தூண்கள் வெட்டுத் தரங்கப் போதிகை கொண்டு கூரையுறுப்புகள் தாங்கும் நடைமண்டபத்தின் மேற்கில் உச்சிஷ்டகணபதியின் திருமுன், விமானம் - முகமண்டபம் - முன்றில் என அமைந்துள்ளது. நடைமண்டபத்தின் கிழக்கு, தெற்குப் புறச்சுவர்கள் உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், உறுப்பு வேறுபாடற்ற நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், கூரையுறுப்புகள் பெற்று, கூரைக்கு மேலே சிறிய அளவிலான சுற்றுச்சுவரும் கொண்டுள்ளது. சுவரில் நந்திகள் இருத்தப்பட்டுள்ளன. நடைமண்டபத்தின் மேற்குப்பகுதி இது போல் எவ்வமைப்பும் பெறாது வெற்று நெடுஞ்சுவராகக் காட்டப்பட்டுள்ளது. வடக்குச் சுவரும் மேற்குச் சுவர் போல வெறுஞ்சுவராக இருப்பினும் கீழே உபானம் பெற்றுள்ளது.

**உச்சிஷ்டகணபதி திருமுன்**

தாமரை உபானம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத் தொகுதி, பாதம் - நாகபந்தம் பெற்ற எண்முகத் தூண்கள் அணைத்த சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், தாமரையிதழ் வலபி, ஆழமற்ற கூடுவளைவுகளுடனான கபோதம் இவற்றுடன் கிழக்கு மேற்காக 4. 34 மீ. நீளமும் வடக்குத் தெற்காக 4. 23 மீ. அகலமும் கொண்டு எழும் உச்சிஷ்டகணபதியின் இருதள வேசர விமானத்தின் ஆரஉறுப்புகள், மேற்றளம், கிரீவம், சிகரம் இவை செங்கல்லால் அமைந் துள்ளன. பத்ம ஜகதி, உருள்குமுதம், கண்டம், கபோதம், கண்டம், பட்டிகை என உறுப்பு வேறுபாடுள்ள தாங்குதளத் துடன் புறந்தள்ளியுள்ள சாலைப்பத்திகளின் மகரதோரணத் தலைப்பிட்ட கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. ஆரச் சாலையில் தென்புறம் வீராசனத்தில் ஆலமர்அண்ணலும்

மேற்கில் உத்குடியில் விஷ்ணுவும் வடக்கில் அர்த்தபத்மாசனத்தில் நான்முகனும் இடம்பெற்றுள்ளனர். கிரீவகோட்டத்தில் நாற்புறத்தும் சுகாசனப் பிள்ளையார் காணப்படுகிறார்.

விமானத்தின் கட்டமைப்பில் உள்ள முகமண்டபச் சுவர் இந்திரகாந்தத் தூண்களைப் பெற்றுள்ளது. அதன் சாலைப் பத்திக்கு முன்னுள்ள தெற்கு, வடக்குச் சுவர்களில் நடைமண்ட பத்தின் மேற்கு, வடக்குச் சுவர்கள் பொருந்தியுள்ளன. இம்மேற்குச் சுவரில் காட்டப்பட்டுள்ள வாயில் உச்சிஷ்ட கணபதி விமானத்தை வலம் வரவும் அதையடுத்துள்ள பசுபதீசு வரர் விமானத்தை வலம் வரவும் வழி தருகிறது.

நடைமண்டபத் தரையிலிருந்து முகமண்டபத்திற்கு முன் அமைந்துள்ள முன்றிலை அடைய நீளப்படி ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. முகமண்டபத்தின் உட்பகுதி வெறுமையாக அமைய, கருவறையில் மேடைமீது கரண்டமகுடத்துடன் சரப்பளி, உதரபந்தம் அணிந்து, இலலிதாசனத்தில் காட்சிதரும் உச்சிஷ்டகணபதியின் பின்கைகள் அங்குசம், பாசம் ஏந்த, வல முன் கையில் தந்தம். இட முன் கை இடத்தொடையில் அமர்ந்துள்ள தேவியை அணைத்துள்ளது. துளைக்கை தேவியின் வயிற்றருகே உள்ளது. வலத்தந்தம் உடைந்திருக்க, இடத்தந்தம் முழுமையாக உள்ளது.

கரண்டமகுடம், பனையோலைக் குண்டலங்கள், அரும்புச் சரம், பட்டாடை அணிந்துள்ள இறைவியின் இடக்கையில் மலர். வலக்கை பிள்ளையாரின் துளைக்கையின் பின் மறைந் துள்ளது. இறைவன் அமர்ந்துள்ள தளத்தின் வலப்பகுதியில் வணங்கிய கைகளுடன் கழுத்தில் ருத்திராக்கம் அணிந்த அடியவர் ஒருவர் நின்றகோலத்தில் காட்சிதர 3 இடப்பகுதியில் பிள்ளையாரின் வாகனம் காட்டப்பட்டுள்ளது.

உச்சிஷ்டகணபதி திருமுன் முகமண்டபத்தின் வடசுவரைப் பொருந்துமாறு சாளரம் ஒன்றும் அமைந்துள்ள நடை மண்டபத்தின் வடக்குச் சுவரில் உள்ள பெருவாயில் விமானம், முகமண்டபம், பெருமண்டபம் என அமைந்துள்ள பசுபதீசுவரர் வளாகத்திற்கு வழிவிடுகிறது.

**பசுபதீசுவரர் திருமுன்**

பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, பாதம்-நாகபந்தம் பெற்ற எண்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் உத்திரம், வாஜனம், பூதவரி வலபி, ஆழமற்ற கூடுவளைவுகளுடனான கபோதம் இவற்றுடன் எழும் 4. 85 மீ. பக்கமுடைய விமானக் கீழ்த் தளத்தின் சாலைப்பத்தி சற்றுப் புறந்தள்ளிய நிலையில் உருளைத் தூண்களால் அணைக்கப்பட்டுள்ளது. அதன் தாங்குதளத்தில் உறுப்பு மாறுபாடுகளாக பத்மஜகதியும் உருள்குமுதமும் காணப்படுகின்றன. வேதிகைக்கு மாற்றாகக் கம்பு கொண்டு விளங்கும் இப்பத்திகளின் மகரதோரணத் தலைப்பிட்ட கோட்டங்கள் சட்டத்தலை பெற்ற உருளை அரைத்தூண் களால் அணைக்கப்பட்டு வெறுமையாக உள்ளன.

அதே கட்டமைப்பில் உள்ள முகமண்டபத்தின் கோட்டங்களும் வெறுமையாக உள்ளன. உறுப்பு வேறுபாடு கொள்ளாத, ஆனால், புறந்தள்ளலாக உள்ள சாலைப்பத்தியை எண்முக அரைத்தூண்களுக்கு மாற்றாக இந்திரகாந்த அரைத்தூண்கள் அணைத்துள்ளன. விமானத்திற்கும் முகமண்டபத்திற்கும் இடைப்பட்ட ஒடுக்கம் வெறுமையாக உள்ளது

இருதள வேசரமாக அமைந்துள்ள இவ்விமானத்தின் ஆரச்சாலையில் தெற்கில் வீராசனத்தில் ஆலமர்அண்ணலும் மேற்கில் உத்குடியில் தேவியருடன் பரமபதநாதரும் வடக்கில் அர்த்தபத்மாசனத்தில் தேவியுடன் நான்முகனும் அமர, கிரீவ கோட்டங்களில் தெற்கில் வீராசனத்தில் ஆலமர்அண்ணல், மேற்கில் உத்குடியில் விஷ்ணு, வடக்கில் தாமரையில் அர்த்த பத்மாசனத்தில் நான்முகன், கிழக்கில் அர்த்தபத்மாசனத்தில் முனிவர் ஒருவர் இடம்பெற்றுள்ளனர்.

**பெருமண்டபம்**

பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, பாதம்-நாக பந்தம் பெற்ற இந்திரகாந்த அரைத்தூண்கள் அணைத்த சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் உத்திரம், வாஜனம், பூதவரி வலபி, கபோதம் பெற்றுள்ள பெருமண்டபச் சுவரில் தெற்கிலும் வடக்கிலும் நான்முக அரைத்தூண்களின் தழுவலில்

திசைக்கு இரண்டு பஞ்சரங்களும் அவற்றிற்கு இடைப்பட்டன வாக அதே பஞ்சர அமைப்புடன் பக்கத்திற்கொரு வெறுமையான கோட்டமும் உள்ளன. முகமண்டபத்திற்கும் பெருமண்ட பத்திற்கும் இடைப்பட்ட ஒடுக்கத்திலும் பஞ்சரம் காட்டப்பட்டுள்ளது. பெருமண்டபத்தின் கிழக்குச் சுவரில் வாயிலின் இருபுறத்தும் அமைந்துள்ள காவலர்களுக்கான கோட்டப் பஞ்சரங் கள் வெறுமையாக உள்ளன. பெருமண்டபத்தை ஒட்டி வட சுற்றில் சண்டேசுவரரின் சிறிய அளவிலான திருமுன் அமைந் துள்ளது. சடைமகுடம், பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, முப்புரிநூல், சிற்றாடை அணிந்து சுகாசனத்தில் உள்ள அவரது வலக்கை மழுவேந்தியிருக்க, இடக்கை தொடை மீது உள்ளது.

முச்சதுர, இருகட்டு உடல் பெற்ற தூண்கள் வெட்டுத் தரங்கப் போதிகைகள் கொண்டு தாங்கும் கூரையுறுப்புகள் பெற்ற பெருமண்டபத்தில் நந்தியும் பலித்தளமும் வடபுறம் சிறு மேடையும் உள்ளன. வடபுறம் சிறு மேடையுடன் உள்ள பசுபதீசுவரரின் முகமண்டபம் வெறுமையாக உள்ளது. சட்டத் தலை பெற்ற உருளை அரைத்தூண்கள் அணைத்துள்ள வாயில் கொண்டு விளங்கும் கருவறையில் வேசர ஆவுடையாரில் உயரமான பாணத்துடன் பசுபதீசுவரர் எழுந்தருளியுள்ளார்.

கிழக்குச் சுற்றில் உள்ள மேடையில் முருகன், சந்திரன், விசுவநாதர், சூரியன் இடம்பெற்றுள்ளனர். 4

**குறிப்புகள்**

1. ஆய்வு நாட்கள் 10. 09. 1982, 5. 11. 2000, 22. 1. 2010. இரண்டாம் பருவ ஆய்வின்போது துணையிருந்த திருமதி வாணி செங்குட்டுவன் நன்றிக்குரியவர்.
2. சிதைந்துள்ள இக்கல்வெட்டுக் குறித்து நடுவணரசின் கல்வெட்டுத்துறைக்குத் தகவல் தரப்பட்டுள்ளது.
3. இவ்வடியவர் உச்சிஷ்டகணபதி சிற்பத்தின் கொடையாள ராகலாம்.
4. பசுபதீசுவரத்திற்குக் கிழக்கில் சற்றுத் தொலைவில் உள்ள தோப்பொன்றில் சோழர் காலச் சாமுண்டியின் சிற்பம் தனித்த நிலையில் காணப்படுகிறது. தாமரைத் தளத்தில்

சுகாசனத்தில் உள்ள அம்மையின் மார்பகங்களைக் கச்செனப் பாம்பு பிணைத்துள்ளது. வல முன் கை சிதைந் திருக்க, இட முன் கை கிடையாக உள்ள இடக்காலின் மீது இருத்தப்பட்டுள்ளது. பின்கைகளில் முத்தலைஈட்டியும் தலையோடும் கொண்டு, பட்டாடை, இடைக்கட்டு, சரப்பளி அணிந்து, சடைப்பாரத்துடன் காட்சிதரும் சாமுண்டியின் செவிகளில் பிணக்குண்டலங்கள். நெற்றிக்கண்ணுடன் விளங்கும் அம்மையின் தலையில் பாம்புகளின் பிணைப்பில் தலையோடு. பால. பத்மநாபனால் அறிமுகப்படுத்தப்பட்ட இச்சிற்பம் கவனிப்பாரற்றுக் கிடக்கிறது.

--------------------------------------------------------

# 3.நல்லூர்

கும்பகோணம் வட்டம் பாபநாசத்தை அடுத்த சுந்தரப் பெருமாள்கோயிலில் இருந்து 3 கி. மீ. தொலைவில் வலங்கைமான் செல்லும் பாதையில் அமைந்துள்ளது நல்லூர். 1 அப்பர், சம்பந்தரால் பாடப்பெற்ற 2 இவ்வூருடன் தொடர்புடைய நாயன்மார் அமர்நீதிநாயனார் ஆவார். திருக்குளமும் ஐந்து தளக் கோபுரமும் பெற்றுள்ள கோயிலின் வாயிற் கதவுகள் ஆடற்பெண், கோலாட்டம், விலங்குகள், இறைவடிவங்கள், அமர்நீதிநாயனாரின் வரலாறு 3 முதலான மரச்சிற்பங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. உயரமான துணைத்தளம், பாத பந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரை யுறுப்புகள் என அமைந்துள்ள கோபுரக் கீழ்த்தளம் கருங்கல் பணியாக உள்ளது. ஆரஉறுப்புகளும் மேற்றளங்களும் செங்கல் கட்டுமானமாய்க் குறைவான சுதையுருவங்களுடன் உள்ளன.

### வெளிச்சுற்று

வாயிலுள் நுழைந்ததும் காட்சியாகும் வெளிச்சுற்றில் தென்கிழக்கில் மடைப்பள்ளியும் தெற்கில் எண்கைக் காளியின் ஒருதளச் சாலைத் திருமுன்னும் வடகிழக்கில் பின்னாளைய மண்டபம் ஒன்றும் அமைந்துள்ளன. மேற்கிலும் கோபுரம் பெற்றுள்ள இத்திருச்சுற்றின் வெளிப்புறத்தே தெற்கு, மேற்கு இரு திசைகளிலும் நந்தவனம் அமைந்துள்ளது. முதல் வாயிலுக்கும் மூன்று தளங்கள் பெற்றுள்ள இரண்டாம் கோபுர வாயிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் முன்றிலுடனான ஒருதள வேசரத் திருமுன்னில் பிள்ளையாரும் அடுத்துக் கொடிமரமும் பலித் தளமும் நந்தி மண்டபமும் அமைந்துள்ளன.

### இரண்டாம் கோபுரம்

கபோதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, எண்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் எனக் கருங்கல் பணியாகக் கீழ்த்தளம் பெற்றுள்ள இரண்டாம் கோபுரத்தின் 4 ஆரஉறுப்புகளும் மேற்றளங்களும் செங்கல் கட்டுமானமாய் உள்ளன. கீழ்த்தள ஆரஉறுப்புகள் ஆறங்கம் பெற்றுள்ளன. இவ்வாயிலை ஒட்டி

வடபுறத்தே வண்டிக்கூடு கூரையுடன் பிற்கால மண்டபம் ஒன்று அமைந்துள்ளது.

**மண்டபச் சுற்று**

இரண்டாம் வாயிலை அடுத்துக் கிழக்கில் மண்டபமாய்த் தொடங்கி முப்புறத்தும் விரியும் இடைச்சுற்றில் வாயிலுக்கு எதிரிலுள்ள ஒருதள வேசரத் திருமுன்னில் காசிப் பிள்ளையார் காட்சிதருகிறார். கோபுரத்தை ஒட்டிய பாதபந்தத் தாங்குதளம் பெற்ற தென்கிழக்கு அறைகளில் இலிங்கத்திருமேனிகள் உள்ளன. வடகிழக்கில் பைரவர், சூரியன், அம்மன் சிற்பங்கள் காணப் படுகின்றன. கரண்டமகுடம், மகரகுண்டலங்கள், பட்டாடை அணிந்து சமபங்கத்தில் இருக்கும் கதிரவனின் கைகளில் தாமரைகள்.

**ஆடவல்லான்**

வடக்கில் கபோதபந்தத் தாங்குதளம் பெற்ற மண்டபத்தில் ஆடவல்லானும் உமையும் காட்சிதருகின்றனர். சடைமகுடமும் விரிசடையுமாய் வலக்காலை முயலகன் மீது இருத்தி, இடக் காலை வலப்புறம் வீசி ஆனந்தத்தாண்டவமிடும் இறைவனின் பின்கைகளில் உடுக்கை, தீயகல். வல முன் கை காக்கும் குறிப்பில் இருக்க, இட முன் கை வேழ முத்திரையில் உள்ளது. கொக்கிறகும் பிறையும் உள்ள தலையின் முகப்பில் மண்டையோடு. வலச் செவியில் மகரகுண்டலம், இடச்செவியில் பனையோலைக் குண்டலம், தோள், கடக, கை வளைகள், புலித்தோலாடை, முப்புரிநூல், உதரபந்தம் அணிந்து ஆடும் இறைவனின் விரி சடையில் வலப்புறம் கங்கை, இடப்புறம் பாம்பு. முடிச்சிட்ட உதரபந்தத்தின் முனைகளும் முப்புரிநூலாய்ப் போர்த்தியுள்ள துணியின் தோள் மடிப்பும் ஆட்ட விரைவிற்கேற்ப, இடப்புறம் பறக்கின்றன.

ஆடவல்லான் தளத்தின் கீழே சிற்றாடையும் வணங்கிய கையுமாய்க் காட்சிதரும் அடியவர் இதைச் செய்தளித்தவராகலாம். தனித் தளத்திலுள்ள உமை சடைமகுடம், மகரகுண்டலங் கள், சரப்பளி, தோள்மாலை, பட்டாடை அணிந்து வலக்கையைக் கடகத்திலிருத்தி, இடக்கையை நெகிழ்த்தியுள்ளார். மழித்த தலை

யும் நீள்செவிகளுமாய் முப்புரிநூல், சிற்றாடை அணிந்து வலப் பாதத்தைத் திரயச்ரத்திலும் இடப்பாதத்தைப் பார்சுவத்திலும் இருத்தி ஆடவல்லான் அருகே நிற்கும் மாணிக்கவாசகரின் வலக்கை சின்முத்திரை காட்ட, இடக்கையில் சுவடி.

**சுற்றுமாளிகை**

சுற்றின் தெற்கிலும் மேற்கிலும் வடக்கிலும் கபோதபந்தத் துணைத்தளத்தின் மீதமைந்துள்ள சுற்றுமாளிகையின் கூரையை முச்சதுர, இருகட்டுத் தூண்கள் பூமொட்டுப் போதிகைகளு டன் தாங்குகின்றன. மாளிகையில் தென்புறத்தே வணங்கிய நிலையில் அமர்நீதிநாயனார், இடுப்பில் ஏந்திய பிள்ளையுடன் அவர் துணைவியார், வணங்கிய நிலையில் உழவாரப்படையுடன் அப்பர், தாளங்களுடன் சம்பந்தர், துணைவியுடன் சுந்தரர் சிற்பங்கள் உள்ளன.

**சோமாஸ்கந்தர் திருமுன்**

தென்மேற்கில் சோமாஸ்கந்தருக்கான இருதளத் திராவிட விமானம் முகமண்டபத்துடன் அமைந்துள்ளது. பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் கொண்ட விமானக் கீழ்த்தளத்தின் முப்புறத்தும் உள்ள கோட்டப் பஞ்சரங்கள் வெறுமையாக உள்ளன. ஆர உறுப்புகள், இரண்டாம் தளம், கிரீவம், சிகரம் இவை செங்கல் கட்டுமானமாய் உள்ளன. விமானத்தை ஒத்த கட்டமைப்புடன் விளங்கும் முகமண்டபக் கோட்டங்களும் வெறுமையாக உள்ளன. கருவறைக்கும் முகமண்டபத்திற்கும் இடைப்பட்ட ஒடுக்கங்களில் குடப்பஞ்சரங்கள். முகமண்டபம் வெறுமையாக அமைய, கருவறையில் உள்ள மேடையில் சோமாஸ்கந்தர் எழுந்தருளியுள்ளார்.

சடைமகுடம், வலச்செவியில் மகரகுண்டலம், இடச் செவியில் பனையோலைக் குண்டலம், முப்புரிநூல், உதரபந்தம், சிற்றாடை, வலக்காலில் வீரக்கழல் அணிந்து சுகாசனத்தில் உள்ள இறைவனின் பின்கைகளில் மான், மழு. முன்கைகளில் வலக்கை காக்க, இடக்கை கடகத்திலுள்ளது. இடப்புறம்

கரண்டமகுடம், மகரகுண்டலங்கள், பட்டாடை, தோள்மாலை அணிந்து சுகாசனத்திலுள்ள உமை வலக்கையைக் கடகத்தில் இருத்தி, முழங்கையளவில் மடங்கிய இடக்கையை முன் நோக்கி நீட்டியுள்ளார். இருவருக்கும் இடையிலுள்ள முருகன் சடைமகுடராய் இரண்டு கைகளில் மலர்கள் ஏந்தி நிற்கிறார்.

**சுற்றாலைத் திருமுன்கள்**

தென்மேற்கு மூலையில் பிள்ளையாரும் மேற்கில் தெய்வானை வள்ளியுடன் முருகனும் வடமேற்கில் யானைத் திருமகளும் இடம்பெற்றுள்ளனர். வடக்கு மாளிகையில் அமர்நீதிநாயனாரின் நெடிய சிற்பமும் குழந்தை ஏந்திய அவர் துணைவியார் சிற்பமும் இலிங்கத்தை வணங்கும் அடியவர் ஒருவர் சிற்பமும் உள்ளன. வடக்குச் சுற்றில் ஒருதள விமானத்தில் சண்டேசுவரர் வலக்கையில் மழுவேந்தி, இடக்கையைத் தொடையிலிருத்தி சுகாசனத்தில் உள்ளார்.

**வெற்றுத்தளம்**

4. 58 மீ. உயரம் கொண்ட வெற்றுத்தளம் முழுமையும் கருங்கல் பணியாக உள்ளது. உபானம், ஜகதி, உருள்குமுதம், பிரதிவரி, கண்டம், கபோதம் எனக் கபோதபந்தத் தாங்குதளமும் வேதிகையும் அமைய, சுவர் அனைத்து உறுப்புகளும் பெற்ற நான்முக அரைத்தூண்களால் தழுவப்பெற்றுள்ளது. மேலுள்ள வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் உத்திரம், வாஜனம், தாமரையிதழ்களாலான வலபி இவற்றை அடுத்து நீளும் கூரை யின் வெளியிழுப்பான கபோதம் ஆழமற்ற கூடுவளைவுகளைப் பெற்றுள்ளது. மேலே பூமிதேசம். இக்கட்டமைப்பு வடக்கில் அம்மன் விமானம் வரை தொடர்கிறது.

வெற்றுத்தளச் சுவரில் மேற்கில் ஆறு கோட்டங்களும் தெற்கில் ஒன்பது கோட்டங்களும் வடக்கில் எட்டுக் கோட்டங்களும் காட்டப்பட்டுள்ளன. நான்முக அரைத்தூண்களுக்கு இடைப்பட்டு விளங்கும் ஆழமான இக்கோட்டங்களைச் சட்டத்தலை பெற்ற நான்முக அரைத்தூண்கள் அணைத்துக் கூரையுறுப்புகள் பெற்று, கிரீவம், சாலை சிகரம் கொண்டு கோட்டப் பஞ்சரங்களாக்கியுள்ளன.

**கோட்டச் சிற்பங்கள்**

தென்புறக் கோட்டங்களில் இரண்டு ஆலமர்அண்ணல்களும் உச்சிஷ்டகணபதியும் விளங்க, வடகோட்டங்களுள் ஒன்றில் கொற்றவையின் சிற்பம் உள்ளது. முன்றில் பெற்றுள்ள ஆலமர்அண்ணல் கோட்டத்தில் முயலகன் முதுகின்மீது வலக் காலை ஊன்றிப் பின்கைகளில் அக்கமாலையும் தீயகலும் கொண்டுள்ள இறைவன் வீராசனத்தில் உள்ளார். சடைப்பாரம், உதரபந்தம், முப்புரிநூல், சவடி, தோள், கை வளைகள் அணிந்து நீள்வெறுஞ்செவியராய் உள்ள அவரது வல முன் கை சின்முத்திரை காட்ட, இட முன் கை சுவடியுடன் தொடை மீது உள்ளது. வலக்காலில் வீரக்கழல் இறைவன் அமர்ந்துள்ள இருக்கையின் கீழ்ப்பகுதியில் பக்கத்திற்கிருவராக நான்கு முனிவர்கள் காட்டப்பட்டுள்ளனர். முன்றில் தூணொன்றின் பாதத்தில் அதை எடுத்தவரின் உருவமும் 'மாதாநமங்கல முடையான் ஸ்ரீமாஹேச்வரப் பிரியன் உளியின்றி வந்தான்' என அவருடைய ஊரும் பெயரும் உள்ளன. 5

கரண்டமகுடம், உதரபந்தம், சிற்றாடை இலலிதாசனத்தில் உள்ள உச்சிஷ்டகணபதியின் வல முன் கை மோதகம் கொள்ள, பின்கையில் அங்குசம். அவரது துளைக்கை இடத்தொடையில் அமர்ந்துள்ள தேவியின் தொடைகளுக்கு இடைப்பட்ட பகுதியில் உள்ளது. இடப் பின் கைகளுள் ஒன்று பாசம் கொள்ள, மற்றொன்று தேவியை அணைத்துள்ளதாகக் கொள்ளலாம். கரண்டமகுடம், கழுத்தணி கொண்டுள்ள தேவி இடக்கையில் மலர்மொட்டு ஏந்தியுள்ளார். வலக்கை பிள்ளையாரின் ஆணுறுப்பைப் பிடித்துள்ளது.

கரண்டமகுடம், மகரகுண்டலங்கள், சவடி, சரப்பளி, தோள் வளை, ஸ்வர்ணவைகாக்ஷம், இடைக்கட்டுடனான பட்டாடை, பட்டை வளை, அடுக்குச் சிலம்பு அணிந்து பின்கைகளில் சங்கு, சக்கரம் ஏந்திக் காட்சிதரும் கொற்றவையின் பாதங்கள் தளம் ஒன்றின் மீது சமபங்கத்தில் உள்ளன. தேவியின் வல முன் கை காக்கும்குறிப்பில் அமைய, இட முன் கை கடியவலம்பிதமாக உள்ளது.

வெற்றுத்தளம் ஒட்டித் தென்புறத்தே காணப்படும் 25 படிகள் கொண்ட படிவரிசை கீழிருந்து தளமுடிவுவரை தொடர்கிறது.

மேலே உள்ள வாயில் முச்சதுர, இருகட்டுத் தூண்கள் தாங்கும் மண்டபத்திற்கு வழிவிட, மண்டபத்தில் வடபுறத்தே கிரிசுந்தரி அம்மன் திருமுன்னும் அதையடுத்துப் பள்ளியறையும் மேற்கில் இறைவன் திருமுன்னும் அமைந்துள்ளன. தூணொன்றில் அடியவர் வடிவம் இடம்பெற்றுள்ளது.

**அம்மன் விமான வெற்றுத்தளம்**

அம்மன் விமானம் தாங்கும் வெற்றுத்தளக் கட்டமைப்பு உபானம், தாமரைஉபானம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத் தொகுதி, எண்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், வெட்டுத் தரங்கப் போதிகை தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றுப் பொலிகிறது. சுவரிலுள்ள சாலைப்பத்திக் கோட்டப் பஞ்சரங்களும் பத்தி களுக்கு இடைப்பட்ட கோட்டங்களும் வெறுமையாக உள்ளன.

**இறைவன் விமானம்**

மண்டபச்சுற்று, முகமண்டபம், விமானம் என அமைந்துள்ள இறைக்கோயில் வளாகம் கிழக்குப் பார்வையில் உள்ளது. மண்டபச்சுற்றின் கிழக்குப்பகுதியில் உள்ள முச்சதுர, இரு கட்டுத் தூண்கள் வெட்டுப் போதிகைகளால் கூரையுறுப்புகள் தாங்குகின்றன. தென்மேற்குத் தூணின் மேற்சதுரத்தில் காணப்படும் கல்வெட்டு அத்தூணை எடுத்தவராகப் பழையனூரைச் சேர்ந்த திருப்பெருமணமுடையான் பெயரைத் தருகிறது.6 தெற்கிலும் மேற்கிலும் வடக்கிலும் முகமண்டபம், விமானம் இவற்றைச் சுற்றி விரியும் உட்சுற்றின் புறச்சுவர் முத்திசை களிலும் பக்கத்திற்கு இரண்டு சாளரங்கள் கொண்டுள்ளது.

இருதளத் திராவிடமாக அமைந்துள்ள விமானத்தின் கீழ்த்தளம் பாதபந்தத் தாங்குதளத்தின் மீது எழுகிறது. 5 மீ. பக்கமுடைய சதுரமாக அமைந்திருக்கும் இக்கீழ்த்தளத்தின் பட்டிகைக்கு மேல் வேதிகைத்தொகுதியும் எளிய நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவரும் கூரையுறுப்புகளும் உள்ளன. போதிகைகள் விரிகோணத்தில் கிளைக்க, வலபி வெறுமையாக உள்ளது. சுற்றின் சுவரும் விமானத்தின் சுவரும் முத்திசைகளிலும் படிப்படியாக ஒன்றிணைக்கப்பட்டுப் பலகைகளால் மூடப்பட்டுள்ளன. கதலிகாகரண முறையை நினைவூட் டும் இக்கட்டுமானமும் விமானத்தைச் சூழ அமைந்திருக்கும்

சுற்றின் அமைப்பும் இவ்விமானத்தைச் சாந்தார விமானமாகக் கொள்ள வழிவகுத்தாலும், இச்சாந்தார அமைப்பு விமானத்தின் கிழக்கில் இடம்பெறாமையும் வெளிச்சுவர் பெறவேண்டிய தாங்குதளம் போன்ற தளக்கூறுகளை விமானச் சுவர் பெற்றிருப்பதும் அக்கருதுகோளுக்குத் தடையாகின்றன.

9. 15 மீ. பக்கமுடைய சுற்றுச்சுவரின் உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளப்பகுதி மட்டும் கருங்கல்லால் ஆனது. நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவரும் கூரையுறுப்புகளும் செங்கல் கட்டுமானங்களாகவே உள்ளன. சுவரின் தென்கோட்டத்தில் சட்டைநாதர் இடம்பெற்றுள்ளார். கபோதம் கூடுவளைவுகள் அற்ற காரைக் கட்டுமானமாகக் காட்சிதருகிறது. கபோதத்தின் மேல் வடிவம் பெறாத பூமிதேச அமைப்பும் வேதிகைத் தொகுதியும் ஆரஉறுப்புகளும் அமைந்துள்ளன.

ஆரஉறுப்புகள் விமானத்தின் இரண்டாம் தளத்திலிருந்து விலகி அமர்ந்து அனர்ப்பிதமாக உள்ளன. தென்கிழக்கு, வட கிழக்கு ஆரச்சுவர்ப் பகுதிகள், அவற்றை அடுத்துள்ள கர்ண கூடங்கள் இவற்றின் கீழுள்ள சுவர் தெற்கிலும் வடக்கிலும் புறந்தள்ளி உள்ளது. ஆரச்சுவரினும் நன்கு பிதுக்கமாக உள்ள கர்ணபத்திச் சுவர் மேலே ஆரஉறுப்பாகப் பஞ்சரம் பெற்றுள்ளது. அவற்றின் விரிவிற்கேற்ப கீழுள்ள வெற்றுத்தளம் வடக்கில் முன்னிழுக்கப்பட்டுள்ள போதும் தெற்கில் அத்தகு விலகல் இல்லாமை குறிப்பிடத்தக்கது. தெற்கில் வெற்றுத்தள உள்ளடங்கல் விமானத்தின் சாலைப்பகுதியை ஒட்டியே காணப்படுகிறது. கிழக்கு ஆரவரிசையின் இருமூலைகளிலும் எளிய கர்ணகூடங்கள் உள்ளன.

**இரண்டாம் தளம்**

விமானத்தின் முதல் தள ஆரஉறுப்புகள் விமானத்தின் இரண்டாம் தளத்திலிருந்து விலகி அமைந்திருப்பதால் கீழ்த் தளம் போலவே விமானத்தின் இரண்டாம் தளத்தையும் சுற்றிவர இடைவெளி அமைந்துள்ளது. முதல் தளக் கூரையின் மீதுள்ள கிழக்குச் சாலை இரண்டாம் தளத்திற்கான நுழைவாயிலாக அமைந்துள்ளது. வேதிகையின் மீதெழும் உயரமான நான்முக அரைத்தூண்கள் அணைத்துள்ள இரண்டாம் தளத்தின்

நாற்புறத்தும் திசைக்கு இரண்டெனச் சுவர்ப் பஞ்சரங்கள் காட்டப்பட்டுள்ளன. இப்பஞ்சரங்கள் ஒவ்வொன்றும் நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர்ப்பகுதி, விரிகோணப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், வேதிகை, கிரீவம் பெற்று இரண்டாம் தளக் கபோதக்கூட்டைச் சிகரமாகக் கொண்டு முடிகின்றன. இவற்றின் கிரீவபகுதிகளில் ஆடற் பெண்கள் காட்டப்பட்டுள்ளனர்.

பஞ்சரங்களுக்கிடையில் திசைக்கொன்றாகக் காட்சிதரும் வெறுமையான கோட்டங்கள் நான்முக அரைத்தூண்களின் அணைப்பும் வடிப்பற்ற மகரத்தலைப்பும் பெற்றுள்ளன. தளச் சுவரின் கூரையுறுப்புகளில் வலபி பூதவரி பெற்றுள்ளது. கபோதத்தின் மீதுள்ள பூமிதேச யாளிகள் நடக்கும் பாவனையில் காட்டப்பட்டுள்ளன. கிரீவம், சிகரம் இவை திராவிடமாக உள்ளன. சாலைகளிலும் கிரீவத்திலும் தெற்கில் ஆலமர் அண்ணலும் வடக்கில் நான்முகனும் உள்ளனர். மேற்கில் சாலையில் தேவிகளுடன் மகாவிஷ்ணுவும் கிரீவத்தில் தேவியுடன் நரசிம்மரும் காட்சிதருகின்றனர். கிரீவத்தின் கிழக்குக் கோட்டத்தில் தேவியுடன் சிவபெருமான்.

**முகமண்டபம்**

முகமண்டப வாயிலின் தென்புறத்தே திண்ணை ஒன்றின் மீது காட்சிதரும் பிள்ளையார் பின்கைகளில் பாசம், அங்குசம் ஏந்தி, வல முன் கையில் தந்தமும் இட முன் கையில் மோதகமும் கொண்டு இலலிதாசனத்தில் உள்ளார். கருவறை வாயிலை நோக்கியவாறு பெருமண்டபத்தில் ஆண்பாவை விளக்கு ஒன்று காட்சிதர, முகமண்டபத்தின் வடமேற்கு மூலையில் இன்பவல்லி அன்னையின் செப்புத்திருமேனி இடம்பெற்றுள்ளது. சடைமகுடம், மகரகுண்டலங்கள், தோள்மாலை, சரப்பளி, அரும்புச்சரம், முப்புரிநூல், தோள், கை வளைகள், பட்டாடை அணிந்து சுகாசனத்தில் உள்ள இவ்வம்மையின் வலக்கை கடகத்தில் உள்ளது. இடக்கை அருள் தருகிறது.

**கருவறை**

கருவறையில் சதுர ஆவுடையாரின் மீது மெல்லிய நீளமான உருளைப்பாணம் துளைகளுடன் காட்சிதருகிறது.

கருவறையின் தென்சுவரில் நான்முகனும் வடசுவரில் விஷ்ணுவும் பேருருவினராய் நிற்க, பின்சுவரில் தளமொன்றின் மீது சிவபெருமானும் உமையும் சுகாசனத்தில் சுதையுருவங்களாய் வண்ணப்பூச்சில் மின்னுகின்றனர். சடைமகுடம், மகரகுண்ட லங்கள், முப்புரிநூல், உதரபந்தம், சிற்றாடை பெற்றுள்ள இறைவனின் பின்கைகளில் மானும் மழுவும். முன்கைகளில் வலக்கை காக்கும் குறிப்புக் காட்ட, இட முன் கை கடகமாக உள்ளது. கரண்டமகுடமும் மகரகுண்டலங்களும் அணிந்துள்ள இறைவி, வலக்கையில் மலரேந்தி, இடக்கையைக் காக்கும் குறிப்பில் வைத்துள்ளார்.

கிரீடமகுடம், பட்டாடை அணிந்து பின்கைகளில் சங்கு, சக்கரம் ஏந்தியுள்ள விஷ்ணு இறைவனையும் இறைவியையும் வணங்க, சடைமகுடம், பட்டாடை, அக்கமாலை, குண்டிகை கொண்டுள்ள நான்முகன் முன்கைகளில் காப்பும் அருளும் காட்டி, இறையிணையை வாழ்த்துகிறார். இத்தகு இறைக்காட்சி தமிழ்நாட்டின் வேறெந்தக் கருவறையிலும் இல்லை எனலாம். அப்பருக்கு இறைவன் இங்குத் திருவடி சூட்டியமையைக் 7 கொண்டாடும் விதமாக வழிபாட்டின்போது பத்திமையாளருக்கு இறைவனின் திருவடி சூட்டும் சிறப்புச் செய்யப்படுகிறது. வேறெந்த சைவக் கோயிலிலும் இல்லாத இப்புதுமையான அருளல் நல்லூரின் தனிச் சிறப்பாகும்.

**அம்மன் கோயில்**

இருதளத் திராவிடமாய் வெற்றுத்தளத்தின் மேல் தென் பார்வையாய் அமைந்துள்ள அம்மன் விமானம் பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரை யுறுப்புகள் பெற்றுக் காட்சிதருகிறது. புறந்தள்ளியுள்ள அதன் சாலைப்பத்தியை நான்முக அரைத்தூண்கள் தழுவச் சாலைக் கோட்டங்கள் முப்புறத்தும் வெறுமையாக உள்ளன. கருவறையில் இறைவி சமபங்கத்தில் கரண்டமகுடராய்ப் பட்டாடை அணிந்து பின்கைகளில் மலர்மொட்டேந்தி, முன்கைகளைக் காக்கும் குறிப்பிலும் அருட்குறிப்பிலும் கொண்டு காட்சிதருகிறார். வெறுமையாக உள்ள முகமண்டபம் பிற்காலக் கட்டுமானமாகும்.

**செப்புத்திருமேனிகள்**

**தனி உமை**

திரயச்ர பாதங்களுடன் கரண்டமகுடம், மகரகுண்டலங்கள், தோள், கடக, கை வளைகள், சரப்பளி, அரும்புச்சரம், பட்டாடை, குறங்குசெறி அணிந்துள்ள உமையின் வலக்கை கடகத்திலிருக்க, இடக்கை நெகிழ்ந்துள்ளது.

**பள்ளியறை நாச்சியார்**

கரண்டமகுடம்,மகரகுண்டலங்கள், கழுத்தணிகள்,பட்டாடை அணிந்து திரயச்ர பாதங்களுடன் வலக்கையைக் கடகத்தில் இருத்தி நிற்கும் இறைவியின் இடக்கை நெகிழ்ந்துள்ளது.

**சண்டேசுவரர்**

சடைமகுடம், பனையோலைக் குண்டலங்கள், மரமேறி ஆடை அணிந்து நிற்கும் சண்டேசுவரரின் இரண்டு கைகளும் வணக்கமுத்திரையில் உள்ளன.

**கல்வெட்டுகள்**

இக்கோயில் வளாகத்திலிருந்து இருபத்து மூன்று கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு அவற்றின் சுருக்கங்கள் வெளியிடப்பட்டுள்ளன [8] கோயில் வளாகத்தின் பல பகுதிகளில் படியெடுக்கப்படாத கல்வெட்டுகள் சிதைந்தும் கட்டுமானங்களில் சிக்கிய நிலையிலும் காணப்படுகின்றன. அவற்றுள் மூன்று கல்வெட்டுகள் களஆய்வின்போது படித்தறியப்பட்டன [9] படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளில் காலத்தால் பழைமையானதாக விளங்கும் முற்சோழ அரசர் ஒருவரின் இருபத்து மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு மிகச் சிதைந்த நிலையில் உள்ளது.[10]

உத்தமசோழர், முதல் இராஜராஜர், இரண்டாம் இராஜாதி ராஜர், மூன்றாம் குலோத்துங்கர், மூன்றாம் இராஜராஜர், மூன்றாம் இராஜேந்திரர், வீரராமநாதன் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. அவற்றுள் மூன்றாம் இராஜராஜர் கல்வெட்டுகள் பன்னிரண்டாகும்.

### வளநாடு, நாடு, ஊர்

நல்லூர்க் கல்வெட்டுகள் நித்தவிநோத வளநாடு, முடிகொண்ட சோழ வளநாடு, உய்யக்கொண்டார் வளநாடு பாண்டிகுலாசனி வளநாடு ஆகிய நான்கு வளநாடுகளின் பெயர்களையும் நல்லூர் நாடு, துண்டநாடு எனும் இரண்டு நாடுகளின் பெயர்களையும் தருகின்றன. இக்கல்வெட்டுகளில் ருந்து முப்பத்தொரு ஊர்ப்பெயர்கள் கிடைத்துள்ளன. மங்கலம் என்ற பின்னொட்டோடு முடியும் ஊர்ப்பெயர்கள் ஏழாக அமைய, 11 நல்லூர் என்ற பின்னொட்டுடன் மூன்று ஊர்கள் 12 உள்ளன. ஊர் என்ற பின்னொட்டுடன் பதின்மூன்று ஊர்களும் 13 பல்வேறு பின்னொட்டுகளைப் பெற்றனவாய் எட்டு ஊர்களும்14 கிடைத்துள்ளன.

### வேளாண்மை

நல்லூர்க் கல்வெட்டுகளில் குறிக்கப்பெறும் நிலத்துண்டுகள் தரம், தரமிலி என இரண்டு வகைப்பட்டனவாய் அமைந்துள்ளன. விளைவுக்குக் கொணரப்பெற்ற தரிசு நிலங்கள் மயக்கல் என்ற பின்னொட்டுடன் பெயரேற்றன. நந்தி மண்டலி என்று ஒரு நிலத்துண்டு அழைக்கப்பட்டது. 15 பஞ்சவன் மாதேவி, மும்முடிசோழன், கோதண்டராமன் வாய்க்கால்களும் மாதேவன், பஞ்சவன்மாதேவி, வளவன், திருநாராயணன், இருமுடிசோழன் எனும் வதிகளும் நீர்ப்பாசனத்திற்கு உதவின! 16

### வழிபாடு, படையல்

பெரும்பாலான கல்வெட்டுகள் இக்கோயில் இறைவனின் வழிபாடு, படையல் இவற்றிற்கு நிலக்கொடை அளிக்கப்பட்ட தகவலைத் தருகின்றன. கோயில் திருமடைவளாகத்தில் கும்பிட்டிருக்கும் திருமேனியாகக் குறிக்கப்பெறும் அகோரதேவர் திருநாமத்துக்காணியாக நிலம் வழங்கினார்.17 சிதைந்திருக்கும் கல்வெட்டொன்றும் கோயிலுக்குத் திருநாமத்துக்காணியாக நிலம் வழங்கப்பட்ட தகவலைத் தருகிறது. இறைவனுக்குச் செங்கழுநீர்ப்பூ மாலை சூட்டவும் மாசித் திருநாள் விழாச் செலவினங்களுக்காகவும் நிலத்துண்டுகள் வழங்கப்பட்டன.18 இறைவனின் மேற்பூச்சு, திருப்பாவாடை அமுது, விளக்கெண் ணெய் இவற்றிற்காகப் பண்டாரத்தில் இருந்து நெல் அளக்கப்

பட்டது.[19] இராஜராஜப் பெருவிலையில் சிவபிராமணக்காணியாகப் பெறப்பட்ட நிலம் இறைவனுக்கு வழங்கப்பட்டது.[20] இறைவன், இறைவி (பெரியநாச்சியார்) இவர் தம் இரவு, அர்த்த சாம அமுதிற்காக நிலத்துண்டொன்று கொடையளிக்கப்பட் டது.[21] இறைவன் உச்சிச்சந்தி அமுது கொள்கையில் மாகேசுவரருக்கு ஒடுக்கு அளிக்க வாய்ப்பாக 5,250 காசுக்கு நிலமொன்றை வாங்கிய திருநீறு பரமனார் அதைக் கோயிலுக்குத் தந்தார்.[22] மன்னர் மூன்றாம் இராஜேந்திர சோழரின் நலம் கருதி ஆளவந்த சதுர்வேதிமங்கலம் உருவாக்கப்பட்டது. அங்குக் குடியேறிய அந்தணர்களுக்கு நிலமும் வழங்கப்பட்டது .[23]

**புதிய கட்டுமானங்கள்**

நாராயணன் கவிரன் என்பார் கோயில் வளாகத்தில் மண்டபமொன்றை எடுப்பித்தார்.[24] கோயில் சிவபிராமணர் மன்றம் உடையார் நெற்றிக்கண் பட்டர் கோயில் நிருவாகிகளிடம் பல பணி நிவந்தக்காரர்களான அவர்தம் பெயரால் அகம்படிப் பிள்ளையாரை எழுந்தருளுவித்து அவருக்குக் கோயில், முற்றம், நந்தவனம் இவற்றை அமைப்பதுடன், வழிபாடு நிகழ்த்துவாருக்குக் குடியிருப்பு மனையும் தந்து, பிள்ளையார் எழுந்தருளும்போது அவருக்கு அமுதளிக்கவும் திருப்படிமாற்று உள்ளிட்டவைகளை மேற்கொள்ளவும் வாய்ப்பாக நிலக் கொடை அளிக்குமாறு கேட்டுக்கொள்ள, கோயிலாரும் அதற்கு ஏற்ப விவஸ்தாபத்திரம் செய்தளித்தனர். 4,000 காசு விலை பெறும் நூறு குழி நிலமும் 600 காசு விலை பெறும் காய்த் தெங்கு நான்கும் 400 காசு விலை பெறும் காயாத் தெங்கு நான்கும் கோயிலாரால் அகம்படிப் பிள்ளையாருக்கு அளிக்கப்பட்டன. [25]

நல்லூரில் கண்டறியப்பட்ட புதிய கல்வெட்டு, கோயில் விமானக் கீழ்த்தளப் பெருமண்டபத் தூண் ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ளது. அம்மண்டபத்தைக் கட்டித் தந்தவராகப் பழையனூர் உடையான் திருப்பெருமணம் உடையானைச் சுட்டும் அக்கல்வெட்டு, தூணையும் அவரே தந்ததாகக் கூறுகிறது. கல்வெட்டுக் குறிப்பிடும் பெருமணம் சம்பந்தர் இறைவனோடு கலந்த இடமாகும்.[26]

## விளக்குக் கொடை

இறைவன் திருமுன் நந்தாவிளக்குகள் எரிக்க வாய்ப்பாக ஏகவாசகன் உலகு கண்விடுத்த பெருமாளான வாணகோவரையர் 240 காசும் இரண்டு நிலை விளக்குகளும் அளித்தார். கோயில் சிவாச்சாரியார் ஒருவர் இரண்டு நந்தாவிளக்குகள் ஏற்றுமாறு 200 காசு கொடையளித்தார். உத்தமசோழபுரத்து வணிகர் வேட்டனாறன் 90 ஆடுகள் அளித்து விளக்கேற்றினார். 27

## நில விற்பனை

பாண்டி மண்டலச் சோழக் கோனார் அடிபடி முதலி பொன்னன் இராசனான விக்கிரமசிங்க தேவனுக்குக் கோயிலார் நிலமொன்றை விற்றுத் தந்தனர். நாமன்றமுடையான் 1,400 காசு பெற்றுக்கொண்டு நிலத்துண்டு ஒன்றை இறையிலி நத்தமாகக் கோயிலுக்கு விற்றார். 28

## சிறப்புச் செய்திகள்

நல்லூர்க் கோயில் இரண்டாம் கோபுரத் தாங்குதளத்தில் காணப்படும் இரண்டாம் இராஜாதிராஜரின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, நித்தவிநோத வளநாட்டின் கீழ் இருந்த பிரமதேய ஊரான நல்லூரின் நிருவாகத்தைக் கவனித்து வந்த பெருங்குறி மகாசபையினர், நல்லூர்க் கோயில் திருவிழாவின்போது கோவண நாடகம் நடத்த இக்கோயில் தேவரடியாள் நெற்றிக்கண் நங்கைக்குக் காசு கொள்ளா இறையிலியாக இரண்டு மா முக்காணி நிலம் கோவண நாடகப்புறமாகக் கொடையளித்தமையைத் தெரிவிக்கிறது.

நெற்றிக்கண் நங்கை இக்கோவண நாடகத்தை வேறு யாரிடமிருந்தோ கற்று ஆடியதாகக் கூறும் கல்வெட்டில், நங்கையின் மறைவுக்குப் பிறகும் அந்நாடகம் அவரது வழித் தோன்றல்களால் தொடர்ந்து நடத்தப்பெற வேண்டும் என்று பெருங்குறி மகாசபை அறிவுறுத்தியதை அறியமுடிகிறது. வழித் தோன்றல்களால் இந்நாடகம் நடத்த முடியாத நிலை உருவாகுமானால் அவர்கள் வேறு ஆடற்கலைஞர்களை ஏற்பாடு செய்து இந்நாடகத்தைத் தொடர்ந்து நடத்திட வேண்டும் என்ற நிபந்தனையையும் மகாசபை விதித்திருந்தது.

‘கற்றாடுதல்’, ஆடமுடியாத நிலை ஏற்படின், 'பிரதி கொடுத்தாடுதல்' போன்ற கல்வெட்டுச் சொல்லாட்சிகள் குறிப்பிடத்தக்கன. தமிழ்நாட்டு ஆடற்கலை வரலாற்றில் மிக முக்கியமான இடத்தைப் பெறும் இந்தக் கல்வெட்டு, அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரும் இவ்வூருடன் தொடர்பு உடையவருமான அமர்நீதிநாயனாரின் வரலாற்றையே, 'கோவண நாடகம்’ என்று குறிப்பிடுகிறது. இந்நாடகத்தை நடிக்க நெற்றிக்கண் நங்கைக்குத் தரப்பட்ட நிலம் நாடகத்தின் பெயராலேயே கோவண நாடகப்புறம் என்று வழங்கப்பட்டமையும் சிறப்பிற்குரிய தரவாகும். தமிழ்நாட்டில் இருவரையிலும் கிடைத்திருக்கும் ஆடற்கலை சார்ந்த கல்வெட்டுகள் எவற்றிலும் இது போல் கொடையளிக்கப்பட்ட நிலம் நிகழ்த்தப்பட்ட நாடகத்தின் பெயரால் அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வூர்க் கோயில் திருமடைவளாகத்துக் கும்பிட்டிருக்கும் திருவிடைமருதைச் சேர்ந்த மாளிகை மடத்து முதலியார் சந்தானத்து தத்தனுடையார் ஈசானதேவருக்குச் சந்தானத்தைக் கும்பிட்டிருக்கும் துறைஉடையார் ஈசானதேவர் மனையாள் மன்றேறு சான்றாட்டி 15 குழி நிலமொன்றை விலைக்குப் பெற்றுக் கொடையளித்தார். நிலத்தின் எல்லைகளைச் சுட்டும் போது அகோரதேவர் மடம், ஒக்கநின்றான் நந்தவனம், திருவீதி ஆகியன எல்லைகளாகச் சுட்டப்பட்டுள்ளன. இந்த ஆவணத்தில் கையெழுத்திட்டவர்களாகத் திருமடைப்பள்ளிக் கண்காணி அரசதேவனும் மெய்க்காவல் மணலூர்க் கிழவனும் இடம் பெற்றுள்ளனர். திருஈங்கோய்மலை ஜீயர் பிள்ளைகளில் தவப் பெருமாள் என்பார் 22 குழி நிலத்தில் தவப்பெருமாள் மடம் அமைத்த தகவலையும் சான்றாட்டியின் கல்வெட்டு தருகிறது. 29

நிலமளக்கப் பயன்பட்ட குழிக்கோல், வானிளம் கோல் என்றழைக்கப்பட்டது.30 மக்கள் பெயர்களுள் பெண் அமருந்திருமேனி உடையான் எனும் பெயர் குறிப்பிடத்தக்கது. சிதைந்திருக்கும் கல்வெட்டொன்றில் இடம்பெற்றுள்ள பெரியாழ்வார் திருமேனி எதைக் குறிக்கிறது என்பதை அறியக்கூடவில்லை.31

**குறிப்புகள்**

1. ஆய்வு நாட்கள் 10. 09. 1982, 26. 11. 2000, 9. 9. 2007.

2 சம்பந்தர் 1: 86, 2:57, 3: 83; அப்பர் 4 : 97,6:14.

3 அப்பரின் பதிகத்தில் இவ்வரலாறு இடம்பெற்றுள்ளது. 'நீட்கொண்ட கோவணம் காவென்று சொல்லி கிறிபடத் தான் வாட்கொண்ட நோக்கி மனைவியொடும் அங்கோர் வாணிகனை ஆட்கொண்ட வார்த்தை உரைக்கும்'

4 இக்கோபுரத்தின் வடகிழக்குப் பகுதியில் கோவண நாடகக் கல்வெட்டு, பேராசிரியர் முனைவர் மு. நளினியால் கண்டறியப்பட்டது. உடனிருந்து உதவியவர் பேராசிரியர் முனைவர் அர. அகிலா. விரிவான தரவுகளுக்குக் காண்க: மு. நளினி, 'கோவண நாடகம்', பாதைகளைத் தேடிய பயணங்கள், பக்.140-146

5 இக்கல்வெட்டும் சிற்பமும் பேராசிரியர் முனைவர் மு. நளினியால் கண்டறியப்பட்டன. உடனிருந்து உதவியவர் பேராசிரியர் முனைவர் அர. அகிலா.

6 இக்கல்வெட்டு பேராசிரியர் முனைவர் மு. நளினியால் கண்டறியப்பட்டது.

7 'நல்லருளால் திருவடி என் தலைமேல் வைத்தார்.' அப்பர் 6 : 14; இரா. கலைக்கோவன், 'நல்லூருக்கு வா', மாலை முரசு, 13. 11. 1982. 'பூவார் அடிச்சுவடு' கலைமகள், ஜனவரி 1985.

8 ARE 1911 : 40-62.

9 மு. நளினி, 'கோவண நாடகம்', பாதைகளைத் தேடிய பயணங்கள், பக்.144 - 146.

10 ARE 1911 : 40.

11 பஞ்சவன்மாதேவிச் சதுர்வேதிமங்கலம், மனுகுலமெடுத்த பெருமாள் சதுர்வேதிமங்கலம், தூயபெருமாள் சதுர்வேதி மங்கலம், ஆளவந்த சதுர்வேதிமங்கலம், இராஜகேசரிச் சதுர்வேதிமங்கலம், மாதானமங்கலம், மன்னைமங்கலம்.

12 மருந்தாழ்வார் நல்லூர், காஞ்சை நல்லூர், பொன்மேய்ந்த பெருமாள் நல்லூர்.

13 நல்லூர், விழியூர், இராஜராஜப் புங்கனூர், பெரும்பன்றூர், சேந்தலூர், கூத்தூர், மணலூர், கிளியூர், சேய்ஞலூர், பெரும்பற்றப்புலியூர், நாங்கூர், ஆவூர், விரலூர்.

14. பனந்தரம், திருவிடைமருது, திருமழபாடி, ஈங்கோய்மலை, வலஞ்சுழி, திருவையாறு, சிற்றம்பலம், இருள்நீக்கி.

15. ARE 1911: 43, 51, 59.

16. ARE 1911: 43, 48, 50, 51, 52.

17. ARE 1911: 43.

18. ARE 1911: 51, 52.

19. ARE 1911: 53.

20. ARE 1911: 55.

21. ARE 1911: 56.

22. ARE 1911: 59.

23. ARE 1911: 60.

24. ARE 1911: 42.

25. ARE 1911:57, 58.

26. மு. நளினி, 'கோவண நாடகம்', பாதைகளைத் தேடிய பயணங்கள், பக். 144 146.

27. ARE 1911: 40, 45, 47, 54.

28. ARE 1911: 44, 50.

29. ARE 1911: 49.

30. ARE 1911:49.

31. ARE 1911: 46, 43.

---

# 4 ஆவூர்

கும்பகோணம் வட்டம் பட்டீசுவரத்திற்கு அருகே திருமேற்றளியை அடுத்துள்ளது ஆவூர். சம்பந்தரின் பதிகம் பெற்ற 1 இவ்வூர்ப் பசுபதீசுவரர்கோயில் மாடக்கோயிலாகும்.2 வளாக வாயிலிலுள்ள ஐந்து தளக் கோபுரத்தின் கருங்கல்லால் ஆன கீழ்த்தளம் துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நாகபந்தப் பாதம் பெற்ற எண்முக அரைத் தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் உத்திரம், கிழக்கில் வெறுமையாகவும் பிற திசைகளில் பூதவரி பெற்றும் திகழும் வலபி, கந்தர்வத்தலைகள் பெற்ற கூடுகளுட னான கபோதம் இவற்றுடன் விளங்குகிறது. மேற்றளங்களும் கிரீவம், சிகரம் இவையும் செங்கல் கட்டுமானங்கள். சுதை உருவங்கள் கீழ்த்தள ஆரத்தின் கிழக்கு முகத்தில் மட்டுமே காணப்படுகின்றன. கோபுரத்தின் இருபுறத்தும் வளரும் மதில் சூழ் வளாகத்தின் கிழக்குப் பகுதியில் பிள்ளையார், பலித்தளம், நந்தி, கொடிமரம் இவை அமைந்துள்ளன.

### வளாக மண்டபம்

வளாகத்தின் வடகிழக்கில் பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் வெறுமையான கூரையுறுப்புகள், கபோதம் கொண்டமைந்த மண்டபம் ஒன்று அமைந்துள்ளது. அதன் சுவர்களில் மகரதோரணத் தலைப்பிட்ட கோட்டப்பஞ்சரங்கள் மேற்கில் ஆறும் வடக்கில் நான்கும் கிழக்கில் ஆறும் என அமைய, பஞ்சர அலங்கரிப்புப் பெற்ற ஆழமான கோட்டங்கள் முத்திசைகளிலும் திசைக்கு ஒன்றாய் உள்ளன.

### சுற்றுத் திருமுன்கள்

வளாகத்தின் மேற்கில் தென்பகுதியில் ஒருதள வேசர விமானத்தில் நிருதி விநாயகரும் இடைப்பகுதியில் ஒருதள வேசர விமானத்தில் தனுஷ் சுப்பிரமணியரும் வடபகுதியில் ஒருதள நாகர விமானத்தில் யானைத்திருமகளும் இடம் பெற்றுள்ளனர். இலலிதாசனத்தில் உள்ள மகுடமற்ற சிதைந்த

இடம்புரி நிருதி விநாயகரின் முன்கைகளில் வலப்புறம் தந்தம், இடப்புறம் மோதகம். பின்கைக் கருவிகள் சிதைந்துள்ளன.

முன்கைகளில் அம்பும் வில்லும் கொண்டு பின்கைகளில் வஜ்ரம், சக்தி இவற்றுடன் காட்சிதரும் சுப்பிரமணியரின் தலையில் கரண்டமகுடம். பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, தோள், கை வளைகள், முப்புரிநூல், உதரபந்தம், புலிமுகக் கச்சுடனான சிற்றாடை அணிந்துள்ள அவரின் இருபுறத்துள்ள தெய்வானை, வள்ளி இவர்தம் வெளிக்கைகள் நெகிழ, உள்கைகளில் மலர். தேவியர் இருவரும் சடைமகுடம், ஸ்வர்ணவைகாக்ஷம், பட்டாடை அணிந்துள்ளனர். சுப்பிர மணியர் கோயில் முகமண்டபத்தில், 'ஸ்ரீமுத்திரண்டர்' என்ற பெயருடன் சண்டேசுவரர் அமர்த்தப்பட்டுள்ளார். சடை மகுடம், சரப்பளி, முப்புரிநூல், உதரபந்தம் இவற்றுடன் சுகாசனத்தில் உள்ள அவரது வலக்கையில் மழு. இடக்கை தொடைமீது உள்ளது.

**வெற்றுத்தளம்**

வளாகத்தின் நடுவில் 4. 65 மீ. உயர வெற்றுத்தளமும் அதன் மேலிருக்குமாறு இறைவன், இறைவி விமானங்களும் அவற்றின் முன் அமைந்த மண்டபங்களும் சுற்றும் காட்சிதருகின்றன. முன்மண்டப வெற்றுத்தளம் கண்டம், கபோதம், பூமிதேசம் எனும் தாங்குதள உறுப்புகளும் வேதிகைத்தொகுதியும் நாக பந்தப் பாதம் பெற்ற எண்முக அரைத்தூண்கள் தழுவிய சுவரும் பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் உத்திரம், வாஜனம், பூதவரி பெற்ற வலபி, கபோதம் இவையும் கொண்டு விளங்குகிறது. இவ்வெற்றுத்தளத்தின் கிழக்குமுகத்தில் உள்ள மகரதோரணத் தலைப்பிட்ட கோட்டப்பஞ்சரம் வெறுமையாக உள்ளது.

வெற்றுத்தளத்தின் தெற்கில் காணப்படும் 23 படிகள் கீழ்ப்பகுதியில் துளைக்கைப் பிடிச்சுவரும் மேற்பகுதியில் பட்டையான பிடிச்சுவரும் கொண்டுள்ளன. மேற்பிடிச்சுவரின் இறுதிப்பகுதியில் சங்க, பத்ம நிதிகள் இடம்பெற்றுள்ளன. படிகள் முடியும் இடத்திற்குச் சற்று முன்பாகத் தென்புறம் விரியும் தளம் சோமாஸ்கந்தர் விமானம், முகமண்டபம் இவற்றிற்கான வழியாக உள்ளது.

படிகளின் முடிவில் உள்ள முன்மண்டபம் வடக்கில் ஆடவல்லானுக்கான ஒருதள நாகரத் திருமுன்னும் வடக்குச் சுற்றுக்கான வாயிலும் பெற்றுள்ளது. இம்மண்டபத்தின் புறச்சுவர் உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், எளிய நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்ற செங்கல் கட்டுமானமாய் உள்ளது. அதன் கிழக்குச் சுவரில் பெருஞ் சாளரம் ஒன்றும் குறுஞ்சாளரங்கள் மூன்றும் காட்டப்பட்டுள்ளன.

**சோமாஸ்கந்தர் விமான வெற்றுத்தளம்**

உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், எளிய நான்முக அரைத் தூண்கள் அணைத்த சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள், உத்திரம், தாமரை வலபி, கபோதம் பெற்றுக் கருங்கல் கட்டுமானமாய் அமைந்துள்ள இவ்வெற்றுத்தளத்தின் மேலே செங்கல் கட்டுமானமாய்ப் பிடிச்சுவர் உள்ளது. வெற்றுத்தளத்தின் தெற்கிலும் மேற்கிலும் உள்ள மகரதோரணத் தலைப்பிட்ட கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. சோமாஸ்கந்தர் விமான வெற்றுத்தளம் மேற்குப் பகுதியில் இறைவன் விமானத்திற்கான வெற்றுத்தளத்துடன் ஒன்றுமிடத்து, செங்கல் கட்டுமானமாய் மூன்று இடைவழிகளுடன் வளைவுத் தலைப்புப் பெற்ற மாளிகையொன்று காட்டப்பட்டுள்ளது. மூன்று இலிங்கத் திருமேனிகளைக் கொண்டுள்ள அதன் தாங்குதளமும் கூரையும் உறுப்பு வேறுபாடற்ற நிலையில் அமைந்துள்ளன.

சோமாஸ்கந்தர் விமானத்திற்கு அழைத்துச் செல்லும் தெற்குத் தளத்தின் முதற் பகுதியைத் தாங்கும் வெற்றுத்தளம் பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, பாதம் பெற்ற உயரமான எண்முக அரைத்தூண்கள் பெற்றுப் போதிகைகளோ, உத்திரம் தவிர்த்த கூரையுறுப்புகளோ இன்றிப் பிடிச்சுவர் தாங்குகிறது. இவ்வெற்றுத்தளத்தின் கிழக்கு முகத்தில் அமைந்துள்ள மகரதோரணத்தில் ஊர்த்வஜாநு கரணப் பிள்ளையார் காணப்படுகிறார். இடமுழங்கால் உயர்த்தப்பட்டுள்ளது. வல முன் கை தந்தம் கொள்ள, பின்கையில் அங்குசம். இட முன் கை அர்த்தரேசிதத்தில் அமைய, பின்கையில் பாசம். இடம்புரித் துளைக்கை இடக்கை மோதகத்தைச் சுவைக்கிறது. பிள்ளையா

ரின் இருபுறத்தும் மேலிருக்குமாறு கவரிகள் உள்ளன. தெற்குத் தளத்தின் இரண்டாம் பகுதியைத் தாங்கும் வெற்றுத்தளம் உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், நெடுஞ்சுவர், கூரையுறுப்புகள் பெற்று, மேலே பிடிச்சுவரும் கொண்டுள்ளது.

### சோமாஸ்கந்தர் விமானம், முகமண்டபம்

பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர் வெட்டுத் தரங்கப் போதிகைகள், மதலை வலபி, கபோதம் பெற்றுள்ள சோமாஸ்கந்தர் விமானத்தின் சாலைப்பத்திகள் புறந்தள்ளியுள்ளன. முப்புறத்தும் உள்ள கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. இருதள வேசரமாய் அமைந்துள்ள அதன் கிரீவகோட்டங்களில் கிழக்கில் மட்டும் முருகன் தேவியருடன் காட்சிதருகிறார். இவ்விமானம் இறைவன் விமானத்திலிருந்து பிடிச்சுவரால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. விமானக் கட்டமைப்பிலுள்ள முகமண்டபத்தில் சாலைப் புறந்தள்ளலோ, கோட்டங்களோ இல்லை.

### இறைவன் விமான வெற்றுத்தளம்

இறைவன் விமானம், முகமண்டபம் இவற்றைத் தாங்கும் வெற்றுத்தளம் கபோதபந்தத் தாங்குதளம், நாகபந்தப் பாதம் பெற்ற எண்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள், தாமரை வலபி, கபோதம், பூமிதேசம் கொண்டு அமைந்துள்ளது. மேலே பிடிச்சுவர். விமானத்திற்கான பகுதியில் சுவரின் முப்புறத்தும் உருளை அரைத்தூண்களின் அணைப்பில் கோட்டங்கள் உள்ளன. வடக்கு, மேற்குக் கோட்டங்கள் வெறுமையாக அமைய, மண்டப முகப்புப் பெற்றுள்ள தெற்குக் கோட்டத்தில் சோழர் காலச் சிற்பமாக ஆலமர்அண்ணல் இடம் பெற்றுள்ளார். சடைப்பாரம், மகர, பனையோலைக் குண்டலங்கள், முப்புரிநூல், உதரபந்தம், உருத்திராக்கமாலை, தோள், கைவளைகள், இடைக்கட்டுடனான சிற்றாடை, வீரக்கழல் இவற்றுடன் வீராசனத்தில் உள்ள ஆலமர்அண்ணலின் பின் கைகளில் வலப்புறம் அக்கமாலை, பாம்பு. இடப்புறம் தீச்சுடர். வல முன் கை சின்முத்திரையில் அமைய, இட முன் கை சுவடி கொண்டுள்ளது.

மேற்குக் கோட்டம் வெறுமையாக இருந்தபோதும், கோட்டத்தின் இருபுறத்தும் உள்ள சுவரில் விஷ்ணுவும் நான்முகனும் வணக்கமுத்திரையில் காணப்படுவதால் அக்கோட்டத்தில் இலிங்கோத்பவர் இடம்பெற்றிருந்ததாகக் கொள்ளலாம். முகமண்டபத்திற்கான வெற்றுத்தளப் பகுதியில் தென்புறம் கோட்டம் இல்லை. வடக்குக் கோட்டம் வெறுமையாக உள்ளது. வெற்றுத்தளத்தின் மேல் வளரும் பிடிச்சுவர் வடபுறத்தே முகமண்டபத்துடன் முடிகிறது. அதையடுத்து மேற்பகுதியில் பெருமண்டபமும் கீழ்ப்பகுதியில் பெருமண்டபம் தாங்கும் வெற்றுத்தளமும் தொடர்கின்றன.

**பெருமண்டப வெற்றுத்தளம்**

இறைவன் விமான வெற்றுத்தள அமைப்பிலேயே பெருமண்டப வெற்றுத்தளமும் அமைந்துள்ளது. சுவரில் மகர தோரணத் தலைப்பிட்ட நான்கு கோட்டங்கள் உள்ளன. அவற்றுள் இரண்டு வெறுமையாக உள்ளன. மண்டபம் பெற்றுள்ள முதற் கோட்டத்தில் மகிடாசுரமர்த்தனியும் அடுத்துள்ள சிறிய மண்டபக் கோட்டத்தில் கொற்றவையும் இடம்பெற்றுள்ளனர். மகிடத்தலை மீது நிற்கும் மர்த்தனி பின் கைகளில் சங்கு, சக்கரம் கொண்டு கரண்டமகுடம், மகர, பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, ஸ்வர்ணவைகாக்ஷம், பட்டாடை அணிந்தவராய் வல முன் கையில் காக்கும் குறிப்புக் காட்டுகிறார். இட முன் கை கடியவலம்பிதமாக உள்ளது. அதே அமைப்பில் உள்ள கொற்றவை மர்த்தனிக்குச் சற்றுக் காலத்தால் முற்பட்டவர். வடக்கு வளாகத்தில் தனித் திருமேனியாக மரத்தடியில் இருத்தப்பட்டுள்ள அழகிய கொற்றவைச் சிற்பமும் சிறு கோட்டக் கொற்றவையை ஒத்துள்ளது.

**பெருமண்டபம்**

பெருமண்டபத்தின் புறச்சுவர் வடபுறத்தே உறுப்பு வேறு பாடற்ற தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நாகபந்தப் பாதம் பெற்ற எண்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், பூமொட்டுப் போதிகைகள், வெறுமையான வலபி, கபோதம் பெற்றுச் சுவர்ப்பகுதியில் ஆறு கோட்டப் பஞ்சரங்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் ஒன்று சாளரமாக்கப்பட்டுள்ளது. தென்

புறத்தில் தாங்குதளம் இடம்பெறவில்லை. ஏனைய அனைத்தும் வடபுறம் போலவே அமைந்துள்ளன. சுவர்ப்பகுதியில் உள்ள ஐந்து கோட்டப் பஞ்சரங்களும் வெறுமையாக உள்ளன.

**அம்மன் கோயில் வெற்றுத்தளம்**

தாங்குதளமோ, தூண்களோ அற்ற நெடுஞ்சுவர், கூரையுறுப்புகள் பெற்று விளங்கும் வெற்றுத்தளம் அம்மன் விமானங்களையும் ஆடவல்லான் விமானத்தையும் தாங்குகிறது. அதன் மீது பிடிச்சுவர். வெற்றுத்தளத்தின் வடகிழக்குப் பகுதியில் வளரும் படிவரிசை மேற்றளத்திற்கு அழைத்துச் செல்கிறது. இப்படிவரிசை வடகிழக்கு வளாகப் பெருமண்டபத்தை ஒட்டி அமைந்துள்ளது.

**முன்மண்டபம்**

தெற்கு, வடக்கு இருபுறத்திருந்தும் வளரும் படிகள் முன் மண்டபத்தை அடைகின்றன. இம்மண்டபத்தின் வடக்கில் ஒரு தள நாகர விமானமாக ஆடவல்லான் திருமுன் அமைந்துள்ளது. திருமுன் நுழைவாயிலின் இருபுறத்தும் வண்ணம் பெற்ற சுதை வடிவங்களாகக் காவலர்கள் காட்சிதருகின்றனர். வாயிலின் மேலே விரியும் சாலையில் ஆடவல்லான் சிற்பம் உள்ளது. முன்னுள்ள முன்றில் தூண்களின் மேற்சதுரத்தில் முருகனும் விநாயகரும் இடம்பெற்றுள்ளனர். முச்சதுர, இருகட்டுத் தூண்கள் வெட்டுப் போதிகைகளுடன் கூரை தாங்கும் இம்மண்ட பத்தின் மேற்கில் இடைமண்டபம் அமைந்துள்ளது.

**இடைமண்டபம்**

உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், எளிய நான்முக அரைத் தூண்கள் தழுவிய சுவர், வெறுமையான கூரையுறுப்புகள் கொண்டுள்ள இடைமண்டபத்தின் வடசுவர் ஆடவல்லான் திருமுன்னுக்கும் அம்மன் விமானங்களுக்கும் இடைப்பட்டுக் காட்சியளிக்கிறது. தென்சுவர் நெடுஞ்சுவராக வெறுமையான கூரையுறுப்புகளுடன் அமைந்துள்ளது. இச்சுவரின் தென்மேற்கில் பெருவாயிலும் தென்கிழக்கில் சாளரம் ஒன்றும் காட்டப்பட்டுள்ளன. முச்சதுர, இருகட்டுத் தூண்கள் வெட்டுத் தரங்கப் போதிகைகளுடன் கூரை தாங்கும் இம்மண்டபத்தின் வடபுறத்தே மங்களாம்பிகை, பங்கஜவல்லித் திருமுன்கள் சிறு முக

மண்டபத்துடன் அமைந்துள்ளன. இரண்டு திருமுன்களுக்கும் தனித்தனியே நந்தி காட்டப்பட்டுள்ளது. தூண்களின் சதுரங் கள் சில தாமரைப் பதக்கம் பெற்றுள்ளன.

**அம்மன் விமானங்கள்**

பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நாகபந்தப் பாதம் பெற்ற எண்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் கொண்டு ஒருதள வேசரமாய் அமைந்துள்ள இரண்டு அம்மன் விமானங்களும் இடைவெளியின்றி இணைந்துள்ளன. அவற்றின் சுவர்க் கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. இரண்டு இறைவியருள் சடைமகுடரான மங்களாம்பிகை பின்கைகளில் அக்கமாலை, மலர் கொண்டுள்ளார். முன்கைகள் காக்கும் குறிப்பிலும் கடிய வலம்பிதத்திலும் உள்ளன. கரண்டமகுடம் அணிந்துள்ள பங்கஜவல்லியின் கைகளும் மங்களாம்பிகையை ஒத்துள்ளன. இவ்விரு திருமுன்களையும் அடுத்துத் தனித்த நிலையில் சுகாசனத்திலுள்ள இறைவியின் வலக்கையில் மலர். இடக்கை கடகத்திலுள்ளது.

**பெருமண்டபம்**

முச்சதுர, இருகட்டுத் தூண்கள் பூமொட்டுப் போதிகைகளுடன் கூரை தாங்கும் பெருமண்டபத்தின் மேற்கில் முகமண்டபமும் இறைவன் விமானமும் அமைந்துள்ளன. முகமண்டபத்தின் இருபுறத்தும் உள்ள திறப்புகள் விமானச் சுற்றுக்கு வழி தருகின்றன. பலித்தளமும் நந்தியும் பெற்றுள்ள இம்மண்டபத்தின் தென்கிழக்கு மேடையில் ஐந்து பைரவர் சிற்பங்கள் உள்ளன. சுவரில் காணப்படும் இலிங்க வழிபாட்டுச் சிற்பத்தில் சடைமகுடம், தாடி, மீசை பெற்றுள்ள பெரியவர் வழிபாட்டில் உள்ளார். அவருக்கும் இலிங்கத்திருமேனிக்கும் இடையில் தூபக் கலசம், வஜ்ரமணி, சங்கு இவை உள்ளன. இலிங்கபாணத்தின் மேல் பூச்சரம் அமைய பெரியவரின் பின் கைக்கட்டிய நிலையில் ஆடவர் ஒருவரைக் காணமுடிகிறது. தனிச் சிற்பமாய் முனிவர் ஒருவர் வணக்கமுத்திரையில் உள்ளார். ஒளிவட்டம், கரண்ட மகுடம், மகரகுண்டலங்கள், சரப்பளி, முப்புரிநூல், உதரபந்தம், சிற்றாடை இவற்றுடன் சந்திரனைக் காணமுடிகிறது.

மண்டபத்தின் தென்புறத்தே எழுவர் அன்னையர் கச்சு அணிந்து சுகாசனத்தில் உள்ளனர். அவர்தம் வல முன் கை காக்கும் குறிப்பில் உள்ளது. பிராமி, கௌமாரி, வைணவி, வராகி, இந்திராணி ஆகிய ஐவரின் இட முன் கை கடகத்தில் அமைய, சாமுண்டியும் மகேசுவரியும் முழங்கால்மீது இருத்தியுள்ளனர். சடைமகுடம், சரப்பளி பெற்றுள்ள பிராமியின் பின்கைகளில் அக்கமாலை, குண்டிகை. மகேசுவரியின் பின்கைகளில் முத்தலை ஈட்டியும் பாசமும் உள்ளன. பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி அணிந்துள்ள கௌமாரியின் பின்கைகளில் சக்தி, வஜ்ரம். வைணவியும் வராகியும் சங்கு, சக்கரம் கொண்டுள்ளனர். இந்திராணியின் வலப் பின் கையில் அங்குசம். இடப் பின் கைக் கருவியை அடையாளப்படுத்தமுடியவில்லை. சரப்பளி, மண்டையோட்டு முப்புரிநூல், தோள், கை வளைகள், வலச் செவியில் பனையோலைக் குண்டலம், இடச்செவியில் பிணக் குண்டலம் அணிந்துள்ள சாமுண்டியின் பின்கைக் கருவிகளையும் அடையாளப்படுத்தக்கூடவில்லை.

**இறைவன் விமானம்**

துணைஉபானம், தாமரை உபானம், பிரதிபந்தத் தாங்கு தளம், வேதிகைத்தொகுதி, நாகபந்தப் பாதம் பெற்ற எண்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள், தாமரை வலபி, கூடுவளைவுகளுடனான கபோதம் பெற்றுச் சாலைப் புறந்தள்ளலுடன் விளங்கும் விமானக் கீழ்த்தளம் 5.75 மீ. பக்கமுடையது. இருதள வேசரமாக விளங்கும் விமானத்தின் மேற்றளமும் மேலுள்ள கர்ணகூடங்களும் கிரீவம், சிகரம் இவையும் செங்கல் கட்டுமானமாக உள்ளன. இரண்டாம் தளத்தின் சுவர்கள் சுதையுருவங்களால் நிரப்பப்பட்டுள்ளன. உருளை அரைத்தூண்கள் அணைத்துள்ள மகரதோரணத் தலைப்பிட்ட சுவர்க் கோட்டங்களில் மேற்கில் இலிங்கோத்பவரும் வடக்கில் நான்முகனும் இடம்பெற்றுள்ளனர். தெற்குக் கோட்டம் வெறுமையாக உள்ளது.

சடைமகுடம், மகர, பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, முப்புரிநூல், புலிமுகக் கச்சு இருத்தும் சிற்றாடை அணிந்துள்ள இலிங்கோத்பவரின் பின்கைகளில் மழு, மான்.

முன்கைகளில் வலக்கை காக்கும் குறிப்புக் காட்ட, இடக்கை கடியவலம்பிதமாக உள்ளது. சடைமகுடம், பூட்டுக் குண்டலங்கள், இடைக்கட்டுடனான பட்டாடை, புலிமுகக் கச்சு அணிந்து பின்கைகளில் அக்கமாலையும் குண்டிகையும் ஏந்தியுள்ள நான்முகனின் வல முன் கை காக்கும் குறிப்பில் அமைய, இட முன் கை கடியவலம்பிதமாக உள்ளது.

இரண்டாம் தளச் சாலைக் கோட்டங்களில் தென்புறத்தே வீராசனத்தில் ஆலமர் அண்ணலும் மேற்கில் சுகாசனத்தில் தேவியருடன் விஷ்ணுவும் வடக்கில் தேவியருடன் நின்றகோலத்தில் நான்முகனும் இடம்பெற்றுள்ளனர். கிரீவ கோட்டங்களில் தெற்கில் இயமனும் மேற்கில் தேவியருடன் உத்குடியில் விஷ்ணுவும் வடக்கில் தேவியருடன் நின்றகோலத்தில் நான்முகனும் கிழக்கில் உமையுடன் சுகாசனத்தில் சிவபெருமானும் இடம்பெற்றுள்ளனர்.

விமானக் கட்டமைப்பிலுள்ள முகமண்டபத்தில் சாலைப் புறந்தள்ளல் இல்லை. கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. முகமண்டபத்தின் வடசுற்றிலுள்ள ஒருதள நாகர விமானத்தில் சடைப்பாரம், பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, சிற்றாடை அணிந்து சுகாசனத்திலுள்ள சண்டேசுவரரின் வலக்கையில் மழு. இடக்கை தொடைமீதுள்ளது. முகமண்ட பத்தின் வாயிலைக் காக்கும் காவலர்கள் பின்கைகளைப் போற்றி முத்திரையிலும் முன்கைகளுள் ஒன்றை எச்சரிக்கை முத்திரையிலும் கொண்டுள்ளனர். தெற்கர் உருள்பெருந்தடி கொள்ள, வடக்கர் மழு பெற்றுள்ளார்.

வாயிலின் தென்புறத்தே காவலரை அடுத்துள்ள ஆடல் விநாயகர் இடக்காலை ஊன்றி வலக்காலை அக்ரதலசஞ்சாரத்தில் நிறுத்தியுள்ளார். முன்கைகளில் வலப்புறம் தந்தம். இடப்புறம் மோதகம். பின்கைகளில் வலக்கையில் அங்குசம். அர்த்தரேசிதத்தில் உள்ள இடக்கை பாசத்தைத் தலைகீழாகப் பிடித்த படி உள்ளது. கரண்டமகுடம், அலங்கார உதரபந்தம், இடைக் கட்டுடனான சிற்றாடை அணிந்துள்ள அவரது இடம்புரித் துளைக்கை இடக்கை மோதகத்தைச் சுவைக்கிறது.

கருவறையில் இறைவன் சதுர ஆவுடையாரும் உருளைப் பாணமுமாய்ப் பசுபதீசுவரர் என்ற திருப்பெயருடன் எழுந்தருளியுள்ளார்.

## கல்வெட்டு

இங்கிருந்து படியெடுக்கப்பட்டிருக்கும் மூன்றாம் இராஜேந்திரரின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, கோயில் நிலங்களின் பட்டியலைத் தருவதுடன், ஆவூர் நித்தவிநோத வளநாட்டின் கீழிருந்த ஆவூர்க் கூற்றத்தின் கீழ் இயங்கிய தகவலையும் முன்வைக்கிறது.3

## குறிப்புகள்

1. சம்பந்தர் 1 : 8. பத்திமைக் கால மகளிரின் சொல் ஆற்றலையும் கவிபாடும் திறத்தையும் இப்பதிகத்தின் வழி சம்பந்தர் எடுத்துரைத்திருக்கும் பாங்கு சிறப்பிற்குரியது.
2. *ஆய்வு நாட்கள்:1.4.1983, 27.1.2001,3.4. 2010. இக்கோயில் பற்றிய முதல் கட்டுரை 1999ம் ஆண்டு அமுதசுரபி தீபாவளி மலரில், 'ஆவூர்ப் பழம்பதி என்ற தலைப்பில் வெளியானது.*
3. *ARE: 1911: 81.*

----------------------------------------------

# 5. ஆறைவடதளி

மேற்றளங்களை இழந்து, கபோதபந்தத் துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத் தொகுதி, நாகபந்தப் பாதம் பெற்ற உயரக் குறைவான எண்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் இவற்றுடனான கீழ்த்தளம் மட்டுமே கொண்டுள்ள, அப்பரின் பதிகம் பெற்ற1 ஆறைவடதளிக் கோயிலின் கோபுர வாயில் மேற்குப் பார்வையாக உள்ளது.2 வாயிலின் இருபுறத்தும் தொடரும் மதில்கள் வளாகத்தைச் சுற்றி வளைத்துள்ளன. வெளிச்சுற்றின் வடபுறத்தே மதிலையொட்டியுள்ள மாடம் ஒன்றில், வடதளியைச் சமணர்களிடமிருந்து மீட்க அப்பர் உண்ணா நோன்பு இருந்த இடம் என்ற சுட்டலுடன், அப்பர் பெருமானின் சுதைவடிவம் உள்ளது.3 வடக்குச் சுற்றில் சில சிவலிங்கங்களும் காணப்படுகின்றன.

## வெற்றுத்தளம்

இறைவனின் விமானம், முகமண்டபம், பெருமண்டபம், இறைவி விமானம் இவற்றைத் தாங்கும் 3 மீ. உயர வெற்றுத்தளம் உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், உறுப்பு வேறுபாடற்ற நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், கூரையுறுப்புகள் எனக் கருங்கல் கட்டுமானமாக உள்ளது. அதன் கபோதம் மட்டும் செங்கல்லால் வடிவமைக்கப்பட்டுள்ளது. வெற்றுத்தளத்தின் மேற்கு முகத்தில் தெற்கிலிருந்து வளரும் பதினைந்து படிகள் இறைவன் கோயில் மேற்சுற்றின் மேற்கு வாயிலுக்கு அழைத்துச் செல்கின்றன. படிகளை ஒட்டியுள்ள வெற்றுத்தளத்தின் மேற்குச் சுவரில் வீணையேந்திய சிவபெருமானின் சிற்பமும் அமர்நீதிநாயனார், அவர் துணைவியார் இவர்தம் சிற்பங்களும் 4 ஆடற்தொகுதியொன்றும் உள்ளன.

கால்களை ஸ்வஸ்திகமாக்கிச் சடைமகுடம், மகர, பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, ஸ்கந்தமாலை, தோள், கை வளைகள் புலிமுகக் கச்சு இறுக்கும் சிற்றாடை அணிந்து நெற்றிக்கண்ணுடன் விளங்கும் சிவபெருமானின் முன்கைகள் வீணை மீட்டுகின்றன. வலப் பின் கை சிதைந்துள்ளது. இடப் பின் கையில் மான். இறைவனின் பின் நிற்கும் நந்தியின் தலை

மீது இறைவனின் இடக்கைகள் தாங்கலாக உள்ளன. உச்சிக் கொண்டை, தாடி, மீசை, சிற்றாடை இவற்றுடன் காட்சிதரும் அமர்நீதிநாயனாரின் வலக்கை காக்கும் குறிப்புக் காட்ட, இடக் கை தொடைமீது உள்ளது. அவரது துணைவியார் தமிழம் கொண்டையும் பனையோலைக் குண்டலங்களுமாய் இடுப்பில் ஏந்திய குழந்தையுடன் காட்சிதருகிறார்.

**மேற்சுற்று**

சுற்றின் வாயில் புறந்தள்ளிய சாலையாக அமைந்துள்ளது. அதற்கேற்ப வெற்றுத்தளத்திலும் பிதுக்கம் காட்டப்பட்டுள்ளது. வாயிலை ஒட்டி வளரும் சுற்று மதில் செங்கல் கட்டுமானமாய் உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், உத்திரம், வாஜனம், வலபி, கபோதம் பெற்றுள்ளது.

விமானம், முகமண்டபம், பெருமண்டபம் என அமைந்துள்ள இறைவன் கோயில் சுற்றின் வடகிழக்கு மூலையில் செங்கல் கட்டுமானமாக உள்ள ஒருதள வேசர விமானத்தில் சண்டேசுவரர் சுகாசனத்தில் உள்ளார். சடைப்பாரம், பனை யோலைக் குண்டலங்கள், சரப்பளி, முப்புரிநூல், உதரபந்தம், சிற்றாடை அணிந்துள்ள அவரது இடக்கை கடகத்தில் அமைய, வலக்கையில் மழு.

**இறைவன் விமானம்**

கிழக்கு மேற்காக 6. 40 மீ. நீளமும் தென்வடலாக 6. 32 மீ. அகலமும் பெற்றுள்ள இறைவனின் இருதள வேசர விமானத் தின் கீழ்த்தளம் கருங்கல் பணியாக உள்ளது. தாமரை உபானம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, பாதம் பெற்ற எண் முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள், வெறுமையான வலபி உள்ளிட்ட கூரையுறுப்புகள், ஆழமற்ற கூடுகள் பெற்ற கபோதம் என அமைந்த இத்தளத்தின் சாலைப் பத்திகள் பிதுக்கமாக உள்ளன. இப்பத்திகளில் உள்ள பஞ்சர அலங்கரிப்புப் பெற்ற கோட்டங்களையும் எண்முக அரைத் தூண்களே அணைத்துள்ளன. கோட்டங்களில் தெற்கில் ஆலமர் அண்ணலும் மேற்கில் இலிங்கோத்பவரும் வடக்கில் நான்முகனும் இடம்பெற்றுள்ளனர். மலை மேல் வீராசனத்தில் உள்ள

ஆலமர்அண்ணலின் பின்கைகள் அக்கமாலை, பாம்பு, தீச்சுடர் கொள்ள முன்கைகளுள் வலக்கை சின்முத்திரையிலும் இடக்கை ஏடேந்தியும் உள்ளன. மண்டையோடு பெற்ற சடைப்பாரம், உருத்திராக்கமாலை, வஸ்திரமுப்புரிநூல், உதரபந்தம், சிற்றாடை பெற்றுள்ள பெருமானின் வலச்செவியில் மகரகுண்டலம்; இடச்செவியில் பனையோலைக் குண்டலம். மலர்ந்த சிரிப்புடன் காட்சிதரும் இந்தச் சோழர் காலச் சிற்பம் மாடக்கோயில் ஆலமர்அண்ணல்களுள் எழிலார்ந்த ஒன்றெனலாம்.

சடைமகுடம், மகர, பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, தோள், கை வளைகள், முப்புரிநூல், உதரபந்தம், புலிமுகக் கச்சுப் பெற்ற பட்டாடை, இடைக்கட்டு இவற்றுடன் காட்சிதரும் இலிங்கோத்பவரின் பின்கைகளில் மான், மழு. முன் கைகளில் வலக்கை காக்கும் குறிப்புக் காட்ட, இடக்கை கடிய வலம்பிதமாக உள்ளது. பாணத்தின் மேற்பகுதியில் அன்னமாக நான்முகனும் கீழ்ப்பகுதியில் பன்றியாக விஷ்ணுவும் காட்டப்பட்டுள்ளனர். கோட்டத்தின் இருபுறத்தும் உள்ள சுவர்ப்பகுதியில் நான்முகனும் விஷ்ணுவும் அஞ்சலியில் நிற்கின்றனர்.

சடைமகுடம், பூட்டுக்குண்டலங்கள், சரப்பளி, உதரபந்தம், முப்புரிநூல், புலிமுகக் கச்சுடனான பட்டாடை அணிந்துள்ள நான்முகனின் முன்கைகளில் வலக்கை காக்கும் குறிப்பிலும் இடக்கை கடியவலம்பிதத்திலும் அமைய, பின்கைகளில் அக்க மாலையும் குண்டிகையும் உள்ளன. நான்முகன் நிற்கும் தளத்தின் முகப்பில் அர்த்தபத்மாசனத்தில் இருகைகளையும் குவித்து வணங்கியவாறு காட்சிதரும் ஆடவர் நான்முகன் திருமேனி அமையக் கொடையளித்தவராகலாம். விமானத்தின் மேற்றளமும் கிரீவம், சிகரம் இவையும் செங்கல் கட்டுமானமாக உள்ளன.

**முகமண்டபம்**

விமானக் கட்டமைப்பை ஒத்துள்ள முகமண்டபத்தின் சாலைப் புறந்தள்ளல்களில் உள்ள கோட்டங்களில் தெற்கில் பிள்ளையாரும் வடக்கில் கொற்றவையும் இடம்பெற்றுள்ளனர். கரண்டமகுடம், சிற்றாடை அணிந்து நிற்கும் பிள்ளையாரின் பின்கைகளில் அங்குசம், பாசம் அமைய, முன்கைகளில் வலக் கையில் உடைந்த தந்தமும் இடக்கையில் மோதகமும் உள்ளன.

இடம்புரித் துளைக்கை இடக்கை மோதகத்தைச் சுவைக்கிறது. பொதுவாகக் கோட்டப் பிள்ளையார்கள் இலலிதாசனத்திலோ ஊர்த்வஜாநுவிலோ காட்டப்படுவதே வழக்கம். இங்கு மாறு பட்ட அமைப்பாக நின்றகோலப் பிள்ளையார் இடம்பெற்றுள்ளார். சடைமகுடம், இடைக்கட்டுடனான பட்டாடை அணிந்து நிற்கும் கொற்றவையின் பின்கைகளில் சங்கு, சக்கரம். முன்கைகள் காக்கும், அருட்குறிப்புகளில் உள்ளன.

முகமண்டபத்தின் வடசுவரில் உள்ள இசைக்கலைஞர் தொகுதி சோழர் காலப் புதையலாகும். மூன்று கலைஞர்கள் இடம்பெற்றுள்ள இத்தொகுதியின் வலக்கோடியில் உள்ளவர் வலக்கையை உயர்த்தி, இடக்கையால் முழவை ஒலிக்கிறார். இடக்கோடியில் இருப்பவர் தோலிசைக் கருவியான இடக்கை கொண்டுள்ளார். கருவியின் கயிற்றுப் பின்னலில் அவரது இடக்கை நுழைந்திருக்க, வலக்கை, குணில் கொண்டு ஒலிக்கிறது. இருவருமே தமிழம் கொண்டையும் பனையோலைக் குண்டலங்களுமாகக் காட்சிதருகின்றனர். இருவருக்கும் இடை யில் இருப்பவர் சடைமகுடமும் பனையோலைக் குண்டலங்களும் பெற்ற தேவருலகக் குடமுழவுக் கலைஞர். அவரது முன் கைகள் முழவொலிக்க, பின்கைகளில் இடக்கை போற்ற, வலக்கை வியப்பில் உள்ளது.

**பெருமண்டபம்**

முகமண்டபத்தின் முன் அதே கட்டமைப்பில் உள்ள பெருமண்டபம் மேற்கிலும், வட, தென்மேற்கிலும் செங்கல் கட்டுமானமாய் விரிவடைந்துள்ளது. மேற்குச் சுவரில் சாளரம். தெற்கில் வாயில் பெற்றுள்ள அதன் தென்கிழக்குச் சுவரில் உள்ள கோட்டமும் சாளரமாக்கப்பட்டுள்ளது. வடக்கில் பெருமண்டபத்தின் வெளிநீட்டலாக விமலநாயகி அம்மனின் ஒரு தள வேசர விமானம் அமைந்துள்ளது. உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், உறுப்பு வேறுபாடற்ற நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், கூரையுறுப்புகள் பெற்றுக் கருங்கல் கட்டுமான மாக உள்ள விமானத்தின் கிழக்குக் கோட்டமும் வடக்குக் கோட்டங்களும் வெறுமையாக உள்ளன. மேற்குக் கோட்டத் தில் அம்மையப்பர் இடம்பெற்றுள்ளார். வல முன் கையைப்

பின்னுள்ள நந்தியின் தலை மேல் இருத்திப் பின்கையில் மழு ஏந்தியுள்ள அம்மையப்பரின் சிவன்பாதி சிற்றாடையும் உமைப்பாதி பட்டாடையும் கொண்டுள்ளன. சடைமகுடம், மகர, பனையோலைக் குண்டலங்கள், முப்புரிநூல், உதரபந்தம் கொண்டுள்ள இத்திருமேனியின் உமைப்பகுதி கையில் மலர். இடுப்பின் இடப்புறம் முந்தானை காட்டப்பட்டுள்ளது.

புறந்தள்ளிய வாயில் பெற்றுள்ள பெருமண்டபக் கூரையை முச்சதுர, இருகட்டுத் தூண்கள் பூமொட்டுப் போதிகைகளுடன் தாங்குகின்றன. கூரையில் பிற்கால ஓவியங்கள். தூண்களின் சதுரங்கள் சிலவற்றில் கொடிக்கருக்குகள்; சிலவற்றில் சிற்பங்கள். சிற்பங்களுள் ஒன்று ஊர்த்வஜாநு பிள்ளையாரைப் படம் பிடிக்கிறது. முன்கைகளில் தந்தமும் அர்த்தரேசித வீச்சும் அமைய, பின்கைகளில் அங்குசம், மோதகம் பெற்றுள்ள பிள்ளையாரின் இடம்புரித் துளைக்கை இடக்கை மோதகத்தைச் சுவைக்கிறது. மண்டபத்தின் நடுவில் பலித்தளமும் நந்தியும் அமைய, தென்மேற்கு அறை வெறுமையாக உள்ளது.

வடசுவரில் வாயில் பெற்றுள்ள விமலநாயகி அம்மனின் கருவறை தென்பார்வையாக உள்ளது. சடைமகுடம், பட்டாடை இவற்றுடன் நிற்கும் தேவியின் முன்கைகள் காக்கும், அருட்குறிப்புகளில் அமைய, பின்கைகளில் முத்தலைஈட்டியும் மலரும் உள்ளன. அம்மனின் வலப்புறம் உள்ள அறையில் முருகன் தேவியருடன் எழுந்தருளியுள்ளார்.

மண்டபத்தின் வடகிழக்கு மூலையில் சூரியனும் பைரவரும் காட்சிதருகின்றனர். கரண்டமகுடம், மகரகுண்டலங்கள், சரப்பளி, முப்புரிநூல், உதரபந்தம், சிற்றாடை இவற்றுடன் காட்சிதரும் சூரியனின் கைகளில் தாமரை மொட்டுக்கள். மண்டையோட்டு முகப்புடன் சுடர்முடி, இடுப்புக் கயிறாய்ப் பாம்பு, சரப்பளி, பனையோலைக் குண்டலங்கள், முப்புரிநூல், உதரபந்தம் கொண்டு நாயுடன் நிற்கும் பைரவரின் பின்கை களில் உடுக்கையும் பாசமும் உள்ளன. முன்கைகளில் வலப்புறம் முத்தலைஈட்டியும் இடப்புறம் தலையோடும் கொண்டுள்ளார்.

மண்டபத்தின் வடமேற்குப் பகுதியில் அமர்நீதிநாயனாரும் அவரது துணைவியாரும் உள்ளனர். தாடி, மீசை, நீள்செவிகள்,

சிற்றாடை இவற்றுடன் காட்சிதரும் அமர்நீதிநாயனாரின் கைகள் வணக்க முத்திரையில் உள்ளன. அருகிலுள்ள துணைவியின் வலக்கை நெகிழ்கையாக அமைய, இடக்கை இடுப்பில் உள்ள குழந்தையை அணைத்துள்ளது.

**முகமண்டபம், கருவறை**

பெருமண்டபத்தின் கிழக்கிலுள்ள முகமண்டப வாயிலின் வலப்புறத்தே கரண்டமகுடம், சரப்பளி, முப்புரிநூல், உதரபந்தம் இவற்றுடன் இலலிதாசனத்தில் உள்ள பிள்ளையார் பின்கைகளில் அங்குசம், பாசம் ஏந்தி, முன்கைகளில் தந்தம், மோதகம் கொண்டுள்ளார். இடம்புரித் துளைக்கை இடக்கை மோதகத்தைச் சுவைக்கிறது. முகமண்டபக் கூரையில் சிதைந்த நிலையிலான கல்வெட்டு காணப்படுகிறது 5

வாயில் நிலைக்கு மேல் யானைத்திருமகள் சிற்பம் அமைந்துள்ள கருவறையில் வேசர ஆவுடையாரும் உருளைப்பாணமுமாய் இறைவன் தருமபுரீசுவரர், வள்ளலார் எனும் திருப்பெயர்களுடன் இலிங்கத் திருமேனியராய் எழுந்தருளியுள்ளார். ஆவுடையாரின் பாதபந்த அமைப்பில் உள்ள குமுதம் சிலம்புவரி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். யானைத்திருமகள் சிற்பத்தில் அம்மையுடன் காட்சியளிக்கும் யானைகள் தவிர, வடக்கிலும் தெற்கிலும் பக்கத்திற்கொன்றாய் இரண்டு யானைகள் நீர் கொணரச் செல்லுமாறு குடங்களுடன் காட்டப்பட்டுள்ளமை மாறுபட்ட அமைப்பாகும்.

**குறிப்புகள்**

1. அப்பர் 5:58.
2. ஆய்வு நாட்கள் 1. 4. 1983, 25. 11. 2000, 21. 3. 2010.
3. அப்பரின் போராட்டம் அறிய: இரா. கலைக்கோவன், அப்பர் பாடிய ஆறைவடதளி, கலை வளர்த்த திருக்கோயில்கள், பக்.9-26.
4. பழையாறை அமர்நீதி நாயனாரின் பிறப்பிடம். நல்லூர் அவர் வணிகம் வளர்த்த இடம்.
5. இக்கல்வெட்டுப் பற்றிய தகவல் நடுவண் அரசின் கல்வெட்டுத் துறைக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---------------------------------------------------------------------

# 6. சேய்ஞலூர்

கும்பகோணம் சென்னைச் சாலையில் ஏறத்தாழ 17 கி. மீ. தொலைவில் உள்ள சேய்ஞலூர் சண்டேசுவரரின் பிறப்புத் தலமாகக் குறிக்கப்பட்டுள்ளது.1 சம்பந்தரின் பாடல் பெற்ற 2 இவ்வூரிலுள்ள மாடக்கோயில் இறைவன் சக்திகிரீசுவரர் என்று அழைக்கப்படுகிறார். துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம் இவற்றின் மீதெழும் இரட்டை நான்முகத் தூண்கள் தெற்கிலும் வடக்கிலும் அமைய, அவற்றின் மேல் கூரையுறுப்புகளும் கபோதமும் என அமைந்துள்ளது கோபுரமற்ற இக்கோயிலின் நுழைவாயில் 3 செங்கல் கட்டுமானமான அதன் மேல் எழும் பெருஞ்சாலையில் சிவபெருமானும் உமையும் நந்தியின் மீது அமர்ந்துள்ளனர். வலச்சாலையில் மூஞ்சுறு மீது பிள்ளையாரும் இடச்சாலையில் மயில்மீது முருகனும் சுகாசனத்தில் உள்ளனர். முருகனின் இருபுறத்தும் தேவியர். ஓரங்களில் கர்ண கூடங்கள் இடம்பெற்றுள்ளன. வாயிலை அடுத்து நீளும் பாதை கோயில் வளாகத்தில் முடிகிறது.

வளாகத்தின் நடுப்பகுதியில் ஒரு மண்டபமும் அதை அடுத்து வெற்றுத்தளமும் வெற்றுத்தளத்தின் மீது இறைவன் விமானம், முகமண்டபம், சுற்றுவெளி, அம்மன் விமானம், ஆடவல்லான் விமானம் இவையும் அமைந்துள்ளன. வளாகத்தின் வடகிழக்கு மூலையில் செங்கல் கட்டுமானமாக உள்ள ஒருதள நாகர விமானத்தில் இலிங்கத்திருமேனி இடம்பெற்றுள்ளது.

**முன்மண்டபம்**

செங்கல் கட்டுமானமாக உள்ள இம்மண்டபத்தின் வாயிலுக்கு மேலே கயிலாய மலையும் அதில் அமர்ந்துள்ளவர்களாய் சிவபெருமான், உமை, பிள்ளையார் இவர்களும் நிற்பவராய் முருகனும் சுதைவடிவங்களாகக் காட்டப்பட்டுள்ளனர். மண்டபத்துள், வடபுறத்தே ஒருதள வேசர விமானத்தில் சுப்பிரமணியர் இடம்பெற்றுள்ளார். மண்டபத்தின் கிழக்கு வாயிலில் உயரமான இரண்டடுக்கு மேடையில் நந்தி அமர்ந்துள்ளது. மண்டபத்தின் மேற்கில் வெற்றுத்தளமும் அதன் மேல் சுற்று வெளியின் கிழக்கு விரிவும் காட்சிதருகின்றன.

**வெற்றுத்தளம்**

2. 83 மீ. உயரமுள்ள வெற்றுத்தளம் உபானமும் கருங்கல் சுவருமாய் நாற்புறத்தும் விரிந்துள்ளது. மேற்கில் வெற்றுத் தளத்தை ஒட்டி அமைந்துள்ள மண்டபத் தளியில் பிள்ளையார் இடம்பெற்றுள்ளார். முன்மண்டபத்திலிருந்து மேலேறும் பதினொரு படிகள் சுற்றுவெளியின் கிழக்கு விரிவில் முடிகின்றன. அவ்விரிவின் வாயில் இருபுறத்தும் பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர்த் துண்டுகள் கூரையுறுப்புகள் பெற்றுச் சற்றுப் பிதுக்கமாக அமைந்துள்ளது.

**மேற்சுற்று**

வாயில் வழி வளரும் மேற்சுற்றின் வெளிச்சுவரை நாற்புறத்தும் நான்முக அரைத்தூண்கள் தழுவியுள்ளன. மேலே வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள். செங்கல் கட்டுமானமாக உள்ள இச்சுற்றின் கிழக்கு விரிவுக் கூரையை இருசதுர, நீள்கட்டு உடல் பெற்ற தூண்கள் வெட்டுத் தரங்கப் போதிகைகளின் உதவியுடன் கூரையுறுப்புகள் கொண்டு தாங்குகின்றன. தூண்களின் கீழ்ச்சதுரங்களில் அடியவர் சிற்பங்களும் மான், குரங்கு போன்ற விலங்குகளின் சிற்பங்களும் பிள்ளையார், முருகன், சண்டேசுவரர் சிற்பங்களும் இடம்பெற்றுள்ளன.

இலலிதாசனத்தில் உள்ள தூண் பிள்ளையாரின் பின்கைகளில் மழுவும் பாசமும் உள்ளன. முன்கைகளில் தந்தமும் மோதகமும் கொண்டுள்ள அவரது தலையைக் கரண்டமகுடம் அணிசெய்கிறது. இடம்புரியாக உள்ள துளைக்கை இடக்கை மோதகத்தைச் சுவைக்க, மார்பில் முப்புரிநூல். இவ்விரிவின் வடபுறத்தே தெற்குப் பார்வையாய் சகிதேவியின் ஒருதள வேசர விமானமும் முகமண்டபமும் அமைந்துள்ளன. விரிவின் வட கிழக்கில் இரண்டு பைரவர்கள், சூரியன், சந்திரன் சிற்பங்கள் உள்ளன.

சூரியனும் சந்திரனும் ஒன்று போலக் கரண்டமகுடம், மகர குண்டலங்கள், சரப்பளி, முப்புரிநூல், உதரபந்தம், பட்டாடை அணிந்து இருகைகளிலும் தாமரைகள் ஏந்தியுள்ளனர். ஒரு சிற்பத்தின் வலக்கை மலர் சிதைந்துள்ளது. ஒரு பைரவரின்

பின்னுள்ள நாய் வலப்புறம் தலையிருக்குமாறு நிற்க, மற்றொரு பைரவரின் நாய் தலையை இடப்புறம் திருப்பியுள்ளது. இரண்டு பைரவர்களுமே பின்கைகளில் உடுக்கை, பாசம் கொண்டு, முன்கைகளில் முத்தலைஈட்டி, தலையோடு கொண்டுள்ளனர். இருவருமே சுடர்முடியும் கோரைப்பற்களும் பெற்றுள்ளனர். தாமரைத் தளத்தின்மீது நிற்கும் பைரவர், தலையின் இடப்புறம் பிறை சூடியுள்ளார். அவரது வலச்செவியில் மகரகுண்டலம்; இடச்செவியில் பனையோலைக் குண்டலம். மற்றொரு பைரவரின் செவிகளில் பனையோலைக் குண்டலங்களே உள்ளன.

**அம்மன் விமானம்**

செங்கல் கட்டுமானமாய் விளங்கும் இவ்வேசர விமானம் கபோதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத் தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெறக் கருவறையில் சகிதேவி சடைமகுடம், பட்டாடை இவற்றுடன் பின்கைகளில் அக்கமாலை, தாமரை ஏந்தி, முன்கைகளைக் காக்கும், அருட்குறிப்புகளில் கொண்டுள்ளார். அம்மன் திருமுன்னுக்கு முன்னுள்ள தூண்களில் புலிக்கால் முனிவரும் பதஞ்சலியும் சிற்பங்களாகியுள்ளனர்.

விரிவின் மேற்கில் பெருமண்டபம், முகமண்டபம், இறைவன் விமானம் இவை அமைந்துள்ளன. பெருமண்டபத்திற்கு வடக்கிலும் தெற்கிலும் உள்ள வாயில்கள் மேற்சுற்றுக்கு வழி தருகின்றன.

**பெருமண்டபம்**

உபானம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றுள்ள பெருமண்டப வாயிலின் இருபுறச் சுவர்களில் ஓவியங்களாகக் காவலர்களும் நால்வர் பெருமக்களும் காட்டப்பட்டுள்ளனர். மண்டபக் கூரையை இருசதுர, நீள்கட்டு உடல்பெற்ற தூண்கள் தாங்குகின்றன. கூரையில் பிற்கால ஓவியம் உள்ளது. மண்டபத்தின் தெற்குச் சுவரை ஒட்டி நால்வர் சிற்பங்களும் வடபுறம் ஆடவல்லானுக்கான ஒருதள நாகர விமானமும் இடம் பெற்றுள்ளன. விமானத்தின் வாயில் சாலைப் புறந்தள்ளலாகக்

கபோதத்துடன் அலங்கரிக்கப்பட்டுள்ளது. உள்ளே மேடையில் ஆடவல்லானும் உமையும் ஆடவல்லான் இடம்பெற்றுள்ளனர்.

**ஆடவல்லான்**

வலக்காலை முயலகன் மீது இருத்தி, இடக்காலை வலப்புறம் வீசி ஆனந்தத் தாண்டவக் கோலத்தில் காட்சிதரும் ஆடவல்லானின் பின்கைகளில் உடுக்கையும் தீச்சுடரும் உள்ளன. முன்கைகளில் வலக்கை காக்கும் குறிப்புக் காட்ட, இடக்கை வேழக்கையாய் நீண்டுள்ளது. கொக்கிறகு, ஊமத்தம்பூ, நெருஞ்சிப்பூ விளங்கும் தலையில் வலப்புறம் பிறை. சடை ஒன்றில் ஒன்றியவராய் கங்கை. வலச்செவி வெறுஞ்செவியாக, இடச்செவியில் பனையோலைக் குண்டலம். சவடி, தோள், கை வளைகள், சிற்றாடை, முறுக்கி முடிச்சிடப்பெற்ற உதரபந்தம், முப்புரிநூலாய் அணியப்பெற்ற மடித்த துண்டு இவற்றுடன் காட்சிதரும் இறைவனின் இடப்புறம் நிற்கும் இறைவியின் வலக்கை கடகத்தில் அமைய, இடக்கை நெகிழ்ந்துள்ளது. சடை மகுடம், மகரகுண்டலங்கள், சரப்பளி, ஸ்வர்ணவைகாக்ஷம், ஸ்கந்தமாலை, குறங்குசெறி, தோள்வளைகள், அடுக்கிய கைவளைகள் கொண்டு சிரித்த முகத்துடன் காட்சிதரும் இறைவியின் இடையில் பட்டாடை.

**இடைநாழிகை, கருவறை**

பெருமண்டபத்தை அடுத்து, வடக்கிலும் தெற்கிலும் வாயில் பெற்றுள்ள இடைநாழிகையில் நந்தியும் பலித்தளமும் இடம் பெற்றுள்ளன. கூரையில் பிற்கால ஓவியம். எளிமையான வாயில் பெற்றுள்ள முகமண்டபம் வெறுமையாக உள்ளது. கருவறையில் சக்திகிரீசுவரர் வேசர ஆவுடையாரும் உருளைப் பாணமும் கொண்டு இலிங்கத்திருமேனியராய் எழுந்தருளியுள்ளார்.

**சுற்றுவெளி**

சுற்றுவெளியின் தெற்கிலும் வடக்கிலும் அமைந்துள்ள உயரக் குறைவான மேடை வெறுமையாக உள்ளது. மேற்கில் இம்மேடையின் மீதுள்ள மாளிகையின் கூரையை இருசதுர, நீள்கட்டு உடல்பெற்ற தூண்கள் தாங்குகின்றன. மாளிகையின் அறைகள் உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், நான்முக அரைத்

தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றுள்ளன. முதல் அறையில் மூஞ்சூறுவின் மேல் நிற்கும் பிள்ளையாரும் மூன்றாம் அறையில் காசிவிசுவநாதர், விசாலாட்சி இவர்களும் அடுத்துள்ள ஒருதளத் திராவிட விமானத்தில் ஆறுமுகனும் வடபுற ஒருதளத் திராவிட விமானத்தில் யானைத்திருமகளும் இடம்பெற்றுள்ளனர்.

பூப்பதக்க நெற்றிப்பட்டம் சூழ்க் கரண்டமகுடம், சரப்பளி, அலங்கார உதரபந்தம், குறங்குசெறி, இடைக்கட்டுடனான பட்டாடை அணிந்து மூஞ்சூறுவின் மேல் நிற்கும் பிள்ளையார் பின்கைகளில் அங்குசம், பாசம் ஏந்தி, முன்கைகளில் தந்தம், மோதகம் கொண்டுள்ளார். அவரது இடம்புரித் துளைக்கை மோதகத்தைச் சுவைக்கிறது.

ஆறுமுகன் மயில் மேல் சுகாசனத்தில் உள்ளார். சடைமகுடம், பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, முப்புரிநூல், உதரபந்தம், பட்டாடை இவற்றுடன் காட்சிதரும் ஆறுமுகனின் முன்கைகளில் வலக்கை காக்கும் குறிப்பில் அமைய, இடக்கை மயில் மேல் கடகத்தில் உள்ளது. பிற கைக்கருவிகளுள் வில், அம்பு, வஜ்ரம், சக்தி, குறுந்தடி இவை அடக்கம். சடைமகுடம், சரப்பளி, மகரகுண்டலங்கள், ஸ்கந்தமாலை, முப்புரிநூல், இடைக் கட்டுடனான பட்டாடை அணிந்து நிற்கும் விசாலாட்சியின் பின்கைகளில் அக்கமாலையும் மலர்மொட்டும் அமைய, முன் கைகள் காக்கும், அருட்குறிப்புகளில் உள்ளன.

**சண்டேசுவரர்**

சுற்றுவெளியின் வடக்கில் ஒருதள வேசர விமானத்தில் சுகாசனத்தில் உள்ள சண்டேசுவரர் சோழர் காலச் சிற்பமாகும். வலக்கையில் மழுவேந்தி, இடக்கையைக் கால் மேல் இருத்தியுள்ள அவரது சடைப்பாரத்தின் கீழ்ப்பகுதிகள் சிரஸ்திரகமாய் அமைய, முகப்பில் மண்டையோடும் வலப்புறம் பிறையும் காட்டப்பட்டுள்ளன. இடைக்கட்டுடனான சிற்றாடை, சரப்பளி, உதரபந்தம், முப்புரிநூல், தோள், கை வளைகள் அணிந்துள்ள சண்டேசுவரரின் வலச்செவியில் மகரகுண்டலம்; இடச்செவியில் பனையோலைக் குண்டலம்.

வடக்குச் சுற்றுவெளியின் வடகிழக்குப் பகுதியில் உள்ள கிணற்றிலிருந்து கல்வெட்டொன்று கண்டறியப்பட்டது .4 கி. பி. 1886 விய ஆண்டு வைகாசித்திங்கள் பதின்மூன்றாம் நாள் தொடங்கப்பட்ட அக்கிணற்றின் பணி ஆனித்திங்கள் இருபதாம் நாள் முற்றுப்பெற்றதாகக் கல்வெட்டுக் கூறுகிறது.

**இறைவன் விமானம்**

4. 86 மீ. பக்கமுடைய சதுர ஒருதளத் திரவிடமாக அமைந்துள்ள இறைவன் விமானம் பத்மஉபானம், பிரதிபந்தத் தாங்கு தளம், வேதிகைத்தொகுதி, பாதம் கொண்டெழும் எண்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் உத்திரம், வாஜனம், பூதவரி வலபி, ஆழமற்ற கூடுகளுடனான கபோதம், பூமிதேசம் பெற்றுக் கருங்கல் பணியாகக் காட்சிதருகிறது. புறந்தள்ளியுள்ள சாலைப்பத்திகளின் மகரதோரணத் தலைப்பிட்ட கோட்டங்களை உருளை அரைத் தூண்கள் அணைத்துள்ளன. தெற்கு மகரதோரணத்தில் அழகிய சோழர் காலச் சிற்பமாய் சிவபெருமான் இடம்பெற்றுள்ளார். இன்னதென அடையாளப்படுத்த முடியாத அமர்வில் உள்ள இறைவனின் வல முன் கை சின்முத்திரையில் அமைய, இட முன் கை முழங்கால் மீதுள்ளது. சடைப்பாரம் மகர, பனை யோலைக் குண்டலங்கள், சரப்பளி, உதரபந்தம் பெற்றுள்ள இறைவனின் வலப் பின் கையில் அக்கமாலை. இடப் பின் கைப் பொருளை அடையாளம் காணக்கூடவில்லை.

பிற்கால மண்டப இணைப்புப் பெற்றுள்ள தெற்குக் கோட்டத்தில் வீராசனத்தில் உள்ள இறைவனின் பின்கைகளில் அக்கமாலையும் முத்தலைஊட்டியென விரிந்த தீச்சுடரும் உள்ளன. வல முன் கை சின்முத்திரை கொள்ள, இட முன் கை சுவடி தாங்கியுள்ளது. மண்டையோடு அணிந்த சடைப்பாரம் மகர, பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, முப்புரிநூல், உதர பந்தம், சிற்றாடை, தாள் செறிகள் அணிந்துள்ள இறைவனின் இருபுறத்தும் கோட்டம் நீங்கிய நிலையில் வேதிகையின் மேல் அமர்ந்தவர்களாய்ப் பக்கத்திற்கிரு முனிவர்கள்.

மேற்குக் கோட்டம் வெறுமையாக உள்ளது. வடக்குக் கோட்டத்தில் சடைமகுடம், பூட்டுக்குண்டலங்கள், சரப்பளி,

தோள், கை வளைகள், முப்புரிநூல், உதரபந்தம், பட்டாடை, அணிந்து நிற்கும் நான்முகனின் பின்கைகளில் அக்கமாலையும் குண்டிகையும் இடம்பெற்றுள்ளன. முன்கைகளில் வலக்கை காக்கும் குறிப்புக் காட்ட, இடக்கை கடியவலம்பிதமாக உள்ளது.

கிரீவ கோட்டங்களில் தெற்கில் வீராசனத்தில் ஆலமர் அண்ணலும் மேற்கில் தேவியருடன் சுகாசனத்தில் பரமபத நாதரும் வடக்கில் தேவியருடன் அர்த்தபத்மாசனத்தில் நான்முகனும் சுதைவடிவங்களாக இடம்பெற்றுள்ளனர்.

**முகமண்டபம்**

விமானக் கட்டமைப்பில் உள்ள முகமண்டபத்தில் சாலைப் பிதுக்கம் இல்லை. கோட்டங்களில் தென்புறம் ஆலமர்அண்ணல் சிற்பம் காணப்படுகிறது. வடகோட்டம் வெறுமையாக உள்ளது. தெற்குக் கோட்ட மகரதோரணத்தில் உள்ள ஊர்த்வஜாநு கரணப் பிள்ளையார் சிற்பம் சோழர் காலத்தது. கோட்டத்தில் வீராசனத்தில் உள்ள ஆலமர்அண்ணல் விமானத் தென்கோட்ட முன்னவராகலாம். பின்கைகளில் அக்கமாலையும் தீச்சுடரும் கொண்டுள்ள அவரது முன்கைகளில் வலக்கை சின்முத்திரை காட்ட, இடக்கை சுவடி கொண்டுள்ளது. சடைப்பாரம் மகர, பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, முப்புரிநூல், உதரபந்தம் பெற்றுள்ள இறைவன் அமர்ந்துள்ள தளத்தில் இருபுறத்தும் பக்கத்திற்கொருவராக முனிவர்கள்.

**குறிப்புகள்**

1. திருத்தொண்டர்புராணம், திருப்பனந்தாள் பதிப்பு, ப. 156.

2. சம்பந்தர் 1 : 48. 'கோச்செங்கணாற்கு அருள்செய்' என்று இறைவனை வேண்டும் சம்பந்தர், ஏழாம் செய்யுளில் சண்டேசுவரர் வரலாற்றை முன் வைக்கிறார்.

3. ஆய்வு நாள் 21. 3. 2010. இம்மாடக்கோயிலை வெளிச்சப் படுத்தியவர் திரு. பால. பத்மநாபன். உடனிருந்து உதவிய திரு. கா. இராமகிருஷ்ணன் நன்றிக்குரியவர்

4. இக்கல்வெட்டைக் கண்டறிந்தவர் முனைவர் மு. நளினி.

# 7. தலைஞாயிறு

கும்பகோணத்தில் இருந்து பந்தணைநல்லூர் வழியாக வைத்தீசுவரன் கோயில் செல்லும் சாலையில் அமைந்துள்ளது தற்போது தலைஞாயிறு என்று அழைக்கப்படும் கருப்பறியலூர். இவ்வூரில்தான் பாடல் பெற்ற 1 கொகுடிக்கோயிலான குற்றம் பொறுத்தீசுவரர் கோயில் முத்தளக் கோபுரத்துடன் எளிய சூழலில் உள்ளது. அதே வளாகத்தின் தென்மேற்குப் பகுதியில் கொகுடிக்கோயில் விமானத்தின் அருகில் மலைக்கோயில் என்று அழைக்கப்படும் பார்வதிபாகர் மாடக்கோயில் இருதள வேசரமாக அமைந்துள்ளது. 2. 1953ல் தருமபுரம் திருமடத்தால் திருப்பணி செய்யப்பட்டுள்ள இக்கோயிலின் வெற்றுத்தளம் கருங்கல் பணியாய்ப் பழைய கட்டமைப்பிலேயே இருந்த போதும் செங்கல் திருப்பணியாய் உள்ள இறைவன் விமானம் முற்றிலும் மாறியுள்ளது.

### வெற்றுத்தளம்

2.98 மீ. உயரமுள்ள வெற்றுத்தளம் தாமரைக்கட்டுத் தாங்குதளம், நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்று, சிற்றுருவச் சிற்பங்களுடனான கூடுவளைவுகள் கொண்ட கபோதத்துடன் திகழ்கிறது. அச்சிற்பங்களுள் தென்புறமுள்ள சிவபெருமானின் ஆனந்தத் தாண்டவம் குறிப்பிடத்தக்கது. விரிசடையுடன் பின் கைகளில் உடுக்கையும் தீயகலும் கொண்டு இடக்காலையும் இட முன் கையையும் வீசி ஆடும் இறைவனின் வலக்கை காக்கும் குறிப்பில் உள்ளது. சோழர் கபோதக்கூடுகளில் இது போன்ற கண்கவர் சிற்பங்கள் இயல்புதான் என்றாலும் ஆடவல்லானின் இருப்பு சற்று அருமையான காட்சியே.

தெற்கு, கிழக்கு, மேற்கு ஆகிய முத்திசைகளிலும் வெற்றுத் தளம் புறந்தள்ளிய இரண்டு சாலைப்பத்திகளைப் பெற்றுள்ளது. கோட்டங்களற்ற இப்பத்திகள் பல்லவர் காலச் சாலைப்பத்திகளை நினைவூட்டுகின்றன. வெற்றுத்தளத்தின் மேலமைந்துள்ள விமானத்தை அடைவதற்கான படிக்கட்டுகள் பதினைந்தும் பிடிச்சுவருடன் வடபுறத்தே அமைந்துள்ளன. கீழ்ப்படி சந்திரக் கல்லாக அமைய, பிடிச்சுவர் மேலிருந்து கீழாக உள்ள எட்டாம்

படியருகே துளைக்கைச் சுருளாய்த் தாங்கலின் மேல் அமர்ந்துள்ளது. அத்தாங்கலின் கீழிருந்து தொடரும் மற்றொரு துளைக்கைப் பிடிச்சுவர் கீழ்ப்படிகளுக்கு அணைவாகிச் சந்திரக் கல்லின் இருபுறத்தும் உள்ள தாங்கல்களில் நிறைவடைகிறது. படிக்கட்டுகளின் முடிவிலுள்ள மேற்குப் பார்த்த வாயிலின் முன்னுள்ள முன்றில் கூரையை இரண்டு முச்சதுர, இருகட்டுத் தூண்கள் வெட்டுப் போதிகைகளுடன் தாங்குகின்றன. கூரையின் மேலுள்ள இரண்டு வளைவுகளில் வடக்குப் பார்த்த வளைவில் பிள்ளையாரும் மேற்குப் பார்த்த வளைவில் இறைவனும் இறைவியும் சுதையுருவங்களாக உள்ளனர்.

**விமானம்**

வெற்றுத்தளத்தின் மீதமர்ந்துள்ள விமானம் ஒரே அளவாய் அமைந்த இரண்டு தளங்கள் பெற்றுள்ளது. இரண்டுமே செங்கல் கட்டுமானங்கள். 2.87 மீ. பக்கமுடைய சதுரமாக அமைந் துள்ள கீழ்த்தளம் வேதிகை, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், கூரையுறுப்புகள் பெற்று, வடக்குத் தவிர்த்த முத்திகளிலும் வெற்றுத்தளம் போலவே திசைக்கு இரண்டு புறந்தள்ளிய சாலைப்பத்திகள் பெற்றுள்ளது. கிழக்கில் இச்சாலைப் பத்திகளுக்கு இடைப்பட்ட சுவர்ப்பகுதி வலைச்சட்டம் பெற்ற திறப்பாக உள்ளது. இத்திறப்பின் பக்கநிலைகள் போல் காட்டப்பட்டுள்ள நான்முக அரைத்தூண்கள் மேலே உத்திரம், வாஜனம், கூரை, கபோதம் பெற்றுள்ளன. சாலைப் புறந்தள்ளல்கள் மூன்று திசைகளிலும் ஆரஉறுப்புகளாகப் பஞ்சரங்களைப் பெற்றுள் ளன. இப்பஞ்சரங்கள் இரண்டாம் தளச் சாலைப்பத்திகளை நிறைத்துள்ளன.

முதல் தளம் போலவே அமைந்துள்ள இரண்டாம் தளத்திலும் வடக்குத் தவிர்த்த முத்திசைகளிலும் பக்கத்திற்கு இரு சாலைப் புறந்தள்ளல்கள் உள்ளன. இப்புறந்தள்ளல்கள் முதல் தள ஆரப்பஞ்சரங்களைக் கொண்டுள்ளன. இரண்டாம் தளத்தின் மேல் அமைந்துள்ள வேசர சிகரத்தின் கிழக்கு கிரீவ கோட்டம் நன்கு முன்னோக்கி நீட்டிப் பெரிதுபடுத்தப்பட்டுள்ளது. அதன் கீர்த்திமுகத்தில் சிவபெருமான் காட்சிதருகிறார். தெற்கு கிரீவகோட்டத்திற்கு முன் வடிவமைக்கப்பட்டுள்ள கர்ணகூடம் போன்ற கட்டமைப்பின் தென்முகத்தில் வாயில்

போல் அமைத்து இருபுறத்தும் சுதைக் காவலர்கள் காட்டப் பட்டுள்ளனர். வாயிலின் முன் நின்ற நிலையில் சுதைச் சிங்கம் உள்ளது.

தெற்கிலும் மேற்கிலும் வடக்கிலும் காணப்படும் உள்ளடங்கிய கிரீவகோட்டக் கீர்த்திமுகங்களில் ஆலமர்அண்ணலும் விஷ்ணுவும் நான்முகனும் உள்ளனர். இரண்டாம் தளக்கூரை யின் நான்கு மூலைகளிலும் பக்கத்திற்கிரு நந்திகள் உள்ளன. அனைத்து கிரீவகோட்டங்களும் வெறுமையாக உள்ளன. விமானக் கீழ்த்தளத்தின் வடகிழக்குப் புறந்தள்ளல் முன்றிலுக்குப் பின்னமைந்த கருவறைக்கான நுழைவாயிலாக அமைந்துள்ளது. அதன் கூரை மேல் உயரக் குறைவான இரண்டாம் தளம் அமைய, மேலே நான்முகனைக் கொண்ட கீர்த்திமுகம்.

விமானத்தின் கீழ்த்தளத்தில் உள்சுற்றுடனான கருவறை உள்ளது. சிவபெருமானும் உமையும் சுகாசனத்தில் சுதையுருவங்களாய் உள்ளனர். சடைமகுடம், சிற்றாடை, கழுத்தணிகள், மகர குண்டலங்கள் செவிப்பூக்கள், தோள், கை வளைகள் அணிந் துள்ள தோணியப்பரின் பின்கைகளில் மானும் மழுவும். வல முன் கை காக்கும் குறிப்பில் இருக்க, இட முன் கை கடகத்தில் உள்ளது. இறைவன், இறைவியின் கீழிறக்கிய பாதம் இருத்தத் தாமரைத் தளங்கள் காட்டப்பட்டுள்ளன. இறைவனின் இடப் புறமுள்ள இறைவி கரண்டமகுடம், பட்டாடை அணிந்து, வலக் கையை கடகத்திலும் இடக்கையை இருக்கையின்மீதும் இருத்திக் காட்சிதருகிறார்.

கருவறையின் சுவர் உறுப்பு வேறுபாடுகளற்ற செங்கல் கட்டுமானமாய் உள்ளது. சுற்றுவழியின் கூரைச்சுவர் நெருக்குதல் அற்ற நிலையில் சிமெந்துப் பலகைகளால் மூடப்பட்டுள்ளது. கருவறையின் தெற்கிலுள்ள மரப்படிகள் இரண்டாம் தளத்திலுள்ள சட்டைநாதர் திருமுன்னுக்கு அழைத்துச் செல்கின்றன. மரப்படிகளின் முடிவில் தென்பார்வையாகச் சட்டைநாதர் திருமேனி அமைந்துள்ளது.

### குற்றம் பொறுத்தீசுவரர்

மாடக்கோயிலின் வடபுறம் விளங்கும் கொகுடிக்கோயிலின் விமானம் ஒருதள வேசரமாகக் கபோதபந்தத் தாங்குதளம்,

வேதிகை, எண்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகளுடன் சாலைப்பத்திகளைச் சற்றே புறந்தள்ளியுள்ளது. இந்திரகாந்தத் தூண்களால் அணைக்கப்பட்டுள்ள இப்பத்திகள் முத்திசைகளிலும் கோட்டப் பஞ்சரங்கள் பெற்றுள்ளன. தெற்கு, மேற்குக் கோட்டங்களில் சோழர் கால ஆலமர்அண்ணலும் இலிங்கோத்பவரும் அமைய, வடக்கில் அண்மைக் கால நான்முகன் உள்ளார்.

வலப் பின் கையில் பாம்பும் அக்கமாலையும் ஏந்தி, இடப் பின் கையில் தீச்சுடர் அமைய, வீராசனத்தில் உள்ள ஆலமர் அண்ணலின் வல முன் கை சின் முத்திரையில் உள்ளது. விரி சடை, மகர, பனையோலைக் குண்டலங்கள், கழுத்தில் நீளமான அக்கமாலை, முப்புரிநூல், உதரபந்தம், சிற்றாடை அணிந்துள்ள பெருமானின் இட முன் கை சுவடியுடன் தொடையில் அமர்ந்துள்ளது. இறைவன் வீற்றிருக்கும் தளமுகப்பில் அடியவர்கள் காட்சிதர, இறைவனின் வலப்புறத்தே நந்தி அமர்ந்துள்ளது.

சடைமகுடம், மகர, பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, முப்புரிநூல், தோள், கை வளைகள், உதரபந்தம், புலிமுகக் கச்சுப் பெற்ற சிற்றாடை, இடைக்கட்டுக் கொண்டு நிற்கும் இலிங்கோத்பவரின் பின்கைகளில் மான், மழு அமைய, முன்கைகள் காக்கும் குறிப்பிலும் கடியவலம்பிதத்திலும் உள்ளன. விமானத்தின் கர்ணபத்திகளில் குடப்பஞ்சரங்கள். கபோதக் கூடுகளில் கண்ணப்பர் வரலாறு போன்ற சிற்றுருவச் சிற்பங்கள் உள்ளன. செங்கல் கட்டுமானமாக உள்ள கிரீவத்தின் கோட்டங்களில் தெற்கில் வீராசனத்தில் ஆலமர்அண்ணலும் மேற்கில் அர்த்தபத்மாசனத்தில் விஷ்ணுவும் வடக்கில் அதே அமர்வில் நான்முகனும் சுதையுருவங்களாக உள்ளனர். கோட்டக் கீர்த்தி முகங்களில் திசைக்கேற்ப இறைத்திருமுகங்கள் உள்ளன.

விமானம் ஒத்த கட்டமைப்புடன் விளங்கும் முகமண்டபக் கோட்டங்களில் தென்புறம் சோழர் காலப் பிள்ளையாரும் வடபுறம் அண்மைக் கால மகிடாசுரமர்த்தனியும் உள்ளனர். பின்கைகளில் அங்குசம், பாசம் ஏந்திக் கரண்டமகுடம் சரப்பளி, தோள், கை வளைகள், முப்புரிநூல், உதரபந்தம், சிற்றாடை, தாள்செறிகள் கொண்டு நிற்கும் சுந்தரப் பிள்ளையாரின் வல

முன் கை உடைந்த தந்தம் கொள்ள, இட முன் கை மோதகத்தைத் துளைக்கை சுவைக்கிறது. வலத்தந்தம் சிதைந்துள்ள இச்சிற்பம் பெயருக்கேற்றார் போல் பேரழகுடன் சுந்தரப் பிள்ளையாராகவே திகழ்வது குறிப்பிடத்தக்கது. முகமண்டபத்தின் முன் உள்ள பெருமண்டபத்தின் வடபுறம் கோல்வளை நாயகியின் ஒருதள வேசர விமானம் முகமண்டபத்துடன் உள்ளது. அதன் கிழக்கில் ஆடவல்லான் திருமுன்,

இக்கோயிலின் வடபுறத்தே சோழர் கால நான்முகனும் மகிடாசுரமர்த்தனியும் இடுப்பிற்குக் கீழ் சிதைந்த நிலையில் மண்ணில் புதைந்துள்ளனர். சடைமகுடம், பூட்டுக்குண்டலங்கள் சரப்பளி, தோள், கை வளைகள், முப்புரிநூல், உதரபந்தம் கொண்டு காட்சிதரும் நான்முகனின் பின்கைகளில் அக்கமாலை, குண்டிகை. முன்கைகள் சிதைந்துள்ளன. கரண்டமகுடம், மகர குண்டலங்கள், சரப்பளி, மார்புக்கச்சு அணிந்து பின்கைகளில் சங்கு, சக்கரம் ஏந்தி நிற்கும் மகிடாசுரமர்த்தனியின் முன்கைகள் காக்கும் குறிப்பிலும் கடியவலம்பிதத்திலும் உள்ளன. இவற்றின் அருகே பைரவர் சிற்பத்தின் தலை மட்டும் காணப்படுகிறது.

**கல்வெட்டுகள்**

இக்கோயில் வளாகத்திலிருந்து 19 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன.3 அவற்றுள் ஐந்து கல்வெட்டுகள் மூன்றாம் இராஜராஜருக்குரியவை. இரண்டு கல்வெட்டுகள் மூன்றாம் குலோத்துங்கரின் ஆட்சிக்காலத்தில் வெட்டப்பட்டவை. இரண்டாம் இராஜாதிராஜரின் இருபதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்றும் கிருஷ்ணதேவராயரின் கல்வெட்டொன்றும் இங்குள்ளன. நான்கு கல்வெட்டுகள் உருவச் சிற்பங்களின் பெயர்களைத் தருவனவாக அமைந்துள்ளன. 4 ஒரு கல்வெட்டு கோட்டப் பிள்ளையாரைச் சுந்தரப் பிள்ளையார் என்று அழைக்கிறது.5 இரண்டு கல்வெட்டுகள் விக்கிரமசோழ வேளார் திருமலை திருமஞ்சண மண்டபம், குற்றம்பொறுத்த ஈசுவரர் கோயிலின் பெருமண்டபம் ஆகியவற்றை எடுப்பித்த தகவலைப் பகிர்ந்துகொள்கின்றன.6 மூன்று கல்வெட்டுகள் மன்னர் பெயரின்றிக் கிடைத்துள்ளன.

### வளநாடு, நாடு, ஊர்

பெரும்பாலான கல்வெட்டுகளில் பார்வதிபாகர் கோயிலாகக் குறிக்கப்படும் இவ்வளாகம், இராஜாதிராஜ வளநாட்டுத் திருக்கழுமல நாட்டு அகரம் ஸ்ரீகுலோத்துங்கசோழன் தனி நாயகச் சதுர்வேதிமங்கலத்தில் இருந்தது. இக்கோயிலிலிருந்து படியெடுக்கப்பட்டிருக்கும் கல்வெட்டுகளில் ஒன்றிலேனும் தலைஞாயிறு, பறியலூர்' 7 எனும் ஊர்ப்பெயர்கள் கோயிலிருக்கும் இடத்தைச் சுட்டுவனவாக இடம்பெறாமை வியப்பளிக்கிறது. உய்யக்கொண்டார் வளநாடு, அமரநாடு எனும் வருவாய்ப் பிரிவுகளுடன் ஆறு ஊர்ப்பெயர்களை இக்கல்வெட்டுகளில் இருந்து பெறமுடிகிறது. 8

### அரசு அலுவலர்கள்

நான்கு கல்வெட்டுகள் அரச ஆணைகளாக விளங்கிய போதும் மூன்றாம் குலோத்துங்கரின் இரண்டு கல்வெட்டுகளில் மட்டுமே திருமந்திர ஓலைநாயகமாக நெறியுடைச்சோழ மூவேந்தவேளாரும் கையெழுத்திட்டவர்களாகக் குருகுலராயர், மழவராயர், விழிஞத்தரையர், வயிராதராயர், வேணாடுடையார், மலையப்பராயர், காடுவெட்டி, நரசிங்கபன்மர், அமரகோன் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர் 9 அவற்றுள் ஒன்று, பிரம்மேந்திரர், வாணாதிராஜர் இவர்தம் பரிந்துரையேற்று மகாசபைக்கான தேர்தல், அதன் உறுப்பினர்களின் தகுதி குறித்த சில புதிய வரையறைகளை முடிவு செய்து தனிநாயகச் சதுர்வேதிமங்கலத்திற்கு மன்னர் ஆணை அனுப்பிய தகவலைத் தருகிறது.10

### கோயிலுக்கான கொடைகள்.

சோழகுலாறன் மங்கலாதிராசர் தேவி, பார்வதிபாகருக்கு வழிபாட்டிற்காக 100 கழஞ்சுப் பொன் அளித்ததுடன் விமானத்திற்கான தூபியையும் செய்தளித்தார்!11 சொன்னவாறு அறிவான் பட்டன் கோயிலுக்குத் திருநாமத்துக்காணியாக 12,000 காசுகளுக்கு நிலம் விற்றார்.12 விலைத்தொகையில் 10,000 காசு தரப்பட்டது. எஞ்சிய 2,000 காசு பிறகு தரப்படும் எனத் தானத்தார் கூறி, அக்காசு வராமையின், சொன்னவாறு அறிவான் ஆராய்ச்சியார் ஓலை, முதலிகள் ஓலை இவற்றுடன் அம்பலத்திற்கு வந்து

வாதிட்டு 2,000 காசுகளைப் பெற்றதாகக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. இந்நிலத்திற்கான எல்லைகளைக் குறிக்கும்போது தில்லை நாயக வாய்க்காலும் பார்வதி வதியும் சுட்டப்பட்டுள்ளன. பிள்ளை வில்லவராயர் குற்றம்போத (குற்றம் பொறுத்த?) பெருமாளுக்குப் பள்ளியறை நாச்சியாகப் பண்ணமர் மென்மொழி யாளை எழுந்தருளுவித்ததுடன், அம்மைக்கான அமுது, பூசை இவற்றிற்காக ஆண்டுக்கு 20 கலம் நெல் உடலாக அளித்தார்.13

ஆண்டார் திருஞானசம்பந்தர் தாம் இக்கோயிலில் எழுந்தருளுவித்த திருஞானம் பெற்ற பிள்ளையாருக்கு (சம்பந்தர்) உச்சி அமுதுக்கு உடலாக 2,000 காசுகள் அளித்தார். இறைவனுக்குப் படையலான பிறகு அவ்வுணவு மாகேசுவரருக்கு ஒடுக்காக வழங்கப்பட்டது. திருவாதிரைத் திருநாளில் சம்பந்தர் எழுந்தருளும்போது மாலை, அமுது படைக்கவும் விளக்கு எண்ணெய்க்காகவும் 1,500 காசுகள் அளிக்கப்பட்டன. இந்த எழுந்தருளல் முதல் ஆறு மாதங்களில் சிறுகாலைச் சந்தியிலும் பின் ஆறு மாதங்களில் ஞாயிறு அன்றும் நிகழ்ந்தது 14

சம்பந்தர் திருமேனிக்குச் சிறுகாலைச் சந்தியின்போது வெள்ளைக் குத்தல் அரிசி, பருப்பு, கரும்புக்கட்டி, பால், வாழைப் பழம், ஐந்து வகைக் கறியமுது, தேங்காய், உப்பு, மிளகு, சீரகம், நெய், வெற்றிலைப் பாக்கு இவை படைக்கவும் மேற்பூச்சுச் செய்யவும் கைவிளக்கு ஏற்றவும் திருவாதிரையின்போது முப்பது அப்பம் படைக்கவும் மகாதேவன் என்பார் 14,000 காசுகளைப் பண்டாரத்தில் ஒப்புவித்தார்.15

கோயில் தானத்தாருள் ஒருவரான சுந்தரப் பெரும்பிள்ளை அர்த்தசாமக் கட்டளைக்காக இலுப்பைத் தோட்டமும் குளமும் அளித்தார்.!16 கிருஷ்ணதேவராயரின் கல்வெட்டு, கோயில் நிலங்களுக்கான வரிவிலக்கை அறிவிப்பதுடன் மன்னரின் வெற்றிகளையும் பட்டியலிட்டுள்ளது.17 கோயிலின் சில நிலங்களில் இருந்து வராதிருந்த வரியினங்களை அதன் பிற நில வருவாயில் இருந்து செலுத்துமாறு அரச ஆணை பிறப்பிக்கப்பட்டது 18 மற்றோர் அரச ஆணை, பெறாமல் விடுபட்ட வரி வருவாயான 78,105 கலம் நெல்லைப் பெற்றனுப்பப் பிறப்பிக்கப்பட்டுள்ளது 19

## விளக்குகள்

இக்கோயில் இறைவன் திருமுன் இரண்டு நந்தாவிளக்குகள் ஏற்ற வாய்ப்பாக வேதவனமுடையார் கருணாகரதேவர் கொடையளித்தார். கல்வெட்டுச் சிதைந்திருப்பதால் கொடை பற்றிய விவரங்களை அறியக்கூடவில்லை.20

## சிறப்புச் செய்திகள்

நாட்டவர்களின் குறைகளை நீக்கச் சில சலுகைகளை அறிவிக்கும் அரச ஆணையாக அமைந்துள்ள கல்வெட்டு அக்கால நடைமுறைகளை வெளிச்சப்படுத்துகிறது. இந்த ஆணையின்படி, அதுநாள்வரை நாட்டார் செலுத்திய பொதிச் சத்தக்கூலி, பெருங்குடிகள் பேர்க்கடமை ஆகியன தவிர்க்கப்பட்டன. தேவர்கள் சிறுமுறி, வகைசெய்வார் காசு இவற்றையும் மடத்தில் உண்பவர்களுக்கு ஆறு காசுகளும் அளிக்குமாறு அறிவிக்கப்பட்டது. சிறுமுறி கொணர்ந்த சேவகருக்குச் சோறிட்டு எச்சில் எடாதொழியுமாறு கூறப்பட்டதுடன் வேலிக் காசு, குதிரைக்காசு இவற்றைப் பெருங்குடிகளே இறுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. இவற்றின் வழி வேளாளர் நலியாமல் செய்க என்று சபைக்கு உணர்த்தப்பட்டது. தில்லைநாயகன் பெரும்பண்டாரம், வாரியப்பெருமகன், இலச்சினைப்படி நெல் அளப்பு, அம்பலம் என்பன இக்கல்வெட்டால் அறியப்படும் பிற தரவுகளாகும்.21

## குறிப்புகள்

1. 1.சம்பந்தர் 3:31; சுந்தரர் 7:30.
2. ஆய்வு நாள் 15. 9. 2009. இம்மாடக்கோயிலை அறிமுகப் படுத்தியவர் திரு. பால. பத்மநாபன்.
3. 3.ARE 1926-27: 140-158.
4. திருஉடையார், சோழகுலாறன் மங்கலாதராசர், இவர் மகனார் பெருமாள் ஆகிய பெயர்கள் வெட்டப்பட் டிருந்தபோதும் அவற்றிற்குரிய சிற்பங்கள் தற்போது இல்லை. மங்கலாதராசர் பெயர் இரு இடங்களில் வெட்டப் பட்டுள்ளது.
5. ARE 1926-27: 155.

6. ARE 1926-27: 151, 158.

7. ஊர்க்கணக்கின் பெயரைச் சுட்டுமிடத்துப் பறியலூர்க் கிழவன் என்கிறது கல்வெட்டு. ARE 1926-27: 145.

8. துள்ளுவார்க்குடி, பனங்காட்டங்குடி, அம்பர், வெண்காடு, திருக்கழிப்பாலை, பறியலூர்.

9. ARE 1926-27: 147, 148.

10. ARE 1927, II 28. K. A. Nilakanta Sastri, The Cholas, pp. 498-499.

11. ARE 1926-27:140.

12. ARE 1926-27: 143.

13. .ARE 1926-27: 144.

14. .ARE 1926-27: 149.

15 ..ARE 1926-27: 145.

*16.* ARE 1926-27:156.

*17.* ARE 1926-27:157.

18. ARE 1926-27: 146.

*19.* ARE 1926-27:147.

20. ARE 1926-27: 152.

21. ARE 1926-27: 150. பல சிறப்பான தரவுகளை முன் வைக்கும் இக்கல்வெட்டு விரிவான ஆய்வுக்கு உரியது.

# 8. நாலூர்

கும்பகோணத்திற்குத் தென்கிழக்கில் குடவாயில் செல்லும் வழியில் திருச்சேறைக்கு அருகில் அமைந்துள்ளது நாலூர். 1 இவ்வூரிலுள்ள மாடக்கோயில் இறைவன் கல்வெட்டுகளில் சம்பரீசுவரத்து மகாதேவர், சம்பரீசுவரத்துப் பெருமானடிகள் என்றழைக்கப்பட்டாலும் தற்போது பலாசவனநாதர் என்றே அறியப்படுகிறார். கிழக்கு நோக்கியுள்ள கோபுரமற்ற வாயிலுள் நுழைந்ததும் வெற்றுத்தளமும் அதன் மேல் அமைந்துள்ள மாடக்கோயிலும் காட்சியாகின்றன.2

**வெற்றுத்தளம்**

1.76 மீ. உயரமுள்ள வெற்றுத்தளம் முறையான தாங்குதளம் இன்றிச் சுவர், உத்திரம், வலபி, கபோதத்துடன் காரைக் கட்டுமானமாய் அமைந்துள்ளது. கபோதத்திற்கு மேல் காட்டப்பட்டுள்ள கைப்பிடிச்சுவர் வெற்றுத்தளத்தின் மேல் அமர்ந்துள்ள இறைவன் கோயிலுக்கான சுற்று மதிலாகும். விமானம் அமைந்துள்ள மேற்றளத்தை அடையத் தென்கிழக்கில் ஒன்பது படிகள் அமைந்துள்ளன. படியமைப்பின் தென்புறம் மடைப்பள்ளியும் அதற்கு முன்னால் இறைத்திருமேனியற்ற திருமுன்னும் உள்ளன. இத்திருமுன்னில் முதலாய்வின்போது திருமாலின் சிற்பம் இடம்பெற்றிருந்தது.3

**மண்டபங்கள்**

விமானம், முகமண்டபம், பெருமண்டபம், முன்மண்டபம் என அமைந்துள்ள கோயில் வளாகத்தின் முன்னால் பலித்தளமும் சிறிய அளவிலான நந்திமண்டபமும் உள்ளன. வண்டிக் கூடு கூரை பெற்றுள்ள முன்மண்டபத்தின் தென்வாயில்கள் இரண்டும் எண்முக அரைத்தூண்கள் மீதமர்ந்த வளைவுகளுடன், சுவரின் மேல் கூரையுறுப்புகளும் ஆழமற்ற கூடுகளுடனான கபோதமும் பெற்றுள்ளன. தென்வாயில் போலவே அமைந்துள்ள வடவாயில் வழி வடக்குச்சுற்றை அடையலாம்.

**அம்மன் கோயில்**

வடக்குச் சுற்றில் ஒருதள வேசரச் செங்கல் கட்டுமானமாய் முறையற்ற தாங்குதளம், வேதிக்கண்டம், நான்முக அரைத்

தூண்கள் தழுவிய சுவர், கூரையுறுப்புகள் கொண்டமைந்துள்ள அம்மன் விமானத்தின் முப்புறக் கோட்டங்களும் வெறுமையாக உள்ளன. முன்னுள்ள முகமண்டபம் விமானக் கட்டமைப்பை ஒத்துள்ளது. கருவறையில் சடைமகுடம், பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, தோள், கை வளைகள், பட்டாடை கொண்டுள்ள இறைவி பெரியநாயகியாய்ப் பின்கைகளில் அக்கமாலையும் மலர்மொட்டும் ஏந்தி, வல முன் கையால் அருள் செய்கிறார். இட முன் கை கடியவலம்பிதமாக உள்ளது.

### பெருமண்டபம்

முன்மண்டபத்தின் கிழக்கிலுள்ள பெருமண்டபம் பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, உறுப்பு வேறுபாடற்ற நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், தரங்க வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் கொண்டுள்ளது. அதன் வண்டிக்கூடு கூரையை முச்சதுர, இருகட்டுத் தூண்கள் வெட்டுப் போதிகைகள் துணையுடன் தாங்குகின்றன. பெரு மண்டப வாயில் நிலைகளில் இராஜகேசரியின் 24ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் மதுரை கொண்ட பரகேசரியின் 22ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் வெட்டப்பட்டுள்ளன.

### முகமண்டபம், கருவறை

பெருமண்டபத்தை அடுத்துள்ள முகமண்டப வாயிலருகே தெற்கில் பிள்ளையாரும் வடக்கில் முருகனும் உள்ளனர். வெறுமையாக உள்ள முகமண்டபம் வெளிப்புறத்தே விமானத்தை ஒத்த கட்டமைப்புப் பெற்றுள்ளது. கருவறை வாயிலின் வட நிலையில் உள்ள முதல் பராந்தகரின் 38ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு களஆய்வின்போது கண்டறியப்பட்டது. இறைவன் சதுர ஆவுடையாரும் வேசரபாணமுமாய் இலிங்கத்திருமேனியராய்ப் பலாசவனநாதர் என்ற பெயருடன் எழுந்தருளியுள்ளார். தூங்கானை மாடமாக உள்ள கருவறைக் கூரை தடுப்புகளின்றிப் பொள்ளலாக அமைந்துள்ளது.

### விமானம்

10. 80 மீ. சுற்றளவுடைய தூய ஒருதளத் தூங்கானைமாடமாக அமைந்துள்ள விமானம் ஜகதி, கண்டம், பட்டிகை, பெருங்

கண்டம், பெருவாஜனம், மேற்கம்பு எனும் உறுப்புகள் அமைந்த வளைமுகத் துணைத்தளம், நான்முக அரைத்தூண்கள் தழுவிய வளைமுகமான சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், ஆழமற்ற கூடுகளுடனான கபோதம், மேலே வேதிகை பெற்று அமைந்துள்ளது. கிரீவ சுவர் தூண்களற்று உத்திரம், வலபி கொண்டுள்ளது. தெற்கு, மேற்கு, வடக்கு கிரீவ கோட்டங்கள் வெறுமையாக உள்ளன.

சிகரத்தின் கிழக்கு முகத்தில் கீர்த்திமுக வளைவும் அதன் உட்குழிவில், நிற்கும் யானையின் முன்தோற்றமும் காட்டப்பட்டுள்ளன. விமானத்தின் தென்கோட்டத்தில் வல முன் கையில் சின்முத்திரை காட்டி, இட முன் கையில் சுவடி ஏந்திச் சடைப் பாரத்துடன் வீராசனத்தில் உள்ள ஆலமர்அண்ணலின் பின் கைகளில் அக்கமாலையும் தீச்சுடரும். வலச்செவியில் மகர குண்டலம். இடச்செவியில் பனையோலைக் குண்டலம். இரு புறமும் முனிவர்கள். சுற்றின் தென்மேற்கு மூலை மண்டபத்தில் பிள்ளையாரும் வடக்கு மண்டபத்தில் சண்டேசுவரரும் பெற்றுள்ளனர்.

**கல்வெட்டுகள்**

இக்கோயிலிலிருந்து படியெடுக்கப்பட்ட மூன்று கல்வெட்டுகளுள் ஒன்று முதலாம் ஆதித்தராகக் கொள்ளத்தக்க இராஜ கேசரிவர்மரின் 24ம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டுள்ளது.4 அதில் சேற்றூர்க் கூற்றத்திருந்த பிரமதேயமாக நாலூர் குறிக்கப்பட்டுள்ளது. நாலூர் ஊரவையார் வண்ணக்கனார் அம்பலம் என்ற இடத்தில் கூடி வடசாத்தங்குடியான களரஞ்சேந்த சதுர்வேதிமங்கலத்திலிருந்த 1,150 கமுகு மரங்களுக்கான நிலவரியாகத் தட்டிறையே கொள்வதாகவும் அவ்வரியையும் நிலம் அளந்து அதற்கேற்பக் கொள்வதாகவும் முடிவெடுத்தனர். சபைபணிக்க இந்த ஆவணத்தை எழுதியவராக ஆயிரத்து நானூற்று நாற்பதின்மன் மங்கலாதித்தனாகிய நூற்றிருபதின் காடன் குறிக்கப்படுகிறார்.

மதுரை கொண்ட கோப்பரகேசரிவர்மரான முதலாம் பராந்தகரின் 22ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு 5 சம்பரீசுவரம் என்றழைக்கப்பட்ட இக்கோயிலில் விளக்கெரிக்க 90 ஆடுகளை

ஒருவர் கொடையாகத் தந்ததைக் குறிப்பிடுகிறது. புதிதாகக் கண்டறியப்பட்ட முதற் பராந்தகரின் 38ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு 6 முக்கரையைச் சேர்ந்த வியாபாரி நக்கன் ஆதிதின் (ஆதித்தன்?) இத்திருக்கோயிலில் நாள்தோறும் உழக்கு நெய் கொண்டு நந்தாவிளக்கொன்று ஏற்றுவதற்காகக் கோயிலாரிடம் 92 ஆடுகள் கொடையளித்த செய்தியைப் பகிர்ந்துகொள்கிறது.

நாலூர்க் கோயிலுக்குப் பக்கத்திலுள்ள நாலூர்த் திருமயானம் கோயிலில் உள்ள கல்வெட்டுகளுள் சில 7 நாலூர் மாடக் கோயிலைச் சுட்டுகின்றன. முதற் பராந்தகரின் நான்காம் ஆட்சி யாண்டில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு, தென்கரைத் திருநறையூர் நாட்டைச் சேர்ந்த அக்கிரமக்கோட்டச் சதுர்வேதி மங்கலத்து ஊரவையார் நாலூர்க் கோயிலுக்கு நிலமொன்றைக் கொடையளித்த தகவலைத் தருகிறது.

முதலாம் இராஜராஜரின் 24ம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டு சம்பரீசுவரத்து மகாதேவர் திருக்கோயி லின் முன் இருந்த இராஜராஜன் கூடத்தில் நாலூர் ஊரவை கூடிய தகவலைப் பகிர்ந்துகொள்கிறது. இக்கூடம் கண்டராதித்தர் பெயரைக் கொண்டிருந்தமை முதலாம் இராஜராஜரின் 23ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டால் தெரியவருகிறது.8 மன்னர் பெயரற்ற கல்வெட்டொன்றும் சம்பரீசுவரத்துப் பெருமானடிகளைக் குறிப்பிடுகிறது. வானவன்மாதேவிச் சதுர்வேதிமங்கலமாகவும் நாலூர் அறியப்பட்டமையை விக்கிரமசோழரின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டின் வழி அறியமுடிகிறது.9 இவ்வூரில் அகத்தீசுவரம் என்ற பெயரில் ஒரு சிவன் கோயிலும் திருநாராயண விண்ணகரம் என்ற பெயரில் ஒரு பெருமாள் கோயிலும் விளங்கியதாகக் கல்வெட்டுகள் கண்காட்டுகின்றன. 10

பதிகம் பெறாத இக்கோயிலை சம்பந்தர் பாடியிருப்பதாக இரண்டு நூல்கள் பிழைபடக் குறிக்கின்றன.11 சம்பந்தர் நாலூர் மயானத்தைப் பாடியுள்ளாரே தவிர, நாலூரை அன்று. அவர் பதிகத்தின் எந்த அடியிலும் நாலூர் மாடக்கோயில் குறிக்கப் படவில்லை.

பதிகத்தின் முதல் பாடலிலேயே,

பாலூரும் மலைப்பாம்பும் பணிமதியும் மத்தமும்

மேலூரும் செஞ்சடையான் வெண்ணூல்சேர் மார்பினான்

நாலூர் மயானத்து நம்பான்ற னடிநினைந்து

மாலூரும் சிந்தையர்பால் வந்தூரா மறுபிறப்பே'

என்று தான் பாட எடுத்துக்கொண்ட கோயிலின் பெயரைத் தெளிவுபட மொழிந்துள்ளார். 12

கடவூர், கடவூர் மயானம் எனும் இரண்டு கோயில்கள் தரங்கம்பாடிக்கு அருகிலுள்ளன. கடவூர் மயானம் கடவூரில் இருந்து, நாலூரிலிருந்து நாலூர் மயானம் இருப்பது போல ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. சம்பந்தர் கடவூரைத் தனியாகவும் கடவூர் மயானத்தைத் தனியாகவும் பாடியுள்ளார். இரண்டு கோயில்களுக்கும் தனித்தனியே பதிகங்கள் உள்ளன.

'மங்கைமணந்த மார்பர் மழுவாள்வலனொான் றேந்திக்

கங்கைசடையிற் கரந்தார் கடவூர்மயானம் அமர்ந்தார்'

என்று கடவூர் மயானத்தையும் 13

'எரிதரு வார்சடை யானும்வெள் ளையெருது ஏறியும்

புரிதரு மாமலர்க் கொன்றைமா லைபுனைந்து ஏத்தவே

கரிதரு காலனைச் சாடினா னும்கட வூர்தனுள்'

என்று கடவூரையும் 14 சம்பந்தர் தனித்தனியே பெயர் சுட்டிப் பாடியிருப்பது கவனத்திற் கொள்ளத்தக்கது.

இரண்டு கோயில்களை இணைத்து ஒரே பதிகத்தில் பாடநேர்ந்த காலத்து அப்பதிகத்தில் அவ்விரு கோயில்களின் பெயர்களையும் சேர்க்கவும் சம்பந்தர் தவறியதில்லை. திருத்துருத்தியும் திருவேள்விக்குடியும் இணைந்த பதிகம் அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.15

'நாறுசாந்து இளமுலை அரிவையோடு

ஒருபகல் அமர்ந்த பிரான்

வீறுசேர் துருத்தியார் இரவிடத்து
உறைவர் வேள் விக்குடியே'

இவ்வாறு சம்பந்தர் தகுந்த எடுத்துக்காட்டுகள் தந்திருந்தபோதும் நாலூர் மயானத்தைப் பற்றி மட்டுமே அவர் பாடிய பாடலை நாலூருக்கும் உரியது எனக் கொள்வது பிழையாகும். ஆறைவடதளியைப் பற்றி அப்பர் பாடியிருப்பதையும் இது போலவே, பழையாறைக் கோயிலையும் வடதளிக்கோயிலையும் அவர் இணைத்துப் பாடியிருப்பதாக, 'சிவப்பதிகள் வரலாறு' பிழைபடக் குறித்துள்ளது.

தருமபுர ஆதீன வெளியீடான இரண்டாம் திருமுறையில் தலங்களின் வரலாற்றுக் குறிப்புக் கூறுமிடத்தில், திருநாலூர் மயானம் என்று தலைப்பிட்டு, இங்குள்ள இறைவன் பெயர் பலாசவனநாதர், இறைவி பெயர் பெரியநாயகி எனக் குறித்துள்ளனர்.16 இது பிழையாகும். நாலூர் இறைவனே பலாச வனநாதர் என்றும் அவ்வூர் இறைவியே பெரியநாயகி என்றும் அழைக்கப்பெறுகின்றனர். நாலூர் மயானத்து இறை இணை ஞானபுரீசுவரர், ஞானாம்பிகை எனும் திருப்பெயர்களைக் கொண்டுள்ளனர்.

**குறிப்புகள்**

1. இக்கோயில் பற்றிய முதல் கட்டுரை, 'நாலூர் மாடக்கோயில்' என்ற தலைப்பில் அமுத சுரபி, ஆகஸ்டு, 1987ம் இதழில் வெளியானது.
2. ஆய்வுநாட்கள் 12. 2. 1983, 26. 1. 2001, 30. 8. 2008, 20. 3. 2010. உடனிருந்து உதவிய அறங்காவலர் திரு. இர. வாசுதேவன் நன்றிக்குரியவர்.
3. இத்திருமால் சிற்பம் கருவறையின் மேற்குக் கோட்டத்தில் இருந்ததாகவும் திருப்பணிகளின்போது அகற்றப்பட்டது மீண்டும் அங்கு இடப்பெறாத நிலையில் இங்கு நிறுத்தப் பட்டதாகவும் முதல் ஆய்வின்போது சந்தித்த சிவாச்சாரி யார் தகவலளித்தார்.
4. SII 13: 309.
5. ARE 1910: 309.

**6.**The Hindu,12. 7. 2010.

7.ARE 1910: 322,324,327.

**8.**ARE 1910: 326.

9.ARE 1910: 317.

10..ARE 1910: 314, 326.

11 சிவப்பதிகள் வரலாறு, ப. 83; எஸ். ஆர். பாலசுப்ரமணியம், முற்காலச் சோழர் கலையும் சிற்பமும், ப. 179.

*12.*திருமுறை 2: ப. 205.

*13.*திருமுறை 2: ப. 378.

*14.*திருமுறை 3: ப. 41.

15. திருமுறை 3: ப. 425.

*16.*திருமுறை 2: ப. 117.

# 9. திருநறையூர்

கும்பகோணம் திருவாரூர்ப் பெருவழியில் கும்பகோணத்திலிருந்து 15 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது திருநறையூர். திருமங்கையாழ்வார் பாசுரம் பெற்ற மணிமாடக்கோயில் 1 சீனிவாசப் பெருமாள் கோயிலாய்ப் பெயர் கொண்டு இங்குத் திகழ்கிறது.2 கபோதபந்தத் துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, எண்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றுக் கிழக்குப் பார்வையாக உள்ள முதற் கோபுரத்தின் ஐந்து தளங்களுமே மிகக் குறைவான அளவில் சுதையுருவங்களைப் பெற்றுள்ளன. கீழ்த்தளப் பத்திகளுக்கு இடைப்பட்ட ஒடுக்கங் களை ஒருகால் பஞ்சரங்கள் அலங்கரிக்கின்றன. கோபுரத்தின் தென்புறத்தே உள்ள ஒருதள வேசரத் திருமுன்னில் பிள்ளையார் எழுந்தருளியுள்ளார்.

### வெளிச்சுற்று

இவ்வாயிலை அடுத்து விரியும் வெளிச்சுற்றின் வடக்கில் அலுவலகம், வாகன அறை இவை உள்ளன. அலுவலக உள் அறையில் வணக்க முத்திரையுடன் நின்றகோலத்தில் மங்கையாழ்வார் சிற்பம் காணப்படுகிறது. தெற்கில் நந்தவனமும் அதற்கு முன்னிருக்குமாறு நம்மாழ்வார், உடையவர் திருமுன்களும் திராவிட சிகரம் பெற்ற மண்டபமும் உள்ளன. இம்மண்டபம் கீழ்வேளூர் வெளிச்சுற்றில் உள்ள திராவிட சிகரக் கட்டுமானத் துடன் ஒப்பிடத்தக்கது.

முதற் கோபுரத்திற்கும் நான்கு தளங்கள் பெற்றுள்ள இரண்டாம் கோபுரத்திற்கும் இடைப்பட்ட நடைப்பத்தியின் கூரையைத் தெற்கிலும் வடக்கிலுமாய் அமைந்த பதினாறு பேருருளைத் தூண்கள் தாங்குகின்றன. வேறெந்த மாடக்கோயிலிலும் காணப்படாத இத்தூண்கள் மதுரை திருமலை நாயக்கர் அரண்மனைத் தூண்களை ஒத்து அமைந்துள்ளன.

### இரண்டாம் கோபுரம்

உயரமான துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம், நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், பூமொட்டுப்

போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றுள்ள இரண்டாம் கோபுரக் கீழ்த்தளத்தின் சாலைப்பத்திகளை எண்முக அரைத் தூண்கள் அணைத்துள்ளன. இப்பத்திகளின் தாங்குதளம் கபோதபந்தமாக மாற்றப்பட்டுள்ளது. வாயிலில் உள்ள தெற்கு, வடக்குக் கோட்டங்களில் காளிங்க நர்த்தனச் சிற்பங்கள் காணப் படுகின்றன. ஆரஉறுப்புகளில் குறைவான சுதையுருவங்கள் இடம்பெற்றுள்ளன. நடைப்பத்தியிலிருந்து கோபுரவாயிலை அடைய ஏழு படிகள் உள்ளன.

## அட்டவணை ரெங்கப்பையன் மண்டபம்

கோபுரவாயிலை அடுத்து அமைந்துள்ள மண்டபத்தை அடைய வண்டிக்கூடு கூரை பெற்ற இரண்டாம் நடைப்பத்தி உதவுகிறது. பேரளவிலான நான்முகத் தூண்கள் தாங்கும் இந்நடைப்பத்தியின் தெற்கிலும் வடக்கிலும் திறப்புகள் உள்ளன. மண்டபத்தை இரண்டு அல்லது மூன்றாக அமைந்த ஒட்டுத் தூண்கள் மதலைகளின் உதவியோடு தாங்குகின்றன. பேரளவின தாக விளங்கும் இம்மண்டபத்தின் வடபுறத்தே பெருமண்ட பம், முகமண்டபம், விமானம் பெற்ற இராமர் திருமுன்னும் தென்புறத்தே சுற்றுக்கான வழியும் அமைந்துள்ளன.

## இராமர் திருமுன்

துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம், நான்முக அரைத் தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் கொண்ட இராமரின் இருதளச் சாலை விமானக் கீழ்த்தளச் சுவரின் முப்புறக் கோட்டப் பஞ்சரங்கள், ஆரச் சாலைகள், கிரீவகோட்டங்கள் வெறுமையாக உள்ளன. கருவறையில் உள்ள மேடையில் சீதை, இராமர், இலட்சுமணன் மூவரும் நின்றகோலத்தில் உள்ளனர். சீதையின் வலக்கை நெகிழ்ந்திருக்க இடக்கையில் மலர். இராமர் வலக்கையில் அம்பும் இடக்கையில் வில்லும் கொண்டுள்ளார். வணங்கிய நிலையில் உள்ள இலட்சுமணன் வில்லை மார்போடு அணைத்த நிலையில் உள்ளார். அனைவரும் பட்டாடை, கிரீடமகுடம் பெற்றுள்ளனர்.

மண்டபத்தின் தென்கிழக்குச் சுவரிலிருந்து படியெடுக்கப்பட்டிருக்கும் கல்வெட்டு கி. பி. 1618ல் வெட்டப்பட்டுள்ளது.

"அட்டவணை ரெங்கப்பையன் திருமண்டபம்' என்று இந்த மண்டபத்தை அழைக்கும் இக்கல்வெட்டு, இதை நாச்சியார் அம்மனுக்கு இரகுநாத நாயக்கர் நலம் கருதி ரெங்கப்பையன் அமைத்தளித்ததாகக் கூறுகிறது. 3

இம்மண்டபத்தின் புறச்சுவர் தெற்கிலும் வடக்கிலும் கபோதபந்தத் துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத் தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றுக் கருங்கல் கட்டுமானமாக உள்ளது. சுவரிலுள்ள கோட்டப் பஞ்சரங்கள் சில வெறுமையாகவும் சில சாளரமாக மாற்றப்பட்டும் உள்ளன. தெற்குச் சுவரின் தென்கிழக்குப்பகுதி செங்கல் கட்டுமானமாக அமைந்துள்ளது. பத்மபந்தத் தாங்குதளத்துடன் புறந்தள்ளலாக உள்ள வடசுவரின் இடைப்பகுதியை எண்முக அரைத்தூண்கள் அணைத்துள்ளன. அதன் சாலைப்பத்தி வெறுமையான கோட்டப் பஞ்சரத்துடன் கூடுதலாகப் புறந்தள்ளியுள்ளது. இப்புறந்தள்ளல் தவிர்த்த வடசுவரில் தவிர்த்த வடசுவரில் காணப்படும் ஏழு கோட்டப் பஞ்சரங்களும் சாளரங்களாக்கப்பட்டுள்ளன.

சுற்றின் தென்புறத்தே தென்கிழக்கில் மடைப்பள்ளியும் ஆஞ்சநேயர் திருமுன்னும் கருடமோட்ச நினைவகமும் தென்மேற்கு மூலையில் சக்கரத்தாழ்வார் வளாகமும் அமைந்துள்ளன. 18.1.1999 சிரவணத்தன்று இக்கோயில் வளாகத்தில் உயிர் துறந்த இரண்டு கருடப்பறவைகளின் நினைவாக அமைந்துள்ள ஒரு தள வேசர விமானத்தின் கருவறையில் இறந்த பறவைகளின் படமும் கபோதத்தில் அவற்றின் சுதைவடிவமும் இடம் பெற்றுள்ளன.4 சக்கரத்தாழ்வார் திருமுன் வண்டிக்கூடு கூரை பெற்ற பெருமண்டபம், முகமண்டபம், இருதள வேசர விமானம் கொண்டுள்ளது. சுற்றின் வடகிழக்கு மூலையில் உள்ள ஒருதள நாகர விமானம் வெறுமையாக உள்ளது.

**வெற்றுத்தளம்**

மண்டபப் புறச்சுவரின் தொடர்ச்சியாகத் தெற்கிலும் மேற்கிலும் வடக்கிலும் விரியும் 5.60 மீ. உயரமுள்ள வெற்றுத் தளம் கல்லடுக்கப் பெற்ற நெடிய சுவராகவே அமைந்துள்ளது. மண்டபப் புறச்சுவர் போலவே அமைந்திருக்க வேண்டிய இவ்வெற்றுத்தளம் திருப்பணிகளால் இத்தகு மாற்றத்தை

அடைந்ததாகக் கொள்ளலாம். தலைச்சங்காடு சங்காரண்யேசுவரர் திருக்கோயிலிலும் தெற்கு, மேற்கு, வடக்குப் பகுதிகளில் வெற்றுத்தளம் இது போலவே இருப்பது இங்கு நினைவுகூரத் தக்கது. வடபுறத்தே சேனைமுதலியார் திருமுன்னிற்காகப் புறந்தள்ளியிருக்கும் வெற்றுத்தளப் பகுதி உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், கூரையுறுப்புகள் பெற்று அமைந்துள்ளது.

**இடைச்சுற்று**

அட்டவணை ரெங்கப்பையன் திருமண்டபத்திலிருந்து இடைச்சுற்றை அடையப் பத்துப் படிகள் உதவுகின்றன. கிழக்கில் மண்டபமாகவும் தெற்கு, மேற்கு, வடக்கு முத்திசைகளிலும் மாளிகையுடனான சுற்றாகவும் அமைந்துள்ள இவ்விடைச் சுற்றின் கிழக்கு விரிவு நாற்சதுர, இருகட்டுத் தூண்களும் நான்முகத் தூண்களும் இணைந்தமைந்த ஒட்டுத்தூண்களைப் பெற்றுள்ளது. தூண்களின் சதுரங்களில் கொடிக்கருக்குகளும் சிற்பங்களும் உள்ளன. பூமொட்டுப் போதிகைகளுடன் அமர்யாளிப் பலகையும் மதலைகளும் கொண்டுள்ள கூரையுறுப்புகள் அரவணை மண்டபத்தை ஒத்துள்ளன. இம்மண்டப வாயில் நிலையில் கண்டறியப்பட்ட புதிய கல்வெட்டு இக்கோயிலில் திருப்பணிக் கணக்காக இருந்த வேணுமாலை என்பவரை அடையாளப்படுத்துகிறது.5

**திருமுன்கள்**

இவ்விரிவின் கிழக்கில் இரண்டு திருமுன்கள் உள்ளன. அவற்றுள் வாயிலை ஒட்டியுள்ள முதல் திருமுன்னில் யோக நரசிம்மர் இடம்பெற்றுள்ளார். கரண்டமகுடம், தோள்வளைகள் அணிந்து குத்துக்கால் அமர்வுடன் யோகாசனத்தில் உள்ள நரசிம்மரின் முன்கைகள் முழங்கால்கள் மேல் நெகிழ, பின்கைகளில் சங்கு, சக்கரம். மண்டப விரிவின் தென்கிழக்கில் ஆஞ்சநேயர் திருமுன் அமைந்துள்ளது. வடக்கே உள்ள மூன்று திருமுன்களில் கிழக்கிலிருந்து மேற்காக தேசிகன், மணவாளமாமுனிகள், சேனைமுதலியார் இடம்பெற்றுள்ளனர். இந்தத் திருமுன்களுள் கபோதபந்தத் தாங்குதளம், சதுரபாதம் பெற்ற எண்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், கபோதம் இவற்றுடன் விளங்கும்

சேனைமுதலியார் திருமுன் புறந்தள்ளிய நிலையில் வெற்றுத் தளம் பெற்றுள்ளது.

**சுற்றுமாளிகை**

துணைத்தளம் பெற்றுள்ள இச்சுற்றின் மாளிகைக் கூரையை வெட்டுப் போதிகைகளின் துணையுடன் முச்சதுர, இருகட்டுத் தூண்களும் நாற்சதுர, இருகட்டுத் தூண்களும் தாங்குகின்றன. சில சதுரங்களில் கொடிக்கருக்குகளும் சிலவற்றில் தாமரைப் பதக்கங்களும் உள்ளன. மாளிகைச் சுவரிலுள்ள ஆழமான கோட்டங்களில் தென்புறம் பசுக்கள், பறவைகளுடன் வேணு கோபாலரும் வடக்கில் கவரிப்பெண்களுடன் சுகாசனத்தில் இலட்சுமி நரசிம்மரும் அமைய, மேற்கில் உள்ள மூன்று கோட்டங்களில் சௌரிராஜப்பெருமாள், வரதராஜப்பெருமாள், தேவியருடன் அரங்கநாதர் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. இச்சுற்றின் புறச்சுவர் தெற்கு, மேற்கு, வடக்கு முப்புறத்தும் வெற்றுத்தளம் போலவே கல்லடுக்குச் சுவராகக் கூரையுறுப்பு களுடன் அமைந்துள்ளது.

**உள்சுற்று**

இடைச்சுற்றிலிருந்து இறைவன் விமான வளாகத்திற்குள் நுழைய நான்கு படிகள் உள்ளன. வளாகத்தின் கூரையைச் சுற்றின் கிழக்கு விரிவில் உள்ளவை போன்ற தூண்கள் தாங்குகின்றன. வடபுறத்தே கல் கருடன் திருமுன்னும் அதையடுத்துச் செப்புத்திருமேனிகள், மூலவர்கள் அறையும் தென்கிழக்கில் பொன்னியம்மன் திருமுன்னும் அதன் அருகே சிறிய அளவிலான செப்புத்திருமேனிகள் கொண்ட மேடையும் உள்ளன. கிழக்கில் மண்டபமாக அமைந்து தெற்கு, மேற்கு, வடக்கு முப்புறத்தும் விமானம், முகமண்டபம் இவற்றுக்குரிய உள்சுற்றாக விரியும் இவ்வளாகத்தின் வடகிழக்கில் உள்ள அறை வெறுமையாக உள்ளது. உள்சுற்றின் தெற்குச் சுவரில் உள்ள வாயில் கல் கருடன் திருமுன்னுக்கு நேரெதிராக உள்ளது.

**விமானம்**

முத்தளச் சாலையாக உள்ள விமானத்தின் கீழ்த்தளம் தென் வடலாக 6. 57 மீ. நீளமும் கிழக்கு மேற்காக 5.21 மீ. அகலமும் கொண்டு கபோதபந்தத் துணைத்தளம், தாமரை உபானம்,

பாதபந்தத் தாங்குதளம், கண்டம், கபோதம், நாகபந்தம் கொடிக்கருக்குப் பெற்ற பாதங்களுடனான எண்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரை யுறுப்புகள், கூடுவளைவுகளுடனான கபோதம் இவற்றுடன் கருங்கல் கட்டுமானமாக உள்ளது. சுவரின் முப்புறத்தும் உள்ள கோட்டப்பஞ்சரங்கள் வெறுமையாக உள்ளன. துணைத் தளத்தின் கண்டபாதங்களில் ஆங்காங்கே சிற்பங்கள் உள்ளன.

முதல் தள ஆரஉறுப்புகள் சுதையுருவங்கள் இன்றி அமைய, இரண்டாம் தள ஆரஉறுப்புகளும் கிரீவகோட்டங்களும் நாற்றிசைகளிலும் இறைத்திருமேனிகளைப் பெற்றுள்ளன. தெற்கு ஆரச்சாலை, கிரீவகோட்டத்தில் யோகநரசிம்மரும் மேற்கு ஆரச்சாலையில் உத்குடியில் பரமபதநாதரும் கிரீவகோட்டத்தில் சுகாசன விஷ்ணுவும் வடக்கு ஆரச்சாலையிலும் கிரீவ கோட்டத்திலும் தேவியருடன் சுகாசனத்தில் வராகரும் கிழக்கு ஆரச்சாலையில் கருவறையில் உள்ளாற் போலவே நான்முகன், பலராமன், வஞ்சுளவல்லி, விஷ்ணு, அநிருத்தன், பிரத்யும்னன், புருஷோத்தமன் இவர்தம் சுதையுருவங்களும் கிரீவகோட்டத்தில் தேவியுடன் சுகாசன விஷ்ணுவும் இடம்பெற்றுள்ளனர்.

**முகமண்டபம்**

அதே கட்டமைப்பில் உள்ள முகமண்டபத்தின் தாங்கு தளத்திற்கு மேற்பட்ட பகுதியில் வேதிகைத்தொகுதி இடம் பெற்றுள்ளது. மண்டபச் சுவரின் தெற்கிலும் வடக்கிலும் உள்ள கோட்டப்பஞ்சரங்கள் வெறுமையாக உள்ளன. முகமண்டபத்தின் கிழக்கில் உள்ள பத்துப் படிகள் ஈரடுக்காக அமைந்து யாளித்துளைக்கைப் பிடிச்சுவர் பெற்றுள்ளன. மண்டப வாயிலின் இருபுறத்தும் உள்ள காவலர்கள் கிரீட மகுடம், சரப்பளி, பட்டாடை அணிந்து பின்கைகளில் சங்கு, சக்கரம் ஏந்தியுள்ளனர். முன்கைகளில் ஒரு கை அச்சுறுத்த, மறு கை அருகிலுள்ள உருள்பெருந்தடி மேல் உள்ளது.

**கருவறை**

தூண்களற்ற சதுரமான முகமண்டபத்தை அடுத்துள்ள கருவறையின் வாயிலை வெட்டுப் போதிகைகள் தாங்கும் உத்திரம், தாமரை வலபி, கபோதம் அலங்கரிக்கின்றன. கருவறை

யுள் தெற்குச் சுவரருகே வடக்குப் பார்வையாகச் சடைமகுடம், பட்டாடை, தோள்மாலை, பூட்டுக்குண்டலங்கள் கொண்டு கடகத்தில் அமைந்த இருகையினராய் நான்முகனும் வடக்குச் சுவரருகே தெற்குப் பார்வையாகக் கிரீடமகுடம், பட்டாடை அணிந்து, வலக்கையால் அருள்செய்து, இடக்கையைக் கடிய வலம்பிதமாகக் கொண்ட அநிருத்தரும் கரண்டமகுடம், பட்டாடை அணிந்து வலக்கையைக் காப்பு முத்திரையில் இருத்தி, இடக்கையைக் கடியவலம்பிதமாகக் கொண்டவராய்ப் புருஷோத்தமரும் நின்றகோலத்தில் காட்சிதருகின்றனர்.

மேற்குச் சுவரொட்டிக் கிழக்குப் பார்வையாகக் கரண்ட மகுடம், சரப்பளி, பட்டாடை அணிந்து வலக்கையில் காப்பு முத்திரையும் இடக்கையில் அச்சுறுத்தும் முத்திரையும் காட்டியவாறு சங்கிருஷ்ணராகக் கொண்டாடப்படும் பலராமரும் பட்டாடை, வலச்செவியில் மகரகுண்டலம், இடச்செவியில் பனையோலைக் குண்டலம், கழுத்தணிகள், கையணிகள் அணிந்து வலக்கையால் அருள்செய்து, இடக்கையை நெகிழ்த்தியவாறு வஞ்சுளவல்லி நாச்சியாரும் கிரீடமகுடம், மகர குண்டலங்கள், பட்டாடை அணிந்து, சங்கு, சக்கரம் ஏந்திய இருகையினராய் சீனிவாசப் பெருமாளும் கரண்டமகுடம், முப்புரிநூல், பட்டாடை அணிந்து, வலக்கையைக் காப்பு முத்திரையில் இருத்தி, இடக்கையைக் கடியவலம்பிதமாய்க் கொண்டவராய் பிரத்யும்னரும் அமைந்துள்ளனர்.

நான்முகனுக்கு இங்கு நான்கு முகங்களும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க சிறப்பாகும். அது போலவே சீனிவாசப் பெருமாள் இரண்டு கைகள் மட்டுமே பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. உற்சவர்களுள் வஞ்சுளவல்லி வலக்கையில் மலரேந்தி, இடக்கையை நெகிழ்த்தியுள்ளார். சீனிவாசப் பெருமாள் பின்கைகளில் சங்கு, சக்கரம் கொண்டு, வல முன் கையால் அருள் செய்து இட முன் கையைக் கடியவலம்பிதமாக்கியுள்ளார்.

**கல் கருடன் திருமுன்**

உள்சுற்றின் கிழக்கு விரிவில் தெற்குப் பார்வையாக அமைந்திருக்கும் கல் கருடன் திருமுன் தனித்தன்மையது எனலாம். இத்திருமுன்னின் வாயிலை நான்முக அரைத்தூண்கள் அணைத்

துள்ளன. போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகளை அடுத்துக் கபோதம் அமைந்துள்ளது. பளிங்குக் கற்கள் போர்த்தியுள்ள கருவறையில் இருகைகளையும் ஏந்தலாகக் கொண்டு இறக்கைகள் விரிந்த நிலையில் கிரீடமகுடம், பாம்புக் குண்டலங்களுடன் இருக்கை ஒன்றின்மீது கருடாசனத்தில் உள்ளார் கருடர்.

**மூலவர், உற்சவர் அறை**

கல் கருடன் திருமுன்னுக்கு வலப்புறம் உள்ள அறையில் யோகநரசிம்மர், பரமபதநாதர், சனீசுவரன் குடும்பம், தாசர், சேனைமுதலியார் இவர்தம் செப்புத்திருமேனிகளும் பல மூலவர் மேனிகளும் உள்ளன. பரமபதநாதர் தொகுதியில் உள்ள விஷ்ணு, திருமகள், நிலமகள், நீலாதேவி அனைவருமே பாம்பணையின் மீது அமர்ந்துள்ளனர். வீராசனத்தில் உள்ள விஷ்ணுவின் வலக்கை முழங்கால் மேல் அமைய, இடக்கை இருக்கையில் இருத்தப்பட்டுள்ளது. கிரீடமகுடம், மகரகுண்ட லங்கள், முப்புரிநூல், உதரபந்தம், பதக்கமாலை, கடகவளைகள், பட்டாடை அணிந்து பின்கைகளில் சங்கு, சக்கரம் ஏந்தியுள்ள இறைவனின் தலைக்கு மேல் குடைவிரித்தாற் போல் ஆதிசேடனின் ஐந்து தலைகளும் கவிந்துள்ளன.

சுகாசனத்தில் உள்ள தேவியர் மூவருள் திருமகள் கரண்ட மகுடம், பனையோலைக் குண்டலங்கள், முப்புரிநூல், பட்டாடை அணிந்து வலக்கையைத் தளத்தில் இருத்தி, இடக் கையில் தாமரை ஏந்தியுள்ளார். இடப்புறமுள்ள நிலமகள் கரண்டமகுடம், மகரகுண்டலங்கள், பட்டாடை அணிந்தவராய் வலக்கையில் நீலோத்பலம் ஏந்தி, இடக்கையை இருக்கையில் இருத்தியுள்ளார். நிலமகளை அடுத்துள்ள நீலாதேவி கரண்ட மகுடம், மகரகுண்டலங்கள், முப்புரிநூல், பட்டாடை அணிந்தவராய் நிலமகள் ஒப்பக் கைகளைக் கொண்டுள்ளார்.

யோகபட்டத்துடன் தாமரை மலர் மீது யோகாசனத்தில் உள்ள யோகநரசிம்மரின் தலையில் கிரீடமகுடம். சரப்பளி, ஸ்வர்ணவைகாக்ஷம், உதரபந்தம், தோள், கடக, கை வளைகள் அணிந்துள்ள நரசிம்மரின் முன்கைகள் முழங்கால்களின் மீது நெகிழ்ந்துள்ளன. பின்கைகளில் சங்கு, சக்கரம். மழித்த தலையும் நீள்செவிகளும் முப்புரிநூல், உதரபந்தம், கோவணஆடை

இவையும் கொண்டு தாமரைமலரில் அர்த்தபத்மாசனத்தில் உள்ள தாசரின் வலக்கை சின்முத்திரை காட்ட, இடக்கையில் எழுத்துப் பொறிப்புடன் சுவடி உள்ளது.

**உள்சுற்றின் புறச்சுவர்**

உள்சுற்றின் புறச்சுவர் கபோதபந்தத் துணைத்தளம், கபோதபந்தத் தாங்குதளம், நாகபந்தம், கொடிக்கருக்குப் பெற்ற பாதங்களுடனான எண்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், கூடு வளைவுகளுடனான கபோதம் பெற்றுள்ளது. துணைத்தளக் கண்டப்பகுதியில் தெற்கு, மேற்கு, வடக்கு முப்புறத்தும் எண்ணற்ற ஆடற்சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. தலைக்கோலிகள், தளியிலார்கள், கூத்திகள், பெருமைக்குரிய இசையறிஞர்கள், இசைக்கலைஞர்கள் எனப் பெரும் புதையலாய் அமைந்துள்ளது இச்சிற்பத்தொகுதி.

சுவர்ப்பகுதியில் தெற்கில் மூன்று கோட்டங்களும் மேற்கில் ஐந்து கோட்டங்களும் வடக்கில் மூன்று கோட்டங்களும் உள்ளன. தெற்குக் கோட்டங்களில் மீன், ஆமை, பன்றி ஆகிய திருத்தோற்றங்களில் விஷ்ணு இடம்பெற்றுள்ளார். மூன்று தோற்றங்களிலும் பின்கைகள் சங்கு, சக்கரம் கொள்ள, மீன் தோற்றத்தின் முன்கைகளில் வலப்புறம் கத்தி. இடக்கை கடகத்தில் உள்ளது. பிற இரண்டு தோற்றங்களிலும் வல முன் கை காக்கும் குறிப்பில் அமைய, இட முன் கை உருள்பெருந்தடி மீது உள்ளது.

மேற்குக் கோட்டங்களிலுள்ள நரசிம்மர், வாமனர், பரசுராமர், இராமர், பலராமர் இவர்களுள் நரசிம்மர் மட்டுமே நான்கு கைகள் பெற்றுள்ளார். பின்கைகளில் சங்கு, சக்கரம் அமைய, முன்கைகள் காக்கும், அருட்குறிப்பில் உள்ளன. வாமனரின் வலக்கை நெகிழ்ந்திருக்க, இடக்கை உருள்தடியின் மீது உள்ளது. பரசுராமரின் வலக்கை கரண்டி ஏந்தியிருக்க, இடக்கை கடியவலம்பிதமாக உள்ளது. இராமரின் கைகளில் அம்பும் வில்லும் உள்ளன. பலராமர் வலக்கையில் கலப்பை கொண்டு இடக்கையை நெகிழ்த்தியுள்ளார். வடக்குக் கோட்டங்களில் இரண்டில் கண்ணனும் ஒன்றில் கல்கி திருத்தோற்றமும் உள்ளன. கல்கியின் பின்கைகளில் சங்கு, சக்கரம் அமைய, முன்கைகள் கத்தியும் கேடயமும் கொண்டுள்ளன.

## கல்வெட்டுகள்

இக்கோயிலில் இருந்து நடுவண் அரசின் கல்வெட்டுத் துறையால் மூன்று கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள், சடையவர்மர் சுந்தரபாண்டியரின் பதினெட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு குலோத்துங்க சோழ வளநாட்டு நறையூர் நாட்டு நறையூரில் உலகுய்ய நின்றருளின எம்பெருமானுக்கு திருநாமத்துக்காணியாக ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மேலூர் நாட்டு மணல்பாக்கத்தை சேர்ந்த மணல்பாங்கிழான் அரையன் திருவம்பலச் சொக்கனான பாண்டிய தரையன் நிலம் விற்ற தகவலைத் தருகிறது 6

கி. பி. 1574ல் வெட்டப்பட்டுள்ள கிருஷ்ணதேவ மகாராயரின் கல்வெட்டு தொண்டைமண்டலத்து அரிகண்டபுரம் வாழ்களப்பாளன் திருவேங்கடமுடையார் வடமலை அண்ணகள் வேண்டுகோளை ஏற்றுச் சோழமண்டலத்துத் திருநறையூரில் உள்ள இறைவன், இறைவி, ஸ்ரீராமன் பயன்பெறுமாறு சோடி, சூலவரி, புறவரி, கல்லணை நாட்டுக் காணிக்கை, இராயசவர்த்தனை முதலான வரிகளை மன்னர் ஒதுக்கியதாகக் கூறுகிறது.7 மூன்றாம் கல்வெட்டு ரெங்கப்பையன் மண்டபத்தைச் சுட்டுகிறது.

## குறிப்புகள்

1. நாலாயிர திவ்வியப் பிரபந்தம் 1078, 1329, 1470, 1478-1577, 1611, 1659, 1852, 2067, 2068, 2673, 2674.

2. ஆய்வு நாட்கள் 12. 2. 1983, 10. 8. 1991, 24. 12. 2000, 24. 10. 2009. உடனிருந்து உதவிய நிருவாக அலுவலர் வெ. இராதா கிருஷ்ணன், மேலாளர் ம. சந்திரபோசு, பட்டாச்சாரியார் ப. கோபிநாதன் ஆகியோர் நன்றிக்குரியவர்கள்.

3. ARE 1927 : 287.

4. மு. நளினி, பாதைகளைத் தேடிய பயணங்கள், பக். 32 - 33.

5. இக்கல்வெட்டைக் கண்டறிந்தவர் பேராசிரியர் முனைவர் மு. நளினி.

.

6. ARE 1931-32:132.

7 ARE 1931-32:133.

-------------------------------------------

# 10. குடவாயில்

கும்பகோணம் திருவாரூர்ப் பெருவழியில் 15 கி. மீ. தொலைவில் நன்னிலம் வட்டத்தில் அமைந்துள்ளது குடவாயில். இங்குள்ள பாடல் பெற்ற1 கோணேசுவரர் கோயிலின் மேற்குப் பார்த்த நுழைவாயிலாக உள்ள ஒரு நிலைக் கோபுரம் கபோத பந்தத் துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத் தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுப் போதிகை தாங்கும் கூரையுறுப்புகள் கொண்டு, மேலே வேதிகையும் கர்ணகூடங்களும் பெருஞ்சாலையும் பெற்று அமைந்துள்ளது 2 கர்ணகூடங்களில் வடபுறம் பிள்ளையாரும் தென்புறம் முருகனும் அமைய, பெருஞ்சாலையின் வட, தென்பிரிவுகளில் முறையே சண்டேசுவரரும் கலைமகளும் இடம்பெற, நடுப் பகுதியில் விடையின்மீது இவர்ந்த சிவபெருமானும் உமையும் காட்டப்பட்டுள்ளனர்.

துணைத்தளத்தின் கண்டப்பகுதியில் மேற்கிலும் கிழக்கிலும் சிற்பங்கள் உள்ள போதும், சுவர்களிலுள்ள கோட்டப் பஞ்சரங்கள் வெறுமையாக உள்ளன. கோபுரத்தை ஒட்டித் தென்மேற்கில் சிறிய அளவிலான பிள்ளையார் திருமுன். வெளிச்சுற்றின் மேற்குப்பகுதியில் விரியும் நடைமண்டபக் கூரையை இரு சதுரப் பெருங்கட்டுத் தூண்கள் தாங்குகின்றன. கீழ்ச்சதுரங்கள் நாகபந்தம் கொள்ள, மேலே பூமொட்டுப் போதிகைகள். மண்டபத்தின் வடபுறம் தென்பார்வையாக இறைவி பெரியநாயகியின் திருமுன் அமைந்துள்ளது.

### பெரியநாயகி வளாகம்

பெருமண்டபம், முன்மண்டபம், முகமண்டபம், இருதள வேசர விமானம் என அமைந்துள்ள இத்திருமுன்னின் பெருமண்டபம் கபோதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், கபோதம் பெற்று அமைய, முன்மண்டபம், முகமண்டபம், விமானக் கீழ்த்தளம் இவை பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், கபோதம் கொண்டு காட்சிதருகின்றன.

விமானம், முகமண்டபச் சுவர்களிலுள்ள கோட்டப் பஞ்சரங்கள் வெறுமையாக உள்ளன. சிறிய அளவில் இரண்டாம் தளம் பெற்றுள்ள விமானத்தின் கீழ்த்தள ஆரமும் கிரீவகோட்டங் களும் சுதையுருவங்களால் நிரப்பப்பட்டுள்ளன.

**சோமாஸ்கந்தர்**

வண்டிக்கூடு கூரை பெற்றுள்ள பெருமண்டபத்தின் மேற்கில் சோமாஸ்கந்தர் தொகுதியும் தனி உமையும் இடம் பெற்றுள்ளனர். சடைமகுடம், மகர, பனையோலைக் குண்டலங்கள், முப்புரிநூல், உதரபந்தம், சவடி, தோள், கை வளைகள், சிற்றாடை அணிந்து சுகாசனத்தில் அமர்ந்திருக்கும் இறைவனின் வலக்கை காக்கும் குறிப்புக் காட்ட, இடக்கை கடகத்தில் உள்ளது. பின்கைகளில் மான், மழு. அருகிலுள்ள அம்மை குண்டலங்களற்ற நீள்செவிகளுடன் சடைமகுடராய்ப் பட்டாடை. அணிந்து சுகாசனத்தில் உள்ளார். இரண்டு கைகளும் கடகத்தில் உள்ளன.

இருவருக்கும் இடையே நிற்கும் முருகன் சடைமகுடம், பனையோலைக் குண்டலங்கள், ஸ்வர்ணவைகாக்ஷம் பெற்று கைகளில் மலர்களுடன் காட்சிதருகிறார். நின்றகோலத்தில் உள்ள தனி உமை கரண்டமகுடம், மகரகுண்டலங்கள், தோள், கடக, கை வளைகள், சரப்பளி, பட்டாடை அணிந்து வலக் கையைக் கடகத்தில் இருத்தி, இடக்கையை நெகிழ்த்தி உள்ளார்.

**முன்மண்டபம்**

முன்மண்டப வாயிலின் இருபுறத்தும் நிற்கும் சுதையாலான பெண் காவலர்கள் பின்கைகளில் வலப்புறம் மழுவும் இடப்புறம் பாசமும் கொண்டு முன்கைகளில் ஒரு கையைக் கடகத்திலும் மறு கையை கதையின் மீது இருத்தியவாறும் காட்சி தருகின்றனர். வாயிலின் மேற்பகுதியை இருபுறமும் சாமரப் பெண்களுடன் இறைவி அமர்ந்திருக்கும் வளைவு அலங்கரிக்கிறது. நந்தியும் பலித்தளமும் இடம்பெற்றுள்ள முன்மண்டபத்தின் வடகிழக்கில் அம்மையின் உற்சவத் திருமேனி காணப்படுகிறது. சடைமகுடம், மகரகுண்டலங்கள், சரப்பளி, பட்டாடை, இடைக்கட்டு, முப்புரிநூல் அணிந்துள்ள இறைவி பெரிய நாயகியின் பின்கைகளில் அக்கமாலையும் தாமரையும் உள்ளன.

முன்கைகளில் வலக்கை காக்கும் குறிப்புக் காட்ட, இடக்கை கடியவலம்பிதமாக உள்ளது.

### இரண்டாம் கோபுரம்

கோயிலின் இரண்டாம் வாயில் முத்தளக் கோபுரமாக அமைந்துள்ளது. கபோதபந்தத் துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, எண்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரை யுறுப்புகள் எனக் கீழ்த்தளம் அமைய, மேலே ஆரஉறுப்புகளும் மேற்றளங்களும் கிரீவம், சிகரம் இவையும் உள்ளன. சுவர்களின் கோட்டப் பஞ்சரங்களில் சிற்பங்கள் இல்லை.

### மாளிகை

கோபுரத்தை அடுத்து விரியும் மேற்கு மாளிகையின் வட புறத்தே கலைமகள், யானைத்திருமகள் அமைய, தென்புறத்தே நால்வர், பரவை, கோச்செங்கணான், எழுவர் அன்னையர் சிற்பங்கள் உள்ளன. அன்னையர் அனைவரும் சுகாசனத்தில் வல முன் கையைக் காக்கும் குறிப்பில் காட்டி, இட முன் கையைத் தொடையில் வைத்துள்ளனர். சாமுண்டி தவிர்த்த பிற அனைவருமே கச்சணிந்துள்ளனர்.

கிரீடமகுடம் அணிந்துள்ள வைணவி பின்கைகளில் சங்கு, சக்கரம் கொண்டுள்ளார். சடைமகுடம் அணிந்துள்ள மகேசுவரி மழு, மான் பெற்றுள்ளார். சடைமகுடத்துடன் காட்சி தரும் நான்முகியின் பின்கைகளில் அக்கமாலை, குண்டிகை. வராகி கலப்பையும் பாசமும் கொண்டு கரண்டமகுடத்துடன் உள்ளார். கிரீடமகுடம் அணிந்துள்ள இந்திராணி வலப் பின் கையில் வஜ்ரமும் இடப் பின் கையில் சக்தியும் கொண்டுள்ளார். கரண்டமகுடத்துடன் காணப்படும் கௌமாரியின் இரண்டு கைகளிலும் சக்தியே காணப்படுகிறது. சடைப்பாரத்துடன் உள்ள சாமுண்டி வலப் பின் கையில் முத்தலை ஈட்டியும் இடப் பின் கையில் தலையோடும் ஏந்தியுள்ளார்.

### சுற்றுத் திருமுன்கள்

வடமேற்கில் உள்ள ஒருதள வேசரத் திருமுன்னில் வள்ளி தெய்வானையுடன் முருகன் காட்சிதருகிறார். கரண்டமகுடத்

துடன் உள்ள தேவியரில் தெய்வானை இடக்கையில் மலரேந்தி வலக்கையை நெகிழ்த்தியுள்ளார். கச்சற்ற மார்பகங்களுடன் காட்சிதரும் வள்ளி வலக்கையில் மலரேந்தி, இடக்கையை நெகிழ்த்தியுள்ளார். கரண்டமகுடம், சரப்பளி, பட்டாடையுடன் காட்சிதரும் முருகனின் பின்கைகளில் சக்தியும் வஜ்ரமும் உள்ளன. வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இட முன் கை அருட்குறிப்பில் உள்ளது. வடக்கில் உள்ள ஒருதள வேசர விமானத்தில் சண்டேசுவரரும் தென்மேற்கில் உள்ள ஒருதள வேசர விமானத்தில் பிள்ளையாரும் மேற்கிலுள்ள ஒருதள நாகர விமானத்தில் தென்பார்வையாக ஆடவல்லானும் இடம் பெற்றுள்ளனர். கிழக்குச் சுற்றுமாளிகை வெறுமையாக உள்ளது.

**ஆடவல்லான்**

ஆடவல்லான் தளத்தில் காணப்படும் ஆடவர் சிற்றாடையும் தோள், கை வளைகளும் அணிந்து பின் கொண்டையுடன் கைகளை வணக்க முத்திரையில் வைத்துள்ளார். அவர் அருகே காணப்படும் எழுத்துப் பொறிப்பு, அவரைக் களக்காட்டைச் சேர்ந்த மாலை தாழ் மார்பனாக அடையாளப்படுத்துகிறது.3 வலக்காலை முயலகன் மீது இருத்தி, இடக்காலை வலப்புறம் வீசி ஆனந்தத் தாண்டவம் நிகழ்த்தும் இறைவனின் சடை மகுடத்தில் நெருஞ்சிப் பூக்களும் படமெடுத்த பாம்பும் பிறையும் காட்சிதருகின்றன. இருபுறத்தும் விரிந்துள்ள சடைகளில் வழக்கமாகக் காணப்படும் கங்கை இடம்பெறவில்லை.

சரப்பளி, உருத்திராக்கமாலை, சவடி, இடச்செவியில் பனையோலைக் குண்டலம், ஆட்டத்திற்கேற்ப இடப்புறம் பறக்கும் உதரபந்த முடிச்சுத்தொங்கல்கள், முப்புரிநூல், சிற்றாடை அணிந்து வலக்கையைக் காக்கும் குறிப்பிலும் இடக்கையை வேழமுத்திரையிலும் கொண்டுள்ள இறைவனின் பின்கைகளில் உடுக்கையும் தீயகலும் உள்ளன. வலச்செவி வெறுஞ் செவியாக அமைய, வலக்கையைப் பாம்பொன்று சுற்றியுள்ளது.

இறைவனின் இடப்புறம் சடைமகுடம், தோள்மாலை, சரப்பளி, அரும்புச்சரம், முப்புரிநூல், தோள், கடக, கை வளைகள், பட்டாடை அணிந்து வலக்காலினும் இடக்காலை சற்றே மடக்கி முன் நிறுத்தி நிற்கும் உமையன்னையின் வலக்கை கடகத்திலிருக்க, இடக்கை நெகிழ்ந்துள்ளது.

**வெற்றுத்தளம்**

சுற்றின் நடுவில் காணப்படும் மாடக்கோயிலின் வெற்றுத் தளம் கிழக்கில் 3. 50 மீ உயரம் பெற்றுள்ளது. பாதபந்தத் தாங்கு தளத்தின் கண்டம், பட்டிகை இவை மட்டுமே வெளித்தெரிய பிற உறுப்புகள் நிலத்தில் புதைந்துள்ளன. மேலே வேதிகைத் தொகுதி. நான்முகத் தூண்கள் சூழ்ந்த சுவரும் வெட்டுத்தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகளும் கபோதமும் பெற்றுள்ள வெற்றுத்தளத்தின் மேல் இறைவன் கோயில் வளாகத்தைச் சூழ வருமாறு இரண்டடி உயரப் பிடிச் சுவர் அமைந்துள்ளது. வலபியில் உள்ள பூதவரி, கபோதக் கூடு வளைவுகள் இவற்றில் காணப்படும் பூதங்களின் விளையாட்டு, ஆடற்பெண், உச்சிஷ்டகணபதி உள்ளிட்ட சில சிற்பங்கள் குறிப்பிடத்தக்க சிறப்புடன் உள்ளன. கோணேசராக அறியப்படும் குடவாயில் இறைவனின் விமானம், முகமண்டபம் இவற்றைத் தாங்கும் வெற்றுத்தளத்தின் அமைப்பிலிருந்து வேறுபட்டு அமைந்துள்ள பெருமண்டபம், முன்மண்டபம் இவற்றிற்கான வெற்றுத்தளம் தாங்குதளமோ, தூண்களோ அற்ற நெடுஞ் சுவராக கூரையுறுப்புகள் மட்டும் பெற்று அமைந்துள்ளது.

விமானத்தை அடைவதற்கான படிக்கட்டுகள் தென்மேற்கில் உள்ளன. பதினெட்டுப் படிகள் இரண்டு நிலைகளில் அமைந்துள்ள இப்படிவரிசையின் அருகே உள்ள ஆடவல்லான் திருமுன் வாயில் இடப்புற நிலையிலிருந்து பதினேழாம் நூற்றாண்டினதாகக் கொள்ளத்தக்க புதிய கல்வெட்டொன்று கண்டறியப்பட்டது. 4 பிலவ ஆண்டு ஆவணித்திங்கள் இருபத்து நான்காம் நாள் வெட்டப்பட்டுள்ள இக்கல்வெட்டு, குடவாயில் வடக்கு வீதியில் இருந்த சுப்பிரமணிய பிள்ளையின் மனைவி தெய்வானை ஆச்சியும் சுப்பிரமணிய பிள்ளையின் தம்பி அம்பல வாணப் பிள்ளையின் மனைவி வள்ளியம்மை ஆச்சியும் இணைந்து இத்திருநிலையை அமைத்துள்ளனர் எனும் தகவலைத் தருகிறது.

வெற்றுத்தளத்தின் தென்சுவர்க் கோட்டத்தில் பெற்றுள்ள ஆலமர்அண்ணல் சடைப்பாரத்துடன் வீராசனத் தில் உள்ளார். வலக்கால் முயலகன் மீது உள்ளது. வலப் பின் கை அக்கமாலையும் பாம்பும் கொள்ள, இடப் பின் கையில்

தீச்சுடர். வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட,இடமுன் கை ஆகூய வாதத்தில் உள்ளது. உதரபந்தமும் கழுத்தணிகளும் சிற்றாடையும் அணிந்துள்ள இறைவனின் வலச்செவியில் மகர குண்டலம், இடச்செவியில் பனையோலைக் குண்டலம், இறைவன் அமர்ந்துள்ள இருக்கையின் கீழ்ப்பகுதியில் வணங்கிய நிலையில் முனிவர்கள்.

**விமானம்**

இருதள வேசரமாக அமைந்துள்ள கோணேசர் விமானத்தின் கீழ்த்தளப் பத்திகள் அனைத்துமே புறந்தள்ளியுள்ளன. உபானம் பெற்ற பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, எண்முக அரைத்தூண்கள் அணைத்த கர்ணபத்திகள், இந்திர காந்த அரைத்தூண்கள் அணைத்த சாலைப்பத்திகள், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், கூடுவளைவுகளுடனான கபோதம் என அமைந்துள்ள இத்தளத்தின் ஒடுக்கங்களில் சுவர்ப்பஞ்சரங்கள் காட்டப்பட்டுள்ளன. வேதிகைத்தொகுதிவரை பத்திகளின் கட்டமைப்பைப் பின்பற்றும் இச்சுவர்ப் பஞ்சரங்கள் தொடர்ந்து இரு நான்முக அரைத் தூண்கள், வெட்டுத் தரங்கப் போதிகைகள், கூரையுறுப்புகள், கபோதம், வேதிகை, கிரீவம், சிகரம் பெற்றுப் பத்திகளின் வலபியளவில் முடிகின்றன.

சாலைப்பத்திகளில் காட்டப்பட்டுள்ள மகரதோரணத் தலைப்பிட்ட கோட்டங்களை உருளை அரைத்தூண்கள் அணைத்துள்ளன. முத்திசைக் கோட்டங்களும் வெறுமையாக உள்ளன. 6.73 மீ. பக்கமுடைய சதுரமாக அமைந்துள்ள கீழ்த் தளத்தின் மீது ஆரமும் மேலே உயரக் குறைவான இரண்டாம் தளமும் வேசர கிரீவம், சிகரம் இவையும் அமைந்துள்ளன. மேற்குச் சாலையில் உத்குடியிலும் கிரீவத்தில் சுகாசனத்திலும் விஷ்ணு அமைய, வடக்குச் சாலையில் ஒருபாத மூர்த்தியும் வடக்கு கிரீவகோட்டத்தில் சுகாசனத்தில் நான்முகனும் உள்ளனர். தெற்குச் சாலையில் வீராசனத்தில் உள்ள ஆலமர்அண்ணல், கிரீவகோட்டத்தில் வீணையேந்தியுள்ளார். கிழக்குச் சாலையில் சுகாசனத்தில் அம்மையப்பரும் கிரீவகோட்டத்தில் முருகனும் இடம்பெற்றுள்ளனர்.

**மண்டபங்கள்**

விமானத்தின் கட்டமைப்பைப் பெருமளவிற்குப் பின்பற்றி உள்ள முகமண்டபத்தின் சாலைப்பத்தி மட்டுமே புறந்தள்ளியுள்ளது. சாலைக் கோட்டங்கள் வெறுமையாக உள்ளன தெற்குச் சாலைப்பத்தியை அடுத்த கர்ணபத்தி ஒடுக்கமாக அமைந்து சாளரம் பெற்றுள்ளது. தெற்கில் முன்றிலுடனான சாளாரம் பெற்றுள்ள பெருமண்டபம் கபோதபந்தத் துணைத்தளம் பெற்றுள்ளது. அதன் கண்டப்பகுதியில் அருமையான ஆடற்சிற்பங்கள் உள்ளன. மேலே, எண்முக அரைத்தூண்கள் சூழ்ந்த சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றுள்ள இதன் முன் உள்ள முன்மண்டபம் தெற்கிலும் மேற்கிலும் வாயில்கள் பெற்றுள்ளது. இம்மண்டபத்தின் தாங்கு தளம் பத்மபந்தமாக அமைந்துள்ளது. மேலே வேதிகைத்தொகுதி, நாகபந்தம் பெற்ற எண்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், வெட்டுத்தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் அமைந்துள்ளன.

முச்சதுர, இருகட்டுத் தூண்கள் பூமொட்டுப் போதிகைகளின் துணையுடன் கூரை தாங்கும் முன்மண்டபம் வெறுமையாக உள்ளது. பெருமண்டப வாயிலைச் சுதையாலான காவலர்கள் பக்கத்திற்கொருவராகக் காக்கின்றனர். பின்கைகளால் போற்றியும் வியப்புணர்த்தியும் நிற்கும் காவலர்களுள் தெற்கர்இட முன் கையால் அச்சுறுத்தி, வல முன் கையை உருள்பெருந்தடியின் மீது இருத்த, வடக்கர் வல முன் கையால் அச்சுறுத்தி, இட முன் கையை உருள்பெருந்தடியின் மீது வைத்துள்ளார். முச்சதுர, இருகட்டுத் தூண்களும் உருளைத் தூண்களும் பூமொட்டுப் போதிகைகளின் உதவியுடன் கூரை தாங்கும் பெருமண்டபத்தில் நந்தி ஒன்றும் பலித்தளங்கள் இரண்டும்உள்ளன.

அதன் தெற்கிலும் தென்கிழக்கிலும் கட்டப்பட்டுள்ள திண்ணை வெறுமையாக உள்ளது. இருவரிசை உருளைத் தூண்கள் வெட்டுத் தரங்கப் போதிகைகளுடன் கூரை தாங்கும் முகமண்டபம் வெறுமையாக உள்ளது. கருவறையில் சதுர ஆவுடையாரில் உயரமான உருளைப் பாணம் பெற்ற இலிங்கத் திருமேனி இடம்பெற்றுள்ளது.

## கல்வெட்டுகள்

இக்கோயிலில் இருந்து துணுக்குக் கல்வெட்டுகள் பலவும் மூன்றாம் குலோத்துங்கரின் பதினைந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்றும் படியெடுக்கப்பட்டுள்ளன. இறைவிக்கு அணிகலன் செய்வதற்காகக் குற்றாலத்தைச் சேர்ந்த திருச்சிற்றம்பலமுடையாரான காராணை விழுப்பரையர் பதின் கழஞ்சுப் பொன்னளித்த தகவலைத் தரும் மூன்றாம் குலோத்துங்கரின் கல்வெட்டு, குடவாயில் கோயிலைப் பெருந்திருக்கோயில் எனக் குறிப்பிடுகிறது .5

அச்சுததேவ மகாராயர் காலத்தில் வெட்டப்பட்டிருக்கும் இரண்டு கல்வெட்டுகளுள் ஒன்று செவ்வப்ப நாயக்கர், வையப்ப நாயக்கர் ஆகிய இருவரின் அன்னை, தந்தை நன்மைக்காகப் பெருந்திருக்கோயில் பெரியநாச்சி அம்மையின் திருஆபரணத் திருநாள் செலவினங்களுக்காக நிலக்கொடை அளிக்கப்பட்ட தகவலைத் தருகிறது. 6

மற்றொரு கல்வெட்டு, செவ்வப்ப நாயக்கர், வையப்ப நாயக்கர் ஆகிய இருவரின் அன்னை, தந்தை நன்மைக்காக இறைவனுக்குச் செண்பகம் உட்பட்ட மலர்களிட வாய்ப்பாக நந்தவனம் அளிக்கப்பட்ட செய்தியைப் பகிர்ந்துகொள்கிறது.7 பல்வேறு துணுக்குகளாகச் சிதறியிருக்கும் இரண்டு கல்வெட்டுகளுள் ஒன்று, தோப்புக்கு இறைவன் எழுந்தருளத் திருவீதி அமைக்கப்பட்ட தகவலைத் தருகிறது. மற்றொன்று, அமண் பள்ளி, பள்ளிவளாகம், குளம் இவற்றிற்கான நிலக்கொடை தொடர்பான அரசஆணையாக அமைந்துள்ளது. பள்ளி வாரியப் பிடாரர்களுள் புஷ்பசேனப் பிடாரர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. தெங்கூரான திருச்சிற்றம்பலநல்லூர் உள்ளிட்ட பல ஊர்ப்பெயர்களும் கையெழுத்தாளர்களாக அரசு அலுவலர்களின் பெயர்களும் இக்கல்வெட்டில் இடம்பெற்றுள்ளன.8

## குறிப்புகள்

1.சம்பந்தர் 2: 22, 58. 'பெருங்கோயில், எழில்கொள் மாடக் குடவாயில்' எனும் சம்பந்தரின் சொல்லாட்சிகள் கவனத்தில் கொள்ளத்தக்கன.

2. ஆய்வு நாட்கள் 14. 12. 1982, 24.3, 2001, 30. 8. 2008, 229 2009, 23.10.2009.

உடனிருந்து

உதவிய திரு. எஸ். தர்மராஜன், திரு. அ. இராமகிருஷ்ணன் ஆகியோருக்கு உளமார்ந்த நன்றி. இக்கோயில் பற்றிய முதல் கட்டுரை பிப்ருவரி 1983, 'திருக்கோயில்' இதழில் வெளியானது.

3. எம். பாலசுப்பிரமணியம், குடவாயிற் கோட்டம், ப. 59.
4. இக்கல்வெட்டைக் கள ஆய்வின்போது பேராசிரியர் முனைவர் மு. நளினி கண்டறிந்தார். வரலாறு 11, ப. 14. தினமணி 9.12. 2000.
5. நன்னிலம் கல்வெட்டுகள், தொகுதி -3, தொடர் எண் 1978 : 457.
6. நன்னிலம் கல்வெட்டுகள், தொகுதி -3, தொடர் எண் 1978 : 457.
7. நன்னிலம் கல்வெட்டுகள், தொகுதி -3, தொடர் எண் 1978 : 457.
8. நன்னிலம் கல்வெட்டுகள், தொகுதி -3, தொடர் எண்கள்1978: 460-467.

---------------------------------------

# 11. நன்னிலம்

கும்பகோணம் திருவாரூர்ப் பெருவழியில் 30 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது நன்னிலம். இவ்வூரில் அமைந்துள்ள பாடல் பெற்ற 1 மதுவனேசுவரர் திருக்கோயில்' 2 துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத் தூண்கள் தழுவிய சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரை, கபோதம் பெற்றுள்ள எளிய நுழைவாயிலுடன் தொடங்குகிறது. கூரையின் மேல் தெற்கிலும் வடக்கிலும் கர்ணகூடங்களும் நடுவில் பெருஞ்சாலையும் சுதையுருவங்களுடன் காட்டப்பட்டுள்ளன. பெருஞ்சாலையில் சிவபெருமானும் உமையும் அமர்ந்திருக்க, வலப்புறம் பிள்ளையாரும் இடப்புறம் முருகனும் நின்றகோலத்தில் காட்சிதருகின்றனர்.

### வெளிச்சுற்று

வாயிலுள் நுழைந்ததும் வெளிச்சுற்றின் தென்கிழக்கில் மடைப்பள்ளி அமைய, வடபுறத்தே உள்ள அறைகளில் ஒன்பான் கோள்களும் பைரவர், சூரியன், சனீசுவரன் சிற்பங்களும் உள்ளன. வாயிலுக்கும் மாடக்கோயிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் பிள்ளையார் சிற்பமும் பலித்தளம், கொடிமரம், நந்தி மண்டபம் இவையும் அமைந்துள்ளன.

### சுற்றாலை விமானங்கள்

வளாகத்தின் மேற்கிலுள்ள ஒருதள நாகர விமானங்களில் தென்மேற்கில் சித்தி விநாயகரும் மேற்கில் வள்ளி, தெய்வானையுடன் சுப்பிரமணியரும் உள்ளனர். வடமேற்கில் உள்ள ஒருதளத் திராவிட விமானத்தில் யானைத்திருமகள் இடம்பெற, வடக்கிலுள்ள ஒருதளத் திராவிட விமானத்தில் சண்டேசுவரியுடன் வலக்கையில் மழுவேந்திய சண்டேசுவரர் சுகாசனத்தில் உள்ளார். கரண்டமகுடம், பட்டாடை அணிந்து வலக்கையில் மலருடன் சண்டேசுவரியும் சுகாசனத்தில் உள்ளார். அவரது இடக்கை கடகத்தில் உள்ளது. கரண்டமகுடத்துடன் இடம்புரியாக உள்ள சித்தி விநாயகரின் பின்கைகளில் அங்குசமும் பாசமும் இருக்க, முன்கைகளில் வலப்புறம் தந்தம், இடப்புறம் மோதகம்.

கரண்டமகுடம், பட்டாடை இவற்றுடன் பின்கைகளில் வஜ்ரம், சக்தி கொண்டு முன்கைகளில் காக்கும் குறிப்பும் அருட்குறிப்பும் காட்டி நிற்கும் முருகனின் பின்னால் மயில் உள்ளது. வலப்புறமுள்ள தெய்வானை இடக்கையில் மலரேந்தி, வலக்கையை நெகிழ்த்தியுள்ளார். இடமிருக்கும் வள்ளி வலக் கையில் மலரேந்தி இடக்கையை நெகிழ்த்தியுள்ளார்.

**மதுவனேசுவரி கோயில்**

வளாகத்தின் வடபுறத்தே பெருமண்டபம், முன்மண்டபம், முகமண்டபம், ஒருதள வேசர விமானம் இவற்றுடன் மதுவனேசுவரி கோயில் கொண்டுள்ளார். உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், கபோதம் பெற்றுள்ள பெருமண்டபம், முன்மண்டபம் இவை வெறுமையாக உள்ளன.

பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முகஅரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், கபோதம் பெற்றுள்ள விமானத்தின் சுவர்க் கோட்டங்களும் அதே கட்டமைப்பில் உள்ள முகமண்டபத் தின் கோட்டங்களும் வெறுமையாக உள்ளன. கருவறையில் கரண்டமகுடம், கழுத்தணிகள், பட்டாடை இவற்றுடன் இலங்கும் இறைவி முன்கைகளில் காக்கும் குறிப்பும் அருட்குறிப்பும் காட்டி, பின்கைகளில் அக்கமாலையும் மலர் மொட்டும் ஏந்தி சமபங்கத்தில் காட்சிதருகிறார்.

**வெற்றுத்தளம்**

உபானம், உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், சதுரப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், கபோதம் என 3. 28 மீ. உயரத்திற்கு அமைந்துள்ள வெற்றுத்தளம் செங்கல் கட்டுமானமாய் உள்ளது. மேலே மாடக்கோயில் வளாகத்தைச் சூழ அமைந்த கைப்பிடிச் சுவர். வெற்றுத்தளத்தின் விமானம் சார்ந்த பகுதியில் தெற்கிலும் வடக்கிலும் காட்டப்பட்டுள்ள கோட்டங்களில் வடகோட்டம் வெறுமையாக உள்ளது. தென்கோட்டத்தில் முயலகன் மீது வலப்பாதத்தை இருத்தி, மண்டையோடு தங்கிய சடைப்பாரம், உதரபந்தம் பெற்று, வீராசனத்தில் உள்ள ஆலமர்அண்ணலின்

பின்கைகளில் பாம்பும் தீச்சுடரும். வலப் பின் கையில் அக்கமாலையும் உள்ளது. வல முன் கை சின்முத்திரையில் அமைய, இட முன் கை சுவடி ஏந்தியுள்ளது. வெற்றுத்தளத்தின் தென்கிழக்கில் அமைந்துள்ள பதினேழு படிகள் மாடக்கோயிலுக்கு அழைத்துச் செல்கின்றன. இப்படிகளின் வடபுறத்தே உள்ள மண்டபத்தில் இலிங்கத்திருமேனியராய் பிரம்மபுரீசுவரர் எழுந்தருளியுள்ளார். அதற்கும் சற்றுத் தள்ளி அமைந்துள்ள ஒருதள வேசர விமானத்தில் இலிங்கத்திருமேனியராய் அகத்தீசுவரர் காட்சிதருகிறார்.

### சோமாஸ்கந்தர் திருமுன்

வெற்றுத்தளத்தின் மீது பெருமண்டபம், முன்மண்டபம், முகமண்டபம், ஒருதள வேசர விமானம் என அமைந்துள்ள மாடக்கோயிலின் தென்புறத்தே முகமண்டபம், ஒருதளத் திராவிட விமானம் பெற்ற சோமாஸ்கந்தர் திருமுன் விளங்குகிறது. பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் கபோதம் பெற்றுச் செங்கல் கட்டுமானமாய் உள்ள சோமாஸ்கந்தர் விமானத்தின் முப்புறக் கோட்டப் பஞ்சரங்களும் வெறுமையாக உள்ளன. முகமண்டபம் விமானத்தின் கட்டமைப்பை ஒத்துள்ளது.

### மதுவனேசுவரர் விமானம்

பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, எண்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், கபோதம் பெற்றுள்ள இந்த ஒருதள வேசர விமானம் 4.71 மீ. பக்கமுடைய சதுரமாக அமைந்துள்ளது. சுவர்க் கோட்டங்களில் தென்புறத்தே ஆலமர்அண்ணலும் மேற்கில் இலிங்கோத்பவரும் வடக்கில் நான்முகனும் காட்சி தருகின்றனர். வலக்கையைத் தலைக்கு அணையாகத் தந்து வல ஒருக்கணிப்பில் உள்ள முயலகனின் மார்புக்குக் கீழே வலத் திருவடியை இருத்தி, வீராசனத்தில் உள்ள ஆலமர்அண்ணலின் பின்கைகளில் பாம்பு சுற்றிய உடுக்கையும் பாசமும் உள்ளன. இட முன் கை முழங்கால் மேல் தாழ, வல முன் கை அக்கமாலையுடன் சின்முத்திரையில் உள்ளது.

பின்கைகளில் மான், மழு ஏந்தியுள்ள இலிங்கோத்பவரின் வல முன் கை காக்கும் குறிப்பில் இருக்க, இட முன் கை கடியவலம்பிதமாக உள்ளது. வடக்கில் உள்ள நான்முகன் பின் கைகளில் அக்கமாலை, குண்டிகை ஏந்தி, பதக்கம் வைத்த மாலையுடன் வலக்கையில் காக்கும் குறிப்புக் காட்டி. இடக் கையைக் கடியவலம்பிதமாகக் கொண்டுள்ளார்.

.

கிரீவகோட்டங்களில் தெற்கில் வீராசனத்தில் ஆலமர் அண்ணலும் மேற்கில் சுகாசனத்தில் தேவியருடன் விஷ்ணுவும் வடக்கில் தேவியருடன் தாமரையில் சுகாசனத்தில் நான்முக னும் உள்ளனர். வலப்பாதத்தை முயலகன் மீது இருத்தியுள்ள ஆலமர்அண்ணலின் பின்கைகளில் பாம்பு, உடுக்கை, தீச்சுடர் இவை உள்ளன. வல முன் கை சின்முத்திரையில் அமைய, இட முன் கை சுவடி ஏந்திய நிலையில் முழங்காலின் மீது இருத்தப்பட்டுள்ளது. பின்கைகளில் சங்கு, சக்கரம் ஏந்தி, கிரீடமகுடத் துடன் உள்ள விஷ்ணுவின் முன்கைகள் காக்கும் குறிப்பிலும் அருட்குறிப்பிலும் உள்ளன. நான்முகன் வழக்கம் போல் அக்கமாலையும் குண்டிகையும் கொண்டு, முன்கைகளை விஷ்ணுவை ஒப்பக் கொண்டுள்ளார்.

**முகமண்டபம்**

விமானத்தை ஒத்த கட்டமைப்பில் உள்ள முகமண்டபக் கோட்டங்களில் தென்புறத்தே உள்ள பிள்ளையார் பின்கைகளில் அங்குசம் பாசம் ஏந்தி நின்றகோலத்தில் இடம்புரியாகக் காட்சிதருகிறார். வல முன் கையில் தந்தம், இட முன் கையில் மோதகம். வடபுறத்தே உள்ள மகிடாசுரமர்த்தனியின் பின்கைகளில் சங்கு, சக்கரம் அமைய, வல முன் கை காக்கும் குறிப்புக் காட்டுகிறது. இட முன் கை கடியவலம்பிதமாக உள்ளது.

**பிற மண்டபங்கள்**

முன்மண்டபம், பெருமண்டபம் இவற்றின் புறச்சுவர்கள் உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், கூரையுறுப்புகள், கபோதம் பெற்றமைந்துள்ளன. தெற்கிலும் கிழக்கிலும் வாயில்கள் பெற்று முச்சதுர, இருகட்டுத் தூண்கள் தாங்கும் வண்டிக்கூடு கூரையுடன் அமைந்துள்ள பெருமண்டபத்தின் வடபுறம் ஒருதள நாகரமாக ஆடவல்லான்

திருமுன் அமைந்துள்ளது. திருமேனி இல்லாத அத்திருமுன்னில் ஆடவல்லான் ஓவியம் வரையப்பட்டுள்ளது. முச்சதுர, இரு கட்டுத் தூண்கள், எண்முகத் தூண்கள் தாங்கும் கூரையுடன் உள்ள முன்மண்டபத்தில் நந்தி இடம்பெற்றுள்ளது. மண்டபத் தின் வடபுறம் சுவரொட்டி அமைந்துள்ள திண்ணை வெறுமையாக உள்ளது.

முகமண்டப வாயிலின் தென்புறத்தே பிள்ளையாரும் வட புறத்தே முருகனும் அமைய, கருவறையில் சதுர ஆவுடையாரில் உருளைப்பாணம் பெற்ற இலிங்கத்திருமேனி இடம்பெற்றுள்ளது. பின்கைகளில் சத்தியும் வஜ்ரமும் பெற்றுள்ள முருகனின் முன்கைகள் காப்பு, அருள் முத்திரைகளில் உள்ளன. துளைக் கையால் இட முன் கை மோதகத்தைச் சுவைக்கும் பிள்ளையாரின் வல முன் கையில் தந்தம். பின்கைகளில் அங்குசம், பாசம். கல்வெட்டுகள்

இக்கோயிலில் இருந்து படியெடுக்கப்பட்டுள்ள இரண்டு' 3 கல்வெட்டுகளுள் கி. பி. ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் முற்சோழர் கல்வெட்டு, நாரண்ணன் என்பார் இக்கோயிலில் நந்தாவிளக்கொன்று ஏற்ற வாய்ப்பாகக் கோயில் அலுவலர் மூவரிடம் பன்னிரண்டு கழஞ்சுப் பொன் தந்த தகவலைக் கூறுகிறது. மற்றொரு கல்வெட்டு படிக்க முடியாத அளவிற்குப் பெரிதும் சிதைந்துள்ளது.

**குறிப்புகள்**

1. சுந்தரர் 7:98. 'கோடுயர் வெங்களிற்றுத் திகழ் கோச்செங்க

ணான்செய்கோயில்', 'பொன்னி நன்னீர்த்துறை வன்திகழ்

செம்பியர்கோன் நரபதி நன்னிலத்துப் பெருங்கோயில்'

எனும் பாடலடிகள் குறிப்பிடத்தக்கன.

2. ஆய்வு நாட்கள் 13. 2. 1982, 30. 8. 2008, 23. 10. 2009. இக்கோயில் பற்றிய முதல் கட்டுரை, 'திருநன்னிலத்துப் பெருங்கோயில்' எனும் தலைப்பில் 1982 ஜூலை - ஆகஸ்டு திருக்கோயில் இதழில் வெளியானது.

3. நன்னிலம் கல்வெட்டுகள் தொகுதி -2, 1978 : 234, 235.

## 12. அம்பர்

தஞ்சாவூர் மாவட்டம் மயிலாடுதுறை நன்னிலம் பெருவழியில் பூந்தோட்டத்திற்குத் தென்கிழக்கில் 3 கி. மீ. தொலைவில் காரைக்கால் செல்லும் சாலையில் அமைந்துள்ளது அம்பர். துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுப் போதிகை கள் தாங்கும் கூரையுறுப்புகள் எனக் கீழ்த்தளம் அமைய, மேலிரண்டு தளங்களும் ஆரஉறுப்புகளும் சுதையுருவங்கள் அற்றனவாய் வடிவெடுத்துள்ளன. முத்தளம் பெற்றுள்ள இந்தக் கோபுர வாயில் வழி உள்நுழைவாரை எதிர்கொள்கிறது பாடல் பெற்ற [1] அம்பர்ப் பெருந்திருக்கோயில். [2]

### அம்மன் கோயில்

சுற்றின் வடபுறத்தே தென்பார்வையாக உள்ள பூங்குழல் நாயகியின் விமானம் துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்ற ஒருதள வேசரமாக அமைந்துள்ளது. விமானச் சுவரில் முப்புறத்தும் உள்ள கோட்டப்பஞ்சரங்களும் கிரீவகோட்டங்களும் வெறுமையாக உள்ளன. விமானத்தின் முன்னுள்ள முகமண்டபம் உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், நான்முக அரைத் தூண்கள் தழுவிய சுவர், உத்திரம், வாஜனம், வலபி பெற்று, வண்டிக்கூடு கூரை கொண்டுள்ளது.

பெருமண்டபம் விமானம் போலவே தாங்குதளம், சுவர் பெற்றிருந்தபோதும் கூரை வண்டிக்கூடு அமைப்பிலேயே உள்ளது. அதன் முன்னுள்ள முன்றில் வெறுமையாக உள்ளது. எண்முகத் தூண்கள் தாங்கும் பெருமண்டபத்தின் வடக்குச் சுவரில் முகமண்டப வாயிலின் இருபுறத்தும் இரண்டு அறைகள் உள்ளன. ஆடிப்பூர அம்மனுக்கான மேற்கு அறை வெறுமையாக உள்ளது. கிழக்கு அறை பள்ளியறையாகப் பயன்படுகிறது. தூண்களற்ற முகமண்டபத்தை அடுத்துள்ள கருவறையில் இறைவி பூங்குழல்நாயகியாய்ப் பட்டாடை, சடைமகுடம், கழுத்தணிகள் இவற்றுடன் பின்கைகளில் அக்கமாலை, குண்டிகை ஏந்தி, முன் கைகளில் காக்கும் குறிப்பும் அருட்குறிப்பும் காட்டி நிற்கிறார்.

**வாகன மண்டபம்**

சுற்றின் கிழக்கில் கொடிமரமும் பலித்தளமும் பேரளவிலான நந்தியொன்றும் அமைய, வடகிழக்கில் வேள்விச்சாலையும் வாகன மண்டபமும் உள்ளன. செங்கல் கட்டுமானமாய் உள்ள வாகன மண்டபத்தின் முகப்பு, குடைவரைக் கால அமைப்பைப் பின்பற்றியுள்ளது. பக்கச் சுவரொட்டி இரண்டு அரைத்தூண்களும் நடுவில் இரு முழுத்தூண்களும் சதுரம், கட்டு, சதுரம் என்ற அமைப்பில் இம்மண்டபத்தின் முகப்பாகியுள்ளன. பாலி, பலகை பெற்றுள்ள இத்தூண்களின் மீதுள்ள மதலைகள் உத்திரம், வாஜனம், வலபி தாங்கக் கபோதமும் காட்டப்பட்டுள்ளது. முழுத்தூண்களின் தெற்கு முகத்தில் ஒரு கால் பஞ்சரங்கள் திகழ்கின்றன. அரைத்தூண்களில் இந்தப் பஞ்சரங்கள் அரையளவினவாய் இடம்பெற்றுள்ளன. முழுத் தூண்களின் பின்னால் அதே அமைப்பில் இரண்டு வரிசைகளில் மேலும் நான்கு முழுத்தூண்கள் அமைந்துள்ளன. மாறுபட்ட அமைப்புடைய இம்மண்டபம் கி.பி. பதினான்காம் நூற்றாண்டளவில் இப்பகுதியில் விளங்கிய கலைமரபுகளின் படப்பிடிப்பாக உள்ளது.

**சுற்றாலைத் திருமுன்கள்**

சுற்றின் தென்கிழக்கிலும் தென்மேற்கிலும் மேற்கிலும் வடக்கிலும் உள்ள ஒருதள நாகர விமானங்களில் பிள்ளையார்களும் தேவியருடன் முருகனும் ஜம்புகேசுவரரும் திகழ, வடமேற்கிலும் வடக்கிலும் உள்ள சபைக் கூரை போன்ற நாகர சிகரம் பெற்ற ஒருதள விமானங்களில் யானைத்திருமகளும் சண்டேசுவரரும் இடம்பெற்றுள்ளனர். தென்மேற்கில் உள்ள இடம்புரிப் பிள்ளையார்களுள் முதலாமவரும் மூன்றாமவரும் ஒன்று போல் உள்ளனர். பின்கைகளில் அங்குசம், பாசம். முன்கைகளில் தந்தம் மோதகம் கொண்டுள்ள இவர்களுள் மூன்றாமவரின் மகுடம் சற்று நீளமாக உள்ளது. நடுவில் உள்ளவர் முன்னவர்களை ஒத்திருந்தபோதும் இடம்புரித் துளைக்கையில் மோதகம் கொண்டுள்ளார்.

கரண்டமகுடம், பனையோலைக் குண்டலங்கள், பட்டாடை, ஸ்வர்ணவைகாக்ஷம் கொண்டு காட்சிதரும் முருகனின் பின்

கைகளில் சக்தி, வஜ்ரம். முன்கைகள் காக்கும் குறிப்பிலும் அருட்குறிப்பிலும் உள்ளன. தேவியர் இருவரும் கரண்டமகுடம், பட்டாடை அணிந்து, வெளிக்கைகளை நெகிழ்த்தி, உள்கைகளில் மலர் கொண்டுள்ளனர்.

யானைத்திருமகள் தொகுதியில் உயர்த்திய துளைக்கைகளில் உள்ள குடங்களைக் கவிழ்த்தபடி நிற்கும் யானைகள் தனிச் சிற்பங்களாக அமைய, நடுவிலுள்ள திருமகள் உயரமான மேடையில் கால்களைக் கீழே தொங்கவிட்ட நிலையில் அமர்ந்துள்ளார். சடைமகுடம், பனையோலைக் குண்டலங்கள், பட்டாடை அணிந்துள்ள அவரது இரு கைகளிலும் தாமரை. சடைப்பாரம், பனையோலைக் குண்டலங்கள், பட்டாடை அணிந்தவராய் சுகாசனத்தில் உள்ள சண்டேசுவரரின் வலக் கையில் மழு. இடக்கை தொடை மீது உள்ளது.

**வெற்றுத்தளம்**

வளாகத்தின் நடுவிலுள்ள பிரம்மபுரீசுவரர், சோமாஸ்கந்தர் விமானங்களைத் தாங்கும் வெற்றுத்தளம் முறையான தாங்குதளம் அற்ற நிலையில் ஆங்காங்கே நான்முக அரைத் தூண்கள் தழுவிய வெறுஞ்சுவராய்க் காரைக் கட்டுமானமாய் 2. 42மீ. உயரம் பெற்று அமைந்துள்ளது. இச்சுவரின் கிழக்கு முகத்தில் தெற்கிலிருந்து வடக்காக இடம்பெற்றுள்ள மூன்று சிற்பங்களுமே பழைமையானவை. முதற் சிற்பம் ஆடல் காட்சியாக அமைந்துள்ளது.

இரண்டாவது சிற்பத்தில் சடைமகுடம், வலச்செவியில் மகரகுண்டலம், இடச்செவியில் பனையோலைக் குண்டலம், சரப்பளி, தோள், கை வளைகள், சிற்றாடை அணிந்து கத்தியை இடத்தோளில் சாத்திய நிலையில் முன்கைகளால் வணங்கி நிற்கும் அதிகார நந்தியின் பின்கைகளில் மான், மழு. அவரது அருகிலுள்ள தேவி கரண்டமகுடம், பனையோலைக் குண்டலங்கள், தோள், கை வளைகள், பட்டாடை அணிந்து வலக்கையில் மலரேந்தி, இடக்கையை நெகிழ்த்தியுள்ளார். இச்சிற்பம் இக்கோயிலில் இருந்த மகரதோரணத்தின் எச்சமாகலாம்.

மூன்றாவதாக உள்ள தேர்ச்சிற்பத்தில் தேரில் இருப்பவர்களாய் இருவர் காட்டப்பட்டுள்ளனர். முன்னதாக உள்ள

தேர்ப்பாகர் பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, முப்புரி நூல் அணிந்து இடக்கையில் கடிவாளத்தைப் பிடித்தவாறு வலக்கையில் சின்முத்திரை காட்டி, தேர்க்காலின் மீது வலக் காலை ஊன்றியவராய்க் காட்சிதருகிறார். கிரீடமகுடமணிந்து பின்னாலுள்ளவர் கைகள் சிதைந்துள்ளன. அவை வணக்க முத்திரையில் இருந்திருக்கலாம் என ஊகிக்குமாறு சிதைவுகள் உள்ளன. இக்காட்சி கீதோபதேசக் காட்சியாகலாம்.

**கோட்டங்கள்**

வெற்றுத்தளத்தின் முகமண்டபஞ் சார்ந்த பகுதியின் தெற்கிலும் வடக்கிலும் காணப்படும் ஆழமான கோட்டங்களில் பிள்ளையாரும் மகிடாசுரமர்த்தனியும் உள்ளனர். விமானஞ்சார்ந்த மேற்கு, வடக்குக் கோட்டங்களில் விஷ்ணுவும் நான்முகனும் இடம்பெற்றுள்ளனர். தெற்கில் கோட்டம் இல்லை.

பின்கைகளில் அங்குசம், பாசம்; முன்கைகளில் தந்தம் மோதகம் கொண்டு, இடம்புரியாக இலலிதாசனத்தில் உள்ள பிள்ளையார் கரண்டமகுடம் பெற்றுள்ளார். வடக்கிலுள்ள மகிடாசுரமர்த்தனி கற்றளத்தின் மீது நின்றாலும் கீழே மகிடனின் தலையும் காட்டப்பட்டுள்ளது. கரண்டமகுடம், பனையோலைக் குண்டலங்கள், பட்டாடை, கழுத்தணிகள் அணிந்துள்ள அம்மையின் பின்கைகளில் சக்கரம், சங்கு. முன் கைகளில் வலக்கை காக்கும் குறிப்புக் காட்ட, இடக்கை கடிய வலம்பிதமாக உள்ளது. மேற்கிலுள்ள விஷ்ணு கிரீடமகுடம், மகரகுண்டலங்கள், சரப்பளி, முப்புரிநூல், பட்டையான உதரபந்தம், பட்டாடை அணிந்து பின்கைகளில் சக்கரம், சங்கு கொண்டு, வல முன் கையைக் காக்கும் குறிப்பில் கொண்டுள்ளார். இட முன் கை கடியவலம்பிதமாக உள்ளது. நான்முகன் சடைமகுடம் சரப்பளி, முப்புரிநூல், உதரபந்தம், பட்டாடை அணிந்து பின்கைகளில் அக்கமாலையும் குண்டிகையும் பெற்றுள்ளார். அவரது வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இட முன் கை கடியவலம்பிதமாக உள்ளது.

**படிகள்**

வெற்றுத்தளத்தின் தென்புறத்தே காணப்படும் பதினான்கு படிகள் மாடக்கோயிலின் முன்மண்டப நுழைவாயிலுக்கு

அழைத்துச் செல்கின்றன. பத்தாவது படியில் காணப்படும் மேற்குமுகத் திருப்பம் மூன்று படிகளுடன் மாடக்கோயில் வெளிச்சுற்றுக்கு வழிவிடுகிறது. வடபுறத்தே சண்டேசுவரர் திருமுன்னை ஒட்டி அமைந்துள்ள பதினொரு படிகளும் இவ்வெளிச்சுற்றிலேயே முடிகின்றன.

**முன்மண்டபம்**

முற்றிலும் செங்கல் கட்டுமானமாய் அமைந்துள்ள முன் மண்டபத்தில் தெற்கிலிருந்து வடக்காக பைரவர், அம்மன், நான்முகன், அப்பர், ஞானசம்பந்தர், கோச்செங்கட்சோழன், முருகன், பிள்ளையார் சிற்பங்கள் காணப்படுகின்றன. மண்டபத்தின் வலக்கோடியில் ஒன்பான்கோள்கள் உள்ளன. கொண்டையாக முடித்த தலைமுடி, பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, சிற்றாடை இவற்றுடன் காட்சிதரும் கோச்செங்கணானின் இரண்டு கைகளும் வணங்கிய நிலையில் உள்ளன. முன் மண்டபத்தின் மேற்குச் சுவரிலுள்ள இரண்டு வாயில்களுள் தென்வாயில் சோமாஸ்கந்தர் திருமுன்னுக்கும் வடவாயில் இறைவன் திருமுன்னுக்கும் வழிவிடுகின்றன.

**சோமாஸ்கந்தர் திருமுன்**

பெருமண்டபம், முகமண்டபம், ஒருதள வேசர விமானம் என அமைந்துள்ள இத்திருமுன்னின் பெருமண்டபக் கூரையை முச்சதுர, இருகட்டுத் தூண்கள் வெட்டுத் தரங்கப் போதிகைகளுடன் தாங்குகின்றன. தெற்குச் சுவரில் சாளரம் பெற்று வெறுமையாக உள்ள இதையடுத்துக் காணப்படும் முகமண்டபம் தெற்கு, மேற்கு, வடக்கு முப்புறத்தும் மேடை பெற்றுள்ளது. இம்மேடைகளில் செப்புத்திருமேனிகள் உள்ளன. பெருமண்டபம் போலவே தூண்களும் போதிகைகளும் பெற்றுள்ள இம்மண்டபத்தை அடுத்துக் காரைக் கட்டுமானமாக அமைந்துள்ள விமானக் கீழ்த்தளம் உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், அங்கொன்றும் இங்கொன்றுமாய் நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், கூரையுறுப்புகள் பெற்று அமைந்துள்ளது.

சுவரில் தெற்கிலும் மேற்கிலும் கோட்டங்கள் உள்ளன. தெற்குக் கோட்டத்தில் சடைப்பாரம், சிற்றாடை கொண்டு, வீராசனத்தில் வலப்பாதத்தை முயலகன் மீது இருத்தியுள்ள

ஆலமர்அண்ணலின் பின்கைகளில் பாம்பும் தீச்சுடரும் அமைய, வல முன் கை சின் முத்திரையில் உள்ளது. இட முன் கை தொடைமீது இருத்தப்பட்டுள்ளது. இறைவனின் இருபுறத் தும் பக்கத்திற்கிருவராக முனிவர்கள். மேற்குக் கோட்டம் வெறுமையாக உள்ளது. கருவறையிலுள்ள மேடையில் சோமாஸ்கந்தர் தொகுதியும் தனி உமையும் இடம்பெற்றுள்ளனர்.

சடைமகுடம், தோள், கடக, கை வளைகள், முப்புரிநூல், உதரபந்தம், சிற்றாடை, சிலம்பு கொண்டு சுகாசனத்தில் உள்ள சிவபெருமானின் பின்கைகளில் மான், மழு. அவரது வல முன் கை ஆகூய வரதத்தில் அமைய, இட முன் கை கடகமாக உள்ளது. கரண்டமகுடம், பூட்டுக்குண்டலங்கள், ஸ்வர்ண வைகாக்ஷக்ஷம் அரும்புச்சரம், பட்டாடை அணிந்து இறைவனின் இடப்புறம் சுகாசனத்திலுள்ள உமை, இரு கைகளையும் கடகத்தில் இருத்தியுள்ளார்.

கரண்டமகுடம், பனையோலைக் குண்டலங்கள், ஸ்வர்ண வைகாக்ஷம் அணிந்துள்ள முருகன் சிவபெருமானுக்கும் உமைக்கும் இடையில் சற்றே முகம் நிமிர்த்திய நிலையில் குழந்தை அமர்வில் உள்ளார். மலரேந்திய அவரது வலக்கை கடகத்தில் அமைய, ஆகூய வரதத்திலுள்ள இடக்கை சிதைந்துள்ளது. இவர்களின் அருகே உள்ள தனி உமை கரண்டமகுடம், மகரகுண்டலங்கள், அரும்புச்சரம், முப்புரிநூல், பட்டாடை, இடைக்கட்டு, குறங்குசெறி அணிந்தவராய் வலப்பாதத்தை சமத்தில் இருத்தி, இடப்பாதத்தைத் திரயச்ரத்தில் திருப்பியுள்ளார். வலக்கை மலருடன் கடகமாக, இடக்கை நெகிழ்ந்துள்ளது.

**இறைவன் திருமுன்**

வடவாயிலை அடுத்துப் பெருமண்டபம், முகமண்டபம், விமானம் இவை அமைந்துள்ளன. முச்சதுர, இருகட்டுத் தூண் கள் வெட்டுப் போதிகைகளின் உதவியுடன் கூரை தாங்கும் இம்மண்டபத்தில் பலித்தளமும் நந்தியும் உள்ளன. மண்டபத்தின் வடபுறம் உள்ள அறையில் ஆடவல்லானும் உமையும் இடம்பெற்றுள்ளனர்.

**ஆடவல்லான், உமை**

தோள்மாலை, தோள், கடக, கை வளைகள், சிற்றாடை, முறுக்கிய உதரபந்தம், முப்புரிநூலென மடித்தணியப்பட்ட துணி இவற்றுடன் பின்கைகளில் உடுக்கையும் தீச்சுடரும் ஏந்தி, வலத்திருவடியை முயலகன் முதுகின்மீது இருத்தி, இடக்காலை வலப்புறம் வீசி ஆனந்தத் தாண்டவம் நிகழ்த்துகிறார் இறைவன். அவரது தாண்டவ வீச்சில் தடுமாறும் முயலகனின் துன்பம் வாய் திறந்த அலறலாகக் காட்டப்பட்டுள்ளது. இறைவனின் பாம்பு சுற்றியுள்ள வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இட முன் கை வேழ முத்திரையில் உள்ளது. விரிசடையின் வலப்புறம் வணங்கிய கங்கை. இடப்புறம் பாம்பு. இருபுறத் தும் நெருஞ்சிப் பூக்கள். வலச்செவியில் மகரகுண்டலம். இடச் செவியில் பனையோலைக் குண்டலம். கால்களில் வீரக்கழல்.

ஆடலை இரசித்தவாறு சடைமகுடம், மகரகுண்டலங்கள், சரப்பளி, தோள், கடக, கை வளைகள், முப்புரிநூல், பட்டாடை, குறங்குசெறி அணிந்து இடப்புறம் நிற்கும் உமையன்னை வலக்கையில் கடகம் காட்டி, இடக்கையை நெகிழ்த்தியுள்ளார். திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர் ஆடவல்லானின் வலப் புறத்தே வலக்கையில் சின்முத்திரை காட்டி, இடக்கையில் சுவடி ஏந்தி, மழித்த தலையும் சிற்றாடையுமாய்க் காட்சி தருகிறார். கழுத்தில் உருத்திராக்கமாலை.

**முகமண்டபம்**

பெருமண்டபத்தின் மேற்குச் சுவரில் காணப்படும் முகமண்டப வாயிலின் இருபுறத்தும் உள்ள காவலர்கள் கீர்த்திமுகம் பெற்ற சடைமகுடம், பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, பூவேலைப்பாடுகளுடனான முப்புரிநூல், கோரைப்பற்கள், தோள், கை வளைகள், சிற்றாடை, கால் வளைகள், சிலம்பு கொண்டு வல முன் கை அச்சுறுத்த, இட முன் கையை மழுவின் மேல் இருத்தியுள்ளனர். பின்கைகள் போற்றி, வியப்பு முத்திரைகளில் உள்ளன. தெற்கர் வலக்காலை மழு மேல் இருத்தி, இடக் காலைத் தரையில் ஊன்ற, வடக்கர் இடக்காலை மழு மேல் இருத்தி, வலக்காலைத் தரையில் ஊன்றியுள்ளார்.

முகமண்டபத்தின் கூரையை முச்சதுர, இருகட்டுத் தூண்கள் வெட்டுத் தரங்கப் போதிகைகளின் உதவியுடன் தாங்க, வட மேற்கு மூலையில் இன்பவல்லி அன்னை உத்குடியாசனத்தில் உள்ளார். சடைமகுடம், மகரகுண்டலங்கள், தோள்மாலை, அரும்புச்சரம், பட்டாடை, தோள், கை வளைகள், நெளிச் சலங்கை, பாடகம் அணிந்துள்ள தேவியின் வலக்கை கடகத்தில் அமைய, இடக்கை தளத்தின்மேல் இருத்தப்பட்டுள்ளது.

**விமானம்**

தாமரை உபானத்துடனான பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, எண்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றுள்ள இறைவனின் ஒருதளத் திராவிட விமானத்தின் கீழ்த்தளம் 4. 52 மீ. பக்கமுடைய சதுரமாக அமைந்துள்ளது. சுவரில் கோட்டங்கள் இல்லை. கிரீவகோட்டங்களில் தெற்கில் வீராசனத்தில் ஆலமர்அண்ணலும் மேற்கில் உத்குடியமர்வில் பரமபதநாதரும் வடக்கில் தேவியருடன் சுகாசனத்தில் நான்முகனும் காட்டப்பட்டுள்ளனர்.

கருவறை வாயிலின் வடபுறச் சுவரிலுள்ள கோட்டத்தில் காவலர் காட்டப்பட்டுள்ளார். கரண்டமகுடம், மகரகுண்டலங்கள், சரப்பளி, சிற்றாடை அணிந்து அடர்த்தியான மீசையுடன் வல முன் கையால் அச்சுறுத்தி, இட முன் கையை மழுவின் மீது நெகிழ்த்தியுள்ள காவலரின் வலப் பின் கை போற்ற, இடப் பின் கை வியப்பு காட்டுகிறது. இடப்பாதம் தரையில் படர, வலப் பாதம் மழுவின் மேல். தென்சுவரில் கோட்டம் இல்லை. கருவறையில் பிரம்மபுரீசுவரர் வேசர ஆவுடையாரின் மீது உருளைப் பாணம் கொண்டு அமைய, பின்சுவரை ஒட்டியுள்ள மேடையில் சோமாஸ்கந்தர் சிற்பங்கள் இருத்தப்பட்டுள்ளன.

சடைமகுடம், மகர, பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, சிற்றாடை இவற்றுடன் சுகாசனத்தில் உள்ள சிவபெருமானின் பின்கைகளில் மழு, மான். வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, முன் கை கடகத்தில் உள்ளது. இறைவனின் இடப்புறமுள்ள உமை கரண்டமகுடம், மகரகுண்டலங்கள், கழுத்தணிகள், பட்டாடை அணிந்து சுகாசனத்தில் உள்ளார்.

அவரது வலக்கை நீலோத்பலம் ஏந்த, இடக்கை அருட்குறிப்பில் உள்ளது. இருவருக்கும் இடையில் நிற்கும் முருகன் இரண்டு கைகளிலும் மலர் கொண்டுள்ளார்.

முன்மண்டபம், பெருமண்டபம், முகமண்டபம் இவற்றின் புறச்சுவர்கள் வெற்றுத்தளம் போலவே காரைக் கட்டுமானமாய் உள்ளன. பெருமண்டபத்தின் வடசுவரில் மட்டும் பாதபந்தத் தாங்குதளம் காணப்படுகிறது. இறைவன் விமானத்தின் தெற்கு, மேற்கு, வடக்குப் பக்கங்களில் விமானக் கட்டுமானத்தைக் காணுமாறு திருநடைமாளிகை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நான்முகத் தூண்கள் வெட்டுப் போதிகைகள் கொண்டு, இம்மாளிகையின் வண்டிக்கூடு கூரையைத் தாங்குகின்றன. தூண்களின் உடலைக் குடப்பஞ்சரங்கள் அலங்கரிக்கின்றன.

## கல்வெட்டுகள்

இக்கோயிலில் இருந்து முழுமையான கல்வெட்டு ஒன்றும் துணுக்குக் கல்வெட்டுகள் பலவும் படியெடுக்கப்பட்டுள்ளன. சோமாஸ்கந்தர் கோயிலில் காணப்படும் மூன்றாம் இராஜராஜரின் பத்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு உய்யக்கொண்டார் வளநாட்டு அம்பர் நாட்டு வைகாவூராகிய எதிரிலி சோழ நெற்குன்றத்தில் எழுந்தருளியிருந்த எதிரிலி சோழீச்சுவரம் உடையாருக்கு அம்பர் நகரத்தில் வாழ்ந்த வணிகர் பரித்திக்குடையான் இரண்டு விளக்குகள் ஏற்ற வாய்ப்பாகப் பத்துக் காசுகள் தந்தத் தகவலைத் தருகிறது. இக்காசுகளைப் பெற்றுக் கொண்ட கோயில் சிவஅந்தணர்கள் விக்கிரம சோழ பட்டன், ஆட்கொண்ட நாயக பட்டன், விநாயக பட்டன் ஆகிய மூவரும் விளக்கேற்ற ஒப்புக்கொண்டனர்.3

மன்னர் பெயரற்ற கல்வெட்டுத் துணுக்குகள் சிவச்செல்வி வளாகம், பழியஞ்சி ஏரி, மேலூராகிய அரித்துவநெற்குன்றம் ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றன.4 மூன்றாம் குலோத்துங்கர் காலத்தைச் சேர்ந்தவையாகக் கொள்ளத்தக்க துணுக்குக் கல்வெட்டுகள் வளவன் வாய்க்காலை அறிமுகப்படுத்துவதுடன் கயிலாயமுடையார் கோயிலுக்கு விற்கப்பட்ட நிலத்துண்டு பற்றிய தரவுகளையும் முன்வைக்கின்றன.5 பூசைக்கு உடலாக நீர்வார்த்துத் தரப்பட்ட திருநாமத்துக்காணி நிலமொன்றையும்

பூலோகமாணிக்கச் சதுர்வேதிமங்கலத்தையும் சுட்டும் மூன்றாம் ராஜராஜரின் ஒன்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுத் துணுக்குகள் சில கையெழுத்தாளர்களின் பெயர்களையும் தருகின்றன.

**குறிப்புகள்**

1. சம்பந்தர் 3:19. 'அரிசிலம் பொருபுனல் அம்பர் மாநகர் குரிசில் செங்கண்ணவன் கோயில் சேர்வரே', 'அம்பர்ச் செம்பியர் செறிகழல் இறை செய்த கோயில்' எனும் பாடல் அடிகள் குறிக்கத்தக்கன.

2. ஆய்வு நாட்கள் 13. 2. 1982, 25. 12. 2000, 25. 10. 2005, 31. 8. 2008, உடனிருந்து உதவிய நிருவாக அலுவலர் மு.முருகைய்யன், திருவாளர்கள் வீ.கணேசமூர்த்தி ச.புகழேந்தி, கி.ஜெயராமன், ஆகியோருக்கு உளமார்ந்த நன்றி. இக்கோயில் பற்றிய முதற் கட்டுரை, 'திருஅம்பர்ப் பெருந்திருக்கோயில்' என்ற தலைப்பில் 1982 செப்டம்பரில் வெளியான செந்தமிழ்ச் செல்வி ஆய்விதழில் இடம்பெற்றுள்ளது.

3. ARE 1918: 238.

4. ARE 1918: 236.

5. ARE 1918: 237.

6. ARE 1918: 239.

## 13. வைகல்

சம்பந்தர் பாடல் பெற்ற வைகல் காவிரியின் தென்கரை ஊர்களுள் ஒன்றாகும்[1] ஆடுதுறைக்குத் தெற்கே 4 கி. மீ. தொலை வில் உள்ள திருநீலக்குடிக்குத் தென்கிழக்கில் 3 கி. மீ. தொலைவில் உள்ளது வைகல் இவ்வூரிலுள்ள மூன்று சிவன்கோயில் களுள் ஊரின் மேற்குப் பக்கத்தில் உள்ள வைகல்நாதர் கோயில் மாடக்கோயிலாகும். 2 இதன் முதல் வாயில் உறுப்புகளற்ற தாங்குதளம், நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றுக் கபோதத்துடன் நிற்கிறது. இரண்டாம் வாயில் முதல் வாயில் போலவே உள்ளபோதும் சாலைப்பத்திப் புறந்தள்ளல் கூடுதல் அமைப்பாக உள்ளது. வாயிலின் தென்புறத்தே ஒருதள வேசர விமானத்தில் கரண்டமகுடம், சிற்றாடை அணிந்து, பின்கைகளில் அங்குசம், பாசம் ஏந்தி, இடம்புரியாக அமர்ந்துள்ள பிள்ளையாரின் வல முன் கையில் தந்தம். இட முன் கையில் மோதகம்.

வாயிலை அடுத்து வளரும் சுற்றில் காணப்படும் ஒருதள வேசர விமானங்களில் தெற்கில் கொம்பியல் கோதை அம்மனும் தென்மேற்கில் பிள்ளையாரும் மேற்கில் வள்ளி, தெய்வானையுடன் முருகனும் இடம்பெற்றுள்ளனர். வடமேற்கிலுள்ள மண்டப அறைகளுள் ஒன்றில் யானைத்திருமகளும் மற்றொன்றில் திருமகள் நிலமகளுடன் விஷ்ணுவும் காட்சிதருகின்றனர். வடபுறத்தே உள்ள ஒருதள நாகர விமானத்தில் சண்டேசுவ ரர்கள் இடம்பெற்றுள்ளனர். வடகிழக்கில் உள்ள மண்டப அறையில் சனீசுவரனும் பைரவரும் உள்ளனர்.

### அம்மன் கோயில்

பெருமண்டபம், முகமண்டபம், விமானம் பெற்று விளங்கும் அம்மன் கோயில் அண்மையில் சீரமைக்கப்பட்டுள்ளது. உறுப்பு களற்ற தாங்குதளம், நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், ஆழமற்ற கூடுகளுடனான கபோதம் பெற்று விளங்கும் பெருமண்டபத்தின் சுவரில் சாளரம் ஒன்று அமைந்துள்ளது. முகமண்டபம், விமானக் கீழ்த்தளம் இவை பெருமண்டபக் கட்டமைப்பிலேயே உள்ளன. கிரீவகோட்டங்களில் தோழிகளுடன் அம்மன்

காட்சிதருகிறார். முச்சதுர, இருகட்டுத் தூண்கள் வெட்டுப் போதிகைகளுடன் கூரை தாங்கும் பெருமண்டபம் வெறுமையாக உள்ளது. தூண்களின் கீழ்ச்சதுரம் நாகபந்தம் பெற, இடை, மேற்சதுரங்கள் உருளைக்கால்கள் கொண்டுள்ளன. முகமண்டபத்தை அடுத்துள்ள கருவறையில் சமபங்கத்தில் உள்ள இறைவியின் பின்கைகளில் அக்கமாலை, மலர். சடைமகுடம், மகர குண்டலங்கள், முப்புரிநூல், பட்டாடை அணிந்துள்ள தேவியின் வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இட முன் கை கடிய வலம்பிதமாக உள்ளது.

**சுற்றாலைச் சிற்பங்கள்**

கரண்டமகுடம், சரப்பளி, முப்புரிநூல், அலங்கரிக்கப்பட்ட உதரபந்தம் அணிந்து இலலிதாசனத்தில் உள்ள தென்மேற்கு வலம்புரிப் பிள்ளையாரின் பின்கைகளில் வலப்புறம் உள்ள பொருள் அங்குசமாகலாம். இடப்புறம் பாசம் உள்ளது. முன் கைகளில் வலப்புறம் தந்தமும் இடப்புறம் மோதகமும் உள்ளன.

கரண்டமகுடம், பனையோலைக் குண்டலங்கள், ஸ்வர்ணவைகாக்ஷம் அணிந்தவராய் மயிலுடன் நிற்கும் முருகப்பெருமானின் பின்கைகளில் வலப்புறம் சக்தி, இடப்புறம் வஜ்ரம். கழுத்தணிகளும் கையணிகளும் அலங்கரிக்கும் அவரது வல முன் கை காக்கும் குறிப்பில் இருக்க, இட முன் கை கடிய வலம்பிதமாக உள்ளது. கரண்டமகுடம், பனையோலைக் குண்டலங்கள், பட்டாடையுடன் வலப்புறமுள்ள தெய்வானையின் இடக்கையில் மலர். வலக்கை நெகிழ்ந்துள்ளது. வள்ளி வலக்கையில் மலர் கொண்டு, இடக்கையை நெகிழ்த்தியுள்ளார்.

கிரீடமகுடம், மகரகுண்டலங்கள், கழுத்தணிகள், கையணிகள், முப்புரிநூல், உதரபந்தம், பட்டாடை அணிந்து, மண்டப அறையில் உள்ள விஷ்ணுவின் பின்கைகளில் சங்கு, சக்கரம். வல் முன் கை காக்கும் குறிப்பில் இருக்க, இட முன் கை கடியவலம் பிதமாக உள்ளது. கரண்டமகுடம், பனையோலைக் குண்டலங்கள், பட்டாடை அணிந்து வலப்புறத்துள்ள திருமகளின் வலக்கை நெகிழ, இடக்கையில் மலர். இடப்புறத்துள்ள நிலமகள் கச்சற்றவராய்ப் பூட்டுக்குண்டலங்களுடன் இடக் கையை நெகிழ்த்தி, வலக்கையில் மலர் கொண்டுள்ளார்.

வடக்குத் திருமுன்னில் காணப்படும் இரண்டு சண்டேசுவரர்களுள் பழையவர் சடைமகுடம், முப்புரிநூல், சிற்றாடை அணிந்து, வலச்செவியில் பனையோலைக் குண்டலத்துடன் காட்சியளிக்கிறார். இடச்செவி வெறுமையாக உள்ளது. வலக் கையில் மழு இடக்கை தொடைமீதுள்ளது. சுகாசனத்தில் உள்ள புதியவரின் இரு கைகளும் கடகத்தில் உள்ளன.

கரண்டமகுடம், பனையோலைக் குண்டலங்கள், பட்டாடை இவற்றுடன் காட்சிதரும் சனீசுவரனின் வலக்கையில் தடி. இடக்கை கடியவலம்பிதமாக உள்ளது. பின்னால் காகம் நிர்வாணியாய்ச் சுடர்முடியுடன் நெற்றிக்கண், வலச்செவியில் மகரகுண்டலம், இடச்செவியில் பனையோலைக் குண்டலம், கோரைப்பற்கள், முப்புரிநூல், உதரபந்தம், கழுத்தணிகள், கையணிகள் இவற்றுடன் காட்சிதரும் பைரவரின் பின்கைகளில் உடுக்கையும் பாசமும் அமைய, முன்கைகளில் முத்தலை ஈட்டியும் தலையோடும் உள்ளன.

**வெற்றுத்தளம்**

வளாகத்தின் நடுப்பகுதியில் அமைந்திருக்கும் மாடக்கோயிலின் வெற்றுத்தளம் திருப்பணிகளின் காரணமாகத் தாங்குதளம், சுவர், கூரையற்ற நிலையில் 1.57 மீ. உயரமுடைய வெறும் மேடையாகக் காட்சியளிக்கிறது. மேடையின் தென்புறத்தும் வடபுறத்தும் மேலேற வாய்ப்பாகத் திசைக்கு ஆறு படிகள். பெருமண்டபம், முகமண்டபம், இருதள வேசர விமானம் என அமைந்துள்ள வைகல்நாதரின் திருமுன் நோக்கிய நிலையில் மேடையின் மேல் அமர்ந்துள்ள நந்தியின் மண்டபம் வேசர கிரீவம், சிகரம் பெற்றுள்ளது.

**விமானம்**

பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்று, 4.65 மீ. பக்கமுடைய சதுரமாக அமைந்துள்ள விமானத்தின் கீழ்த்தளச் சுவர் முப்புறத்தும் சட்டத்தலை பெற்ற நான்முக அரைத்தூண்கள் அணைத்த கோட்டப் பஞ்சரங்கள் பெற்றுள்ளது. விமானத்தின் போதிகைகளுக்கு மேற்பட்ட உறுப்புகள் செங்கல்லால் ஆனவை.

கபோதத்துடனான சிறு மண்டபம் பெற்றுள்ள தெற்குக் கோட்டத்தில் ஆலமர்அண்ணல் வீராசனத்தில் உள்ளார். வல முன் கை சின்குறிப்புக் காட்ட, இட முன் கை சுவடியேந்திய நிலையில் முழங்காலின் மீது உள்ளது. பின்கைகளில் வலப்புறம் அக்கமாலை, இடப்புறம் தீச்சுடர். சடைப்பாரம், முப்புரிநூல் என அணியப்பட்ட துண்டு, உதரபந்தம், சிற்றாடை, இடைக்கட்டு, இடச்செவியில் பனையோலைக் குண்டலம் அணிந்துள்ள இறைவனின் வலச்செவி வெறுமையாக உள்ளது. வலக்காலை முயலகன் மீது இருத்தி, சடைமுகப்பில் படமெடுத்த பாம்புடன் காட்சிதரும் இறைவனின் தலைக்குப் பின்புறம் கிளைத்திருக்கும் மரத்தின் நடுப்பொந்தில் ஆந்தையும் கிளையொன்றில் பொக்கணமும்' [3] உள்ளன. இறைவனின் இருபுறத்தும் முனிவர்கள். மேற்கு, வடக்குக் கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. மேடையின் இப்பகுதியில் இருந்து கீழிறங்க வாய்ப்பாகத் துளைக்கைப் பிடிச்சுவருடன் ஆறு படிகள் உள்ளன.

முதல் தள ஆரஉறுப்புகள் ஆறங்கம் பெற்றமைய, இரண்டாம் தளம் செங்கல் கட்டுமானமாய் மேலே கிரீவம், சிகரம் பெற்று முடிகிறது. ஆரச்சாலைகள் வெறுமையாக உள்ளன. கிரீவகோட்டங்களில் தென்புறம் வீராசனத்தில் ஆலமர் அண்ணலும் மேற்கில் மகாராஜலீலாசனத்தில் தேவியருடன் பரமபதநாதரும் வடபுறம் தேவியருடன் சுகாசனத்தில் நான்முகனும் கிழக்கில் தேவியருடன் சுகாசனத்தில் சிவபெருமானும் இடம்பெற்றுள்ளனர். விமானத்தின் கட்டமைப்பில் உள்ள முகமண்டபத்தின் கோட்டங்கள் வெறுமையாக உள்ளன.

**பெருமண்டபம்**

பெருமண்டபத்தின் புறச்சுவர் உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், கபோதம், கூரையின் மேல் சிறு வேதிகை என அமைந்துள்ளது. கிழக்கு முகத்தில் புறந்தள்ளியுள்ள சுவரின் சாலைப்பத்தி வாயிலாக்கப்பட்டுள்ளது. நாகபந்தம் பெற்றுள்ள இவ்வாயிலின் இருபுறத்து முள்ள கோட்டப்பஞ்சரங்களில் தெற்கில் பிள்ளையார் அமைய, வடகோட்டம் வெறுமையாக உள்ளது. கரண்ட

மகுடம், சரப்பளி, உதரபந்தம் அணிந்து இலலிதாசனத்தில் உள்ள இடம்புரிப் பிள்ளையாரின் பின்கைகளில் அங்குசம், பாசம். முன்கைகளில் வலப்புறம் தந்தம், இடப்புறம் மோதகம்.

முச்சதுர, இருகட்டுத் தூண்கள் வெட்டுப் போதிகைகளுடன் கூரை தாங்கும் பெருமண்டபமும் அதையடுத்துள்ள தூண்களற்ற பேரளவிலான முகமண்டபமும் வெறுமையாக உள்ளன. கருவறையில் வைகல்நாதர் என்ற திருப்பெயருடன் வேசர ஆவுடையார் மீது உருளைப் பாணம் பெற்ற இலிங்கத் திருமேனி இடம்பெற்றுள்ளது.

### கல்வெட்டுகள்

வெளிச்சுற்றிலுள்ள பிள்ளையார் கோயில் முன்றில் தூண் ஒன்றில் காணப்படும் முதல் இராஜராஜரின் இருபத்தாறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு,4 வைகலை வானவன்மாதேவிச் சதுர்வேதிமங்கலமாக அடையாளப்படுத்துவதுடன், அது உய்யக்கொண்டார் வளநாட்டின் கீழ் வெண்ணாட்டில் இணைக்கப்பட்டிருந்த தகவலைத் தருகிறது. மாடக்கோயில் மகாதேவருக்கு ஸ்ரீகோயில் எடுப்பித்தவராகக் கூளிக்குடியைச் சேர்ந்த ஸ்ரீகண்டன் விஜ்ஜாதரனான வன்தொண்டன் பெயரைத் தரும் கல்வெட்டு இன்றும் நன்னிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. இரண்டாம் கோபுர வாயிலின் வடபுறம் காணப்படும் துண்டுக் கல்வெட்டு அன்றாடு நற்காசு 17,500க்கு வானவன் மாதேவிச் சதுர்வேதிமங்கலத்தில் பிச்சி என்பவர் நிலத்துண்டு ஒன்றை விற்ற தகவலைத் தருகிறது.5

### குறிப்புகள்

1. சம்பந்தர் 3:18. 'வைகல் மேற்றிசைச் செய்யகண் வளவன் முன் செய்த கோயிலே', 'வைகல் மேற்றிசைச் செம்பியன் கோச்செங்கணான் செய் கோயிலே', 'வைகலில் திறையுடை நிறைசெல்வன் செய்த கோயிலே', 'வைகல் வாழ்வர்கள் வலம்வரு மலையன மாடக்கோயிலே' எனும் பாடலடிகள் குறிக்கத்தக்கன.

2. ஆய்வு நாட்கள் 7. 8. 1981, 27. 1. 2001, 23. 10, 2009.உடனிருந்து உதவிய திருவாளர்கள் உன்னத குருக்கள், பாலு குருக்கள், காவலர் தா. பாலகிருஷ்ணன் ஆகியோருக்கு உளமார்ந்த

நன்றி. இக்கோயில் பற்றிய முதற் கட்டுரை மார்ச்சு 1982ல் வெளிவந்த திருக்கோயில் இதழில் பதிவாகியுள்ளது.

3 பொக்கணம் பற்றிய விரிவான தரவுகளுக்கு: இரா. கலைக் கோவன், பொக்கணம், கலைமகள், தீபாவளிமலர், 1999.

4 இக்கல்வெட்டு களஆய்வின்போது பேராசிரியர் முனைவர் மு. நளினியால் கண்டறியப்பட்டது.

5 இக்கல்வெட்டு களஆய்வின்போது பேராசிரியர் முனைவர் அர. அகிலாவால் கண்டறியப்பட்டது.

# 14. மலையீசுவரம்

நாகபட்டினத்திலுள்ள மலையீசுவரம் மாடக்கோயிலின்' 1 செங்கல் கட்டுமானமாய் உள்ள நுழைவாயில் முகப்பை முச்சதுர, இருகட்டுத் தூண்கள் வெட்டுத் தரங்கப் போதிகைகள் உதவியுடன் தாங்க, மேலே கபோதம். வாயிலின் மேலிருக்குமாறு அமைந்துள்ள சாலையில் விடைமீது இவர்ந்த நிலையில் சிவபெருமானும் உமையும் காட்சிதர, வலப்புறம் சுகாசனத்தில் பிள்ளையாரும் இடப்புறம் தேவியருடன் சுகாசனத்தில் முருகனும் சுதைவடிவங்களாக உள்ளனர்.

முன்றிலின் தென்சுவரில் உள்ள தமிழ்க் கல்வெட்டு 1777ல் ஆளுநர் ரெயினியர் வான்விளி சிங்கன் பிரபு காலத்தில் இந்தக் கோயில் புதுப்பிக்கப்பட்டதாகக் கூறுகிறது. அதே செய்தியைக் கூறும் ஆங்கிலக் கல்வெட்டு வடசுவரிலும் டச்சு மொழிக் கல்வெட்டு வடக்கு மதில் சுவரிலும் உள்ளன. வாயிலை ஒட்டி இருபுறத்தும் வளரும் மதிலால் சூழப்பட்ட வளாகத்தில் கிழக்கில் பலித்தளமும் நந்தியும் அமைய, ஒருதள வேசர விமானத்தில் சிறிய அளவிலான பிள்ளையார் இலலிதாசனத்தில் உள்ளார். வடபுறம் உள்ள மணற்கல்லால் ஆன அமர்நிலைச் சிங்கத்தின் மார்புப்பகுதியில் காணப்படும் சிதைந்த சிற்பம் உமாமகேசுவரர் ஆகலாம்.

### சுற்றாலைத் திருமுன்கள்

சுற்று வெளியின் தென்கிழக்கில் காணப்படும் வண்டி கூடு கூரை மண்டபங்கள் மடைப்பள்ளியாகப் பயன்படுகின்றன. வடகிழக்கில் மதிலையொட்டியுள்ள சிறிய அறையில் பைரவரும் சூரியனும் இடம்பெற்றுள்ளனர். முன்கைகளில் முத்தலை ஈட்டியும் தலையோடும் கொண்டு, பின்கைகளில் உடுக்கையும் பாசமும் ஏந்தியுள்ள பைரவரின் வலச்செவியில் மகரகுண்டலம்; இடச்செவியில் பனையோலைக் குண்டலம். தலையில் சுடர் முடி இரு கைகளிலும் தாமரைகள் ஏந்தியுள்ள சூரியனின் செவிகளைப் பனையோலைக் குண்டலங்கள் அலங்கரிக்க, கழுத்தில் சரப்பளி.

சுற்றுவெளியின் மேற்கில் மதிலையொட்டியுள்ள மாளிகை பத்மஜகதி, உருள்குமுதம், பாதங்கள், கம்புகள் கொண்ட கண்டம்,

கூடுவளைவுகளுடனான கபோதம் பெற்ற கபோதபந்தத் தாங்கு தளத்தின் மேல் அமைந்துள்ளது. மாளிகையின் கூரையைப் பல்வகைத் தூண்கள் தாங்குகின்றன. சதுரம், கட்டு, சதுரம் எனச் சில அமைய, உருளைத் தூண்களாகச் சில உள்ளன மாளிகையின் வடமேற்குத் தூணில் முப்புறத்தும் கல்வெட்டு உள்ளது. 2 தூண்களின் மேலுள்ள வெட்டுத் தரங்கப் போதிகைகள் கூரையுறுப்புகள் தாங்குகின்றன.

பல அறைகளாகத் தடுக்கப்பட்டுள்ள மாளிகையின் தென் மேற்கில் ஒருதள வேசர விமானத்தில் பிள்ளையாரும் அடுத்துள்ள அறையில் ஜுரஹரதேவரும் நடுவில் உள்ள ஒரு தளத் திராவிட விமானத்தில் வள்ளி, தெய்வானையுடன் முருகனும் வடமேற்கு அறையில் யானைத்திருமகளும் உள்ளனர். மூன்று கால்கள், மூன்று கைகள், மூன்று முகங்கள் பெற்றுள்ள ஜுரஹரதேவரின் இரண்டு கால்கள் மண்டலத்தில் அமைய, ஒரு கால் வலப்புறம் வீசப்பட்டுள்ளது. வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இடப் பின் கையில் தீயகல். மற்றோர் கை வேழ முத்திரையில் இடப்புறம் வீசப்பட்டுள்ளது.

யானைத்திருமகளின் இருபுறத்தும் போற்றும் கைகளுடன் பக்கத்திற்கொருவராகப் பெண்கள் காட்டப்பட்டுள்ளனர். சனீசுவரர், ஜுரஹரதேவர், யானைத்திருமகள் திருமுன்கள் வண்டிக் கூடு கூரை பெற்றுள்ளன. இங்குள்ள இறைத்திருமேனிகள் அனைத்தும் பிற்காலத்தவை. திருமுன்களின் முகப்புச் சுவர்கள் துணைத்தளத்தின் மீது வளரும் நான்முக அரைத்தூண்களின் தழுவலில் அமைந்துள்ளன. மேலே வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள். வடக்குச் சுற்றுவெளியில் ஒரு தள நாகர விமானத்தில் சண்டேசுவரர் காட்சிதருகிறார்.

**வெற்றுத்தளம்**

சுற்றுவெளியின் நடுப்பகுதியில் செங்கல் கட்டுமானமாய் அமைந்துள்ள 4. 19 மீ. உயர வெற்றுத்தளம் மேற்குத் தவிர்த்த பிற திசைகளில் உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், வெறுமையான சுவர், உத்திரம், வாஜனம், மதலைகள் பெற்ற வலபி, கபோதம் கொண்டு அமைந்துள்ளது. தென்மேற்கு மூலையிலும் மேற்கிலும் உபானம், பத்மஜகதி, உருள்குமுதம் எனும் உறுப்புகளைப் பெறும்

வெற்றுத்தளம், மேலே வெறுமையான சுவர், உத்திரம், வாஜனம், மதலைகள் பெற்ற வலபி, கபோதம் கொண்டு முடிகிறது.

வெற்றுத்தளத்தின் மேலே தெற்கு, மேற்கு, வடக்கு முப்புறத்தும் பிடிச்சுவர் காட்டப்பட்டுள்ளது. வெற்றுத்தளத்தின் மேல் தெற்கில் அமைந்துள்ள சோமாஸ்கந்தர் விமானம், முகமண்டபம் இவற்றையும் வடக்கில் அமைந்துள்ள திரிபுரசுந்தரி தேவியின் விமானம், முகமண்டபம் இவற்றையும் மேற்கில் அமைந் துள்ள மலையீசுவரரான கயிலாயநாதர் விமானம், முகமண்டபம், பெருமண்டபம், முன்மண்டபம் இவற்றையும் அடைய, தென்கிழக்குச் சுற்றுவெளியில் இருந்து பதினெட்டுப் படிகள் வளர்கின்றன. படித்தொடரின் தென்புறத்தே உள்ள சிறிய அறையில் அர்த்தபத்மாசனத்தில் உள்ள அன்னபூரணியின் செவிகளில் பனையோலைக் குண்டலங்கள். கரண்டமகுடம், சரப்பளி, மார்புக்கச்சு, பட்டாடை அணிந்துள்ள அவரது இடக்கையில் பாத்திரம். வலக்கையில் கரண்டி.

**நடைமண்டபம்**

படிகளின் முடிவில் உள்ள நடைமண்டபம் தெற்கிலும் வடக்கிலும் திறப்புகள் கொண்டுள்ளது. தெற்கு வாயில் சோமாஸ்கந்தர் விமானத்தைச் சுற்றிவரப் பாதை தருகிறது. வடக்கு வாயில் இறைவன் விமானத்தின் முன்னுள்ள பெருமண்டபத்திற்கு வழியாகிறது. நடைமண்டபத்தின் மேற்கில் முகமண்டபத்துடன் சோமாஸ்கந்தர் விமானம் அமைந்துள்ளது.

**சோமாஸ்கந்தர் விமானம்**

வெற்றுத்தளத்தின் மேல் தென்புறத்து அமைந்துள்ள சோமாஸ்கந்தர் விமானமும் முகமண்டபமும் செங்கல் கட்டுமானங்களாய் உள்ளன. உறுப்பு வேறுபாடற்ற தாங்கு தளம், உறுப்பு வேறுபாடற்ற உயரமான நான்முக அரைத்தூண்கள் தழுவிய கோட்டங்களற்ற சுவர், கூரையுறுப்புகள் பெற்று ஒருதள வேசரமாய் அமைந்துள்ள சோமாஸ்கந்தர் விமானத்தின் முன்னுள்ள முகமண்டபமும் அதே கட்டமைப்பைப் பெற்றுள்ளது. விமானத்தின் கிரீவகோட்டங்களில் தெற்கில் வீராசனத்தில் ஆலமர்அண்ணலும் மேற்கில் சுகாசனத்தில் தேவியருடன் விஷ்ணுவும் வடக்கில் சுகாசனத்தில் நான்முக

னும் உள்ளனர். இவ்விமானத்திற்கும் இறைவன் விமானத்தின் முன்னுள்ள முகமண்டபத்திற்கும் இடையில் குறுகிய இடை வெளி உள்ளது.

**பெருமண்டபம்**

நடைமண்டபத்தின் வடக்கிலுள்ள பெருமண்டபத்தின் வடசுவர் உபானம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, சுவர், கூரையுறுப்புகள் பெற்றுள்ளது. முச்சதுர, இருகட்டுத் தூண்கள் வெட்டுப் போதிகைகள் கொண்டு கூரை தாங்கும் இம்மண்டபத்தின் சலவைக்கல் பாவிய தரையில் இறைவனை நோக்கியவாறு நந்தி அமைந்துள்ளது. கூரையில் ஓவியங்கள். மண்டபத்தின் வடபுறம் திரிபுரசுந்தரி அம்மனின் முகமண்டபம் இடம்பெற்றுள்ளது. அதன் வாயில் நான்முக அரைத்தூண்களால் அணைக்கப்பட்டுள்ளது. மேலே கூரையுறுப்புகளும் கபோதமும் பூமிதேச உறுப்புகளும் காட்டப்பட்டுள்ளன. முகமண்டப வாயிலை அடுத்துள்ள சுவரில் இடப்புறம் பஞ்சரக் கோட்டமொன்று வெறுமையாக உள்ளது.

மேற்கில் இறைவனின் முகமண்டபமும் கிழக்கில் முன்மண்டபமும் உள்ளன. பெருமண்டபத்தின் வடகிழக்கு மூலை யில் உள்ள மேடையில் சடைப்பாரம், மீசை, முப்புரிநூலென அணிந்த மடித்த துண்டு இவற்றுடன் அர்த்தபத்மாசனத்தில் காட்சிதரும் பராசரமுனிவர் வலக்கையைக் காக்கும் குறிப்பில் அமைத்து, இடக்கையைத் தளத்தின் மீது இருத்தியுள்ளார்.

**முன்மண்டபம்**

நடைமண்டபத்தின் வடக்கிலும் பெருமண்டபத்திற்குக் கிழக்கிலும் உள்ள முன்மண்டபம் உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள், கூரையுறுப்புகள் பெற்றுள்ளது. கூரையின் மேல் வேதிகையில் அமர்ந்த நிலையில் கிழக்கில் முனிவர்களும் தெற்கு, வடக்கு மூலைகளில் நந்திகளும் அமைய, கிழக்குச் சுவரில் வாயில் உள்ளது. மண்டபத்தின் தெற்குச் சுவரில் சாளரமும் விளக்கு மாடங்களும் உள்ளன. வடவாயில் வழி அம்மன் கோயில் விமானத்தையும் இறைவன் விமானத்தையும் சுற்றிவரலாம்.

**அம்மன் விமானம்**

உபானம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் கொண்டு ஒருதளத் திராவிடக் கற்றளியாய் அமைந்துள்ள திரிபுரசுந்தரி அம்மனின் பஞ்சர அலங்கரிப்புப் பெற்ற சுவர்க் கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. கிரீவகோட்டங்களில் உத்குடியிலும் சுகாசனசனத்திலும் அமைந்த தேவியின் சுதை வடிவங்கள் இடம்பெற்றுள்ளன. விமானத்தின் முன் அதே கட்டமைப்பில் உள்ள முகமண்டபக் கோட்டங்களும் வெறுமையாக உள்ளன. சலவைக் கல் போர்த்தப் பட்டுள்ள முகமண்டபத்தின் உட்பகுதி வெறுமையாக உள்ளது. கருவறையில் திரிபுரசுந்தரி நின்ற கோலத்தில் சடைமகுடம், பனையோலைக் குண்டலங்கள், கழுத்தணிகள், பட்டாடை அணிந்தவராய்ப் பின்கைகளில் வலப்புறம் அக்கமாலையும் இடப்புறம் தாமரை மொட்டும் கொண்டு, முன்கைகளைக் காக்கும் குறிப்பிலும் அருட்குறிப்பிலும் கொண்டுள்ளார்.

**இறைவன் விமானம்**

பத்ம உபானம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், கூடுவளைவுகளுடனான கபோதம் கொண்டு, தென்வடலாக 3.85 மீ. நீளமும் கிழக்கு மேற்காக 3.48 மீ. அகலமும் பெற்ற ஒருதளத் திராவிடக் கற்றளியாய் விளங்கும் கயிலாயநாதர் விமானச் சுவர்க் கோட்டங்கள் பஞ்சர அலங்கரிப்புப் பெற்றுள்ளன. மேற்கு, வடக்குக் கோட்டங்கள் வெறுமையாக அமைய, தெற்கில் மண்டபக் கட்டுமானத்துடன் வீராசனத்தில் ஆலமர்அண்ணல் இடம்பெற்றுள்ளார்.

மலையொன்றின் மேல் அமர்ந்திருப்பதுபோல் காட்டப்பட்டுள்ள இறைவனின் வலப்புறம் நந்தி அமர்ந்துள்ளது. முயலகன் மீது இருத்தப்பட்டுள்ள வலத்திருவடியின் இருபுறமும் மலைத்தளத்தில் பக்கத்திற்கிருவராக முனிவர்கள் உள்ளனர். இறைவனின் வல முன் கை சின்முத்திரையில் அமைய, இட முன் கையில் சுவடி. பின்கைகளில் வலப்புறம் அக்கமாலையும் பாம்பும் அமைய, இட இடப்புறம் தீ. இச்சிற்பத்தின் இருபுறமும்

தனிநிலையிலும் பக்கத்திற்கிருவராக முனிவர்கள் காட்டப்பட்டுள்ளனர். கிழக்குப் பார்வையாக வணக்க முத்திரையுடன் மாணிக்கவாசகரின் சிற்பமும் உள்ளது.

கிரீவகோட்டங்களில் தெற்கில், வல முன் கையைத் தளத்தில் இருத்தி, இட முன் கையை முழங்கால் மீது அமர்த்தி, பின்கைகளில் உடுக்கை சுற்றிய பாம்பும் தீச்சுடரும் ஏந்தி உத்குடியில் உள்ள ஆலமர்அண்ணலின் சடைப்பாரம் இரு புறத்தும் சரிந்துள்ளது. மேற்கில் பரமபதநாதராய்த் தேவியருடன் உத்குடியில் உள்ள விஷ்ணுவின் பின்கைகளில் சங்கு, சக்கரம். முன்கைகளில் வலக்கை காக்கும் குறிப்புக் காட்ட, இடக்கை முழங்கால் மீது உள்ளது. வடக்கில் தேவியருடன் சுகாசனத்தில் உள்ள நான்முகன் பின்கைகளில் அக்கமாலையும் குண்டிகையும் கொண்டு, முன்கைகளைக் காக்கும் குறிப்பிலும் அருட்குறிப்பிலும் காட்டியுள்ளார்.

**முகமண்டபம்**

விமானக் கட்டமைப்பில் கற்றளியாக உள்ள முகமண்டபத்தின் தெற்குக் கோட்டம் வெறுமையாக உள்ளது. வடக்குக் கோட்டத்தில் மகிடாசுரமர்த்தனி இடம்பெற்றுள்ளார். நாகர மண்டபமாய் அலங்கரிக்கப்பட்டுள்ள இக்கோட்டத்தில் தேவி பின்கைகளில் சங்கு, சக்கரம் ஏந்தி, முன்கைகளைக் காக்கும் குறிப்பிலும் கடியவலம்பிதத்திலும் கொண்டுள்ளார்.

முகமண்டப வாயிலின் இருபுறத்தும் காவலர்கள் உள்ளனர். இருவருமே பின்கைகளுள் ஒன்றைப் போற்றி முத்திரையிலும் மற்றொன்றை வியப்பு முத்திரையிலும் இருத்தி, முன் கைகளுள் ஒன்றை அருகிலுள்ள உருள்பெருந்தடியின் மீது அமர்த்தி, மறு கையால் அச்சுறுத்துகின்றனர். இருவருமே கீர்த்திமுகம் பெற்ற சடைமகுடம், குண்டலங்கள், கோரைப் பற்கள், சிற்றாடை, சரப்பளி, கைவளைகள், முப்புரிநூல், உதரபந்தம் பெற்றுள்ளனர்.

வெறுமையாக உள்ள முகமண்டபத்தை அடுத்துள்ள கருவறையில் இறைவன் பாதபந்த அமைப்புடைய வேசர ஆவுடையாரும் பட்டை பெற்ற பாணமுமாய் இலிங்கத்திரு மேனியராய் எழுந்தருளியுள்ளார். பாதபந்த அமைப்பில்

குமுதம் சிலம்பு வரி பெற்றுள்ளது. கருவறையின் பின்சுவர்க் கோட்டத்தில் பின்னாளைய அமைதியில் அமர் சிம்மம் ஒன்று உள்ளது. அதன் மார்புப்பகுதியில் உமாமகேசுவரர் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. இறைவன், இறைவி இருவருமே சுகாசனத்தில் உள்ளனர். சடைமகுடம், சிற்றாடை பெற்றுள்ள இறைவனின் வல முன் கை காக்கும் குறிப்பிலும் இட முன் கை கடகத்திலும் அமைய, பின்கைகளில் மான், மழு. கரண்ட மகுடம், பட்டாடை பெற்றுள்ள இறைவியின் வலக்கை கடகத்திலும் இடக்கை அருட்குறிப்பிலும் உள்ளன.

**குறிப்புகள்**

1. ஆய்வு நாள்: 20. 3. 2010. இக்கோயிலை அறிமுகம் செய்தவர் திரு. கா. இராமச்சந்திரன். உடனிருந்து உதவியவர் த. நாகநாத குருக்கள்.

2. தலைகீழாக அமைந்துள்ள இக்கல்வெட்டுப் பற்றிய தகவல் நடுவண் அரசின் கல்வெட்டுத் துறைக்குத் தரப்பட்டுள்ளது.

---------------------------------------------------------

## 15. சட்டநாதர் கோயில்

நாகபட்டினம் நகரிலுள்ள சட்டநாதர் கோயில் (சட்டைநாதர்) பெரும் வளாகமாக விரிந்துள்ளது. இவ்வளாகத்தில் சட்டநாதருக்கான தெற்கு நோக்கிய மாடக்கோயிலும் ஆதி காயாரோகண ஈசுவரர் - நீலாயதாட்சிக்கான கிழக்கு நோக்கிய கோயிலும் இடம்பெற்றுள்ளன. 1 தெற்கு நுழைவாயிலை அலங்கரிக்கும் முத்தளக் கோபுரத்தின் கீழ்த்தளம் துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத் தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் உத்திரம், மதலை வலபி, கபோதம் பெற்றுள்ளது. சுவரிலுள்ள பஞ்சரக் கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. மேற்றளங்களில் குறைவான அளவிலேயே சுதையுருவங்கள் காணப்படுகின்றன.

### சுற்று

கோபுரவாயிலின் எதிரில் அமைந்துள்ள சட்டநாதர் மாடக்கோயிலை அடையப் பலித்தளமும் கொடிமரமும் இடம் பெற்றுள்ள திருநடை உதவுகிறது. கபோதபந்தப் பாதத்தின் மீதமைந்த முச்சதுர, இருகட்டுத் தூண்கள் வெட்டுத் தரங்கப் போதிகைகளுடன் கூரையுறுப்புகள் தாங்கும் நடைக்கூரையில் தாமரைப்பதக்கமும் புராணக் காட்சிகளும் வரையப்பட்டுள்ளன. கோபுரவாயிலின் இடப்புறத்தே காணப்படும் அலங்கரிப்பற்ற மற்றொரு வாயில் பூட்டப்பட்டுள்ளது. அதனருகே மணிக் கூண்டு மண்டபம் உள்ளது. வளாகத்தின் கிழக்கிலும் மேற்கிலும் மதிலையொட்டிக் காணப்படும் வண்டிக்கூடு கூரை பெற்ற மண்டபங்கள் வெறுமையாக உள்ளன.

மேற்கு மண்டபத்தையடுத்துள்ள ஒருதள நாகர விமானத்தில் தேவியருடன் ஐயனார் அமர்ந்துள்ளார். நந்தவனத்தை அடுத்துக் கிழக்குப் பார்வையாக உள்ள மூன்று ஒருதள வேசர விமானங்களில் முறையே பிள்ளையார், தேவியருடன் முருகன், யானைத்திருமகள் உள்ளனர். தென்பார்வையாக வடக்கு மதிலை ஒட்டியுள்ள ஒருதள வேசர விமானத்தில் கலைமகள் இடம் பெற்றுள்ளார். இத்திருமேனிகள் அனைத்துமே அண்மைக் காலத்தவை. முருகன் திருமுன் வாயிலின் இருபுறத்தும் காவலர்கள் காட்டப்பட்டுள்ளமை மாறுபட்ட அமைப்பாகும்.

வளாகத்தின் வடக்கில் அண்மைக் கால மண்டபக் கட்டுமானத்துள் சண்டேசுவரரின் ஒருதள வேசர விமானம் சிறைப்பட்டுள்ளது. சடைப்பாரம், பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, முப்புரிநூல், உதரபந்தம், தோள், கை வளைகள் பெற்று சுகாசனத்தில் உள்ள சண்டேசுவரரின் வலக்கை மழு காண்டிருக்க, இடக்கை தொடைமீது உள்ளது. வடகிழக்கில் உள்ள ஓடு வேயப்பெற்ற மண்டபத்தில் பைரவர், சூரியன், ஒன்பான்கோள்கள் இடம்பெற்றுள்ளன. மண்டபத்தை அடுத்து முத்தளக் கிழக்குக் கோபுர வாயிலும் தென்புறத்தே குளமும் உள்ளன. கோபுர வாயிலுக்குச் சற்றே வடக்கில் இருக்குமாறு காயாரோகணர், நீலாயதாட்சி திருமுன்கள் அமைந்துள்ளன. இறைவன் கிழக்குப் பார்வையாகவும் நீலாயதாட்சி தெற்கு நோக்கியும் உள்ளனர்.

## இறைவன் திருமுன் பெருமண்டபம்

இறைவி, இறைவன் திருமுன்களுக்குப் பொதுவாக அமைந்துள்ள பெருமண்டபம் கிழக்கிலும் தெற்கிலும் திசைக்கு மூன்று வாயில்கள் பெற்றுள்ளது. அவற்றுள் நடுவாயில்கள் முன்றில் பெற்றுள்ளன. கிழக்கு நடுவாயிலின் முன் பலித்தளமும் நந்தியும் பெற்றுக் காரைக் கட்டடமாக நெடிய நான்முகத் தூண்களு டன் அமைந்துள்ள நடை, கோபுர வாயில் நோக்கி நீள்கிறது. முன்றில் கூரையை முச்சதுர, இருகட்டு உடல் பெற்ற தூண்கள் பூமொட்டுப் போதிகைகளுடன் தாங்குகின்றன. கபோதம் நன்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. பக்கவாயில்கள் மூன்று படிகளுடன் முகலாயர் பாணியில் வளைவு பெற்றுள்ளன.

தெற்கு முன்றிலைத் தாவுயாளித் தூண்கள் பூமொட்டுப் போதிகைகளுடன் தாங்குகின்றன. கபோதத்தின் மேலுள்ள வேதிகையின் முகப்பில் அமர்நிலையில் நீலாயதாட்சியின் சுதை வடிவம் காட்டப்பட்டுள்ளது. நடுவாயிலும் வளைவுக் கூரை பெற்றுள்ள பக்க வாயில்களும் யாளித்தூண்களால் அணைக்கப்பட்டுள்ளன. பெருமண்டபக் கூரையைத் தாங்கும் நெடிய நான்முகத் தூண்களில் தென்புறம் உள்ளவை அம்மண்டபத்தை யும் காயாரோகணர், நீலாயதாட்சி திருமுன்களையும் திருப்பணி செய்த நாச்சியாபிள்ளை, அவர் மனைவி இவர்தம் உருவச் சிற்பங்களை உரிய கல்வெட்டுகளுடன் கொண்டுள்ளன. 2

சுவர்களில் ஆனந்தத்தாண்டவம், சிவன்உமை இணையர், சட்டநாதர், ஆலமர்அண்ணல் உள்ளிட்ட ஓவியங்கள் காணப்படும் மண்டபத்துள் வடபுறம் உள்ள நீலாயதாட்சியின் முகமண்டப வாயில் எண்முகமாய் அமைந்த தாவுயாளித் தூண்களின் அணைவுடன் கபோத அலங்கரிப்புப் பெற்றுள்ளது. இத்தூண்களின் பாதமாக அமர்யாளி காட்டப்பட்டுள்ளது. வாயிலின் இருபுறத்தும் காவற்பெண்டுகள். கருவறையில் ஆதி நீலாயதாட்சி முன்கைகளைக் காக்கும், அருட்குறிப்புகளில் கொண்டு, பின்கைகளில் அக்கமாலை, மலர்மொட்டு ஏந்தி நின்றகோலத்தில் காட்சிதருகிறார்.

**அம்மன் விமானம்**

பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றுள்ள அம்மன் விமானத்தின் கீழ்த்தளச் சாலைகள் எண்முக அரைத்தூண்களின் அணைப்புடன் புறந்தள்ளியுள்ளன. அவற்றின் பஞ்சர அலங்கரிப்புப் பெற்ற கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. இருதள நாகரமாக அமைந்துள்ள இவ்விமானத்தின் சாலைகளிலும் கிரீவகோட்டங்களிலும் அம்மனின் சுதைவடிவங்கள் இடம்பெற்றுள்ளன. அதே கட்டமைப்பில் உள்ள முகமண்டபக் கோட்டங்களும் வெறுமையாக உள்ளன.

**இறைவன் விமானம்**

பெருமண்டபத்தின் மேற்கிலுள்ள இடைமண்டபம் நந்தியைக் கொண்டுள்ளது. அம்மண்டப வாயிலின் வடபுறம் சனீசுவரன் இடம்பெற்றுள்ளார். இடைமண்டபத்தை அடுத்த முகமண்டப வாயிலைப் பக்கத்திற்கொருவராகக் காவலர்கள் காக்கின்றனர். வெறுமையாக உள்ள முகமண்டபத்தை அடுத்து இருக்கும் கருவறையில் இறைவன் இலிங்கத்திருமேனியராய் வேசர ஆவுடையாரும் பாணமும் கொண்டு ஆதிகாயாரோகணராய் எழுந்தருளியுள்ளார்.

பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத் தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள்

தாங்கும் கூரையுறுப்புகளுடன் இறைவன் விமானத்தின் கீழ்த்தளம் சாலைப் புறந்தள்ளல் பெற்றுள்ளது. மேலிரண்டு தளங்களும் வேசர கிரீவமும் சிகரமும் செங்கல் கட்டுமானங்களாய் அமைந்துள்ளன. பஞ்சர அலங்கரிப்புப் பெற்ற கீழ்த்தளச் சாலைகளில் தென்புறம் ஆலமர்அண்ணலும் மேற்கில் இலிங்கோத் பவரும் வடக்கில் நான்முகனும் இடம்பெற்றுள்ளனர். விமானக் கட்டமைப்பில் உள்ள முகமண்டபக் கோட்டங்களில் வடபுறம் மகிடாசுரமர்த்தனி காட்சிதருகிறார்.

முகமண்டபமும் ஒருதள வேசர விமானமும் பெற்றுள்ள தென்திசைக் கோட்ட ஆலமர்அண்ணல் விரிசடையராய் மகர, பனையோலைக் குண்டலங்களுடன் பின்கைகளில் பாம்பும் தீச்சுடரும் ஏந்தி, வல முன் கையைச் சின்முத்திரையிலிருத்தி வீராசனத்தில் உள்ளார். இட முன் கையில் சுவடி. அண்ணலின் இருபுறத்தும் பக்கத்திற்கிருவராய் முனிவர்கள்.

**மேருமண்டபம்**

வளாகத்தின் வடமேற்கில் சட்டநாதர் திருமுன்னின் வலப்புறம் அமைந்துள்ள மேருமண்டபத் திருமுன் ஒன்றன் பின் ஒன்றாக அமைந்த மூன்று மண்டபங்கள், ஒருதள வேசர விமானம் இவற்றைப் பெற்றுள்ளது. இவை அனைத்துமே சட்ட நாதர் திருமுன் போல வெற்றுத்தளத்தின் மீது கட்டப்பட்டுள்ளன. வெற்றுத்தளத்தின் தாங்குதளம் காணக்கூடவில்லை. அதன் நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவரும் கூரையுறுப்பு களும் பூமிதேசமும் செங்கல் கட்டுமானமாய் உள்ளன.

மேருமண்டபத்தின் முகப்பில் 7 படிகள் பெற்ற முன்றில் நான்முகத் தூண்களுடன் அமைந்துள்ளது. அதையடுத்துள்ள முன்மண்டபம் முகமண்டபக் கட்டமைப்புடன் அளவில் சிறியதாய் அமைய, பெருமண்டபம் காரைக் கட்டுமானமாய் மேற்கில் சாளரம் பெற்றுள்ளது. பெருமண்டபத்திற்கும் முக மண்டபத்திற்கும் இடைப்பட்ட ஒடுக்கத்தைக் குடப்பஞ்சரம் அலங்கரிக்கிறது. முகமண்டபமும் விமானமும் பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, பாதம் பெற்ற எண்முக அரைத்தூண்கள், பூமொட்டுப் போதிகைகள், மதலை வலபி பெற்றுக் கபோதத்

தில் முடிகின்றன. விமானத்தின் சாலைப் புறந்தள்ளல்களில் உள்ள பஞ்சர அலங்கரிப்புப் பெற்ற கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. கிரீவம், சிகரம் இவை வண்ணப்பூச்சுப் பெற்றுள்ளன.

**சட்டநாதர் திருமுன் வெற்றுத்தளம்**

வளாகத்தின் மேற்குப் பகுதியில் மேருமண்டபத்திற்குக் கிழக்கில் திருநடையின் முடிவில் சட்டநாதர் திருமுன் முன்றில், பெருமண்டபம், இடைமண்டபம், முகமண்டபம், இருதள வேசர விமானம் கொண்டு வெற்றுத்தளத்தின் மீது அமைந்துள்ளது. உபானம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, உயரக்குறைவான நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், கூடுவளைவுகளுடனான கபோதம், பூமிதேசம் பெற்றெழும் 3.41 மீ. உயர வெற்றுத்தளம் சட்டநாதர் திருமுன்னின் இடை மண்டபத்தை அடுத்துச் சற்று உள்ளடங்கி நீள்கிறது. அதன் முதற் பகுதியிலுள்ள மகரதோரணத் தலைப்பிட்ட நான்கு கோட்டங்களும் வெறுமையாக உள்ளன. முகமண்டபம், விமானம் இவற்றிற்காக உள்ளடங்கித் திரும்பும் பகுதியில் கிழக்கிலும் வடக்கிலும் மேற்கிலும் உள்ள கோட்டங்களும் வெறுமையாக உள்ளன. முன்றில்

உயரமான பாதங்களும் கண்டப்பகுதியும் பெற்றுள்ள கபோதபந்தத் துணைத்தளம் முன்றிலின் முன்னிழுக்கப்பட்ட நடுப்பகுதியின் முகப்பாகியுள்ளது. அதன் இருபுறத்தும் பக்கத்திற்கு ஏழாக அமைந்துள்ள படிகள் முன்றில் மேடைக்கு அழைத்துச் செல்கின்றன. கபோதபந்தப் பாதத்தின் மேலெழும் முன்றில் தூண்கள் மாறுபட்ட அமைப்பினவாய் நாகபந்தம் பெற்ற சதுரம், நான்முகத் தூண்களின் அணைப்புப் பெற்ற செவ்வகம், சதுரம், மீண்டும் நான்முகத் தூண்களின் அணைப்புப் பெற்ற செவ்வகம், தலையுறுப்புகள் என அமைந்துள்ளன. அவற்றின் மீதுள்ள வெட்டுத் தரங்கப் போதிகைகள் கூரையுறுப்புகளைத் தாங்குகின்றன.

**அலங்காரத் தூண்கள்**

முன்னிழுக்கப்பட்ட நடுப்பகுதியின் கூரையைத் தாங்கும் தூண்கள் ஒட்டுத்தூண்களாக எண்முகத் தூண்களையும் அவற்றின் முன்னிருக்குமாறு குதிரை வீரர்களைப் பெற்ற பெருந்தூண்களையும் பக்கத்திற்கொன்றாகக் கொண்டுள்ளன. அமர்யாளிகள் தாங்கும் இத்தூண்களின் முகப்பிலும் பக்கப் பகுதிகளிலும் வாள், கேடயம் ஏந்திய வீரர்களும் கொடி, பதாகை, குடை உயர்த்திய அலுவலர்களும் புகைப்பான் (ஹுக்கா) ஏந்திய ஊழியர்களும் இடம்பெற்றுள்ளனர்.

**ஊர்த்வதாண்டவ ஓவியம்**

முன்றிலின் சுவர்கள், தூண்களின் மேற்பகுதிகள், கூரை என அனைத்தும் ஓவியங்களால் நிரப்பப்பட்டுள்ளன. அவற்றுள், சிவபெருமானின் ஊர்த்வதாண்டவம் காட்டும் கிழக்குச் சுவர் ஓவியம் சிறப்பாக உள்ளது. மகர, பனையோலைக் குண்டலங்களுடன் வலக்காலை உயர்த்தி, இடக்காலை முயலகன் மீது இருத்தி, புலித்தோல் ஆடை அணிந்து, முப்புரிநூல், உதரபந்தம் இவற்றுடன் எட்டுக்கைகளிலும் மலர்ச்செண்டுகள் சுற்றி ஊர்த்வதாண்டவமிடும் இறைவனின் சடைமகுட முகப்பில் மண்டையோடு; இடப்புறம் பிறை. வலக்கைகளில் முன்கை காக்கும் குறிப்பில் அமைய, பிற கைகளில் கீழிருந்து மேலாகத் தூபக்கலசம், பாம்பு சுற்றிய உடுக்கை, பரசு இவை அமைந்துள்ளன. இடக்கைகளில் முன்கை தொடையில் அமர, பிற கைகளில் கீழிருந்து மேலாக மணி, தீ, மான் உள்ளன.

ஆடும் இறைவனின் வலப்புறம் பின்கைகள் பாசம், அங்குசம் ஏந்த முன்கைகள் தந்தம், மோதகம் கொள்ள, இடம் புரியாய் ஊர்த்வஜாநுவில் பிள்ளையாரும் அவரை அடுத்துத் தாளம் ஒலிப்பவர்களாய் நான்முகன், பிருங்கி இவர்களும் வீணையுடன் நாரதரும் பதஞ்சலி உள்ளிட்ட முனிவர்களும் நிற்க, இடப்புறம் வலக்கையில் வேலேந்தி, இடக்கையை அர்த்தரேசிதத்தில் வீசி ஊர்த்வஜாநுவில் முருகன் காட்சிதருகிறார். அவருக்கு இடப்புறம் சக்கரத் தளத்தில் இருத்திய ஐமுகக் குடமுழவை அக்கறையுடன் வாசிக்கும் விஷ்ணுவும் அடுத்து மத்தளத்துடன் நந்தியும் வீணையுடன் தும்புருவும் முனிவர்

களுடன் நிற்கின்றனர். இவ்வரிய ஊர்த்வதாண்டவக் காட்சி முன்றிலுக்குப் பெருமையும் எழிலும் சேர்க்கிறது.

**பெருமண்டபம்**

பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றுள்ள பெருமண்டபத்தின் சுவரில் காணப்படும் மகரதோரணத் தலைப்பிட்ட மூன்று கோட்டங்களும் வெறுமையாக உள்ளன. பூமொட்டுப் போதிகைகளுடன் பெருமண்டபக் கூரை தாங்கும் தூண்கள் கபோத பந்தப் பாதம், நாகபந்தத்துடனான செவ்வகம், எண்முக உடல், தலையுறுப்புகள் கொண்டுள்ளன. தூண்களின் செவ்வகங்களுள் சில, சிற்பங்கள் பெற்றுள்ளன. அவற்றுள் மகிடாசுரமர்த்தனியின் சிற்பம் குறிப்பிடத்தக்கது. மண்டபத்தின் வடகிழக்கிலும் வடமேற்கிலுமுள்ள மேடைகளில் ஆடவல்லான் உள்ளிட்ட செப்புத்திருமேனிகள் இடம்பெற்றுள்ளன. மண்டபச் சுவர்களும் கூரையும் ஓவியங்கள் பெற்றுள்ளன. இருபுறச் சுவர்களிலும் மேலிருக்குமாறு காட்டப்பட்டுள்ள போதிகைகளின் முகப்புகளில் பூதங்களின் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன.

**இடைமண்டபம்**

பெருமண்டபக் கட்டமைப்பிலேயே அமைந்துள்ள இந்த மண்டபச் சுவரின் மகரதோரணத் தலைப்பிட்ட கோட்டம் வெறுமையாக உள்ளது. மண்டபக் கூரையை முச்சதுர, இரு கட்டு உடல் பெற்ற தூண்கள் வெட்டுத் தரங்கப் போதிகைகளுடன் தாங்குகின்றன. தூண்களின் கீழ், இடைச் சதுரங்கள் நாகபந்தம் பெற்றுள்ளன. மண்டப வாயிலில் இருபெரும் குத்து விளக்குகள் காட்சிதருகின்றன.

**முகமண்டபம்**

பெருமண்டபம் இடைமண்டபம் போலவே கட்டமைப்புப் பெற்று, விளக்குத் தோரணத்துடனான வாயிலுடன் விளங்கும் முகமண்டபத்தின் சுவர்க் கோட்டங்கள் வெறுமையாக உள்ளன வாயிலின் இருபுறத்தும் காணப்படும் விமானச் சுற்றுக்கான வழி அடைபட்டுள்ளது. மண்டபத்துள் பலித்தளம் அமைந்துள்ளது.

**விமானம்**

பத்மஉபானம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகளுடன் 4,76 மீ. பக்க முடைய சதுரமாய் விளங்கும் விமானத்தின் கீழ்த்தளம் முப்புறத்தும் மகரதோரணத் தலைப்பிட்ட கோட்டங்கள் கொண்டுள்ளது. மேற்றளமும் வேசர கிரீவம், சிகரம் இவையும் செங்கல் கட்டுமானங்களாக அமைய, சுவர்க் கோட்டங்களும் ஆரஉறுப்புகளும் கிரீவகோட்டங்களும் வெறுமையாக உள்ளன. சட்டநாதர்

கருவறையில் பித்தளைத் தகடு அலங்கரிப்புப் பெற்ற மேடையில் சட்டநாதரும் அவர் தேவி அமிர்வல்லியும் இடம் பெற்றுள்ளனர். பத்துத் திருக்கைகளுடன் நின்றகோலத்தில் காட்சிதரும் சட்டநாதரின் வலக்கைகளில் முன்கை காக்கும் குறிப்புக் காட்ட, பிற கைகளில் சூலம், கத்தி, அங்குசம், உடுக்கை உள்ளன. இடக்கைகளில் முன்கை உருள்பெருந்தடி மேல் அமர, பிற இடக்கைகளில் தலையோடு, கேடயம், பாசம், பாம்பு இவை உள்ளன. சட்டநாதரின் இடப்புறம் வலக்கையைக் கடகத்தில் கொண்டு, இடக்கையை நெகிழ்த்தியுள்ள தேவி அண்மைக் காலத்தவர்.

**குறிப்புகள்**

1. இம்மாடக்கோயிலை அறிமுகப்படுத்தியவர் திரு. கா. இராமச் சந்திரன். ஆய்வு நாள் 30.5.2010. உடனிருந்து உதவிய திரு. யோ. மோகன் குருக்கள் நன்றிக்குரியவர்.

2. இக்கல்வெட்டுகளைக் கண்டுபிடித்தவர் கா. இராமச்சந்திரன். படித்துப் படியெடுத்தவர் பேராசிரியர் முனைவர் மு. நளினி.

-----------------------------------------------------

# 16. கீழ்வேளூர்

நாகபட்டினம் திருத்துறைப்பூண்டிச் சாலையில் சிக்கலுக்கு 5 கி.மீ. தொலைவில் உள்ள கீழ்வேளூர் கேடிலியப்பர் கோயில்.1 பாடல் பெற்ற மாடக்கோயிலாகும்.2 அதன் ஐந்து நிலைக் கோபுரம் சுதையுருவங்களால் நிறைந்துள்ளது. கபோதபந்தத் துணைத்தளம், கபோதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, எண்முக அரைத்தூண்கள் சூழ்ந்த சுவர், பூமொட்டுப் போதிகை கள் தாங்கும் கூரையுறுப்புகள் என அமைந்துள்ள அதன் முதல் தளம் குடப்பஞ்சரங்களும் கோட்டப்பஞ்சரங்களும் கொண்டுள்ளது. மேற்றளங்கள் செங்கல் கட்டுமானங்களாய் ஆரஉறுப்புகளுடன் பொலிந்து சாலை சிகரத்தில் முடிகின்றன.

### வெளிச்சுற்று

வெளிச்சுற்றின் தென்புறத்தே உள்ள கருங்கல் கட்டுமானம் பத்மஉபானம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி பெற்றுச் சுவர்களோ, கூரையுறுப்புகளோ இல்லாமல், திராவிட கிரீவம், சிகரம் கொண்டு வேசரக் குடத்துடன் காட்சிதருகிறது. அதன் பெரு, குறுநாசிகைகள் நான்முக அரைத்தூண்களால் அணைக்கப்பட்டுள்ளன. பெருநாசிகைகள் கோட்டப்பஞ்சரங்களாகவும் குறுநாசிகைகள் பஞ்சரங்களாகவும் வடிவமைக்கப்பட்டு வெறுமையாக உள்ளன. வேதிகைக்கு மாற்றாகப் பெருநாசிகைகளில் கபோதமும் குறுநாசிகைகளில் பெருவாஜனமும் காட்டப்பட்டுள்ளன. இக்கட்டுமானத்தின் மேற்கில் யானைத் திருமகள் திருமுன் உள்ளது.

வெளிச்சுற்றின் தெற்கு, மேற்குச் சுவர்களிலும் வடக்குச் சுவரின் மேற்குப்பகுதியிலும் பல்லக்குப் பயணிகள், இசைக்குழு, தேரோட்டம், வேட்டை, அரச ஊர்வலம், இறைப்பல்லக்கு, ஒட்டகப் பயணி, மராத்திய வீரர்கள், யானையின் பிள்ளைப் பேறு, ஆடவல்லான், பிச்சைபெறும் அண்ணல் இவற்றுடன் பாலுணர்வுச் சிற்பங்களும் மராத்தியர் காலப் பணியாக பெற்றுள்ளன.

### இடைச்சுற்று

இரண்டாம் நுழைவாயிலாக அமைந்துள்ள மூன்று நிலைக் கோபுரத்தின் முன், தூண் மண்டபமும் வடபுறத்தே பெரு

மண்டபமும் உள்ளன. கபோதபந்தத் துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம் பெற்று எழும் கோபுரத்தின் தளங்களிலும் ஆரஉறுப்புகளிலும் முதற் கோபுரம் போலவே சுதைச் சிற்பங்கள் இவ்வாயில் வழிப் பெருகும் இடைச்சுற்றின் நடுவில்தான் சோமாஸ்கந்தர், கேடிலியப்பர் விமானங்களைத் தாங்கும் வெற்றுத்தளம் அமைந்துள்ளது. சுற்றின் வடகிழக்கில் கதிரவன், பைரவர், விசுவநாதர் திருமேனிகள் உள்ளன. வடகிழக்கு மூலைத் திருமுன்னில் அஞ்சுவட்டத்தம்மன் மூலவர் வடிவிலும் உற்சவர் வடிவிலும் உள்ளார்.

சுற்றின் தென்கிழக்கில் மாடக்கோயிலுக்கான படிக்கட்டுகளை ஒட்டி விசுவநாதர், முருகன் திருமுன்கள் உள்ளன. முருகன் திருமுன் இருதள வேசரமாய் அமைந்துள்ளது. படிக்கட்டுகளின் வடபுறம் கொடுங்கை விநாயகர் உள்ளார். சுற்றின் தென் மேற்குப் பகுதியில் உள்ள மாளிகையில் ஒருதள வேசர விமானத்தில் விசுவநாதரும் தொடர்ந்துள்ள பகுதியில் திருத்தொண்டர்களும் இடம்பெற்றுள்ளனர்.

சுற்றின் மேற்குப் பகுதியில் பத்ரிவிநாயகர், அகத்தீசுவரர், ஆளுங்கோவேசுவரர், விசுவநாதர், அஷ்டலட்சுமி, ஜம்புகேசுவரர், கயிலாசநாதர் திருமுன்கள் அமைந்துள்ளன. அவை அனைத்துமே ஒருதள விமானங்களாக வேசர, நாகர, திராவிட சிகரங்களுள் ஒன்றைப் பெற்று அமைந்துள்ளன. சுற்றின் வட மேற்கிலுள்ள ஒருதள வேசர விமானத்தில் முன்னால் மூன்று மண்டபங்கள் பெற்று வனமுலை அம்மை சமபங்கத்தில் எழுந்தருளியுள்ளார். பின்கைகளில் அக்கமாலையும் மலர்மொட்டும் ஏந்தியுள்ள அம்மையின் முன்கைகள் காக்கும் குறிப்பிலும் கடியவலம்பிதத்திலும் உள்ளன.

வடபுற மதில் சுவரில் அனுமார் சிற்பம் வழிபாட்டில் உள்ளது. மேற்குச் சுவரில் தென்புறத்தே உள்ள கோட்டங்களில் ஒன்றில் வணக்க முத்திரையில் வடமலைப்பிள்ளை கட்டளை தாரரின் சிற்பமும் மற்றொன்றில் மராத்திய அரசர்கள் துக்காஜி, துளஜாஜி சிற்பங்களும் உள்ளன. பாவாடை போன்ற கீழாடை அணிந்து திறந்த மார்புடன் விளங்கும் அரசர்தம் இடுப்பின் இடப்புறத்தே கத்தியொன்று செருகப்பட்டுள்ளது. கீழே மராத்தி

யில் உள்ள நாகரிக் கல்வெட்டு, சுற்று மதிலை துளஜாஜி எடுத்த தகவலைத் தருகிறது. பிறிதொரு கோட்டத்தில் இறைவனும் இறைவியும் நந்தியுடன் காட்சிதருகின்றனர்.

சுற்றின் வடபுறத்தே பிரகதீசுவரர், அண்ணாமலை ஈசுவரர், ஏகாம்பரர், காளஹஸ்தீசுவரர், குபேரர், காயாரோகணர், சோழீசுவரர் திருமுன்களும் வடகிழக்கில் ஆடவல்லான், உற்சவர் பாலசுப்பிரமணியர் திருமுன்களும் உள்ளன. மாடக்கோயிலின் உள்மண்டப வெற்றுத்தளம் ஒட்டிச் சண்டேசுவரர் திருமுன் ஒருதள நாகரமாய் அமைந்துள்ளது.

**பெருமண்டப வெற்றுத்தளம்**

4. 10 மீ. உயரமுள்ள பெருமண்டப வெற்றுத்தளம் உபானம், ஜகதி, எண்பட்டைக் குமுதம், கம்புகளால் தழுவப்பட்ட பாதங்கள் பெற்ற கண்டம், கபோதம், பூமிதேசம் இவற்றாலான கபோதபந்தத் தாங்குதளத்தின் மீது எழுகிறது. மேலே வேதிகை, நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள். சுவரில் பரவலாகக் காணப்படும் கோட்டங்களுள் சில மகரதோரணத் தலைப்புக் கொள்ள, பிற, பஞ்சரங்களாக அலங்கரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றில் மட்டும் பிச்சையேற்கும் அண்ணலின் சிற்பம் இடம்பெற்றுள்ளது.

மிதியடி அணிந்த கால்களில் வலக்காலைச் சற்றே முன் நிறுத்தி நடக்கும் மெய்ப்பாட்டில் காட்சிதரும் அண்ணலின் இட முன் கை இடக்கை எனும் தோல்கருவி கொண்டிருக்க, வலக்கை குணில் கொண்டு அதை இயக்குகிறது. வலப் பின் கை மானுக்குப் புல் தர, இடப் பின் கையில் மயிற்பீலிக் கவரி தொங்கும் முத்தலைஈட்டி. அடர்த்தியான சடைக்கற்றைகளுடனான சடைமகுடம், வலச்செவியில் மகரகுண்டலம், இடச் செவியில் பனையோலைக் குண்டலம், அக்கமாலை, தோள், கை வளைகள், பதக்கமாலை, சிம்மமுக அரைக்கச்சு இறுத்தும் இடைக்கட்டுடனான சிற்றாடை, வீரக்கழல், கால் சரங்கள் கொண்டு விளங்கும் இறைவனின் இடப்புறம் சடைப்பாரம், அக்கமாலை, சிற்றாடை கொண்டு விளங்கும் பூதம் நீளமான குடையொன்றை இறைவன் தலைக்காய்ப் பிடித்துள்ளது.

வலப்புறம் பிச்சையேற்கும் பாத்திரத்தைத் தலையில் சுமந்தபடி மற்றொரு பூதம்.

மகரதோரணக் கீழ், மேல் வளைவுகள் சிலவற்றில் சிற்பங்கள் உள்ளன. அவற்றுள், பூதம் ஒன்றின் ஆடல், ஒருக்கணித்த நிலையில் உள்ள கந்தருவர் தலை இவை குறிப்பிடத்தக்கன. இரண்டு குரங்குகள் எதிரெதிர் நோக்கியவாறு அமர்ந்திருக்கும் மகரதோரணத்தின் மேல் வளைவுகளுள் முதல் வளைவு இசைப் பூதங்களைக் கொண்டிருக்க, இரண்டாம் வளைவு பல்லவர் மரபொட்டி இறகு விரித்த அன்னங்களைக் கொண்டுள்ளது. ஒரு மகரதோரணத்தில் அதன் கீர்த்திமுகத் தலைப்பைக் கிளிகள் கொத்துமாறு போலக் காட்டப்பட்டுள்ளது. மற்றொன்றில் கிளிகளுக்கு மாற்றாக அணில்கள் உள்ளன.

பெருமண்டப வெற்றுத்தளச் சுவரில் ஒட்டப்பட்டுள்ள பஞ்சரங்கள் துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம், வேதிக் கண்டம், நான்முக அரைத்தூண்கள் தழுவும் கோட்டம், பூமொட்டுப் போதிகைகள், கூரையுறுப்புகள், வெறுமையான கிரீவகோட்டம் பெற்று வெற்றுத்தளக் கபோதத்தில் சிகரம் கொண்டு முடிகின்றன.

வெற்றுத்தளத்தின் மேலே வேதிகையும் நான்முகத் தூண்கள் தழுவும் சுவரும் அமர் சிம்மத்துடன் பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகளும் கொண்டு பெருமண்டபம் அமைய, மேலே, தெற்கில் சுதையுருவங்கள். அவற்றுள் பாலுணர்வை வெளிப்படுத்துவனவே மிக்குள்ளன.

**சோமாஸ்கந்தர் திருமுன் வெற்றுத்தளம்**

கபோதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முகஅரைத் தூண்கள் சூழ்ந்த சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் இவற்றுடன் கூடுவளைவுகள், சிற்றுருவச் சிற்பங்கள், கோணப்பட்டம் பெற்ற கபோதம் கொண்டு அமைந்துள்ள வெற்றுத்தளம், மேற்கில் அகலமாகவும் தெற்கில் குறுகியும் அமைந்து, சோமாஸ்கந்தர் விமானத்தையும் முக மண்டபத்தையும் தாங்குகிறது. எண்முக அரைத்தூண்களால் அணைக்கப்பட்ட அதன் புறந்தள்ளிய சாலைப்பத்திகளில் உருளை அரைத்தூண்களால் அணைக்கப்பட்டுள்ள கோட்டப்

பஞ்சரங்கள் தெற்கில் வீணையேந்தி அமர்ந்த சிவபெருமானையும் மேற்கில் இலிங்கோத்பவரையும் கொண்டுள்ளன. சாலைப் பத்தியின் தாங்குதளம் குமுதத்திற்கு மாற்றாகப் பெருந்தாமரை பெற்றுள்ளது.

உத்குடியில் வலக்காலை முயலகன் மீது இருத்தி, முன் கைகளால் வீணை மீட்டும் சிவபெருமானின் பின்கைகளில் வலப்புறம் பாம்பு; இடப்புறம் தீச்சுடர். சடைமகுடம், மகர, பனையோலைக் குண்டலங்கள், சவடி, சரப்பளி, தோள், கை வளைகள், உதரபந்தம், வீரக்கழல், சிற்றாடை அணிந்துள்ள இறைவனின் தலைமுடியருகே கிளியொன்றும் வீணையின் மேற்புறத்தே அணிலொன்றும் காட்டப்பட்டுள்ளன. மகுட முகப்பில் மண்டையோடு. இறைவன் இருக்கையின் கீழ்ப்பகுதி யில் அவர் காலுக்கு வலப்புறம் ஒரு பெரியவரும் இடப்புறம் மூன்று பெரியவர்களும் மூன்று இளைஞர்களும் காட்டப்பட்டுள்ளனர்.

இடப்புறம் உள்ளவர்களில் ஒருவர் வலப்புறப் பெரியவர் போல நிற்க, இரண்டு முதியவர்கள் அமர்ந்துள்ளனர். மூன்று இளைஞர்களுள் ஒருவர் வணக்க முத்திரையில் அமர்ந்திருக்க, மற்றொருவர் முழங்கால்களை மடக்கி அவற்றைக் கைகளால் அணைத்தபடி காட்சிதருகிறார். வியப்பூட்டும் இந்தச் செவிச் செல்வக் கூட்டம் கீழ்வேளூரின் தனிச்சொத்து எனலாம்.

மேற்குக் கோட்டத்தில் கோளத்திறப்பில் காட்சிதரும் சடைமகுடம், மகர, பனையோலைக் குண்டலங்கள், உதரபந்தம், தோள், கை வளைகள் அணிந்த இலிங்கோத்பவர் பின்கைகளில் மானும் மழுவும் ஏந்தி, வல முன் கையில் காக்கும் குறிப்புக் காட்டி, இட முன் கையைக் கடியவலம்பிதத்தில் கொண்டுள் ளார். கோளத்தைச் சுற்றிலும் தீச்சுடர்கள்.

முகமண்டபத்திற்கான வெற்றுத்தளம் விமான வெற்றுத் தளக் கட்டமைப்பிலேயே சிறிய அளவினதாக அமைந்துள்ளது. அதன் தென்கோட்டத்தில் முயலகன் முதுகில் இடப்பாதத்தைத் திரயச்ரமாக நிறுத்தி, வலப்பாதத்தை ஸ்வஸ்திகமாய் இடக் காலின் முன் அக்ரதலசஞ்சாரத்தில் அமைத்து நின்றவாறு முன்கைகளால் சிம்மமுக வீணையை வாசிக்கும் தென்திசைக்

கடவுளின் பின்கைகளில் வலப்புறம் பாம்பு, இடப்புறம் தீயகல் சடைப்பாரம், மகர, பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, இடைக்கட்டுட டனான சிற்றாடை, முப்புரிநூல், உதரபந்தம், தோள், கை வளைகள், கால்சரம் இவற்றுடன் காட்சிதரும் இறைவனின் கீழுள்ள முயலகன் வல ஒருக்கணிப்பில் உள்ளார்.

**சோமாஸ்கந்தர் விமானம்**

இருதளத் திராவிடமாக உள்ள சோமாஸ்கந்தர் விமானத்தின் பாதபந்தத் தாங்குதளம் பெற்ற கீழ்த்தளப் பத்திகள் அனைத்துமே புறந்தள்ளியுள்ளன. தாங்குதளத்திற்கு மேல் வேதிகைத்தொகுதியும் எண்முக அரைத்தூண்கள் அணைத்த சுவரும் பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகளும் உள்ளன. சில தூண்களின் பாதமுகப்புகளில் சிறிய அளவிலான விமானங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

பத்திகளில் வேதிகைக்கு மாற்றாகக் கபோதம். அனைத்துத் தூண்களும் நாகபந்தம் பெற்ற சதுரபாதங்களின் மீதே எழுகின் றன. கர்ண, சாலைப்பத்திகளுக்கு இடைப்பட்ட ஒடுக்கத்தில் குடப்பஞ்சரம் உள்ளது. சாலைப்பத்திகளை எண்முக அரைத் தூண்களும் கர்ணபத்திகளை இந்திரகாந்த (பல மடிப்பு) அரைத் தூண்களும் அணைத்துள்ளன. சாலைப்பத்திகளில் உள்ள கோட்டப் பஞ்சரங்களில் தெற்கில் வீணையேந்திய சிவபெருமானும் மேற்கில் வேணுகோபாலரும் உள்ளனர். வடக்குக் கோட்டம் வெறுமையாக உள்ளது.

முன்கைகளால் வீணை இசைக்கும் பெருமானின் பின்கைகளில் அக்கமாலையும் தீச்சுடரும் அமைய, தலையில் சடைப்பாரம். வலக்காலை இடக்கால் முன் ஸ்வஸ்திகமாக்கி சூசியில் நிறுத்தி, முன்னிரு கைகளால் குழல் வாசிக்கும் கண்ணனின் பின்கைகளில் சங்கும் சக்கரமும் உள்ளன. இடைக்கச்சு மணி களால் அழகுபடுத்தப்பட்டுள்ளது. தலையில் கிரீடமகுடம்.

முதல் தள ஆரச்சாலைகள் தெற்கில் வீணையேந்திய சிவபெருமானையும் மேற்கில் விஷ்ணுவையும் வடக்கில் நான்முகனையும் நின்றகோலத்தில் கொண்டுள்ளன. குறுகலான இரண்டாம் தளத்தை அடுத்தமைந்துள்ள கிரீவம், சிகரம் ரண்டும் திராவிடமாக உள்ளன. கிரீவகோட்டங்களில்

ஆலமர்அண்ணல், விஷ்ணு, நான்முகன் மூவரும் அமர்நிலையில் உள்ளனர்.

**முகமண்டபம்**

புறந்தள்ளல் அற்ற நிலையில் விமானத்தை ஒத்த கட்டுமானத் துடன் விளங்கும் முகமண்டபத்தின் தெற்கு, வடக்குக் கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. கூரையின் மேலே சிவபெருமானின் ஸ்வஸ்திக ஆடல் உட்பட்ட பல சுதையுருவங்கள். முன்னாலுள்ள பெருமண்டபத்தின் தென்மேற்கில் விளங்கும் வாயில் வழியாக சோமாஸ்கந்தர் விமானத்தையும் முகமண்டபத்தையும் வலம் வரும் அளவில் பாதை உள்ளது. விமானத்திற்கும் முகமண்டபத்திற்கும் இடைப்பட்ட ஒடுக்கத்தில் உள்ள கோட்டப் பஞ்சரம் சாளரமாக்கப்பட்டுள்ளது.

**கேடிலியப்பர் விமானம்**

**வெற்றுத்தளம்**

சோமாஸ்கந்தர் திருமுன்னிற்கான வெற்றுத்தளத்தை ஒத்து அமைந்துள்ள கேடிலியப்பர் விமான வெற்றுத்தளத்தின் தாங்குதளத்தில் குமுதத்திற்கு மாற்றாகப் பெருந்தாழரையே காணப்படுகிறது. குமுதமற்ற கபோதபந்தத் தளம், கோட்டப் பஞ்சரத்துடன் புறந்தள்ளிய சாலைப்பத்திகள் பெற்ற நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றுள்ள இவ்வெற்றுத்தளத்தின் கபோதத்திலும் ஆங்காங்கே சிற்பங்கள் உள்ளன. கோட்டங் களில் தெற்கில் ஆலமர்அண்ணலும் மேற்கில் இலிங்கோத்பவரும் வடக்கில் நான்முகனும் இடம்பெற்றுள்ளனர்.

சடைப்பாரம், மகர, பனையோலைக் குண்டலங்கள், சவடி, சரப்பளி, முப்புரிநூல், உதரபந்தம், சிற்றாடை அணிந்து, வீராசனத்தில் உள்ள ஆலமர்அண்ணலின் பின்கைகளில் பாம்பும் தீயகலும். முன்கைகளில் வலக்கை காக்கும் குறிப்புக் காட்ட, இடக்கையில் சுவடி. இறைவனின் இருபுறத்தும் உள்ள சுவர்ப்பகுதிகளில் பக்கத்திற்கிருவராக முனிவர்கள். மேற்குக் கோட்டத்தில் உள்ள இலிங்கோத்பவரின் மேற்பகுதியிலும் கீழ்ப்பகுதியிலும் பூப்பட்டைகள் சுற்றப்பட்டுள்ளன. கோளத் திறப்பில் காட்சிதரும் இறைவனின் பின்கைகளில் மான், மழு.

வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இட முன் கை கடிய வலம்பிதத்தில் உள்ளது.

இலிங்கத்திருமேனியின் மேற்புறத்தே அன்னமும் கீழ்ப் புறத்தே பன்றியும் காட்டப்பட்டுள்ளன. கோட்டத்தின் இருபுறத்தும் உள்ள சுவர்ப்பகுதிகளில் வணங்கியவர்களாய் விஷ்ணுவும் நான்முகனும் நிற்கின்றனர். வடக்குக் கோட்டத்தில் சமபங்கத்தில் பட்டாடையுடன் நிற்கும் நான்முகனின் பின்கைகளில் அக்கமாலையும் குண்டிகையும். வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இட முன் கை கடியவலம்பிதமாக உள்ளது.

முகமண்டபத்திற்கான வெற்றுத்தளம் விமான வெற்றுத் தளக் கட்டமைப்பை ஒத்துள்ளது. அதன் தென்கோட்டத்தில் பிள்ளையாரும் வடகோட்டத்தில் மகிடாசுரமர்த்தனியும் இடம் பெற்றுள்ளனர். பிள்ளையார் பின்கைகளில் அங்குசம், பாசம் ஏந்தி முன்கைகளில் தந்தம், மோதகம் கொண்டு இடம்புரியாக உள்ளார். வடகோட்டத்தில் மகிடத்தை அழிப்பவராக எட்டுக் கைகளுடன் மர்த்தனி காட்டப்பட்டுள்ளார். முன்னிரு கைகளிலும் ஏந்தியுள்ள சூலம் கீழே அமர்ந்தபடி தலையை உயர்த்திப் பார்க்கும் மகிடனின் உடலில் நுழைந்துள்ளது. பின்னிரு கைகளில் சங்கும் சக்கரமும் அமைய, இடைக்கைகளில் கத்தி, கேடயம் உள்ளன. இரண்டு கைகளில் உள்ள பொருட்களை அடையாளப்படுத்த முடியவில்லை.

**விமானம்**

கிழக்கு மேற்காக 6.73 மீ. அகலமும் தென்வடலாக 6.89 மீ. நீளமும் கொண்டுள்ள விமானக் கீழ்த்தளத்தின் சாலைப்பத்தி பிதுக்கமாய் உள்ள கர்ணபத்திகளினும் புறந்தள்ளி அமைந்துள்ளது. அதன் சற்றே புறந்தள்ளிய நடுப்பகுதியில் அகலமான கோட்டப்பஞ்சரமும் கர்ணபத்தியில் கோட்டத்துடனான சுவர்ப் பஞ்சரமும் இடம்பெற்றுள்ளன. பத்திகளுக்கு இடைப்பட்ட ஒடுக்கங்களில் குடப்பஞ்சரங்கள் காட்டப்பட்டுள்ளன. பத்திகளும் பஞ்சரங்களும் மாறுபட்ட உறுப்புகளால் அமைந்த தாங்குதளம், வேதிகை பெற்றுள்ளன.

சாலைப்பத்தி உபானம், பத்மஜகதி, உருள் குமுதம், கண்டம், கபோதம் இவற்றாலான கபோதபந்தத் தாங்குதளம், மற்றொரு

கண்டம், பெருவாஜனம் பெற, கோட்டப்பஞ்சரங்கள் கபோதபந்தத் துணைத்தளத்தின் மீது ஜகதி, இந்திரகாந்தக் குமுதம், கண்டம், பட்டிகை இவற்றாலான பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி கொண்டுள்ளன.

கர்ணபத்தி உபானம், ஜகதி, இந்திரகாந்தக் குமுதம், கண்டம், பட்டிகை கொண்ட பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி கொள்ள, அப்பத்தியில் பொருந்தியுள்ள சுவர்ப்பஞ்சரம் கபோத பந்தத் துணைத்தளத்தின் மீது, கபோதபந்தத் தாங்குதளம் பெற்று மேலே வேதிகைத்தொகுதி கொண்டுள்ளது. அதன் மேல் எழும் இந்திரகாந்த அரைத்தூண்கள் அணைத்துள்ள கோட்டத்தில் எண்திசைக் காவலர்களின் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. கோட்டத்தை மூடும் கூரையுறுப்புகள் நாகர சிகரமும் தூபியும் பெற்று முடிகின்றன.

சாலைப்பத்திகளை இந்திரகாந்தஅரைத்தூண்கள் அணைக்க, சாலைக் கோட்டங்களைச் சட்டத்தலை பெற்ற உருளை அரைத்தூண்கள் அணைத்துள்ளன. தெற்குக் கோட்டத்தில் ஆலமர்அண்ணலும் மேற்குக் கோட்டத்தில் இலிங்கோத் பவரும் வடக்குக் கோட்டத்தில் நான்முகனும் காட்டப் பட்டுள்ளனர். அனைத்து அரைத்தூண்களும் சதுரபாதங்கள் பெற்றுள்ளன. முதல் தளக்கூரையில் கிழக்கில் மட்டும் பக்கத்திற்கொன்றாகக் கர்ணகூடங்கள் காட்டப்பட்டுள்ளன.

விமானத்தின் இரண்டாம் தளத்திலும் சாலைப்பத்தி கர்ணபத்திகளினும் புறந்தள்ளியே அமைந்துள்ளது. நான்முக அரைத்தூண்கள் அணைத்துள்ள தளச்சுவர்களின் கர்ணபத்தி களில் மகரதோரணத் தலைப்பிட்ட அகலக் குறைவான கோட்டங்களும் சாலைப்பத்திகளில் பஞ்சர அலங்கரிப்புப் பெற்ற கோட்டங்களும் ஒடுக்கங்களில் மகரதோரணத் தலைப்பிட்ட கோட்டங்களும் உள்ளன. சாலைக் கோட்டங்களில் தென்புறம் ஆலமர்அண்ணலும் மேற்கில் இலிங்கோத்பவரும் வடக்கில் நான்முகனும் உள்ளனர்.

இரண்டாம் தளக் கூரை ஆறங்க ஆரஉறுப்புகள் பெற்றமைய, பின்னால் மூன்றாம் தளம். அங்கும் சாலைப்பத்தி மட்டும் புறந்தள்ளியுள்ளது. தளத்தில் தூண்களின் மேற்பகுதிகளும்

போதிகைகளும் கூரையுறுப்புகளும் காட்டப்பட்டுள்ளன. மேலே திராவிட கிரீவமும் சிகரமும் அமைந்துள்ளன. ஆரச் சாலைகளிலும் கிரீவகோட்டங்களிலும் இரண்டாம் தளம் போலவே இறைத்திருமேனிகள் உள்ளன. கிரீவகோட்டத் திருமேனிகள் நின்றகோலத்தில் உள்ளன.

விமானக் கீழ்த்தளத்தில் தெற்குக் கோட்டத்தில் உள்ள ஆலமர்அண்ணல் வீராசனத்தில் பின்கைகளில் பாம்பு, தீயகல் கொண்டு சடைப்பாரம், மகர, பனையோலைக் குண்டலங்கள், பல்வகை அணிகலன்கள் அணிந்து, இட முன் கையில் சுவடி ஏந்திக் காட்சிதருகிறார். வல முன் கை சின்முத்திரையில் உள்ளது. கோட்டத்தின் இருபுறத்தும் உள்ள சுவரில் பக்கத்திற்கிருவராக முனிவர்கள். இரண்டாம் தளத் தெற்குக் கோட்டத்தில் உள்ள வீராசன ஆலமர்அண்ணல் கீழவரைப் போலவே அமைந்துள்ளார். இட முன் கை தொடையில் படியாமல் மேல் தூக்கலாக உள்ளது. மகுட முகப்பில் மண்டையோடு.

இரண்டாம் தள ஆரச்சாலையில் உள்ள ஆலமர்அண்ணலும் வீராசனத்திலேயே காட்சியளித்தபோதும் அவரது வல ஒருக்கணிப்பு அந்த அமர்விற்கே சிறப்பளிக்குமாறு அமைந்துள்ளது. இடமுழங்கால் வலமுழங்காலின் மீது படியுமாறு அமைந்த இந்த வீராசனம் கீழையூர்த் தென்வாயில் ஸ்ரீகோயில் வீராசனத்தை ஒத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கிரீவகோட்டத்தில் முன்கைகளால் வீணை வாசித்தவாறு நிற்கும் சிவபெருமானின் பின்கைகளில் அக்கமாலையும் தீச்சுடரும் உள்ளன.

விமானக் கீழ்த்தள மேற்குக் கோட்டத்தில் காணப்படும் இலிங்கோத்பவர் வெற்றுத்தள இலிங்கோத்பவரை ஒத்துள்ளார். கோட்டத்தை அடுத்துள்ள சுவர்ப்பகுதிகளில் வலப்புறம் விஷ்ணுவும் இடப்புறம் நான்முகனும் வணங்கியவாறு காட்சி தருகின்றனர். இரண்டாம் தளக் கோட்டத்தில் விஷ்ணு பின்கைகளில் சங்கும் சக்கரமும் ஏந்தி, முன்கைகளைக் காக்கும் குறிப்பிலும் அருட்குறிப்பிலும் கொண்டு சுகாசனத்தில் உள்ளார். இரண்டாம் தள ஆரத்திலும் அதே நிலையில் விஷ்ணுவைக் காணமுடிகிறது. கிரீவகோட்டத்தில் நின்றநிலையில் காட்சி தரும் விஷ்ணுவின் முன்கைகள் காக்கும், அருட்குறிப்பில் உள்ளன. பின்கைகளில் சங்கும் சக்கரமும்.

விமானக் கீழ்த்தள வடக்குக் கோட்டத்தில் உள்ள நான்முகன், பின்கைகளில் அக்கமாலை, குண்டிகை கொண்டு, சடைமகுடம், பட்டாடை, முப்புரிநூல், உதரபந்தம் அணிந்து வல முன் கையைக் காக்கும் குறிப்பிலும் இட முன் கையைக் கடிய வலம்பிதத்திலும் அமைத்துக் காட்சிதருகிறார். கோட்டத்தை அடுத்துள்ள சுவர்ப்பகுதிகளில் பக்கத்திற்கொரு முனிவர் வணங்கிய நிலையில் உள்ளார். இரண்டாம் தளக் கோட்டத்தில் முன்கைகளில் காக்கும் குறிப்பும் அருட்குறிப்பும் காட்டி, அர்த்தபத்மாசனத்தில் உள்ள நான்முகனின் பின்கைகளில் அக்கமாலையும் குண்டிகையும். இரண்டாம் தள ஆரச்சாலை நான்முகன் தளக்கோட்ட நான்முகனை ஒத்துள்ளார். கிரீவ கோட்டத்தில் நின்றகோலத்தில் காட்சிதரும் நான்முகன் அதே கருவிகளுடன் காத்தும் அருள்செய்தும் காட்சிதருகிறார்.

விமானத்தின் இரண்டாம் தளக் கிழக்கு ஆரச்சாலையில் பின்கைகளில் சக்தி, வஜ்ரம் ஏந்தி, முன்கைகளைக் காக்கும், அருட்குறிப்புகளில் கொண்டு சுகாசனத்திலுள்ள முருகனும் கிரீவத்தில் அதே கருவிகள், அதே குறிப்புகளுடன் நின்றகோல முருகனும் காட்டப்பட்டுள்ளனர்.

**முகமண்டபம்**

முகமண்டபம் விமானத்தின் கட்டமைப்பிலேயே மூன்று விதமான தாங்குதள உறுப்பு வேறுபாடுகளுடன் ஒரு தளம் கொண்டு விளங்குகிறது. அதன் கர்ணபத்திகள் ஜகதி, இந்திர காந்தக் குமுதம், பாதங்களும் கம்புகளும் பெற்ற கண்டம், பட்டிகை, வேதிகைத்தொகுதி, நாகபந்தம் பெற்ற சதுர பாதங்களின் மீதெழும் எண்முகத் தூண்கள் சூழ்ந்த சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றமைய, சாலைப்பத்திகள் பத்மஜகதி, உருள்குமுதம், பாதங்களும் கம்புகளும் பெற்ற கண்டம், கூடுவளைவுகளுடனான கபோதம், பூமிதேசம், கண்டம், பெருவாஜனம், இந்திரகாந்த அரைத்தூண்கள் அணைத்த சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் கொள்ள, சாலைக்கோட்டங்கள் கபோதபந்தத் துணைத்தளம் பாதபந்தத் தாங்குதளம், கண்டம், கபோதம், சட்டத்தலை பெற்ற உருளைத்தூண்களின் அணைவு இவற்றுடன், கூரையுறுப்புகள், கிரீவம், சிகரம் பெற்றுப் பொலிகின்றன.

தென்கோட்டத்தில் பிள்ளையாரும் வடகோட்டத்தில் மகிடாசுரமர்த்தனியும் அமைய, முகமண்டபத்திற்கும் கருவறைக்கும் இடைப்பட்ட ஒடுக்கத்தில் சாளரம் காட்டப்பட்டுள்ளது. இடம்புரியாக நிற்கும் கரண்டமகுடப் பிள்ளையாரின் பின்கை களில் பாசமும் அங்குசமும். வல முன் கை உடைந்த தந்தம் ஏற்க, இட முன் கையில் மோதகம். மகிடத்தலைமீது பின்கைகளில் சங்கு, சக்கரம் ஏந்தி நிற்கும் மர்த்தனியின் வல முன் கை காக்கும் குறிப்பில் உள்ளது. இட முன் கை கடியவலம்பிதமாக அமைய, கரண்டமகுடம், பட்டாடை, மார்புக்கச்சு அணிந்துள்ள அம்மையின் கைகளில் வளைகள்.

**சிவபெருமானின் அர்த்தஸ்வஸ்திகக் கரணம்**

வேறெந்தத் திருக்கோயிலிலும் காணமுடியாத அரிய வகை ஆடல்நிலையில் அமைந்த சிவபெருமானின் செப்புத் திருமேனியைக் கேடிலியப்பர் கோயில் கொண்டுள்ளது. குப்புறப் படுத்திருக்கும் முயலகன் மீது இடக்காலைத் திரயச்ரத்தில் ஊன்றி, வலக்காலை இடக்காலுக்கு முன், பாதம் அக்ரதல சஞ்சாரத்தில் அமையுமாறு ஸ்வஸ்திகமாக்கி, பத்துத் திருக்கைகளுடன் கரணம் நிகழ்த்தும் இறைவனின் வல முன் கை காக்கும் குறிப்பில் இருக்க, இட முன் கை வேழ முத்திரையில் உள்ளது. வலப் பின் கைகளில் கீழிருந்து மேலாகக் கத்தி, மழு, முத்தலை ஈட்டி, உடுக்கை அமைய, இடப் பின் கைகளில் கேடயம், மாட்டுக் கொம்பு வடிவில் அமைந்த தடி, பாசம், தீச்சுடர் இவை உள்ளன.

கொக்கிறகும் மண்டையோடும் பொருந்திய சடைமகுடம், சவடி, கண்டிகை, முப்புரிநூல், உதரபந்தம், தோள், கடக, கை வளைகள், மரமேறியாடை அணிந்து ஆடும் இறைவனின் வலச்செவியில் மகரகுண்டலம், இடச்செவியில் பனையோலைக் குண்டலம். விரிசடையின் வலப்புறம் கங்கை, இடப்புறம் பிறை.

இந்நெற்றிக்கண்ணரின் இடப்புறமுள்ள இறைவி, சமபங்கத்தில் மகரகுண்டலங்கள், அரும்புச்சரம், ஸ்கந்தமாலை, தோள், கடக, கை வளைகள், பட்டாடை அணிந்து தலைச்சக்கரம் பொருந்திய சடைமகுடராய் வலக்கையைக் கடகத்தில் இருத்தி, இடக்கையை நெகிழ்த்தியுள்ளார்.

இவ்விணைக்கு முன்னால் இறைவனின் ஆடலுக்கு இசைதருபவர்களாய் நான்முகனும் விஷ்ணுவும் தத்தம் தேவியருடன் காட்சிதருகின்றனர். முன்கைகள் வீணை வாசிக்க, பின்கைகளில் அக்கமாலை, குண்டிகை ஏந்தி நிற்கும் கலைமகளுடன், செண்டு தாளம் ஏந்தியவராய்ப் பின்கைகளில் அதே கருவிகளு டன் காட்சிதருகிறார் நான்முகன். பின்கைகளில் சங்கு, சக்கரம் ஏந்தி, முன்கைகளால் மத்தளம் வாசிக்கும் விஷ்ணுவுடன், பின்கைகளில் மலர் மொட்டுகள் கொண்டு முன்கைகளால் தாளம் எழுப்பும் நட்டுவாங்க நாயகியாய்த் திருமகள் இயங்குகிறார். தமிழ்நாட்டின் வேறெந்தத் திருக்கோயிலிலும் காண முடியாத இந்த ஆடற்கூட்டம் கீவளூரின் தனிப்பெருமையாகும்.

**பெருமண்டபம்**

வெற்றுத்தளத்தின் மீது தெற்கில் சோமாஸ்கந்தர் திருமுன்னும் அதற்குச் சற்றுத் தள்ளி மேற்கில் கேடிலியப்பர் திருமுன்னும் இவற்றின் முன் இரண்டையும் இணைக்கும் பெருமண்டபமும் உள்ளன. சுற்றின் தென்கிழக்கில் அமைந்துள்ள பதினெட்டுப் படிகளின் வழியே இம்மண்டபத்தை அடையலாம். இப்படிகளின் முகப்பில் சிற்றுருவச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. படிகளின் முன்னுள்ள நடை, நாகபந்தங்கள் கொண்ட சதுர பாதங்களின் மீதெழும் நாற்சதுர, முக்கட்டுத் தூண்களும் நான்முகத் தூண்களும் பெற்றுள்ளது. நான்முகத் தூண்களின் கீழ்ப்பகுதியில் அமர் சிம்மமும் நடைப்பகுதியின் கூரையில் பிற்கால ஓவியங்களும் உள்ளன.

முச்சதுர, இருகட்டுத் தூண்கள் தாங்கும் மண்டபக் கூரையுறுப்புகளில் வலபிக்கு மேலே உள்ள கற்பலகையில் சிற்றுருவச் சிற்பங்கள் தொடராகக் காணப்படுகின்றன. வடபுறத்தே அர்த்தஸ்வஸ்திக சிவபெருமானின் செப்புத்திருமேனி அறை அமைந்துள்ளது. தென்மேற்குப் பகுதியில் சோமாஸ்கந்தர் திருமுன். அதன் முகமண்டபம் வெறுமையாக உள்ளது. கருவறையில் காணப்படும் கபோதபந்தத் தாங்குதள மேடையில் தேவ நாயகர் என்ற பெயருடன் சோமாஸ்கந்தர் தொகுதி இருத்தப் பட்டுள்ளது.

**சோமாஸ்கந்தர்**

இடப்புறம் பிறை பெற்ற சடைமகுடம், மகர, பனையோலைக் குண்டலங்கள், தோள், கை வளைகள், சிற்றாடை அணிந்து சுகாசனத்தில் உள்ள சோமாஸ்கந்த சிவபெருமானின் பின்கைகள் மான், மழு கொள்ள, வல முன் கை காக்கும் குறிப்பிலும் இட முன் கை கடகத்திலும் உள்ளன. இறைவனின் இடப்புறமுள்ள உமை, கரண்டமகுடம், மகர, பனையோலைக் குண்டலங்கள், கழுத்தணிகள், பட்டாடை அணிந்து வலக்கையில் கடகமுத்திரை காட்டி, இடக்கையைத் தளத்தின். மீது ஊன்றியுள்ளார். தனி இணைப்பாய் நின்றகோலத்தில் உள்ள முருகன் இருகைகளிலும் மலரேந்தி, பனையோலைக் குண்டலங்கள், ஸ்வர்ணவைகாக்ஷம் இவற்றுடன் காட்சிதருகிறார். இந்தத் தொகுதியின் அருகிலுள்ள தனி உமை கரண்டமகுடம், மகர குண்டலங்கள், மெல்லிய கழுத்தணிகள், கடக, கை வளைகள், முப்புரிநூல்,பட்டாடை, குறங்குசெறி, பாதசரம் அணிந்து, இடக்கையை நெகிழ்த்தி, வலக்கையைக் கடகத்தில் இருத்திக் காட்சிதருகிறார். சோமாஸ்கந்தர் திருமுன்னின் தென்புறமுள்ள வாயில் அத்திருமுன்னை வலம் வரவும் கேடியலியப்பர் விமானத்தை வலம் வரவும் வாய்ப்பளிக்கும் வெளிச்சுற்றுக்கு வழிவிடுகிறது.

**இறைவன் திருமுன்**

பெருமண்டபத்தின் வடமேற்கிலுள்ள இறைவன் திருமுன் முன்மண்டபம், முகமண்டபம், கருவறை பெற்றமைந்துள்ளது. முச்சதுர, இருகட்டுத் தூண்கள், பூமொட்டுப் போதிகைகளால் கூரை தாங்கும் முன்மண்டபத்தில் சூரியபிரபை, நந்தி உள்ளன. மண்டப நுழைவாயிலின் இருபுறத்தும் வண்ணப்பூச்சுப் பெற்ற பேரளவிலான சுதைக் காவலர்கள். முகமண்டப வாயிலின் இருபுறத்தும் உள்ள கோட்டங்களில் வலப்புறம் பிள்ளையாரும் இடப்புறம் முருகனும் உள்ளனர். வாயில் நிலைகளில் வீணைப் பெண்கள்.

மண்டபத்தின் வடமேற்கில் சடைமகுடம், மகரகுண்டலங்கள், செவிப்பூக்கள், சவடி, அரும்புச்சரம், தோள்மாலை, தோள்,

கடக, கை வளைகள், பட்டாடை, குறங்குசெறி அணிந்து இன்பவல்லி அம்மை உத்குடியில் உள்ளார். வலக்கை கடகத்தில் இருக்க, இடக்கை தளத்தின்மீது இருத்தப்பட்டுள்ளது. கருவறை வாயிலின் இருபுறத்தும் குடப்பஞ்சரங்கள் உள்ளன. கருவறையில் இறைவன் சதுர ஆவுடையாரின் மேல் உருளைப் பாணத்துடன் இலிங்கத்திருமேனியராய்க் காட்சிதருகிறார்.

## கல்வெட்டுகள்

இக்கோயிலில் இருந்து மூன்று கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. 3 அவற்றுள் இரண்டாம் இராஜராஜ சோழரின் பதினெட்டாம் ஆட்சியாண்டில் (கி. பி. 1163) வெட்டப்பட்டுள்ள கல்வெட்டு, கேயமாணிக்க வளநாட்டுத் திருவாரூர்க் கூற்றத்து உடையார் திருவாரூர் இறைவனைப் பூசிக்கும் குரவசேரி ஸ்ரீமூலத்தானம் உடையான் பட்டரும் அவரை முதுகண்ணாக உடைய பெரும்பற்றப்புலியூர் விநாயகபட்டன் பிராமணி ஆவுடையாள் சானியும் கேடிலிநாயனாருக்கு நந்தவனம் அமைக்கப் புன்செய் நிலம் அளித்ததைக் கூறுகிறது. பெரியாலத்தூரான சத்ரியசிகாமணிச் சதுர்வேதிமங்கலத்துப் பிடாகை சாத்தன்குடிக் கட்டளையில் மாத்தூர் கிழவன் காணியைப் பெருவிலைக்குக் கொண்ட குரவசேரி சிவலோகநாயக பட்டன், தூயவாமன பட்டன் மகன் கோனைபட்டன் இவர்களிடம் விலைக்குக் கொண்ட செந்தாமரைக்கண்ணன் கொல்லை, நந்தவனம் அமைக்க வழங்கப்பட்டது. நந்தவனப் பணி செய்யும் ஆண்டார்கள் குடியிருக்க இருபத்தைந்து குழி மனையும் அளிக்கப்பட்டது. இம்மனை கோட்டூருடையான் ஆளும் அரையன் ஊற்றுக்கேணிக்கு வடக்கில் இருந்தது.

இரண்டாம் இராஜராஜரின் பத்தாம் ஆட்சியாண்டில் (கி. பி. 1155) பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு இறைவனுக்குக் கிழக்கில் சன்னதித் திருவீதி இல்லாமையால் அது அமைக்கக் கேடிலிநாயனார் தேவகன்மிகளான கீழக்குடி அரையன் சிங்கபிரானும் நாராயணதேவன் சௌரிப்பெருமாளும் ஏற்பாடு செய்தமையைப் பகிர்ந்துகொள்கிறது. இவ்வீதியை ஏற்கனவே இறைவன் தெற்கு நோக்கி முன்பு எழுந்தருளின திருவீதியுடன் இணைக்கவும் முடிவானது.

கி. பி. 1775ல் வெட்டப்பட்டுள்ள மராத்திய அரசர் துளஜாவின் கல்வெட்டு நாகரியில் எழுதப்பட்டுள்ள மராத்திக் கல்வெட்டாகும். வெளித்திருச்சுற்று மன்னரால் கட்டப்பட்ட தகவலை இக்கல்வெட்டால் பெறுகிறோம். இவை தவிர, கள ஆய்வின்போது சில புதிய கல்வெட்டுகள் கண்டறியப்பட்டன. 4 தெற்குக் கோபுரத்திற்கு எதிரில் சாளரத்திற்கு அருகில் காணப்படும் கல்வெட்டு, கி. பி. 1715ல் வெட்டப்பட்டுள்ளது. மன்மத ஆண்டு வைகாசித்திங்கள், ஐந்தாம் நாள் துக்கோஜி அரசர் செய்த அறச்செயலைக் கூறும் இக்கல்வெட்டு தமிழில் உள்ளது. இரண்டாம் கோபுர வாயிலின் வடபுறக் கதவிலுள்ள பொறிப்பு கி. பி. 1619 ஈசுவர ஆண்டு கார்த்திகைத் திங்கள் 20ம் நாள் அக்கதவு செய்யப்பட்ட தகலைத் தருகிறது.

கோயிலின் மேற்குக் கோபுரத்தில் காணப்படும் கல்வெட்டுகளுள் ஒன்று வெங்கடபதியாப் பிள்ளையும் முத்தப்பப்பிள்ளையின் தமையனார் வேங்கடபதிப் பிள்ளையும் இக்கோயில் இறைவனை நித்தமும் வழிபட்டதாகக் கூறுகிறது. கல்வெட்டின் அருகே நந்தியின் மேல் இறைவனும் இறைவியும் அமர்ந்திருக்க, ஆடவர் ஒருவர் கைக்கூப்பி அவர்களை வணங்கும் சிற்பம் இடம்பெற்றுள்ளது. அதே இடத்தில் உள்ள மற்றொரு கல்வெட்டு காரி சிவலிங்க பண்டாரத்தின் கோயில் ஈடுபாட்டைக் குறிக்கிறது.

இக்கோயிலின் தூண்கள் சிலவற்றில் அவற்றையோ, அல்லது அத்தூண்கள் இடம்பெற்றுள்ள மண்டபத்தையோ எடுக்க உதவிய அருளாளர்களின் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. பெருமண்டபத்தின் வலப்புறத்தூண்கள் ஒன்றில் வணங்கிய நிலையிலுள்ள அடியவரை அங்குள்ள கல்வெட்டு, 'இவர் பதிப்பநார் பிள்ளை' என்று அடையாளப்படுத்துவதுடன், அக்கோயிலில் அவர் நாளும் வழிபாடு செய்தமையைப் பகிர்ந்து கொள்கிறது.

மாடக்கோயிலுக்கு முன்னாலுள்ள தூணொன்றில் காணப்படும் கல்வெட்டு, கி. பி. 1860ல் வெட்டப்பட்டுள்ளது. ரௌத்ரி ஆண்டுத் தைத்திங்களில் திருவோணமீன் அமைந்த நாளில்' வெட்டப்பட்டுள்ள இக்கல்வெட்டு, வெங்கிடாபதியாபிள்ளை

யின் மகன் வடமலையப்பப்பிள்ளையின் நிருவாகத்தில் இந்தக் கோயில் சபாநாயகர் சன்னதி மண்டபம் கட்டப்பட்டதாகக் கூறுகிறது. மற்றொரு தூணில் வணங்கிய நிலையில் காணப்படும் ஆடவர் சிற்பத்தின் கீழுள்ள கல்வெட்டு மலையப்பப்பிள்ளையின் மகன் வெங்கிடபதிபிள்ளையாக அவரை அடையாளப் படுத்துவதுடன், அவர் குடும்பத்தார் இக்கோயிலில் நிருவாகம் செய்த வகைமையைப் பகிர்ந்துகொள்கிறது. கேடிலியப்பர் கோயில் நிருவாகத்தை வேங்கடபதியாப்பிள்ளை ஐந்தாண்டுகளும் அவர் மகன் சேஷய்யா ராமலிங்கப்பிள்ளை முப்பது ஆண்டுகளும் கனிஷ்டா ஒந்தாச்சியாபிள்ளை இருபத்து மூன்று ஆண்டுகளும் ராமலிங்கப்பிள்ளையின் மகன் முத்துசாமிப் பிள்ளை முப்பது ஆண்டுகளும் அவர் தம்பி வடமலையப்பப்பிள்ளை நாற்பதாண்டுகளும் அவர் மகன் வேங்கடபதியாபிள்ளை நாற்பத்தெட்டு ஆண்டுகளும் மேற்கொண்டு ஏறத்தாழப் பத்து இலட்சம் ரூபாய் வரையில் செலவு செய்து கோயிலில் பல திருப்பணிகள் செய்தமையுடன் திருக்கோயிலுக்கு வேண்டிய நகைகளையும் செய்து வைத்தனர்.

## குறிப்புகள்

1. 2:105, 6:67. ‘கலைநிலாவிய நாவினாற் காதல்செய் பெருந் திருக்கோயில்’, ‘பெருந்திருக்கோயில் எம்பெருமான்' எனும் சம்பந்தரின் பாடலடிகளும், 'போகாது என்னுள் புகுந்து இடம்கொண்டு என்னை ஆண்டானை' எனும் அப்பர் பெருமானின் பாடலடியும் குறிப்பிடத்தக்கன.

2. ஆய்வு நாட்கள் 21.8.1982, 28.9.2008. இக்கோயில் பற்றிய முதல் கட்டுரை, 'கீழ்வேளூர் மாடக்கோயில்' என்ற தலைப்பில் திருக்கோயில், ஜூலை, ஆகஸ்டு, 1983 இதழில் வெளியானது.

3. SII 7:558, 559, 560.

4. இக்கல்வெட்டுகள் பேராசிரியர் முனைவர் மு. நளினியால் கண்டறியப்பட்டுப் பதிவு செய்யப்பட்டன.

-------------------------------------------

## 17. சிக்கல்

நாகபட்டினம் கீழ்வேளூர்ச் சாலையில் 5 கி. மீ தொலைவில் அமைந்துள்ளது சிக்கல்1 சிவபெருமானின் பாடல் பெற்ற கோயிலாக 2 அமைந்திருந்தபோதும் சுற்றாலைத் தெய்வமான முருகன் முதன்மை பெற்றதால் சிங்காரவேலவர் கோயிலாகப் பெயர் மாறியிருக்கும் இம்மாடக்கோயில் ஏழு தளங்களுடன் அமைந்த முதற் கோபுரத்தையும் மூன்று தளங்களுடன் அமைந்த இரண்டாம் கோபுரத்தையும் பெற்றுள்ளது. இரண்டு கோபுரங்களுமே சுதையுருவங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. இந்த வாளகத்திற்குள்ளேயே கோலவாமனப் பெருமாளின் திருமுன்னும் அமைந்திருப்பதால் அதற்கெனக் கிழக்கில் ஒரு வாயில் காணப்படுகிறது.

முதற் கோபுரத்திற்கும் இரண்டாம் கோபுரத்திற்கும் இடையிலுள்ள நடைப்பகுதியை முச்சதுர, இருகட்டுத் தூண்கள் வெட்டுத் தரங்கப் போதிகைகளின் துணையோடு தாங்குகின்றன. தூண்களின் கீழ்ச்சதுரங்களில் நாகபந்தங்கள். இரண்டாம் கோபுர வாயிலருகே வடக்கில் முருகனும் தெற்கில் பிள்ளையாரும் உள்ளனர். கோபுர வாயிலை அடுத்த மண்டபச் சுற்று கிழக்கில் மண்டபமாக விரிந்து தெற்கு, மேற்கு, வடக்கு முத்திசைகளிலும் மாடக்கோயிலின் சுற்றாக வளர்கிறது. அதன் மண்டபக் கூரையை இருசதுரம், இருகட்டு என்ற அமைப்பில் தாய்த் தூணும் நான்முகமாக துணைத்தூணும் இணைந்த ஒட்டுத்தூண்கள் பூமொட்டுப் போதிகைகள் உதவியுடன் தாங்குகின்றன.

தூண்களின் கீழ்ச்சதுரங்கள் சிலவற்றுள் சிற்பங்கள் காணப்படுகின்றன. மண்டபத்தின் வடபுறத்தே உள்ள இருதள நாகர விமானத்தில் வேல்நெடுங்கண்ணி என்ற திருப்பெயருடன் இறைவி எழுந்தருளியுள்ளார். அடுத்துள்ள திருமுன் பள்ளியறையாக்கப்பட்டுள்ளது.

### அம்மன் கோயில்

துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் கொண்டு இருதள

நாகரமாக அமைந்துள்ள அம்மன் விமானச் சாலைப்பத்திகள் வெறுமையான கோட்டப் பஞ்சரங்களுடன் புறந்தள்ளியுள்ளன. இப்பகுதியில் பத்மஜகதியும் உருள்குமுதமும் பட்டிகைக்கு மாற்றாகக் கபோதமும் இடம்பெற்றுள்ளன. விமானத்தின் முன் அதே கட்டமைப்பிலான முகமண்டபமும் அடுத்துப் பெரு மண்டபமும் உள்ளன.

பெருமண்டபத் தூண்களில் காணப்படும் கருமுத்து அழகப்ப செட்டியாரும் சின்னம்மை ஆச்சியும் அம்மண்டபத்தை எடுத்த பெருமக்களாவர். உருளை அரைத்தூண்கள் தாங்கும் முகமண்டபத்தின் வாயிலில் காவற்பெண்டுகள் உள்ளனர். கருவறையில் இறைவி சடைமகுடம், பட்டாடை அணிந்து பின்கைகளில் அக்கமாலை, நீலோத்பலம் கொண்டு, முன்கைகளைக் காக்கும் குறிப்பிலும் கடியவலம்பிதத்திலும் அமைத்து சமபங்கத்தில் உள்ளார்.

**பெருமண்டபம்**

மண்டபத்தின் மேற்கில் வெற்றுத்தளம் தாங்கும் பெருமண்டபம் உள்ளது. இம்மண்டபத்தை அடையத் தென்கிழக்கில் பன்னிரண்டு படிகள் உள்ளன. மண்டபச் சுற்றின் வடகிழக்கில் இருந்தும் பெருமண்டபத்தை அடையுமாறு எட்டு மரப்படி களுடன் வாயில் அமைந்துள்ளது. அடைக்கப்பட்டிருக்கும் இவ்வாயிலின் இருபுறத்தும் சுதைக்காவலர்கள். வாயில்களுக்கு இடைப்பட்ட பகுதியில் சுந்தர கணபதி இடம்பெற்றுள்ளார்.

**சிங்காரவேலவர் திருமுன்**

'சிங்காரவேலவர்' என்று தலைப்பிடப்பட்டுள்ள தென் மேற்கு நுழைவாயில் நிலையமைப்புப் பெற்றுள்ளது. நிலைகளில் மகரங்களின் மேல் நிற்கும் கொடிப்பெண்களின் கொடிகளில் இருந்து தொடரும் வளைவுகளில் உள்ள சிற்பங்கள் வண்ணப் பூச்சில் களையிழந்துள்ளன. நிலைகளின் முன்னுள்ள பக்கச் சுவர்த் தூண்களில் சிற்பங்கள் உள்ளன. பெருமண்டபத்தின் வடபுறத்தே தென்பார்வையாகச் சிங்காரவேலவரின் செப்புத்திருமேனி இடம்பெற்றுள்ளது. பாதபந்தத் தாங்குதளம், நாக

பந்தம் பெற்ற தூண்கள், கூரையுறுப்புகள், கபோதம் இவற்றுடன் மண்டப அமைப்பில் அலங்கரிக்கப்பட்டு, வெள்ளித் தகடுகள் போர்த்தப்பட்டிருக்கும் திருமுன்னில் வள்ளி, தெய்வானையுடன் முருகப் பெருமான் காட்சிதருகிறார். பின்கைகளில் அக்க மாலை, வஜ்ரம் கொண்டு, முன்கைகளில் காக்கும் குறிப்பும் அருட்குறிப்பும் காட்டும் முருகனின் இருபுறத்துள்ள தெய்வானையும் வள்ளியும் ஒரு கையில் மலரேந்தி, மறு கையை நெகிழ்த்தியுள்ளனர். மண்டபத்தின் தென்மேற்கில் தியாகராஜர் விமானம், முகமண்டபத்துடன் அமைய, மேற்கில் பால்வெண்ணெய் நாயனார் என்றழைக்கப்படும் இறைவன் விமானம் மண்டபங் களுடன் விளங்குகிறது.

**தியாகராஜர் திருமுன்**

தியாகராஜர் திருமுன் விமானம், முகமண்டபம் இவற்றையும் இவற்றின் முன்னாலுள்ள பெருமண்டபத்தையும் தாங்கி நிற்கும் 2.29 உயர வெற்றுத்தளம் உபானம், பத்மஜகதி, பெருவாஜனம் இவற்றாலான துணைத்தளம், நான்முக அரைத்தூண்கள் சூழ்ந்த சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றுத் திகழ்கிறது.

,

பிரதிபந்தத் தாங்குதளம் வேதிகைத் தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் ஏந்தும் கூரையுறுப்புகள் பெற்றுள்ள விமானக் கீழ்த்தளத்தைப் போலவே முகமண்டபமும் பெருமண்டபமும் அமைந்துள்ளன.

பெருமண்டபத் தென்சுவரில் நிலையமைப்புடன் வாயிலும் இருபுறத்தும் சாளரங்களும் உள்ளன. முகமண்டபத் தென் சுவரிலும் சாளரம் உள்ளது. ஒருதளத் திராவிடமாக உள்ள விமானத்தின் தென்சுவரிலும் சாளரம் உள்ளது. தியாகராஜர் விமானத்திலோ, முகமண்டபத்திலோ, அவற்றைத் தாங்கும் வெற்றுத்தளத்திலோ கோட்டங்கள் இல்லை. விமானத்தின் கிரீவ, சிகரக் கோட்டங்களில் சிவபெருமான் தொடர்பான சுதைவடிவங்கள் உள்ளன. முகமண்டபம், பெருமண்டபம் இவற்றின் கூரைகளிலும் பலவாய்ச் சுதையுருவங்கள் உள்ளன.

**இறைவன் விமான வெற்றுத்தளம்**

இறைவன் விமானம், அதன் முன்னுள்ள மண்டபங்கள், பெருமண்டபம் இவற்றைத் தாங்கி நிற்கும் வெற்றுத்தளம் தியாகராஜர் திருமுன் தாங்கும் அமைப்பிலேயே உள்ளது அதன் விமானப்பகுதியில் தெற்கிலும் மேற்கிலும் வடக்கிலும் கோட்டங்கள் உள்ளன. தெற்குக் கோட்டத்தில் ஆலமர் அண்ணலும் மேற்குக் கோட்டத்தில் இலிங்கோத்பவரும் உள்ளனர். வடக்குக் கோட்டம் வெறுமையாக உள்ளது, தெற்கு, மேற்குக் கோட்டங்களின் முன் முன்றிலும் தெற்கு முன்றிலின் மேல் திராவிட கிரீவமும் சிகரமும் காட்டப்பட்டுள்ளன.

வீராசனத்தில் உள்ள ஆலமர்அண்ணலின் பின்கைகளில் வலப்புறம் அக்கமாலையும் பாம்பும் அமைய இடப்புறம் தீச்சுடர், சடைமகுடம், மகர, பனையோலைக் குண்டலங்கள், சவடி, முத்துமாலை, முப்புரிநூல், கைவளைகள், சிற்றாடை அணிந்து மலைமேல் அமர்ந்துள்ள இறைவனின் வல முன் கை சின் முத்திரை காட்ட, இட முன் கையில் சுவடி. மலையின் வலப் புறம் புற்றிலிருந்து பாம்பொன்று படமெடுக்க, அடியவர் ஒருவர் வணங்கிய நிலையில் காட்சிதருகிறார். இடப்புறம் உள்ள மூவரில் ஒருவர் தலைக்கு மேல் கையுயர்த்தி வணங்கிய நிலையில் உள்ளார். வலப்புறம் அமர்ந்துள்ள நந்தியின் கழுத்தின் மீது இறைவனது வலக்கை இருத்தப்பட்டுள்ளது.

சடைமகுடம், மகர, பனையோலைக் குண்டலங்கள், பட்டாடை அணிந்துள்ள இலிங்கோத்பவர் பின்கைகளில் மானும் மழுவும் கொண்டு, வல முன் கையைக் காக்கும் குறிப்பிலும் இட முன் கையைக் கடியவலம்பிதத்திலும் கொண்டுள்ளார்.

**இறைவன் விமானம்**

5. 57 மீ. பக்கமுடைய சதுரமாக உள்ள இறைவன் விமானக் கீழ்த்தளம் பிரதிபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, எண்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்று, இருதள வேசரமாக அமைந்துள்ளது. வலபியில் பூதவரி. தளத்தின் மூன்று பத்திகளும் புறந்தள்ளியுள்ள போதும் சாலைப்பத்தி கர்ணபத்திகளினும்

கூடுதலாக முன்வந்துள்ளது. சாலைப்பத்தியின் தாங்குதளம் உறுப்பு வேறுபாடுகளுடன் கபோதபந்தமாக அமைந்துள்ளது. வேதிகைக்கு மாற்றாகப் பெருவாஜனம் உள்ளது.

பத்திகளுக்கு இடைப்பட்ட ஒடுக்கங்களில் குடபஞ்சரங்கள் சாலைப்பத்திகளை இந்திரகாந்த அரைத்தூண்கள் அணைக்க, அவற்றிலுள்ள கோட்டப் பஞ்சரங்களை உருளை அரைத்தூண்கள் தழுவியுள்ளன. சுவர், பத்தி அணைவுத்தூண்களின் பலகைகள் மேல் காட்டப்பட்டுள்ள தாவுயாளிகளின் தலை வலபியில் பொருந்தியுள்ளது. ஆலமர்அண்ணல் அமர்ந்துள்ள தெற்குக் கோட்டப்பஞ்சரத்தின் முன் முன்றில் அமைக்கப்பட்டுள்ளது. மேற்குக் கோட்டத்தில் இலிங்கோத்பவரும் வடக்கில் நான்முகனும் உள்ளனர்.

வலப்பாதத்தை முயலகன் மேல் இருத்தி, வீராசனத்தில் உள்ள ஆலமர்அண்ணலின் பின்கைகளில் வலப்புறம் அக்க மாலை, இடப்புறம் பாம்பு. சடைப்பாரம், மகர, பனையோலைக் குண்டலங்கள், முப்புரிநூல், உதரபந்தம், உருத்திராக்கமாலை, சவடி, தோள்மாலை, சிற்றாடை அணிந்துள்ள இறைவனின் வல முன் கை சின்முத்திரையில் அமைய, இட முன் கை தொடைமீது சுவடி ஏந்தியுள்ளது. பின்கைகளில் மான், மழுவுடன் சமபங்கத்தில் உள்ள இலிங்கோத்பவர் சிற்றாடை அணிந்துள்ளார். வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, முன் கை கடியவலம்பிதமாக உள்ளது.

இருபுறத்தும் நான்முகனும் விஷ்ணுவும் வணக்கமுத்திரையில் உள்ளனர். இலிங்கத்தின் மேலே அன்னமும் கீழே பன்றியும் காட்டப்பட்டுள்ளன. சடைமகுடம், பட்டாடை கொண்டுள்ள வடகோட்ட நான்முகனின் பின்கைகளில் அக்க மாலை, குண்டிகை. வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, முன் கை அருட்குறிப்பில் உள்ளது.

விமானத்தின் ஆரஉறுப்புகள் ஆறங்கம் பெற்றுள்ளன. முதல்தள ஆரச்சாலைகளில் தெற்கில் உத்குடியில் ஆலமர் அண்ணலும் மேற்கில் முன்னிரு கைகளை முழங்கால்களின் மேல் வைத்த நிலையில் வீராசனத்தில் தேவியருடன் விஷ்ணு

வும் வடக்கில் வீராசனத்தில் நான்முகன் தேவியருடனும் உள்ளனர். உயரக்குறைவான இரண்டாம் தளத்தையடுத்து வேசர கிரீவமும் சிகரமும் உள்ளன. கிரீவகோட்டங்களில் தெற்கில் வீராசனத்தில் ஆலமர்அண்ணலும் மேற்கில் தேவியருடன் சுகாசனத்தில் விஷ்ணுவும் வடக்கில் தேவியருடன் தாமரையில் அர்த்தபத்மாசனத்தில் நான்முகனும் உள்ளனர். ஆலமர்அண்ணலின் பின்கைகளுள் ஒன்று உடுக்கை ஏந்தியுள்ளது.

**முகமண்டபம்**

பிரதிபந்தத் தாங்குதளம் பெற்றுள்ள முகமண்டபம், விமானக் கீழ்த்தளம் போல் பத்திப் பிரிப்புக் கொள்ளாமல், எண்முக அரைத்தூண்கள் அணைத்த சுவருடன் பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகளுடன் தெற்கிலும் வடக்கிலும் மகரதோரணத் தலைப்பிட்ட கோட்டங்கள் பெற்றுப் பொலிகிறது. தென்கோட்டத்தில் சாளரமும் மேலுள்ள மகர தோரண வளைவில் பிள்ளையாரும் அமைய, வடகோட்டத்தில் மகிடாசுரமர்த்தனி உள்ளார். மேலே ஆரம் இடம்பெற்றுள்ளது.

**முன்மண்டபம்**

முகமண்டபம் ஒத்த வெற்றுத்தளம், மேற்றளம் பெற்றுள்ள முன்மண்டபம், மேற்றள வடக்குச் சுவரில் இரண்டு சாளரங்களும் கூரையின் மேல் சுதையுருவங்கள் பெற்ற ஆரஉறுப்புகளும் கொண்டுள்ளது. இதன் தெற்கு வெற்றுத்தளச் சுவரில் முனிவர்களின் சிற்பத்தொகுதி இடம்பெற்றுள்ளது. கிரந்தக் கல்வெட்டுடன் காணப்படும் இத்தொகுதியில் சடைமகுடம், தாடி, மீசை, நீள்செவிகள், இடைக்கட்டுடனான பட்டாடை இவற்றுடன் வணங்கிய நிலையில் ஆறு முனிவர்கள் நிற்க, மற்றொருவர் அமர்ந்து வணங்குகிறார். அவர் முன்னால் நந்தி அமர்ந்துள்ளது. அதற்கு முன்னால் இரண்டு மரங்கள் உள்ளன. மரங்களின் பின்னே சிவலிங்கம் காட்டப்பட்டுள்ளது.

**பெருமண்டபம்**

முகமண்டபம் ஒத்த வெற்றுத்தளம், மேற்றளம் பெற்றுள்ள பெருமண்டப மேற்றள மேற்குச் சுவரில் ஒரு சாளரம் உள்ளது. கூரையின்மீது மூன்று சிகரங்கள் உள்ளன. இச்சிகரங்கள்

பெருமண்டபத்துள் மேற்கிலிருந்து கிழக்காக அமைந்துள்ள ஆடவல்லான் திருமுன், சிங்காரவேலவர் திருமுன், மற்றொரு திருமுன் இவற்றிற்கு உரியன. முன்மண்டப வெற்றுத்தளம் பெரு மண்டபத்திற்கான தாங்கலாக விரியும் இடத்தில் சண்டேசுவரர் திருமுன் ஒருதள வேசரமாக அமைந்துள்ளது.

## சுற்றுத் திருமுன்கள்

சுற்றின் தென்புறம் நாயன்மார் மண்டபம் அமைய, தென் மேற்கிலுள்ள ஒருதள வேசரவிமானத்தில் பிள்ளையாரும் மேற்கிலுள்ள இருதளத் திராவிட விமானத்தில் முருகனும் வட மேற்கு மூலையிலுள்ள ஒருதள வேசர விமானத்தில் யானைத் திருமகளும் எழுந்தருளியுள்ளனர். வெளிச்சுற்றில் வடபுறத்தே கோலவாமனப் பெருமாளின் இருதளத் திராவிடத் திருமுன்னும் சரசுவதியின் திருமுன்னும் உள்ளன.

## கருவறை

கருவறை வாயில் மேனிலை முகப்பில் எண்மங்கலச் சின்னங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இருபுறமும் குத்துவிளக்குகளும் இடையில் நிறைகுடம், குடை முதலானவும் உள்ளன. வாயிலை இந்திரகாந்த அரைத்தூண்கள் அணைக்க, அடுத்துக் குடப்பஞ்சரங்கள் அமைந்துள்ளன. கருவறையில் இறைவன் சதுர ஆவுடையாரின் மீது உருளைப் பாணத்துடன் இலிங்கத் திருமேனியராய் எழுந்தருளியுள்ளார்.

முகமண்டபத்தில் இன்பவல்லி அன்னை இடம்பெற்றுள்ளார். முச்சதுர, இருகட்டுத் தூண்கள் பூமொட்டுப் போதிகைகளுடன் கூரை தாங்கும் இடைமண்டபத்தில் நந்தி, சூரியபிரபை அமைய, தூண்களின் மேற்சதுரங்களில் மலர்ப்பதக்கங்களும் நடுச்சதுரங்களில் சிற்பங்களும் செதுக்கப்பட்டுள்ளன. முன் மண்டபத்தின் வடபுறம் உள்ள மேடையில் செப்புத்திருமேனிகள் காணப்படுகின்றன.

இறைவன் வளாகத்தின் முன் உள்ள பெருமண்டபத்தின் கூரை ஓவியங்களால் அழகுபடுத்தப்பட்டுள்ளது. சிங்காரவேலவர் இடம்பெற்றுள்ள இம்மண்டபத்தைப் பெருந்தூண்கள் அலங்கரிக்கின்றன. அவற்றின் மேல் அமர்யாளிகளும் பூமொட்டுப்

போதிகைகளும் உள்ளன. அடுக்குத்தூண் அமைப்பில் காணப்

படும் அகலத்தூண்கள் மாறுதலான காட்சியாகும். இரண்டு தூண்களின் கீழ்ப்பகுதியில் ஊர்த்வதாண்டவரும் ஆடற் போட்டிக் காளியும் சிற்பங்களாக உள்ளனர்.

இப்பெருமண்டபத்தின் தென்புறமுள்ள சோமாஸ்கந்தர் திருமுன் முகமண்டப வாயிலின் இருபுறத்தும் காவலர் ஓவியங்கள். முகமண்டபம் வெற்றறையாக உள்ளது. கருவறையில் சோமாஸ்கந்தர் தொகுதி தியாகராஜர் என்ற பெயரில் செப்புத் திருமேனிகளாக இடம்பெற்றுள்ளது.

**கல்வெட்டுகள்**

கோலவாமனப் பெருமாள் கோயிலில் இருந்து இரண்டு கல்வெட்டுகளும்'3 பால்வெண்ணெய் நாயனார் கோயிலில் இருந்து ஆறு கல்வெட்டுகளும்'4 படியெடுக்கப்பட்டுள்ள கி.பி.1644ல் வெட்டப்பட்டுள்ள இலக்கண்ண தண்டநாயகரின் கல்வெட்டு, கோலவாமனப் பெருமாளுக்குக் கொடையளிக்கப்பட்டிருந்த சீயராயநல்லூர் நிலங்கள் தொலைவில் இருந்தமையால் அதற்கு மாற்றாகக் கேயமாணிக்க வளநாட்டைச் சேர்ந்த சிக்கலில் நிலமளிக்கப்பட்ட தகவலைத் தருகிறது. பெருமாள் கோயில் மேற்குத் தளத்தில் உள்ள கல்வெட்டு மங்கலத்தைச் சேர்ந்த ஆயப்பிள்ளை அக்கற்றளியை எழுப்பியதாகக் கூறுகிறது.

பால்வெண்ணெய் நாயனார் கோயில் கல்வெட்டுகளுள் காலத்தால் முற்பட்ட சடையவர்மர் வீரபாண்டியரின் பதினான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு கோயிலுக்களிக்கப்பட்ட பணக்கொடை பற்றிப் பேசுகிறது. கந்தபுராணத்தில் கூறப்பட்டுள்ள தலச்சிறப்புப் பற்றி ஒரு கல்வெட்டுப் பேச, மற்றொரு கல்வெட்டு பால்வெண்ணெய் நாயனாரை வழிபட்ட முனிவர்கள், குளம், மரங்களின் பெயர்களைத் தருகிறது. சதாசிவதேவராயரின் கி. பி. 1560ம் ஆண்டுக் கல்வெட்டு, ஆளிய இராமராசய்யர் மகன் கிருஷ்ணமராசய்யன் கட்டளைப்படி சிக்கல், வடகுடி, ஓதச்சேரிக் கோயில்களுக்குத் திருவாரூரைச் சேர்ந்த ஞானப்பிரகாசப் பண்டாரம் மேலாளராக நியமிக்கப் பட்ட தகவலைத் தருகிறது. அச்சுததேவ மகாராயரின் கல்வெட்டு, பால்வெண்ணெய் நாயனார் கோயிலில் உள்ள குமாரசாமிக்

கடவுளுக்கான விளக்குகளுக்கும் விழாக்களுக்குமாக நிலக் கொடை அளிக்கப்பட்டதாகக் கூறுகிறது. மன்னர் பெயர் அறிய முடியாத விஜயநகர அரசர் காலக் கல்வெட்டு, அரங்கப்ப ராஜராலும் ஊர்மக்களாலும் கந்தசாமிப்பேட்டைக் கோயிலுக் குக் கொடையளிக்கப்பட்டதாகக் கூறுகிறது.

**குறிப்புகள்**

1. *2:37*.
2. **ஆய்வு நாட்கள்** 8. 7. 1982, 28. 9. 2008.
3. ARE 1911 : 100 - 101.
4. ARE 1911: 102 - 107.

-----------------------------------------

# 18. வலிவலம்

காவிரியின் தென்கரை ஊர்களுள் ஒன்றான வலிவலம், கச்சணம் கீழ்வேளூர்ச் சாலையில் தண்டலைநீள்நெறியில் இருந்து 5 கி. மீ. தொலைவில் உள்ளது. இங்குள்ள மனத்துளநாதர் திருக்கோயில்' 1 இறைவனை சம்பந்தர் இரண்டு பதிகங்களாலும் நாவுக்கரசர் ஒரு பதிகத்தாலும் சுந்தரர் ஒரு பதிகத்தாலும் பாடியுள்ளனர். 2 கிழக்கு நோக்கி அமைந்துள்ள இந்த மாடக்கோயிலைத் தெற்கு, மேற்கு, வடக்கு முத்திசைகளிலும் குளம் சூழ்ந்துள்ளது. கோயில் வளாகத்திற்கான முதல் நுழைவாயில் எளிமையான அமைப்புடன் மேலே சாலையும் கர்ண கூடங்களும் கொண்டு அமைந்துள்ளது. இவ்வாயிலுக்கும் இரண்டாம் கோபுர வாயிலுக்கும் இடைப்பட்ட சுற்றில் வட கிழக்கில் பிடாரிக்கோயிலும் வடக்கில் மாழையொண்கண்ணி என்றழைக்கப்படும் இறைவியின் இருதள வேசர விமானமும் அமைந்துள்ளன.

### பிடாரிக் கோயில்

ஒருதளச் சாலை விமானத்தில் உத்குடியில் உள்ள பிடாரி எட்டுக்கையள். வலச்செவியில் மகரகுண்டலமும் இடச்செவியில் பனையோலைக் குண்டலமும் அணிந்துள்ள தேவியின் இடப்பாதம் கீழே விழுந்துள்ளவரின் தலைமேல் அழுந்தப் பதிந்துள்ளது. அரும்புச்சரம், சிற்றாடை அணிந்துள்ள அம்மையின் கைகளில் கேடயம், மணி, தலையோடு, வஜ்ரம், கத்தி, உடுக்கை இவை இடம்பெற்றுள்ளன. இரண்டு கைகளில் உள்ள கருவிகளை அடையாளம் காணமுடியவில்லை. இப்பிடாரியின் அருகிலேயே மற்றொரு பிற்காலப் பிடாரிச் சிற்பமும் உள்ளது.

### அம்மன் கோயில்

முகமண்டபம், விமானம் எனத் தென்பார்வையாக உள்ள அம்மன் கோயிலின் முன்மண்டபக் கூரையை முச்சதுர, இருகட்டுத் தூண்கள் பூமொட்டுப் போதிகைகளின் உதவியோடு தாங்குகின்றன. தூண்களின் கீழ்ச்சதுரம் ஒன்றில் வணக்க முத்திரையில் காணப்படும் ஆடவர் மண்டபத்தை எடுத்தவராக லாம். முன்மண்டபத்தை அடுத்துள்ள சிறுமண்டபத்தின் நுழைவாயில் இருபுறத்தும் காவற்பெண்டுகளைப் பெற்றுள்ளது.

அடுத்து முகமண்டபமும் கருவறையும் உள்ளன. கருவறையில் இறைவி சமபங்கத்தில் சடைமகுடம், பட்டாடை இவற்றுடன் பின்கைகளில் அக்கமாலை, மலர்மொட்டு ஏந்தி, முன்கைகளைக் காக்கும் குறிப்பிலும் அருட்குறிப்பிலும் கொண்டுள்ளார்.

இருதள வேசரமாய் அமைந்துள்ள விமானத்தின் கீழ்த் தளம், துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள், கூரையுறுப்புகள் கொண்டு அமைந்துள்ளது. புறந்தள்ளியுள்ள சாலைப்பத்திகளின் கோட்டப் பஞ்சரங்கள் வெறுமையாக உள்ளன. சுதையாலான அம்மன் உருவங்களைப் பெற்றுள்ள கீழ்த்தள ஆரச்சாலைகளும் புறந்தள்ளியுள்ளன. இரண்டாம் தளத்தையடுத்துக் காணப்படும் கிரீவகோட்டங்களில் சுதையாலான அம்மன் வடிவங்கள். விமானம் ஒத்த கட்டமைப்பிலுள்ள முகமண்டபக் கோட்டங்களும் வெறுமையாக உள்ளன. முகமண்டபத்தருகே உள்ள ஒருதள வேசர விமானத்தில் சண்டேசுவரி தெற்குப் பார்வையாக இடம் பெற்றுள்ளார். முன்மண்டபத்தின் புறச்சுவர் தாங்குதளமற்று, நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவரும் கூரையுறுப்பு களும் பெற்றுள்ளது. மண்டபக் கூரையின் வடகிழக்கு, வட மேற்கு மூலைகளில் வேசர கிரீவ, சிகரம் காட்டப்பட்டுள்ளது.

**சுற்று**

முத்தளக்கோபுரத்துடன் விளங்கும் இரண்டாம் நுழை வாயிலை அடுத்துள்ள சுற்றில் தென்மேற்கில் வலம்புரி விநாயகர் திருமுன்னும் மேற்கில் திருத்தொண்டர் மண்டபம், ஆறுமுகன் திருமுன், யானைத்திருமகள் திருமுன், காசிப்பெருஞ்சிவனார் திருமுன் இவையும் உள்ளன. சுற்றின் வடக்கில் ஒருதள வேசர விமானத்தில் சண்டேசுவரர் திகழ, கிழக்கில் ஒன்பான் கோள்கள். சுற்றின் நடுவில் இறைவன் விமானமும் அதன் தென்புறத்தே சோமாஸ்கந்தர் விமானமும் உரிய மண்டபங்களுடன் வெற்றுத் தளத்தின் மீது அமைந்துள்ளன.

**வெற்றுத்தளம்**

2.62 மீ. உயரமுள்ள வெற்றுத்தளம் கிழக்கிலும் சோமாஸ்கந்தர் திருமுன்னைத் தாங்கியிருக்கும் தென்புறத்தும் இறைவன்

திருமுன் பெருமண்டபத்தைத் தாங்கியிருக்கும் வடபுறத்தும் முறையான தாங்குதளம் இன்றி நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவருடன் வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்று அமைந்துள்ளது. இறைவன் விமானம், முகமண்டபம் இவற்றைத் தாங்கியிருக்கும் பகுதியில் தெற்கிலும் மேற்கிலும் வடக்கிலும் வெற்றுத்தளத்தின் கட்டமைப்பு உபானம், ஜகதி, பிரதிவரி, வேதிகைத்தொகுதி, நான்முக அரைத் தூண்கள் அணைத்த சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், ஆழமற்ற கூடுவளைவுகளுடன் கபோதம் என மாறுபட்டுள்ளது. இத்தாங்குதளத்தில் குமுதம் இடம்பெறவில்லை.

விமானத்திற்கான 2.45 மீ. உயரமுள்ள வெற்றுத்தளத்தின் கர்ணபத்திகளும் உயரக் குறைவான நான்முக அரைத்தூண்கள் அணைத்துள்ள சாலைப்பத்திகளும் ஒரே அளவில் புறந்தள்ளியுள்ள போதும் உருளை அரைத்தூண்களால் அணைக்கப்பட்ட கோட்டம் அமைந்துள்ள நடுப்பகுதியில் சாலைப்பத்தி கூடுதலாக வெளித்தள்ளியுள்ளது. பத்திகளுக்கு இடைப்பட்ட ஒடுக்கங்களில் குடப்பஞ்சரங்கள். கோட்டங்களில் தெற்கில் ஆலமர் அண்ணலும் மேற்கில் முருகனும் வடக்கில் நான்முகனும் உள்ளனர்.

வீராசனத்தில் உள்ள ஆலமர்அண்ணலின் பின்கைகளில் பாம்பும் தீச்சுடரும் அமைய, இட முன் கை சுவடி ஏந்தியுள்ளது. வல முன் கை காக்கும் குறிப்புக் காட்டுகிறது. இறைவனின் இருபுறத்தும் முனிவர்கள். மேற்கிலுள்ள முருகன் பின்கைகளில் சக்தி, வஜ்ரம் கொண்டு சமபங்கத்தில் நின்று காத்து, அருள் செய்கிறார். முன்னால் மயில். நான்முகன் அக்கமாலையும் குண்டிகையும் பின்கைகள் ஏந்த, வல முன் கையால் காத்து, இட முன் கையைக் கடியவலம்பிதமாகக் கொண்டுள்ளார்.

முகமண்டபத்திற்கான வெற்றுத்தளம் விமானத்திற்கான வெற்றுத்தளக் கட்டமைப்பிலேயே இருந்தபோதும் அதில் சாலைப் புறந்தள்ளல் மட்டுமே இடம்பெற்றுள்ளது. கோட்டங்கள் வெறுமையாக உள்ளன.

**விமானம்**

5.64 மீ. பக்கமுடைய சதுரமாக அமைந்துள்ள மனத்துளநாதர் விமானம் இருதள வேசரமாகும். அதன் கீழ்த்தளம் பிரதி

பந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நாகபந்தங்கள் பெற்ற சதுரபாதங்களின் மீதெழும் எண்முக அரைத்தூண்கள் சூழ்ந்த சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், கூடுவளைவுகளுடனான கபோதம் பெற்றுள்ளது. புறந்தள்ளி யுள்ள சாலைப்பத்திகளுக்கும் கர்ணபத்திகளுக்கும் இடைப்பட்ட ஒடுக்கங்களில் குடப்பஞ்சரங்கள். விமானத்தின் சாலைப் பத்திகள் வெற்றுத்தளச் சாலைப்பத்திகள் போல் கோட்டப் பகுதியில் கூடுதல் புறந்தள்ளல் கொள்ளாமை குறிப்பிடத்தக்கது. உருளை அரைத்தூண்கள் அணைத்துள்ள கோட்டப்பஞ்சரங் களில் தென்புறத்தே ஆலமர்அண்ணலும் மேற்கில் விஷ்ணுவும் வடக்கில் நான்முகனும் உள்ளனர்.

முயலகன் மீது வலப்பாதத்தை ஊன்றி, வீராசனத்தில் உள்ள ஆலமர்அண்ணல் சடைமகுடம், மகர, பனையோலைக் குண்டலங்கள் பெற்று, இடப் பின் கையில் தீச்சுடர் ஏந்தியுள்ளார். நந்தியின் தலை மேல் அமர்ந்துள்ள வலப் பின் கை அக்க மாலையும் பாம்பும் கொள்ள, இட முன் கையில் சுவடி. வல முன் கை சின்முத்திரையில் உள்ளது. மேற்கில் சமபங்கத்தில் உள்ள விஷ்ணு கிரீடமகுடம், பட்டாடை அணிந்து, பின்கைகளில் சங்கு, சக்கரம் ஏந்தியுள்ளார். வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இட முன் கை கடியவலம்பிதமாக உள்ளது. வடக்கில் சமபங்கத்தில் உள்ள நான்முகன் பின்கைகளில் அக்க மாலை குண்டிகை கொண்டு, இட முன் கையைக் கடியவலம் பிதத்திலும் வல முன் கையைக் காக்கும் குறிப்பிலும் வைத்துள்ளார்.

கீழ்த்தளக் கூரையின் மீதுள்ள ஆறங்க ஆரஉறுப்புகளை அடுத்து, உயரக் குறைவான இரண்டாம் தளமும் வேசர கிரீவமும் சிகரமும் செங்கல் கட்டுமானங்களாக அமைந்துள்ளன. இரண்டாம் தளத்தில் சுவர்ப்பஞ்சரங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. சாலை, கிரீவகோட்டங்களில் தெற்கில் சிவபெருமா னும் மேற்கில் தேவியருடன் விஷ்ணுவும் வடக்கில் தேவியருடன் நான்முகனும் இடம்பெற்றுள்ளனர். தெற்கு ஆரச்சாலையில் வீணாதரர் நின்றகோலத்தில் இசையெழுப்ப, கிரீவகோட்டத் தில் ஆலமர்அண்ணல் வீராசனத்தில் உள்ளார். விஷ்ணுவும் நான்முகனும் ஆரச்சாலைகளில் நின்றகோலத்திலும் கிரீவ கோட்டத்தில் சுகாசனத்திலும் காட்சிதருகின்றனர்.

**முகமண்டபம்**

விமானத்தை ஒத்த கட்டமைப்புப் பெற்றுள்ள முகமண்டபத்திற்கும் விமானத்திற்கும் இடைப்பட்ட ஒடுக்கம் 1.71 மீ. அளவில் அகலப்பட்டுள்ளது. முகமண்டபத்தின் தென்கோட்டத்தில் பிள்ளையாரும் வடகோட்டத்தில் மகிடாசுரமர்த்தனியும் உள்ளனர். வல முன் கையில் தந்தமும் இட முன் கையில் மோதகமும் வைத்து, இடம்புரியாக உள்ள பிள்ளையாரின் பின்கைகளில் அங்குசம், பாசம். மகிடனின் தலை மீது நிற்கும் இறைவியின் பின்கைகளில் சங்கு, சக்கரம். கரண்டமகுடம், பட்டாடை அணிந்துள்ள அம்மையின் வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இட முன் கை கடியவலம்பிதத்தில் உள்ளது.

முகமண்டபத்தை அடுத்துள்ள பெருமண்டபம் பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத் தூண்கள் அணைத்த சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றுள்ளது. இதற்கும் முகமண்ட பத்திற்கும் இடைப்பட்ட 2 மீ. அகல ஒடுக்கத்தில் சாளரம் பெற்ற கோட்டப்பஞ்சரம் இடம்பெற்றுள்ளது.

**சோமாஸ்கந்தர் திருமுன்**

இருதள வேசரமாக உள்ள சோமாஸ்கந்தர் விமானத்தின் கீழ்த்தளம் பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, எண்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றுத் தெற்கிலும் மேற்கிலும் புறந்தள்ளியுள்ள சாலைப்பத்தியில் பஞ்சர அலங்கரிப்புப் பெற்ற கோட்டங்கள் கொண்டுள்ளது. உருளைத் தூண்களால் தழுவப்பட்டுள்ள தெற்குக் கோட்டத்தில் ஆலமர்அண்ணல் இடம் பெற்றுள்ளார். மேற்கு, வடக்குக் கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. பின்கைகளில் பாம்பும் தீயகலும் கொண்டு, வீராசனத்தில் உள்ள இறைவனின் வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இட முன் கையில் சுவடி.

சாலைப்பத்தியின் தாங்குதளத்தில் உருள்குமுதமும் பட்டிகைக்கு மாற்றாகக் கபோதமும் உறுப்பு வேறுபாடுகளாய் இடம்பெற்றுள்ளன. கீழ்த்தள ஆரஉறுப்புகள் ஆறங்கம் கொள்ள, இரண்டாம் தளம், கிரீவம், சிகரம் இவை செங்கல் கட்டுமானங்

களாக உள்ளன. சாலையிலும் கிரீவகோட்டத்திலும் தெற்கில் ஆலமர்அண்ணலும் மேற்கில் விஷ்ணுவும் வடக்கில் நான்முகனும் இடம்பெற்றுள்ளனர். விமானத்தை ஒத்துள்ள கட்டமைப்புடன் விளங்கும் முகமண்டபத்தின் கோட்டங்களற்ற சுவரை நான்முக அரைத்தூண்கள் அணைத்துள்ளன. விமானத்திற்கும் முகமண்டபத்திற்கும் இடையிலுள்ள ஒடுக்கத்தில் குடப் பஞ்சரங்கள் உள்ளன. இம்மண்டபத்தின் முன்னால் இதற்கும் இறைவன் வளாகத்திற்கும் பொதுவாக அமைந்துள்ள முன் மண்டபம் தெற்கு, வடக்கு, கிழக்குப் பக்கங்களில் சிறு தடுப்புடன் திறப்பாக உள்ளது.

**முன்மண்டபம்**

மனத்துளநாதர் திருமுன், சோமாஸ்கந்தர் திருமுன் இவை இரண்டிற்கான வாயில்களைப் பெற்றுள்ள முன்மண்டபம் கிழக்கில் பதினாறு படிகள் பெற்று உயர்ந்துள்ளது. அதைத் தாங்கும் வெற்றுத்தளம் சோமாஸ்கந்தர் திருமுன் வெற்றுத் தளம் போலவே அமைந்துள்ளது. படிக்கட்டருகே முன்றிலுடன் பிள்ளையார் வீற்றிருக்கும் மண்டபத் திருமுன். அதற்கும் படிக்கட்டுகளுக்கும் இடையில் வெற்றுத்தளத்தில் உள்ள கோட்டப்பஞ்சரமும் படிகளை அடுத்துத் தென்புறத்தே உள்ள கோட்டப்பஞ்சரமும் வெறுமையாக உள்ளன.

நாற்சதுர, முக்கட்டு உடல் பெற்ற தூண்களால் தாங்கப்படும் கூரைகொண்டுள்ள முன்மண்டபத்தின் தெற்கிலும் வடக்கிலும் மேல் சுற்றுக்கான வாயில்கள் உள்ளன. இம்மண்டபத்தின் வடபுறத்தே உள்ள ஒருதள நாகர விமானத்தில் ஆடவல்லானும் உமையும் இடம்பெற்றுள்ளனர். மண்டபத்தின் நடுவே தென்பார்வையாக நந்தி நிறுத்தப்பட்டுள்ளது. மண்டபத்தின் தென்புறம் சோமாஸ்கந்தர் திருமுன் வாயிலும் மண்டபத்தின் மேற்கில் இறைவன் திருமுன் வாயிலும் அமைந்துள்ளன.

**சோமாஸ்கந்தர் திருமுன்**

கபோத அமைப்புடனான வாயில் பெற்ற அகலமானதொரு முகமண்டபத்தை அடுத்துள்ள கருவறையில் சோமாஸ்கந்தர் தொகுதி இடம்பெற்றுள்ளது. சற்றே இட ஒருக்கணிப்புடன் சுகாசனத்தில் உள்ள இறைவனின் பின்கைகளில் மழுவும்

மானும். சடைமகுடம், மகர, பனையோலைக் குண்டலங்கள், அரும்புச்சரம், முப்புரிநூல், தோள், கை வளைகள், சிற்றாடை, பாதசரம் அணிந்துள்ள இறைவனின் வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இட முன் கை கடகத்தில் உள்ளது.

கரண்டமகுடம், நீள்வெறுஞ்செவிகள், அரும்புச்சரம், தோள், கை வளைகள், பட்டாடை அணிந்து சுகாசனத்தில் உள்ள இறைவியின் வலக்கை காக்கும் குறிப்பில் இருக்க, இடக்கை கடகத்தில் உள்ளது. இடையிலுள்ள முருகன் கரண்ட மகுடராய் இருகைகளிலும் மலரேந்தி இருபாதங்களையும் திரயச்ரத்தில் திருப்பி, நேர்ப்பார்வையராய் நிற்கிறார்.

**இறைவன் திருமுன்**

இறைவன் திருமுன் முதல் மண்டப வாயில் நிலைகளை அரைத்தூண்கள் அணைத்துள்ளன. மேலே கூரையுறுப்புகளுடன் இரண்டு கூடுவளைவுகள் பெற்ற கபோதம் வாயிலைச் சிறப்புக்குரியதாக்கியுள்ளது. மண்டபத்தின் வடபுறத்தும் தென் மேற்கிலும் உள்ள கம்பிக் கதவிட்ட மேடையில் செப்புத் திருமேனிகள் இருத்தப்பட்டுள்ளன. அதையடுத்துள்ள சிறு இடைநாழியும் கபோதவாயில் பெற்றுள்ளது. நந்தியும் சூரிய பிரபையும் இங்கு இடம்பெற்றுள்ளன. பேரளவினதாக விளங்கும் முகமண்டபத்தின் வடமேற்கில் இன்பவல்லி அம்மையும் பள்ளியறைத் திருமேனிகளும் இடம்பெற்றுள்ளன. கருவறையில் இறைவன் வேசர ஆவுடையாரின் மீது உருளைப் பாணத்துடன் இலிங்கத்திருமேனியராய்க் காட்சிதருகிறார்.

திரயச்ர பாதங்களுடன் அஞ்சலியில் தலைப்பாகை, அக்கமாலை, பூட்டுக்குண்டலங்கள் மரமேறி ஆடை இவற்றுடன் காட்சிதரும் ஆடவரும் தாடி, மீசை, நீள்வெறுஞ்செவிகள், பட்டாடை இவற்றுடன் சமபாதத்தில் வணக்க முத்திரையில் உள்ளவரும் இவ்வளாகக் கட்டுமானத்திற்கு உதவிய அடியவர் களாகலாம்.

**இன்பவல்லி**

கரண்டமகுடம், மகரகுண்டலங்கள், தோள்மாலை, அரும்புச்சரம், ஸ்வர்ணவைகாக்ஷம், தோள், கடக, கை வளைகள்,

பட்டாடை, குறங்குசெறி அணிந்து, திரயச்ர பாதங்களுடன் இளநகை பூத்து நிற்கும் இறைவியின் இடக்கை நெகிழ்ந்திருக்க, வலக்கையில் நீலோத்பல மொட்டு.

**பள்ளியறைத் திருமேனிகள்**

தனித்தனித் தளங்களில் உள்ள இறைவனும் இறைவியும் சோழர் காலத்தவை. சடைமகுடம், வலச்செவியில் மகர குண்டலம், இடச்செவியில் பனையோலைக் குண்டலம், சவடி, முப்புரிநூல், உதரபந்தம், தோள், கை, வளைகள், சிற்றாடை அணிந்து நெற்றிக்கண், திரயச்ர பாதங்களுடன் நிற்கும் இறைவனின் பின்கைகளில் மழுவும் மானும். முன்கைகளில் வலக்கை காக்கும் குறிப்புக் காட்ட, இடக்கை கடகத்தில் உள்ளது. சடை மகுடம், மகரகுண்டலங்கள், அரும்புச்சரம், தோள்மாலை, முப்புரிநூல், கடக, கை வளைகள், மோதிரங்கள், பட்டாடை அணிந்து நிற்கும் இறைவியின் வலக்கை கடகத்திலிருக்க, இடக்கை நெகிழ்ந்துள்ளது. முந்தானை இடத்தொடையில் படர்ந்துள்ளது.

**ஆடவல்லான் தொகுதி**

குண்டலங்களுடனான நீள்செவிகள், கடக, கை வளைகள், உதரபந்தம், கால் சரங்கள் அணிந்து குப்புறப்படுத்திருக்கும் முயலகனின் கடக இடக்கை பாம்பின் மீதுள்ளது. முகத்தருகே பாம்பு படமெடுத்துள்ளதால் அச்சத்தில் அலறும் மெய்ப்பாட்டில் முயலகன் வாய் அகலத் திறந்திருக்க, வலக்கை பாம்பைத் தடுக்கும் மெய்ப்பாட்டில் பதாகத்தில் உள்ளது.

முயலகன் முதுகின் மேல் வலப்பாதத்தைத் திரயச்ரத்தில் இருத்தி, இடக்காலை வலப்புறம் வீசி, ஆனந்தத்தாண்டவம் நிகழ்த்தும் இறைவனின் பாம்பு சுற்றிய வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இட முன் கை வேழமுத்திரையில் உள்ளது. பின்கைகளில் உடுக்கையும் தீச்சுடரும். கொக்கிறகு, பாம்பு காட்டப்பட்டுள்ள சடைமகுடத்திலிருந்து இருபுறமும் பறந்திருக்கும் விரிசடை ஆட்டவேகத்திற்கேற்ப வளைந்துள்ளது. கழுத்தில் பன்றிக்கொம்புடன் அக்கமாலை. சிற்றாடை அணிந்துள்ள சிவபெருமானின் உதரபந்தமாய் முடிச்சிடப்பட்டுள்ள துணியின்

தொங்கல்கள் முன்புறம் பறக்கின்றன. முப்புரிநூலென அணியப்பட்டுள்ள துண்டும் ஆட்டத்திற்கு ஏற்பப் பறந்துள்ளது. நெற்றிப்பட்டத்தின் வலப்புறம் பாம்பு. மகுடமுகப்பில் மண்டையோடு, சுண்டுவிரலில் மோதிரம். இறைவனின் இடப்புறம் நீள் வெறுஞ்செவிகளுடன் உள்ள உமை, கரண்டமகுடம், ஸ்வர்ண வைகாக்ஷம், அரும்புச்சரம், தோள், கடக, கை வளைகள் பட்டாடை அணிந்து, வலக்கையைக் கடகத்திலிருத்தி, இட கையை நெகிழ்த்தியுள்ளார்.

**கல்வெட்டுகள்**

மனத்துளநாதர் கோயிலில் இருந்து ஒன்பது கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன.3 மூன்றாம் இராஜேந்திரரின் பதினைந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, தவப்பெருமாள் திருமடத்துச் சோமநாததேவ முதலியாருக்குச் சில நிலங்களை மனத்துளநாயனார் கோயில் அலுவலர்கள் மாற்றித் தந்த தகவலைத் தருகிறது.

மனத்துளநாதர் கோயிலின் தென்புறம் இருந்த தவப்பெருமாள் திருமடத்தின் தலைவரான திருச்சத்திமுற்றம் வழிவந்த எதிர் ஒப்பிலாதார் சோமநாததேவ முதலியாருக்கு அருமொழி தேவ வளநாட்டு வலிவலக் கூற்றத்துத் தென்விடங்களூர் ஊரார் சில நிலங்களைத் தந்ததாக மூன்றாம் இராஜேந்திரரின் இருபதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

மூன்றாம் குலோத்துங்கரின் மூன்றாம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு, அருமொழிதேவ வளநாட்டு வலிவலக் கூற்றத்து வலிவலமான உபயகுலசுத்த சதுர்வேதி மங்கலத்திலிருந்த மனத்துளர் கோயிலின் தேவதான ஊரான குலோத்துங்க சோழ நல்லூரில் இராஜாதிராஜன் பெருங்குளம் அகழக் கோயில் நிலம் பயன்படுத்தப்பட்டதால் அதற்கு மாற்றாக வேறு நிலம் அளிக்கப்பட்ட தகவலைத் தருகிறது.

மன்னர் பெயரோ, ஆட்சியாண்டோ அறியமுடியாதபடி சிதைந்திருக்கும் கல்வெட்டு குலோத்துங்கசோழ நல்லூரில் கோயிலுக்கு நிலமளிக்கப்பட்ட தகவலைத் தருகிறது. மூன்றாம் இராஜராஜரின் பதினான்காம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டு, குலோத்துங்க சோழ நல்லூரில் இராஜ

ராஜப் பெருவிலையில் வாங்கப்பட்ட நிலத்துண்டு ஒன்று கோயிலுக்காகக் கொடையளிக்கப்பட்டமையைத் தெரிவிக்கிறது. அதே மன்னரின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டு, கோயிலுக்குரிய நிலப்பகுதியில் முத்தலை ஈட்டி நடப்பெற்று அந்நிலம் தேவதானமாக அறிவிக்கப்பட்ட செய்தியைக் கூறுகிறது.

சடையவர்மர் சுந்தரபாண்டியரின் ஏழாம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டு, பாண்டி மண்டலத்து மதுரோதய வளநாட்டு ஆலத்தூர் நாட்டுப் பாலைக்குறிச்சியைச் சேர்ந்த வயிராதராயரின் மனைவியால் கூற்றுாரான பொன் மேய்ந்த பெருமாள்நல்லூரில் அருமொழிதேவ வளநாட்டு வலிவலக்கூற்றத்து வலிவலத்திருந்த மனத்துளநாயனார் கோயிலுக்கு நிலம் விற்கப்பட்ட செய்தியைக் கூறுகிறது. அதே மன்னரின் அதே ஆட்சியாண்டில் வயிராதராயரால் குலோத் துங்க சோழ நல்லூரில் நிலத்துண்டொன்று கோயிலுக்கு விற்கப்பட்ட தகவலை மற்றொரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

திருமூலத்தேவர் திருமடத்திற்கு மனத்துளநாதர் கோயில் சிவாச்சாரியார்கள் நிலமொன்றை விற்பனை செய்த தகவலைப் பகிர்ந்துகொள்ளும் கல்வெட்டு, மூன்றாம் இராஜராஜரைப் பெரிய தேவர் என்றழைப்பதுடன் அவருடைய பதினான்காம் ஆட்சியாண்டில் நிகழ்ந்த செயற்பாடு ஒன்றையும் பகிர்ந்து கொள்கிறது. கல்வெட்டுச் சிதைந்திருப்பதால் முழுச் செய்தியையும் அறியக்கூடவில்லை.

### குறிப்புகள்

1. ஆய்வு நாட்கள் 27.11.1982, 26.9.2008 இக்கோயில் பற்றிய முதல் கட்டுரை 1983 பிப்ருவரி 27ம் நாள் வெளியான தினமணி சுடரில், 'மனத்துணைநாதர் திருக்கோயில்' என்ற தலைப்பில் பதிவாகியுள்ளது.

*2. 1:50, 123; 6: 48; 7: 67.*

3. ARE 1911 : 108 - 116.

---

# 19.தேவூர்

நாகபட்டினம் மாவட்டம் கீழ்வேளூருக்கும் வலிவலத்துக்கும் இடையில் காவிரியின் தென்கரையில் அமைந்துள்ளது பாடல் பெற்ற' 1 ஊரான தேவூர். துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுடனான கோபுரத்தின் கீழ்த்தளத்தில் தூண் பலகையில் பின்னங்கால்களை ஊன்றிக் கபோதம் தாங்கும் தாவுயாளிகள் அழகுறக் காட்சிதருகின்றன. சுதையுருவங்களால் நிரப்பப்பட்டுள்ள இம்முத்தளக் கோபுர வாயிலுள் நுழைந்ததும் வெளிச்சுற்றின் நடுவிருக்கையாய் வெற்றுத்தளத்தின் மீது விளங்கும் மாடக்கோயிலைக் காணலாம்.2

**சுற்று**

கோபுரத்திற்கும் மாடக்கோயிலுக்கும் இடைப்பட்ட சுற்று வெளியில் கொடிமரம், பலித்தளம், நந்திமண்டபம் இவை உள்ளன. சுற்றின் தெற்கில் உள்ள மண்டபத்தில் திருத்தொண்டர்கள், சண்டேசுவரர், நால்வர் உள்ளனர். தென்மேற்கில் ஒருதள வேசரமாய் வலம்புரிப் பிள்ளையார் திருமுன்னும் மேற்கில் ஒருதள வேசரமாய் வள்ளி, தெய்வானையுடனான முருகன் திருமுன்னும் ஒருதள நாகரமாய் யானைத்திருமகள் திருமுன்னும் உள்ளன.

சுற்றின் வடமேற்கில் முன்றில், முன்மண்டபம், பெருமண்டபம், முகமண்டபம் பெற்ற ஒருதள வேசர விமானத்துடன் தேன்மொழி அம்மையின் திருமுன் உள்ளது. முன் மண்டபத் தூணொன்றில் அஞ்சலியில் காணப்படும் அடியவர் இம்மண்டபத்தை எடுத்தவராகலாம். வடக்குச் சுற்றில் அகல்யலிங்கம், உயரமான மேடையில் ஒருதள வேசர விமானத்துடன் கௌதமலிங்கம் இவற்றிற்கான திருமுன்களும் வடகிழக்கில் முன்றில், பெருமண்டபம் என அமைந்துள்ள ஆடவல்லான் திருமுன்னும் உள்ளன. வடகிழக்கு மூலையில் மதிலை ஒட்டி யுள்ள அறைகளில் இலிங்கத்திருமேனிகள், அம்மன் சிற்பங்கள் அமைய, கிழக்கு அறைகளில் கதிரவன், பைரவர், சனீசுவரன் சிற்பங்களும் ஒன்பான்கோள் மேடையும் உள்ளன. பெருமண்ட

பத்திற்கான வெற்றுத்தளம் அருகே ஒருதள நாகர விமானத்தில் சண்டேசுவரர் உள்ளார்.

வெற்றுத்தளத்தின் மீது விமானம், முகமண்டபம், பெருமண்டபம், முன்மண்டபம் என இறைவன் கோயிலும் அதன் தென்புறத்தே விமானம், முகமண்டபம், பெருமண்டபம் என சோமாஸ்கந்தர் திருமுன்னும் அமைந்துள்ளன.

**வெற்றுத்தளம்**

பிரதிபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, சதுரபாதங்களின் மீதெழும் எண்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், ஆழமற்ற கூடுவளைவுகளுடனான கபோதம் பெற்றுள்ள 2.93 மீ. உயர விமான வெற்றுத்தளத்தின் வலபி பூதவரி பெற்றுள்ளது. அதில், இசைக்கருவிகளை இசைக்கும் பூதங்களையும் ஆடற்கணங்களையும் காணமுடிகிறது. ஒரு பூதத்தின் கண்களை அதன் இரு புறத்தும் உள்ள பூதங்கள் ஆளுக்கொன்றாகப் பிடுங்குமாறு ஒரு காட்சி அமைந்துள்ளது.

கபோதக்கூடுகளில் ஆடற்பெண்கள், கழைக்கூத்து, உச்சிஷ்ட கணபதி முதலிய சிற்பங்கள் உள்ளன. விமானஞ்சார்ந்த வெற்றுத்தளத்தின் சாலைப்பத்திகளும் கர்ணபத்திகளும் புறந் தள்ளலாக அமைய, ஒடுக்கங்களில் குடப்பஞ்சரங்கள். சாலைப் பத்திக் கோட்டங்களில் தெற்கில் ஆலமர்அண்ணலும் மேற்கில் விஷ்ணுவும் வடக்கில் நான்முகனும் உள்ளனர். பத்திகள் வேதிகைக்கு மாற்றாகப் பட்டிகை கொண்டுள்ளன. விமான வெற்றுத்தளக் கட்டமைப்பில் உள்ள முகமண்டப வெற்றுத்தளக் கோட்டங்களில் தெற்கில் பிள்ளையாரும் வடக்கில் மகிடாசுரமர்த்தனியும் உள்ளனர்.

வலக்காலை முயலகன் முதுகின்மீது இருத்தி, வீராசனத்தில் உள்ள ஆலமர்அண்ணலின் பின்கைகளில் வலப்புறம் பாம்பும் அக்கமாலையும் அமைய, இடப்புறம் தீச்சுடர் உள்ளது. வல முன் கை சின்முத்திரை காட்ட, இட முன் கையில் சுவடி. விரிசடையாய்க் காட்டப்பட்டுள்ள தலைமுடியின் உச்சியில் மண்டையோடு, வலச்செவியில் மகரகுண்டலம், இடச்செவியில்

பனையோலைக் குண்டலம், கழுத்தணிகள், முப்புரிநூல், உதரபந்தம், சிற்றாடை அணிந்துள்ள இறைவனின் தலையருகே வலப்புறத்தே பாம்பொன்று படமெடுத்துள்ளது.

கிரீடமகுடம், பட்டாடை அணிந்து சமபங்கத்தில் நிற்கும் விஷ்ணுவின் பின்கைகளில் சங்கு, சக்கரம். முன்கைகளில் வலக்கை காக்கும் குறிப்புக் காட்ட, இடக்கை கடியவலம்பிதமாக உள்ளது. சமபங்கத்தில் சடைமகுடம், வஸ்திர முப்புரிநூல், பூட்டுக்குண்டலங்கள் இவற்றுடன் காட்சிதரும் நான்முகனின் பின்கைகளில் அக்கமாலையும் குண்டிகையும் உள்ளன. முன் கைகளில் வலக்கை காக்கும் குறிப்புக் காட்ட, இடக்கை கடிய வலம்பிதமாக உள்ளது.

பெருமண்டபம், முன்மண்டபம் இவற்றிற்கான வெற்றுத் தளம் வடபுறத்தே பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, சதுர பாதங்களின் மீதெழும் இந்திரகாந்தத் தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றெழச் சுவரில் பலவாய்க் கோட்டப்பஞ்சரங்கள்.

**விமானம்**

பிரதிபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நாகபந்தங்கள் பெற்ற சதுர பாதங்களின் மீதெழும் எண்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் கொண்ட விமானத்தின் கீழ்த்தளத்தில் மூன்று பத்திகளுமே புறந்தள்ளியுள்ளன. கர்ணபத்திகளினும் கூடுதலாக முன்தள்ளியுள்ள சாலைப்பத்திகளின் கோட்டப்பகுதிகள் மேலும் புறந்தள்ளியுள்ளன. கிழக்கு மேற்காக 6.32 மீ. நீளமும் தென்வடலாக 6.18 மீ. அகலமும் பெற்றுள்ள கீழ்த்தளத்தின் தூணடிகள் கொடிக்கருக்குகள் கொண்டுள்ளன.

சாலைப்பத்திகளை எண்முக அரைத்தூண்களும் அப்பத்திகளிலுள்ள கோட்டங்களைச் சட்டத்தலை பெற்ற உருளை அரைத்தூண்களும் அணைத்துள்ளன. சாலைப்பத்திகளின் தாங்குதள உறுப்புகளில் ஜகதி பத்மஜகதியாக அமைய, வேதிகைத்தொகுதியின் மேலுறுப்பாகக் கபோதம் இடம் பெற்றுள்ளது. கோட்டங்களில் தெற்கில் வலக்காலை முயலகன் முதுகின்மீது இருத்தி, வீராசனத்தில் உள்ள ஆலமர்அண்ண

லின் பின்கைகளில் அக்கமாலையும் பாம்பும் உள்ளன. வல முன் கை சின்முத்திரை காட்ட, இட முன் கையில் சுவடி. வலச் செவியில் மகரகுண்டலம், இடச்செவியில் பனையோலைக் குண்டலம், கழுத்தணிகள், முப்புரிநூல், உதரபந்தம், சிற்றாடை அணிந்துள்ள இறைவனின் விரிசடையாய்க் காட்டப்பட்டுள்ள தலைமுடியின் உச்சியில் மண்டையோடு.

மேற்கு, வடக்குக் கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. பத்திகளின் ஒடுக்கங்களிலும் சாலைப்பத்தி, சாலைக்கோட்ட இடைவெளிகளிலும் குடப்பஞ்சரங்கள். பத்திக்கு இரண்டு கூடுவளைவுகள் அமையப்பெற்ற தளக்கூரையின் மேலே நாற்புறத்தும் கர்ணகூடங்கள். கிரீவமும் சிகரமும் வேசரமாக அமைய, கிரீவகோட்டங்களில் தெற்கில் வீராசனத்தில் வல முன் கையைக் காக்கும் குறிப்பில் இருத்தி, இட முன் கையைத் தொடை மீது வைத்துள்ள ஆலமர்அண்ணல் பின்கைகளில் பாம்பும் தீச்சுடரும் கொண்டு காட்சிதருகிறார். மேற்கில் பின்கைகளில் சங்கு, சக்கரம் ஏந்தி, கிரீடமகுடம், பட்டாடை இவற்றுடன் பரமபதநாதராய்க் காட்சிதரும் விஷ்ணுவின் வல முன் கை இருக்கையில் அமர, இட முன் கை சிதைந்துள்ளது. வடக்கில் முன்கைகளில் காக்கும், அருட்குறிப்புக் காட்டிப் பின் கைகளில் அக்கமாலை, குண்டிகையுடன் சுகாசனத்தில் நான்முகன். கிழக்குக் கோட்டத்தில் சிவபெருமான் சுகாசனத்தில் உள்ளார்.

**முகமண்டபம், பெருமண்டபம்**

விமானத்தை அடுத்துள்ள, பிரதிபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, எண்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர் பெற்ற முகமண்டபத்தில், உருளை அரைத்தூண்கள் அணைத்த சாலைப்பத்தி, ஜகதிக்கு மாற்றாகப் பெருந்தாமரையும் மேற்கம்புக்கு மாற்றாகக் கபோதமும் கொண்டுள்ளது. விமானத்திற்கும் முகமண்டபத்திற்கும் இடைப்பட்ட ஒடுக்கத்தில் தெற்கில் கோட்டப்பஞ்சரமும் அதன் உள்ளீடாகச் சாளரமும் உள்ளன. வடக்கில் குடப்பஞ்சரம். சாலைக்கோட்டங்கள் வடக்கிலும் தெற்கிலும் மகரதோரணத் தலைப்புடன் வெறுமையாக உள்ளன. பெருமண்டபம், தாங்குதளமற்ற வெறுஞ்சுவரும் கூரையுறுப்புகளும் கொண்டுள்ளது.

முன்மண்டபத்தின் புறச்சுவர் வடபுறத்தே பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, சதுர பாதங்களின் மீதெழும் நான்முகத் தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றெழச் சுவரில் பலவாய்க் கோட்டபஞ்சரங்கள்.

**முன்மண்டபம்**

முன்மண்டபத்திற்கான கிழக்கு வெற்றுத்தளம் சோமாஸ்கந்தர் திருமுன் பெருமண்டப வெற்றுத்தளம் போலவே தாங்குதளம் இல்லாமல் நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவரும் கூரையுறுப்புகளும் பெற்றுள்ளது. அதன் தென்கிழக்குப் பகுதியில் இருபது படிகள் அமைந்துள்ளன. படிகளின் இருபுறத்தும் அமைந்துள்ள சிறிய ஒருதள வேசர விமானங்களில் தெற்கில் பிள்ளையாரும் வடக்கில் முருகனும் உள்ளனர். சுவரின் வட கோடிப்பகுதியில் உள்ள ஒருதள வேசர விமானத்தில் இந்திர இலிங்கேசுவரர் எழுந்தருளியுள்ளார். படிகள் முன்மண்டபத் தென்கிழக்கில் அமைந்துள்ள சோமாஸ்கந்தர் திருமுன்னுக்கு அழைத்துச் செல்கின்றன. சோமாஸ்கந்தர் வளாகத்தின் தொடக்கத்தில் உள்ள பெருமண்டபத்தின் வடக்கிலுள்ள வாயில் இறைவன் கோயில் முன்மண்டபத்திற்கு வழிவிடுகிறது.

முன்மண்டபத்தின் கிழக்கில் உள்ள முச்சதுர, இருகட்டு உடல் பெற்ற தூண்கள் தாங்கும் செவ்வக முன்றில் விமானத்தின் வடசுற்றுக்கு வழிவிடுகிறது. அதன் பின் அமைந்துள்ள பெருமண்டபத்தின் வடபுறத்தே உள்ள மேடையில் செப்புத்திருமேனிகள் காணப்படுகின்றன. இறை ஊர்திகளும் உள்ளன. அதையடுத்துள்ள மண்டபத்தின் தெற்குச் சுவரில் நான்கு சிற்பங்கள் தரையளவினவாக பதிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு வணங்கிய நிலையிலுள்ள ஆடவர்களையும் ஒன்று வணங்கிய நிலையிலுள்ள இணையரையும் காட்ட, மற்றொன்று, மார்பின் இடப்புறம் வாளைத் தழுவியபடி வணங்கிய நிலையில் உச்சிக்கொண்டை, தாடி, மீசை, பட்டாடை இவற்றுடன் காட்சி தரும் ஆடவரைப் படம்பிடிக்கிறது. இம்மண்டபத்தை நான்முக அரைத்தூண்கள் தாங்குகின்றன. அவற்றுள் ஒன்றில் வணங்கிய நிலையில் ஆடவர் உள்ளார். மற்றொரு தூணில் பெண் சிற்பம் காணப்படுகிறது.

பேரளவினதாக உள்ள முகமண்டப வாயிலின் இருபுறத்தும் உள்ள கோட்டங்களில் காவலர்கள் இடம்பெற்றுள்ளனர். பின்கைகளால் இறைவனைப் போற்றும் இருவரும் சடை மகுடம், பனையோலைக் குண்டலங்கள், கழுத்தணிகள், கோரைப் பற்கள், சிற்றாடை, கால்களுக்கிடையிலான மணிமாலை பெற்று ஒருபாதத்தைக் கருவறை நோக்கியும் மறுபாதத்தை அருகில் உள்ள மழுவின் மழுவின் மீது நிறுத்தியும் காட்சிதருகின்றனர். இருவருமே வல முன் கை அச்சுறுத்த, இட முன் கையை மழுவின் மீது நிறுத்தியுள்ளனர். கருவறையில் தேவபுரீசுவரர் சதுர ஆவுடையாரில் உருளைப்பாணம் கொண்டு இலிங்கத்திரு மேனியராய் எழுந்தருளியுள்ளார்.

**சோமாஸ்கந்தர் திருமுன் வெற்றுத்தளம்**

இறைவன் விமானத்தின் தென்புறம் விமானம், முகமண்டபம், பெருமண்டபம் பெற்று அமைந்திருக்கும் சோமாஸ்கந்தர் திருமுன்னின் வெற்றுத்தளம் பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத் தொகுதி, எண்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரை கொண்டுள்ளது. விமானப்பகுதியில் மட்டும் சாலைப்பத்தி புறந்தள்ளி உள்ளது. சாலைக் கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. நான்முக அரைத்தூண்கள் அணைத்துள்ள முகமண்டப வெற்றுத்தளம் கோட்டம் எதுவும் பெறவில்லை. தாங்குதளம் பெறாத பெருமண்டப வெற்றுத்தளச் சுவரை நான்முக அரைத்தூண்கள் அணைத்துள்ளன.

**விமானம்**

சோமாஸ்கந்தர் விமானம் கபோதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, எண்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், கூரையுறுப்புகள் பெற்று ஒருதள வேசரமாய்க் காட்சியளிக்கிறது. சாலைப்பத்திகளில் வெறுமையான கோட்டப்பஞ்சரங்கள். அதே கட்டமைப்பில் உள்ள முகமண்டபச் சாலைப்பத்தியில் சாளரத்துடனான கோட்டப்பஞ்சரமும் கர்ணபத்திகளில் மகரதோரணத் தலைப்பிட்ட ஆழமற்ற வெறுமையான கோட்டங்களும் உள்ளன. கிரீவ, சிகரக் கோட்டங்களும் வெறுமையாகவே உள்ளன. விமானப் பெருமண்டபம் அதைத் தாங்கும் வெற்றுத்தளக் கட்டமைப்பிலேயே உள்ளது.

**சோமாஸ்கந்தர்**

சிவபெருமான், உமை, முருகன் விளங்கும் சோமாஸ்கந்தர் தொகுதியில் இறைவனும் இறைவியும் சுகாசனத்தில் உள்ளனர். சடைமகுடம், நீள்வெறுஞ்செவிகள், சரப்பளி, தோள்மாலை, உதரபந்தம், தோள், கை வளைகள், சிற்றாடை கொண்டு விளங்கும் இறைவனின் பின்கைகளில் மானும் மழுவும். முன் கைகளில் வலக்கை காக்கும் குறிப்புக் காட்ட, இடக்கை கடகத்தில் உள்ளது. சடைமகுடம், ஸ்வர்ணவைகாக்ஷம், அரும்புச்சரம், சரப்பளி, தோள், கடக, கை வளைகள், சிலம்பு அணிந்துள்ள இறைவியின் வலக்கை நீலோத்பலம் ஏந்த, இடக்கை தொடைமீது இருத்தப்பட்டுள்ளது. தந்தைக்கும் தாய்க்கும் நடுவில் நிற்கும் முருகன் கரண்டமகுடம், ஸ்வர்ண வைகாக்ஷம் அணிந்துள்ளார். வலக்கையில் மலர்மொட்டு, இடக்கை உமையைத் தாவிப் பிடிக்கும் மெய்ப்பாட்டில் உள்ளது.

**அம்மன் கோயில்**

பெருமண்டபம், முகமண்டபம், ஒருதள வேசர விமானம் பெற்றுள்ள தேன்மொழி அம்மன் கோயிலின் விமானம் துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகை, எண்முக அரைத் தூண்கள் அணைத்த கோட்டப்பஞ்சரங்கள் கொண்ட சுவர், கூரையுறுப்புகள் பெற்றுள்ளது. சுவரில் உள்ள பின்னாளைய சிற்பங்களுள் முருக உலா குறிப்பிடத்தக்கது. கருவறையில் பின்கைகளில் அக்கமாலை, மலர் கொண்டு, பட்டாடை, சடை மகுடம், தோள், கை வளைகள் அணிந்து நிற்கும் இறைவியின் முன்கைகள் காக்கும், அருட்குறிப்பில் உள்ளன.

**ஆடவல்லான், உமை**

வலக்காலை முயலகன் மீது இருத்தி, இடக்காலை வலப்புறம் வீசி ஆனந்தத் தாண்டவமிடும் இறைவனின் பின்கைகளில் உடுக்கையும் தீச்சுடரும் அமைய, பாம்பொன்று சுற்றியுள்ள வல முன் கை காக்கும் குறிப்புக் காட்டுகிறது. இட முன் கை வேழமுத்திரையில் உள்ளது. விரிசடையின் வலப்புறம் கங்கையைக் கொண்டுள்ள இறைவனின் வலச்செவி வெறுஞ் செவியாக அமைய, இடச்செவியில் பனையோலைக் குண்டலம்.

கழுத்தில் அரும்புச்சரம், இடையில் சிற்றாடை. கரண்டமகுடம், பட்டாடை, கழுத்தணிகள், கையணிகள் அணிந்து இறைவனின் இடப்புறம் நின்றிருக்கும் உமையின் வலக்கை கடகத்தில் இருக்க, இடக்கை நெகிழ்ந்துள்ளது. செவிகள் நீள்வெறுஞ் செவிகளாகக் காட்டப்பட்டுள்ளன.

## கல்வெட்டுகள்

தேவூரிலிருந்து 1904ல் படியெடுக்கப்பட்ட இரண்டு கல்வெட்டுகளும் தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி பதினேழில் பதிவாகியுள்ளன. 3 இரண்டாம் சடையவர்மர் சுந்தர பாண்டியரின் பதினோராம் ஆட்சியாண்டில் (கி. பி. 1287) பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு, கோயிலை ஆதித்தீசுவரம் எனக் குறிப்பதுடன், தேவூரை அருமொழிதேவ வளநாட்டுத் தேவூர் நாட்டில் இருந்த ஊராக அடையாளப்படுத்துகிறது. கோயில் திருநாமத்துக்காணியில் இரண்டு வேலி ஒரு மா நிலம் கேயமாணிக்க வளநாட்டுத் திருவாரூர்க் கூற்றத்து மேனிலைப் பாடியான வீரராஜேந்திரபுரத்துக் காணியாளர் தென்குடி அழகியமணவாளர் ஆட்கொண்ட நாயகனுக்குக் கோயிலாரால் 150 பணத்திற்கு விற்கப்பட்டது.

கோயிலில் நிகழும் சிறுகாலைச் சந்திக்குப் பிறகு, தம் பெயரால் ‘ஆட்கொண்ட நாயகன் சந்தி' என்ற பெயரில் இறைவனுக்குச் சிறப்பு வழிபாடொன்று நிகழ்த்துவதற்காக அழகிய மணவாளரால் இந்நிலம் கோயிலாரிடமே வழங்கப்பட்டது. வெள்ளம், பஞ்சம் வந்தபோதும் இச்சந்தி முட்டாது நிறை வேற்றப்படும் என்று கோயிலார் உறுதியளித்தனர். நிலவிலையாகப் பெறப்பட்ட பணம், ‘திருஅக்கிரமண்டபம் முன்பு திருக்கல் செய்து நின்ற குமுதப்படைக்கு மேல் திருக்கல் சாத்த வாங்கிக் கோவளத்து கல் அடிப்பிக்கவும் படவு கூலிக்கும்’ பயன்படுத்தப்பட்டது.

நிலத்திற்கான எல்லைகளைக் குறிக்கும்போது, பிடாரிக் கோயில் பெருவழி, மாம்படுகை, வீரசோழ மயக்கல் இவை குறிக்கப்பட்டுள்ளன. சந்தியின்போது இறைவன் திருமுழுக்கும் திருமேற்பூச்சும் மலரும் விளக்கொளியில் படையலும் பெறுமாறு செய்யப்பட்டது. இந்த ஆவணத்தில் கோயில் தேவர்

கன்மி ஈசான பட்டனும் கோயிற் கணக்கு பிரம்ம பிரியனும் தேவூர் நாயகப் பண்டிதனும் கையெழுத்திட்டுள்ளனர்.

இரண்டாம் தேவராயர் காலத்தில் (கி. பி. 1426) வெட்டப் பட்டுள்ள கல்வெட்டு மகமை குறித்த பெரிய இருப்பரசரின் ஆணையாக அமைந்துள்ளது. திருவாரூர் உசாவடியைச் சேர்ந்த அகப்பற்று, இறையிலிப்பற்று, பண்டாரவாடை, அமரம், இலிகிதச் சீவிதம் இவை தொடர்பான மகமையாக வேலிக்குத் தூணிப்பதக்கு நெல், மனை ஒன்றுக்கு இரண்டு காசு இறுக்கும் படி மல்லாயி அவ்வையார் பெயரால் நந்தன ஆண்டில் கட்டளையிடப்பட்டது. அந்த ஆண்டு குறைந்த விலையாகப் பணம் ஒன்றுக்கு நெல் முக்குறுணி விற்றது. பின்பு ஆண்டு தோறும் பணம் ஒன்றுக்கு இரண்டு கலம் அல்லது மூன்று கலமாக நெல் விற்றது. இருந்தபோதும் நந்தன ஆண்டுக் கட்டளைப்படியே விகாரி வருடம் வரை முதலாண்டு இருநூறு பொன் குத்தகையும் பின் தொடர்ந்து எண்ணூறு பொன் குத்தகையும் செலுத்தப்பட்டது. குத்தகை கொண்ட அதிகாரிகள், 'நாட்டிலே அன்னியாயத்திலே இரட்டிக்க இலக்கம் எடுக்க நாடு நலங்கியது'

சாறுவாரி ஆண்டில் அண்ணப்பய்யன் திருவாரூர் வந்து இது தொடர்பான கணக்குகளைக் கேட்டார். கண்ணிமந்த நாயன் எண்ணூறு பொன்னுக்கு மாற்றாக இரண்டாயிரம் பொன் தண்டி இறுத்தபடியால் பற்றுடையார் பெருக்க நலங்கினர். இதனால் தேவர்கள் நாயனான பொக்கண உடையார் காலத்தில் உசாவடிக் குத்தகை இறுக்கும்போது இருந்தவாறே இனி நிகழ சிக்கதேவர் ஆணையிட்டார். அதன்படி வலங்கை, இடங்கை சாதியரிடம் ஒரு மவனுக்குக் கால் பணம் கொள்ளுமாறு அமைந்தது. கல்வெட்டு முற்றுப்பெறாமையினாலும் ஆங்காங்கே சிதைந்திருப்பதாலும் முழுச் செய்திகளையும் அறியக்கூடவில்லை.

மன்னர் பெயரும் ஆட்சியாண்டும் அற்ற நிலையில் கோபுர வாயிலின் கூரையின் கண்டறியப்பட்ட புதிய கல்வெட்டு, கோயில் ஆண்டார்களில் அரசம்பாடியைச் சேர்ந்த நாயகன் உடையான் என்பாரின் மனைவி உய்யவந்தாள் தேவூர்க் கோயிலில் சேத்ரபாலப்பிள்ளையார் திருமேனியை அமைத்த

துடன் அதற்கான வழிபாடு படையல் இவற்றிற்காக அரசிச் செறு என்ற பெயரில் அமைந்த நிலத்துண்டொன்றைக் கோயில் சிவ அந்தணரிடம் அளித்தார். எழுத்தமைதியின் அடிப்படையில் இக்கல்வெட்டைக் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டினதாகக் கொள்ளலாம்.4

**குறிப்புகள்**

1. 2:48,3:74. 'தென்தமிழ்க் கலை தெரிந்தவர் பொருந்திய தேவூர்' எனும் சம்பந்தரின் பாடலடி குறிப்பிடத்தக்கது.
2. ஆய்வு நாட்கள் 7.12.1982, 27.9.2008. இக்கோயில் பற்றிய முதல் கட்டுரை 1983 மார்ச்சு மாதத் திருக்கோயில் இதழில், 'திருத்தேவூர்' என்ற தலைப்பில் வெளியாகியுள்ளது.
3. SII 17:561,562.
4. இக்கல்வெட்டு பேராசிரியர் முனைவர் மு. நளினியால் கண்டறியப்பட்டது.

---------------------------------------------------------

# 20. தலைச்சங்காடு சங்காரண்யேசுவரர்

காவிரியின் தென்கரையில் அமைந்துள்ள பாடல் பெற்ற ஊரான 1 தலைச்சங்காடு மயிலாடுதுறை தரங்கம்பாடிச் சாலையில் ஆக்கூருக்கு 3 கி மீ தொலைவில் உள்ளது பத்மபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரை யுறுப்புகள் பெற்று அமைந்துள்ள ஒருதளக் கோபுர வாயிலை அடுத்து விரியும் சுற்றுவெளியின் நடுவில், 2. 46 மீ. உயர வெற்றுத் தளத்தின் மீது பெருமண்டபம், உள்சுற்று, முகமண்டபம், ஒரு தளத் திராவிட விமானம் பெற்று அமைந்துள்ளது சங்காரண்யேசுவரர் மாடக்கோயில் 2 சுற்றின் கிழக்கில் பிள்ளையாருக்காய் அமைந்த எளிய ஒருதள வேசர விமானமும் அதையடுத்துக் கலைச்சிறப்புக் கொண்ட பலித்தளமும் உள்ளன.

### பலித்தளம்

தமிழ்நாட்டுக் கோயில்களில் பல்வேறு அமைப்பிலான பலித்தளங்களைக் காணமுடிந்தாலும் அவற்றுள் சிலவே சிறக்கப் படைக்கப்பட்டுள்ளன. தலைச்சங்காட்டுப் பலித்தளம் துணைத் தளம், தாமரை உபானத்துடனான கபோதபந்தத் தாங்குதளம் கொண்டு மேலே மலர்ந்த தாமரையாய்ப் பலித்தளத்தைப் பெற்றுள்ளது. தளக் கட்டுமானத்தின் நாற்புறமும் உள்ள ஆழமான கோட்டங்கள் பத்மபந்தத் தாங்குதளம், எண்முக அரைத்தூண்கள், கூரையுறுப்புகளை மூடும் கபோதம், கிரீவம், சாலை சிகரம் எனக் கோட்டப்பஞ்சரமாய் அலங்கரிக்கப் பட்டுள்ளன. கோட்டங்களில் வடக்கிலும் தெற்கிலும் பத்மநிதி இடம்பெற, கிழக்கிலும் மேற்கிலும் உள்ள சங்கூதும் பூதத்தைச் சங்கநிதியாகக் கொள்ளலாம். தாங்குதளத்தை ஊடறுத்து அமைக்கப்பட்டுள்ள இக்கோட்டப்பஞ்சரங்களே பலித்தளத்திற்குத் தனிக் கவர்ச்சி தருகின்றன.

### விஷ்ணுவும் தேவியரும்

சுற்றுவெளியின் தென்மேற்கு மூலையிலுள்ள மண்டபக் கோயிலில் விஷ்ணு சீனிவாசப் பெருமானாய் நின்றகோலத்தில் உள்ளார். கரண்டமகுடம், பட்டாடை அணிந்து இருபுறத்தும் நிற்கும் தேவியரில், வலப்புறமுள்ள திருமகள் மார்புக்கச்சுடன்

வலக்கையை நெகிழ்த்தி, இடக்கையில் மலர் கொண்டுள்ளார். நிலமகள் கச்சற்றவராய் இடக்கையை நெகிழ்த்தி, வலக்கையில் மலர் பிடித்துள்ளார். பின்கைகளில் சங்கு, சக்கரம் ஏந்திப் புலிமுகக் கச்சு இறுக்கும் பட்டாடையும் கிரீடமகுடமுமாய் நிற்கும் விஷ்ணுவின் வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இட முன் கை கடியவலம்பிதமாக உள்ளது. இறைவனின் செவிகளில் மகரகுண்டலங்கள்.

**சுற்றாலைக் கோயில்கள்**

சுற்றுவெளியின் வடமேற்கில் உள்ள ஒருதளத் திராவிட விமானத்தில் தேவியருடன் முருகன் இடம்பெற்றுள்ளார். வடக்கில் பெருமண்டப வெற்றுத்தளம் அருகே ஒருதள வேசர விமானத்தில் சண்டேசுவரர் சுகாசனத்தில் உள்ளார்.

**சேட்டைத்தேவி**

சுற்றுவெளியின் வடமேற்கு மூலையில் இரண்டு கால்களையும் தொங்கவிட்டவாறு தளமொன்றில் சேட்டைத்தேவி பட்டாடையுடன் வீற்றிருக்கிறார். வலக்கையில் மலர்; இடக்கை தளத்தின் மீது ஊன்றியுள்ளது. கச்சற்ற மார்பகங்கள் இளமையாக உள்ளன. வலப்புறம் உள்ள நந்திகேசுவரன் இறைவிக்காய் ஒருக்கணித்த உத்குடியில் உள்ளார். இடப்புறமுள்ள அக்னி மாதா உத்குடி போல அமர்ந்துள்ள போதும், வலக்காலும் ஓரளவிற்குக் கீழிறக்கமாகவே உள்ளது. முப்புரிநூல் அணிந்துள்ள மகனின் இடக்கையில் உருள்தடி; வலக்கையில் மலர். மகளின் வலக்கை கடகத்தில் மலர் ஏந்த, இடக்கை இடுப்பருகே. கச்சணிந்த இவரின் இடையில் சிற்றாடை.

**வெற்றுத்தளம்**

உபானங்களுடன் பத்மபந்தத் தாங்குதளத்தில் எழும் வெற்றுத்தளச் சுவரை, அனைத்து உறுப்புகளும் பெற்ற நான்முக அரைத்தூண்கள் அணைத்துள்ளன. சுவர்த் திருப்பங்களில் இவை இரட்டையாக உள்ளன. போதிகைகள் வெட்டுத் தரங்கமாக வளைந்து கூரை தாங்க, கபோதம், கொடிக்கருக்கு அழகூட்டலுடன் உள்ளது.

தளத்தின் கிழக்குச் சுவரில் உள்ள கோட்டத்தில் திரயச்ர பாதங்களுடன் உள்ள இணையர் சிற்பத்தில் முப்புரிநூல், உதர பந்தம், கழுத்தணிகள் மகரகுண்டலங்கள் அணிந்துள்ள ஆடவரின் இடக்கை அருகிலுள்ள தேவியின் வலக்கையைப் பற்றியுள்ளது. ஆடவரின் வலக்கை சின் குறிப்பில் இருக்க, தேவியின் இடக்கை கடியவலம்பிதமாக உள்ள இவ்விணையை அரச இணையாகக் கொள்ளலாம்.

### தெற்கு முன்றில்

வெற்றுத்தளத்தின் மீதேற வாய்ப்பாகத் தென்புறத்தே கிழக்குச் சுவரை ஒட்டிய நிலையில் பன்னிரண்டு படிகள் யாளிப் பிடிச்சுவருடன் உள்ளன. படிகளின் மேற்றளம் பெருமண்டபத்திற்கான முன்றிலாக்கப்பட்டுள்ளது. தென்புறம், முன்றிலைத் தாங்கும் நான்கு தூண்களும் சதுர தளத்தில் எழும் இந்திரகாந்த உடல் பெற்று, அனைத்து மேலுறுப்புகளும் கொண்டு வெட்டுத் தரங்கப் போதிகைகளுடன் கூரை தாங்குகின்றன. படிச்சுவரின் தென்புறத்தும் முன்றிலின் கீழமைந்த வெற்றுத்தளத்தின் தென்புறத்தும் வெறுமையான கோட்டங்கள் உள்ளன.

### வெற்றுத்தளம்

சங்காரண்யேசுவரர் விமானம், முகமண்டபம் இவற்றைத் தாங்கியுள்ள வெற்றுத்தளமும் அதன் மீதுள்ள விமான உள்சுற்றின் புறச்சுவரும் தாங்குதளம், வேதிகை, தூண் தழுவல் ஏதும் பெறாது பத்மஜகதியின் மீதெழும் நெடுஞ்சுவராக அமைந்துள்ளமை திருப்பணிகளின் விளைவாகலாம்.

### பெருமண்டபம்

உபானத்துடனான பத்மபந்தத் தாங்குதளம் பெற்றெழும் பெருமண்டப வெளிச்சுவர் வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் கொண்டு விளங்குகிறது. கூடு வளைவுகளுடனான கபோதத்திற்கு மேல் வேதிகை காட்டப்பட்டுள்ளது. அதன் தென்கிழக்கு, வடகிழக்குத் திருப்பங்களில் பக்கத்திற்கொரு பூதநாயகரும் காளையும் உள்ளனர். தெற்கிலும் கிழக்கிலும் வாயில்கள் கொண்டுள்ளபோதும் முதன்மை வாயிலாகத் தென்வாயிலே அமைந்துள்ளது.

தென்வாயிலின் இருபுறத்தும் கருங்கல் சாளரங்கள் பெற்றுள்ள இம்மண்டபத்தை முச்சதுர, இருகட்டு உடல் பெற்ற தூண்கள் தாங்குகின்றன. கட்டுகள் முப்பட்டை பெற, சதுரங்கள் சிலவற்றில் சிற்பங்கள். மேலே பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரை. மண்டபத்தின் வடபுறமுள்ள அறையில் ஆடவல்லானும் உமையும் இடம்பெற்றுள்ளனர்.

**ஆடவல்லான்**

வலக்காலை முயலகன் மீது இருத்தி, இடக்காலை வலப் புறம் வீசி ஆனந்தத் தாண்டவம் ஆடும் ஆடவல்லானின் பாம்பு சுற்றிய வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இட முன் கை வேழ முத்திரையில் உள்ளது. பின்கைகளில் உடுக்கையும் தீச்சுடரும். விரிசடையில் வலப்புறம் வணங்கியவராய் கங்கை; இடப்புறம் பிறை. மகுட முகப்பில் மண்டையோடு. வலச்செவியில் மகரகுண்டலம்; இடச்செவியில் பனையோலைக் குண்டலம், தோள்மாலை, உதரபந்தம், தோள், கடக, கை வளைகள், சிற்றாடை, குறங்குசெறி அணிந்து ஆடும் இறைவனின் இடப்புறம் கரண்டமகுடம், மகரகுண்டலங்கள், அரும்புச்சரம், குறங்கு செறி, பட்டாடை அணிந்து நிற்கும் உமையின் வலக்கை கடகமாய் அமைய, இடக்கை நெகிழ்ந்துள்ளது.

இவ்வறையின் சுவரில் பின்புறம் சுற்றி வளைத்த கொண்டையும் மீசை, தாடியும் நீள்வெறுஞ்செவிகளும் கொண்டு பட்டாடையில் வணங்கி நிற்கும் ஆண்வடிவம் இந்தக் கட்டுமானத்தை எடுத்தவராகலாம். மண்டபத்தின் தென்புறத்தே உள்ள சிறுமேடையில் நால்வர், பட்டினத்தார், கோச்செங்கட்சோழன் சிற்பங்கள் உள்ளன. மண்டபத்தின் மேற்கிலுள்ள வாயில் இறைவன் திருமுன்னைச் சுற்றி அமைந்துள்ள உள்சுற்றுக்கு வழி தருகிறது. இவ்வாயில் அருகே தென்மேற்கில் துணைத்தளத்துடனான மேடை ஒன்று உள்ளது.

இறைவன் விமானம், முகமண்டபம் இவற்றைச் சுற்றி ஒரு மேடையென அமைந்துள்ள உள்சுற்றின் கூரையை முச்சதுர, இருகட்டு உடல் பெற்ற தூண்களின் மேலுள்ள வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்குகின்றன. தெற்கு மேடையில் தேவார மூவர், சண்டேசுவரர், மகாவிஷ்ணு, ஜுரஹரேசுவரர், ராமர், சீதை

திருமேனிகள் அமைய, தென்மேற்கில் வலம்புரிப் பிள்ளையாரும் மேற்கில் முருகனும் வடக்கில் நீலகண்டேசுவரரும் உள்ளனர்.

**விமானம்**

5. 71 மீ. பக்கமுடைய சதுரமாக அமைந்துள்ள சங்காரண்யேசுவரர் விமானம் உபானங்களின் மேலெழும் கபோதபந்தத் தாங்குதளம் பெற்றுள்ளது. பத்மஜகதி, உருள்குமுதம், பாதங்களும் கம்புகளும் பெற்ற கண்டம், கூடுவளைவுகள் திகழும் கபோதம், பூமிதேசம் என அனைத்து உறுப்புகளும் நன்கு அமைந்துள்ள கபோதபந்தத் தாங்குதளத்தின் மீது வேதிகைத் தொகுதியும் சுவரும் எழுகின்றன. சதுரபாதத்தில் எழும் எண்முக அரைத்தூண்கள் சுவரைத் தழுவ, மேலுள்ள பூமொட்டுப் போதிகைகள் கூரையுறுப்புகளைத் தாங்க, சுவரின் முப்புறத்தும் உள்ள கோட்டங்களைச் சட்டத்தலை பெற்ற உருளைத்தூண்கள் அணைத்துள்ளன.

கோட்டங்கள் உள்ள சாலைப்பத்திகள் சற்றுப் புறந்தள்ளலாக உருளை அரைத்தூண்களின் அணைவுடன் காட்சிதருகின்றன. பஞ்சர அலங்கரிப்புப் பெற்ற இக்கோட்டங்களில் தெற்கில் ஆலமர்அண்ணலும் மேற்கில் இலிங்கோத்பவரும் வடக்கில் நான்முகனும் உள்ளனர். ஆரஉறுப்புகளற்ற விமானக் கீழ்த்தளத்தின் மேலே செங்கல் கட்டுமானமாய் திராவிட கிரீவம், சிகரம் அமைய, கிரீவகோட்டங்கள் வெறுமையாக உள்ளன.

**ஆலமர்அண்ணல்**

வீராசனத்திலுள்ள இறைவனின் பின்னிருக்கும் ஆலமரத்தில் வலப்புறம் பொக்கணம் தொங்குகிறது. இறைவனின் வலப் பாதம் முயலகனின் மீது இருத்தப்பட்டுள்ளது. அருகே இடப் புறமாக முகம் திருப்பி நந்தி அமர்ந்துள்ளது. சடைப்பாரம் கொண்டுள்ள இறைவனின் வலச்செவியில் மகரகுண்டலம், இடச்செவியில் பனையோலைக் குண்டலம். பின்கைகளில் அக்கமாலையும் தீச்சுடரும் கொண்டுள்ள இறைவனின் முன்கைகள் சிதைந்துள்ளபோதும் வலக்கை சின்முத்திரையிலும் இடக்கை சுவடி ஏந்தித் தொடைமேல் இருப்பதையும் அறியமுடிகிறது. சரப்பளி, முப்புரிநூல், சிற்றாடை அணிந்துள்ள இறைவனின் இருபுறத்தும் உள்ள சுவர்ப்பகுதிகளில் பக்கத்திற்கிருவராக

முனிவர்கள். மாடக்கோயில் ஆலமர்அண்ணல்களில் தலைச்சங்காடு இறைவன் தம்முடைய நிகரற்ற புன்னகையால் முதலிடம் பெறுகிறார்.

**இலிங்கோத்பவர்**

இலிங்கத்திலுள்ள கோளத்திறப்பில் காட்சிதரும் இறைவனின் பின்கைகளில் மானும் மழுவும். சடைமகுடம், இடச்செவியில் பனையோலைக் குண்டலம், தோள், கை வளைகள், முப்புரிநூல், உதரபந்தம், சிற்றாடை அணிந்துள்ள இறைவனின் வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இட முன் கை கடிய வலம்பிதமாக உள்ளது. வலச்செவி வெறுஞ்செவியாக அமைய, இலிங்கத்தின் மேற்பகுதியில் பூப்பட்டை சுற்றப்பட்டுள்ளது. மேலே அன்னமும் கீழே பன்றியும் காட்டப்பட்டுள்ளன. இறைவ னின் இருபக்கத்தும் உள்ள சுவர்ப்பகுதிகளில் விஷ்ணுவும் நான்முகனும் சிறிய அளவினராய் வணக்கமுத்திரையில் உள்ளனர்.

**நான்முகன்**

சமபங்கத்தில் சடைமகுடம், நீள்வெறுஞ் செவிகள், தோள், கடக, கை வளைகள், உதரபந்தம், முப்புரிநூல், பட்டாடை, இடைக்கட்டு, குறங்குசெறி அணிந்து பின்கைகளில் அக்கமாலை, குண்டிகை ஏந்தி நிற்கும் நான்முகனின் வல முன் கை காக்கும் குறிப்பில் இருக்க, இட முன் கை கடியவலம்பிதமாக உள்ளது.

**முகமண்டபம்**

விமானத்தின் கட்டமைப்பிலேயே உள்ள முகமண்டபத்தின் தென்கோட்டத்தில் பிள்ளையாரும் வடகோட்டத்தில் மகிடாசுரமர்த்தனியும் உள்ளனர். கரண்டமகுடம், சரப்பளி, வஸ்திர முப்புரிநூல், உதரபந்தம், சிற்றாடை, இடைக்கட்டு இவற்றுடன் நிற்கும் பிள்ளையாரின் துளைக்கை, இட முன் கை மோதகத்தைச் சுவைக்கிறது. பின்கைகளில் அங்குசமும் பாசமும் கொண்டுள்ள அவருடைய வல முன் கையில் உடைந்த தந்தம்.

கரண்டமகுடம், பனையோலைக் குண்டலங்கள், அரும்புச்சரம், ஸ்வர்ணவைகாக்ஷம், தோள், கடக, கை வளைகள், மோதிரம், மார்புக்கச்சு, இடைக்கட்டுடனான சிற்றாடை, அடுக்குச் சிலம்பு அணிந்து மகிடத்தின் தலை மீது நிற்கும் நெற்றிக்

கண் பெற்ற மகிடாசுரமர்த்தனியின் பின்கைகளில் சங்கு, சக்கரம். வல முன் கை காக்கும் குறிப்பில் இருக்க, இட முன் கை கடியவலம்பிதமாக உள்ளது. சோழர் காலச் சிற்பமாக விளங்கும் இம்மர்த்தனி மாடக்கோயில் மர்த்தனிகளில் சிறப்புக்குரியவர்

**காவலர்கள்**

முகமண்டப வாயிலின் இருபுறத்தும் உள்ள கோட்டங்களில் காவலர்கள். கீர்த்திமுகம் பெற்ற சடைமகுடம், பனையோலைக் குண்டலங்கள், அரும்புச்சரம், சரப்பளி, முப்புரிநூல், உதரபந்தம், தோள், கை வளைகள், சிற்றாடை அணிந்துள்ள அவர்களுள், தெற்கர் வலக்கையில் வியப்புக் காட்டி, இடக் கையை அருகிலுள்ள பாம்பு ஊரும் மரக்கிளை மீது வைத்துள்ளார். இடப்பாதம் கருவறை நோக்கித் திரும்ப, வலப்பாதம் மரக்கிளை மேல். வலக்கையால் அச்சுறுத்தும் வடக்கர், இடக் கையை மழுவின் மீது தாங்கலாக்கியுள்ளார். அலங்கார முப்புரி நூல் பெற்றுள்ள அவரது வலப்பாதம் கருவறை நோக்கி அமைய, இடப்பாதம் பாம்பு சுற்றியுள்ள மழு மீது உள்ளது. இருவருமே கோரைப்பற்களுடன் காட்சிதருகின்றனர். வடக்கரின் தோள் வளைகளில் கீர்த்திமுகம் காட்டப்பட்டுள்ளது.

முகமண்டப, கருவறை வாயில்களைச் சட்டத்தலை பெற்ற உருளைத்தூண்கள் அணைக்க, முன்னால் மூன்று படிகள் பிடிச்சுவருடன் உள்ளன. உள்சுற்றின் முன் விரிவுக் கூரையையும் முகமண்டபக் கூரையையும் உருளைத்தூண்கள் தாங்க, மண்டபத்தின் சிறிய மேடையில் நந்தி. கருவறையில் இறைவன் வேசர ஆவுடையார் மீது உருளைப்பாணத்துடன் இலிங்கத் திருமேனியராய் உள்ளார்.

**அம்மன் கோயில்**

கோயில் வெளிச்சுற்றின் வடகிழக்குப் பகுதியில் ஒருதள வேசரமாய் உள்ள அம்மன் கோயில் விமானமும் முகமண்டபமும் ஏறத்தாழ ஒத்த கட்டமைப்பில் உள்ளன. துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம், கண்டம், கபோதம், வேதிகை, எண்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் கொண்டுள்ள அம்மன் கோயில் விமானத்தின் சாலைப்பத்தி சற்றே புறந்தள்ளியுள்ளது. அதன்

தாங்குதளம் பத்மஜகதியுடன் சுபோதபந்தமாகியுள்ளது வேதிகைக்கு மாற்றாகப் பெருவாஜனம் இடம்பெற்றுள்ளது முகமண்டபத்தில் புறந்தள்ளல் இல்லை. பஞ்சரமாக அலங்கரிக்கப் பட்டுள்ள விமானக் கோட்டங்களும் முகமண்டபக் கோட்டங்களும் வெறுமையாக உள்ளன.

முன்னுள்ள பெருமண்டபம் துணைத்தளம், தாங்குதளம் (ஒரு சிறு பகுதியில் பிரதிபந்தம், பின் நெடுக பாதபந்தம்). வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், கூரையுறுப்புகள் பெற்று அமைந்துள்ளது. கருவறையில் இறைவி அழகம்மையாய் எழுந்தருளியுள்ளார். கரண்டமகுடம், பட்டாடை, சரப்பளி அணிந்துள்ள அம்மையின் வல முன் கை காக்கும் குறிப்பிலிருக்க, இட முன் கை கடியவலம்பிதமாக உள்ளது. பின்கைகளில் வலப்புறம் அக்கமாலை, இடப்புறம் தாமரை

**கல்வெட்டுகள்**

இக்கோயிலில் இருந்து பத்துக் கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன.3 அவற்றுள் காலத்தால் முற்பட்ட உத்தமசோழரின் கல்வெட்டு அவருடைய அன்னையர் பராந்தகன் மாதேவடிகளான செம்பியன் மாதேவி தலைச்சங்காடு மகாதேவரின் பெரிய கோயிலுக்கு வெள்ளிப்பாத்திரம் தந்த செய்தியைத் தருகிறது. சிதைந்துள்ள முற்சோழர் காலக் கல்வெட்டு, திருவேள்விக்குடி இறைவன் கோயிலுக்குத் தலைச்சங்காடு ஊரவையார் நிலம் விற்ற செய்தியைக் கூறுகிறது. கடல்சூழ்ந்த பார் மாதரும் என்ற மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும் இரண்டாம் இராஜாதிராஜரின் கல்வெட்டில், ஜெயங்கொண்ட சோழ வளநாட்டு ஆக்கூர் நாட்டிலிருந்த தலைச்சங்காடு பெருங்கோயிலுக்குச் சொந்தமான தேவதான நிலங்களின் இருப்பிடமும் பரப்பளவும் பொத்தகத்தில் இருந்தாற் போல் பட்டியலிட்டுத் தரப்பட்டுள்ளன பொன் மேஞ்ச சோழ விளாகம்' என்ற பெயரில் ஒரு நிலம் இருந்தது.

மூன்றாம் இராஜராஜ சோழரின் ஐந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, இவ்வூரையும் இதன் கிழக்கில் இருந்த சிற்றூரையும் காவல் காத்த பாடிகாவலருக்குத் தங்க இடம் இல்லாமையாலும் ஊதியம் வாழ்க்கைக்குப் போதாமையாலும் ஊரவை நான்கு வேலி நிலம் கொடையாகத் தந்ததாகச் சொல்கிறது. அரச துரோகக் குற்றத்தைத் தவிர வேறெந்தச் சூழலிலும் அவர்களுக்

குத் தந்த நிலத்தை வேறெதற்கும் மாற்றிக் கொடுக்க முடியாதபடி அவர்களுக்கே உரிமையுடையதாக அக்கொடை அமைந்தது.

அதே மன்னரின் ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டின் மூலம் ஒரு குத்தகைக்காரர் ஆண்டுக் கடமையான எட்டுக் கலம் நெல்லைத் தொடர்ந்து பல ஆண்டுகளாகக் கொடுக்கத் தவறியதால் அவரிடம் அளிக்கப்பட்டிருந்த ஒரு வேலித் தேவதான நிலம் திருநாமத்துக்காணியாக மாற்றப்பட்டமையும் அம்மாற்றத்திற்குக் குத்தகைக்காரரின் ஒப்புதல் பெறப்பட்டமையும் ஊரவையின் அனுமதியுடன் அந்நிலம் வேறு குத்தகைக்காரர்களுக்கு அடைமுதல் பற்றுக்குத் தரப்பட்டமையும் தெரியவருகின்றன.

அதே மன்னரின் பதினேழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, ஜெயங்கொண்டசோழ நல்லூர் ஊரவையார் அவ்வூரைச் சேர்ந்த இராஜேந்திர சோழீசுவரம் உடையார், குசலீசுவரம் உடையார், வில்லீசுவரம் உடையார் திருக்கோயில்களுக்குக் கேட்பாரற்றுக் கிடந்த மூன்று வேலி பயிரிடக்கூடிய நிலத்தை வரியில்லாச் சொத்தாக ஒப்படைத்தனர் என்றும் ஒழுகு, பொத்தகம் இரண்டிலும் அதைப் பதிவுசெய்து, அடுத்த நிலவுரிமை பற்றிய ஏற்பாட்டின்போது இறையிலி என்பதற்குப் பதிலாகத் திறப்பு என்று குறிக்கப்பட்டால் ஊர்க்குடிகள் நிலவரி செலுத்த வேண்டும் என நிபந்தனை இடப்பெற்றது என்றும் தெரியப்படுத்துகிறது. அதே மன்னரின் பதினெட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, தனுசு மாதத்தில் தலைச்சங்காட்டில் கிராம காரிய பொறுப்பேற்ற ஊரவை உறுப்பினர்கள் கிராமத்தின் பத்துக் கட்டளை, கிராமத்தைச் சுற்றியிருந்த சிற்றூர்கள் இவற்றின் வாரநிலங்களுக்கு உரித்தான சில கட்டுப்பாடுகளையும் சிறப்புரிமைகளையும் வரையறுத்த தகவலைத் தருகிறது.

அதே மன்னரின் பத்தொன்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, மன்னரின் ஆட்சிக் காலத்தில் நிலவிய குழப்பமான சூழ்நிலையைப் படம்பிடிக்கிறது. மன்னரின் ஐந்து, பதினொன்று, பதினைந்தாம் ஆட்சியாண்டுகளில் நாடு இருந்த குழப்பமான சூழ்நிலையில் தலைச்சங்காட்டு ஊரவையில் இருந்த நில உரிமை, வரித்தண்டல் தொடர்பான பழைய பொத்தகங்களும் பதிவேடுகளும் தொலைந்துவிட்டமையால், ஊரவை, பிள்ளை புரோசைக்குடியார் சத்யவாக்கர் திருவேகம்பம் உடையார் மூலம்

பிள்ளை சேந்தமங்கலமுடையார் சிவதவனப் பெருமாளான இருங்கோளரை அணுக, அவர், மன்னரின் பதினெட்டாம் ஆட்சியாண்டு வரை நிலங்களை அனுபவித்து வந்த குடிகளின் பெயருக்கே அந்தந்த நிலங்களின் உரிமை ஆவணத்தைப் புதுப்பித்து வழங்குமாறு நெறிப்படுத்தினார்.

அதே மன்னரின் சிதைந்த நிலையில் உள்ள இருபத்திரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, நிரந்தர அமைப்பாக இருந்து ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படும் அமைப்பாக மாற்றப்பட்ட நிருவாக அலுவலர் குழுமத்திற்கு ஊதியம் அளிப்பதற்காகத் தண்டப்பெற்ற வாடகையினங்கள் சிலவற்றை ஊரவை நீக்கிய தகவலைத் தருவதுடன், இவ்வலுவலர் குழுமம் தங்களுக்கு வழங்கப்பட்ட நெல்லையே ஊதியமாகக் கொண்டு பணியாற்ற முடிவானதாகவும் கூறுகிறது.

கி.பி.1474ல் வெட்டப்பட்டுள்ள அரசர் பெயரற்ற கல்வெட்டு, பெருந்திருக்கோயில் உடைய நாயனார் கோயிலில் தம்மால் ஏற்படுத்தப்பட்ட வழிபாட்டுச் செலவினங்களுக்காக சோழ பாண்டிய நல்லூரில் மூன்று வேலி நிலம் அந்தணர் ஒருவரால் கொடையாகத் தரப்பட்ட செய்தியைத் தெரிவிக்கிறது.

இக்கோயில் பெருமண்டபத் தெற்கு வாயிலருகே புதிதாகக் கண்டறியப்பட்ட கல்வெட்டு, 'திருமிகைச்சூர் எழுவை' எனும் பெயரில் அமைந்த அளவுகோல் ஒன்றைச் சுட்டுகிறது. 4

**குறிப்புகள்**

1. 2:55. சம்பந்தரின் பதிகத்தில் ஊரின் பெயர் தலைச்சங்கை என்றுள்ளது.
2. ஆய்வு நாட்கள் 10. 8. 1982, 8. 9. 2007, 26. 9. 2009. இக்கோயில் பற்றிய முதல் ஆய்வுக்கட்டுரை 1983ல் வெளியான செந்தமிழ்ச் செல்வி, செப்டம்பர், அக்டோபர் இதழ்களில் ‘சைவமும் வைணவமும் தழைத்தோங்கும் தலைச்சங்காடு' என்ற தலைப்பில் பதிவாகியுள்ளது.
3. ARE 1925: 204 - 213.
4. இக்கல்வெட்டு பேராசிரியர் முனைவர் மு. நளினியால் கண்டறியப்பட்டது.

------------------------------------

# 21. தலைச்சங்காடு தட்சிணபுரீசுவரர்

தலைச்சங்காடு சங்காரண்யேசுவரர் கோயிலுக்குச் செல்லும் வழியில் அமைந்துள்ள தட்சிணபுரீசுவரர் கோயில்' 1 1902 ஜூன் மாதம் 30ம் நாள் க. கோவிந்தசாமிப் பிள்ளையால் கட்டப்பட்டதாக 1959 ஜூன் மாதம் முதல் நாள் இக்கோயிலைத் திருப்பணி செய்திருக்கும் அவரது மருமகள் திருமதி பட்டம்மாள் இவ்வளாக வாயிலில் அமைத்திருக்கும் கல்வெட்டுக் கூறுகிறது.

துணைத்தளம், உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், நீளமான உறுப்பு வேறுபாடற்ற நான்முகத் தூண்கள் தழுவும் சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரை பெற்றுள்ள எளிய நுழைவாயிலைக் கடந்ததும் கண்களில் படமாகிறது வளாகத்தின் நடுவில் அமைந்துள்ள மாடக்கோயில். அதன் முன்னுள்ள இரண்டடுக்கு மேடையில் கீழடுக்கில் கிழக்குப் பார்வையாகப் பிள்ளையார் சிற்பமும் மேலடுக்கில் மேற்குப் பார்வையாக நந்தியும் உள்ளன. மதிலை ஒட்டிக் கிழக்கில் உள்ள மாளிகை அறைகள் வெறுமையாக உள்ளன. வெளிச்சுற்றின் தென்மேற்கில் ஒருதள வேசர விமானத்தில் பிள்ளையாரும் மேற்கில் முன்றிலுடனான ஒருதளத் திராவிட விமானத்தில் முருகனும் வடபுறத்தே ஒருதள வேசர விமானத்தில் சண்டேசுவரரும் உள்ளனர்.

### வெற்றுத்தளம்

2. 26 மீ. உயரமுள்ள வெற்றுத்தளம் உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், வெட்டுத்தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றுச் செங்கல் கட்டுமானமாக அமைய, அதன் மீதுள்ள மாடக்கோயில் விமானம், முகமண்டபம், மண்டபச் சுற்று, பெருமண்டபம் கொண்டுள்ளது.

### பெருமண்டபம்

பெருமண்டபத்தை அடையக் கிழக்கில் வெற்றுத்தளத்தை ஒட்டித் தெற்கிலும் வடக்கிலும் அமைந்துள்ள பன்னிரண்டு படிகள் உதவுகின்றன. படிகள் முடியுமிடத்தில் உள்ள முன்றில் வளைவில் காளைஊர்தியராக இறைவனின் சுதைவடிவம்

உள்ளது. முச்சதுர, இருகட்டுத் தூண்கள் வெட்டுத்தரங்கப் போதிகைகளின் உதவியுடன் கூரைதாங்கும் பெருமண்டபத்தின் வடபுறத்தே தெற்குப் பார்வையாக அகிலாண்டேசுவரி அம்மனின் ஒருதள வேசர விமானமும் முகமண்டபமும் அமைந்துள்ளன. பெருமண்டபத்தின் புறச்சுவர் தாங்குதளமற்ற, வெறுஞ் சுவராக எழுந்து, கூரையுறுப்புகள் பெற்று முடிகிறது. மண்டபத்தின் வட, தென்சுவர்களில் சாளரங்கள் உள்ளன.

**அகிலாண்டேசுவரி அம்மன் விமானம், முகமண்டபம்**

பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றுள்ள அம்மன் விமானத்தின் முத்திசைகளிலும் உள்ள மகரதோரணத் தலைப்பிட்ட கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. விமானத்தின் கட்டமைப்பில் உள்ள முகமண்டபத்தின் கோட்டங்களும் வெறுமையாக உள்ளன. பின்கைகளில் அக்கமாலையும் மலர்மொட்டும் கொண்டு, சமபங்கத்தில் விளங்கும் இறைவியின் முன்கைகள் காக்கும் குறிப்பும் அருட்குறிப்பும் கொண்டுள்ளன. தலையில் சடை மகுடம்.

**மண்டபச் சுற்று**

பெருமண்டபத்தின் மேற்கிலுள்ள வாயில் மண்டபச் சுற்றுக்கு வழிவிடுகிறது. வாயிலின் இருபுறத்தும் காவலர்கள் ஓவியங்களாக நிற்கின்றனர். தெற்கிலும் வடக்கிலும் மேற்கிலும் விரியும் உள்சுற்றின் வண்டிக்கூடு கூரையை நான்முகத் தூண்கள் தாங்குகின்றன. இவ்விரிவிற்கான வாயில்களுள் தென்வாயில் சற்றுச் சிறியதாகவும் வடவாயில் பெரியதாகவும் உள்ளன. சுவரில் சாளரங்கள் உள்ளன. மண்டபச் சுற்றின் புறச்சுவர் உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், சுவர், கூரையுறுப்புகள் பெற்றுள்ளது. சுவரில் சாளரங்கள் உள்ளன.

**விமானம்**

பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் நாங்கும் கூரையுறுப்புகள் என அமைந்துள்ள விமானத்தின்

கீழ்த்தளத்தில் முப்புறத்தும் உள்ள கோட்டப்பஞ்சரங்கள் வெறுமையாக உள்ளன. தென்புறம் கோட்டத்தின் முன் ஆலமர்அண்ணல் சிற்பம் ஒன்று இருத்தப்பட்டுள்ளது. ஒருதளத் திராவிடமாக உள்ள விமானத்தின் கீழ்த்தளம் 5. 15 மீ. பக்கமுடைய சதுரமாக அமைந்துள்ளது. விமானத்தின் கிரீவகோட்டங்களில் வடக்கில் நான்முகனும் தெற்கில் ஆலமர் அண்ணலும் மேற்கில் விஷ்ணுவும் உள்ளனர்.

விமானத்தின் கட்டமைப்பிலுள்ள முகமண்டபம் உட்புறத்து வெறுமையாக உள்ளது. கருவறையில் சதுர ஆவுடையாரின் மீது உயரமான இலிங்கபாணம் இடம்பெற்றுள்ளது.

### குறிப்பு

1. **ஆய்வு நாள்** 26. 9. 2009.

---

## 22. ஆக்கூர்

மயிலாடுதுறையிலிருந்து தரங்கம்பாடி செல்லும் வழியில் 76 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது பாடல் பெற்ற ஊரான ஆக்கூர் 1 அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவரான சிறப்புலி நாயனார் வாழ்ந்த 2 இவ்வூரில்தான் கோச்செங்கட்சோழனால் எழுப்பப்பட்ட எழுபது மாடக்கோயில்களுள் ஒன்று விளங்குகிறது. கோயிலின் கிழக்கு வாயில் சுதையுருவங்களற்ற மூன்று நிலைக் கோபுரத்துடன் அமைய, தெற்கிலும் வாயில் பெற்றுள்ள இக்கோயில் வளாகத்தில், மாடக்கோயில் கிழக்குப் பார்வையில் அமைந்துள்ளது .3 கோபுரத்தின் வடகோட்டத்தில் திரயச்ர பாதங்களுடன் மார்பின் இடப்புறம் வாளொன்றை அணைத்தபடி வணக்க முத்திரையில் நிற்கும் அதிகாரநந்தி சடைமகுடம், இடச்செவியில் பனையோலைக் குண்டலம், தோள், கை, வளைகள், சரப்பளி, தோள்மாலை, பட்டாடை, இடைக்கட்டு அணிந்து பின்கைகளில் மான், மழு ஏந்தி நிற்கிறார். வலச்செவி வெறுஞ்செவியாக உள்ளது. கோபுரத்தின் தென்கோட்டத்தில் திரயச்ர பாதங்களுடன் சிற்றாடை, தாடி, மீசை, பின் கொண்டையுடன் வணக்க முத்திரையில் காட்சிதரும் ஆடவர் கோபுரத்தைக் கட்டியவராகலாம். தெற்கு மதில் சுவரில் தேவார மூவரின் சிற்பங்கள் உள்ளன.

வளாகத்தின் வடபுறம் அம்பலக்கூத்தர் திருமுன்னாக விளங்கிய கட்டமைப்பு தற்போது வெற்றுக் கட்டுமானமாய் உள்ளது. தென்புறம் அம்மன்கோயிலும் மேற்கில் ஒருதள வேசர விமானத்தில் பிள்ளையாரும் ஒருதள நாகர விமானத்தில் சரசுவதியும் உள்ளனர். வடபுறம் ஒருதள நாகர விமானத்தில் சண்டேசுவரர். வடமேற்கு மூலையில் தேர் போன்ற கட்டுமானத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கோயிலில் முருகன் தேவியருடன் காட்சிதர, வாயிலின் வலப்புறம் நக்கீரரும் இடப்புறம் அருணகிரியும் காட்டப்பட்டுள்ளனர்.

### அம்பலக்கூத்தர் திருமுன்

கபோதபந்தத் துணைத்தளம், பத்மபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நாகபந்தம் பெற்ற சதுரபாதங்களின் மீதெழும் எண்முக அரைத்தூண்கள் சூழ்ந்த சுவர், பூமொட்டுப்

போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் என அமைந்துள்ள இக்கட்டுமானத்தின் கர்ணபத்திகளில் உள்ள கோட்டங்கள் மகரதோரணங்களால் தலைப்பிடப்பட்டுள்ளன. உருளைத்தூண் அணைப்புடன் பஞ்சர அலங்கரிப்புப் பெற்றுள்ள சாலைப்பத்திக் கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. இக்கட்டுமானத் தின் முன் பிற்கால முன்றில் ஒன்றுள்ளது.

**வெற்றுத்தளம்**

விமானம், முகமண்டபம், மண்டபச்சுற்று, பெருமண்டபம், மூன்றில் என அமைந்துள்ள இறைக்கோயில் 1. 56 மீ. உயரமுள்ள வெற்றுத்தளத்தின் மீது கட்டப்பட்டுள்ளது. சுற்றுப்புறத் தரை உயர்ந்திருப்பதால் பாதபந்தத் தாங்குதளம் மறைக்கப்பட்ட நிலையில் கண்டத்திலிருந்து வெளித்தெரியும் வெற்றுத்தளம் நான்முக அரைத்தூண்களால் சூழப்பட்ட சுவரும் கூரையுறுப்புகளும் பெற்றுள்ளது. இத்தளத்தின் சுவர்ப்பகுதியில் ஆங்காங்கே வெறுமையான கோட்டங்கள் உள்ளன. இந்தக் கட்டுமானம் பெருமண்டபம், முன்றில் இவற்றிற்கு மட்டுமே உள்ளது. இறைவன் விமானம், முகமண்டபம், மண்டபச் சுற்று இவற்றிற்கான வெற்றுத்தளம் பத்மஜகதி மீதெழும் நெடுஞ்சுவரும் கூரையுறுப்புகளும் மட்டுமே பெற்றுள்ளது.

வெற்றுத்தளத்தின் மேல் அமர்ந்திருக்கும் பெருமண்டபத்தை அடைய, தெற்கில் ஏழு படிகளும் கிழக்கில் ஏழு படிகளும் பெற்றுள்ள முன்றில் உதவுகிறது. மணிக்கூண்டு அமைந்துள்ள முன்றில் கூரையை சதுர பாதத்தில் எழும் இந்திரகாந்தத் தூண்களும் முச்சதுர, இருகட்டுத் தூண்களும் பூமொட்டுப் போதிகைகளுடன் தாங்குகின்றன. முன்றிலின் வடகிழக்குப்பகுதியில் கதிரவன் திருமேனியும் இரண்டு பைரவர் வடிவங்களும் உள்ளன.

**பெருமண்டபம்**

உபானங்கள் பெற்ற பத்மபந்தத் தாங்குதளமும் வேதிகைத் தொகுதியும் பெற்றெழும் பெருமண்டபத்தின் புறச்சுவரை நான்முக அரைத்தூண்கள் தழுவியுள்ளன. வெட்டுத் தரங்கப் போதிகைகள் கூரையுறுப்புகள் தாங்க, மேலே கூடுவளைவு

களுடன் கபோதம். மண்டப வாயிலின் இருபுறத்தும் உள்ள கோட்டங்களில் கரண்டமகுடம், பனையோலைக் குண்டலங்கள், தோள், கை வளைகள், முப்புரிநூல், சிற்றாடை அணிந்து கோரைப்பற்களுடன் காவலர்கள் உள்ளனர். வலக்காவலர் வலக்கையை வியப்பில் காட்டி, இடக்கையை அருகிலுள்ள மழு மேல் நிறுத்தியுள்ளார். அவரது இடப்பாதம் கருவறை நோக்கி அமைய, வலப்பாதம் மழுவின் மேல். இடக்காவலர் வலக்கையால் இறைவனைப் போற்றியவாறு இடக்கையை மழு மீது வைத்துள்ளார். வலப்பாதம் கருவறை நோக்கி அமைய, இடப்பாதம் மழுவின் மேல். இருவருமே இளஞ்சிரிப்புடன் இருப்பது குறிப்பிடத்தக்கது.

கோட்டங்களை அடுத்துள்ள வாயில் ஒட்டிய சுவர்ப்பகுதிகளில் வணக்கமுத்திரையுடன் அடியவர் சிற்பங்கள் உள்ளன. வலப்புறம் முதியவரும் இளையவருமாய் இருவர் நிற்க, இடப்புறம் ஆணும் பெண்ணுமாய் இணையர் உள்ளனர். கோயிலார் இவர்களை ஊர்வாரிப் பெருமக்களாக அடையாளப்படுத்தி யுள்ளனர். முச்சதுர, இருகட்டுத் தூண்கள் ஆறு வரிசைகளாக அமைந்து பூமொட்டுப் போதிகைகளுடன் பெருமண்டபக் கூரையைத் தாங்குகின்றன. மண்டபத்தின் வடகிழக்கு மூலையில் ஒன்பான்கோள்கள்.

அடுத்துள்ள மண்டபச் சுற்று இறைக்கோயில் வளாகத்தை சூழ்ந்துள்ளது. அதன் கூரையை முச்சதுர, இருகட்டுத் தூண்கள் பூமொட்டுப் போதிகைகளுடன் தாங்குகின்றன. சதுரமுகங்களில் தாமரைப்பதக்கங்கள். சுற்றின் தென்புறத்தே விசாலாட்சி, விசுவநாதர், சங்கிலி, பரவையுடன் சுந்தரர், அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர் இவர்தம் திருமேனிகள் உள்ளன. இவ்வூரில் வாழ்ந்தவரான சிறப்புலிநாயனார் மண்டபம் ஒன்றில் எழுந்தருளியுள்ளார். மேற்கில் முருகன், யானைத்திருமகள், பர்வதவர்த்தனி அமைய, முத்திசைகளிலும் இலிங்கத்திருமேனிகள் உள்ளன.

**விமானம்**

துணைஉபானம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத் தொகுதி பெற்றெழும் விமானத்தின் சுவர் சதுரபாதங்களின் மீது நாகபந்தங்களுடன் அமைந்த எண்முக அரைத்தூண்களால்

தழுவப்பட்டுள்ளது. மேலுள்ள பூமொட்டுப் போதிகைகள் கூரையுறுப்புகள் தாங்க, கூடுவளைவுகளுடன் கபோதம். விமானத்தின் முப்புறத்தும் சற்றே புறந்தள்ளியுள்ள சாலைப்பத்திகளில் உள்ள கோட்டங்களைச் சட்டத்தலை பெற்ற உருளை அரைத் தூண்கள் அணைத்து, கோட்டப்பஞ்சரங்களாய் மாற்றியுள்ளன. தெற்குக் கோட்டத்தில் ஆலமர்அண்ணலும் மேற்குக் கோட்டத்தில் இலிங்கோத்பவரும் வடக்குக் கோட்டத்தில் நான்முகனும் இடம்பெற்றுள்ளனர். விமானம் 4. 95 மீ. பக்கம் உடைய சதுரமாக அமைந்துள்ளது.

சடைமகுடம், மகர, பனையோலைக் குண்டலங்கள், கழுத்தணிகள், தோள், கை வளைகள், முப்புரிநூல், உதரபந்தம், சிற்றாடை அணிந்து முயலகன் மீது வலப்பாதத்தை இருத்தி வீராசனத்தில் உள்ள ஆலமர்அண்ணலின் பின்கைகளில் பாம்பும் தீச்சுடரும். சின்முத்திரையில் உள்ள இறைவனின் வல முன் கை பின்புறம் அமர்ந்துள்ள நந்தியின் கழுத்தின் மீது தாங்கலாக வைக்கப்பட்டுள்ளது. இட முன் கை சுவடி ஏந்தியுள்ளது. இறைவன் இருக்கையின் இருபுறத்தும் பக்கத்திற்கிருவராக முனிவர்கள்.

இலிங்கத்தில் காட்டப்பட்டிருக்கும் கோளத்திறப்பில் இருந்து தொடையளவினராக வெளிப்படும் இலிங்கோத்பவர் பின்கைகளில் மான், மழு ஏந்தி, முன்கைகளைக் காக்கும் குறிப்பிலும் கடியவலம்பிதத்திலும் கொண்டுள்ளார். வலச்செவியில் மகரகுண்டலம், இடச்செவியில் பனையோலைச் சுருள் பெற்றுச் சடைமகுடராய் விளங்கும் அவர் முப்புரிநூல், உதரபந்தம், அரும்புச்சரம், தோள், கை வளைகள், சிற்றாடை அணிந்துள்ளார். இலிங்கத்தின் தலைப்பகுதியைத் தாமரை யிதழ்கள் சூழ்ந்துள்ளன. இலிங்கப்பகுதியில் சிவபெருமானின் தலையருகே அன்னமும் இடக்காலருகே பன்றியும் உள்ளன.

பின்கைகளில் அக்கமாலையும் குண்டிகையும் பெற்றுள்ள வடகோட்ட நான்முகனின் முன்கைகள் காக்கும் குறிப்பிலும் கடியவலம்பிதத்திலும் உள்ளன. சடைமகுடம், முப்புரிநூல், சரப்பளி அணிந்து சமபங்கத்தில் நிற்கும் அவரது செவிகளில் குண்டலங்கள்.

இருதள வேசரமாய் விளங்கும் விமானத்தின் ஆரஉறுப்புகளும் இரண்டாம் தளமும் பெரு, குறு நாசிகைகள் பெற்ற கிரீவ, சிகரப்பகுதிகளும் செங்கல் கட்டுமானங்களாய் அமைந்துள்ளன. ஆரச்சாலைகளில் நின்றகோலத்திலும் பெருநாசிகைகளில் அமர்ந்த கோலத்திலும் மேற்கில் விஷ்ணு, வடக்கில் நான்முகன், கிழக்கில் முருகன் இவர்தம் சுதையுருவங்கள் தேவியருடன் இடம்பெற்றுள்ளன. தெற்குச் சாலையில் வீராசனத்திலும் கிரீவகோட்டத்தில் உத்குடியிலும் ஆலமர்அண்ணல் உள்ளார்.

**முகமண்டபம்**

விமானம் ஒத்த கட்டமைப்பில் உள்ள முகமண்டபத்தின் தெற்குக் கோட்டத்தில் ஆடற்கோலப் பிள்ளையாரும் வடக்குக் கோட்டத்தில் மகிடாசுரமர்த்தனியும் இடம்பெற்றுள்ளனர். ஊர்த்வஜாநு கரணக் கோலத்தில் கரண்டமகுடம், முப்புரிநூல், உதரபந்தம், சிற்றாடை, தோள், கையணிகள் அணிந்து, இடம்புரியாக உள்ள பிள்ளையாரின் பின்கைகளில் அங்குசமும் மோதகமும் உள்ளன. வல முன் கை உடைந்த தந்தம் ஏற்க, இட முன் கை அர்த்தரேசிதமாக வீசப்பட்டுள்ளது.

கரண்டமகுடம், மகரகுண்டலங்கள், அரும்புச்சரம், தோள், கை வளைகள், பட்டாடை இவற்றுடன் மகிடத்தலை மீது நிற்கும் மர்த்தனியின் பின்கைகள் சங்கு, சக்கரம் ஏந்த, வல முன் கை காக்கும் குறிப்பிலும் இட முன் கை கடியவலம்பிதத்திலும் உள்ளன.

முகமண்டபத்தின் தென்சுவரில் சடைமகுடம், தாடி, மீசையுடன் அகத்தியர் சிற்பம் கோட்டமற்ற நிலையில் இடம் பெற்றுள்ளது. வஸ்திர முப்புரிநூல், உதரபந்தம், பட்டாடை இவற்றுடன் சுகாசனத்தில் உள்ள அவரது வலக்கை அக்கமாலை ஏந்த, இடக்கையில் சுவடி. முகமண்டப வடசுவரில் இலிங்க வழிபாடு காட்டப்பட்டுள்ளது. சதுர ஆவுடையார் மீதுள்ள உருளைப்பாணத்தின் மேல் மாலை சுற்றப்பட்டுள்ளது. அருகே வணங்கிய நிலையில் உள்ள ஆடவர் பட்டாடையைக் கீழ்ப் பாய்ச்சாக அணிந்துள்ளார். இவரைக் கோயிலார் கோச்செங்கணானாக அடையாளப்படுத்தியுள்ளனர். அதே வடசுவரில் தளத்தின்மீது நீள்வெறுஞ்செவிகளுடன் சிற்றாடை, முப்புரிநூல் அணிந்து வணக்க முத்திரையிலுள்ள ஆடவர் அடியவராகலாம்.

முகமண்டப வாயிலின் இருபுறமும் வேதிகைத்தொகுதியை ஊடறுத்துத் துணைக்கம்பைத் தளமாய்க் கொண்டுள்ள கோட்டங்களில் காவலர்கள் கருவறைக்காய் ஒருக்கணித்துள்ளனர். சடைமகுடம், கோரைப்பற்கள், குதம்பை, முப்புரி நூல், உதரபந்தம், சிற்றாடை, வீரக்கழல், கால்களுக்கிடையில் இருந்து கணுக்காலுக்காய் நெகிழ்ந்து மேலேறும் மணிச்சரம் பெற்றுள்ள அவர்களுள் தெற்கர் வலக்கையால் போற்றி, இடக்கையை அருகிலுள்ள மழு மேல் தாங்கலாக நிறுத்தியுள்ளார். அருகே படமெடுத்த பாம்பு. இடப்பாதம் கருவறை நோக்கி அமைய, வலக்கால் மழுவின் கத்திப்பகுதி மேல் நிறுத்தப்பட்டுள்ளது. அங்கேயும் ஒரு பாம்பு படமெடுத்துள்ளது மழுவின் வலப்புறம் அமர் சிம்மம் காட்டப்பட்டுள்ளது. வடக்கர் வலக்கையால் போற்றி, இடக்கையை மழுவின் மீது தாழ்த்தியுள்ளார். அவரது மழுவருகே யானை காட்டப்பட்டுள்ளது. வலப்பாதம் கருவறை நோக்கி அமைய, இடக்கால் பாம்புப் படம் பெற்ற மழுவின் மீது இருத்தப்பட்டுள்ளது.

முகமண்டபம் வெறுமையாக உள்ளது. கருவறையில் இறைவன் இலிங்கத்திருமேனியராய்ப் பிளவுபட்ட பாணத்துடன் காட்சிதருகிறார்.

**தனிச்சிற்பங்கள்**

கோயில் வளாகத்தின் வடகிழக்கு மூலையில் கிடத்தப்பட்டுள்ள பழைமை நலம் வாய்ந்த சிற்பங்களில் சுகாசனத்தில் உள்ள சோழர் காலச் சண்டேசுவரரின் வலக்கை மழு ஏந்த, இடக்கை தொடை மீது அமர்ந்துள்ளது. பனையோலைக் குண்டலங்கள், சடைப்பாரம், சரப்பளி, சவடி, முப்புரிநூல், தோள், கை வளைகள், உதரபந்தம், சிற்றாடை அணிந்துள்ள அவரது இடையில் இடைக்கட்டு. எழுவர் அன்னையருள் அடங்கும் வராகி, பிராமி உட்பட்ட அறுவர் அன்னையர் சிற்பங்கள் பெரிதும் பொரிந்த நிலையில் வளாகத்தின் வட கிழக்குப் பகுதியில் உள்ளன. நால்வரை இன்னின்னார் என அடையாளப்படுத்தக் கூடவில்லை. கதிரவன் கரண்டமகுடராய்ப் பட்டாடை அணிந்து இருகைகளிலும் தாமரை ஏந்தி நிற்கிறார்.

### அம்மன் கோயில்

இறைவன் கோயிலுக்குத் தென்புறத்தே கிழக்குப் பார்வையாக உள்ள வாள்நெடுங்கண்ணி அம்மன் கோயில் விமானம், முகமண்டபம், முன்மண்டபம், பெருமண்டபம் பெற்று அமைந்துள்ளது. கபோதபந்தத் தாங்குதளம், கண்டம், பெருவாஜனம், மேற்கம்பு, எண்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரை கொண்டுள்ள அம்மன் கோயில் விமானத்தின் கீழ்த்தளத்தில் முப்புறத்துமுள்ள கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. இக்கோட்டங்கள் இடம்பெற்றுள்ள சாலைப்பத்திகள் புறந்தள்ளலாக அமைய, கோட்டங்கள் பஞ்சரங்களாக அழகுபடுத்தப்பட்டுள்ளன. மேலே உள்ள ஆரமும் இரண்டாம் தளமும் கிரீவ, சிகரமும் செங்கல் கட்டுமானங்கள். இவ்விருதள திராவிட விமானத்தின் முன்னுள்ள முகமண்டபம் இதே கட்டமைப்பில் தெற்கிலும் வடக்கிலும் வெறுமையான கோட்டங்கள் கொண்டுள்ளது. வண்டிக்கூடு அமைப்பிலுள்ள முன்மண்டபமும் அதன் முன்னுள்ள பெருமண்டபமும் பின்னாளையன. கருவறையில் வாள்நெடுங்கண்ணி அம்மன் பின்கைகளில் மலர்மொட்டுகள் கொண்டு, முன்கைகளைக் காக்கும் குறிப்பிலும் அருட்குறிப்பி லும் கொண்டுள்ளார்.

### செப்புத் திருமேனிகள்

#### ஆடவல்லான் உமை

மண்டபச்சுற்றின் வடபுறத்துள்ள திருமுன்னில் ஆடவல்லான், உமை, ஆயிரத்தில் ஒருவர் செப்புத் திருமேனிகள் உள்ளன. இத்திருமுன் பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத் தொகுதி, நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் கொண்டு ஒருதள நாகரமாக வெற்றுத்தளத்தின் மேல் அமைந்துள்ளது.

கொக்கிறகுகள், ஊமத்தம்பூ, மண்டையோடு விளங்கும் சடைமகுடத்துடன் ஆனந்தத்தாண்டவம் பயிலும் இறைவனின் விரிசடைகளில் வலப்புறம் வணக்கத்துடன் கங்கையும் இடப்புறம் பாம்பும் இடம்பெற்றுள்ளன. நெற்றிக்கண், சவடி, சரப்பளி, உதரபந்தம், சிற்றாடை, இடைக்கட்டு இவற்றுடன்

வலக்காலை முயலகன் முதுகில் இருத்தி, இடக்காலை வலப் புறம் வீசியிருக்கும் இறைவனின் பின்கைகளில் உடுக்கையும் தீச்சுடரும் உள்ளன. வல முன் கை காக்கும் குறிப்பில் இருக்க, ட முன் கை வேழமுத்திரையில் உள்ளது. இடச்செவியில் பனையோலைக் குண்டலம். வலச்செவி வெறுஞ்செவியாக நீண்டுள்ளது.

கோரைப்பற்களுடன் இடக்கையில் பாம்பைப் பிடித்தவாறு குப்புறக் கவிழ்ந்துள்ள முயலகனின் வலப்புறத்துள்ள அடியவர் கால்களை முழங்காலளவில் பின்னுக்கு மடித்து அமர்ந்து ஐமுக முழவை வாசிக்க, இடப்புறத்துள்ள அடியவர் இடக்காலைப் பின்னுக்கு மடித்து வலக்காலை முழங்காலளவில் மடக்கி முன்னிருத்தி இலைத்தாளம் இசைக்கிறார். சடை மகுடம், பனையோலைக் குண்டலங்கள், முப்புரிநூல், அரும்புச்சரம், சவடி அணிந்துள்ள முழவர் பின்கைகளில் வியப்புக் காட்டி, முன்கைகளால் முழவை இயக்குகிறார். நிறைந்த அலங்காரத்துடன் விளங்கும் இலைத்தாளர் பெருவயிற்றினர்.

இறைவனின் இடப்புறம் நிற்கும் உமையன்னை வலக்கை யைக் கடகத்திலிருத்தி, இடக்கையை நெகிழ்த்தியுள்ளார். கரண்டமகுடம், மகரகுண்டலங்கள், அரும்புச்சரம், சவடி, சரப்பளி, முப்புரிநூல், தோள், கடக, கை வளைகள், பட்டாடை அணிந்துள்ள அன்னையின் மார்பகங்கள் கச்சின்றி உள்ளன.

### ஆயிரத்தில் ஒருவர்

தாமரைத் தளத்தில் திரயச்ர பாதங்களுடன் நெற்றிக்கண், சடைமகுடம், வலச்செவியில் மகரகுண்டலம், இடச்செவியில் பனையோலைச் சுருள், அரும்புச்சரம், முப்புரிநூல், உதரபந்தம், தோள்மாலை, புலிமுகக் கச்சுப் பெற்ற சிற்றாடை, தோள், கடக, கை வளைகள் இவற்றுடன் விளங்கும் சிவபெருமானின் இந்த ஆயிரத்தில் ஒருவர் தோற்றம் பின்கைகளில் மானும் மழுவும் கொண்டு, வல முன் கையைக் காக்கும் குறிப்பில் இருத்திக் காட்சியளிக்கிறது. இட முன் கை அலங்காரம் பெற்ற தடியின் மீது இருத்தப்பட்டுள்ளது. தடியின் மேற்பகுதியில் நாணுதல்களாய் வளைந்துள்ள பழக்கொத்துக்களை அவற்றின் கீழிருக்கும் கிளிகள் கொத்துகின்றன.

ஆக்கூரை ஆண்ட மன்னர் ஒருவர் ஆயிரம் அந்தணர்களுக்கு விருந்தமைத்ததாகவும் அனைவரும் அமர்ந்தபின் எண்ணிப் பார்த்தபோது ஓர் இலை ஆளில்லாமல் இருந்ததாகவும் அப்போது புதிதாக ஒருவர் வந்து அந்த இலையில் அமர்ந்ததாகவும் அவர் புதியவராக இருந்தமையால், 'நீர் எந்த ஊர்?' என்று மன்னன் கேட்டதாகவும், 'யார் ஊரைக் கேட்கிறாய்?' என்ற கேள்வியுடன் எழுந்த அப்புதியவர் காட்டிற்குள் சென்று மறைந்ததாகவும் மன்னரும் மற்றவர்களும் தொடர்ந்து சென்று பார்த்தபோது காட்டில் புற்றொன்று காணப்படவே மன்னர் அதை வெட்டச் சொல்ல, அங்கிருந்து சிவலிங்கம் வெளிப் பட்டதாகவும் வெட்டிய அந்தக் காயமே ஆக்கூர் கோயில் சிவலிங்கத்தில் இருப்பதாகவும் வெட்டியபோது வெளிப்பட்டவர் புதியவராக வந்த இறைவன் என்பதால் அவருக்கு ஆயிரத்தில் ஒருவர் என்ற பெயர் ஏற்பட்டதாகவும் உள்ளூர்க் கதை ஒன்று ஆயிரத்தில் ஒருவர் செப்புத்திருமேனி உருவானமைக்குப் பின்புலமாக நிலவுகிறது.

**கல்வெட்டுகள்**

இக்கோயிலில் இருந்து ஆறு கல்வெட்டுகள்' 4 படியெடுக்கப்பட்டுள்ளன. மூன்றாம் இராஜராஜரின் ஆறாம் ஆட்சியாண்டில் பதிவாகியுள்ள கல்வெட்டு, இக்கோயிலை ஆக்கூரான இராஜேந்திரசிம்ம சதுர்வேதிமங்கலத்தில் இருந்த திருத்தான் தோன்றி மாடமுடையார் கோயிலாக அறிமுகப்படுத்துகிறது. இக்கோயிலில் நந்தாவிளக்கேற்றச் சிலர் நிலக்கொடை தந்தனர். அந்நிலங்களுக்கு நீர்வளம் உண்டாக்கப்பட்டது.

அதே மன்னரின் பதினெட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, வைகாசித்திங்களில் இறைத்திருமேனியைக் காவிரியில் நீராட்ட எடுத்துச் செல்வதற்கான சாலை அமைக்கப் பலர் நிலக்கொடையளித்த தகவலைத் தருகிறது. ஊர்ச் செயற்பாடுகளை மேற்கொண்ட சபை அந்நிலங்களை இறையிலியாகப் பதிவுசெய்ய ஆணையிட்டது. இவ்வூரில் உள்ள வைகுந்தநாரா யணப் பெருமாள் கோயிலில் இருந்து படியெடுக்கப்பட்டிருக்கும் மூன்றாம் இராஜராஜரின் பதினான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, இராஜராஜ விண்ணகராக அறியப்பட்ட

இக்கோயில் எம்பெருமானைத் தான்தோன்றி மாடமுடையார் கோயில் குளத்தில் நீராட்ட, அக்கோயில் நிருவாகிகள் அனுமதி மறுத்தமையில், பெருமாள் கோயில் நிருவாகிகள் கோயிலில் இருந்து காவிரிக்குச் செல்லப் புதிய சாலை ஒன்று அமைத்துத் திருமேனியை எடுத்துச் சென்று நீராட்டியதாகக் கூறுகிறது. இக்கல்வெட்டினால் கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டளவில் இப்பகுதியில் இருந்த சைவ, வைணவக் காழ்ப்புணர்ச்சியை அறியமுடிகிறது.

மன்னர் பெயரற்ற பதினோராம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, ஆடல் அமர்ந்தான் சூரியன் தில்லைமூவாயிரன் கடுமையான நோயிலிருந்து விடுபட்டுக் கொண்டிருந்த நிலையில் இக்கோயிலில் வழிபாடு, படையல் நிகழ்த்த நிலக்கொடையளித்த தகவலைப் பதிவுசெய்துள்ளது.

இரண்டாம் இராஜாதிராஜரின் பதினான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, கோயில் நிருவாகமும் ஊர்ப் பெருங்குறி மகாசபையும் கோயில் வருவாய் பற்றிப் பரிமாறிக்கொண்ட தகவல்களைப் பதிவுசெய்துள்ளது.

சகலபுவன சக்கரவர்த்திகள் கோப்பெருஞ்சிங்கரின் காலத்தில் வெட்டப்பட்டிருக்கும் கல்வெட்டு, அழகிய பல்லவரான வீரப்பிரதாபர் போசளர்களைச் சிறையிலிட்டுப் பாண்டியர்களிடம் திறைபெற்றதாகக் கூறுகிறது. சோழமண்டலத்திற்குத் திரும்பிய அவர் காவிரியின் தென்கரை வழியாகக் கிழக்கு நோக்கித் திருத்தலப் பயணம் மேற்கொண்டதாகவும் வழியில் இருந்த கோயில்களின் அனைத்து நிலங்களையும் இறையிலியாக்கியதாகவும் கோயில்களுக்குத் தேவையான திருப்பணிகளைச் செய்ததாகவும் கூறும் இக்கல்வெட்டு, ஜெயங்கொண்ட சோழ வளநாட்டில் இருந்த ஓர் ஊரில் வீரப்பிரதாபர் தங்கிய போது, அவ்வூர்க் குடிகள் வரிச்சுமை தாங்கமுடியாமல் தத்தம் நிலங்களைத் தரிசாகப் போட்டு வேறு ஊர்களுக்குக் குடியேறிப் போனமையை அறிந்து, அவர்களால் செலுத்தப்படாதிருந்த வரிகள் அனைத்தையும் தள்ளுபடி செய்து அவர்களை ஊர் திரும்பி நிலப் பொறுப்பேற்று நலமுற்றிருக்க அழைத்ததாகவும் கூறுகிறது. நிலங்கள் அனைத்தும் எல்லைகள் சரிபார்க்கப் பட்டுப் புதிதாகப் பதிவுசெய்யப்பட்டன. 5

கி. பி. 1517ல் வெட்டப்பட்டிருக்கும் கிருஷ்ணதேவராயரின் கல்வெட்டு அவருடைய வெற்றிகளைக் குறிப்பதுடன் ஆக்கூர் கோயில் நிலங்களுக்கான சோடிவரி, சூலவரி, அரசுப்பேறு இவற்றை அரசர் தவிர்த்த செய்தியையும் தருகிறது.

**குறிப்புகள்**

1. 2: 42; 6: 21. 'தொல்கோயில்' என்றும் 'தான்தோன்றி மாடம்' என்றும் பாடலடிகள் இக்கோயிலைப் போற்றுகின்றன.

2. ‘சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்' என்று திருத்தொண்டர் தொகையில் சுந்தரராலும், ‘வள்ளல் தம்செயல் வாய்ப்ப ஈசர் தாள் நிழல் தங்கினாரே' என்று திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழாராலும் பாராட்டப் பெறும் சிறப்புலி நாயனார் இவ்வூரில் வாழ்ந்து தம்மிடம் வந்த அடியார்களுக்கெல்லாம் உணவு படைத்தே இறையடி சேர்ந்து புகழ் எய்தியவராவார்.

3. ஆய்வு நாட்கள் 26. 11. 1982, 8. 9. 2007, 26. 9. 2009. இக்கோயில் பற்றிய முதல் கட்டுரை, ‘ஆயிரத்தில் ஒருவருக்காய் அமைந்த அழகிய தான்தோன்றி மாடம்' என்ற தலைப்பில் 1983 ஜனவரி, பிப்ருவரியில் வெளியான தமிழ்ப் பொழில் இதழில் பதிவாகி யுள்ளது.

4. ARE 1925: 224 -229.

5. ARE 1925: 229. p. 87.

------------------------------------

# 23. திருவிளையாட்டம்

நாகபட்டினம் மாவட்டத் தரங்கம்பாடி வட்டச் சிற்றூரான திருவிளையாட்டத்தில் கிழக்குப் பார்வையில் அமைந்துள்ள முளைத்தெழுந்த நாயனார் மாடக்கோயில்'1 சோழர் காலக் கல்வெட்டுகளையும் கிருஷ்ணதேவராயர் கல்வெட்டையும் கொண்டுள்ள ஒருதளத் தூங்கானை மாடமாகும். வளாக வாயிலுக்கு முன்னால் பாதபந்தக் கட்டமைப்புடனான பலித்தளமும் நாகர மண்டபத்தில் நந்தியும் உள்ளன. பாதபந்தத் தாங்குதளம், நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் கொண்டுள்ள ஒருதளச் சாலை நுழைவாயில் இருபுறத்தும் சுதையாலான நெடிய தாவுயாளிகளைக் கொண்டுள்ளது. கூரை மீது உள்ள சாலையில் விடையேறிய அண்ணலும் அம்மையும் காட்சிதருகின்றனர். தெற்கு ஆரநாசிகையில் மூஞ்சுறு மேல் பிள்ளையாரும் வடக்கு நாசிகையில் மயில்மீது முருகனும் சுகாசனத்தில் அமைய, முருகனின் இருபுறத்தும் நின்றகோலத்தில் வள்ளியும் தெய்வானையும் காட்சிதருகின்றனர்.

**வெளிச்சுற்று**

வாயிலை அடுத்து விரியும் சுற்றுவெளியில் நடுநாயகமாக சோமாஸ்கந்தர், முளைத்தெழுந்த நாயனார் இவர்களுக்கான மாடக்கோயிலும் அதன் வடபுறத்தே அம்மன் கோயிலும் அமைய, தென்மேற்கில் உள்ள ஒருதளத் திராவிட விமானத்தில் சித்திவிநாயகரும் மேற்கிலுள்ள ஒருதள வேசர விமானத்தில் தேவியருடன் முருகனும் வடமேற்கிலுள்ள ஒருதள வேசர விமானத்தில் அண்மைக் கால யானைத்திருமகளும் இடம் பெற்றுள்ளனர். விநாயகர் வழக்கமான இலலிதாசனத்தில் கரண்ட மகுடத்துடன் பின்கைகளில் அங்குசம், பாசம் கொண்டு, முன்கைகளில் தந்தம், மோதகம் விளங்கக் காட்சிதருகிறார். இடம்புரித் துளைக்கை இடக்கை மோதகத்தைச் சுவைக்க,வலத்தந்தம் உடைந்துள்ளது.

கரண்டமகுடம், சரப்பளி, பனையோலைக் குண்டலங்கள், முப்புரிநூல், உதரபந்தம், பட்டாடை அணிந்து காட்சிதரும் முருகனின் பின்கைகளில் வஜ்ரமும் சக்தியும் அமைய, முன்

கைகளில் வலக்கை காக்கும் குறிப்பிலும் இடக்கை கடியவலம் பிதத்திலும் உள்ளன. கரண்டமகுடம், பட்டாடை இவற்றுடன் முருகனின் இருபுறத்தும் நிற்கும் தேவியர் வெளிக்கைகளை நெகிழ்த்தி, உட்கைகளில் மலரேந்தியுள்ளனர். மார்புக்கச்சு அணிந்துள்ள தெய்வானை பனையோலைக் குண்டலங்கள் கொள்ள, அதுவற்ற வள்ளி மகரகுண்டலங்களுடன் காட்சி தருகிறார். முருகன் திருமுன்னுக்கு வெளியில் கல்மேடையில் மயிலின் சிற்பம் உள்ளது.

மேற்குச் சுற்றில் மாடம் போன்ற சிறு மண்டபத்தில் வலப்புறம் நந்திகேசுவரரும் இடப்புறம் அக்னிமாதாவும் சூழச் சேட்டைத்தேவி இடம்பெற்றுள்ளார். கரண்டமகுடம், சரப்பளி, தோள், கை வளைகள், ஸ்வர்ணவைகாக்ஷம், பட்டாடை அணிந்து கால்களைக் கீழிறக்கி அமர்ந்துள்ள சேட்டைத்தேவியின் நீள்செவிகள் வெறுமையாக உள்ளன. வலக்கையில் மலர் மொட்டுக் கொண்டு இடக்கையை முழங்கால் மேல் கடகத்தில் இருத்தியுள்ள அம்மையின் மார்பகங்கள் இளமை நலத்துடன் உள்ளன. இடப்புறம் காகக்கொடி காட்டப்பட்டுள்ளது. நீள் வெறுஞ்செவிகளுடன் கரண்டமகுடம், ஸ்வர்ணவைகாக்ஷம், பட்டாடை அணிந்து சுகாசனத்தில் உள்ள அக்னிமாதா வலக்கையில் நீலோத்பலம் ஏந்தியுள்ளார். இடக்கை முழங்கால் மீது கடகமாய் இருத்தப்பட்டுள்ளது. கரண்டமகுடம், சரப்பளி, முப்புரிநூல், உதரபந்தம், இடைக்கட்டுடனான பட்டாடை, தோள், கை வளைகள் இவற்றுடன் வலப்புறம் சுகாசனத்தில் உள்ள நந்திகேசுவரரின் வலக்கையில் தடி. இடக்கை கடகத்தில் முழங்காலின்மீது உள்ளது.

வடகிழக்கில் உள்ள மண்டபத்தில் கரண்டமகுடம், பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, முப்புரிநூல், உதரபந்தம், இடைக்கட்டுடனான சிற்றாடை இவற்றுடன் காட்சிதரும் சூரியனின் கைகளில் தாமரைகள். சுடர்முடி, மகர, பனை யோலைக் குண்டலங்கள், சரப்பளி, முப்புரிநூல், இடைக் கயிறாய்ப் பாம்பு கொண்டு நாயுடன் நிற்கும் பைரவரின் முன் கைகளில் முத்தலைஈட்டியும் தலையோடும் விளங்க, பின்கைப் பொருட்களை அடையாளம் காணக்கூடவில்லை. அண்மைக் காலச் சிற்பமாக சனீசுவரனும் இங்கு இடம்பெற்றுள்ளார்.

வடபுறத்துள்ள ஒருதள நாகர விமானத்தில் சடைமகுடம், பனையோலைக் குண்டலங்கள், சிற்றாடையுடன் சுகாசனத்தில் உள்ள சண்டேசுவரரின் வலக்கையில் மழு. இடக்கை தொடை மேல் கடகத்தில் உள்ளது.

**அம்மன் கோயில்**

விமானம், முகமண்டபம், முன்மண்டபம் என அமைந்துள்ள அம்மன் கோயிலின் பெருமண்டபமும் அதன் தெற்கில் உள்ள வாகன மண்டபமும் ஒரே கட்டமைப்பிலான செங்கற் பணிகள். வண்டிக்கூடு கூரை பெற்றுள்ள இம்மண்டபங்களுள் வாகன மண்டபம் இரண்டு பிரிவுகளாக அமைந்துள்ளது. தென்புறம் உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், நான்முக அரைத் தூண்கள் அணைத்த சுவர், கூரையுறுப்புகள் பெற்றுள்ள பெருமண்டபக் கூரையில் எட்டு இலட்சுமிகளும் ஓவியங்களாக இடம்பெற்றுள்ளனர். மண்டபத்தின் வடக்குச் சுவர் பாதபந்தத் தாங்குதளம், நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், கூரை உறுப்புகள் பெற்றுள்ளது.

பலித்தளமும் நந்தியும் உள்ள இம்மண்டபத்தை அடுத்து உள்ள முன்மண்டபத்தின் தெற்கிலும் வடக்கிலும் கோயில் வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட சிற்பங்கள் உள்ளன. பாதபந்தத் தாங்குதளம், நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், கூரை உறுப்புகள் பெற்றுள்ள அதன் புறச்சுவர்க் கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. முன்மண்டபத்தை அடுத்த முகமண்டப வாயிலின் தென்புறத்தே பிள்ளையார் இடம்பெற்றுள்ளார். கருவறையில் முல்லைவனநாயகி என்ற பெயருடன் சமபங்கத்தில் உள்ள தேவியின் முன்கைகளில் வலக்கை காக்கும் குறிப்புக் காட்ட, இடக்கை கடியவலம்பிதத்தில் உள்ளது. சடைமகுடம், மகரகுண்டலங்கள், சரப்பளி, தோள், கை வளைகள், பட்டாடை அணிந்துள்ள இறைவியின் பின்கைகளில் வலப்புறம் அக்கமாலை, இடப்புறம் தாமரை.

பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, எண்முக அரைத் தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் என ஒருதள வேசரமாக விளங்கும்

இறைவி விமானத்தின் கிரீவகோட்டங்கல் தேவயின் சுதை வடிவங்கள் உள்ளன. நான்முக அரைத்தூண்களால் அணைக்கப்பட்டுள்ள சுவர்க் கோட்டங்களும் விமானக் கட்டமைப்பிலேயே உள்ள முகமண்டபக் கோட்டங்களும் வெறுமையாக உள்ளன.

**சோமாஸ்கந்தர் விமான வெற்றுத்தளம்**

இறைவன் விமானத்தின் தென்புறமுள்ள சோமாஸ்கந்தர் விமானத்தின் வெற்றுத்தளம் உபானம், கம்பு, பத்மஜகதி, கம்பு, பட்டிகை, மேற்கம்பு இவற்றாலான துணைத்தளம், நீளமான நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் உத்திரம், வாஜனம் இவற்றைக் கருங்கல்லாலும் வலபி, கபோதம், பூமிதேசம் இவற்றைச் செங்கல்லாலும் கொண்ட கட்டுமானமாக உள்ளது. அதன் தெற்கு, மேற்குச் சுவர்களில் கோட்டங்கள் இல்லை.

கிழக்கில் வெற்றுத்தளத்தை ஊடறுத்து விமானத்திற்கான படிக்கட்டுகள் அமைந்துள்ளன. தெற்கிலும் வடக்கிலும் பிடிச்சுவருடன் திசைக்கு ஐந்து படிகள் கொண்டுள்ள முதற்படி வரிசை முடியும் தளத்தின் கிழக்கு முகத்தில் ஜகதி, பிரதிவரி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், உத்திரம், பூப்பதக்கங்கள் கொண்ட ஆழமற்ற கூடுகளுடனான கபோதம், பூமிதேசம் இவை காட்டப்பட்டுள்ளன. பூமிதேசத்தின் மேற்பகுதியே தளமாகியுள்ளது.

**நடைமண்டபம்**

இத்தளத்திலிருந்து மேற்கு நோக்கித் தொடரும் பத்துப் படிகள் சோமாஸ்கந்தர் விமானமும் முகமண்டபமும் அமைந்துள்ள நடைமண்டபத்தில் முடிகின்றன. நடைமண்டபத்தின் தொடக்கத்திலுள்ள வடவாயில் இறைவன் விமானத்தின் முன் உள்ள பெருமண்டபத்திற்கு வழிவிடுகிறது. உறுப்பு வேறுபாடற்ற துணைத்தளம், நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், கபோதம் இவற்றுடன் வண்டிக்கூடு கூரை பெற்றுள்ள நடை மண்டபத்தின் தென்சுவரில் சிறு சாளரம் ஒன்றும் காட்டப் பட்டுள்ளது.

## சோமாஸ்கந்தர் விமானம்

வெற்றுத்தளத்தின் மீதமைந்த உயரமான வேதிகையை அடுத்து, சோமாஸ்கந்தர் விமானத்தின் ஜகதி, எண்பட்டைக் குமுதம், பிரதிவரி அடங்கிய பிரதிபந்தத் தாங்குதளம் தொடங்குகிறது. கோட்டங்களற்ற சுவரை நான்முக அரைத்தூண்கள் தழுவ, கூரையுறுப்புகளை வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்குகின்றன. பூப்பதக்கக் கூடுகள் கொண்ட கபோதம் வரை கருங்கல்லால் ஆன இவ்விமானத்தின் நாகர கிரீவமும் சிகரமும் செங்கல் கட்டுமானமாய் உள்ளன. முன்னுள்ள சிறு முகமண்டபம் விமானக் கட்டமைப்பிலேயே உள்ளது. அதன் வாயில் நான்முகத் தூண்களால் அலங்கரிக்கப்பட்டுக் கூரையுறுப்புகள் கொண்டுள் ளது. முகமண்டபம், கருவறை இரண்டும் வெறுமையாக உள்ளன.

விமானத்தின் கிரீவகோட்டங்களில் தெற்கில் வீராசனத்தில் ஆலமர்அண்ணலும் மேற்கில் சுகாசனத்தில் பரமபதநாதரும் வடக்கில் அர்த்தபத்மாசனத்தில் நான்முகனும் காட்சிதர, கிழக்குக் கோட்டம் வெறுமையாக உள்ளது. சடைப்பாரம், மகர, பனையோலைக் குண்டலங்கள், சிற்றாடை அணிந்து பின் கைகளில் பாம்பு சுற்றிய உடுக்கையும் தீச்சுடரும் கொண்டுள்ள தென்திசைக்கடவுளின் வல முன் கை சின் முத்திரையில் அமைய, இட முன் கையில் சுவடி. தலைக்குப் பின்னால் மரம் காட்டப்பட்டுள்ளது. பின்கைகள் கடகத்தில் அமைய, வல முன் கையில் அருட்குறிப்புக் காட்டும் பரமபதநாதரின் இட முன் கை கதைமீது உள்ளது. வலப் பின் கையில் சக்கரம். பின் கைகளில் அக்கமாலையும் குண்டிகையும் கொண்டு சடை மகுடம், பட்டாடை இவற்றுடன் உள்ள நான்முகனின் முன்கைகள் காத்து அருள் செய்கின்றன.

## பெருமண்டபம், சுற்று இவற்றின் வெற்றுத்தளம்

இறைவன் விமானத்தின் முன்னுள்ள பெருமண்டபம் அதன் வழித்தொடரும் சுற்று இவற்றிற்கான வெற்றுத்தளம் கிழக்கில் உபானம், உபஉபானம், ஜகதி, எண்பட்டைக்குமுதம், பிரதிவரி, மாலைத்தொங்கல் பெற்ற எண்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் கொண்டு அமைந்துள்ளது. வடக்கில் நான்முக அரைத்தூண்

கள் உள்ளன. வடக்குச் சுவரில் காணப்படும் நான்முக அரைத் தூண்களால் அணைக்கப்பட்டு, மகரதோரணத் தலைப்புக் கொண்டுள்ள இரண்டு கோட்டங்களும் வெறுமையாக உள்ளன.

பெருமண்டபக் கிழக்கு வெற்றுத்தளச் சுவரொட்டி மேடை மேல் அமைந்துள்ள ஒருதள நாகர விமானத்தில் கரண்டமகுடத்துடன் இலலிதாசனத்தில் உள்ள இடம்புரிப் பிள்ளையாரின் இட முன் கையில் மோதகம் இடம்பெற்றுள்ளது. பிற கைப் பொருட்களை அடையாளம் காணக்கூடவில்லை. இவ்விமான சிகரத்தின் கிழக்குமுக வளைவில் சுகாசனத்தில் பிள்ளையாரும் அவரின் வலப்புறம் இறைவியும் இடப்புறம் வீணை வாசிப்பவராய்க் கலைமகளும் சுதைவடிவங்களாகக் காட்டப்பட்டுள்ளனர்.

**பெருமண்டபம்**

வண்டிக்கூடு கூரை பெற்றுள்ள பெருமண்டபத்தின் வடபுறத்தே உள்ள இரண்டு அறைகளும் வெறுமையாக உள்ளன. அவற்றுள் ஓர் அறையின் மேல் நாகர கிரீவமும் சிகரமும் காட்டப்பட்டுள்ளன. மண்டபத்தின் தென்சுவர் உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளத்தின் மீது நான்முக அரைத்தூண்களின் தழுவலில் எழுகிறது. கூரையுறுப்புகளை வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்குகின்றன. கிழக்கு, வடக்குச் சுவர்கள் பாத பந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கபோதத்துடனான கூரையுறுப்புகள் கொண்டுள்ளன. கிழக்குச் சுவரின் நடுப்பகுதியில் காணப்படும் திறப்பு நான்முக அரைத் தூண்களால் அணைக்கப்பட்டுள்ளது.

மண்டபத்தின் மேற்கிலுள்ள வாயில் திருச்சுற்றுக்கு வழிவிடுகிறது. இவ்வாயிலுக்கருகே தெற்கில் கரண்டமகுடத்துடன் இலலிதாசனத்தில் உள்ள இடம்புரி விநாயகரின் இடப் பின் கையில் மோதகம். முன்கைகள் கால்களின் மேல் அமர, வலப் பின் கை வெறுமையாக உள்ளது.

**சுற்று**

பெருமண்டபத்தின் மேற்கில் உள்ள சுற்றின் கூரையைச் சதுரம், கட்டு, சதுரம் என்ற அமைப்பிலான தூண்களும் நான்

முகத் தூண்களும் இணைந்து பூமொட்டுப் போதிகைகளின் உதவியுடன் தாங்குகின்றன. சுற்றின் தென்புறமுள்ள திண்ணையில் நால்வர் திருமேனிகள் இடம்பெற்றுள்ளன. சடைமகுடம், பனையோலைக் குண்டலங்களுடன் காட்சிதரும் சம்பந்தரின் கைகளில் செண்டு தாளங்கள். சிற்றாடையும் வணங்கிய கைகளுமாய் நிற்கும் அப்பரின் இடத்தோளில் உழுபடைக் கருவி. வணங்கிய கைகளுடன் பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, தோள், கை வளைகள் இவற்றுடன் காட்சிதரும் சுந்தரரின் இடையில் சிற்றாடை. வலக்கையில் அக்கமாலையும் இடக்கையில் சுவடியும் கொண்டு நிற்கும் மாணிக்கவாசகரின் இடையில் சிற்றாடை.

சுற்றின் மேற்கில் வடக்கிலும் தெற்கிலும் உள்ள திறப்புகள் முகமண்டபம், விமானம் இவற்றைச் சுற்றிவர வழிவிடுகின்றன. முகமண்டப வாயிலை நோக்கியவாறு சுற்றின் கிழக்குப்பகுதியில் பலித்தளமும் நந்தியும் உள்ளன. படிகள் பெற்ற வாயில் கொண்ட வெறுமையான முகமண்டபத்தை அடுத்துள்ள கருவறையில் இறைவன் வேசர ஆவுடையாரும் பாணமுமாய் முளைத்தெழுந்த நாயனார் என்ற திருப்பெயருடன் எழுந்தருளியுள்ளார். முகமண்டபத்தின் வாயிலருகே தென்கிழக்குக் கோட்டத்தில் கரண்டமகுடத்துடன் இலலிதாசனத்தில் உள்ள இடம்புரிப் பிள்ளையார் முன்கைகளில் தந்தம், மோதகம் கொண்டு, பின்கைகளில் அங்குசம், பாசம் கொண்டுள்ளார்.

## இறைவன் விமான வெற்றுத்தளம்

வளாகத்தில் நடுநாயகமாக விளங்கும் இறைவன் விமான வெற்றுத்தளம் உபானம், உபஉபானம், ஜகதி, எண்பட்டைக் குமுதம், பிரதிவரி கொண்ட பிரதிபந்தத் தாங்குதளம், நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகை கள் தாங்கும் கூரையுறுப்புகள், ஆழமற்ற கூடுகளுடனான கபோதம், பூமிதேசம் பெற்றுள்ளது. 3.24 மீ. உயரமுள்ள இந்த வெற்றுத்தளத்தின் மீது வேதிகைத்தொகுதியும் மேலே உயரக் குறைவான உறுப்பு வேறுபாடற்ற நான்முக அரைத்தூண்கள் விளங்கும் பிடிச்சுவரும் இடம்பெற்றுள்ளன. வெற்றுத்தளத்தின் தெற்கு, மேற்கு, வடக்குச் சுவர்களிலுள்ள கோட்டங்கள்

நான்முக அரைத்தூண்களால் அணைக்கப்பட்டுக் கூரையுறுப்பு களுடன் மகரதோரணத் தலைப்புக் கொண்டுள்ளன.

நாகர முன்றில் பெற்றுள்ள தெற்குக் கோட்டத்தில் சடைப் பாரம், மகர, பனையோலைக் குண்டலங்கள், உருத்திராக்க மாலை, சரப்பளி, சிற்றாடை அணிந்து வீராசனத்திலுள்ள ஆலமர்அண்ணலின் வீரக்கழல் பெற்ற வலக்கால் முயலகன் மீது இருத்தப்பட்டுள்ளது. பின்கைகளில் அக்கமாலையுடன் பாம்பும் தீச்சுடரும் கொண்டுள்ள அவரது இட முன் கையில் சுவடி. வல முன் கை சின்முத்திரையில் உள்ளது. அவரது இருபுறத்தும் கோட்டத்திற்கு வெளியே பக்கத்திற்கிருவராக முனிவர்கள் அமர்ந்துள்ளனர்.

மேற்குக் கோட்டத்தில் கோட்டத்தில் சடைமகுடத்துடன் உள்ள இலிங்கோத்பவர் பின்கைகளில் மழு, மான் ஏந்தி, முன்கைகளைக் காக்கும் குறிப்பிலும் கடியவலம்பிதத்திலும் கொண்டுள்ளார். வடகோட்டத்தில் சடைமகுடம், நீள்செவிகள், சரப்பளி, முப்புரிநூல், உதரபந்தம், பட்டாடை, புலிமுகக் கச்சுடனான இடைக்கட்டு அணிந்து சமபாதநிலையில் உள்ள நான்முகனின் பின்கைகளில் அக்கமாலையும் குண்டிகையும் அமைய, முன் கைகள் காக்கும் குறிப்பிலும் கடியவலம்பிதத்திலும் உள்ளன.

**இறைவன் விமானம்**

உபானம், உபஉபானம், ஜகதி, எண்பட்டைக்குமுதம், பிரதிவரி இவற்றுடனான பிரதிபந்தத் தாங்குதளம், வேதிகைத் தொகுதி, மேற்கம்பு, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், ஆழமற்ற கூடுகள் பெற்ற கபோதம், பூமிதேசம் கொண்டுள்ள ஒருதளக் கலப்புத் தூங்கானை மாடமாய் விளங்கும் இறைவன் விமானம் கிழக்கு மேற்காக 5. 97 மீ. நீளமும் தென்வடலாக 5.28 மீ. அகலமும் கொண்டுள்ளது. வலபியில் பூதவரி இடம்பெற்றுள் ளது. சுவர்க்கோட்டங்களில் தெற்கில் ஆலமர்அண்ணலும் மேற்கில் இலிங்கோத்பவரும் வடக்கில் நான்முகனும் இடம் பெற்றுள்ளனர். அவர்களுள் மேற்குக் கோட்ட இலிங்கோத்பவர் அண்மைக் காலத் திருமேனியர். அவர் கோட்டத்தின் இருபுறத் தும் வணங்கிய கைகளுடன் காட்டப்பட்டுள்ள விஷ்ணு,

நான்முகன் இவர்களும் ஆலமர்அண்ணலின் இருபுறத்தும் பக்கத்திற்கொருவராக அமர்ந்துள்ள முனிவர்களும் பிற்சோழர்காலத் திருமேனிகளாகலாம்.

வல முன் கையைச் சின்முத்திரையில் இருத்தி, இட முன் கையில் சுவடி கொண்டு, பின்கைகளில் அக்கமாலையும் தீச்சுடரும் பெற்றுச் சடைப்பாரம், மகர, பனையோலைக் குண்டலங்கள், முப்புரிநூல், உதரபந்தம் அணிந்து காட்சிதரும் ஆலமர் அண்ணலும் சடைமகுடம், சரப்பளி, முப்புரிநூல், உதரபந்தம், புலிமுகக் கச்சு இருத்தும் பட்டாடை இவற்றுடன் பின்கைகளில் அக்கமாலை, குண்டிகை கொண்டு, முன்கைகளில் வலக்கையைக் காக்கும் குறிப்பிலும் இடக்கையைக் கடிய வலம்பிதத்திலும் கொண்டு விளங்கும் நான்முகனும் பிற்சோழர் காலத் திருமேனிகளாகலாம்.

கிரீவகோட்டங்களில் தென்புறம் ஆலமர்அண்ணலும் மேற்கில் பரமபதநாதரும் வடக்கில் யானையை அழித்த மூர்த்தியும் கிழக்கில் முருகப்பெருமானும் இடம்பெற்றுள்ளனர். கோட்ட நாசிகைகளின் கீர்த்திமுகங்களில் தென்புறம் உத்குடியில் ஆலமர்அண்ணலும் மேற்கில் நரசிம்மரும் வடக்கில் அர்த்தபத்மாசனத்தில் நான்முகனும் கிழக்கில் சுகாசனத்தில் சிவபெருமானும் காட்டப்பட்டுள்ளனர். கிரீவசுவரில் எண்திசைக் காவலர்களின் வடிவங்கள் இடம்பெற்றுள்ளன.

**கிரீவகோட்ட இறைவடிவங்கள்**

சடைமகுடத்துடன் வீராசனத்திலுள்ள ஆலமர்அண்ணல் பின்கைகளில் பாம்பும் தீயகலும் கொள்ள, வல முன் கை சின் முத்திரையிலும் இட முன் கை சுவடியேந்திய கடகத்திலும் உள்ளன. அண்ணலின் இடப்புறத்தே சுகாசனத்தில் இடம்புரியாக உள்ள பிள்ளையாரின் பின்கைகளில் பாசம், அங்குசம் அமைய, முன்கைகளில் தந்தம், மோதகம் உள்ளன. மேற்கில் கிரீடமகுடம், பட்டாடை அணிந்து உத்குடியில் தேவியருடன் உள்ள பரமபதநாதரின் வல முன் கை பாம்புடலின் மீது படர, இட முன் கை முழங்கால் மீதுள்ளது. பின்கைகளில் சங்கு, சக்கரம். தேவியரின் உள்கைகள் மலர் கொள்ள, வெளிக்கைகள் தளத்தின்மீது உள்ளன.

வடக்கிலுள்ள யானையை அழித்தமூர்த்தி எண்கையராய்ச் சுடர்முடியுடன் காட்சிதருகிறார். இடக்காலை வலப்புறமாய் உயர்த்தி முழங்கால் அளவில் உட்புறமாய் மடித்துச் சுழற்சியில் உள்ள அவர் கோலமும் இருப்பும் சிறப்புக்குரியன. கிழக்கில் கரண்டமகுடம், பட்டாடை இவற்றுடன் மயில்மேல் சுகாசனத்தில் உள்ள முருகன் பின்கைகளில் சக்தி, வஜ்ரம் கொண்டு முன்கைகளில் காக்கும், அருட்குறிப்புகள் காட்டுகிறார்.

**முகமண்டபம்**

விமானத்தை ஒத்த கட்டமைப்பில் உள்ள முகமண்டபத்தின் வலபி பூதவரி பெறாது வெறுமையாக உள்ளது. அதன் தெற்குக் கோட்டத்தில் பிள்ளையாரும் வடக்குக் கோட்டத்தில் மகிடாசுரமர்த்தனியும் இடம்பெற்றுள்ளனர். மகிடாசுரமர்த்தனி இலிங்கோத்பவர் போல அண்மைக் காலத்தவர். மூஞ்சுறு மேல் ஊர்த்வஜாநு கரணத்தில் வலமுழங்காலை உயர்த்தியிருக்கும் இடம்புரிப் பிள்ளையாரின் வல முன் கை தந்தம் கொள்ள, இட முன் கை அர்த்தரேசிதத்தில் உள்ளது. பின்கைகளில் வலப்புறம் அங்குசமும் இடப்புறம் மோதகமும் உள்ளன. மூஞ்சுறுவின் வலப்புறம் காட்டப்பட்டிருக்கும் அடியவர் வலக்கையால் தலையில் பாத்திரம் ஒன்றைத் தாங்கியபடி இடக்கையை வாயருகே வைத்துள்ளார். இத்திருமேனி சிதைந்திருப்பதால் காலத்தை நிர்ணயிக்கக்கூடவில்லை.

**கல்வெட்டுகள்**

களஆய்வின்போது இக்கோயிலில் இருந்து ஒன்பது கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டன? அவற்றுள் மூன்று கல்வெட்டுகளே முழுமையான அளவில் கிடைத்துள்ளன. எஞ்சியன திருப்பணிகளால் துண்டாடப்பட்ட நிலையில் உள்ளன. கல்வெட்டுகளில் இவ்வூர் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து விளைநாட்டுப் பெருமுளையாக அழைக்கப்படுகிறது. இறைவன் முளைத்தெழுந்த நாயனாராக அறியப்படுகிறார். இக்கோயில் விமானத்தைக் கட்டியவராக எதிரிலி சோழரான பல்லவராயர் பெயரைக் குறிப்பிடும் பிற்சோழர் காலக் கல்வெட்டின் கீழ், அவரது உருவச்சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. வணங்கிய கைகளும் இடையாடையும் பெருங்கொண்டையும் கொண்டு விளங்கும் பல்லவராயர் சிற்பம் சிதைந்துள்ளது.

மூன்றாம் குலோத்துங்கரின் பதினைந்தாம் ஆட்சியாண்டில் (கி.பி.1192 வெட்டப்பட்டுள்ள கல்வெட்டு, பெருமுளையில் விக்கிரமசோழீசுவரம் என்ற பெயரில் திருமுற்றம், திருமடை வளாகம், தீர்த்தக்குளம், திருநந்தவனம் உள்ளிட்ட இறைக்கோயில் ஒன்று அமைக்கப்பட்டதாகவும் கோயிலுக்குரிய நாள் கடமைகளை முன்னிட்டுக் கோயிலை கட்டிய பெருமகனாரே வழிபாடு, படையல், பணியாளர் செலவினங்களுக்காக ஐந்து வேலி நிலத்தைக் கோயிலுக்குத் திருநாமத்துக்காணியாக நீர் வார்த்துக் கொடுத்ததாகவும் கூறுகிறது. கல்வெட்டுச் சிதைந்திருப்பதால் கட்டியவரின் பெயரை அறியக்கூடவில்லை.

அரசஆணையாக விளங்கும் சோழப் பேரரசர் மூன்றாம் குலோத்துங்கரின் பதினைந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, கொடையளிக்கப்பட்ட இந்நிலத்தை மன்னர் இறையிலித் தேவதானமாக்கியதாகக் கூறுகிறது. இக்கல்வெட்டால் சோழப் பேரரசின் வருவாய்த்துறையைச் சேர்ந்த உயர்அலுவலர்களின் பெயர்களும் புரவுவரி ஸ்ரீகரணநாயகம், ஸ்ரீகரணத்து முகவெட்டி முதலிய அலுவல்நிலைகளும் சோழ மண்டலத்தைச் சேர்ந்த பல ஊர்களின் பெயர்களும் வெளிச்சத்திற்கு வந்துள்ளன.

மூன்றாம் குலோத்துங்கரின் இருபத்தேழாம் ஆட்சியாண் டில் (கி. பி. 1204) தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த கூடல் கிழான் திருநட்டப் பெருமானின் துணைவியார் செந்தாழ்வி இக்கோயில் இறைவன் திருமுன்னில் இளங்காலைப் போதில் விளக்கொன்று ஏற்றுவதற்காக 500 காசுகள் தந்தார். வைப்புத் தாகையாக அதை ஏற்றுக்கொண்ட கோயில் கருவூலத்தார் அதிலிருந்து வரும் வட்டித்தொகை கொண்டு விளக்கேற்ற ஒப்புக்கொண்டனர்.

கோயில் விமான வெற்றுத்தளத்தின் தென்புறத்தே காணப்படும் ஆலமர்அண்ணல் சிற்பத்தை மூன்றாம் இராஜராஜரின் மூன்றாவது ஆட்சியாண்டில் (கி. பி. 1218) செந்தாழ்வியும் அவர் மகள் பெரியநாச்சியும் எழுந்தருளுவித்ததாகக் கூறும் கல்வெட்டு, அவருக்கு நாள்தோறும் வழிபாடு செய்து படையலிட வாய்ப்பாக 1,500 காசுகளைக் கோயில் கருவூலத்தில் அவர்கள் செலுத்திய செய்தியையும் தருகிறது.

ஆட்சியாண்டும் மன்னர் பெயரும் அற்ற சோழர் காலக் கல்வெட்டு, கோயிலாரின் வேண்டுகோளை ஏற்றுக் கோயிலில் திருவிளக்கு ஏற்ற, பெருமுளையில் வாழ்ந்த வாணிய நகரத்தார் எண்ணெய் வழங்க ஒப்புதல் அளித்தமையைத் தெரிவிக்கிறது.

வெற்றுத்தளத்தின் வடக்கிலும் மேற்கிலும் பரவியுள்ள கிருஷ்ணதேவராயரின் கல்வெட்டு, அவர் வென்ற பகுதிகளின் பட்டியலையும் தோற்கடித்த அரசர்களின் பெயர்களையும் கொண்டுள்ளது. தம்முடைய வெற்றியை முன்னிட்டுத் திருமாணி குழி, திருப்புகலூர், திருமுட்டம், வைகல், இறைவானசூர், தென்னவன்மங்கலம், திருநாவலூர், திட்டைக்குடி, திருநாரையூர், பெருமுளை உள்ளிட்ட நாற்பதுக்கும் மேற்பட்ட சைவ, வைணவக் கோயில்கள் அரசுக்கு வரியாக அளித்துவந்த சோடி வரி, அரசப்பேறு பதினாயிரம் வராகனைச் செலுத்தவேண்டாம் என்றும் அத்தொகையை அவ்வக்கோயில்களே வைத்துக் கொண்டு படையல், வழிபாடு, திருப்பணிகள் ஆகியவற்றைச் செவ்வனே செய்துகொள்ளலாம் என்றும் கிருஷ்ணதேவராயர் ஆணையிட்டமையைக் கல்வெட்டுத் தெரிவிப்பதுடன், அந்த அரசஆணையைத் தொடர்புடைய கோயில்களில் கல்வெட்டாக அமைத்துக்கொள்ளவும் கிருஷ்ணதேவராயர் உத்தரவிட்டதாகக்கூறுகிறது.

**குறிப்புகள்**

1. இக்கோயிலை அறிமுகப்படுத்தியவர் திரு. பால. பத்மநாபன். ஆய்வு நாட்கள் 26. 9. 2009, 21. 1. 2010. ஆய்வுக்குத் துணைநின்ற அறங்காவலர் திரு. இரா. ஜெய்சங்கருக்கும் அவர் குடும்பத் தாருக்கும் நன்றி.

2. **தினமணி** 1.2.2010; The Hindu 3 2. 2010.

------------------------------------------

## 24. பண்டாரவாடை

தரங்கம்பாடி வட்டம் மங்கைநல்லூர் அருகே உள்ள பண்டாரவாடையில் காணப்படும் கைலாசநாதர் கோயில் மாடக்கோயிலாகும்.'1 முகப்புடனான இதன் எளிய நுழைவாயிலின் இருபுறத்தும் உள்ள ஒருதள நாகர விமானங்களில் தெற்கில் பிள்ளையாரும் வடக்கில் முருகனும் இடம்பெற்றுள்ளனர் முகப்பில் சிவபெருமான், உமை இணையர் பிள்ளைகளுடன் விளங்கும் காட்சி சுதைவடிவமாகக் காட்டப்பட்டுள்ளது. இக்கோயில் வளாகத்தினுள் வடபுறம் ஒருதள வேசரமாய் அம்மன் விமானமும் அதன் மண்டபங்களும் அமைய, நடுவில் கைலாசநாதர் விமானம் வெற்றுத்தளத்தின் மீதமைந்த இருதள வேசரமாய் மண்டபங்களுடன் காட்சிதருகிறது.

கிழக்குச் சுற்றில் இறைவன் கோயில் முன் பலித்தளமும் நந்தியும் உள்ளன. வடகிழக்கு மூலையில் உள்ள மண்டபத்தில் இரண்டு பைரவர், சூரியன், சனீசுவரன், அம்மன் சிற்பங்களும் மேடை ஒன்றில் துணைவியருடன் ஒன்பான்கோள்களும் உள்ளன. சுற்றின் தென்புறம் ஒருதள நாகரமாய் ஞானாந்தகிரி சுவாமிகள் திருமுன்னும் தென்மேற்கில் ஒருதளத் திராவிடமாய் சீனிவாச மகாவிஷ்ணு திருமுன்னும் மேற்கில் ஒருதள வேசரமாய்ப் பிள்ளையார், மகாலட்சுமி திருமுன்களும் ஒருதளத் திராவிடமாய் முருகன் திருமுன்னும் அமைய, சகஸ்ரலிங்கம் ஒருதள நாகரத்தில் இடம்பெற்றுள்ளது.

### வெற்றுத்தளம்

கைலாசநாதர் விமானம், முகமண்டபம் இவற்றிற்கான கருங்கல் வெற்றுத்தளமும் முகமண்டபத்தின் முன்னுள்ள பெருமண்டபத்திற்கான செங்கல் வெற்றுத்தளமும் தூண், போதிகை அமைப்புகளில் வேறுபட்டாலும் துணைத்தளம், வேதிகை, சுவர், கூரையுறுப்புகள் இவற்றில் ஒன்று போல் உள்ளன. தாமரை உபானம், கண்டம் என அமைந்துள்ள துணைத்தளத்தின் மீது வேதிகை அமர, மேலே நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் கொண்டுள்ள பெருமண்டப வெற்றுத் தளத்தை அடுத்துத் தொடரும் முகமண்டப, விமான வெற்றுத்

தனத்தின் சுவரைப் பாதம் பெற்ற எண்முக அரைத்தூண்கள் அணைத்துள்ளன மேலே பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் கைலாசநாதர் விமானம், மண்டபங்கள் இவற்றைத் தாங்கும் வெற்றுத்தளக் கூரையின்மேல் நாற்புறத்தும் அமைந்துள்ள பிடிச்சுவர் உயரக் குறைவான நான்முக அரைத் தூண்களால் தழுவப்பட்டுள்ளது. மேலே கூரையுறுப்புகள்

விமான வெற்றுத்தளத்தை ஒட்டித் தெற்கில் சங்கரருக்கான வளை கூரை மேடையும் வடக்கில் ஒருதள நாகரமாய்ச் சண்டேசுவரர் திருமுன்னும் உள்ளன. 2. 26 மீ. உயரமுள்ள வெற்றுத்தளத்தின் தெற்குச் சுவரில் வணங்கிய கைகளுடன் நீள் செவிகளும் சிற்றாடையுமாய்க் காட்சிதரும் ஆடவர் சிற்பமும் மேற்குச் சுவரில் நர்த்தன விநாயகரின் சிற்பமும் உள்ளன. இந்த ஆடவர் கோயிற் கட்டுமானத்துடன் தொடர்புடையவராகலாம்.2

**இறைவன் விமானம்**

தாமரை உபானம், கம்பு, ஜகதி, உருள்குமுதம், கம்புகளின் தழுவலில் பாதங்கள் பெற்ற கண்டம், பட்டிகை எனப் பாதபந்தத் தாங்குதளமும் வேதிகைத்தொகுதியும் பெற்றெழும் செங்கல் கட்டுமானமான விமானத்தின் சுவரை நான்முக அரைத்தூண்கள் அணைத்துள்ளன. மேலே வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள். 4.40 மீ. பக்கமுள்ள விமானத்தின் சாலைப்பத்தி புறந்தள்ளலாக அமைந்து முப்புறத்தும் அகலக் குறைவான கோட்டங்கள் பெற்றுள்ளது. நான்முக அரைத்தூண்கனால் அணைக்கப்பட்டுப் பஞ்சர அலங்கரிப்புப் பெற்றுள்ள இக்கோட்டங்களில் தென்புறம் ஆலமர் அண்ணலும் மேற்கில் இலிங்கோத்பவரும் வடக்கில் நான்முகனும் உள்ளனர். ஆரச் சாலைகளும் கிரீவகோட்டங்களும் வெறுமையாக உள்ளன.

விமானத்தின் கட்டமைப்பில் உள்ள முகமண்டபத்தின் மகரதோரணத் தலைப்பிட்ட கோட்டங்களில் தெற்கில் பிள்ளையாரும் வடக்கில் மகிடாசுரமர்த்தனியும் இடம்பெற்றுள்ளனர். கோட்டச் சிற்பங்கள் அனைத்தும் அண்மைக் காலத்தவை. கபோதபந்தத் துணைத்தளம், நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றுள்ள பெருமண்டபம் கோட்டங்கள்

கொள்ளவில்லை. பெருமண்டபக் கூரையின்மேல் முப்புறத்தும் அமைந்துள்ள பிடிச்சுவரில் பக்கத்திற்கு மூன்று சாளரங்கள் காட்டப்பட்டுள்ளன. இப்பிடிச்சுவரின் மேலிருக்குமாறு வேதிகை காட்டப்பட்டுள்ளது.

வளாகச் சுற்றிலிருந்து பெருமண்டப வாயிலை அடையத் தெற்கிலும் வடக்கிலும் திசைக்குப் பத்துப் படிகள் பிடிச்சுவருடன் உள்ளன. இப்படிகள் முடியும் தளஅமைப்பிலிருந்து பெருமண்டப வாயிலை அடைய மூன்று படிகள் உதவுகின்றன. வாயிலை உறுப்பு வேறுபாடற்ற நான்முக அரைத்தூண்கள் அணைக்க மேலே கூரையுறுப்புகள். வேதிகைக்கு மேல் இருக்குமாறு காட்டப்பட்டுள்ள வளைவில் இறைவனும் இறைவியும் விடையின் மீது எழுந்தருளியுள்ளனர். வாயிலின் இருபுறத்தும் உள்ள பெருமண்டபச் சுவரில் பக்கத்திற்கொருவராகக் காவலர்கள் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளனர்.

தூண்களற்ற பெருமண்டபத்தின் வடபுறம் உள்ள மேடை வெறுமையாக உள்ளது. மண்டபத்தின் நடுவில் இறைவனை நோக்கியவாறு நந்தி அமர்ந்துள்ளது. பாதம் பெற்ற நான்முக அரைத்தூண்களாலும் கூரையுறுப்புகளாலும் அணைக்கப் பட்டுள்ள முகமண்டப வாயிலின் தென்புறம் பிள்ளையாரும் வடபுறம் பழனியாண்டியும் உள்ளனர். கருவறையில் இறைவன் வேசர ஆவுடையாரும் உருளைப்பாணமுமாய்க் கைலாசநாதர் என்ற பெயரில் அருள் செய்கிறார்.

**அம்மன் விமானம்**

ஒருதள வேசரமாய் அமைந்துள்ள சௌந்தரநாயகி அம்மன் விமானம் துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத் தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றுள்ளது.

விமானச் சுவரின் முப்புறத்தும் உள்ள அகலக் குறைவான பஞ்சர அலங்கரிப்புப் பெற்ற கோட்டங்களும் கிரீவகோட்டங்களும் வெறுமையாக உள்ளன. விமானக் கட்டமைப்பில் உள்ள முகமண்டபத்தின் கோட்டங்களும் வெறுமையாக உள்ளன. முன்னுள்ள பெருமண்டபம் உபானம், உறுப்பு வேறுபாடற்ற அரைத்தூண்கள் தழுவிய சுவர், கூரையுறுப்புகள் பெற்றுள்ளது.

பெருமண்டபக் கூரையை முச்சதுர, இருகட்டு உடல் பெற்ற தூண்கள் பூமொட்டுப் போதிகைகளின் உதவியுடன் தாங்க, சிறு மேடையொன்றில் அம்மனை நோக்கியவாறு நந்தி.

கருவறையில் இறைவி சடைமகுடம் பட்டாடையுடன் முன்கைகளைக் காக்கும் குறிப்பிலும் அருட்குறிப்பிலும் கொண்டு, பின்கைகளில் அக்கமாலை, மலர்மொட்டுப் பெற்றுள்ளார்.

**சீனிவாசர்**

கிரீடமகுடம், பட்டாடை அணிந்துள்ள சுற்றாலை சீனிவாசர் வல முன் கையைக் காக்கும் குறிப்பிலும் இட முன் கையைக் கடியவலம்பிதத்திலும் அமைத்து, பின்கைகளில் சங்கு, சக்கரம் கொண்டுள்ளார். அவரின் வலப்புறத்துள்ள திருமகள் வலக்கையை நெகிழ்த்தி, இடக்கையில் மலர் கொள்ள, இடப்புற நிலமகள் இடக்கையை நெகிழ்த்தி, வலக்கையில் மலர் பெற்றுள்ளார். இருவருக்கும் கரண்டமகுடம் காட்டப்பட்டுள்ளது.

**சூரியன்**

கரண்டமகுடம், மகரகுண்டலம், சரப்பளி, முப்புரிநூல், குறங்குசெறியுடனான சிற்றாடை, புலிமுக அரைக்கச்சு, இடைக் கட்டு அணிந்துள்ள கதிரவன் இரண்டு கைகளிலும் தாமரைகள் பிடித்துள்ளார்.

**பைரவர்**

பின்கைகளில் உடுக்கையும் பாசமும் ஏந்தி, சுடர்முடி, பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி அணிந்து நிர்வாணியாய் நிற்கும் பைரவரின் பின்னால் அவரது வாகனமான நாய் காட்டப்பட்டுள்ளது. முன்கைகளில் வலப்புறம் முத்தலை ஈட்டி, இடப்புறம் தலையோடு.

இவரை அடுத்துள்ள சிறிய பைரவர் இரண்டு விதங்களில் முன்னவரிடமிருந்து மாறுபட்டுள்ளார். இவரது இட முன் கையில் தலையோட்டிற்கு மாறாக அறுபட்ட தலையே காட்டப்பட்டுள்ளது. வாகனமான நாய் அந்தத் தலை ஊனைச் சுவைக்குமாறு நிற்கிறது.

**குறிப்புகள்**

1 இக்கோயிலை அறிமுகப்படுத்தியவர் திரு. பால. பத்மநாபன். ஆய்வு நாள் 26. 9. 2009. உடனிருந்து உதவிய பா. சுரேஷ் குருக்கள் நன்றிக்குரியவர்.

2. இதே போன்றதொரு ஆடவர் சிற்பம் திருவிளையாட்டம் முளைத்தெழுந்த நாயனார் மாடக்கோயில் வெற்றுத்தளத்தில் கட்டுமானத்துடன் தொடர்புடையவராய்க் கல்வெட்டுடன் உள்ளமை கருதத்தக்கது.

---------------------------------------------------

# 25. பெருவேளூர்

மணக்கால் ஐயம்பேட்டை என்று அறியப்படும் பெருவேளூர் திருவாரூர் மாவட்டம் குடவாயில் வட்டத்தில் திருவீழிமிழலைக்கு அருகில் உள்ளது'1 தேவாரப் பதிகம் பெற்ற' 2 இவ்வூர்க் கோயில் இறைவன் பிரியாநாதர்' 3 என்றும் இறைவி ஏலவார்குழலி என்றும் பத்திமையுடன் அழைக்கப்படுகின்ற னர். கோயிலின் நுழைவாயில் கோபுரம் முத்தளங்கள் பெற்றுக் குறைவான சுதையுருவங்களுடன் திகழ்கிறது. கபோதபந்தத் துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றுள்ள கோபுரக் கீழ்த் தளத்தின் பெருஞ்சாலைப் பத்தி எண்முக அரைத்தூண்களின் அணைப்பில் புறந்தள்ளியுள்ளது. கருங்கல் கட்டுமானமான இதன் மேலுள்ள ஆரஉறுப்புகளும் பிற தளங்களும் கிரீவம், சிகரம் இவையும் செங்கல்லால் ஆனவை. கோபுர வாயிலில் வடக்கிலும் தெற்கிலும் பக்கத்திற்கொன்றாக ஊரக ஆடற் சிற்பங்கள்.

**சுற்று**

வாயிலை அடுத்து விரியும் சுற்றில் கிழக்கில் கொடிமரம், பலித்தளம், நந்திமண்டபம் அமைய, வடகிழக்கில் மதிலொட்டி நீளும் மாளிகைப் பத்தியில் இலிங்கத்திருமேனிகளும் கொற்றவை, சூரியன், சனீசுவரன், பைரவர், சம்பந்தர், சுந்தரர், அப்பர் சிற்பங் களும் இரண்டு சேத்ரபாலர் திருமேனிகளும் இடம்பெற்றுள் ளன. வண்டிக்கூடு கூரை பெற்றுள்ள இம்மாளிகைப் பத்தியின் முன்னால் ஒன்பான்கோள்களின் மேடையும் அடுத்து வெற்றறை ஒன்றும் உள்ளன. வாயிலின் இடப்புறம் உள்ள மூன்று அறைகளில் தென்கோடி அறை மடைப்பள்ளியாகப் பயன்படுகிறது. பிற இரண்டு அறைகளும் வெறுமையாக உள்ளன.

நாயுடன் காட்சிதரும் பைரவர் முன்கைகளில் முத்தலை ஈட்டியும் தலையோடும் அமைய, பின்கைகளில் உடுக்கையும் பாசமும் கொண்டுள்ளார். தொடைகளைப் பாம்பு பின்னியுள்ளது. செவிகளில் மகர, மகர, பனையோலைக் குண்டலங்கள். கழுத்தில் சரப்பளி, வாய்க்கடையில் கோரைப்பற்கள்.

நாய் வாகனமின்றி நிர்வாணியாய்க் காட்சிதரும் சேத்ரபாலர்களுள் பலகைச் சிற்பமாகக் காட்சிதருபவர் முகப்பில் மண்டையோடு பெற்ற சுடர்முடி, மகர, பனையோலைக் குண்டலங்கள், கோரைப்பற்கள், சரப்பளி, மண்டையோட்டு முப்புரிநூல் இவற்றுடன் வலக்கைகளில் நீளமான முத்தலை ஈட்டியும் பாசமும் கொண்டு, இடக்கைகளில் தலையோடு, மழு ஏந்தியுள்ளார். பொதுவாக சேத்ரபாலர் திருமேனிகள் மழு கொள்வதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவருடைய இட முன் கையைத் தலை கொண்டு தாங்கும் பாம்பு இடுப்பைச் சுற்றி வலத்தொடையில் முடிகிறது. தனித்து நிற்கும் சேத்ரபாலரின் முன் கைகளில் முத்தலைஈட்டியும் தலையோடும் உள்ளன. பின்கைகளில் இடப்புறம் அக்கமாலை. வலப்புறம் உடுக்கை சுடர்முடி, சரப்பளி, உதரபந்தம், மண்டையோட்டு முப்புரிநூல் கொண்டுள்ள அவரது இடச்செவியில் பனையோலைக் குண்டலம். வலச்செவி வெறுஞ்செவியாக உள்ளது.

சுற்றின் தென்மேற்கில் அடுத்தடுத்துள்ள முகமண்டபத்துடனான ஒருதள வேசர விமானங்களில் பிள்ளையாரும் தேவியருடன் வைகுந்த நாராயணப் பெருமாளும் இடம் பெற்றுள்ளனர். கரண்டமகுடம், சரப்பளி கொண்டு மோதகத் துடன் இடம்புரியாக உள்ள பிரதான விநாயகரின் பின்கைகளில் அங்குசமும் பாசமும் அமைய, முன்கைகளில் தந்தமும் மோதகமும் உள்ளன.

சுகாசனத்தில் உள்ள பெருமாளும் தேவியரும் குடிகொண்டிருக்கும் விமானம் துணைத்தளம், நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், சதுரப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், கபோதம் பெற்று அமைந்துள்ளது. சுவரின் முப்புறத்தும் வெறுமையான கோட்டப்பஞ்சரங்கள். கிரீடமகுடம், பட்டாடை அணிந்துள்ள பெருமாளின் வல முன் கை காக்கும் குறிப்பில் அமைய, இட முன் கை கடகத்தில் உள்ளது. பின்கைகளில் சங்கு, சக்கரம். ஒரு கையில் மலரேந்தி மறு கையை ஆகூய வரதத்தில் அமைத்துள்ள திருமகளும் நிலமகளும் கரண்ட மகுடம், பட்டாடை அணிந்து காட்சியளிக்கின்றனர். விமானத்தின் முன்னுள்ள முகமண்டபத்தில் நம்மாழ்வார் திருமங்கையாழ்வார், இராமானுஜர் சிற்பங்கள் உள்ளன. சிவபெருமானுக்கான

மாடக்கோயிலில் சுற்றாலைக் கோயில்களுள் ஒன்றாய் விஷ்ணுவின் திருமுன் அமைந்துள்ளமையை இங்கும் சிக்கல், தலைச்சங்காடு, பண்டாரவாடைக் கோயில்களிலும் காணமுடிகிறது.

மேற்கிலுள்ள ஒருதள நாகர விமானத்தில் வள்ளி, தெய்வானையுடன் முருகன் எழுந்தருளியுள்ளார். கரண்டமகுடம், சரப்பளி, பட்டாடையுடன் பின்கைகளில் சக்தி, வஜ்ரம் ஏந்தி, முன்கைகளில் காக்கும், அருட்குறிப்புக் காட்டும் முருகப் பெருமானின் இருபுறத்தும் உள்ள தேவியர் ஒரு கையை நெகிழ்த்தி, மறு கையில் மலரேந்தியுள்ளனர். அவர்தம் தலையைக் கரண்டமகுடமும் இடையைப் பட்டாடையும் அலங்கரிக்கின்றன.

முருகன் திருமுன்னுக்குப் பின் மதிலையொட்டி அமைந்துள்ள ஒருதளச் சாலை விமானத்தில் யோக சண்டேசுவரர் இடம்பெற்றுள்ளார். வேறெந்த மாடக்கோயிலிலும் காணப் பெறாத இவ்விறைவடிவம் மகாராஜலீலாசனத்தில் சற்றே வலச்சாய்வான முகத்துடன் சடைப்பாரம், பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, முப்புரிநூல், கடக, கை வளைகள் கொண்டு இணையற்ற அழகுடன் காட்சிதருகிறது. வலக்கை முழங்கால் மீதமர்ந்த கடகமாக அமைய, இடக்கையில் நீளமான மழு. தோளில் சாய்க்கப்பட்டுள்ள மழுவின் தண்டுப்பகுதியின் கீழ்முனை தொடையைத் தொட்டவாறுள்ளது.

சுற்றின் மேற்குப் பகுதியில் முருகன் திருமுன்னுக்கும் அம்மன் கோயிலுக்கும் இடைப்பட்டு அமைந்துள்ள சிறிய ஒருதள நாகரத் திருமுன்னில் இருகைகளிலும் மலரேந்தி இரு கால்களையும் கீழிறக்கிய நிலையில் அமர்ந்துள்ள திருமகளின் தலையில் கரண்டமகுடம். செவிகளில் பனையோலைக் குண்டலங்கள். இடையில் பட்டாடை.

**அம்மன்கோயில்**

சுற்றின் வடமேற்கில் அமைந்துள்ள ஏலவார்குழலியின் கோயில் ஒருதள வேசர விமானம், முகமண்டபம், பெருமண்டபம் பெற்று அமைந்துள்ளது. துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுப்போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், கபோதம் கொண்டுள்ள விமானத்தின் கிரீவகோட்டங்களில்

நாற்புறத்தும் இறைவியின் அமர்நிலைச் சுதையுருவங்கள் காட்சி தருகின்றன. சுவர்க் கோட்டங்கள் முப்புறத்தும் வெறுமையாக உள்ளன. அதே கட்டமைப்பில் உள்ள முகமண்டபக் கோட்டங்களும் வெறுமையாக உள்ளன. துணைத்தளம் அற்ற நிலையில் விமானம் ஒத்த கட்டமைப்புப் பெற்றுள்ள பெருமண்டபத்தின் கிழக்கு முகத்தில் வாயிலை அடுத்து இருபுறத்தும் சாளரங்கள் உள்ளன. மண்டபத் தென்சுவரிலும் சிறிய அளவிலான சாளரம் காணப்படுகிறது.

கனமான நான்முக அரைத்தூண்கள் தாங்கும் வண்டிக்கூடு கூரையுடன் உள்ள பெருமண்டபம் வெறுமையாக உள்ளது. கீர்த்திமுக வளைவு பெற்றுள்ள முகமண்டப வாயிலின் இரு புறத்தும் உள்ள சுதையாலான காவற்பெண்டுகள் ஒரு கையால் அச்சுறுத்தி, மறு கையை உருள்பெருந்தடியின் மீது இருத்தியுள்ளனர். கருவறையில் ஏலவார்குழலி சடைமகுடம், மகர குண்டலங்கள், பட்டாடை, கழுத்தணிகள், கையணிகள் இவற்றுடன் சுகாசனத்தில் உள்ளார். பின்கைகளில் அக்கமாலையும் தாமரையும் விளங்க, முன்கைகள் காக்கும் குறிப்பிலும் அருட்குறிப்பிலும் உள்ளன. வடக்கிலுள்ள ஒருதள வேசர விமானத்தில் தென்பார்வையாய்த் தாமரை மீது சுகாசனத்தில் இருக்கும் சண்டேசுவரரின் வலக்கை மழுவேந்த, இடக்கை தொடைமீது இருத்தப்பட்டுள்ளது. சடைப்பாரம், சிற்றாடை பெற்றுள்ள சண்டேசுவரரின் இடப்புறம் மட்டும் கவரி காட்டப் பட்டுள்ளது.

**வெற்றுத்தளம்**

4. 41 மீ. உயரமுடைய வெற்றுத்தளம் வளாகத்தின் நடுப் பகுதியில் அமைந்து இறைவன் விமானம், முகமண்டபம், பெருமண்டபம் இவற்றையும் இவற்றிற்குத் தெற்கிலுள்ள படி நடை மண்டபம், சோமாஸ்கந்தர் விமானம், முகமண்டபம் இவற்றையும் தாங்குகிறது. தெற்கில் சோமாஸ்கந்தர் விமானம் வரையிலான பகுதி, வடக்கிலும் கிழக்கிலும் இறைவன் திருமுன் பெருமண்டபம் இவற்றைத் தாங்கும் வெற்றுத்தளம் கலப்புக் கட்டுமானமாய் உள்ளது. பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக, எண்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், சதுரப் போதிகைகள், கூரையுறுப்புகள், கபோதம் பெற்றுள்ள இவ்வெற்றுத்தளத்தின்

முத்திசைகளிலும் கோட்டங்கள் உள்ளன. பஞ்சர அமைப்பிலான கிழக்குக் கோட்டங்களில் பிள்ளையார் இடம்பெற்றுள்ளார்.

தெற்கிலுள்ள மகரதோரணத் தலைப்பிட்ட இரண்டு கோட்டங்களுள் ஒன்று சோமாஸ்கந்தர் விமானத்திற்கான பகுதியில் தென்கோட்டமாக இடம்பெற்றுள்ளது. மற்றொன்று நடைமண்டபத்திற்கான வெற்றுத்தளப் பகுதியில் உள்ளது. வடபுறத்தே மேலுள்ள ஆடவல்லான் திருமுன்னிற்கான புறந் தள்ளிய பகுதியில் கோட்டப்பஞ்சரமும் அதன் இருபுறத்தும் உள்ள பகுதிகளில் மகரதோரணத் தலைப்பிட்ட கோட்டங்களும் இடம்பெற்றுள்ளன. இப்புறந்தள்ளலை எண்முக அரைத் தூண்கள் அணைத்துள்ளன. சோமாஸ்கந்தர் விமானத்திற்கான வெற்றுத்தளத்தின் மேற்குப் பகுதியிலும் ஒரு கோட்டம் உள்ளது. இக்கோட்டங்கள் அனைத்தும் வெறுமையாக உள்ளன.

இறைவன் விமானம், முகமண்டபம் இவற்றிற்கான வெற்றுத் தளம் ஜகதி, உருள்குமுதம், பிரதிவரி பெற்ற பிரதிபந்தத் தாங்கு தளம், வேதிகைத்தொகுதி, எண்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், கூடுவளைவுகளுடனான கபோதம், பூமிதேசம் அனைத்தும் பெற்றுக் கருங்கல் கட்டுமானமாக உள்ளது. விமானத்திற்கான பகுதியில் முத்திசைகளிலும் கோட்டங்கள் உள்ளன. மேற்கு, வடக்குக் கோட்டங்கள் வெறுமையாக அமைய, தெற்குக் கோட்ட ஆலமர்அண்ணல் முன்னிழுப்பாக ஒருதள நாகர விமானம் பெற்றுள்ளார்.

வீராசனத்திலுள்ள அவரின் இருபுறத்தும் பக்கத்திற்கிருவராக முனிவர்கள் உள்ளனர். பிறை பெற்ற சடைப்பாரமும் மகர, பனையோலைக் குண்டலங்களும் உதரபந்தம், முப்புரிநூல் இவையும் பெற்றுள்ள இறைவனின் பின்கைகளில் வலப்புறம் பாம்பும் அக்கமாலையும். இடப்புறம் தீச்சுடர். முன்கைகளில் வலக்கை சின்முத்திரையில் அமைய, இடக்கை சுவடி ஏந்தி முழங்காலின் மேல் உள்ளது. இறைவன் அமர்ந்துள்ள கோட்டத்தின் மேற்பகுதியில் விளங்கும் மரத்தின் வலக்கிளையில் துண்டும் இடக்கிளையில் இலிங்கத்திருமேனியும் இடம்பெற்றுள்ளன. ஆலமர்அண்ணல் சிற்பத்தொகுதியின் மரக்கிளையில் இலிங்கம் காணப்பெறுவது இதுவே முதல் முறை எனலாம்.

தூண்களின் மாலைத்தொங்கல்கள் அழகிய ஆடற்சிற்பங்களையும் இசைக்கலைஞர்களையும் பெற்றுள்ளன. கூடுகளில் பல்வேறு கோலங்களில் பூதங்கள். வடக்குக் கோட்டத்தின் மேலே காட்டப்பட்டுள்ள நீர்வழி கருவறையிலிருந்து வரும் முழுக்காட்டு நீரை வெளிப்படுத்த வாய்ப்பாக அமைக்கப்பட்டுள்ளது. அதன் மேலே அமர் சிம்மம் ஒன்று கபோதம் தாங்கியாய் உள்ளது. கபோதத்திற்கு மேல் உள்ள பூமிதேசம் இங்கு மட்டும் சற்று முன்னிழுப்பாக அமைந்து முகப்பில் கைகளை உயர்த்திய பூதத்தைப் பெற்றுள்ளது. அதற்கு நேர் கீழே தாங்குதளப் பிரதிவரியிலும் சிம்மம் காட்டப்பட்டுள்ளது. முகமண்டபத்திற்கான வெற்றுத்தளப் பகுதியின் வடக்கில் இடம்பெற்றுள்ள மகிடாசுரமர்த்தனி பிற்காலச் சிற்பமாகும்.

வெற்றுத்தளத்தின் தென்கிழக்குப் பகுதியில் மேலுள்ள திருமுன்களுக்குச் செல்ல வாய்ப்பாகப் பதினேழு படிகள் அமைந்துள்ளன. அப்படிகளின் முடிவில் நடைமண்டபமும் அதற்குப் பின் சோமாஸ்கந்தர் விமானம், முகமண்டபம் இவையும் அமைய, வடபுறத்தே உள்ள படிகள் இறைவன் திருமுன் வளாகத்திற்கு அழைத்துச் செல்கின்றன. இரண்டு திருமுன்களுக்கும் இடையில் சுற்றிவர வாய்ப்பாக நடைமேடை உள்ளது.

**சோமாஸ்கந்தர் விமானம்**

பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், கபோதம் இவற்றுடன் ஒருதள வேசரமாய் அமைந்துள்ள சோமாஸ்கந்தர் விமானமும் அதே கட்டமைப்பில் உள்ள அதன் முகமண்டபமும் முற்றிலும் செங்கல் கட்டுமானங்களாய் உள்ளன. விமானச் சுவர்களில் முப்புறத்தும் உள்ள மகரதோரணத் தலைப்பிட்ட கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. முகமண்டபத்தின் தென்சுவரில் சிறு சாளரம். விமானத்தின் கிரீவகோட்டங்களில் தெற்கில் வீராசனத்தில் காட்சிதரும் ஆலமர்அண்ணல் பின்கைகளில் பாம்புச் சுற்றிய உடுக்கையும் தீச்சுடரும் கொண்டுள்ளார். வல முன் கை சின்முத்திரையில் அமைய, இட முன் கை முழங்காலின் மீது இருத்தப்பட்டுள்ளது. மேற்குக் கோட்டத்தில் பட்டாடையுடன் சுகாசனத்தில உள்ள விஷ்ணு பின்கைகளில் சங்கு, சக்கரம்

கொண்டு முன்கைகளைக் காப்பு, அருள் முத்திரைகளில் அமைத்துள்ளார். வடகோட்டம் வெறுமையாக உள்ளது.

நடைமண்டபத்தின் புறச்சுவர் உறுப்பு வேறுபாடற்ற தாங்கு தளம், நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், கூரையுறுப்புகள் பெற்றுத் தென்புறத்தே திறப்புடன் காரைக் கட்டடமாக உள்ளது. சோமாஸ்கந்தரின் முகமண்டபம், கருவறை இரண்டும் வெறுமையாக உள்ளன.

**சோமாஸ்கந்தர்**

சோமாஸ்கந்தர் தொகுதி இறைவன் திருமுன் பெருமண்டபத்தில் உள்ள ஆடவல்லான் அறையில் உள்ளது. இத்தொகுதியில் சுகாசனத்தில் உள்ள சிவபெருமான் பின்கைகளில் மான், மழு ஏந்தி வலச்செவியில் மகரகுண்டலம், இடச்செவியில் பனையோலைக் குண்டலம் அணிந்து வல முன் கையில் காக்கும் குறிப்புக் காட்டி, இட முன் கையைக் கடகத்தில் வைத்துள்ளார். இடப்புறத்தே சுகாசனத்தில் உள்ள உமை வலக்கையில் மலரேந்தி, இடக்கையைத் தளத்தின் மீது இருத்தியுள்ளார். கரண்டமகுடம், பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, ஸ்வர்ணவைகாக்ஷம், குறங்குசெறி அணிந்து இடையில் நிற்கும் முருகனின் வலக்கையில் மலர். இடக்கை நெகிழ்ந்துள்ளது. தொகுதியின் வலப்புறம் நிற்கும் தனி உமை கரண்டமகுடம், பட்டாடை அணிந்து வலக்கையைக் கடகத்தில் இருத்தி, இடக்கையை நெகிழ்த்தியுள்ளார்.

**இறைவன் விமானம்**

பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, எண்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் கூடுவளைவுகளுடனான கபோதம் பெற்று ஒருதள வேசரமாய் அமைந்துள்ள இறைவன் விமானச் சுவர்களில் முப்புறத்தும் உள்ள கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. தூண்களின் மாலைத்தொங்கல்கள் அலங்கரிப்புப் பெற்றுள்ளன. கிரீவகோட்டங்களில் தெற்கில் வீராசனத்தில் உள்ள ஆலமர்அண்ணல் பின்கைகளில் பாம்பு சுற்றிய உடுக்கையும் தீச்சுடரும் ஏந்தி, வல முன் கையைச் சின்முத்திரையில்

இருத்திட இடமுன் கையில் சுவடி கொண்டுள்ளார். மேற்கில் பட்டாடையுடன் சுகாசனத்தில் உள்ள விஷ்ணுவின் பின்கைகளில் சங்கு, சக்கரம். முன்கைகள் காக்கும், அருட்குறிப்பில் உள்ளன. பின்கைகளில் அக்கமாலையும் குண்டிகையும் கொண்டு, முன்கைகளை தியான முத்திரையில் வைத்துள்ள நான்முகன் வடகோட்டத்தை அலங்கரிக்கிறார்.

5.41 மீ. பக்கமுள்ள சதுரமாக அமைந்துள்ள விமானத்தின் முன் உள்ள முகமண்டபம் உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், உயரமான நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், கூரையுறுப்புகள் பெற்றுள்ளது. கோட்டங்களற்ற அதன் வடசுவரில் சிறு சாளரம். முன்னால் அமைந்துள்ள பெருமண்டபத்தின் புறச்சுவர் உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளத்துடன் கூரையுறுப்புகள் பெற்ற காரைக் கட்டுமானமாக அமைந்துள்ளது. அதன் கிழக்கு முகத்தில் காட்டப்பட்டுள்ள திறப்பு கபோதமும் சாலை சிகரமும் பெற்றுச் சிறந்துள்ளது. நாகபந்தம் பெற்ற முச்சதுர, இருகட்டுத் தூண்கள் தாங்கும் பெருமண்டபத்தின் வடபுறத்தே உள்ள மூன்று அறைகளுள் இரண்டு வெறுமையாக உள்ளன. ஆடவல்லான் திருமுன்னான நடு அறையில் சோமாஸ்கந்தர் மட்டுமே இடம்பெற்றுள்ளார். நந்தி இடம் பெற்றுள்ள இம்மண்டபத்தில் முப்புறத்தும் உள்ள மேடைகள் வெறுமையாக உள்ளன.

தென்புறத் தூணொன்றின் இடைச் சதுரத்தில் இருபுறத்தும் நான்முகத் தூண்கள் அணைக்க அவற்றின் மேலிருந்து எழும் அலங்கார வளைவு திருவாசியென அமைய, இடைப்பட்ட சிறு கோட்டத்தில் இடப்பாதத்தைத் தரையிலிருத்தி, வலப்பாதத்தை அக்ரதலசஞ்சாரமாக்கியவராய் ஆடல் பிள்ளையார் இடம்பெற்றுள்ளார். அவரது தலையைக் கரண்டமகுடம் அணிசெய்கிறது. பின்கைகளில் வலப்புறம் அங்குசம் அமைய, இடக்கை அர்த்தரேசிதமாக வீசப்பட்டுள்ளது. தோள், கை வளைகள், உதரபந்தம், சிற்றாடை, தண்டை அணிந்து இடம்புரியாக உள்ள அவரது வல முன் கை கடகமாய் அமைய, இடக்கையில் மோதகம். துளைக்கை இடக்கை மோதகத்தைச் சுவைக்கிறது.

முகமண்டப வாயிலின் இருபுறத்தும் இடம்பெற்றுள்ள காவலர்கள் கருவறைக்காய் ஒருக்கணித்துள்ள போதும் நேர் முகத்தினராய் உள்ளனர். சடைமகுடம், பறவைக் குண்டலங்கள், சரப்பளி, கீர்த்திமுகத் தோள்வளைகள், கைவளைகள், கோரைப் பற்கள், உதரபந்தம், சிற்றாடை, சலங்கைகள் பெற்றுள்ள அவர்களுள், வலக்கையை வியப்பிலிருத்தி, இடக்கையை உருள் பெருந்தடிமேல் நெகிழ்த்தியுள்ள வடக்கரின் சடைமகுடம் கீர்த்தி முக முகப்புப் பெற்றுள்ளது. இடப்பாதம் மழுவின் கத்திப் பகுதி மேல் இருத்தப்பட்டுள்ளது. சடைக்கற்றைகளை இருபுறத்தும் விரித்துள்ள தெற்கர் கனத்த முப்புரிநூலும் சிறுமணிகள் கோத்த மாலையும் கொண்டு வலக்காலை மரக்கிளையின் மேல் இருத்தியுள்ளார். அவரது வலக்கை அச்சுறுத்த, இடக்கை கிளையின் மீது நெகிழ்ந்துள்ளது. செவிகளில் பறவைப் பெருங்குண்டலங்கள்.

அகலமான முகமண்டபம் வெறுமையாக அமைய, கருவறையில் இறைவன் சதுர ஆவுடையாரும் உருளைப்பாணமுமாய்ப் பிரியாநாதர் என்ற திருப்பெயருடன் எழுந்தருளியுள்ளார். கல்வெட்டுகள்

இக்கோயிலில் இருந்து நான்கு கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன.4 அவற்றுள் மூன்று மூன்றாம் குலோத்துங்கர் ஆட்சிக் காலத்தில் வெட்டப்பட்டுள்ளன. ஒன்று சடையவர்மர் சுந்தரபாண்டியர் காலத்தது. மூன்றாம் குலோத்துங்கசோழரின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு நுளம்பாதராயரின் பரிந்துரையை ஏற்று அரசர் பிறப்பித்த ஆணையாக அமைந் துள்ளது. கடந்த பத்தாண்டுகளாகத் தேர்தலில் நிற்காதவரும் நாற்பது வயதைக் கடந்தவரும் மட்டுமே குலோத்துங்க சோழ வளநாட்டு வேளாநாட்டு இராஜேந்திர சோழச் சதுர்வேதி மங்கலத்து சபைத் தேர்தலில் நிற்கமுடியும் என இதன் வழிப் புதிய சட்டம் உருவாக்கப்பட்டது.

மூன்றாம் குலோத்துங்கரின் முப்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு வறட்சியால் குத்தகையாளர்களிடமிருந்து விளைச்சல் பங்கைப் பெறுவதில் நிலவிய குழப்பம், தொல்லை காரணமாக ஊரவை செய்த சில புதிய ஏற்பாடுகளை வெளிச்சத்திற்குக் கொணர்கிறது. இராஜேந்திர சோழச் சதுர்வேதிமங்கலத்து

சபை, ஊரார் நிலங்களைத் தகுதி உடையவருக்குச் சில சலுகைகளுடன் குத்தகைக்கு விடுவது தொடர்பாகப் புதிய விதிமுறைகளை உருவாக்குமாறு ஊர் வாரியமான உறுப்புட்டூர் அடிகள் நம்பி பட்டன், ஊர்க் கணக்கான சேற்றூர் கருணாகரப்பிரியன் ஆகிய இருவருக்கும் உத்தரவிட்டது.

மூன்றாம் குலோத்துங்கரின் ஆட்சியாண்டு தெரியாத கல்வெட்டு இராஜேந்திர சோழச் சதுர்வேதிமங்கலத்து சபைக்கும் உலகமுழுதுடைச் சதுர்வேதிமங்கலத்து சபைக்கும் அவ்விரு ஊர்களைச் சேர்ந்த வேளாண் குத்தகைதாரர்களுக்கும் விளைவுப் பங்கீடு, சலுகைகள் தொடர்பாக அமைந்த ஒப்பந்தம் பற்றிப் பேசுகிறது. விழாக்களின்போது இறைத்திருமேனியை ஊர்வலமாகக் கொண்டு செல்வதற்காக நிலத்துண்டுகளைப் பெற்றுத் தோட்டம் அமைக்கப்பட்டதாகச் சுந்தரபாண்டியரின் கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

பெருமண்டபக் கிழக்கு வாயில் மேல்நிலையிலிருந்து கண்டறியப்பட்ட புதிய கல்வெட்டு நாயக்கச் செட்டியார் அக்கோயிலில் நாளும் வழிபட்டிருந்த தகவலைத் தருகிறது'5

**குறிப்புகள்**

1. இக்கோயிலை அறிமுகப்படுத்தியவர் திரு. பால. பத்மநாபன் உடனிருந்து உதவிய அறங்காவலர் திரு.ர. இராமகிருஷ்ணன், வை. அகத்தீசுவர குருக்கள் இவர்களுக்கு உளமார்ந்த நன்றி. ஆய்வு நாட்கள்: 23, 24. 10. 2009.

2. 3: 62; 4: 45.

3. 'மடவாளை ஒரு பாகம் பிரியாத பெருமானார்' என்றும் 'பெருவேளூர் பிரியாரே' என்றும் அமைந்துள்ள சம்பந்தரின் பாடலடிகள் நினைந்து இன்புறத்தக்கன.

4. ARE 1927-28: 112-115.

5. இக்கல்வெட்டு பேராசிரியர் முனைவர் மு. நளினியால் கண்டறியப்பட்டது.

---

## 26. நாங்கூர்

சீர்காழிக்கு அருகில் நாங்கூரில் உள்ள நாராயணபெருமாள் மணிமாடக்கோயில் மங்கையாழ்வார் பாடல் பெற்றுள்ளது' 1கபோதபந்தத் துணைத்தளம், தாங்குதளம், நான்முக அரைத் தூண்கள் அணைத்த சுவர், கூரையுறுப்புகள் பெற்றுச் செங்கல் கட்டுமானமாய் விளங்கும் ஐந்து தளக் கோபுரம் வாயிலின் இரு புறத்துமுள்ள கோட்டப்பஞ்சரங்களில் சுதையுருவங்களாக வடக்கில் கருடனையும் தெற்கில் காவலரையும் மேற்குப் பார்வையாகக் கொண்டுள்ளது. திருச்சுற்றின் கிழக்கில் மணி மாடக்கோயிலின்2 முன்னிருக்குமாறு அமைந்துள்ள ஒருதள வேசர விமானத்தில் கருடன் அர்த்தபத்மாசனத்தில் மேற்குப் பார்வையாகக் காட்சியளிக்கிறார். தென்கிழக்கில் மடைப்பள்ளி. தென்மேற்கில் கிழக்குப் பார்வையாக இருதள வேசர விமானத்தில் புண்டரீகவல்லித் தாயார். சுற்றின் வடபுறம் ஒருதள நாகரமாய் அமைந்த திருக்கோட்டியூர் நம்பி திருமுன்னில் ஆழ்வார்களும் ஆச்சாரியார்களும் சிற்ப வடிவில் எழுந்தருளியுள்ளனர்.

### தாயார் திருமுன்

விமானம், முகமண்டபம், பெருமண்டபம் என அமைந்துள்ள தாயார் திருமுன் வண்ணப்பூச்சில் பளபளக்கிறது. உறுப்புகளற்ற துணைத்தளம், தாங்குதளம், நான்முக அரைத் தூண்கள் அணைத்த சுவர், மகரதோரணத் தலைப்பிட்ட வெற்றுக் கோட்டங்கள், கூரையுறுப்புகள் பெற்று விளங்கும் விமானத்தின் ஆரச்சாலைகளும் இரண்டாம் தளத்தை அடுத்து அமைந்த கிரீவகோட்டங்களும் அம்மன் தொடர்பான சுதையுருவங்களைப் பெற்றுள்ளன. விமானம் ஒத்த கட்டமைப்பில் விளங்கும் முகமண்டபத்தில் கோட்டங்கள் இல்லை. முன்னால் உள்ள பெருமண்டபம் முகமண்டபத்தை ஒத்த கட்டுமானத்துடன் முன்னால் முன்றில் பெற்றுள்ளது. கருவறையில் தாயார் சுகாசனத்தில் பின்கைகளில் மலர்கள் கொண்டு முன்கைகளைக் காக்கும் குறிப்பிலும் அருட்குறிப்பிலும் வைத்துள்ளார். அர்த்த பத்மாசனத்தில் உள்ள உற்சவர் மூலவர் போலவே பின்கைகளில் மலர்களுடன் முன்கைகளால் காத்தும் அருள் செய்தும் திகழ்கிறார்.

**மாடக்கோயில்**

வளாகத்தின் நடுவில் மாடக்கோயில் விமானம், முகமண்டபம், மண்டபச் சுற்று, பெருமண்டபம் பெற்று விளங்குகிறது. அதன் முன்னுள்ள தரையளவிலான முதல் மண்டபம் முப்புறத்தும் திறந்துள்ளது. முச்சதுர, இருகட்டு உடல் பெற்ற தூண்கள் தாங்கும் இம்மண்டபத்தை அடுத்தே வெற்றுத்தளம் எழுகிறது. தூண்களின் சதுரங்களில் தாமரைப் பதக்கங்கள்.

**வெற்றுத்தளம்**

மாடக்கோயிலைத் தாங்கும் 2. 81 மீ. உயரமுள்ள வெற்றுத்தளம் நெடுகச் செங்கல் கட்டுமானமாய் உள்ளது. முறையான தாங்குதளமற்ற அதன் சுவரை நான்முக அரைத்தூண்கள் தழுவியுள்ளன. வெட்டுப் போதிகைகள் கூரையுறுப்புகள் தாங்க, கபோதமும் பூமிதேசமும் காட்டப்பட்டுள்ளன. மேற்கிலும் வடக்கிலும் மகரதோரணத் தலைப்புடன் காணப்படும் கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. தெற்கில் கோட்டம் இல்லை.

**பெருமண்டபம்**

வெற்றுத்தளத்தின் மீதமைந்த முதல் கட்டுமானமாய் விளங்கும் பெருமண்டபத்தை அடைய கிழக்கிலுள்ள ஏழுபடிகள் உதவுகின்றன. முச்சதுர, இருகட்டுத் தூண்கள் வெட்டுப் போதிகைகளுடன் தாங்கும் கூரை பெற்ற இம்மண்டபத்தில் வாகனங்கள் வைக்கப்பட்டுள்ளன. தூண்களில் காணப்படும் அடியவர்கள் மண்டபத்தை எழுப்பியவர்களாகலாம். மண்டபத் தென்சுவரில் மூன்று சாளரங்கள் உள்ளன.

பெருமண்டபத்தின் மேற்கில் நான்கு படிகளுடன் அமைந்த வாயில் மண்டபச் சுற்றிற்கு வழிவிடுகிறது. வாயிலை அணைத்துள்ள நான்முக அரைத்தூண்கள் கூரையுறுப்புகளும் கபோதமும் பெற்றுள்ளன. இவ்வாயிலின் இருபுறத்தும் பக்கத்திற்கு ஒருவராகக் காவலர்கள் உள்ளனர். தென்காவலர் வல முன் கையால் அச்சுறுத்தி, இட முன் கையை உருள்பெருந்தடி மேல் இருத்தியுள்ளார். வல முன் கையை உருள்பெருந்தடிமீது இருத்தியுள்ள வடக்கர் இட முன் கையைக் கடகமாகக் கொண்டுள்ளார். இருவர் பின்கைகளிலும் சங்கு, சக்கரம். பெருமண்டபப் புறச்சுவர்

அதைத் தாங்கும் வெற்றுத்தளத்தின் கட்டமைப்பிலேயே உள்ளது.

**சுற்று**

இறைவன் விமானம், முகமண்டபம் இவற்றின் முன் கிழக்கில் சிறு மண்டபம் போல் அமைந்து தெற்கு, மேற்கு, வடக்கு முத்திசைகளிலும் உள்சுற்றாக விரியும் மண்டபச்சுற்று துணைத்தளம் தாங்கும் மாளிகை பெற்றுள்ளது. முச்சதுர, இரு கட்டு உடல் பெற்ற தூண்கள் வெட்டுப் போதிகைகளுடன் இம்மாளிகையின் கூரையைத் தாங்குகின்றன. சுற்றின் மேற்கில் அர்த்தபத்மாசனத்தில் வணக்க முத்திரையுடன் பின்கொண்டையும் பட்டாடையுமாய்க் காணப்படும் ஆண் வடிவம் அடியவராகலாம்.

சுற்றின் வடபுறமுள்ள திண்ணையில் திருக்கோட்டியூர் நம்பி, மணவாள மாமுனிகள், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், இராமாநுஜர் இவர்கள் இடம்பெற்றுள்ளனர். வடமேற்கில் விஷ்வக்சேனரான சேனைமுதலியார் சுகாசனத்தில் பின்கைகளில் சங்கு, சக்கரம் ஏந்தி, வல முன் கையில் காக்கும் குறிப்புக் காட்டி, இட முன் கையை உருள்பெருந்தடியின்மேல் இருத்திக் காட்சிதருகிறார். மண்டபச்சுற்றின் புறச்சுவர் அது நிற்கும் வெற்றுத்தளத்தை ஒத்துள்ளது.

**விமானம்**

இருதள வேசரமாக அமைந்துள்ள விமானத்தின் கீழ்த் தளம் கிழக்கு மேற்காக 6. 57 மீ. நீளமும் தென்வடலாக 6. 23 மீ. அகலமும் கொண்டு அமைந்துள்ளது. பாதபந்தத் தாங்குதளம், நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், கூடுவளைவுகளுடனான கபோதம் பெற்றுள்ள கீழ்த்தளத்தின் சாலைப்பத்திகள் சற்றே புறந்தள்ளியுள்ளன. எண்முக அரைத்தூண்களால் அணைக்கப்பட்டுள்ள அப்பத்திகளின் வெறுமையான கோட்டப்பஞ்சரங்களை உருளை அரைத்தூண்கள் அணைத்துள்ளன. ஆர உறுப்புகளும் இரண்டாம் தளமும் கிரீவ, சிகர அமைவும் செங்கல் கட்டுமானமாக அமைந்துள்ளன.

சாலைகளில் தென்புறம் வீராசனத்தில் ஆலமர்அண்ணலும் மேற்கில் கிருஷ்ணரும் வடக்கில் நான்முகனும் கிழக்கில் விஷ்ணுவும் உள்ளனர். கிரீவகோட்டங்களில் தெற்கில் தேவியுடன் நரசிம்மரும் மேற்கில் தேவியருடன் விஷ்ணுவும் வடக்கில் தேவியுடன் பரமபதநாதரும் கிழக்கில் தேவியுடன் பூவராகரும் இடம்பெற்றுள்ளனர். விமானத்தை அடுத்துள்ள முகமண்டபம் சாலைப்புறந்தள்ளல் இன்றி விமானக் கட்டுமானம் ஒத்துச் சுவரில் சாளரம் பெற்று அமைந்துள்ளது. விமானம், முகமண்டபம் இவற்றிற்கு இடைப்பட்ட ஒடுக்கங்களில் குடப்பஞ்சரங்கள் காணப்படுகின்றன.

### கருவறை

பத்ரி நாராயணராக அறியப்படும் மூலவர் சுகாசனத்தில் மேடையில் அமர்ந்துள்ளார். பின்கைகளில் சங்கு, சக்கரம். முன்கைகளில் வலக்கை காக்கும் குறிப்பில் இருக்க, இடக்கை உருள்பெருந்தடிமேல் இருத்தப்பட்டுள்ளது. வலப்புறமுள்ள திருமகள் வலக்கையில் அருட்குறிப்புக் காட்டி, இடக்கையில் மலரேந்தியுள்ளார். இடப்புறத்துள்ள நிலமகள் வலக்கையில் மலர் பற்றி இடக்கையால் அருளுகிறார். நாராயணர் என்ற பெயருடன் உள்ள உற்சவர் திருமகள், நிலமகள் சூழ எழுந் தருளியுள்ளார். அளத்தற்கரியவர் என்ற பெயரில் நிலமகள், திருமகள் துணையுடன் மற்றொரு திருமேனியும் இடம் பெற்றுள்ளது.

### கல்வெட்டுகள்

இக்கோயிலிலிருந்து மூன்று கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன 3 அவற்றுள் பரகேசரிவர்மரின் இரண்டாம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டுள்ள இரண்டு தமிழ்க் கல்வெட்டுகளும் சோமன் தத்தனால் இக்கோயில் இறைவனுக்கு வழங்கப்பட்ட கொடைகளைக் குறிக்கின்றன. நாற்பது காசுக்குத் தத்தனால் வாங்கப்பட்ட நிலம் திருமணிமாடக்கோயிலில் நந்தா விளக்கொன்று எரிப்பதற்காகக் கொடையளிக்கப்பட்டது. இதே பெருமகன் திருமணிமாடக்கோயில் பெருமாளுக்கு நள்ளிரவுப் படையல் வழங்கப் பத்துச்செய் நிலம் நாற்பது காசு

களுக்கு வாங்கிக் கோயிலுக்களித்தார். தெலுங்கு மொழி யிலுள்ள கல்வெட்டு கடிவேதியரப்பா என்ற பெயரைத் தருகிறது.

**குறிப்புகள்**

1. நாலாயிர திவ்வியப் பிரபந்தம் 1218 - 1227, 1850, 2674.
2. ஆய்வு நாள் 25. 9. 2009.
3. ARE: 1951-52: 153- 155.

---------------------------------

# 27. நகரி

நாங்கூருக்கு அருகிலுள்ள நகரி திருவாலியுடன் இணைந்த நிலையில் பாடல் பெற்ற ஊராகக் கருதப்படுகிறது 1 கோயிலின் கிழக்கு நோக்கிய ஏழுதளக் கோபுரத்தின் கீழ்த்தளம் துணைத் தளம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள், கூரையுறுப்புகள் கொண்டுள்ளது. வாயில் இடம்பெற்றுள்ள சாலைப்பத்தி பத்மஜகதி, உருள்குமுதம் இவற்றை உறுப்பு வேறுபாடுகளாகக் கொள்ள, வாயிலின் இருபுறத்தும் அகலக் குறுக்கமான வெறுமையான கோட்டங்கள். கோபுரத் தளங் களில் குறைவான சுதையுருவங்கள் உள்ளன.

முதல் கோபுரத்திற்கும் இரண்டாம் கோபுரத்திற்கும் இடைப்பட்டு அமைந்துள்ள நடைப்பத்தியில் பலித்தளம், கொடித் தளம், கருடன் திருமுன் உள்ளன. இரண்டாம் கோபுரம் பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரை யுறுப்புகள் கொண்ட கீழ்த்தளம் பெற்றுள்ளது. மேலுள்ள நான்கு தளங்கள் செங்கல் கட்டுமானமாக உள்ளன. அதற்கும் மூன்று தளங்கள் பெற்றுள்ள மூன்றாம் கோபுரத்திற்கும் இடைப்பட்ட சுற்றில் தென்புறம் ஆண்டாள் திருமுன்னும் வடபுறம் அமிர்தவல்லித் தாயார் திருமுன்னும் உள்ளன.

### திருமுன்கள்

இருதள வேசர விமானம், முகமண்டபம், பெருமண்டபம் பெற்றுள்ள அமிர்தவல்லித் தாயார் திருமுன்னின் விமானக் கீழ்த்தளம் துணைத்தளம், உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், மகரதோரணத் தலைப்பிட்ட கோட்டங்கள், வெட்டுப் போதிகைகள், கூரையுறுப்புகள் கொண்டுள்ளது. மேலுள்ள ஆரஉறுப்புகளும் இரண்டாம் தளமும் கிரீவ சிரகமும் செங்கல் கட்டுமானங்களாக உள்ளன. அதே கட்டமைப்பில் உள்ள முகமண்டபம் பக்கத்திற்கொரு கோட்டம் பெற்றுள்ளது. கோட்டங்கள் அனைத்துமே வெறுமை யாக உள்ளன. செங்கல் கட்டுமானமாக உள்ள பெருமண்டபம் முன்றிலும் சாளரங்களும் பெற்றுள்ளது. கருவறையில் இறைவி

அர்த்தபத்மாசனத்தில் முன்கைகளைக் காக்கும், அருட்குறிப்புகளில் கொண்டு, பின்கைகளில் மலரேந்தியுள்ளார்.

இருதள வேசரமாக உள்ள ஆண்டாள் திருமுன் அமிர்த வல்லித் தாயார் திருமுன் ஒத்த கட்டமைப்பிலேயே விமானம், முகமண்டபம் பெற்றுள்ளது. முன்னால் சிறுமண்டபம் உள்ளது. கருவறையில் ஆண்டாள் வலக்கையில் மலரேந்தி, இடக்கையை நெகிழ்த்தியுள்ளார்.

**மூன்றாம் கோபுரம்**

பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, எண்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், பூதவரி பெற்ற வலபி, கூடுவளைவுகளுடனான கபோதம் கொண்ட கீழ்த்தளத்தின் நிலைக்கால்களில் கொடிப்பெண்கள் அமைய, கொடிவளையங்களில் சிற்றுருவச் சிற்பங்கள். கோட்டங்களில் நிதிக்கணங்களும் காவலர்களும் இடம்பெற்றுள்ளனர். உடலை ஒருக்கணித்துள்ள காவலர்கள் இருவருமே வலக்கையால் அச்சுறுத்தியவாறு இடக்கையை உருள்பெருந்தடிமேல் இருத்தியுள்ளார். வாயிலை அடுத்து விரியும் சுற்றின் தெற்கில் ஆழ்வார்கள் மண்டபம் உள்ளது. அங்குத் தேவியருடன் பரமபதநாதர் காட்சிதருகிறார். சுற்றின் நடுவில் வெற்றுத்தளத்தின் மீதமர்ந்த கல்யாண அரங்கநாதர் திருக்கோயில் வரவேற்கிறது.2

**வெற்றுத்தளம்**

3.30மீ. உயரமுள்ள வெற்றுத்தளம் பத்மபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் கொண்டு கல்யாண அரங்கநாதர் திருமுன்னைத் தாங்குகிறது. இந்த வெற்றுத்தளத்தின் மேற்குப்புறத்தே உள்ள கோட்டத்தில் யோக நரசிம்மர் இடம்பெற்றுள்ளார். வடபுறத்தே உள்ள ஏவரிவெஞ் சிலையான் விமானம் தாங்கும் வெற்றுத்தளம் வெறும் கல்லடுக்காக உள்ளது. தென்புறத்தே உள்ள திருமங்கையாழ்வார் திருமுன்னைத் தாங்கும் வெற்றுத்தளம் தாமரை ஜகதி, கண்டம், பட்டிகை, தாமரைவரி, உறுப்பு வேறுபாடற்ற, கொடிக்கருக்கு அலங்கரிப்புக் கொண்ட நான்முக அரைத்தூண்கள் தழுவும்

சுவர், தாமரைவரி, பெருவாஜனம் பெற்று உயரமான துணைத்தளமாகக் காட்சிதருகிறது. குமுதம், கூரையுறுப்புகள் இல்லாமை இதைத் தாங்குதளமாகக் கொள்ளத் தடையாகின்றது.

இம்மூன்று திருமுன்களுக்கும் முன் அமைந்துள்ள பெருமண்டபத்தைத் தாங்கும் வெற்றுத்தளம் பாதபந்தத் தங்குதளம், உறுப்பு வேறுபாடற்ற நான்முக அரைத்தூண்கள் சூழ்ந்த சுவர், கூரையுறுப்புகள் பெற்று அமைந்துள்ளது. இவ்வெற்றுத் தளத்தின் வடபுறம் ஏவரிவெஞ்சிலையான் திருமுன் அருகே இருக்குமாறு கொடிமரமும் பலித்தளமும் காட்டப்பட்டுள்ளன. பெருமண்டபத்தின் வடசுவர் பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத் தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், கூரையுறுப்புகள் பெற்று விளங்குகிறது. சுவரின் நடுப்பகுதியில் சாலை சிகரத்துடன் நெடிய வாயில் உள்ளது. கம்பிக் கதவுகள் பெற்றுள்ள வாயிலின் இருபுறத்தும் வெறுமையான கோட்டப் பஞ்சரங்கள் உள்ளன.

**ஏவரிவெஞ்சிலையான்**

ஒருதள வேசரமாக உள்ள இவ்விமானம் உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப்போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றுள்ளது. கருவறையில் விஷ்ணுவின் திருமேனி காணப்படுகிறது.

**திருமங்கையாழ்வார் விமானம்**

உபானம், தாமரைவரி, அன்னவரி பெற்ற ஜகதி, சிலம்பு வரிக் குமுதம், கம்புகள் தழுவிய பாதங்கள் பெற்ற கண்டம், பட்டிகை, வேதிகைத்தொகுதி, சதுர பாதமும் நாகபந்தமும் பெற்ற எண்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் கொண்டு இருதள வேசரமாக உள்ள திருமங்கையாழ்வார் விமானக் கீழ்த்தளத்தின் தென் சுவர்க் கோட்டத்தில் இரணிய நரசிம்மர் இடம்பெற்றுள்ளார். இரணியனை மடியில் கிடத்தி சுகாசனத்திலுள்ள நரசிம்மரின் முன்கைகள் இரண்டும் அவன் வயிற்றைக் கிழித்தவாறு உள்ளன. அடுத்துள்ள இருகைகளும் இரணியனின் கால்களையும் தலையையும் பிடித்தவாறு உள்ளன. மூன்றாம் இணைக் கைகள்

உருவிய குடலை உயரத் தூக்கிப் பிடித்துள்ளன. பின்னிரு கைகளில் சங்கும் சக்கரமும். கிரீடமகுடம், தோள், கை வளைகள், பட்டாடை அணிந்துள்ள நரசிம்மரின் பிடரிமுடி அழகுபடக் காட்டப்பட்டுள்ளது.

இருபுறத்தும் குடப்பஞ்சரங்கள் பெற்றுள்ள கிழக்குக் கோட்டம் வெறுமையாக உள்ளது. கபோதக் கூடுகளில் சிற்றுருவச் சிற்பங்கள் காணப்படுகின்றன. ஆரஉறுப்புகளும் சற்று உயரமான இரண்டாம் தளமும் கிரீவம், சிகரம் இவையும் செங்கல் கட்டுமானங்களாக உள்ளன. ஆரச்சாலைகளிலும் கிரீவகோட்டங்களிலும் விஷ்ணு தொடர்பான சுதையுருவங்கள் காணப்படுகின்றன.

விமானத்தை ஒத்துள்ள முகமண்டபத்தின் கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. விமானத்திற்கும் முகமண்டபத்திற்கும் இடைப்பட்ட ஒடுக்கங்களில் குடப்பஞ்சரங்கள்.

**பெருமண்டபம்**

மூன்றாம் கோபுரத்தின் மேற்கிலுள்ள ஒன்பது படிகள் பெருமண்டபத்திற்கு அழைத்துச் செல்கின்றன. முச்சதுர, இருகட்டுத் தூண்கள் பூமொட்டுப்போதிகைகளுடன் கூரை தாங்கும் இம்மண்டபத்தின் தெற்கில் திருமங்கையாழ்வார் திருமுன்னும் மேற்கில் கல்யாண அரங்கநாதர் திருமுன்னும் வடமேற்கில் ஏவரிவெஞ்சிலையான் கருவறையும் உள்ளன. திருமங்கையாழ்வார் கருவறை, முகமண்டபம் இவற்றிற்கு முன் நீளமான மேடை. மேடையின் மேற்கில் உள்ள அறையில் ஆழ்வார்கள் மூலவர்களாகவும் செப்புத்திருமேனிகளாகவும் உள்ளனர். பின் கைகளில் சங்கு, சக்கரம் ஏந்தி, கிரீடமகுடம், மகரகுண்டலங்கள் பெற்று, வல முன் கையை காக்கும் குறிப்பிலும் இட முன் கையைக் கடகத்திலும் அமைத்து சுகாசனத்தில் உள்ள சேனை முதலியாரின் செப்புத்திருமேனி எழிலார்ந்து காணப்படுகிறது.

மேடையின் தெற்கிலுள்ள திருமங்கையாழ்வார் திருமுன் முகமண்டப வாயிலின் இருபுறத்தும் காவலர்கள். வலப்புறம் இருப்பவர் வலக்கையால் அச்சுறுத்தி, இடக்கையை உருள் பெருந்தடி மேல் இருத்தியுள்ளார். இடப்புறமுள்ளவர் வலக்

கையை உருள்பெருந்தடிமேல் இருத்தி, இடக்கையால் அச்சுறுத்துகிறார். இரண்டு கைகளுடன் மட்டுமே காட்சிதரும் இவ்விருவரும் ஆடை, அணிகலன்களால் அலங்கரிக்கப் பட்டுள்ளனர். முகமண்டபம் வெறுமையாக உள்ளது. கருவறையில் திருமங்கையாழ்வார் வணங்கிய கைகளுடன் நிற்க, குமுதவல்லியார் இடக்கையில் மலரேந்தி, வலக்கையை நெகிழ விட்டு இடப்புறம் உள்ளார்.

**கல்யாண அரங்கநாதர் திருமுன்**

பெருமண்டபத்தின் மேற்கில் விளங்கும் இத்திருமுன் இருதளத் திராவிட விமானம், முகமண்டபம், மண்டபச் சுற்று பெற்றமைந்துள்ளது. மண்டபச் சுற்றின் வாயிற்காவலர்கள் மங்கையாழ்வார் திருமுன் காவலர்களைப் போலவே முன்கை களை அமைத்து, பின்கைகளில் சங்கு, சக்கரம் ஏந்தியுள்ளனர். கிரீடமகுடம், பட்டாடை அணிந்துள்ள இவர்தம் உருள்பெருந் தடிகளைப் பாம்பு சுற்றியுள்ளது. சுற்றின் வாயிலுக்கு மேல் உள்ள பாம்புப் படுக்கையில் அரங்கநாதர் படுத்துள்ளார். வாயிலை அடுத்து அமைந்துள்ள முகமண்டபத்தையும் விமானத்தையும் சூழ அமைந்துள்ள சுற்று மாளிகையின் கூரையை நான்முக அரைத்தூண்களை ஒட்டுத் தூண்களாகப் பெற்ற முச்சதுர, இருகட்டுத் தூண்கள் வெட்டுப் போதிகைகளின் உதவியுடன் தாங்குகின்றன.

**விமானம்**

4.93 மீ. சதுரமாக அமைந்துள்ள கல்யாண அரங்கநாதரின் விமானம் உபானம், பிரதிவரி பெற்ற கபோதபந்தத் தாங்குதளம், வேதிகை, நாகபந்தம் பெற்ற சதுரபாதங்களின் மீதெழும் எண்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், பூமொட்டுப்போதிகை கள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றுள்ளது. விமானத்தின் கீழ்த் தளப் பத்திகள் மூன்றுமே ஒன்று போல் புறந்தள்ளியுள்ளன. ஒடுக்கங்களில் குடப்பஞ்சரங்கள். சுவரிலுள்ள மகரதோரணத் தலைப்பிட்ட கோட்டங்கள் முப்புறத்தும் வெறுமையாக உள்ளன. கீழ்த்தளத்தின் ஆரச்சாலைகளும் சுதையுருவங்களின்றி உள்ளன. இரண்டாம் தளத்தை அடுத்து அமைந்துள்ள கிரீவ கோட்டங்களில் தெற்கில் யோக நரசிம்மரும் மேற்கில் விஷ்ணு

வும் வடக்கில் உத்குடியில் பரமபதநாதரும் கிழக்கில் சுகாசனத்தில் வாரகரும் இடம்பெற்றுள்ளனர். விமானத்தை ஒத்துள்ள முகமண்டபத்தில் புறந்தள்ளல் இல்லை. விமானத்திற்கும் முகமண்டபத்திற்கும் இடைப்பட்ட ஒடுக்கங்களில் குடப் பஞ்சரங்கள்.

இங்குள்ள தெலுங்கு, தமிழ்க் கல்வெட்டு பெருமாள் விமானத் திருப்பணி சென்னையைச் சேர்ந்த போலேபல்லி நம்பெருமாள் அறக்கட்டளை அறங்காவலர் இராமாநுஜக் கூடம் இராமாநுஜரால் 29. 1.1940 ல் செய்யப்பட்டதாகக் கூறுகிறது. மண்டபச் சுற்றின் புறச்சுவர் தூண்கள் அணைப்பற்ற வெறுஞ் சுவராக அமைந்துள்ளது.

### கருவறை

முச்சதுர, இருகட்டுத் தூண்கள் வெட்டுப் போதிகைகளுடன் கூரை தாங்கும் முகமண்டபம் வெறுமையாக உள்ளது. கருவறையில் சுவரொட்டிய மேடையில் கல்யாண அரங்கநாதர் என்று அழைக்கப்படும் பெருமாளும் அவரது இருபுறத்தும் உள்ள திருமகளும் நிலமகளும் சுகாசனத்தில் உள்ளனர். அரங்கநாதரின் வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இட முன் கை கடகத்தில் உள்ளது. பின்கைகளில் சங்கு, சக்கரம். கிரீடமகுடம், மகரகுண்டலங்கள், கழுத்தணிகள், கையணிகள் பெற்றுள்ள இறைவனின் இடையில் பட்டாடை. திருமகள் வலக்கையைத் தொடையில் இருத்தி, இடக்கையில் மலர் கொண்டுள்ளார். நிலமகள் இடக்கையைத் தொடையிலிருத்தி, வலக்கையில் மலர் கொண்டுள்ளார்.

### கல்வெட்டுகள்

இக்கோயிலில் இருந்து நான்கு கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன.3 அவற்றுள் காலத்தால் முற்பட்ட விருப்பண்ண உடையாரின் கல்வெட்டு (கி. பி. 1386) இவ்வூரைத் திருநகரான விக்னேசுவரநல்லூராக அடையாளப்படுத்துவதுடன் இராஜாதிராஜ வளநாட்டின் கீழ் இவ்வூர் இருந்தமையையும் தெரிவிக்கிறது. காவிரிக்கும் கொள்ளிடத்திற்கும் இடைப்பட்டிருந்த நிலப் பகுதியில் வயலாலி மணவாளருக்கு அளிக்கப்பட்ட சர்வமானிய நிலக்கொடைகளைக் கல்வெட்டு வரிசைப்படுத்துகிறது.

கிருஷ்ணதேவராயரின் கி.பி. 1517ம் ஆண்டுக் கல்வெட்டு மன்னரின் வெற்றிகளையும் திக்விஜயத்தையும் தெரிவிப்பதுடன் சோழ மண்டலத்து சைவ, வைணவக் கோயில்களுக்கு அவர் அளித்த வரிவிலக்குகளையும் வெளிச்சப்படுத்துகிறது. சிராப்பள்ளி, காட்டுப்பள்ளி, நகரி, நாங்கூர், அழுந்தூர், தேவூர், திருவிண்ணகர அகளங்கன், மாணிகுழி, புகலூர், முட்டம், வைகல், பாதிரிப்புலியூர், தினைநகர், இறைவாநறையூர், செறவன் மங்கலம், நாவலூர், திட்டைக்குடி, கானாட்டமர்புள்ளூர், தியாகவல்லி கிராம விண்ணகர், குறிச்சி, பந்தணைநல்லூர், தலைச்சங்காடு, புன்கூர், குறுக்கை, விசலூர், தலைஞாயிறு, திருமங்கலக்குடி, வெள்ளியக்குடி, திருந்துதேவன்குடி, சூரியனார் கோயில், கோடிக்கா, குற்றாலம், குறையலூர், விற்குடி, சிறுகுடி, ஆச்சாள்புரம், வாள்புத்தூர், நல்லூர், ஆண்டார்கோயில், கங்கைகொண்டான், திருமீயச்சூர், வழுவூர் முதலிய சைவ, வைணவக் கோயில்கள் உள்ள ஊர்களின் பட்டியல் இந்தக் கல்வெட்டால் பெறப்படும் புதையலாகும்.

மன்னர் பெயரற்ற கல்வெட்டு, உலகுய்ய வீற்றிருந்தருளிய நாயனாரான வயலாலி மணவாளர் கோயிலில் வேதம் ஓதிய அந்தணர் பெயர்களையும் அவர்களுக்கு அளிக்கப்பட்ட நிலக்கொடை பற்றிய தகவல்களையும் தருகிறது. ஜயங்கொண்ட சோழ வளநாட்டுத் தலைச்சங்காட்டுப் பற்றைச் சேர்ந்த இராஜேந்திர சோழ நல்லூர் நன்செய், புன்செய் நிலத்துண்டுகள், பசுக்கள், பரிகலங்கள் ஆகியவை கோயில் இறைவனின் படையல், வழிபாடு இவற்றிற்காகக் கொடையளிக்கப்பட்டன.

## குறிப்புகள்

1. நாலாயிர திவ்வியப் பிரபந்தம், குலசேகரர் 725, மங்கையாழ்வார் 1078, 1188-1217, 1329, 1519, 1733, 1735, 1850, 2014, 2027, 2063, 2673, 2674.
2. ஆய்வு நாள் 25.9. 2009,
3. ARE 1918: 406-409.

--------------------------------

# 28. இந்தளூர்

மயிலாடுதுறை நீடூர்ச் சாலையில் ஒரு கிலோமீட்டர் தொலைவில் உள்ள தான்தோன்றீசுவரர் மாடக்கோயில் '1 கோபுரமற்ற எளிமையான நுழைவாயிலுடன் தொடங்குகிறது. வாயில் ஒட்டியுள்ள மதிலின் மேல் வடபுறத்தே சுதையாலான நந்தியும் பூதக்காவலரும் உள்ளனர். தெற்கில் பூதக்காவலர் மட்டுமே உள்ளார். இவ்வாயிலுக்கும் முத்தளக் கோபுரம் பெற்றுள்ள இரண்டாம் வாயிலுக்கும் இடைப்பட்ட வளாகத்தில் மண்டபத் திருமுன்னில் பிள்ளையார் அமைய, அடுத்துப் பலித்தளமும் நந்தி மண்டபமும் உள்ளன.

**வசந்த மண்டபம், கோபுரம்**

வளாகத்தின் வடபுறம் செங்கல் கட்டுமானமாய் வண்டிக்கூடு கூரையுடன் அமைந்துள்ள இருகட்டு மண்டபம் வசந்த மண்டபம் என்று அழைக்கப்படுகிறது. துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம் வேதிகைத்தொகுதி, நான்முக அரைத் தூண்கள் தழுவிய சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரை என அமைந்துள்ள கீழ்த்தளத்தையடுத்து ஆரஉறுப்புகளும் மேற்றளங்களும் பெற்றுள்ள கோபுரம் சுதையுருவங்களின்றிக் காணப்படுகிறது. கோபுர வாயிலின் இருபுறமும் உள்ள ஒருதள நாகர விமானங்களில் வாயில் விநாயகர்கள் இடம்பெற்றுள்ளனர்.

**நடைமண்டபம்**

கோபுரத்தையடுத்து நீளும் நடைமண்டபம் தெற்கிலும் வடக்கிலும் வெளிச்சுற்றுக்கான வாயில்கள் பெற்றுள்ளது. தென் வாயிலின் இருபுறத்தும் சாளரங்கள் உள்ளன. தென்கிழக்கு மேடையில் மேற்கு முகமாகச் சந்திரனும் தெற்கு மேடையில் வாயிலுக்கு இடப்புறம் நால்வரும் உள்ளனர். இரண்டு வரிசை களாய் அமைந்த நான்முகத் தூண்கள் வெட்டுப் போதிகைகளுடன் வண்டிக்கூடு கூரை தாங்கும் இச்செங்கல் மண்டபத்தின் வடபுறத்தே ஒப்பில்லாநாயகியான அம்மன் திருமுன்னுக்கும் ஆடவல்லான் திருமுன்னுக்கும் வாயில்கள் அமைந்துள்ளன. அம்மன் திருமுன் வாயிலைச் சுதையாலான பெண் காவலர்கள் காக்கின்றனர். இத்திருமுன்களுக்கு இடைப்பட்ட மேடையில் கிழக்கு நோக்கிய சனீசுவரனும் தெற்கு நோக்கிய இராஜராஜேசு

வரியும் உள்ளனர். ஆடவல்லான், அம்மன் திருமுன்கள் வடவெளிச்சுற்றில் தரைக்கட்டுமானங்களாக அமைந்துள்ளன

நடைமண்டபப் புறச்சுவரின் இடைப்பகுதி உபானத்தின் மேல் வெறுஞ்சுவராக அமைய, தொடக்கமும் பிறபகுதிகளும் துணைத்தளத்தின் மீதமைந்த பாதபந்தத் தாங்குதளம், நான்முக அரைத்தூண்கள், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரை உறுப்புகள் கொண்டு காட்சிதருகின்றன. ஒருதள நாகர விமானமாக வடிவமைக்கப்பட்டுள்ள ஆடவல்லான் திருமுன் சுவரை நான்முக அரைத்தூண்கள் தழுவக் கூரையை வெட்டுப் போதிகைகள் தாங்குகின்றன.

**ஒப்பில்லா நாயகி**

உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், நான்முக அரைத் தூண்கள் தழுவிய சுவர், செவ்வகப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்று ஒருதள வேசரமாக அமைந்துள்ள அம்மன் திருமுன்னின் சுவர்க் கோட்டங்கள் வெறுமையாக அமைய, கிரீவகோட்டங்களில் இறைவியின் சுகாசனச் சுதை வடிவங்கள் உள்ளன. விமானக் கட்டமைப்பில் உள்ள முகமண்டபம் வெறுமையாக உள்ளது. கருவறையில் சடைமகுடமும் பட்டாடையுமாய் உள்ள இறைவி பின்கைகளில் அக்கமாலையும் மலரும் அமைய முன்கைகளைக் காக்கும், அருட்குறிப்புகளில் அமைத்து சமபங்கத்தில் காட்சிதருகிறார்.

**வெற்றுத்தளம்**

நடைமண்டபத்தின் மேற்கில் ஐந்து படிகளுடன் உள்ள மேடையின் தெற்கிலும் வடக்கிலும் திறப்புகள் உள்ளன. அவை இறைவன் விமானம், முகமண்டபம், பெருமண்டபம் இவற்றைச் சூழும் சுற்றுக்கான வழிகளாகும். மேடையையும் இச்சுற்றையும் 2.11 மீ. உயரமுள்ள வெற்றுத்தளம் நாற்றிசைகளிலும் தாங்குகிறது. முறையான தாங்குதளமற்ற வெற்றுத்தளத்தின் சுவரை நான்முக அரைத்தூண்கள் தழுவ, மேலுள்ள வெட்டுப் போதிகைகள் கூரையுறுப்புகள் தாங்குகின்றன. முற்றிலும் செங்கல் கட்டுமானமாய் உள்ள இத்தளத்தின் தெற்கிலும் முகமண்டபம் ஒட்டிய மேற்குத் திருப்பத்திலும் உள்ள கோட்டங்கள் பஞ்சர அலங்கரிப்புடன் வெறுமையாக உள்ளன.

## பெருமண்டபம்

மேடையின் மேற்கிலுள்ள வாயில் பெருமண்டபத்திற்கு அழைத்துச் செல்கிறது. வாயிலின் இருபுறத்தும் சுதையாலான காவலர்கள் உள்ளனர். அவர்களை அடுத்துள்ள கோட்டங்களில் தெற்கில் பிள்ளையாரும் வடக்கில் முருகனும் கிழக்குப் . பார்வையில் காட்சிதருகின்றனர். பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகளுடன் வண்டிக்கூடு கூரை பெற்றுள்ள பெருமண்டபப் புறச்சுவரின் தெற்கிலும் வடக்கிலும் உள்ள பஞ்சர அலங்கரிப்புப் பெற்ற கோட்டங்களில் தென்கோட்டம் சாளரமாக்கப்பட்டுள்ளது. வடகோட்டம் வெறுமையாக உள்ளது. மண்டபத்துள் வடபுறத்தே வெறுமையான திண்ணை உள்ளது.

## முகமண்டபம், விமானம்

பெருமண்டபத்தின் மேற்கில் உள்ள வாயில் முகமண்டபத்திற்கு வழிவிடுகிறது. வெறுமையான இம்மண்டபத்தை அடுத்துள்ள கருவறையில் இறைவன் இலிங்கத்திருமேனியராய் சதுர ஆவுடையாரின் மீது தான்தோன்றீசுவரர் என்ற பெயருடன் கிழக்குப் பார்வையில் எழுந்தருளியுள்ளார். உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், பாதத்தின்மீதெழும் எண்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், பூமிதேசம் கொண்டு, ஒருதள வேசரமாய் விளங்கும் விமானத்தின் கீழ்த்தளம் 4.03 மீ. பக்கமுடைய சதுரமாகத் திகழ்கிறது. சாலைப்பத்தியில் சற்றே புறந்தள்ளியுள்ள விமான வலபியில் சில இடங்களில் பூதவரியும் யாளி வரியும் உள்ளன. கோட்டங்களை உருளை அரைத்தூண்கள் தழுவியுள்ளன. தெற்குக் கோட்டத்தில் வீராசனத்தில் ஆலமர் அண்ணலும் மேற்கில் அண்மைக் கால இலிங்கோத்பவரும் வடபுறத்தே சமபங்கத்தில் நான்முகனும் இடம்பெற்றுள்ளனர்.

விரிசடை, மகர, பனையோலைக் குண்டலங்கள், சிற்றாடை இவற்றுடன் காட்சிதரும் ஆலமர்அண்ணலின் பின்கைகளில் வலப்புறம் அக்கமாலை, பாம்பு; இடப்புறம் தீச்சுடர். முன்கை களுள் வலக்கை சின்முத்திரையில் அமைய, இடக்கையில் சுவடி. முனிவர்கள் இருபுறத்தும் தனிச்சிற்பங்களாய் மேடை

மீது உள்ளனர். இக்கோட்டத்தின் முன் அமைக்கப்பட்டுள்ள முன்றிலை அடைய வெற்றுத்தளத்தை ஊடறுத்துத் தெற்கிலும் மேற்கிலும் வெளிச்சுற்றிலிருந்து படிகள் பெற்ற மேடையும் மேடையிலிருந்து முன்றிலை அடைய மீண்டும் ஒரு படி வரிசையும் காட்டப்பட்டுள்ளன. சடைமகுடம், பட்டாடை அணிந்து பின்கைகளில் அக்கமாலை, குண்டிகை கொண்டு சிறிய திருமேனியராய்க் காணப்படும் நான்முகனின் வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இட முன் கை கடியவலம்பிதமாக உள்ளது. கிரீவகோட்டங்களிலும் நாசிகைத் தலைப்புக் கூடுகளிலும் தெற்கில் ஆலமர்அண்ணலும் மேற்கில் விஷ்ணுவும் வடக்கில் நான்முகனும் சுதைவடிவங்களாய் இடம்பெற்றுள்ளனர்.

முகமண்டபக் கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. ஆனால், வடக்குக் கோட்டத்தின் முன் அண்மைக் கால மகிடாசுரமர்த்தனி இருத்தப்பெற்றுள்ளார். இக்கோட்டத்தின் முன்னும் முன்றில் உள்ளது. முன்றிலை அடுத்துள்ள மேடையை அடைய வெளிச்சுற்றிலிருந்து வெற்றுத்தளத்தை ஊடறுத்துப் படிகள் அமைக்கப்பட்டுள்ளன.

**வெளிச்சுற்று**

வெளிச்சுற்றின் தென்புறத்தே நடைமண்டபத்தை ஒட்டி அமைந்துள்ள ஒருதள வேசர விமானத்தில் காசிவிசுவநாதர் இடம்பெற்றுள்ளார். வெளிச்சுற்றின் மேற்கில் உள்ள மாளிகையில் தென்மேற்கில் ஒருதள நாகர விமானத்தில் பிள்ளையாரும் மேற்கில் உள்ள ஒருதள நாகர விமானத்தில் வள்ளி, தெய்வானையுடன் முருகனும் உள்ளனர். இவ்விரு திருமுன்களுக்கு முன்னால் கூரையுடனான நடைத்தளம் உள்ளது. திருமுன்களுக்கு இடைப்பட்ட வண்டிக்கூடு கூரை கொண்ட பகுதியில் இறை ஊர்திகள் உள்ளன. முருகன் திருமுன்னுக்கு வடபுறத்துள்ள மாளிகையில் இலிங்கத்திருமேனிகளும் நாகர் வடிவங்களும் தென்திசைக் கடவுள், அம்மன் திருமேனி, சூரியன் இவையும் உள்ளன.

வீராசனத்தில் சடைப்பாரம், மகர, பனையோலைக் குண்டலங்களுடன் உள்ள ஆலமர்அண்ணல் வடக்குக் கோட்ட நான்முகன் காலத்தவர். பின்கைகளில் வலப்புறம் அக்கமாலை; இடப்புறம் தீச்சுடர். முன்கைகளில் வலக்கை சின்முத்திரையில்

அமைய, இடக்கை சுவடி கொண்டுள்ளது. கரண்டமகுடம், பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, தோள், கை வளைகள், முப்புரி நூல், உதரபந்தம், சிற்றாடை இவற்றுடன் உள்ள முருகனின் பின்கைகளில் வஜ்ரமும் சக்தியும் அமைய, முன்கைகள் காக்கும் குறிப்பிலும் கடியவலம்பிதத்திலும் உள்ளன. இருபுறத்துமுள்ள தேவியர் ஒருகையில் மலரேந்தி, மறுகையை நெகிழ்த்தியுள்ளனர். இருவருள் வள்ளி, கச்சுப் பெறவில்லை. மாளிகையின் வட மேற்குக் கோடியில் மகாலட்சுமி உள்ளார்.

முகமண்டபத்தின் வடபுறத்திருக்குமாறு சுற்றுவெளியில் அமைந்துள்ள ஒருதள வேசர விமானத்தில் இரண்டு சண்டேசுவரர் திருமேனிகள் இடம்பெற்றுள்ளன. இரண்டிலும் சடைப்பாரத்துடன் பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி அணிந்து சுகாசனத்திலுள்ள சண்டேசுவரரின் வலக்கையில் மழு. மேற்கில் உள்ளவர் முப்புரிநூல் அணிந்து இடக்கையைத் தளத்தின் மேல் ஊன்றியுள்ளார். கிழக்கில் உள்ளவர் கையைத் தொடை மீது இருத்தியுள்ளார்.

வெளிச்சுற்றின் வடகிழக்கு மேடையில் சூரியன், இரண்டு பைரவர் திருமேனிகள், ஒன்பான்கோள்கள் அமைந்துள்ளன. ஏறத்தாழ ஒன்று போல் உள்ள பைரவர் திருமேனிகள் சுடர்முடி, உதரபந்தம், முப்புரிநூல், சரப்பளி, மகர, பனையோலைக் குண்டலங்கள், மண்டையோட்டுமாலை, கோரைப்பற்கள் கொண்டு, பின்கைகளில் உடுக்கை, பாசம் முன்கைகளில் முத்தலைஈட்டி, தலையோடு இவற்றுடன் காட்சிதருகின்றன. பின்னால் நாய் காட்டப்பட்டுள்ளது. ஒளிவட்டம் சூழ்ந்த கரண்டமகுடம், பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, ஸ்வர்ணவைகாக்ஷம், குறங்குசெறியுடனான சிற்றாடை, உதரபந்தம் அணிந்துள்ள சோழச் சூரியனின் கைகளில் மலர்ந்த தாமரை.

**குறிப்பு**

1. இக்கோயிலை அறிமுகப்படுத்தியதுடன் கட்டுரைக்கான அனைத்து வளங்களையும் வழங்கிய திரு. பால. பத்மநாபன், உடனிருந்து உதவிய திரு. ப. திருஞானசம்பந்த குருக்கள் ஆகிய இருவருக்கும் உளமார்ந்த நன்றி.

---

# 29. கீழையூர்

நாகபட்டினம் மாவட்டம் வேளாங்கன்னி அருகே 10 கி. மீ. தொலைவில் அமைந்துள்ள கீழையூர் அரங்கநாதர் கோயில் மாடக்கோயில் வகையினது'1 துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம், எண்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள், கூரையுறுப்புகள் கொண்டு விளங்கும் முத்தளக் கோபுரத்தின் கீழ்த்தளம் கருங்கல்லால் ஆனது. மேற்றளங்களும் கிரீவம், சிகரம் இவையும் செங்கல் கட்டுமானங்கள். கோயில் வளாகத்தின் தென்மேற்கில் வண்டிக்கூடு கூரை பெற்ற மண்டபம் உள்ளது. அதிலுள்ள நான்கு அறைகளில் இரண்டு அறைகள் வெறுமையாக உள்ளன. இரண்டு அறைகளில் ஆழ்வார்கள் இடம்பெற்றுள்ளனர். இறுதி அறை ஒருதள வேசர விமானமாக்கப்பட்டுள்ளது. ஆழ்வார் மண்டபத்தை அடுத்துள்ள வளைமாடத்தில் பிள்ளையார் இடம்பெற்றுள்ளார். வடமேற் கில் உள்ள அறையும் மண்டபமும் வெறுமையாக உள்ளன.

**நடைமண்டபம்**

வளாகத்தின் தெற்கில் பலித்தளம், கொடிமரம் அமைந்த மேடை உள்ளது. மூன்று படிகள் பெற்றுள்ள இம்மேடையின் பின் உள்ள நடைமண்டபம் வண்டிக்கூடு கூரை பெற்றுள்ளது. குடைவரை முகப்புப் போல நான்முகமாய் அமைந்த இரண்டு முழுத்தூண்களும் இரண்டு அரைத்தூண்களும் பெற்றுள்ள நடைமண்டப முகப்பு மூன்று வாயில்கள் கொண்டுள்ளது. நடு வாயிலின் முழுத்தூண்களில் பிதுக்கமாக எண்முக அரைத் தூண்கள் காட்டப்பட்டுள்ளன. கிழக்கு, மேற்கு வாயில்களில் வெட்டுப் போதிகைகள் கூரையுறுப்புகள் தாங்க, நடுவாயிலில் மதலைகள் அப்பணி செய்கின்றன. கிழக்கு, மேற்கு முகப்பு அரைத்தூண்களை அடுத்துத் தள அமைப்புப் பெற்ற சுவர்த் துண்டுகள் இடம்பெற்றுள்ளன.

துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நாகபந்தப் பாதம் பெற்ற எண்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், பூமொட்டுப் போதிகைகள், உத்திரம், மதலை வலபி என அமைந்திருக்கும் இப்பக்கப் பகுதிகளில் உள்ள கோட்டப் பஞ்சரங்கள் வெறுமையாக உள்ளன. நடு வாயிலின் உள்

இருக்குமாறு ஒருதள வேசரமாய் கருடன் திருமுன் அமைந்துள்ளது நடைமண்டபத்தின் மேற்கில் தெற்குச் சுவர்த்துண்டை ஒட்டி அதிரூபத்தாயாரின் இருதள வேசர விமானமும் முக மண்டபமும் உள்ளன. அதன் முன் இரண்டு அடுக்குகளாய் எட்டுப் படிகள் உள்ளன. நடைமண்டபக் கூரைமேல் மணிக் கூண்டு கட்டப்பட்டுள்ளது.

**அதிரூபத்தாயார் விமான வெற்றுத்தளம்**

உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், எளிய நான்முக அரைத் தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள், கூரையுறுப்புகள் பெற்றுள்ள வெற்றுத்தளத்தின் மகரதோரணத் தலைப்பிட்ட கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. மகர தோரணத்தில் நாமம் நடுவிலும் சங்கு, சக்கரம் இவை நாமத்தின் இருபுறத்தும் காட்டப்பட்டுள்ளன.

**அதிரூபத்தாயார் விமானம்**

இருதள வேசரமாக அமைந்துள்ள தாயார் விமானம் வெற்றுத்தளக் கட்டமைப்பையே பெற்றுள்ளது. விமானத்தின் சுவர்க் கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. தளச் சாலை களில் அம்மனின் பத்மாசன சுதையுருவங்கள் இடம்பெற, கிரீவ கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. கோட்டங்கள் பெறாமல் விமானக் கட்டமைப்பை ஒத்துள்ள முகமண்டபம் நடைமண்டபத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. முகமண்டப வாயிலின் மேலே யானைத்திருமகள் சிற்பமும் நடைமண்டபத்தின் வடக்குச் சுவர்க் கோட்டத்தில் அநுமார் சிற்பமும் இடம் பெற்றுள்ளன. கருவறையில் அரங்கநாயகி அர்த்தபத்மாசனத்தில் பின்கைகளில் மலர் கொண்டு முன்கைகளைக் காக்கும், அருட்குறிப்புகளில் கொண்டுள்ளார். உற்சவர் அதிரூபத்தாயாரும் அதே அமைப்பில் உள்ளார்.

**ஆண்டாள் விமானம், வெற்றுத்தளம்**

வளாகத்தின் வடமேற்கில் காணப்படும் ஆண்டாள் விமானம், முகமண்டபம் இவற்றைத் தாங்கும் வெற்றுத்தளம் அதிரூபத்தாயார் திருமுன் வெற்றுத்தள அமைப்பிலேயே உள்ளது. ஆண்டாள் விமானம், முகமண்டபம் இவையும்

அதிரூபத்தாயார் விமானக் கட்டமைப்பிலேயே உள்ளன. இங்கும் கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. தளச் சாலைகளிலும் கிரீவகோட்டங்களிலும் ஆண்டாளின் நின்றகோலச் சுதையுருவங்கள் இடம்பெற்றுள்ளன. முன்னுள்ள இடிந்த செங்கல் கட்டுமானம் பெருமண்டபமாகலாம். வளாகத்திலிருந்து விமானத்தை அடையப் பத்துப் படிகள் உதவுகின்றன. கருவறையில் வலக்கையில் மலரேந்தி நிற்கும் ஆண்டாளின் இடக்கை நெகிழ்ந்துள்ளது.

**விஷ்வக்சேனர் விமானம்**

கிழக்குச் சுற்றின் வடகோடியில் உள்ள ஒருதள வேசர விமானத்தில் விஷ்வக்சேனர் சுகாசனத்தில் உள்ளார். கிரீட மகுடம், சரப்பளி, மகரகுண்டலங்கள், முப்புரிநூல், பட்டாடை அணிந்து, பின்கைகளில் சங்கு, சக்கரம் ஏந்தி, முன்கைகளில் வலப்புறம் காக்கும் குறிப்புக் காட்டும் இறைவனின் இடட முன் கை கடகமாய் உள்ளது. இவர் விமானத்திற்கும் இறைவன் விமானம் தாங்கும் வெற்றுத்தளத்திற்கும் இடையிலுள்ள இடைவெளி ஆண்டாள் விமானத்திற்கும் இறைவன் விமானம் தாங்கும் வெற்றுத்தளத்திற்கும் இடையில் இல்லை. வடக்கு மதிலின் நடுவிலுள்ள வாயில் கோபுரக் கீழ்த்தளமாய் அமைந்துள்ளது.

**இறைவன் விமான, முகமண்டப, பெருமண்டப வெற்றுத்தளம்**

உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், நான்முக அரைத் தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்று மேற்கு, வடக்கு, கிழக்கு முப்புறத்தும் சூழும் 2.64 மீ. உயர வெற்றுத்தளத்தின் மேலே பிடிச்சுவர் காட்டப்பட்டுள்ளது.

**சுற்று மண்டபம்**

நடைமண்டபத்தை அடுத்துள்ள சுற்று மண்டப வெற்றுத் தளமும் இறைவன் விமான வெற்றுத்தள அமைப்பிலேயே உள்ளது. வண்டிக்கூடு கூரை பெற்றுள்ள இம்மண்டபம் பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, எளிய நான்முக அரைத் தூண்கள் தழுவிய சுவர், கூரையுறுப்புகள் பெற்றுச் செங்கல்

கட்டுமானமாக உள்ளது. தெற்கிலும் கிழக்கிலும் உள்ள நடை மண்டப வாயில்கள் வழி இம்மண்டபத்தை அடையலாம். இதன் முன் 3 படிகள் உள்ளன. படிகளை அடுத்துக் கிழக்கிலும் மேற்கிலும் சுற்றாக விரியும் இம்மண்டபத்தின் தெற்கு வாயில் அருகே உள்ள தூண் கல்வெட்டுகள் 2 ரெங்கப்ப ராசா, இலிங்க ராசா இவர்தம் மரபு வழிகளைச் சுட்டுவதுடன், அவ்விருவர் கொடையாகச் சுற்று மண்டபத்தைக் குறிக்கின்றன. வரதையர், கிருஷ்ணன் இருவரும் இக்கோயிலில் நாளும் வழிபாடு செய்வதாகவும் இவை கூறுகின்றன.

முச்சதுர, இருகட்டு உடல் பெற்ற ஆறு தூண்கள் தாங்கும் இம்மண்டபத்தின் வடக்கில் காவலர்கள் பெற்ற பெருமண்டப. வாயில் அமைந்துள்ளது. கிரீடமகுடத்துடன் நேர்நோக்கி நிற்கும் காவலர் இருவருமே நெடிய திருமேனியராய்ப் பின்கைகளில் சங்கு, சக்கரம் ஏந்தி, ஒரு கையைக் கதையின் மீது இருத்தி மறு கையால் அச்சுறுத்துகின்றனர்.

### பெருமண்டபம்

உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம், எளிய நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றுக் கருங்கல் கட்டுமானமாக உள்ள பெருமண்டபத்தின் கூரையை முச்சதுர, இருகட்டு உடல் கொண்ட தூண்கள் தாங்குகின்றன. மண்டபத்தின் மேற்குச் சுவரில் நாமம், சங்கு, சக்கரம் இடம்பெற்றுள்ளன. மண்டபத்துள் வடமேற்கில் இரண்டு இராமர் தொகுதிகளும் வடகிழக்கில் கோபாலர் தொகுதியும் செப்புத்திருமேனிகளாக இடம் பெற்றுள்ளன.

### இராமர் தொகுதி

இராமர், சீதை, இலக்குவன், அநுமார் என நால்வராகத் தனித்தனியே இருக்கும் பேரளவிலான முதல் தொகுதி செப்புத் திருமேனிகளாக இருந்தபோதும் மூலவர் தொகுதி என அழைக்கப்படுகிறது. வலக்கையைக் கடகத்தில் கொண்டு இடக் கையை வில் பிடிக்குமாறு போலக் கடகமாய் உயர்த்தியுள்ள இராமர் கிரீடமகுடம், மகரகுண்டலங்கள், சரப்பளி, முப்புரி

நூல், முத்துமாலை, தோள், கை வளைகள், குறங்குசெறி, உதரபந்தம் அணிந்து பாதங்களைத் திரயச்ரத்தில் இருத்தியுள்ளார். அவர் முகம் புன்னகை மாறாமல் உள்ளது. இடுப்பாடையை புலிமுகக் கச்சு இறுக்கியுள்ளது. இராமரை ஒத்த அதே அலங்கரிப்பில் காட்சிதரும் இலக்குவன் தலையில் சிறு மகுடம்.

கரண்டமகுடம், சரப்பளி, தோள், கை வளைகள், மகர குண்டலங்கள், ஸ்கந்தமாலை, ஸ்வர்ணவைகாக்ஷம், குறங்கு செறி, பட்டாடை அணிந்து வலக்கையை நெகிழ்த்தி, இடக் கையைக் கடகத்தில் கொண்டுள்ளார் சீதை. கரண்ட மகுடம், பூட்டுக்குண்டலங்கள், தோள், கை வளைகள், முப்புரிநூல், சிற்றாடை அணிந்து வலக்கையால் வாய்ப் பொத்தி, இடக் கையைத் தொடையருகே கொண்டுள்ள அநுமனின் முகத்தில் பத்திமை ஒளி. இராமர், சீதை, இலக்குவன் என மூவராக அமைந்திருக்கும் தொகுதியை உற்சவர்களாகக் கொண்டுள்ளனர். இத்தொகுதித் திருமேனிகளும் பேரளவுத் திருமேனிகள் போலவே அமைந்துள்ளன.

**கோபாலர் தொகுதி**

தேவியர் இருவருடன் நிற்கும் கோபாலர் தலையில் மகுடம். வலச்செவி வெறுஞ்செவியாக அமைய, இடச்செவியில் பனையோலைக் குண்டலம். சரப்பளி, முப்புரிநூல், உதரபந்தம், தோள், கை வளைகள், குறங்குசெறி, புலிமுகக் கச்சு இருத்தும் சிற்றாடை இவற்றுடன் நிற்கும் கோபாலரின் பாதங்கள் திரயச்ரமாக உள்ளன. கைகள் இரண்டும் கடகத்தில் உள்ளன. தேவியர் இருவரும் பட்டாடை, ஒன்று போல் மகுடம் கொண்டு ஒரு கையை நெகிழ்த்தி மறு கையைக் கடமாக்கியுள்ளனர். இருவரது செவிகளுமே வெறுமையாக உள்ளன. வலத்தேவி ஸ்வர்ண வைகாக்ஷம், ஸ்கந்தமாலை கொள்ள இடத்தேவி முப்புரிநூல் அணிந்துள்ளார்.

**முன்மண்டபம்**

பெருமண்டபக் கட்டமைப்பில் விளங்கும் முன்மண்டப மேற்குச் சுவரில் சாளரம் உள்ளது. சங்கு, சக்கரம், நாமம் இவையும் இடம்பெற்றுள்ளன. மண்டபத்தின் கிழக்கிலுள்ள மேடை வெறுமையாக உள்ளது.

**முகமண்டபம்**

பெருமண்டபக் கட்டமைப்பில் விளங்கும் முகமண்டபத்தின் கூரையை முச்சதுர, இருகட்டு உடல்பெற்ற தூண்கள் பூமொட்டுப் போதிகைகளுடன் தாங்குகின்றன. மண்டபத்தின் கிழக்கு, மேற்குச் சுவர்களை அடுத்துள்ள மேடைகள் வெறுமையாக உள்ளன.

**விமானம்**

தென்வடலாக 5.83 மீ. அகலமும் கிழக்கு மேற்காக 7.38 மீ. நீளமும் கொண்டுள்ள இறைவன் விமானம் முகமண்டபத்தை ஒத்த கட்டமைப்பில் முத்தளச் சாலையாக அமைந்துள்ளது கீழ்த்தளம் தவிர்த்த பிற உறுப்புகள் செங்கல்லால் ஆனவை. சுவர்க் கோட்டங்கள் மூன்றும் வெறுமையாக உள்ளன. கிரீவ கோட்டங்களும் வெறுமையாக உள்ளன.

கருவறை வாயிலை முச்சதுர, இருகட்டுத் தூண்கள் அணைத்துள்ளன. உள்ளே பாம்புப் படுக்கையில் தெற்கில் இலேசாக ஒருக்கணித்தவராய் மேற்கில் தலை வைத்து கிழக்கில் தாமரை மேல் கால் வைத்துப் பள்ளி கொண்டுள்ளார் பெருமாள். அவரது வலக்கை கிரீடமகுடமணிந்த தலைக்குப் பக்கத்தில் உள்ளது. இடக்கை தொடை தழுவியுள்ளது. கச்சம் வைத்த பட்டாடை, தாள்செறிகள், மகரகுண்டலங்கள் அணிந்துள்ள இறைவனின் பாதத்துக்குப் பின்னால் நிலமகள் இலலிதாசனத்தில் உள்ளார். கரண்டமகுடம், சரப்பளி, முப்புரிநூல் அணிந்து வெறுஞ்செவிகளோடு காட்சிதரும் இறைவியின் இடக்கை அருட்குறிப்பில் உள்ளது. வலக்கையில் மலர். பின்சுவரில் நாமம், சங்கு, சக்கரம் இவை காட்டப்பட்டுள்ளன.

கருவறைத் தரையில் வலப்பக்கம் சடைமகுடம் அணிந்து அர்த்தபத்மாசனத்தில் காட்சிதரும் மார்க்கண்டேயரின் கைகள் வணக்க முத்திரையில் உள்ளன. படுக்கையின் கிழக்கு முகப்பில் சேஷனின் வால், தலை இரண்டும் காட்டப்பட்டுள்ளன. உற்சவராக இருக்கும் ஆயனார் வலக்கையில் காக்கும் குறிப்புக் காட்டி, இடக்கையைக் கடகத்தில் உருள்பெருந்தடிமேல் வைத்துள்ளார். பின்கைகளில் சங்கு, சக்கரம். இருபுறத்தும் உள்ள தேவியர்

வெளிக்கைகளை நெகிழ்த்தி, உள்கைகளில் மலர் கொண்டுள்ளனர். ஆண்டாள் வலக்கையில் மலரேந்தி, இடக்கையை நெகிழ்த்தி உள்ளார்.

**குறிப்புகள்**

1. இக்கோயிலை அறிமுகப்படுத்தியவர் திரு. பால. பத்மநாபன். ஆய்வு நாள் 20.3. 2010, 2. 4. 2010.
2. இக்கல்வெட்டுகள் பேராசிரியர் முனைவர் மு. நளினியால் படித்தறியப்பட்டன.

---------------------------------------

# 30. திருப்பேர்நகர்

திருச்சிராப்பள்ளி திருக்காட்டுப்பள்ளிச் சாலையில் 24 கி. மீ தொலைவில் அமைந்துள்ளது கோயிலடி![1] காவிரியின் வடகரை ஊராக விளங்கும் இதன் பழம் பெயர் திருப்பேர்நகர் பெருமாளுக்கொன்றும் சிவபெருமானுக்கொன்றுமாய் இவ்வூரில் இரண்டு கோயில்கள் உள்ளன. கல்வெட்டுகளில் பெரிய ஸ்ரீகோயில் என்று அழைக்கப்படும்[2] பெருமாள் கோயில் பாடல் பெற்ற[3] மாடக்கோயிலாய் அமைந்துள்ளது. சுற்றிலும் மதிலால் சூழப்பட்டுள்ள கோயில் வளாகத்தின் ஒரே வாயிலாய் மேற்குக் கோபுரம் அமைந்துள்ளது. முத்தளக் கட்டுமானமாய் அமைந் துள்ள இக்கோபுரத்தின் கீழ்த்தளம் பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்றுக் கருங்கல் பணியாக உள்ளது. மேற்றளங்களும் கிரீவம், சிகரம் இவையும் செங்கல் கட்டுமானங்களாக உள்ளன. கீழ்த்தளக் கிழக்குக் கபோதத்தில் இறைவனை வணங்கியவாறு கருடன் அமர்ந்துள்ளார். வாயிலின் இருபுறத்தும் உள்ள கோட்டப் பஞ்சரங்கள் மேற்கிலும் கிழக்கிலும் வெறுமையாக உள்ளன.

வெளிச்சுற்றின் வடமேற்கில் மண்டபம் அமைய, தென் மேற்கில் ஒருதள நாகர விமானத்தில் பிள்ளையார் இடம் பெற்றுள்ளார். கரண்டமகுடம், சிற்றாடை, உதரபந்தம் அணிந்து இடம்புரியாக உள்ள பிள்ளையாரின் வலத்தந்தம் உடைந்துள் ளது. பின்கைகளில் அங்குசமும் பாசமும் ஏந்தி, அர்த்தபத்மாசனத்தில் உள்ள அவரது வலக்கையில் உடைந்த தந்தம். இடக்கை தொடைமீது உள்ளது. சுற்றின் தென்கிழக்கில் மதிலை ஒட்டி உள்ள மாளிகையின் அறைகள் வெறுமையாக உள்ளன

## வெற்றுத்தளம்

வளாகத்தின் நடுவிலுள்ள பள்ளிகொண்ட பெருமாளின் விமானம், முகமண்டபம், பெருமண்டபம், மண்டபச் சுற்று, முதல் மண்டபம் இவை அனைத்தும் 2. 35 மீ. உயரமுள்ள வெற்றுத்தளத்தின் மீது அமைந்துள்ளன. வெற்றுத்தளம் சுவர், கூரையுறுப்புகள் பெற்று அனைத்துத் திசைகளிலும் ஒன்று போல் அமைந்துள்ளது. முதல் மண்டபத்திற்கான படிகள் வெற்றுத்தளத்தின் வடமேற்குப் பகுதியில் இரண்டு நிலைகளாக

அமைந்து, இருபுறத்தும் பிடிச்சுவர் கொண்டுள்ளன. இருபத்திரண்டு படிகள் உள்ள இந்தப் படித்தொடரின் முதல் நிலை மேடையில் கொடிமரமும் பலித்தளமும் உள்ளன. கொடிமரத்தில் மேற்குப் பார்வையாக அரங்கநாதரும் கிழக்குப் பார்வையாக அர்த்தபத்மாசனத்தில் கருடனும் அமைய, தெற்கிலும் வடக்கிலும் முறையே சங்கும் சக்கரமும் காட்டப்பட்டுள்ளன.

**முதல் மண்டபம்**

வாயிலின் மேல் சாலை சிகரம் பெற்றுள்ள முதல் மண்டபத்தின் கூரையை முச்சதுர, இருகட்டு உடல் தூண்கள் வெட்டுப் போதிகைகளுடன் தாங்குகின்றன. இத்தூண்களின் கீழ்ச்சதுரங்கள் நாகபந்தம் பெற்றுள்ளன. சில சதுர முகங்களில் தாமரைப் பதக்கங்களும் சிலவற்றில் வேணுகோபாலர் முதலிய சிற்பங்களும் இடம்பெற்றுள்ளன. வடபுறம் பள்ளியறையும் மேடையொன்றும் உள்ளன. மேடையில் சிறிய அளவிலான அனுமார் சிற்பமும் விஷ்வக்சேனரின் பெரிய அளவிலான சிற்பமும் உள்ளன. பின்கைகளில் சங்கு, சக்கரம் ஏந்தி சுகாசனத்தில் உள்ள விஷ்வக்சேனரின் வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இட முன் கை விரல்கள் மடங்கிய நிலையில் தொடை மீது வைக்கப்பட்டுள்ளது. கிரீடமகுடம், மகரகுண்டலங்கள், தோள், கை வளைகள், சரப்பளி, பட்டாடை அணிந்துள்ள இவருடைய மார்பில் முப்புரிநூல் இல்லை. மண்டபத்தின் நடுப்பகுதியில் பெருமாள் திருமுன்னை நோக்கி வணங்கியவாறு கிழக்குப் பார்வையாக இலலிதாசனத்தில் அமர்ந்துள்ள கருடன் கரண்டமகுடம் அணிந்துள்ளார்.

**தாயார் திருமுன்**

மண்டபத்தின் தென்புறத்தில் கமலவல்லித்தாயாரின் இருதள வேசர விமானம், முகமண்டபம் இவை கிழக்குப் பார்வையாக அமைந்துள்ளன. முறையான தாங்குதளம், அரைத்தூண்கள் அற்ற நிலையில் இவ்விமானத்தின் கீழ்த்தளமும் முகமண்டபமும் சுவர், கூரையுறுப்புகள் மட்டுமே பெற்றுள்ளன. முகமண்டபம் வெறுமையாக அமைய, கருவறையில் இறைவி மூலவராகவும் உற்சவராகவும் இடம்பெற்றுள்ளார். அர்த்தபத்மாசனத்தில் உள்ள மூலவர் பின்கைகளில் மலர் மொட்டுக்களும் முன்கைகளில் காக்கும், அருட்குறிப்பும் கொண்டு பட்டாடையுடன் திகழ, உற்சவர் மூலவரை ஒத்த கோலத்தில் விளங்குகிறார்.

தாயார் திருமுன்னுக்கு எதிரில் நடையாகத் தொடரும் முதல் மண்டபம் கீழ்ச்சுற்றுக்கு இறங்கும் படிக்கட்டுகளில் முடிகிறது. முதல் வரிசைப் படிகள் நாகர அமைப்பிலான வண்டிக்கூடு கூரை பெற, எஞ்சிய படிகள் தகரக்கூரை பெற்றுள் ளன. கீழ்ச்சுற்றுவெளியின் வடகிழக்குப் பகுதியில் படிகள் முடியுமிடத்து, நாயக்கர் கலைமுறையில் அமைந்த வளைவுக் கூரை பெற்ற நான்கு பேருருளைத் தூண்கள் உள்ளன.

**மண்டபச் சுற்று**

முதல் மண்டபத்தின் கிழக்கில் அமைந்துள்ள வாயில் மண்டபச் சுற்றுக்கு வழிவிடுகிறது. மேற்கில் உருளைத் தூண்கள் தாங்கும் மண்டபமாகத் தொடங்கி வடக்கு, கிழக்கு, தெற்கு முப்புறத்தும் துணைத்தளம் தாங்கும் மாளிகைச் சுற்றாக வளரும் இதில் சிற்பங்கள் ஏதுமில்லை. வடபுறத்தே உள்ள வாயில் சொர்க்க வாயிலாக அமைந்து, கீழ்ச்சுற்றுக்குப் படித் தொடர் வழி அழைத்துச் செல்கிறது. மாளிகையின் பெரும் பகுதியை உருளைத் தூண்களும் கிழக்குப்பகுதியை முச்சதுர, இருகட்டுத் தூண்களும் வெட்டுத் தரங்கப் போதிகைகளின் துணையுடன் தாங்குகின்றன.

**பெருமண்டபம்**

பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர், வெட்டுத் தரங்கப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்று அமைந்துள்ள பெருமண்டபத்தின் வடக்கு, தெற்குச் சுவர்களில் பக்கத்திற்கு மூன்று கோட்டப்பஞ்சரங்கள் வெறுமையாக உள்ளன.

**முகமண்டபம்**

பெருமண்டபத்தின் கட்டமைப்பை ஒத்துள்ள முகமண்டபம் அளவில் சிறியது. அதன் வடக்கு, தெற்குச் சுவர்களிலுள்ள கோட்டப் பஞ்சரங்கள் வெறுமையாக உள்ளன.

**விமானம்**

இருதளச் சாலையாக அமைந்துள்ள இறைவன் விமானத்தின் கீழ்த்தளம் முகமண்டபம் ஒத்த கட்டமைப்பில் விளங்கிய போதும் பல மாற்றங்களைக் காணமுடிகிறது. தென்வடலாக 8 மீ.

நீளமும் கிழக்கு மேற்காக 6.33 மீ அகலமும் பெற்றுள்ள இந்தத் தளத்தின் கர்ணபத்திகள் மகரதோரணத் தலைப்பிட்ட கோட்டங்கள் கொள்ள, சாலைகளில் கோட்டப்பஞ்சரங்கள் காணப்படுகின்றன. வடக்குச் சாலைக் கோட்டத்தில் மட்டும் பாமபதநாதர் காட்சிதருகிறார். பிற கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. சுவர்த் தூண்களின் மாலைத் தொங்கல்களில் குடக்கூத்து உள்ளிட்ட பல சிற்றுருவச் சிற்பங்களைக் காணமுடிகிறது. விமானத்தின் ஆரச்சாலைகளில் வடக்கில் பூவராக ரும் கிழக்கில் சுகாசனப் பெருமாளும் தெற்கில் நரசிம்மரும் உள்ளனர். மூவருமே தேவியின் துணையுடன் உள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற்கு ஆரச்சாலை வெறுமையாக உள்ளது. கிரீவகோட்டங்களில் வடக்கில் விஷ்ணுவும் கிழக்கில் பூவராகரும் மேற்கில் விஷ்ணுவும் தேவியருடன் அமைய, வடக்கில் வணங்கிய கைகளுடன் அனுமார்.

பெருமண்டப வாயிலின் இருபுறத்தும் பக்கத்திற்கொருவராகக் காவலர்களைப் பெற்றுள்ள கோட்டங்கள் மேற்பகுதியில் வளைமுகத் தலைப்புப் பெற்றுள்ளன. இவற்றை அடுத்து, பக்கத்திற்கொரு கோட்டப்பஞ்சரமும் உள்ளது. தெற்குக் காவலர் வலக்கையை உருள் தடிமேல் இருத்தி, இடக்கையால் அச்சுறுத்த, வடக்குக் காவலர் இடக்கையை உருள் தடிமேல் இருத்தி, வலக்கையையால் அச்சுறுத்துகிறார். சமபங்கத்தில் நிற்கும் இருவருமே கிரீடமகுடம், பட்டாடை அணிந்துள்ளனர். பெரு மண்டபத்தின் கூரையை முச்சதுர, இருகட்டுத் தூண்கள் பெருமொட்டுப் போதிகைகளின் உதவியுடன் தாங்குகின்றன. தூண்களின் கீழ்ச்சதுரங்கள் பேரளவு நாகபந்தம் பெற்றுள்ளன.

தூணொன்றின் இடைச்சதுரத்தில் தாமரையில் அர்த்த பத்மாசனத்தில் அமர்ந்த இலட்சுமியின் அழகிய சிற்பம் இடம் பெற்றுள்ளது. பின்கைகளில் மலர் மொட்டுகளும் முன்கைகளில் காக்கும், அருட்குறிப்புகளும் கொண்டுள்ள தேவியின் தலையில் கரண்டமகுடம். இடையில் பட்டாடை. செவிகளில் பனையோலைக் குண்டலங்கள். மண்டபத்தின் வடகிழக்குப் பகுதியில் உள்ள அறை ஆழ்வார் பெருமக்களின் செப்புத்திருமேனிகளைக் கொண்டுள்ளது. பெருமண்டபத்தை அடுத்துள்ள முகமண்டபம் சிறிய அளவிலானது. வெறுமையாக உள்ள இதை அடுத்து இறைவன் கருவறை அமைந்துள்ளது.

**கருவறை**

அப்பக்குடத்தான் திருமுன் என்றழைக்கப்படும் இந்தக் கருவறையில் ஆதிசேடனின் கட்டுடல் மீது வடக்கில் தலை வைத்து தெற்கில் திருவடி நீட்டிப் படுத்திருக்கும் பள்ளி கொண்ட பெருமாளின் இடக்கை வயிற்றருகே உயர்ந்து கடகத்தில் உள்ளது. வலக்கை மேலுயர்த்தப்பட்டு படுக்கையை விட்டு நீங்கிய நிலையில் தரைக்காய்த் தாழ்ந்துள்ளது. இறைவனின் மார்புக்கு மேற்பட்ட பகுதி வல ஒருக்கணிப்புக் கொண்டு மேற்குப் பார்வையில் அமைய, கிரீடமணிந்த தலை இரண்டு தலையணைகளின் மீது சற்றே தூக்கலாகவும் வலப்புறம் திரும்பிய நிலையிலும் உள்ளது. திரயச்ரத்தில் உள்ள திருவடி கள் தலையணை ஒன்றைத் தொட்டவாறுள்ளன. செவிகளில் மகரகுண்டலங்கள். மார்பில் திருமறு. பெருமாளின் நீட்டிய வலக் கைக்குக் கீழிருக்குமாறு கருவறையின் வடபுறத்தே கருடாசனத்தில் வணங்கிய நிலையில் மார்க்கண்டேயர் காணப்படுகிறார்.

மார்க்கண்டேயரின் பின்புறம் கருவறையின் வடசுவரை ஒட்டியவாறு உள்ள வெள்ளிக் குடம் இறைவனுக்கான அப்பமிடும் குடமாகக் கூறப்படுகிறது. இது கொண்டே இறைவன் அப்பக்குடத்தான் என்றழைக்கப்படுகிறார். கருவறையின் தென்புறத்தே அர்த்தபத்மாசனத்தில் இறைவனை வணங்கிய நிலையில் நிலமகள் உள்ளார்.

அப்பால் ரங்கன் என்றழைக்கப்படும் உற்சவர் நின்ற கோலத்தில் வலக்கையில் காக்கும் குறிப்புக் காட்டி, இடக் கையை உருள்பெருந்தடிமேல் இருத்தியுள்ளார். பின்கைகளில் சங்கு, சக்கரம். வலப்புறமுள்ள திருமகள் வலக்கையை நெகிழ்த்தி, இடக்கையில் மலர் கொண்டுள்ளார். இடப்புறமுள்ள நிலமகள் வலக்கையில் மலர் கொண்டு, இடக்கையை நெகிழ்த்தியுள்ளார். இருவரும் கரண்டமகுடம் அணிந்துள்ளனர். இவர்கள் தவிர தீர்த்தபேரர், சந்தான கோபாலகிருஷ்ணன் திருமேனிகளும் உள்ளன.

**வளாகத்தின் புறச்சுவர்**

வெற்றுத்தளத்தின் மேலுள்ள மொத்தக் கட்டமைப்பின் புறச்சுவர்கள் ஒன்று போலத் தூண்களற்ற சுவரும் கூரை

யுறுப்புகளும் பெற்றுள்ளன. பெருமண்டபப் புறச்சுவர் வடக்கு, தெற்கு இருபுறத்தும் சாளரங்கள் பெற்றுள்ளது.

### கல்வெட்டுகள்

இக்கோயிலில் இருந்து படியெடுக்கப்பட்ட இரண்டு கல்வெட்டுகளுமே4 விஜய நகர அரசர் காலத்தவை. கி. பி. 1521ல் வெட்டப்பட்டுள்ள கிருஷ்ணதேவராயரின் கல்வெட்டு, தையலார் பிள்ளை திருப்பேர்நகரக் கோயில் சேனாபதி பண்டாரத் துக்களித்த வல்லநாட்டுப் பொக்கரசன்பேட்டை நீர் நிலம் இரண்டு வேலியை, மன்னரின் வாசலான மல்லப்ப நாயக்கரின் மகன் திம்மப்பநாயக்கர் சர்வமானியம் ஆக அறிவித்தமையைத் தெரிவிக்கிறது. சதாசிவராயரின் கி. பி. 1569ம் ஆண்டுக் கல்வெட்டு ஆளிய ராமைய்ய தேவ மகாராஜாவின் பெயரைத் தருவதுடன் வேப்பம்பட்டைச் சேர்ந்த நாயக்கர் சிலரின் பெயரையும் கிராம சாசனம் பற்றிய குறிப்புகளையும் தருகிறது. கல்வெட்டுப் பெரிதும் சிதைந்திருப்பதால் முழுத் தகவல்களையும் பெறக்கூடவில்லை.

### குறிப்புகள்

1. ஆய்வு நாட்கள் 12.12.1983,13.10.2009. ஆய்விற்குத் துணைநின்ற நா. சீனிவாச பட்டாச்சாரியார், சு. சேகர் ஆகியோருக்கு நன்றி. இந்தக் கோயில் பற்றிய முதல் கட்டுரை 1986 மார்ச்சு திருக்கோயில் இதழில் 'திருப்பேர்நகர்' என்ற தலைப்பில் வெளியாகியுள்ளது.

2. SII 7: 498.

3. நாலாயிர திவ்வியப் பிரபந்தம் 173, 205,1428-1437,1851,1857,2048, 2050, 2059, 2060, 2079, 2673, 2674, 2417, 3744-3754. 'திருப்பேர்க் கிடந்த', 'குன்றென்னத் திகழ் மாடங்கள் சூழ் திருப்பேரான்' எனும் பாசுர அடிகள் குறிப்பிடத்தக்கன.

4. ARE 1968-69:273-274.

---

# 31. ஆலம்பாக்கம்

அரியலூர் மாவட்டம் புள்ளம்பாடி திருமழபாடிச் சாலையில் ஏறத்தாழ 8 கி.மீ. தொலைவில் உள்ள ஆலம்பாக்கத்தில் மூன்று பழங்கோயில்கள் இன்றும் வழிபாட்டில் உள்ளன. அவற்றுள் கயிலாசநாதர் கோயில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் அணைப்பில் உள்ளது 1 எழுவர்அன்னையர் கோயில் பழஞ்சிற்பங்களை இழந்து புதுப்பொலிவுடன் செல்லியம்மன் கோயிலாகப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது. 2 அரியலூர் மாவட்டத்தின் ஒரே மாடக்கோயிலாய் ஊரின் மேற்குப் பகுதியில் விளங்கும் வரதராஜப் பெருமாள் கோயில்' 3 வழிபாட்டில் இருந்தபோதும் வடிவம் சிதறியுள்ளது.

### வெற்றுத்தளம்

விமானம், முகமண்டபம், முன்றில் என அமைந்துள்ள வரதராஜப் பெருமாள் கோயிலைத் தாங்கும் 4 மீ. உயர வெற்றுத் தளம் பாதபந்தத் தாங்குதளம், நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்று, ஆழமற்ற கூடுவளைவுகளுடனான கபோதம் கொண்டுள்ளது. விமானத்தைத் தாங்கும் பகுதியில் புறந்தள்ளிய நிலையில் ஏழு பத்திகள் உள்ளன. அப்பகுதியை அடுத்து உள்ளடங்கித் தொடரும் முகமண்டபம், முன்றில் இவற்றிற்கான வெற்றுத்தளம் ஐந்து பத்திகள் பெற்றுள்ளது. இருபிரிவுகளிலும் நடுப்பத்திகள் சாலைப்பத்திகளாய்க் கோட்டங்கள் பெற்றுள்ளன. மேற்குப்பகுதி பெருமளவிற்கு இடிந்து விழுந்துள்ளது.

விமானச் சுவர்க் கோட்டங்களில் தெற்கில் விஷ்ணுவும் வடக்கில் பதஞ்சலியும் முகமண்டபச் சுவர்க் கோட்டங்களில் தெற்கில் இலட்சுமியும் வடக்கில் சூரியனும் தாமரை மலரில் நின்றகோலத்தில் காட்சிதருகின்றனர்.

### சூரியன்

கரண்டமகுடம், பனையோலைக் குண்டலங்கள், அரைக் கச்சு இருத்தும் சிற்றாடை, இடைக்கட்டு, தோள், கை வளைகள் அணிந்து நிற்கும் சூரியனின் இருகைகளிலும் தாமரை மலர்கள். இக்கோட்டத்திற்கு மேலுள்ள மகரதோரண வளைவில் அமர்ந்துண்ணும் நிலையில் குரங்கு காட்டப்பட்டுள்ளது.

**இலட்சுமி**

கரண்டமகுடம், பனையோலைக் குண்டலங்கள், பட்டாடை அணிந்து காட்சிதரும் இலட்சுமியின் கைகளில் தாமரைகள் மகரதோரணத்தில் கரண்டமகுடம், பனையோலைக் குண்டலங்கள் அணிந்தவராய்த் தாமரையில் கால்களைக் கீழிறக்கிய நிலையில் காட்சிதரும் இலட்சுமியின் கைகளிலும் தாமரைகள். அவரது இருபுறத்தும் விளக்குகள் காட்டப்பட்டுள்ளன.

**பதஞ்சலி**

கிரீடமகுடம், பட்டாடை அணிந்தவராய் நிற்கும் பதஞ்சலியின் வலக்கை காக்கும் குறிப்புக் காட்ட, இடக்கை இடுப்பில் உள்ளது. அவரது தலைக்குப் பின் ஐந்து தலைப் பாம்பு படம் எடுத்த நிலையில் காட்டப்பட்டுள்ளது. மகரதோரணத்திலும் பதஞ்சலியே அர்த்தபத்மாசனத்தில் இடம்பெற்றுள்ளார்.

**விஷ்ணு**

கிரீடமகுடம், மகரகுண்டலங்கள், சரப்பளி, முப்புரிநூல், உதரபந்தம், பட்டாடை அணிந்தவராய் நிற்கும் விஷ்ணுவின் முன்கைகளில் வலக்கை காக்கும் குறிப்புக் காட்ட, இடக்கை இடுப்பில் உள்ளது. பின்கைகளில் வலப்புறம் எறிநிலைச் சக்கரம். இடப்புறம் சங்கு. முழுமையான அளவில் விளங்கும் மகரதோரணத்தின் வளைவில் உறங்கும் நிலையில் விலங்கொன்று காட்சிதருகிறது.

**விமானம், முகமண்டபம்**

தாங்குதளமற்ற நிலையில் அகலமான கம்புகளுக்கு இடையிலான கண்டம், நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர். வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகளுடன் கிழக்கு மேற்காக 7.97 மீ. அகலமும் தெற்கு வடக்காக 8. 67 மீ. நீளமும் கொண்டு விளங்கும் விமானச் சுவர்கள் ஐந்து பத்திகளாகப் பிரிந்துள்ளன. சாலைப்பத்தியிலுள்ள மகரதோரணத் தலைப்பிட்ட கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. அதே உறுப்புகளைப் பெற்றுள்ள முகமண்டபம் பத்திப்பிரிப்போ, கோட்டங்களோ பெறவில்லை.

### முன்றில்

சிதைந்த நிலையில் காணப்படும் முன்றிலின் கூரையை இருசதுர, நீள்கட்டுத் தூண்கள் வெட்டுப் போதிகைகளால் தாங்குகின்றன. தரையிலிருந்து முன்றிலை அடைய, கீழ்நிலையில் ஆறுபடிகளும் அடுத்து மேடையும் பின் இரண்டாம் நிலை யாகப் பதினொரு படிகளும் காட்டப்பட்டுள்ளன. இப்படிகள் அனைத்தும் தற்போது பெரிதும் சிதைந்த நிலையில் உள்ளன.

### கருவறை

இருசதுர, நீள்கட்டுத் தூண்கள் தாங்கும் முகமண்டபத்திலுள் இராமர், விஷ்ணு, கருடன் இவர்தம் பிற்காலச் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. கருவறையில் பின்சுவரை ஒட்டியுள்ள மேடையில் மகாவிஷ்ணு தாமரை இருக்கையில் சுகாசனத்தில் காட்சிதருகிறார். அவரது வலப்புறத்தே திருமகளும் இடப்புறத்தே நிலமகளும் தாமரை இருக்கையில் சுகாசனத்தில் வீற்றிருக்கின்றனர்.4 கிரீடமகுடம், மகரகுண்டலங்கள், சரப்பளி, முப்புரிநூல், ஸ்கந்தமாலை, உதரபந்தம், தோள், கை வளைகள், பட்டாடை அணிந்துள்ள பெருமாளின் பின்கைகளில் சங்கும் சக்கரமும் அமைய, வல முன் கை காக்கும் குறிப்பில் உள்ளது. இட முன் கை கடகமாக உள்ளது.

இறைவியர் இருவரும் கரண்டமகுடம், சரப்பளி, பட்டாடை அணிந்து வெளிக்கைகளை அருட்குறிப்பில் இருத்தியுள்ளனர். மகரகுண்டலங்களுடன் கச்சற்றிருக்கும் நிலமகளின் வலக்கையில் நீலோத்பலம். பனையோலைக் குண்டலங்களுடன் தோள், கை வளைகள் அணிந்து கச்சுப் பெற்றிருக்கும் திருமகளின் இடக்கையில் தாமரை.

### கல்வெட்டுகள்

இக்கோயிலில் இருந்து ஐந்து கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் காலத்தால் முற்பட்டதான முதலாம் பராந்தகரின் 38ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு (கி. பி. 945) காவிரியின் வடகரையில் இருந்த தந்திவர்ம மங்கலத்து சபையார் மேற்றளிப் பெருமானடிகளுக்குத் திருப்பலிப்புறமாக நெல்லங்காரநம்பி தேவபட்டர் உள்ளிட்ட பன்னிரண்டு அகரங்

களைச் சேர்ந்தவர்கள் அளித்த நிலத்துண்டுகளுடன் நக்கரை மூவன் குளம், கோவடிக் குளம் இவற்றின் கீழிருந்த விளை நிலங்களையும் இணைத்து இறையிலியாக்கித் தந்ததாகக் கூறுகிறது. இந்நிலங்களின் விளைவு கொண்டு கோயிலில் பன்னிரண்டு உவச்சர்கள் திருப்பலி கொட்டவும் இறைவனின் திருப்பள்ளி எழுச்சி, திருமஞ்சணம் இவற்றுக்கான செலவுகளை மேற்கொள்ளவும் முடிவுசெய்யப்பட்டது. 5

பரகேசரிவர்மரின் 11ம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டு"6 தந்திவர்ம மங்கலத்து ஆளும் கணத்தாருள் ஒருவரான கண்டேற்றுச் சன்னப்பெருமாள் சோமாசி மாற்பிடுகு ஏரியின் கீழ் இருந்த சிறு புன்சையாள் நிலத்தை சபையாரிடம் விலைக்குப் பெற்று இறையிலியாக்கித் திருமேற்றளிப் பெருமாளுக்கு நந்தாவிளக்கொன்று ஏற்றுவதற்காகத் திருவிளக்குப் புறமாக அளித்த தகவலைத் தருகிறது.

இராஜகேசரிவர்மரின் 12ம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டு' 7 மூத்த பவசேன கிரமவித்தன் தந்திவர்ம மங்கலத்து சபையாரிடம் இறையிலியாக நிலத்துண்டு ஒன்றை விலைக்குப் பெற்று அவ்வூரிலிருந்த திருவிசலூர்ப் பெருமானடிகளுக்குப் படையலிடவும் விளக்கேற்றவும் கொடை அளித்ததாகக் கூறுகிறது. கொடை நிலம் மாற்பிடுகு ஏரியின் கீழிருந்த விளைநிலமாகும்.

தெற்குச் சுவரில் காணப்படும் துண்டுக் கல்வெட்டு 8 உயிரிழந்த ஒருவரின் நினைவு போற்றிக் கோயிலில் விளக்கேற்ற நாற்பது ஆடுகள் கொடையளிக்கப்பட்ட தகவலைப் பகிர்ந்து கொள்கிறது. இராமப்பன் வடுகன் மழபாடி, சித்திரக்கூடம், திருவாய்ப்பாடி தேவன் ஆகிய பெயர்களைப் பெறமுடிகிறது.

தெற்குச் சுவரில் சிதைந்த நிலையிலுள்ள ஓய்சளர் காலக் கல்வெட்டு மூன்று பகுதிகளாக அமைந்துள்ளது' 9 முதல் பகுதி இராயமுகவணைக் கல்லும் பாக்கல்லு மூன்றும் அளித்த நென்மலி காவல் காணியுடைய பள்ளிகளில் கலகியகமுடையாள் சூற்றியைப் பெருமைப்படுத்துகிறது. பாடல் வடிவில் அமைந்துள்ள கல்வெட்டுப்பகுதி தந்திவர்ம மங்கலத்துக் கோயில்களை நெல்லை நகரைச் சேர்ந்த விட்டப்பன் புதுக்கு

வித்ததாகக் கூறுகிறது. விட்டப்பனின் பணியை 'நிலைகுலைந்த வகையெலாம் பருதி, மதி உள்ளளவும் அடைவில் நிலை நிற்க பரிந்து அவை புதுக்குவித்தான் வீரம் படைத்தருளும் ஒரு சத்திய வாசகன் மேதினி புரந்த பெருமாள் விளங்கு புகழ் நெல்லை நகரொடு அருளுநாதன் குமாரன் மேவு தமிழ் விட்டப்பன்' எனக் கல்வெட்டுப் புகழ்வது குறிப்பிடத்தக்கது.

மூன்றாம் பகுதி நரசிங்கதேவன் தண்டநாயக்கரில் தொண்டை மண்டலத்து மதுராந்தகத்து அறணப்புறத்து ஆதப்பிள்ளை தண்டநாயக்கன் மகன் வலியதண்டநாயக்கன் விமானத்தைத் திருப்பணி செய்ததாகக் கூறுகிறது.

**குறிப்புகள்**

1. இரா. கலைக்கோவன், 'மிதக்கும் கோயில்', காட்டுக்குள் ஒரு கலைக்கோயில், பக். 83- 109.

2. மு. நளினி, இரா. கலைக்கோவன், பெண்தெய்வ வழிபாடு தோற்றமும் வளர்ச்சியும், பக். 11- 33.

3. ஆய்வு நாட்கள் 10. 6. 1985, 12. 6. 2010. இக்கோயில் பற்றிய முதல் கட்டுரை, 'மோனத் தவத்திலொரு மாடமேற்றளி' என்ற தலைப்பில் 13. 10. 1985 தினமணிகதிர் வார இதழில் வெளியானது.

4. இக்கோயிலில் இருந்த இராமர் சிற்பம் தற்போது காணுமாறு இல்லை. சிற்பம் குறித்த விரிவான தரவுகளுக்குக் காண்க. 'மோனத் தவத்திலொரு மாடமேற்றளி, காட்டுக்குள் ஒரு கலைக்கோயில், பக். 31-38.

5. SII 26: 765.

6. SII 19:281.

7. SII 13.222.

8. SII 26: 761.

9. SII 26: 764.

----------------------------------------

# 32. எலவானசூர்க்கோட்டை

சிராப்பள்ளி சென்னை நெடுஞ்சாலையில் உளுந்தூர்ப் பேட்டைக்கு முன்னாக இடப்புறம் பிரியும் திருக்கோயிலூர்ச் சாலையில் 8 கி.மீ. பயணித்தால் எலவானசூர்க்கோட்டையை அடையலாம். ஊரின் நடுவே பெரியதொரு வளாகத்துள் சிறைப்பட்டிருக்கும் ஊர் பாகம் கொண்டருளியவர் கோயில் வட தமிழ்நாட்டில் காணப்படும் மாடக்கோயிலாகும்.'1 துணைத்தளம், பாதபந்தத் தாங்குதளம், வேதிகைத்தொகுதி, எண்முக அரைத்தூண்களும் குடப்பஞ்சரங்களும் தழுவிய சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், வெறுமையான வலபி எனக் கீழ்த்தளம் கருங்கல்லாலும் மேல் நான்கு தளங்கள் செங்கல்லாலும் ஆன நுழைவாயிற் கோபுரம் சிற்பங்களின்றிக் காட்சிதர, வளாகத்தின் தென்புறமுள்ள சபாமண்டபம் திருமணக் கூடமாகியுள்ளது.

**அம்மன் கோயில்**

வளாகத்தின் தென்புறம் கிழக்குப் பார்வையாக உள்ள பெரியநாயகி திருக்கோயில் விமானம், முகமண்டபம், பெருமண்டபம், முன்மண்டபம், முன்றில் பெற்று நீண்டுள்ளது. முச்சதுர, இருகட்டுத் தூண்கள் பூமொட்டுப் போதிகைகளுடன் கூரை தாங்கும் முன்றிலில் சாமுண்டியின் பழைமையான சிற்பம் இருத்தப்பட்டுள்ளது. சுகாசனத்தில் விரிசடை, பூட்டுக் குண்டலங்கள், சிற்றாடை, மண்டையோட்டுமாலை இவற்றுடன் காட்சிதரும் சாமுண்டியின் வல முன் கை முத்தலைஈட்டி ஏந்த, இட முன் கை தொடைமீதுள்ளது. பின்கைகளில் வலப்புறம் உள்ளது குறுவாளாகலாம். இடக்கை தலையோடு ஏந்தியுள்ளது.

முச்சதுர, இருகட்டுத் தூண்கள் வெட்டுத் தரங்கப் போதிகைகளுடன் கூரையுறுப்புகள் தாங்கும் முன்மண்டபத்தின் வடபுறத்தே கொற்றவையின் சிற்பம் இடம்பெற்றுள்ளது. கரண்டமகுடம், பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, பட்டாடை, கச்சு அணிந்து தாமரை மலரில் நிற்கும் இறைவியின் பின்னே மான் நிற்கிறது. சமபங்கத்திலுள்ள இறைவியின் முன்கைகளுள் வலக்கை காக்கும் குறிப்புக் காட்ட, இடக்கை கடியவலம்பிதத்தில் உள்ளது. பின்கைகளுள் வலக்கை எறி

நிலைச் சக்கரம் ஏந்த, இடக்கையில் சங்கு. செங்கல் கட்டுமான மாக விளங்கும் இம்மண்டபத்தின் புறச்சுவரை பாதபந்தத் தாங்குதளத்தின் மீது வளரும் நான்முக அரைத்தூண்கள் கூரை உறுப்புகளுடன் அலங்கரிக்கின்றன.

உருளைத்தூண்கள் வெட்டுப் போதிகைகளுடன் கூரை தாங்கும் பெருமண்டபம் வெறுமையாக உள்ளது. அதன் புறச்சுவர் விமானக் கட்டுமானம் ஒத்துக் கருங்கல் பணியாக உள்ளது. சிறிய அளவினதான முகமண்டப வாயில் வலபியில் பூதவரி இடம்பெற்றுள்ளது. கருவறையில் பெரியநாயகி பின்கைகளில் மலர் மொட்டுக்கள் ஏந்திக் கரண்டமகுடம், அணிகலன்கள், பட்டாடை இவற்றுடன் முன்கைகளைக் காக்கும் குறிப்பிலும் அருட்குறிப்பிலும் கொண்டு எழுந்தருளியுள்ளார்.

விமானக் கட்டமைப்பை ஒத்துள்ள முகமண்டபத் திண்ணையில் பின்னாளைய செப்புத்திருமேனிகள் இடம்பெற்றுள்ளன. அம்மன் விமானம் பாதபந்தத் தாங்குதளம், நான்முக அரைத் தூண்கள் தழுவிய சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் கொண்டு ஒருதள வேசரமாக அமைந்துள்ளது. கூரைவரை கருங்கல்லால் ஆன இதன் மேலுறுப்புகள் செங்கல்லால் கட்டப்பட்டுள்ளன.

**இரண்டாம் கோபுரமும் சுற்றும்**

பலித்தளம், கொடிமரம், சிறு அளவினதான நந்தி மண்டபம் பார்த்து, ஒரு தளக் கட்டுமானமாக விளங்கும் இரண்டாம் கோபுரம் வழி நுழைவாரைச் சுற்று மண்டபம் எதிர்கொள்கிறது. கோபுர கிரீவத்தில் சிவபெருமானும் உமையன்னையும் பிள்ளைகளுடன் வீற்றுள்ளனர். சுற்றின் வடமேற்கில் இறை ஊர்திகள் அமைய, தென்மேற்கில் இலிங்கத்திருமேனி, வள்ளி, தெய்வானையுடன் முருகன், இரண்டு பிள்ளையார் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று பத்துக் கைகளுடன் இடத்தொடையில் துணைவி அமரக் காட்சியளிக்கிறது.

துணைத் தளத்தின் மீது இரு வரிசை உருளைத் தூண்கள் வெட்டுப் போதிகைகளுடன் கூரை தாங்க வளரும் சுற்று மாளிகையின் கிழக்கில் கால பைரவர், சூரியன், முருகன், சனீசுவரன் இடம்பெற்றுள்ளனர். சுடர்முடி, பனையோலைக்

குண்டலங்கள், முப்புரிநூல் கொண்டு நிற்கும் கால பைரவரின் முன்கைகள் முத்தலைஈட்டி, தலையோடு ஏந்த, பின்கைகளில் உடுக்கையும் பாசமும் உள்ளன. பைரவரின் பின்னால் அவரது ஊர்தியான நாய் காட்டப்பட்டுள்ளது.

கோவிந்தராஜப் பெருமாளாகக் கோயிலாரால் அடையாளப் படுத்தப்பட்டுள்ள முருகன் சென்னி சூழ் நீள்மகுடம், சரப்பளி, சிற்றாடை, முப்புரிநூல், இடைக்கட்டு இவற்றுடன் பின்கைகளில் வஜ்ரம், அக்கமாலை கொண்டு, வல முன் கையில் மலர் ஏந்தியுள்ளார். இட முன் கை கடியவலம்பிதமாக உள்ளது.

மாளிகையின் தென்புறத்தே பழைமையான எழுவர் அன்னையர் தொகுதி சேர்ந்த கௌமாரி, நான்முகி சிற்பங்களுடன். விக்னேசுவரி சிற்பமும் இடம்பெற்றுள்ளது. சுகாசனத்தில் சென்னி சூழ் மகுடமும் சிற்றாடையும் கொண்டு கருங்கல் ஆசனத்தில் அமர்ந்துள்ள கௌமாரியின் பின்கைகளில் வஜ்ரமும் அக்கமாலையும் இடம்பெற்றுள்ளன. வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இட முன் கை தொடைமீது உள்ளது. நான்முகியும் சுகாசனத்தில் உள்ளார். சடைமகுடம், அரும்புச் சரம், முப்புரிநூல் அணிந்துள்ள அவரது பின்கைகளில் அக்க மாலையும் குண்டிகையும் இடம்பெற, வல முன் கை கடகத்தில் உள்ளது. இட முன் கை தொடைமீது அமர்ந்துள்ளது.

அர்த்தபத்மாசனத்தில் உள்ள விக்னேசுவரியின் தலையைக் கரண்டமகுடம் அணிசெய்ய, இடையில் சிற்றாடை. மார்பில் முப்புரிநூல். பின்கைகளில் கரும்புத்தோகையும் தந்தமும் அமைய, வலம்புரியாக உள்ள அம்மையின் வல முன் கை கடகத்தில் உள்ளது. இட முன் கை தொடைமீது அமர, வலத்தந்தம் உடைந்துள்ளது. இச்சிற்பங்களை அடுத்துப் பிள்ளையாரும் நால்வரும் உள்ளனர்.

**வெற்றுத்தளம்**

சுற்றின் நடுவில் அமைந்துள்ள மாடக்கோயிலைத் தாங்கும் வெற்றுத்தளம் துணைஉபானம், தாமரை உபானம்,கம்பு, அகலமான நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், கந்தர்வத்தலைகள் பெற்ற கூடுவளைவுகளுடனான கபோதம், பூமிதேசம் பெற்று

3.29 மீ. உயரத்துடன் விளங்குகிறது. வடக்கிலும் தெற்கிலும் மேற்கு முகமாக மேலேறும் படிகளுக்காக நன்கு புறந்தள்ளி உள்ள வெற்றுத்தளத்தின் மேல் இறைவிமானம், முகமண்டபம் இவற்றின் முன்னுள்ள பெருமண்டபத்தின் புறச்சுவர் நாற்புறத்தும் சூழ்ந்துள்ளது.

எண்முக அரைத்தூண்களால் அணைக்கப்பட்டுள்ள இச்சுவரின் மேல் வளரும் கூரையுறுப்புகளை வெட்டுப் போதிகைகள் தாங்குகின்றன. வெற்றுத்தளம் போலவே படிப் பகுதிகளில் புறந்தள்ளியுள்ள பெருமண்டபச் சுவரின் மேல் வடபுறத்தே மட்டும் செங்கல் கட்டுமானமாய்க் குடங்களற்ற சாலை காட்டப்பட்டுள்ளது. வடபுறத்தே பதினாறு படிகளும் தென் புறத்தே பதினைந்து படிகளும் உள்ளன.

வெற்றுத்தளத்தின் தென்பகுதியில் உள்ள கோட்டங்களில் பிள்ளையாரும் ஆலமர்அண்ணலும் இடம்பெற்றுள்ளனர். அர்த்தபத்மாசனத்தில் உள்ள வலம்புரிப் பிள்ளையாரின் முன் மோதகப்பெட்டி உள்ளது. சரப்பளி, முப்புரிநூல் அணிந்துள்ள அவரது இடத்தந்தம் உடைந்துள்ளது. பின்கைகளில் கரும்புத் தோகையும் பாசமும் அமைய, வல முன் கை காக்கும் குறிப்பில் உள்ளது. இட முன் கை தொடை மீது இருத்தப்பட்டுள்ளது.

பின்னாளைய மண்டப இணைப்புப் பெற்றுள்ள கோட்டத்தில் சடைப்பாரம், சரப்பளி, உருத்திராக்கமாலை, முப்புரிநூல், உதரபந்தம், சிற்றாடை அணிந்து வலச்செவியில் மகரகுண்டலமும் இடச்செவியில் பனையோலை குண்டலமும் கொண்டு ஆலமர்அண்ணல் வீராசனத்தில் உள்ளார். வல முன் கை உடைந்துள்ளது. இ ட முன் கையில் சுவடி. பின்கைகளில் அக்கமாலை, தீச்சுடர்.

**சண்டேசுவரர்**

சுற்றின் கிழக்கில் மண்டபக் கட்டுமானமாய்த் தென்பார்வையாக உள்ள சண்டேசுவரர் திருமுன் முன்றில் பெற்றுள்ளது. உள்ளே சுகாசனத்தில் சடைப்பாரம், பனையோலைக் குண்டலங்கள், தோள் கை வளைகள், சரப்பளி, சிற்றாடை அணிந்தவராய் வீற்றிருக்கும் சண்டேசுவரரின் இடக்கை தொடை மீது அமர,

வலக்கையில் மழு. இத்திருமுன்னை அடுத்துள்ள கிணறு அலங்காரப் புறச்சுவர் பெற்றுள்ளது.

**மேல் நடை மண்டபம்**

இறைவன் விமான வளாகத்தை அடைய தென்மேற்கிலும் படித்தொடர் உள்ளது. பதினெட்டுப் படிகள் பெற்றுள்ள இத்தொடரின் கீழ்ப்படிகளைத் தென்புறத்தே துளைக்கைச் சுவர் அணைத்துள்ளது. இந்தத் தொடரை அடுத்து மேலே விரியும் நடைமண்டபம் தெற்கிலும் வடக்கிலும் சுற்று மாளிகைக் கூரையின் மீது செல்ல வழி அமைக்கிறது. நடை மண்டபத்தின் நடுப்பகுதி இறைவன் திருமுன்னுக்கு முன்னுள்ள மண்டபச் சுற்றின் வாயிலாக அமைந்துள்ளது. நடை மண்ட பத்தை உருளைத் தூண்கள் வெட்டுப் போதிகைகளுடன் தாங்க, தென்புறத்தே மட்டும் நான்கு முச்சதுர, இருகட்டுத் தூண் கள் பூமொட்டுப் போதிகைகளுடன் இப்பணியில் பங்கேற்கின்றன. இத்தூண்களின் சதுரங்களில் சிற்பங்கள் மிக்குள்ளன. கூரையின் இப்பகுதியில் தாமரைமலர் வடிக்கப்பட்டுள்ளது.

மண்டபச் சுற்றின் விரிந்த மேற்குப் பகுதியை உருளைத் தூண்கள் வெட்டுப் போதிகைகளுடன் கூரையுறுப்புகள் கொண்டு தாங்குகின்றன. வெறுமையாக உள்ள இதனை அடுத்து வடக்கிலும் தெற்கிலும் இறைவன் விமானத்தைச் சூழும் குறுகலான உள்சுற்றின் கூரையை நான்முகத் தூண்கள் வெட்டுப் போதிகைகளுடன் தாங்குகின்றன. கூரை பலகைக் கற்களால் மூடப்பட்டுள்ளது.

**விமானம்**

சாலைப் புறந்தள்ளலுடன் 5. 34 மீ. பக்கமுள்ள சதுரமாக அமைந்துள்ள இருதள வேசர விமானம் துணைஉபானம், உபானம், தாமரை ஜகதி, பிரதிவரி கொண்டு எழுகிறது. குமுதம் இடம்பெறவில்லை. சதுர பாதங்களின் மீதெழும் எண்முக அரைத்தூண்கள் சுவரைத் தழுவியுள்ளன. அவற்றின் மீதுள்ள வெட்டுத் தரங்கப் போதிகைகள் கூரையுறுப்புகள் தாங்குகின்றன. சாலைப் புறந்தள்ளல்கள் கோட்டங்களின்றி அமைய, போதிகைகளும் வாஜனம், வலபி ஆகிய கூரையுறுப்புகளும் சுற்றுக் கூரைத்தளத்தில் மறைய, மேலே கபோதம், பூமிதேசம் வேதிகை

இவையும் அவற்றின் மேல் சாலைப் புறந்தள்ளலுடன் செங்கல் கட்டுமானமாக இரண்டாம் தளமும் காட்டப்பட்டுள்ளன. நான்முக அரைத்தூண்கள் அணைத்துள்ள இரண்டாம் தளத்தின் கர்ணபத்தி, சாலைப்பத்தி இவற்றில் காட்டப்பட்டுள்ள கோட்டங்கள் முப்புறத்தும் வெறுமையாக உள்ளன. கிரீவ கோட்டங்களில் தெற்கில் ஆலமர்அண்ணலும் மேற்கில் விஷ்ணுவும் வடக்கில் நான்முகனும் கிழக்கில் சிவபெருமானும் இடம்பெற்றள்ளனர்.

**முகமண்டபம்**

விமானக் கட்டமைப்பிலுள்ள முகமண்டபத்தில் சாலைப் புறந்தள்ளலோ, கோட்டங்களோ இடம்பெறவில்லை. அதன் முன்னுள்ள முன்றில் வடக்கிலும் தெற்கிலும் படிகள் கொண்டுள்ளது. முகமண்டப வாயிலின் இருபுறத்தும் மேடைகளின்மீது காவலர் நிற்கின்றனர். கருவறை நோக்கி ஒருக்கணித்துள்ள காவலர் இருவருமே கீர்த்திமுகத்துடனான சடைமகுடம், கோரைப் பற்கள், அணிகலன்கள், சிற்றாடை கொண்டுள்ளனர். சிம்மக் குண்டலங்கள் அணிந்துள்ள தெற்கரின் சடைமகுடத்தின் மேல் முத்தலைஈட்டி காட்டப்பட்டுள்ளது. வலக்காலைத் தரையில் ஊன்றி, இடப்பாதத்தை மழு மீது இருத்தியுள்ள அவரது வல முன் கை அச்சுறுத்த, இட முன் கை வேழ முத்திரையில் உள்ளது. பின்கைகள் வியப்புக் காட்டிப் போற்றுகின்றன.

யானைக் குண்டலங்கள் அணிந்துள்ள வடக்கர் இடக் காலைத் தரையில் ஊன்றி, வலப்பாதத்தை மழு மீது இருத்தியுள்ளார். அவரது வல முன் கை அச்சுறுத்த, இட முன் கை மழு மீது உள்ளது. பின்கைகள் வியந்து போற்றுகின்றன. முகமண்டப வலபியைப் பூதவரி அலங்கரிக்கிறது. கருவறையில் இறைவன் சதுர ஆவுடையாரின் மீது பேரளவு பாணத்துடன் இலிங்கத் திருமேனியராய் எழுந்தருளியுள்ளார்.

**மேற்சுற்றுவழி**

வெற்றுத்தளத்தின் வடக்கிலும் தெற்கிலும் உள்ள படிகள் விமானத்தைச் சூழ்ந்துள்ள சுற்றில் நுழைய வழியமைக்கின்றன. தெற்கில் இவ்வழி அடைபட்டுள்ளது. அங்கே சிவபெருமானும் உமையும் தனிச்சிற்பங்களாக நிறுத்தப்பட்டுள்ளனர். சடை

மகுடம் அணிந்துள்ள இறைவனின் வல முன் கை சிதைந்துள் ளது. இட முன் கை கடகத்தில் உள்ளது. பின்கைகளில் மான், மழு. கரண்டமகுடம் அணிந்துள்ள இறைவியின் வலக்கை மலரேந்த இடக்கை நெகிழ்ந்துள்ளது. இச்சிற்பங்களின் பின்னுள்ள சுவரில் நந்தியும் அன்னமும் வரையப்பட்டுள்ளன. சுவரின் மேற்பகுதியில் காணப்படும் பதக்கத்தில் ஊர்த்வஜாநு ஆடற்கோலத்தில் பிள்ளையார் சிற்பமாகியுள்ளார்.

**கல்வெட்டுகள்**

இக்கோயிலில் இருந்து படியெடுக்கப்பட்டுள்ள எண்பத்து மூன்று கல்வெட்டுகளுள் நாற்பத்தொன்பதின் பாடங்கள் தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி 22ல் வெளியாகியுள்ளன. முப்பத்து நான்கு கல்வெட்டுகளின் பாடச் சுருக்கங்கள் 1937-38ம் ஆண்டுக் கல்வெட்டறிக்கையில் உள்ளன. அவற்றுள் நாற்பத்தெட்டுக் கல்வெட்டுகள் சோழர் காலத்தவை. முதலாம் இராஜராஜரிலிருந்து மூன்றாம் இராஜராஜர் ஆட்சிக் காலம் வரையிலான இக்கல்வெட்டுகளுள் ஒன்று இராஜமகேந்திரன் ஆட்சிக் காலத்திலும் மற்றொன்று சோழக் கேரள தேவரின் மூன்றாம் ஆட்சியாண்டிலும் பதிவாகியுள்ளன. நான்கு கல்வெட்டுகளே இரண்டாம் பாண்டியப் பேரரசுக் காலத்தவை. பன்னிரண்டு கல்வெட்டுகள் விஜயநகர அரசர்களின் ஆட்சிக் காலத்தே வெட்டப்பட்டுள்ளன. ஒரு கல்வெட்டு நாயக்கர் காலத்திலும் இரண்டு கல்வெட்டுகள் கோப்பெருஞ்சிங்கரின் முப்பதாம் ஆட்சியாண்டிலும் பதிவாகியுள்ளன. பதினாறு கல்வெட்டுகள் மன்னர் பெயரின்றிக் காணப்படுகின்றன.

முற்சோழர் கல்வெட்டுகளில் ஊருடைய மகாதேவர் என்றழைக்கப்படும் இறைவன் பின்னாளில் ஊர் பாகம் கொண்டருளிய நாயனாராகப் பெயர் மாற்றம் பெறுகிறார். இறையாநரையூர் என்று பெரும்பாலான கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் இவ்வூர் மிகப் பிற்பட்ட காலத்திலேயே எலவானசூர் எனும் பெயரை அடைந்துள்ளது. மலாடான ஜனநாத வளநாட்டுப் பரனூர்க் கூற்றத்து பிரமதேயமாகக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் இறையாநரையூர் சோழக் கேரளச் சதுர்வேதிமங்கலம் என்றும் அறியப்பட்டது.

**வளநாடு, நாடு, ஊர்**

ஜயங்கொண்ட சோழ மண்டலம், விருதராஜபயங்கர வளநாடு இவற்றுடன் செம்பூர்க் கோட்டம், மணவிற் கோட்டம், கிழார்க் கூற்றம், வடநரையூர்க் கூற்றம், பரவைநாடு, உவற்றூர்நாடு,ஆவூர்நாடு, மேற்காநாடு, இருங்கோளப்பாடி நாடு, திருமுனைப்பாடி நாடு எனும் வருவாய்ப் பிரிவுகளும் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளன.

எழுபத்து ஐந்து ஊர்ப்பெயர்களைத் தரும் இக்கல்வெட்டுகளில் குடி என்ற பின்னொட்டுடன் முடியும் ஊர்ப்பெயர் ஒன்றேனும் அமையவில்லை. மங்கலம் என்ற பெயரில் இருந்த ஒன்பது ஊர்களுள் இரண்டு, சதுர்வேதிமங்கலங்களாக அமைந்தன. இருபத்தொன்பது ஊர்கள் ஊர் என்ற2 பின்னொட்டுக் கொண்டிருந்தன' 3 கல்யாணபுரம், சோழ பாண்டியபுரம் எனும் இரண்டு ஊர்களும் வணிகர் குடியிருப்புகளைப் பெற்றிருந்தன. இரண்டு ஊர்கள் நல்லூர் எனும் பின்னொட்டுக் கொள்ள,'4 முப்பத்து மூன்று ஊர்கள் பல்வேறு பின்னொட்டுக்களைப் பெற்றிருந்தன 5 அவற்றுள் பருந்தல், மலையவிச்சாதிரநல்லூர் என்றும் அறியப்பட்டது.

**அரச ஆணைகள்**

அரச ஆணைகளாக உள்ள கல்வெட்டுகளில் கோப்பெருஞ்சிங்கரின் முப்பதாம் ஆட்சியாண்டிற்குரியவை இரண்டு 6 வாணகோவரையர் வன்நெஞ்ச நாயனார், பொன்பரப்பின வாணகோவரையர் ஆகிய இருவர்தம் நிலக்கொடைகளை இறையிலியாக்கி மன்னர் இட்ட உத்தரவுகளில் திருமந்திர ஓலைகளாக விழுப்பாதராயரும் பொன்பரப்பின வேளாரும் வெளிப்படுகின்றனர். கேள்வி முதலிகளாகச் சிங்களராயர், இராஜவீர ராயர், இராஜேந்திர சோழ பிரம்மமாராயர், மதுராந்தக பிரம்ம மாராயர், குருகுலராயர் ஆகியோர் கையெழுத்திட்டுள்ள இத்திரு முகங்களில் புரவுவரியாரும் எழுத்திட்டுள்ளனர்.

முதற் குலோத்துங்கரின் முப்பத்தைந்தாம் ஆட்சியாண்டில் வெளியான அரச ஆணை புரவுவரித் திணைக்கள நாயகம், திணைக்கள முகவெட்டிகள் ஆகியோர் பெயர்களைத் தருகின்றது.7

விக்கிரமசோழரின் நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு மன்னர் முடிகொண்ட சோழபுர அரண்மனையின் உள்ளாலை ஆட்டத்து வெளி மேலை மண்டபமான இராஜேந்திர சோழனில் சேதிராஜன் எனும் இருக்கையில் அமர்ந்திருந்தபோது வெளியிட்ட அரச ஆணையாக அமைந்துள்ளது.8 இவ்வாணையிலும் புரவுவரித் திணைக்களம் சார்ந்த நாயகங்கள், முகவெட்டிகள் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

இரண்டாம் இராஜராஜர் ஆயிரத்தளி அரண்மனை உள்ளாலை ஆட்டத்து வெளியில் பல்லவராயன் மண்டபத்தே இருந்தபோது கிளியூர் மலையமான் நீரேற்றான் மலையகுலராயன் பரிந்துரையை ஏற்று நான்கு ஊர் நிலங்களை இணைத்து இராஜராஜ மங்கலம் எனப் பெயரிட்டு தேவதான இறையிலியாகக் கோயில் வழிபாட்டிற்கு வழங்கியதைச் சுட்டும் அரச ஆணை மன்னரின் பதின்மூன்றாம் ஆட்சியாண்டில் பிறப்பிக்கப்பட்டதாகும். இவ்வாணையில் ஸ்ரீகரணநாயகங்கள் கையெழுத்திட்டுள்ளனர்.9

இவ்வூர்க் கல்வெட்டுகளில் மலையமான்கள், வாணகோவரையர்கள், காடவராயர்கள் முதலிய சிற்றரசர்கள் பரவலாக இடம்பெற்றுள்ளனர். கிளியூர் மலையமானுக்கும் பொன்பரப்பின வாணகோவரையனுக்கும் இடையில் நிகழ்ந்த ஒப்பந்தம் இருவர்தம் நாட்டு எல்லைகளையும் தீர்மானிப்பதுடன், அரச காரியங்களில் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு நல்க அவர்கள் முடிவெடுத்தமையையும் தெரிவிக்கிறது."10

**வரிகள்**

பல கல்வெட்டுகள் அந்நாளில் வழக்கில் இருந்த வரிகள். வரி பெறும் முறைகள் பற்றிப் பேசுகின்றன. கடமை, குடிமை, அந்தராயம், அதரவிநியோகம், கார்த்திகைப் பச்சை, சந்தி விக்கிரகப்பட்டி, தெண்டம், குற்றத்தெண்டம், தறியிறை, தட்டார் பாட்டம், செட்டிறை, செக்கிறை, ஏரிமீன்பாட்டம், மாவடை, வெட்டிமுட்டையாள், நல்லெருது, நற்பசு, சாற்கல்லாயம், கருவிப்பணம், திரிகைஆயம், ஆயம், வழிச்சாரி, மாதரிகம், தலையாரிக்கம், செக்கோட்டு, சோடி, சூல வரி முதலிய வரிகள் பெறப்பட்டன.

கிராம பிடாரனாகப் பொறுப்பேற்ற கைக்கோள முதலி காங்கேயராயர் இறையிலித் தறி கொள்ள, சூரப்ப நாயக்கரின் பிரதானி வெங்கப்பையர் அனுமதி அளித்தமையை ஒரு கல்வெட்டு தெரிவிக்கிறது."11 திரிபுராரி தேவரின் ஆணைப்படி நாகதே அன்னகளுக்கு ஒதுக்கப்பட்ட நிலம் பழைய முறைப்படிப் பகுக்கப்பட்டு வரிகள் பெறுவது எளிதாக்கப்பட்டது.12 கிருஷ்ணதேவராயர் தம்முடைய திக்விஜயத்தை முன்னிட்டு வரி விலக்களித்த கோயில் நிலங்களில் இறையாநறையூர் நிலங்களும் அடக்கம்.

அரச நாராயணன் ஏழிசை மோகனான ஜனநாத கச்சியராயன் இறைவனின் சாத்துகைகளுக்காகச் செட்டியார், வாணியர், பணிசெய் மக்கள் ஆகியோர் இறுத்து வந்த கீழிறையான அந்தராயம், தறியிறை, தட்டார்பாட்டம் ஆகியவற்றைக் கோயில் பண்டாரத்திற்கு அளித்தார். இவ்வரிகளைத் தண்டும் பொறுப்பு கோயில் ஸ்ரீகாரியத்திடம் ஒப்புவிக்கப் பட்டது! 13

கிளியூர் மலையமான் புத்தூரிலிருந்து தாம் பெற்று வந்த கடமை, பாடிகாவல் இவற்றையும் பணிசெய் மக்கள், உழுகுடிகள் செலுத்தி வந்த ஊர்த் தறியிறை, தட்டார் பாட்டம் இவற்றையும் கோயில் நிலங்களில் இருந்து பெறப்பட்ட வெட்டி முட்டையாள், நஞ்சைக் கடமை ஆகியவற்றையும் ஊர் சபை பெற்று இறைவனின் அமுதுபடி, மேற்பூச்சு இவற்றிற்காகப் பண்டாரத்தில் சேர்க்கவேண்டுமென உத்தரவிட்டார். 14 ஊர்க் கணக்கர்கள் இளமை வேங்கடமான பண்டிதப் பிரியன், இளமை கருமாணிக்கமான பட்ட பிரியன் ஆகியோர் வரிகட்டாமல் ஓடிப் போனமையால் அவ்வரியைக் கட்டுவதற்காக அவர்களுக்குரிய நிலம், கிணறு, மனை ஆகியவற்றை சபை கோயிலுக்கு விற்றது. அதன் வழி வந்த பொருள் அரையன் பொன்னம்பலக் கூத்தன் எழுந்தருளுவித்த பள்ளியறை நம்பிராட்டிக்கு வழிபாடு, படையல் இவற்றிற்காக அளிக்கப்பட்டது 15

**வேளாண்மை, நீர்ப்பாசனம், அளவைகள்**

வேளாண் நிலத்துண்டுகள் பல்வேறு பெயர்களால் அறியப்பட்டன. நாவல் குண்டு, வேப்பங்குண்டு, புளியங்குண்டு,

புளியஞ்செய், காஞ்சிரஞ்செய், இலுப்பஞ்செய் என விளைவு சார்ந்தும் குளச்செய், ஏரிச்செய் எனப் பாசனம் சார்ந்தும் கடம்பன் தடி, நீலிப்பெருஞ்செய் எனத் தனியர் பெயர் கொண்டும் நிலங்கள் அமைந்தன. குளம், ஏரி, கிணறு இவை வாய்க்கால், வதிகள் வழி நிலங்களுக்கு நீரளித்தன.

நல்லரைசூர்க் குளம், பெருங்குளம், வானவன்மாதேவிப் பேரேரி, கேரளாந்தகப் பெரிய ஏரி இவற்றுடன் நின்மலன்கால், ஏரிப்பெருங்கால், ஏற்ற வாய்க்கால், பெருவாய்க்கால், உத்தம சோழ வதி எனும் நீர்வழிகளும் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளன. கிணற்று நீர் ஏற்றம் வைத்து இறைக்கப்பட்டது ஏரி நீர் உரிமை குறித்து ஒரு கல்வெட்டுப் பேசுகிறது."16 ஊர் பாகம் கொண்டான் மரக்கால், பொத்தகக் கோல் என்பன அளவைகளாகப் பயன்பட்டன-

**கோயிற் கட்டுமானம்**

ஆளப்பிறந்தான் ஏழிசை மோகனான குலோத்துங்க சோழக் காடவராயர் ஏழிசை மோகன் திருமண்டபம், திருமாளிகை எழுப்பித் திருப்பணிக்கும் கொடையளித்தார். வெங்கப்ப இலிங்கராஜய்யன் கோபுரம், கோயில் திருப்பணிகளுக்குக் கொடையளித்தார். கூடலூர் ஆளப்பிறந்தான் இராஜகம்பீர காடவராயனான அழகிய பல்லவன் சாடும் பெருமாள் கோயில் வெளிக்கோபுரத்தை எழுப்பினார். கோபுரத்தின் முன் திருமாளிகை செய்தவராகக் கிளியூர் மலையமான் சூரியன் நீரேற்றான் எதிரிகள் நாயனான இராஜராஜ மலையகுலராயரை ஒரு கல்வெட்டுச் சுட்டுகிறது."17 பாண்டிய நாட்டு நாள் குறிச்சியைச் சேர்ந்த திருமாலிருஞ்சோலை நின்றான் மழவ ராயன் பிள்ளை மீனன் இறைவன் வீதி உலாவுக்குத் தடையாக இருந்த பாறையை அகற்றித் திருவீதி செய்தான்.

**வழிபாடு, படையல், விழா**

பொன்னின் சிவந்தான் திருமுடிக்காரி கோயிலில் தாம் எழுந்தருளுவித்த சொக்கநாயினாருக்கு வழிபாடு செய்யவும் படையலிடவும் வாய்ப்பாக வேங்கைபாடி எனும் ஊரைக் கொடையளித்தார். பட்டாலகன் சிந்தாமணி இறைவன் வழிபாட்டிற்கும் படையலுக்குமாக நிலமளித்தார். முனைய

தரையன் இராஜராஜ காடவராயன் தாம் பெற்ற வரியினங்களுள் சிலவற்றை இறைவனுக்கான அமுதுபடி, மேற்பூச்சு, பரிசட்டம், விளக்கு, திருநாள்படிகள் இவற்றிற்காகக் கொடை பளித்தார்.

இறைவனின் காலை முழுக்காட்டலுக்கு 36 பொன், 5 பணம் தந்த பொம்மு நாயக்கர் செட்டி ஏந்தல் தாங்கலில் நிலமும் அளித்தார். இக்கொடை கிருஷ்ணப்ப நாயக்கருக்குப் புண்ணியமாகச் செய்யப்பட்டது. மலாடுடையார் பராந்தகன் யாதவ வீமனான உத்தமசோழ மலாடுடையார் இறைவனுக்கு நள்ளிரவுத் திருஅமுது, அக்காரடலைத் திருவமுது அளிக்க வாய்ப்பாக 102 பசுக்களும் நிலமும் தந்தார். வீரராஜேந்திரபுரத்து திருத்தான்தோன்றீசுவரத்துத் தேவரடியாள் இராஜசுந்தரி இக்கோயில் இறைவனின் சிறுகாலைப் போனகத்திற்கு நல்லரைசூரில் நிலமளித்ததுடன் 45 கலம் நெல்லும் முதலாகத் தந்தார்.18

கோயிலில் இருந்த அமரபுயங்க தேவருக்கு மூன்று சந்திக் கும் திருவமுது அளிக்க வாய்ப்பாக உத்தமசோழ மலாடுடையார் அளித்த 120 காசுக்கு சபை நிலம் வாங்கிக் கோயிலுக்கு அளித்தது. பால், நெய் இவற்றிற்காக 102 பசுக்களும் வழங்கப்பட்டன. இறைவனின் ஆனைந்து முழுக்காட்டிற்காகக் கச்சியராயர் மகன் காளத்திநாதன் ஐந்து பசுக்களை அளித்தார். பள்ளியறை ஆளுடையார் ஞாயிறுகளில் புறம்பே எழுந்தருளி மாணிக்கவாசகரின் சாழல் கேட்டு, அமுதுண்டு, கோயில் சூழ எழுந்தருளும் செலவினங்களுக்காக ஒரு கலம் மூன்று குறுணி நெல் ஒதுக்கப்பட்டது. இதைப் பெறத் திருநாமத்துக்காணியாக நிலம் வாங்கப்பட்டது."19 இறைக்கோயில் படையல், வழிபாடு இவற்றிற்காகச் சூரியன் நீரேற்றான் பணம் கொடையளித்தார்.

அரசரின் நலம் கருதி திருமலைதேவ மகாராயர் கட்டளை ஏற்று போகைய்ய தேவ மகாராயர் போகீசுவரமுடைய தம்பிரானார் வழிபாட்டிற்குச் சீயமங்கலத்தைக் கொடையாகத் தந்தார். திருக்கோயிலூர் நரசிங்கமுடையார் கோயில் வழிபாட்டிற் காகப் பன்னிரண்டு பற்று நாட்டவரால் குமுளி வரிகளாக 36 பொன், குதிரைக் காணிக்கை நீக்கிய ஐந்தே கால் பணம் இவை போகைய்ய தேவ மகாராயர் முன்னிலையில் கச்சியராயரால்

அளிக்கப்பட்டன. பழங்கூர்ப் பற்று நாட்டுக் கணக்கு புழு வினைப் பெருமாள் இக்கல்வெட்டின் வழி வெளிப்படுகிறார்

வென்று மாலையிட்டார் கலியுகராமத் தொண்டைமானார் பரிந்துரைக்க, ஆனந்தத் தாண்டவப் பெருமாள் தொண்டைமானார் கோயில் தேர்த் திருவிழாச் செலவினங்களுக்காக வீர மங்கலத்தைக் கொடையாகத் தந்தார். பெரிய திருநாளில் ஆறாம் நாள் இறைவன் தோப்பில் எழுந்தருளும் நிகழ்ச்சிக்குரிய செலவினங்களுக்காகவும் தோப்புப் பணி செய்வார் வாழ்நாள் ஊதியமாகவும் வேலூர் பொம்முநாயக்கர் கிருஷ்ணப்ப நாயக்கருக்குப் புண்ணியமாகப் பிச்சாண்டாங்குறிச்சித் தாங்கலை சர்வமானியமாக அளித்தார்.

இறைவனின் பங்குனி வேட்டை, புரட்டாசி வேட்டை இவற்றிற்கும் இவற்றிற்கான தீர்த்தங்களுக்கும் மார்கழித் திருவாதிரை தீர்த்தத்திற்கும் தாழங் குட்டத் தீர்த்த மண்டபத்திலே இறைவன் எழுந்தருளி அமுது செய்ய சூரநாயக்கரான நானூற்றுவப் பல்லவரையர் நிலமளித்தார். கிளியூர் மலையமான் பெரியுடையார் சூரியதேவன் சோழேந்திர சிங்க மலைய குலராயன் பங்குனித் திருநாள் எழுச்சிப்படிக்குக் காப்புநாண் சாத்த இறைவனுக்கு அரைக்கால் பொன்னும் இறைவிக்குப் பன்னிரண்டு பொன்னும் அளித்தார்.

இறைவனுக்கான இரவுச்சந்தி அமுது, கறியமுது, போனகம், விளக்கெண்ணெய், செங்கழுநீர்ப்பூ 4,000, அறஞ்செய்ய அரிசி, உப்பு, எள், ஐந்து அந்தணர்களுக்குச் சோறு, சைவாச்சாரியாருக்கு உணவு, இறைவன். ஊருக்கு எழுந்தருளும்போது உணவு, கருப்புக்கட்டி முப்பது பலம், அமாவாசை தோறும் நிவந்தம் இவை அளிக்க வாய்ப்பாகப் புலியுண்ணிப்பாடியில் நிலம் அளிக்கப்பட்டது 20

நாவலூர் வணிகர் ஆட்கொண்ட தேவன் கொண்டப் பிள்ளை பத்தாம் திருநாளில் இறைவன் இறைவன் திருவனந்தல் எழுந்தருளி ஆஸ்தான மண்டபத்து இருந்து, தீர்த்தம் தந்து, சாயற்பொழுது உலாவிற்கு ஆடியருள அமுதுபடி, சாத்துபடி, மேற்பூச்சு, பனிநீர், கற்பூரம், கத்தூரி, சாந்து, குங்குமம், செங்கழு நீர் வெள்ளைப்பூ இவையும் திருமாளிகை எழுந்தருளித்

திருவுலா வர விளக்கெண்ணெயும் அளிக்க வாய்ப்பாக ஒரு நாளுக்குப் பத்துப் பணம் என நான்கு நாட்களுக்கு நாற்பது பணம் தந்தார். அத்துடன், சபையாரில் எடுத்தழகியாரான சோமிதேவ பட்டர் வரிகட்ட முடியாது ஓடிப்போக, அவருக்குப் புணையாக நின்றவர் நிலத்தை விற்க, கொண்டப்பிள்ளை அந்நிலத்தை வாங்கித் திருநாமத்துக்காணியாகக் கோயிலுக்கு அளித்தார்."21

ஆளப்பிறந்தார் மோகனான நாலுதிக்கும் வென்றான் இராஜராஜக் காடவராயன் புராட்டாசித் திருவோண விழாவிற்கு தமக்குரிய மலையவிச்சாதிர நல்லூர் சார்ந்த பாடிகாவல், தறியிறை, தட்டார் பாட்டம், அந்தராயம், அதரவிநியோகம் ஆகியவற்றைத் தந்தார். இறைவனுக்கு நந்தவனம் அமைக்க நிலக்கொடை வழங்கப்பட்டது. அஸ்திரதேவருக்கு நந்தவனப் புறமாகவும் பூக்கட்டுவானுக்கு வாழ்வூதியமாகவும் வசிஷ்டன் திருவரங்கன் நிலமளித்தார். நந்தவனத்தைத் திருத்தவும் பூப்பறிக்கவும் அடியாள் வெள்ளாளன் தாய் திருவெண்காடன் பணியமர்த்தப்பட்டார். அவர் நிலத்தில் விளைந்த கீழ்ப்பயிரில் நாள்தோறும் கோயிலுக்குக் கறியமுது அளித்தார்.

பெரும்பூசை, திருப்பணி இவற்றிற்காகச் செம்பியன்மாதேவி ஊரின் வருவாய் ஒதுக்கப்பட்டது. விநாயகர், கூத்தாடும் தேவர், பிராட்டி, சேத்ரபாலர் திருமேனிகளுக்குத் தூணி அரிசி, இரு தூணிப்பதக்கு நெல், நானாழி நெய், பாக்கு 200, வெற்றிலை 100 பற்று, கறியமுது இரண்டு நிறை, தயிர், திருக்கொடிச் சாந்து, உத்திரம் கொண்டு சிறுகாலைச் சந்தி அமைக்கக் கோயில் சிவஅந்தணர்கள் ஒப்பினர். தாங்கள் பெற்றுக் கொண்ட பற்றுகளுக்கான உள்வரியாக அரைக்காலுக்கு உட்பட்ட பொன்னும் திரமம் ஒன்றும் வழங்கவும் அவர்கள் இசைந்தனர்.22

**விளக்குக் கொடை**

கோயிலில் சந்திவிளக்கொன்று எரிக்க வெள்ளை வாரண நம்பி 22 காசுகள் அளித்தார். நந்தாவிளக்குகள் எரிக்கத் திருக்கோயிலூர் வாணியரும் பெண்ணாகட வாணியரும் காசுகள் தந்தனர். இராஜநாராயண நரசிங்க முனையதரையன் நந்தாவிளக்கொன்று ஏற்ற நிலமளித்தார். துணையாழ்வான்

கைய்உகிராளி சந்திவிளக்கேற்ற நூற்றிருபது காசுகள் தந்தார். வசிஷ்டன் ஸ்ரீராகவன் பரமேசுவரன் சந்திவிளக்கொன்று எரிக்கக் கோயில் தானபதியிடம் 28 காசுகள் அளித்தார். கிருஷ்ண பட்டன் மனையாள் மாசறுசோதிசானி விளக்கொன்று ஏற்ற அறுபது காசுகள் அளித்தார்.

திருமலை மேல் இரவில் விளக்கேற்ற மங்கலங்கிழான் ஐம்பொழிலி இராமன் 16 காசுகள் அளித்தார். அதற்கான மாத வட்டி 8 மாக் காசு கொண்டு விளக்கேற்ற ஒப்பினார் கருமாணிக்கமான பரசமய கோளரிபட்டன். காளத்திநாதர் இரண்டு நந்தா விளக்குகள் ஏற்றத் தம் நஞ்சை நிலத்தை இறையிலித் திருநாமத் துக்காணியாகக் கோயிலுக்களித்தார். நறையூர்க் கிழவர்கள் சோமன் தோன்றியும் சோமன் உடையானும் திருமலை மேல் இரண்டு சந்திவிளக்குகள் ஏற்ற முப்பது காசுகள் அளித்தனர். அதைப் பெற்றுக்கொண்ட கோயில் பட்டர்கள் நால்வர் அத்தொகைக்கான மாத வட்டி முக்கால் காசு கொண்டு விளக்கேற்ற ஒப்பினர்.

திருமலை மேல் மண்டபத்தில் இரவுச்சந்தியில் விளக்கு எரிக்க வாணியன் மூவாயிரத்தொருவன் சோலைப் பிரான் 15 காசுகள் அளிக்க, அதன் வழி மாத வட்டி காலே அரைக்கால் காசு கொண்டு விளக்கேற்றப்பட்டது. திருவேங்கடத்தின் மனைவி காரைக்கால் அம்மையும் வணிகர் அவையம்புக்கான் நாயக்கரும் தேவரடியாள் துக்கை நீரேற்றாளான விக்கிரமன் குலமாணிக்கமும் மலை மேல் இரவுச்சந்தி விளக்கெரிக்க ஆளுக்கு 15 காசுகள் அளித்தனர். 23

சிந்தைக்கினியான் தம் தந்தை புகழன் பெரியானுக்கு நன்றாக இரண்டு சந்திகளில் விளக்கேற்றுமாறு 16 காசுகள் தந்தார். வணிகன் சோறன் இடங்கொண்டானுக்கு நன்றாக அவர் மகன் இடங்கொண்டான் வையம்புக்கான் இக்கோயிலில் இரவுச்சந்தி விளக்கேற்ற பொற்கோயில் பட்டனிடம் 16 காசுகள் தந்தார். திருவாலக்கோயில் தெற்றியான சிற்றம்பல மூவேந்த வேளான் இரவுச்சந்தி விளக்கேற்ற ஒன்றே மூன்று மா காசு தந்தார். செம்போதி வில்லவதரையரின் மகன் மாணிக்க நாயனார் காங்கேயராயன் நந்தாவிளக்கொன்று ஏற்றுவதற்காக நிலமளித்தார். சிக்காட்டுப் பற்றில் சீதேவி ஊரில் வாணாதராயன்

ஏந்தலில் குடிநீங்கா விளக்குப்புற இறையிலியாக நிலத்துண்டு ஒன்றைக் கொப்பண்ண உடையார் கடிதப்படி திருமுடிக்காரி கோயிலுக்கு அளித்தார்.

இரவில் பன்றி வேட்டையின்போது பள்ளி படியன் தந்தரன் மகன் தில்லையான ஆறாயிரப் போயன் தவறுதலாக அம்பு பட்டு இறந்தமையால் அவன் நினைவாக முடிகொண்டான் காரியான வீரப் போயன் கோயிலில் நந்தாவிளக்கேற்ற 32 பசுக்கள் அளித்தார் 24 உய்யக்கொண்டார் தெரிந்த திருமஞ்சணத்தார் வேளக் கைக்கோளன் கூத்தன் வீமனான செயங்கொண்ட சோழ மாராயன் உச்சிப்போதில் கோயில் இறைவனை வழிபட்ட அபூர்விக்குச் சட்டிச்சோறு, பொரிக்கறி அளிக்க வாய்ப்பாக ஏரி வாய்ச்செய், அதன் மேலைச் செய் இரண்டையும் அளித்தார்.

**சிறப்புச் செய்திகள்**

இரண்டு சிற்றூர்களை இணைத்துத் தம் சகலையின் நினைவாகத் திருமலைராஜபுரம் எனப் பெயர் சூட்டிய அச்சுத தேவன் அவ்வூரை இறையாநரையூர் வரதராஜ சரசுவதி தீட்சிதருக்கு அளித்தார்.25 கோயில் தேவரடியாளின் ஆடலுக்கும் பாடலுக்கும் ஊதியமாக அரும்புலிப்பாடியான இராஜராஜ மங்கலம் வழங்கப்பட்டது"26 இறைசைப் புராணம் செய்தமைக்காகத் திருவண்ணாமலை மெய்கண்ட சந்தானத்து சத்யஞான தர்ஜனிகளின் சீடரான திருமலை நயினார் சந்திரசேகரருக்கு ஆனந்தத் தாண்டவன் திருவீதியில் நிலமும் மனையும் வழங்கப்பட்டன 27” கோயில் பாரசைவர்களுக்குப் பாண்டிய, சோழ, மகதை மண்டலப் பாரசைவர்கள் அனுபவித்து வந்த மரியாதைகள் தானத்தாரால் வழங்கப்பட்டன.28

அஞ்சு சாதிப் பஞ்சாளத்தார் ஊர் விலகியதால் பன்னிரண்டு பற்று நாட்டார் இராயசம் திருமலையரிடமும் கிருஷ்ணப்ப மழவராயரிடமும் செஞ்சி, படைவீடு, திருவண்ணாமலை முதலிய இடங்களில் வழங்கப்படும் உரிமைகளை இறையா நரையூர்ப் பஞ்சாளத்தாருக்கு வழங்க ஒப்பினர்.29 சந்திர கிரகணத்தன்று காவிரிக் கரையிலுள்ள தில்லைஸ்தானத்தில் தங்கியிருந்த கிருஷ்ணதேவராயரின் அதிகாரி மல்லப்ப நாயக்கரின் மகன் திம்மப்ப நாயக்கர் இறையாநரையூர்க் கோயிலுக்குச் செம்பியன்

மாதேவி ஊரை மீட்டளித்தார். தம் மன்னர் நலத்திற்காக அவர் இப்பணியைச் செய்ததாகக் கூறும் கல்வெட்டு வழுதிலம்பட்டு உசாவடியையும் கெடிலம் நதியையும் குறிப்பிடுகிறது.30

அது போலவே வாசல் மல்லப்ப நாயக்கரின் நான்கு மகன்களின் நலத்திற்காகப் பசவநாயக்கர் மகன் இராமய்யரால் சூற்றியன்குறிச்சி கிராமம் கோயிலுக்கு மீட்டளிக்கப்பட்டுப் பின் பண்டாரவாடையாக மாற்றப்பட்டது."31 முதல் இராஜேந்திரர் கால அரசு அதிகாரி கிழவன் சதுரனான வானவன் மூவேந்த வேளார் கோயிலுக்கு 30 காசுகள் முதலாக அளித்தார். அதன் ஆண்டு வட்டியாக 6 காசுகள் கிடைத்தது. பத்தாண்டு வட்டி கொண்டு இறைவன் ஏறி வலஞ்செய்ய ஐந்திரம் (யானை) அமைக்கவும் மண்டபங்களுக்குச் சாந்திடும் பணி மேற்கொள்ள வும் சாலையிடவும் ஒப்புதலானது.32

மிலாடு இராமதேவன் பட்டாலகன், உத்தமசோழ மலாடுடையான் ஆகியோரால் அமைக்கப்பட்ட இரண்டு சதுர்வேதி மங்கலங்கள் உத்தமசோழரின் பதினைந்தாம் ஆட்சியாண்டில் ஒன்றிணைக்கப்பட்டன. கோச்சாத்தன் காமனின் மனையாள் தன் மகள் மீது கோலொன்றை எறிய, அது தவறி மிண்டன் காமன் மகள் மேல் பட்டு அப்பெண் இருபது நாட்களில் இறந்தாள். 'கை பிழை பாடு' என இச்செயல் கருதப்பட்டு காமன் மனைவியைக் கோயிலில் நந்தாவிளக்கொன்று ஏற்ற நாட்டவர் உத்தரவிட்டனர். அதன்படி காமன் மனைவி கோயிலுக்கு 32 பசுக்களை அளித்தார். 33 பதின்மூன்றாம் நூற்றாண்டளவில் இறையாநரையூரிலும் கோயிலிலும் பாடிகாவல் செய்தவர்களாக ஊர் பாகம் கொண்ட பேரையன், நானூற்றுவன் பேரையன் ஆகிய இருவர் பெயர்களையும் ஒரு கல்வெட்டு வெளிப்படுத்துகிறது.*34

கி. பி.1429ல் கோயில் பெரிய மண்டபத்தில் சபையார், தானத்தார் முன்னிலையில் வலங்கை, இடங்கை வகுப்பினர் கூடினர். நாச்சியார் திருக்கோயில் கட்டளைகளுக்கு இம்மண்டபத்தார் செய்யும் காரியங்கள் சீரமைக்கப்பட்டன. கைக்கோளர் நூல்ஆயம் தறிக்கு ஒன்றரைப் பணமாகவும் பறைத்தறிக்கு முக்கால் பணமாகவும் திட்டமிடப்பட்டது. பல சீரமைப்புகளை முன் வைக்கும் இக்கல்வெட்டால் இறையாநரையூரின் சமூக, பொருளாதார வரலாறு வெளிச்சமாகிறது 35 இரண்டாம்

தேவராயர் காலத்தில் வலங்கை, இடங்கைப் பயிராளர்களிடமிருந்து வலிந்து பெறப்பட்ட காணிக்கையைத் தரமாட்டாது அவர்கள் ஓட, நிலங்கள் விளைவிழக்க, கோயில்கள் வழிபாடின்றி நலிந்தன. அரசர் செவிக்குச் செய்தி வர, அண்ணப்ப உடையார் வழி இனவரி, இடங்கைவரி பெறவேண்டாம் எனத் தீர்வு பிறந்தது. இத்தீர்வை அனைத்துக் கோயில்களிலும் கல்வெட்டாக்க உத்தரவிட்டும் இறையாநரையூர்க் கோயிலில் அது நிகழாமையின் மக்கள் நாகராஜ உடையாருக்கு விண்ணப்பித்துக் கல்வெட்டிக் கொண்டனர். இக்கல்வெட்டில் பயன் படுத்தப்பட்டுள்ள, 'மனித்தர் உள்ளம் செத்து' என்னும் தொடர் உள்ளத்தை உருக்குவதாக உள்ளது. 36

பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த கோனேரிதேவ மகாராயர் காலத்தில் கச்சி கண்ணப்பராயன் இறைசை பச்சையன் நம்பியார் சூற்றியன்குறிச்சியைக் கோயிலுக்களித்தார். பராந்தகன் தாமோதர பட்டனான பாண்டவ தூதன் தம் படை யெடுப்பைப் பற்றிப் பாடியுள்ள செய்யுள் கல்வெட்டாகியுள்ளது. 'விதியார் எழுத்தை வெற்றெழுத்தாக்கி தெவ்வேந்தர் தங்கள் பதி கொண்டு மதியால் வளங்கொண்டான் மறையவர் கோன்.'37 அது போலவே குன்றை சோமாசி மாதவனின் சிறப்புகள் குறித்த பாடலொன்றும் இங்குள்ளது.*38

இராஜராஜ மலையகுலராயன் நீரேற்ற பெருமாளான எதிரிகள் நாயனின் வேளைக்காரப் படையைச் சேர்ந்த வீரர்கள் சிலர் (திரிகை உடையான், தேவப்பிள்ளை, திருமுண்டமழகியார்) நாயன் மறைவுக்குப் பின் தாங்கள் உயிர் வாழோம் எனச் சூளுரைத்தமையைச் சில கல்வெட்டுகள் பகிர்ந்துகொள்கின்றன.39 மற்றொரு கல்வெட்டு மலையராயனின் வேளைக்காரி தேவப்பெருமாளின் சூளுரையாக அமைந்துள்ளது. எதிரிகள் நாயனுக்குப் பிறகு தாம் உயிர் வாழ நேரின் அவருடைய பெண்டிருக்கு நீரும் சோறும் தந்து அவர்கள் உண்ட எச்சிலைத் தாம் உண்ணுவதாகவும் தாம் இறவாது வாழின் காண்பார் தம்மைக் கொல்லும்படியாகவும் நெருப்பில் இடும்படியாகவும் வேண்டும் இவ்வம்மை, அவ்வாறு செய்யாதவர் தம் மனைவியை நாயனின் குதிரைக்காரனுக்குத் தந்தவர்களாவர் என்று இழித் துரைத்திருப்பது அக்காலச் சமுதாய வழக்காறுகளின் வெளிப் பாடாக உள்ளது.40

## குறிப்புகள்

1. ஆய்வு நாட்கள் 14, 3, 1991, 2, 1, 2011. உடனிருந்து உதவிய திருவாளர்கள் பால,. பி. லோகநாதனும் நன்றிக்குரியவர்கள்.

2. வீரமங்கலம், விக்கச்சிமங்கலம், குஞ்சிரமங்கலம், குமார மங்கலம், புத்தமங்கலம், பன்றிமங்கலம், சீயமங்கலம், செம்பியன்மாதேவிச் சதுர்வேதிமங்கலம், அறங்கலக்கிச் சதுர்வேதிமங்கலம்.

3. அதகூர், ஆதனூர், நெட்டூர், கூடலூர், நல்லரசூர், குத்தனூர், பழுவூர், எறும்பியூர், கிளியூர், ஆசனூர், உளுந்தூர், பாலூர், திருக்கோவலூர், பெருங்கூர், மாண்டையூர், துறையூர், அந்தர குளத்தூர், மாமூர், நாவலூர், நெடுமானூர், மலையனூர், எழுவத்தூர், கொட்டையூர், வேளூர், பழங்கூர், சிறு நாவலூர், நரையூர், பரனூர், உவற்றூர்.

4. திருநாமநல்லூர், இராஜநாராயணநல்லூர்.

5. பழம்பட்டினம், வடவல், வெட்சி, வழுதிலம்பட்டு, பிச்சாண்டாங்குறிச்சி, செட்டி ஏந்தல் தாங்கல், பாளையம், செங்குறிச்சி, நடுவிற்பட்டு, புவனேகவீரன் பட்டணம், செம்பியன் மாதேவி, சூற்றியன்குறிச்சி, குன்றை, திருமுனைப் பாடி, வாணபிராட்டி, இலச்சியம், புலியுண்ணிப் பாடி, கோமர், ஸ்ரீதேவி, அரும்புலிப்பாடி, மணவில், அரும்பாக்கம், நறை, சிறுபாத்து, பருந்தல் (மலைய விச்சாதிரநல்லூர்), வாங்கல், புதுக்கழனி, புத்தூர்ப்பாடி, குமிழி, காட்டுமயில், மாம்பட்டு, திருப்பர்.

6. SII 12: 35, 234.

7. SII 22:167.

8. SII 22:168.

9. SII 22:163.

10. SII 22: 158.

11. ARE 1937-38: 486.

12. ARE 1937-38: 491.

13. SII 22:157

14. SII 22: 158.

15. SII 22: 164.

16. SII 22: 136.

17. ARE 1937-38: 498.

18. SII 22: 158.

19. SII 22: 165.

20. SII 22: 140.

21. SII 22: 160.

22. SII 22: 169.

23. SII 22: 145, 146, 147.

24. SII 22: 138.

25. ARE 1937-38: 479.

26. ARE 1937-38: 489.

27. ARE 1937-38: 485.

28. ARE 1937-38: 492.

29. ARE 1937-38: 493.

30. ARE 1937-38: 494.

31. ARE 1937-38: 495.

32. SII 22: 135.

33. SII 22: 148.

34. SII 22: 155.

35. ARE 1937-38: 490.

36. SII 22: 161.

37. ARE 1937-38: 497.

38.ARE1937-38:499.

39.SII22:156.ARE.1937-38:500,501.

40. SII 22: 156.

# 33. பெருங்கடம்பனூர்

நாகபட்டினம் திருவாரூர்ச் சாலையில் 10 கி. மீ. தொலைவில் உள்ள பெருங்கடம்பனூர் மாடக்கோயில் கோபுரமற்ற செங்கல் கட்டுமானமாகும்.'1

## வெற்றுத்தளம்

விமானம், முகமண்டபம், முன்மண்டபம், பெருமண்டபம் பெற்றுக் கிழக்குப் பார்வையாக அமைந்துள்ள இக்கோயிலின் வெற்றுத்தளம் பாதபந்தத் தாங்குதளம் (குமுதத்திற்கு மாற்றாகப் பெருந்தாமரை வரி இடம்பெற்றுள்ளது), நான்முக அரைத் தூண்கள் அணைத்த சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகளுடன் 1. 90 மீ. உயரம் கொண்டுள்ளது. வெற்றுத் தளத்தை ஊடறுத்துத் தெற்கில் ஒன்பது படிகளும் கிழக்கில் ஏழு படிகளும் அமைந்து பெருமண்டபத்திற்கு வழி கூட்டு கின்றன. கிழக்கில் இருபுறத்தும் படிவரிசை உள்ளது.

## விமானம்

பாதபந்தத் தாங்குதளம், நான்முக அரைத்தூண்கள் தழுவிய சுவர், வெட்டுப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள் பெற்று ஒருதள வேசரமாக அமைந்துள்ள இறைவன் விமானம் 4.55 மீ. பக்கமுடைய சதுரமாகக் காட்சிதருகிறது. முப்புறத்தும் உள்ள அதன் சுவர்க் கோட்டங்களும் கிரீவகோட்டங்களும் வெறுமையாக உள்ளன.

## மண்டபங்கள்

விமானக் கட்டமைப்பில் விளங்கும் முகமண்டபக் கோட்டங்களில் தென்புறம் சாளரம். அதே கட்டமைப்பில் உள்ள முன், பெருமண்டபங்களின் சுவர்கள் வெறுமையாக உள்ளன. நான்முகத் தூண்கள் பூமொட்டுப் போதிகைகளுடன் தாங்கும் கூரை பெற்றுள்ள பெருமண்டபத்தின் மேற்கில் தென்புறம் பிள்ளையாரும் வடபுறம் பாலசுப்ரமணியரும் ஒரு தள வேசர விமானங்களில் காட்சிதர, வடக்கிலுள்ள மூன்று விமானங்களில் ஆடவல்லானுக்கான ஒருதள நாகரத் திருமுன் வெறுமையாக உள்ளது. வடகிழக்கில் உள்ள ஒருதள நாகரத்

திருமுன்னில் வள்ளி, தெய்வானையுடன் முருகனும் நடுவில் உள்ள ஒருதள வேசரத் திருமுன்னில் இறைவி கருணேந்து சேகரியும் இடம்பெற்றுள்ளனர். முகமண்டபத்தில் பைரவர், சூரியன், சனீசுவரன், இலட்சுமி, பிள்ளையார், இலிங்கத்திருமேனி ஆகியவை இடம்பெற்றுள்ளன. கருவறையில் இறைவன் சதுர ஆவுடையார் பெற்ற இலிங்கத்திருமேனியராய் உள்ளார்.

**அம்மன்**

இறைவியின் பின்கைகளில் வலப்புறம் அங்குசமும் இடப்புறம் பாசமும் அமைய, முன்கைகள் காக்கும், அருட்குறிப்புகளில் உள்ளன. கரண்டமகுடம், மகரகுண்டலங்கள், சரப்பளி, பட்டாடை அணிந்து நின்றகோலத்தில் காட்சிதரும் அம்மனின் கைகளை வளைகள் அலங்கரிக்கின்றன.

**குறிப்பு**

1 ஆய்வு நாள் 23. 2. 2011. இக்கோயிலை அறிமுகப்படுத்திய திரு. கா. இராமச்சந்திரன், ஆய்வு செய்து குறிப்புகள் அளித்த திரு. பால. பத்மநாபன் இருவரும் நன்றிக்குரியவர்கள்

.

------------------------------------------------

# 34. மாடக்கோயில்கள் - ஒப்பாய்வு

இதுவரை அறியப்பட்டுள்ள முப்பத்திரண்டு மாடக்கோயில்களில் சிவபெருமானுக்குரியவை இருபத்தாறு. விஷ்ணுவிற்குரியவை ஆறு. இக்கோயில் வளாகங்களில் சிவன், விஷ்ணு ஆகிய முதன்மை இறைக்கான விமானமும் அவ்விறையின் தேவி அல்லது தேவியருக்கான விமானமும் சோமாஸ்கந்தர் தொகுதிக்கான விமானமும் பெருமைக்குரிய அமைப்புகளாகத் திகழ, சுற்றாலைத் தெய்வங்களின் திருமுன்கள் முழுமையான விமானமாகவோ, மண்டப அமைப்பிலோ காணப்படுகின்றன.

## இறைவன் விமானம்

மாடக்கோயில்களில் காணப்படும் முதன்மை இறை விமானங்கள் முப்பத்திரண்டனுள் ஒருதளம் பெற்றவை பதின்மூன்று இருதளங்கள் கொண்டவை பதினாறு. கீழ்வேளூர், நறையூர், கீழையூர் விமானங்கள் முத்தளத்துடன் அமைந்துள்ளன. இந்த முப்பத்திரண்டு விமானங்களில் கலப்பு வேசரமாகப் பதினெட்டு அமைய, கலப்புத் திராவிடமாக எட்டு விமானங்களைக் காண முடிகிறது. மூன்று விமானங்கள் சாலை அமைப்புக் கொள்ள, நாலூர் விமானம் தூய தூங்கானை மாடமாகவும் திருவிளையாட்டம் விமானம் கலப்புத் தூங்கானை மாடமாகவும் அமைந்துள்ளன. ஆலம்பாக்கம் விமானத்தின் மேலுறுப்புகள் சிதறி யுள்ளமையால் அதன் வடிவமைப்பை அறியக்கூடவில்லை.

இவ்விமானங்களின் கீழ்த்தளங்களுள் இருபத்திரண்டு சதுரமாகவும் ஒன்பது செவ்வகமாகவும் ஒன்று தூங்கானை அமைப்பிலும் உள்ளன. செவ்வகக் கருவறைகளுள் ஐந்து விஷ்ணுவிற்கும் கீழ்வேளூர், திருவிளையாட்டம், தேவூர், மலையீசுவரம் ஆகியவை சிவனுக்கும் உருவாகியுள்ளன. விஷ்ணுவின் செவ்வகக் கருவறைகளுள் நறையூரில் இறைவடிவங்கள் நின்றகோலத்தில் உள்ளன. கீழையூரிலும் திருப்பேர்நகரிலும் பாம்பணையில் பள்ளிகொண்டவராய்க் காட்சிதரும் விஷ்ணு ஆலம்பாக்கத்திலும் நாங்கூரிலும் சுகாசனத்தில் உள்ளார்.

**தாங்குதளம்**

இந்த முப்பத்திரண்டு விமானங்களில் பாதபந்தத் தாங்கு தளம் கொண்டவை பதினேழு. பிரதிபந்தத்துடன் உள்ளவை ஆறு. மூன்று விமானங்கள் கபோதபந்தத் தாங்குதளம் கொள்ள, இந்தளூர், கீழையூர் விமானங்கள் உறுப்பு வேறுபாடற்ற தாங்கு தளம் பெற்றுள்ளன. நாலூர், இறையாநரையூர், ஆலம்பாக்கம் விமானங்கள் குமுதமற்ற நிலையில் துணைத்தளம் போன்ற தாங்குதளத்தின் மீது எழுகின்றன. தலைஞாயிறு விமானம் தாங்குதளம் பெறவில்லை.

**சுவர்**

இருபத்தைந்து விமானங்கள் வேதிகைத்தொகுதி பெற, ஏழு விமானங்களில் தாங்குதளத்தின் மீது நேரடியாகச் சுவர் எழுகிறது. பதினெட்டு விமானங்களின் சுவர்கள் எண்முக அரைத் தூண்களின் அணைப்புப் பெற, பதினான்கு விமானங்கள் நான்முக அணைவு பெற்றுள்ளன. பத்திப் பிரிப்பிற்கேற்ப இருவகை அரைத்தூண்களையும் அணைவாகக் கொண்டுள்ள சுவர்களையும் சில விமானங்களில் காணமுடிகிறது. சில விமானங்களில் எண்முகத் தூண்கள் சதுரபாதமும் நாகபந்தமும் சிற்றுருவச் சிற்பங்களுடனான கட்டும் மாலைத்தொங்கலும் பெற்றுள்ளன. குடவாயில், கீழ்வேளூர் விமானங்களில் பன்முக அணைவுத் தூண்களும் இடம்பெற்றுள்ளன. பதினாறு விமானங்களில் சாலைப்பத்திகள் புறந்தள்ளியுள்ளன. ஆறு விமானங்களில் அனைத்துப் பத்திகளுமே வெளித்தள்ளியுள்ளன. தேவூரிலும் கீழ்வேளூரிலும் சாலைப்பத்தியின் கோட்டப்பகுதி சாலைப் பத்தியினும் கூடுதலாகப் புறந்தள்ளியுள்ளமையைக் காணமுடிகிறது. புறந்தள்ளியுள்ள பத்திகளின் தாங்குதளங்கள் உறுப்பு வேறுபாடுகள் பெற்றுள்ளமையையும் சில கோயில்களில் பார்க்கமுடிகிறது.

பத்திகளுக்கு இடைப்பட்ட விமான ஒடுக்கங்களில் சுவர்ப் பஞ்சரங்களும் குடப்பஞ்சரங்களும் காட்டப்படுவதுண்டு. கீழ்வேளூரில் இவ்விரண்டுமே இடம்பெற்றுள்ளபோதும் சுவர்ப்பஞ்சரங்கள் ஒடுக்கங்களில் இடம்பெறாது கர்ணபத்தி

களில் காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பஞ்சரக் கோட்டங்களில் திசைக்காவலர் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. சுவர்ப் பஞ்சரங்கள் குடவாயில் விமானத்திலும் சிறக்க இடம் பெற்றுள்ளன. ஆறு விமானங்களில் குடப்பஞ்சரங்கள் உள்ளன.

**கோட்டங்கள்**

சிவன்கோயில் விமானச் சாலைப்பத்திகளில் உள்ள தெற்கு, மேற்கு, வடக்குக் கோட்டங்களில் முறையே ஆலமர்அண்ணல், இலிங்கோத்பவர், நான்முகன் வடிவங்களை நிறுவுதல் மரபு. மாடக்கோயில்களிலும் இம்மரபு பின்பற்றப்பட்டுள்ளமையைக் காணமுடிகிறது. பதினைந்து விமானங்களின் தெற்குக் கோட்டங்கள் ஆலமர் அண்ணலைப் பெற, பத்துக் கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. சில ஆலமர்அண்ணல் சிற்பங்களில் நந்தி உள்ளது. இரண்டு ஆலமர்அண்ணல் சிற்பங்களில் மரக் கிளையில் பொக்கணத்தைக் காணமுடிகிறது. பெருவேளூரில் இலிங்கமும் உள்ளது. பெரும்பாலான ஆலமர்அண்ணல் சிற்பங்கள் பிற்சோழர் காலத்தனவாக இருந்தபோதும் தலைச் சங்காடு சங்காரண்யேசுவரர் கோயில் ஆலமர்அண்ணல் அவர்களுள் சிறப்பிடம் பெறத்தக்கவராவார்.

பன்னிரண்டு விமானங்களின் வடக்குக் கோட்டங்கள் நான்முகனைக் கொள்ள, பதின்மூன்று கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. இந்நான்முகன் சிற்பங்களுள் பல பிற்சோழர் காலத்தன. ஆறைவடதளி நான்முகன் நிற்கும் தளத்தின் முகப்பில் அர்த்தபத்மாசனத்தில் இரு கைகளையும் குவித்து வணங்கியவாறு ஆடவர் சிற்பம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

பத்து விமானங்களின் மேற்குக் கோட்டங்கள் இலிங்கோத்பவரைப் பெற்றுள்ளன. அவற்றுள் பெரும்பான்மையன அண்மைக் காலத்தன. பதினான்கு விமானங்களின் மேற்குக் கோட்டங்கள் வெறுமையாக உள்ளன. வலிவலம் விமானம் மட்டும் மேற்குக் கோட்டத்தில் விஷ்ணுவைக் கொண்டுள்ளது. பெருங்கடம்பனூர் விமானக் கோட்டங்கள் மூன்றுமே வெறுமையாக உள்ளன. பெரும்பாலான கோட்டங்கள் உருளை அல்லது நான்முக அரைத்தூண் அணைவுடன் பஞ்சர அலங்கரிப்புப்

பெற, சில கோட்டங்கள் மகரதோரணத் தலைப்புடன் உள்ளன. சிக்கல் மகரதோரண வளைவில் காணப்படும் பிள்ளையார் சிற்பமும் சேய்ஞலூர் மகரதோரண வளைவுகளில் இடம் பெற்றுள்ள பிள்ளையார், சிவபெருமான் சிற்பங்களும் சிறப்புக் சூரியவை. சேய்ஞலூர் சிவபெருமான் சோழர் காலத்தவர்.

பன்னிரண்டு விமானங்களில் போதிகைகள் வெட்டுத் தரங்கமாக அமைய, ஏழில் அவை வெட்டுப் போதிகைகளாக உள்ளன. இரண்டு விமானங்களில் விரிகோணப் போதிகைகள் காணப்படுகின்றன. பதினொரு விமானங்கள் பூமொட்டுப் போதிகைகளுடன் திகழ்கின்றன. சில விமானங்களில் காணப்படும் செவ்வகப் போதிகைகள் வெட்டுத் தரங்கமாக இருந்து திருப்பணிகளின் காரணமாக மாறியிருப்பதாகக் கொள்ளலாம்.

**கூரையுறுப்புகள்**

சேய்ஞலூர், சிக்கல், திருவிளையாட்டம் ஆகிய மூன்று கோயில்களில் மட்டுமே விமான வலபி பூதவரி கொண்டுள்ளது. இந்தளூர் வலபியில் ஆங்காங்கே மட்டும் பூதவரி காணப்படுகிறது. பெரும்பாலான மாடக்கோயில் வலபிகள் வெறுமையாக அமைய, மிகச் சிலவே தாமரை இதழ்கள் பெற்றுள்ளன. விமானங்கள் சிலவற்றின் கபோதக் கூடுகளில் சிற்றுருவச் சிற்பங்கள் இடம்பெற்றிருந்தபோதும் தலைஞாயிறு வெற்றுத் தளக் கபோதத்தில் இடம்பெற்றுள்ள ஆனந்தத்தாண்டவம் ஒத்த சிறப்புக்குரிய சிற்பத்தை வேறெங்கும் காணக்கூடவில்லை.

**ஆரஉறுப்புகள்**

இருதள, முத்தள விமானங்கள் அனைத்துமே ஆரஉறுப்புகள் பெற்றுள்ளன. பெரும்பாலான விமானங்களில் இவை செங்கல் கட்டுமானங்களாக உள்ளன. சாலைக் கோட்டங்களில் அவ்வத்திசைக்குரிய இறைவடிவங்கள் சுதையுருவங்களாகக் காட்டப்பட்டுள்ளன. மிகச் சில கோயில்களிலேயே கர்ணகூடங்களிலும் சுதையுருவங்கள் இடம்பெற்றுள்ளன. வலிவலம், வைகல், கீழ்வேளூர், சிக்கல் விமானங்கள் ஆறங்க ஆரஉறுப்புகள் பெற்றுள்ளன.

**இரண்டாம் தளம்**

இருதள. முத்தன விமானங்களில் இரண்டாம் தளம் இடம் பெற்றிருந்தபோதும் இரண்டு விமானங்கள் தவிர பிறவற்றின் தளக் கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க சிறப்பேதும் காணக் கூடவில்லை. தலைஞாயிறு விமானத்தின் கீழ்த்தளம், மேற்றளம் இரண்டுமே ஒரே அளவினவாய் அமைந்துள்ளன. இரண்டு தளங்களிலுமே வடக்குத் தவிர்த்த முத்திசைகளிலும் சாலைப் பத்திகள் புறந்தள்ளியுள்ளன.

நல்லூர் விமானத்தின் முதல் தள ஆரஉறுப்புகள் இரண்டாம் தளத்திலிருந்து விலகியிருப்பதால் கீழ்த்தளம் போலவே இரண்டாம் தளத்தையும் சுற்றிவர இடைவெளி உள்ளது. முதல் தளக் கூரையின் மீதுள்ள கிழக்குச் சாலை இரண்டாம் தளத்திற்கான நுழைவாயிலாக அமைந்துள்ளது. வேதிகையின் மீதெழும் உயரமான நான்முக அரைத்தூண்கள் அணைத்துள்ள இரண்டாம் தளச் சுவரின் நாற்புறத்தும் திசைக்கு இரண்டெனச் சுவர்ப் பஞ்சரங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் நான்முக அரைத்தூண்கள் அணைத்த சுவர்ப்பகுதி, விரிகோணப் போதிகைகள் தாங்கும் கூரையுறுப்புகள், வேதிகை. கிரீவம் பெற்று, இரண்டாம் தளக் கபோதக் கூட்டைச் சிகரமாகக் கொண்டு முடிகின்றன. அவற்றின் கிரீவபகுதிகளில் ஆடற்பெண்கள் காட்டப்பட்டுள்ளனர். முப்பத்திரண்டு மாடக்கோயில்களில் தள்ளியமைந்த ஆரம் பெற்றிருக்கும் ஒரே விமானமாக நல்லூர் விமானத்தைக் குறிக்கலாம்.

**கிரீவகோட்டங்கள்**

ஆரச்சாலைகளிலும் கிரீவகோட்டங்களிலும் கீழ்வேளூர் தவிர்த்த ஏனைய விமானங்கள் அவ்வத் திசைக்குரிய இறைகளின் சுதையுருவங்களைப் பெற்றுள்ளன. மாறுபட்ட அமைப்பையும் சில விமானங்களில் காணமுடிகிறது. நறையூர் கிழக்கு ஆரச்சாலையில் கருவறைத் தெய்வங்கள் அதே அமைப்பில் இடம்பெற்றுள்ளன. நாலூர் கிரீவத்தில் நிற்கும் யானையின் முன்தோற்றம் காட்டப்பட்டுள்ளது. குடவாயில் கிரீவ சுவரில் பாலுணர்வுச் சிற்பமும் பசுபதிகோயில் கிழக்கு கிரீவகோட்டத்

தில் முனிவர் வடிவமும் ஆவூர்ப் பசுபதீசுவரத்தின் தெற்குக் கோட்டத்தில் இயமனும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. தலைஞாயிறு விமானத்தின் கிழக்கு கிரீவகோட்டம் முன்னோக்கி நீட்டிப் பெரிதுபடுத்தப்பட்டுள்ளது. அதன் கீர்த்திமுகத்தில் சிலபெருமான் காட்சிதருகிறார். தெற்கு கிரீவகோட்டத்திற்கு முன் வடிவமைக்கப்பட்டுள்ள கர்ணகூடம் போன்ற கட்டமைப்பின் தென்முகத்தில் வாயில் போல் அமைத்து சுதைக் காவலர்கள் காட்டப்பட்டுள்ளனர்.

**கருவறைகள்**

நல்லூர், தலைச்சங்காடு தட்சிணபுரீசுவரர், இறையாநரையூர்க் கோயில்களின் கருவறைகள் சாந்தாரம் போன்ற அமைப்புக் கொண்டுள்ள போதும் அவற்றைச் சாந்தார விமானங்களாகக் கொள்ளமுடியாது. மூன்று கோயில்களிலுமே விமானத்திற்கான உள்சுற்றாகவே இந்த இடைவழி அமைந்துள்ளது.

விஷ்ணுவிற்கென அமைந்த ஆறு மாடக்கோயில்களில் ஆலம்பாக்கம், நாங்கூர், நகரி இவற்றின் கருவறைகளில் இறைத் திருமேனிகள் சுகாசனத்தில் உள்ளன. நறையூரில் ஏழு இறை வடிவங்களுமே நின்றகோலத்தில் உள்ளன. கீழையூர், திருப்பேர் நகர் ஆகிய இரண்டிடங்களிலும் பெருமாள் பள்ளி கொண்டுள்ளார்.

சிவபெருமானுக்கான இருபத்தாறு மாடக்கோயில்களில் சட்டநாதர், தலைஞாயிறு பார்வதிபாகர் கோயில்கள் தவிர ஏனைய இருபத்து நான்கின் கருவறைகளிலும் இலிங்கத் திருமேனிகளே இடம்பெற்றுள்ளன. அவற்றுள், நல்லூர்க் கருவறையில் இலிங்கத் திருமேனியுடன் பின்சுவரில் சுகாசனத்தில் சிவன், உமை சுதைவடிவங்களும் பக்கச்சுவர்களில் நின்ற கோலத்தில் நான்முகன், விஷ்ணு சுதைவடிவங்களும் இடம் பெற்றுள்ளன.

அம்பர் பெருந்திருக்கோயில் கருவறையில் இலிங்கத் திருமேனியுடன் பின்சுவரை ஒட்டியுள்ள திண்ணையின் மீது மூலவர் வடிவங்களாகக் கருங்கல்லாலான சோமாஸ்கந்தர்

தொகுதி காணப்படுகிறது மலையீசுவரம் கருவறையில் இலிங்கத் திருமேனியுடன் பின்சுவரை ஒட்டிக் காணப்படும் சிம்மச் சிற்பத் தின் மார்புப்பகுதியில் உமாமகேசுவரர் இடம்பெற்றுள்ளனர்

இருபத்து நான்கு கோயில்களில் இடம்பெற்றுள்ள இலிங்கத் திருமேனிகளின் ஆவுடையார் சதுரமாகப் பதின்மூன்று கோயில்களிலும் வேசரமாகப் பதினொரு கோயில்களிலும் உள்ளன ஆறைவடதளி, மலையீசுவரம் ஆவுடையார் குமுதம், சிலம்புவரி பெற்றுள்ளது. நாலூர், ஆக்கூர் திருமேனிகளின் பாணங்கள் சீர்மைபெறாது உள்ளன. நல்லூர் பாணம் சிறப்புக்குரியது.

**வாயிற்காவலர்கள்**

பத்தொன்பது கோயில்களில் பெருமண்டபம் அல்லது முகமண்டபத்திற்கு முன்னிருக்குமாறு வாயிற்காவலர்கள் இடம் பெற்றுள்ளனர். மூன்று கோயில்களில் ஓவியமாகவும் மூன்று கோயில்களில் சுதைவடிவங்களாகவும் காட்சிதரும் இக்காவலர்கள் கருங்கல் சிற்பங்களாகப் பதின்மூன்று கோயில்களில் அமைந் துள்ளனர். நகரியில் மங்கையாழ்வார் திருமுன்னிற்கும் காவலர்கள் காட்டப்பட்டுள்ளனர். சில மாடக்கோயில்களில் இறைவித் திருமுன்களும் சுதையாலான பெண் காவலர்களைப் பெற்றுள்ளன.

**இறைவி விமானம்**

மாடக்கோயில்களில் இடம்பெற்றுள்ள இருபத்தெட்டு இறைவி விமானங்களுள் ஒரு தளத்துடன் பதினெட்டும் இரண்டு தளங்களுடன் பத்தும் அமைந்துள்ளன. அவற்றுள் பத்து விமானங்கள் வெற்றுத்தளத்தின் மீது மாடக்கோயிலாய் அமைய, பதினெட்டு விமானங்கள் தரைச்சுற்றில் கட்டப்பட்டுள்ளன. இருபத்து நான்கு விமானங்கள் கலப்பு வேசரங்களாக அமைய, மூன்று கலப்புத் திராவிடமாகவும் ஒன்று தூய நாகரமாகவும் அமைந்துள்ளன. பெரும்பாலான இறைவி விமானங்கள் இரண்டுக்கு மேற்பட்ட மண்டபங்களைப் பெற்றுள்ளன. இறைவி விமானங்களின் சுவர்க் கோட்டங்களிலோ, ஆரஉறுப்பு களிலோ, கிரீவகோட்டங்களிலோ சிறப்பான சிற்பங்களைக் காணக்கூடவில்லை.

மாடக்கோயில்களில் இடம்பெற்றுள்ள இறைவிகளின் பெயர்களில் தமிழில் அமைந்தவை எட்டாகும். நாயகி (9), வல்லி (6) கண்ணி (3) சுந்தரி (2) எனும் பின்னொட்டுகளுடன் அமைந்த பெயர்களே பலவாக உள்ளன. பெரியநாயகி என்ற பெயர் நாலூர், குடவாயில், இறையாநரையூர் இறைவிகளின் பெயராக அமைந்துள்ளது. பெரும்பாலான இறைவிகள் நின்ற கோலத்தில் காட்சிதர, ஆறு கோயில்களில் சுகாசனத்திலும் இரண்டு கோயில்களில் அர்த்தபத்மாசனத்திலும் இறைவிகள் உள்ளனர். அர்த்தபத்மாசன இறைவிகளும் மூன்று கோயில் சுகாசன இறைவிகளும் வைணவ மரபினர். தலைஞாயிறு பெருவேளூர், நல்லூர்க் கோயில்களின் சுகாசன இறைவிகள் சைவ மரபினர்.

.

இருபது இறைவிகள் முன்கைகளைக் காக்கும், அருட் குறிப்புகளில் கொள்ள, எட்டு இறைவிகளின் கைகள் காக்கும் குறிப்பிலும் கடியவலம்பிதத்திலும் உள்ளன. பின்கைகளில் பதினேழு இறைவிகள் அக்கமாலையும் மலரும் கொள்ள, எண்மர் இருகைகளிலும் மலர்களே கொண்டுள்ளனர். வலிவலம் இறைவியின் பின்கைகளில் மலரும் முத்தலைஈட்டியும் உள்ளன. அம்பர் இறைவி அக்கமாலையும் குண்டிகையும் பெற்றுள்ளார். பெருங்கடம்பனூர் இறைவி அங்குசம், பாசம் ஏந்தியுள்ளார். தலைஞாயிறு இறைவி வலக்கையைக் கடகத்தில் இருத்தி, இடக்கையைத் தளத்தின் மேல் ஊன்றியுள்ளார். சட்டநாதர் அமிர்தவல்லி வலக்கையைக் கடகத்தில் கொண்டிருந்தபோதும் இடக்கையை நெகிழ்த்தியுள்ளார். நறையூர் வஞ்சுளவல்லி வலக்கையில் காக்கும் குறிப்புக் காட்டி, இடக்கையை நெகிழ்த்தியுள்ளார். நகரியின் கருவறை இறைவியர் வெளிக்கைகளை தொடைமீது இருத்தி, உள்கைகளில் மலர் ஏந்தியுள்ளனர். ஆலம்பாக்கம் இறைவியரும் நாங்கூர்க் கருவறை இறைவியரும் வெளிக்கைகளில் அருட்குறிப்புக் காட்டி, உள்கைகளில் மலர் கொண்டுள்ளனர்.

**சோமாஸ்கந்தர் விமானம்**

பன்னிரண்டு கோயில்கள் சோமாஸ்கந்தருக்கெனத் தனி விமானம் பெற்றிருந்தபோதும் நல்லூர் தவிர்த்த ஏனைய

பதினொன்று மட்டுமே அவ்விமானங்களை மாடக்கோயில் அமைப்பில் வெற்றுத்தளத்தின் மேல் கொண்டுள்ளன. அந்தப் பதினொன்றில் ஏழு விமானங்கள் ஒருதளமாய் அமைய, இரு தளங்கள் கொண்டுள்ளவை நான்கு. ஏழு விமானங்கள் கலப்பு வேசரமாகவும் மூன்று கலப்புத் திராவிடமாகவும் ஒன்று தூய நாகரமாகவும் அமைந்துள்ளன. பெரும்பாலான கருவறைகள் சோமாஸ்கந்தர் தொகுதியைச் செப்புத்திருமேனிகளாகக் கொள்ள, சில வெறுமையாக உள்ளன. சில மாடக்கோயில்களில் தனி விமானம் பெறாத நிலையிலும் சோமாஸ்கந்தர் செப்புத் திருமேனித் தொகுதியைக் காணமுடிகிறது. பசுபதீசுவரத்தில் சோமாஸ்கந்தருக்கு மாற்றாக அவ்விமானத்தில் உச்சிஷ்ட கணபதி இடம்பெற்றுள்ளார்.

**சுற்றாலைக் கோயில்கள்**

சிவன் கோயில்களில் பொதுவாக அமைய வேண்டிய எட்டுச் சுற்றாலைத் தெய்வங்களுள் பிள்ளையார் மட்டுமே இருபத்தாறு மாடக்கோயில்களிலும் இடம்பிடித்துள்ளார். விஷ்ணுவின் திருப்பேர்நகர், கீழையூர் மாடக்கோயில்களில் இவருக்குத் தனித் திருமுன் கிடைத்துள்ளது. சில கோயில்களில் இரண்டுக்கும் மேற்பட்ட பிள்ளையார் சிற்பங்கள் உள்ளன. அவற்றுள் இறையாநரையூர்ச் சிற்பங்கள் சிறப்புக்குரியன. உச்சிஷ்டர் கோலத்தில் பசுபதிகோயிலில் தனித்திருமுன்னிலும் நல்லூரில் வெற்றுத்தளத் தென்கோட்டத்திலும் பிள்ளையார் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிள்ளையாருக்கு அடுத்த நிலையில் முருகன் இருபத்துமூன்று கோயில்களிலும் சண்டேசுவரர் இருபத்திரண்டு கோயில்களிலும் உள்ளனர். ஆவூரில் தனுஷ் சுப்ரமணியராகக் காட்சியளிக்கும் முருகன் இறையாநரையூரில் கோவிந்தராஜப் பெருமாளாக வழிபடப்படுகிறார். அனைத்துக் கோயில்களிலும் வள்ளி, தெய்வானையுடன் காட்சிதரும் முருகன் சில கோயில்களில் ஆறுமுகக் கோலத்தில் இடம்பெற்றுள்ளார். சிங்கார வேலவர் என்ற பெயரிலுள்ள சிக்கல் முருகப் பெருமானின் செப்புத்திருமேனி சிறப்பான வழிபாடு பெற்றுள்ளது.

பல கோயில்களில் சண்டேசுவரர் சோழர் காலச் சிற்பமாக அமைந்துள்ளார். நன்னிலத்தில் சண்டேசுவரியுடன் காட்சிதரும் இவ்வடியார் பெருவேளூரில் யோக சண்டேசுவரராகத் தனித் திருமுன் கண்டுள்ளார். தம் பிறப்பிடமான சேய்ஞலூரில் சிறப்புக்குரிய சிற்பமாக இடம்பெற்றுள்ள சண்டேசுவரருக்கு இந்தளூரிலும் வைகலிலும் பெருவேளூரிலும் இரண்டு சிற்பங்கள் உள்ளன.

பதினேழு கோயில்களில் காணப்படும் பைரவருக்கு ஆவூரில் ஐந்து சிற்பங்களும் சேய்ஞலூர், பண்டாரவாடை, இந்தளூர் ஆகிய இடங்களில் இரண்டு சிற்பங்களும் உள்ளன. பெருவேளூரில் இரண்டு சேத்ரபாலர் சிற்பங்களைக் காண முடிகிறது. பதினைந்து கோயில்களில் சூரியனும் மிகச் சில கோயில்களில் சந்திரனும் இடம்பெற்றுள்ளனர். இந்தளூர், இரண்டு சூரியச் சிற்பங்களைக் கொண்டுள்ளது. பதினைந்து கோயில்களில் யானைத்திருமகள் இடம்பெற்றுள்ளார்.

தலைச்சங்காடு சங்காரண்யேசுவரர், பசுபதிகோயில், திருவிளையாட்டம் கோயில்களில் சேட்டைத்தேவியின் தொகுதி காணப்படுகிறது. இரண்டு கோயில்களில் முழுமையான நிலையிலும் இரண்டு கோயில்களில் குறைந்த எண்ணிக்கையிலும் எழுவர் அன்னையர் சிற்பங்கள் உள்ளன. இறையாநரையூர்ச் சாமுண்டியும் விக்னேசுவரியும் குறிப்பிடத்தக்கவர்கள். பசுபதிகோயில் வளாகத்திற்கு வெளியே தோப்பொன்றில் காணப்படும் சாமுண்டியும் சிறப்பானவர். திருவிளையாட்டத்திலும் இந்தளூரிலும் எழுவர் அன்னையர் கோயில்கள் மாடக்கோயில் வளாகத்திற்கு வெளியே சற்றுத் தொலைவில் அமைந்துள்ளன.

தலைச்சங்காடு சங்காரண்யேசுவரம், சிக்கல், வைகல், பண்டாரவாடை, பெருவேளூர் ஆகிய ஐந்து சிவன் கோயில்களிலும் விஷ்ணுவிற்குத் தனித் திருமுன்கள் அமைந்துள்ளன. சங்காரண்யேசுவரரில் இராமர், சீதை சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன. குடவாயில், சிக்கல், ஆக்கூர், சட்டநாதர் கோயில்களில் கலைமகள் தனித் திருமுன் பெற்றுள்ளார். தேவூர், கீழ்வேளூர், சிக்கல், வலிவலம் கோயில்களில் அறுபத்து மூன்று

திருத்தொண்டர்களுக்கும் தனி மண்டபங்களில் சிற்பங்கள் உள்ளன.

வலிவலம், கீழ்வேளூர், நல்லூர், நறையூர் ஆகிய கோயில்களில் பிடாரி, காளி, அம்மன் சிற்பங்கள் திருமுன் பெற்றுள்ளன. வலிவலத்தில் இரண்டு பிடாரிகளும் கீழ்வேளூரில் மூலவர், உற்சவராக அஞ்சுவட்டத்தம்மனும் நல்லூரில் எண்கைக் காளியும் நறையூரில் செப்புத்திருமேனியாகப் பொன்னியம்மனும் காட்சிதருகின்றனர்.

வைணவ மாடக்கோயில்களில் ஆண்டாள், விஷ்வக்சேனர், ஆழ்வார்கள் தனித் திருமுன்கள் பெற்றுள்ளனர். நறையூரில் பல வைணவ இறைவடிவங்கள் தனித் திருமுன்கள் பெற்றுள்ளன. நகரியில் திருமங்கையாழ்வாருக்கு வெற்றுத்தளத்தின் மீதான விமானம் கிடைத்துள்ளது. கோச்செங்கணான் எழுபது மாடக்கோயில்கள் எழுப்பிய பெருமை மிகு செயலைப் பதிவு செய்திருப்பதாலேயே இவ்வைணவ அடியாருக்கு இத்தகு சிறப்புச் செய்யப்பட்டிருப்பதாகக் கொள்ளலாம். கோச்செங்கணானைப் பாடிப் பரவிய சைவ அடியார்கள் யாரும் இத்தகு வாய்ப்புப் பெறவில்லை.

குடவாயில், தேவூர், அம்பர், சங்காரண்யேசுவரர், ஆக்கூர் கோயில்களில் கோச்செங்கணானின் சிற்பத்தைக் காணமுடிகிறது. மலையீசுவரத்திலும் சங்காரண்யேசுவரரிலும் ஜுரஹுரேசுவரர் இடம்பெற்றுள்ளார்.

மூன்று கோயில்களில் முனிவர் சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. பண்டாரவாடையில் தனித் திருமுன் பெற்றவராக ஞானாந்தகிரியும் மலையீசுவரத்தில் மண்டபப் பிரியராய்ப் பராசரரும் ஆக்கூரில் சுவர்த் தோன்றியாய் அகத்தியரும் காட்சி தருகின்றனர்.

**வெற்றுத்தளம்**

ஒரு தளியைப் பிற தளிகளில் இருந்து வேறுபடுத்தி மாடக்கோயிலாகக் காட்டுவது அத்தளி அமர்ந்திருக்கும் வெற்றுத்

தளமே. ஒரு தளத்திற்குரிய மூன்று உறுப்புகளைப் பெற்று உள்ளீடற்ற நிலையில் வெற்றுக் கட்டுமானமாக அமையும் வெற்றுத்தளம் ஆய்வுக்குக் கொள்ளப்பட்ட முப்பத்திரண்டு மாடக்கோயில்களிலும் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகிய நிலையில் காட்சிக்குக் கிடைக்கிறது.

சில மாடக்கோயில்களின் வெற்றுத்தளங்கள் முழுமையான தள உறுப்புகளுடன் சிறக்க அமைய, சிலவற்றில் உறுப்புக் குறைபாடுகளைக் காணமுடிகிறது. வைகல் வெற்றுத்தளம் தளத்திற்குரிய சுவடுகளை முற்றிலுமாய் இழந்து ஒரு மேடை எனக் காட்சியளிப்பது குறிப்பிடத்தக்கது. கல்வெட்டும் பதிக மும் இதை மாடக்கோயிலாகச் சுட்டாவிட்டால், இந்நூலில் இடம்பெறும் வாய்ப்பையே இக்கோயில் இழந்திருக்கும். சில மாடக்கோயில்களில் தாங்கும் கட்டுமானத்தின் சிறப்புக்கேற்ப வெற்றுத்தளங்களின் அமைப்புக் கூறுகள் மாறுபடுவதையும் காணமுடிகிறது.

ஆக்கூர் மாடக்கோயிலில் பெருமண்டபம் தாங்கும் வெற்றுத்தளம் பாதபந்தத் தாங்குதளம் கொள்ள, விமானம் சுமக்கும் வெற்றுத்தளம் தாமரை ஜகதி மட்டுமே பெற்றுச் சுவர் வளர்க்கிறது. அது போலவே பெருவேளூர்ப் பிரியாநாதர் கோயிலில் சோமாஸ்கந்தர் திருமுன், பெருமண்டபம் தாங்கும் வெற்றுத்தளம் பாதபந்தத் தாங்குதளம் கொள்ள, விமான வெற்றுத்தளத்தின் தாங்குதளம் பிரதிபந்தமாக உள்ளது.

இந்நிலையில், வெற்றுத்தளங்களின் பரவலான ஒப்பீடே இவை பற்றிய முழுமையான படப்பிடிப்பை வெளிக்கொணர முடியும். அவ்வகையில் வெற்றுத்தளங்களின் துணைத்தளம், தாங்குதளம், வேதிகைத்தொகுதி, சுவரமைப்பு, தூண்கள், சாளரங்கள், கோட்டங்கள், அவற்றில் இடம்பெற்றிருக்கும் இறை வடிவங்கள், மகரதோரணங்கள், கூரையுறுப்புகள், கபோதக் கூடு வளைவுகளில் உள்ள சிற்றுருவச் சிற்பங்கள், விமானங்களுக்கு அழைத்துச்செல்லும் படித்தள அமைப்புகள், கல்வெட்டுகளின் இருப்பு இவை பற்றிய விரிவான ஒப்பாய்வு அவசியமாகிறது.

## துணைத்தளம்

பெரும்பாலான மாடக்கோயில்களில் சுற்றுத் தரைகளின் உயர்வு காரணமாகவும் வெற்றுத்தளத்தைச் சுற்றிப் பின்னாளைய திருப்பணிகளின்போது எழுப்பப்பட்டிருக்கும் மேடைகளினாலும் துணைத்தள இருப்பை அறியக்கூடவில்லை. சிக்கல், பண்டாரவாடை திருக்கோயில்களின் வெற்றுத்தளம் துணைத்தளம் பெற்றுள்ளது. சிக்கலில் உபானம், பத்மஜகதி, பெருவாஜனம் இவை துணைத்தள உறுப்புகளாக அமைய, பண்டாரவாடையில் உபானம், கண்டம், வாஜனம் இவை உறுப்புகளாக உள்ளன. திருவிளையாட்டம் சோமாஸ்கந்தர் திருமுன் வெற்றுத்தளம் துணைத்தளம் பெற்றுள்ளது. ஆனால், இங்குத் தாங்குதளம் இல்லை.

## தாங்குதளம்

பதின்மூன்று மாடக்கோயில்களின் வெற்றுத்தளங்கள் முறையான தாங்குதளம் கொண்டுள்ளன. பாதபந்தம் நான்கு வெற்றுத்தளங்களிலும் பிரதிபந்தம் நான்கிலும் கபோதபந்தம் மூன்றிலும் பத்மபந்தம் இரண்டு வெற்றுத்தளங்களிலும் இடம் பெற்றுள்ளன. ஏழு மாடக்கோயில்களின் வெற்றுத்தளங்கள் உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம் பெற்றுள்ளன. நாங்கூர், ஆக்கூர், நறையூர், நாலூர், சேய்ஞலூர், சிக்கல், தலைச்சங்காடு சங்காரண்யேசுவரம், அம்பர், திருப்பேர்நகர், பண்டாரவாடை, இறையாநரையூர், வைகல் ஆகிய பன்னிரண்டு மாடக்கோயில் களின் வெற்றுத்தளங்கள் தாங்குதளம் பெறவில்லை.

சில மாடக்கோயில்களில் பெருமண்டபம், சோமாஸ்கந்தர் திருமுன், மையக்கோயில் இவற்றைத் தாங்கும் வெற்றுத்தளங்களுள் ஒன்றோ, இரண்டோ முறையான தாங்குதளம் பெற, மற்றவை உறுப்பு வேறுபாடற்ற தாங்குதளம் பெற்றோ, தாங்கு தளமே இல்லாமலோ காட்சிதருகின்றன. மலையீசுவரத்திலும் வலிவலத்திலும் இத்தகு மாற்றங்களைக் காணமுடிகிறது.

கீழ்வேளூர்க் கேடிலியப்பர் விமான வெற்றுத்தளத்தின் தாங்குதளம் கபோதபந்தமாக இருந்தபோதும் அதில் குமுதம்

இடம்பெறவேண்டிய இடத்தில் பெருந்தாமரை உள்ளது. நல்லூர், பெருவேளூர், திருவிளையாட்டம் இவற்றின் வெற்றுத்தளத் தாங்குதளங்கள் கல்வெட்டுகள் பெற்றுள்ளன.

தாங்குதளத்திற்கும் சுவருக்கும் இடைப்பட்ட வேதிகைத் தொகுதி மாடக்கோயில்களின் வெற்றுத்தளங்களிலும் இடம் பெற்றுள்ளது. பத்து மாடக்கோயில்கள் வேதிகைத்தொகுதி பெற்றுள்ளன. ஆனால், அவற்றுள் ஒன்றில்கூட சிற்றுருவச் சிற்பங்கள் இடம்பெறவில்லை.

**சுவர்**

ஒரு தளத்தின் சிறப்பான பகுதியாகச் சுவரைக் குறிப்பிடலாம். தாங்குதளத்திற்கு அல்லது வேதிகைத்தொகுதிக்கு மேல் அமைந்து, கூரையுறுப்புகளுள் முதலுறுப்பான உத்திரம்வரை பரவி அமையும் சுவர்ப்பகுதியே ஒரு கட்டுமானத்தின் அழகையும் பெருமிதத்தையும் தீர்மானிக்கிறது. பத்திப்பிரிப்புகள் தாங்குதள அளவில் அமைந்தாலும் அவற்றை முன்னிலைப் படுத்துவது சுவர்ப்பகுதியே. சுவரில்தான் தூண்கள், பஞ்சரங்கள், கோட்டங்கள், சிற்பங்கள், சாளரங்கள் எனப் பல்விதமான அழகமைப்புகள் இடம்பெறுகின்றன. வரலாற்றை வடித்துத் தரும் கல்வெட்டுகளுள் பெரும்பான்மையன கோயில்களின் சுவர்ப்பகுதிகளில்தான் உள்ளன.

மாடக்கோயில்களின் வெற்றுத்தளச் சுவர்கள் இறைத் திருமுன் சுவர்களுக்குச் சற்றும் குறைவில்லா விதத்தில் அமைக்கப்பட்டுள்ளன. கீழ்வேளூர், நல்லூர் வெற்றுத்தளச் சுவர்கள் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவை. கீழ்வேளூர் வெற்றுத்தளத் தின் சாலைப்பத்திகள் புறந்தள்ளியுள்ளன. தேவூர் வெற்றுத் தளத்தில் கர்ணபத்திகள், சாலைப்பத்திகள் அனைத்தும் புறந்தள்ளியுள்ளன.

இப்புறந்தள்ளலால் விளைந்திருக்கும் ஒடுக்கங்களில் குடப் பஞ்சரங்கள் இடம்பெற்றுள்ளன. வலிவலம், தலைஞாயிறு இவற்றின் வெற்றுத்தளங்களும் சாலைப்புறந்தள்ளல் பெற்றுள்ளன. வலிவலம் வெற்றுத்தளம் கருவறைக்கும் முகமண்டபத்திற்

கும் இடைப்பட்ட ஒடுக்கங்களில் குடபஞ்சரம் கொண்டுள்ளது. கீழ்வேளூர்ப் பெருமண்டப வெற்றுத்தளம் நெடும் பஞ்சாங்கள் பெற்றுள்ளது. பல மாடக்கோயில்களில் கோட்டப் பஞ்சரங்கள் காணப்படுகின்றன.

**கோட்டங்கள்**

நாலூர், வைகல், நறையூர், பசுபதிகோயில், திருப்பேர்நகர், சேய்ஞலூர், ஆறைவடதளி உள்ளிட்ட பதினான்கு வெற்றுத் தளங்களின் சுவர்கள் கோட்டம் கொள்ளவில்லை. கோட்டம் பெற்றுள்ளவற்றுள் நல்லூர் மணவழகர் வெற்றுத்தளச் சுவரே மிக அதிக அளவில் இருபத்து மூன்று கோட்டங்களைக் கொண்டுள்ளது. ஆனால், அவற்றுள் நான்கில் மட்டுமே சிற்பங்கள் இடம்பெற்றுள்ளன. ஆவூர்ப் பசுபதீசுவரர் கோயிலின் வெற்றுத்தளமும் அதிக அளவிலான கோட்டங்களைப் பெற்றுள்ளது. பெரும்பாலான வெற்றுத்தளக் கோட்டங்கள் பஞ்சர அலங்கரிப்புக் கொண்டுள்ளன. இத்தகு கோட்டங்கள் இருபுறத்தும் சட்டத்தலை பெற்ற அல்லது பெறாத அரைத் தூண்களால் அணைக்கப்பட்டு, மேலே போதிகையும் கூரை உறுப்புகளும் கொண்டு, கபோத நீட்சியும் கிரீவமும் சாலை சிகரமும் தூபிகளும் பெற்றுத் திகழ்கின்றன.

சில மாடக்கோயில்களில் விமானம், முகமண்டபம் இவற்றிற்கான வெற்றுத்தளக் கோட்டங்கள் மகரதோரணத் தலைப்புப் பெற்றுள்ளன. தலைச்சங்காடு சங்காரண்யேசுவரர் பெருமண்டபத்திற்கான வெற்றுத்தளக் கோட்டங்களின் மீதும் மகரதோரணத் தலைப்புக் காணப்படுகிறது. கீழ்வேளூர்க் கேடிலியப்பர் பெருமண்டப, சோமாஸ்கந்தர் விமான வெற்றுத் தளக் கோட்டங்களும் ஆவூர் வெற்றுத்தளக் கோட்டங்களும் மகரதோரணத் தலைப்புக் கொண்டுள்ளன. கீழ்வேளூர் வெற்றுத் தள மகரதோரணங்கள் பிற்காலத்தன எனினும் எண்ணிக்கையில் பலவாய்ச் சிற்றுருவச் சிற்பங்களைக் கொண்டுள்ளன.

**கோட்டச்சிற்பங்கள்**

இறைவன் விமானம், முகமண்டபம் இவற்றிற்கான வெற்றுத் தளம் விமானம், முகமண்டபம் போலவே கோட்டங்கள்

பெற்றுள்ளது. விமானத்திற்கான பகுதியில் தெற்கு, மேற்கு, வடக்கு முத்திசைகளிலும் கோட்டங்கள் அமைய, முகமண்ட பத்திற்கான பகுதியில் தெற்கிலும் வடக்கிலும் கோட்டங்கள் உள்ளன. சோமாஸ்கந்தர் விமானத்திற்கான வெற்றுத்தளப் பகுதியும் பெரும்பாலான மாடக்கோயில்களில் கோட்டங்கள் பெற்றுள்ளது. எனினும், சிலவற்றிலேயே இக்கோட்டங்கள் சிற்பங்கள் கொண்டுள்ளன.

முகமண்டபத்திற்கான வெற்றுத்தளக் கோட்டங்கள் தெற்கில் விநாயகரையும் வடக்கில் கொற்றவை அல்லது மகிடாசுரமர்த்தனி சிற்பத்தையும் ஏற்றுள்ளன. நல்லூர்க் கொற்றவை சோழர் காலச் சிற்பமாகும். மாடக்கோயில்களில் காணப்படும் கொற்றவை, மகிடாசுரமர்த்தனி சிற்பங்களில் நல்லூர்க் கொற்றவையே இணையற்ற எழிலி. பிள்ளையார் பெரும்பாலும் இலலிதாசனத்திலும் சில இடங்களில் ஊர்த்வஜாநு கரணத்திலும் காணப்படுகிறார்.

பெரும்பாலான மாடக்கோயில்களின் விமான வெற்றுத் தளக் கோட்டங்கள் தெற்கில் ஆலமர்அண்ணலையும் மேற்கில் இலிங்கோத்பவரையும் வடக்கில் நான்முகனையும் பெற்றுள்ளன. ஆலமர்அண்ணல், நான்முகன் சிற்பங்களுள் பல சோழர் காலத்தனவாய் உள்ளன. இலிங்கோத்பவர் சிற்பங்களுள் பெரும்பாலான பின்னாளையன. ஆலமர்அண்ணல் சிற்பங்களுள் பல இறைவனின் வலப்புறம் அமர்நிலை எருதைக் கொண்டுள்ளன. கீழ்வேளூர் வெற்றுத்தளம் வீணையேந்திய சிவபெருமானின் சிற்பங்களைக் கொண்டுள்ளது. வலிவலம் வெற்றுத்தளம் மேற்குக் கோட்டத்தில் இலிங்கோத்பவருக்கு மாற்றாக முருகன் சிற்பத்தைக் கொள்ள, தேவூரில் விஷ்ணு காட்சிதருகிறார். நகரியில் யோகநரசிம்மரும் நல்லூரில் உச்சிஷ்ட கணபதியும் கோட்டச் சிற்பங்களாகியுள்ளனர். அம்பரில் விஷ்ணு வடக்குக் கோட்டத் தெய்வமாக இடம்பெற, இறையாநரையூரில் பலகைச் சிற்பமாகத் தெற்கில் பிள்ளையார் காட்சி தருகிறார். ஆலம்பாக்கம் விமான வெற்றுத்தளக் கோட்டங்களில் விஷ்ணு, பதஞ்சலி நிற்க, முகமண்டப வெற்றுத்தளக் ! கோட்டங்களில் இலட்சுமியும் சூரியனும் உள்ளனர்.

**சுவர்ச் சிற்பங்கள்**

கோட்டங்களே இல்லாத வெற்றுத்தளங்களுள் பசுபதிகோயில், ஆறைவடதளி, பண்டாரவாடை வெற்றுத்தளங்கள் சிற்பங்கள் பெற்றுள்ளன. ஆறைவடதளியில் அமர்நீதிநாயனார், அவர் துணைவியார், வீணையேந்திய சிவபெருமான் இடம் பெற, பண்டாரவாடையில் தென்புறத்தே வணங்கிய நிலையில் ஓர் ஆடவர் சிற்பமும் மேற்கில் விநாயகர் சிற்பமும் காணப்படுகின்றன. பசுபதிகோயில் வெற்றுத்தள மேற்குப்பகுதியில் எண்ணிறந்த சிற்பங்கள் உள்ளன. அவற்றுள் சில இறைவடிவங் களாகவும் சில ஊரக வாழ்க்கையின் காட்சி விளக்கங்களாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கோட்டங்கள் உள்ளபோதும் சில வெற்றுத்தளங்கள் சுவர்ச் சிற்பங்களைக் கொண்டுள்ளன. திருவிளையாட்டம் முளைத்தெழுந்த நாயனார் வெற்றுத்தளம் அக்கோயிலை எடுப்பித்த எதிரிலி சோழப் பல்லவராயரின் உருவச் சிற்பத்தையும் அவர் செயலைக் குறிக்கும் கல்வெட்டையும் கொண்டுள்ளது. கல்வெட்டில் வெற்றுத்தளமும் அதன் மேலிருக்கும் விமானமும் 'திருமலை' என்ற ஒற்றைச் சொல்லால் குறிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டு 13ம் நூற்றாண்டு எழுத்தமைதியில் உள்ளது. தலைச்சங்காடு சங்காரண்யேசுவரர் வெற்றுத்தளம் இணையர் சிற்பம் கொள்ள, ஆவூர், சிக்கல் வெற்றுத் தளங்களில் சிற்பத் தொடர்கள் இடம்பெற்றுள்ளன. அம்பர் பெருந்திருக்கோயில் வெற்றுத்தளம் கிழக்கு முகத்தில் மூன்று சிற்பங்களைக் கொண்டுள்ளது.

**தூண்கள்**

பெரும்பாலான மாடக்கோயில்களில் வெற்றுதளச் சுவரைத் தழுவியுள்ள அரைத்தூண்கள் நான்முகமாகவே அமைந்துள்ளன. எண்முக அரைத்தூண்களைத் தேவூர், பெருவேளூர், பண்டார வாடை, ஆவூர்க் கோயில்களில் காணமுடிகிறது. இந்திரகாந்த அரைத்தூண்கள் தேவூர் பெருமண்டப, முன்மண்டப வெற்றுத் தளச் சுவரை அணைத்துள்ளன. நான்முக அரைத்தூண்கள், சில வெற்றுத்தளங்களில் உறுப்பு வேறுபாடற்றனவாகவும் சிலவற்றில்

அனைத்து உறுப்புகளையும் பெற்றனவாகவும் உள்ளன. முறையான தாங்குதளமற்ற வெற்றுத்தளங்கள் சிலவற்றின் சுவரை அணைத்துள்ள நான்முக அரைத்தூண்கள் நெடியனவாய் உறுப்பு வேறுபாடின்றி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

**போதிகைகள்**

தூண்களுக்கும் கூரையுறுப்புகளுக்கும் இடைப்பட்டு அமையும் போதிகை, கட்டுமானங்களின் காலத்தை அறிய உதவும் உறுப்பாகும். பன்னிரண்டு மாடக்கோயில்களின் வெற்றுத் தளங்களில் வெட்டுத் தரங்கப் போதிகைகள் காணப்படுகின்றன. ஏழு மாடக்கோயில்களில் பூமொட்டுப் போதிகைகள் இடம் பெற்றுள்ளன. சில கோயில்களின் போதிகைகள் செவ்வகச் சில்லுகளாகத் தோற்றம் காட்டுகின்றன. எட்டு மாடக்கோயில்களின் வெற்றுத்தளங்கள் போதிகைகள் பெறவில்லை. அவற்றுள் சிலவற்றில் அரைத்தூண்களே நேரடியாக உத்திரம் தாங்குகின்றன. சில வெற்றுத்தளங்கள் அரைத்தூண்களோ, போதிகை களோ பெறாத நெடுஞ்சுவர் கொண்டு உத்திரம் தாங்குகின்றன.

**கல்வெட்டுகள்**

தலைச்சங்காடு, தேவூர், வலிவலம், சிக்கல், குடவாயில், பசுபதிகோயில், திருவிளையாட்டம், ஆலம்பாக்கம், இறையாநரையூர்க் கோயில்களின் வெற்றுத்தளங்கள் கல்வெட்டுகள் கொண்டுள்ளன. அவற்றுள்ளும் தலைச்சங்காடும் திருவிளையாட்டமுமே அதிக அளவில் கல்வெட்டுகள் பெற்றுள்ளன. வெற்றுத்தளக் கல்வெட்டுகளுள் பெரும்பாலானவை திருப்பணிகளின் காரணமாகத் துணுக்குகளாக மாறியுள்ளமை துன்பமான நிகழ்வாகும்.

**கூரையுறுப்புகள்**

உத்திரம், வாஜனம், வலபி, கூரை நீட்சியான கபோதம், தளமுடிவு காட்டும் பூமிதேசம் இவை கூரையுறுப்புகளாகும். அவற்றுள் பூதவரி பெறுவதால் வலபியும் கூடுகளில் சிற்றுருவச் சிற்பங்கள் பெறுவதால் கபோதமும் கட்டுமான எழிலுக்குக் காரணமாகின்றன. மாடக்கோயில் வெற்றுத்தளங்களில் தேவூர்,

வலிவலம், குடவாயில் இம்மூன்று மட்டுமே வலபியில் பூதவரி பெற்றுள்ளன. எட்டுக் கோயில்களின் வலபி தாமரையிதழ்களைப் பெற்றுள்ளது. சிலவற்றில் மதலைகள் உள்ளன. வைகல், நன்னிலம், நாலூர், நறையூர், சேய்ஞலூர்க் கோயில்களில் வலபி இடம்பெறவில்லை.

பெரும்பாலான வெற்றுத்தளங்களின் கபோதக் கூடுகள் ஆழமற்று வெறுமையாக உள்ளன. சிலவற்றில் கொடிக்கருக்குகளைக் காணமுடிகிறது. கீழ்வேளூர், தேவூர், குடவாயில், தலைஞாயிறு, ஆவூர் இவற்றில் மட்டுமே கபோதக்கூடுகளில் சிற்றுருவச் சிற்பங்களைக் காணமுடிகிறது. தலைஞாயிறு கபோதக்கூட்டிலுள்ள ஆடவல்லானின் ஆனந்தத்தாண்டவக் கோலம் குறிப்பிடத்தக்கது. கீழ்வேளூர்க் கபோதக்கூடுகள் அதிக அளவிலான சிற்பங்களைப் பெற்றுள்ளன. தேவூர்க் கபோதக் கூடுகளில் ஆடற்பெண்கள், கழைக்கூத்து, உச்சிஷ்டகணபதி சிற்பங்கள் உள்ளன.

**படியமைப்பு**

வெற்றுத்தளத்தை ஊடுருவி அமைந்து மேலிருக்கும் கட்டுமானங்களுக்கு வழி தரும் படியமைப்பு மாடக்கோயில்களின் தனிச் சிறப்பாகும். பெரும்பாலான மாடக்கோயில்களில் இத்தகு படியமைப்புகள் ஒருபுறத்து மட்டுமே அமைந்துள்ளன. ஒன்பது மாடக்கோயில்களில் இவை இருபுறத்தும் இருக்கின்றன. திருப்பேர்நகரும் இறையாநறையூரும் முத்திசைகளில் படியமைப்புப் பெற்றுள்ள கோயில்களாகும். குறைந்த அளவிலான படிகள் இந்தளூரிலும் வைகலிலும் அமைய, அதிக அளவி லானவை நல்லூரில் காணப்படுகின்றன. இருபதுக்கும் மேற்பட்ட படிகள் நான்கு கோயில்களிலும் பதினைந்திற்கும் மேற்பட்டவை பத்துக் கோயில்களிலும் உள்ளன.

படித்தொடரில் கொடிமரம், பலித்தளம் அமைந்திருப்பது திருப்பேர்நகரில் மட்டுமே. சில படித்தொடர்கள் துளைக்கைப் பிடிச்சுவர் அல்லது அலங்காரப் பிடிச்சுவர் கொண்டுள்ளன. ஆவூர்ப் படித்தொடர் சங்கநிதி, பத்மநிதி சிற்பங்களைக்

கொண்டுள்ளது. தலைஞாயிறு, ஆவூர் மாடக்கோயில்களில் படித்தொடரின் கீழ்ப்படி சந்திரக்கல்லாக அமைந்துள்ளது.

**உயரம், அமைப்பு**

மாடக்கோயில்களின் வெற்றுத்தளங்கள் பல்வேறு உயர அளவுகள் பெற்றுள்ளன. மிக உயரமான (5.60 மீ) வெற்றுத் தளத்தை நறையூரில் காணமுடிகிறது. கீழ்வேளூர், நல்லூர். பெருவேளூர், மலையீசுவரம், ஆவூர் வெற்றுத்தளங்கள் நான்கு மீட்டருக்கு மேலுள்ளன. மிகக் குறைந்த உயரமுடைய வெற்றுத் தளம் 1 56 மீ. அளவில் ஆக்கூரில் அமைய, 1. 57 மீ. உயர வெற்றுத் தளம் வைகலிலும் 1. 76 மீ. உயர வெற்றுத்தளம் நாலூரிலும் காணப்படுகின்றன. எஞ்சிய மாடக்கோயில்களின் வெற்றுத்தளங்கள் 1.90 மீட்டரில் இருந்து 4 மீ. உயரத்திற்குள் அமைந்துள்ளன.

இருபத்தொரு மாடக்கோயில்களின் வெற்றுத் தளங்கள் கருங்கல் பணிகளாக அமைய, ஒன்பது செங்கல் பணிகளாக உள்ளன. பெருவேளூர், பண்டாரவாடை வெற்றுத்தளங்கள் இரண்டும் இணைந்த கலப்புப் பணியாக உள்ளன.

**கோபுரம்**

முப்பத்திரண்டு மாடக்கோயில்களில் கோபுரம் சிதைந்த நிலையில் காட்சியளிப்பது ஆறைவடதளி மட்டுமே. ஆலம்பாக்கம் மாடமேற்றளிக்குக்கும் பெருங்கடம்பனூர்க் கோயிலுக்கும் கோபுரம் இல்லை. பத்துக் கோயில்கள் எளிய வாயில்களைப் பெற்றுள்ளன. குடவாயில், சங்காரண்யேசுவரர் கோயில்கள் ஒருதளக் கோபுரம் பெற, ஒன்பது கோயில்கள் முத்தளக் கோபுரம் கொண்டுள்ளன. ஆறு கோயில்கள் ஐந்து தளக் கோபுரத்துடன் காட்சிதர, சிக்கலும் நகரியும் எழுதளக் கோபுரங்களுடன் செம்மாந்து நிற்கின்றன. நகரி, நறையூர், இறையா நரையூர் முதலிய கோயில்கள் ஒன்றுக்கு மேற்பட்ட கோபுரங்களைப் பெற்றுள்ளன.

**செப்புத் திருமேனிகள்**

பெரும்பாலான மாடக்கோயில்களில் செப்புத்திருமேனிகளைக் காணமுடிகிறது. சிவன் கோயில்களில் ஆடவல்லான்,

சோமாஸ்கந்தர், இன்பவல்லித் திருமேனிகளும் விஷ்ணு கோயில்களில் உற்சவர், ஆண்டாள், ஆழ்வார் திருமேனிகளும் உள்ளன. சில சிவன் கோயில்களில் பள்ளியறை இறைத்தொகுதி, பிள்ளையார். சண்டேசுவரர், மாணிக்கவாசகர் திருமேனிகளும் காணப்படுகின்றன அது போலவே நறையூர், நகரி விஷ்ணு கோயில்களில் பரமபதநாதர் முதலிய விஷ்ணுவின் திருத்தோற்றங்கள் சில செப்புத்திருமேனிகளாக அமைந்துள்ளன.

பதினொரு கோயில்களில் இடம்பெற்றுள்ள ஆடவல்லான் திருமேனிகளுள் குடவாயில், நல்லூர், ஆக்கூர், கீழ்வேளூர் ஆகிய கோயில்களில் உள்ளவை சிறப்புக்குரியவை. குடவாயில் ஆடவல்லான் தளத்தில் அத்திருமேனியை அளித்த மாலை தாழ் மார்பன் தம்மையும் தம் பெயரையும் இடம்பெறச் செய்துள்ளார். ஆக்கூரில் குடமுழவுக் கலைஞர் தளத்தின் வலப்புறத்தே அமர, இலைத்தாளம் இசைப்பவர் இடப்புறத்தே இருக்க, இறைவன் ஆடும் காட்சி கண்ணுக்கு விருந்தாகிறது. நல்லூரில் ஆனந்தத் தாண்டவ ஆடவல்லானுடன் தலைக்கோல் நாயகரும் இடம் பெற்றிருந்தமை எண்ணத்தக்கது. தற்போது தலைக்கோல் நாயகர் பாதுகாப்புக் கருதி திருவிடைமருதூரில் அடைக்கலமாகியுள்ளார்.

கீழ்வேளூர் அர்த்தஸ்வஸ்திகர் பிற்காலத்தவர் எனினும் தனிச் சிறப்புடையவர். தமிழ்நாட்டின் வேறெந்தக் கோயிலிலும் இடம்பெறாத இத்திருமேனி கேடிலியப்பரின் பெருமைக்குரிய புதையலாகும். 108 கரணங்களுள் ஒன்றான அர்த்தஸ்வஸ்திகத்தை நிகழ்த்தும் இப்பெருமானின் ஆடலுக்கு இசை தருபவர்களாய் நான்முகனும் விஷ்ணுவும் தத்தம் தேவியருடன் காட்சி தருகின்றனர். கலைமகள் வீணை இசைக்க, நான்முகன் செண்டு தாளம் இயக்க, விஷ்ணுவின் கைகளில் மத்தளம். ஆடலுக்கு நட்டுவாங்கமாய்த் திருமகளின் கைகள் தாளம் எழுப்புகின்றன. இந்த இணையற்ற இசையாடல் குழுவினர் கேடியலியப்பருக்குத் தனிப்பெரும் சிறப்புத் தந்துள்ளனர்.

பல கோயில்களில் சோமாஸ்கந்தர் திருமேனிகள் இருந்தாலும் சிறப்புக்குரியனவாக வலிவலம், குடவாயில், தேவூர்,

நல்லூர்த் திருமேனிகளைக் குறிக்கலாம். எழிலார்ந்த இன்பவல்லி அன்னைகளை நல்லூர், வலிவலம், அம்பர் கோயில்களில் காணமுடிகிறது.

சிறப்புக்குரிய செப்புத்திருமேனிகளாகச் சிக்கல் சிங்கார வேலர், சட்டநாதர் கோயில் சட்டநாதர், ஆக்கூர் ஆயிரத்தில் ஒருவர், அம்பர் காளைத்தேவர், நகரி சேனைமுதலியார், நறையூர்ப் பரமபதர், பொன்னியம்மன், கீழையூர் இராமர் தொகுதி, கோபாலர் இணை ஆகியவற்றைக் குறிக்கலாம். இவற்றுள் முதன்மை விமானம் பெற்றிருக்கும் ஒரே திருமேனியாகச் சட்டநாதர் அமைய, விஷ்ணு கோயிலில் வழிபாடு பெற்றிருக்கும் ஒரே அம்மனாகப் பொன்னியம்மன் தனியாட்சி செய்கிறார்.

**சறப்புச் சிற்பங்கள்**

பல்வேறு காலகட்டத் திருப்பணிகளைச் சந்தித்த நிலையிலும் கட்டமைப்பில் பல்லவர், சோழர் கால எச்சங்களையும் (நல்லூர், தலைஞாயிறு) சிற்பங்களாகவும் செப்புத்திருமேனிகளாகவும் சோழர் கால வடிவங்கள் சிலவற்றையும் பெற்றுள்ள மாடக்கோயில்கள், பழங் கல்வெட்டுகளையும் தக்கவைத்துக் கொண்டிருப்பது காலம் வரலாற்றிற்குக் காத்துத் தந்திருக்கும் கொடையெனலாம். பிற்காலச் சிற்பங்களும் சுதையுருவங்களும் செப்புத்திருமேனிகளும் இணைக்கப்பட்டிருந்தபோதும் அவை அவ்வக் கோயில்களுக்கு ஏதேனும் ஒரு வகையில் சிறப்போ, பெருமையோ சேர்ப்பனவாகவே அமைந்துள்ளன.

சோழர் எச்சமாக இயமனை அழித்த மூர்த்தியின் சிற்பத் தொகுதியைக் கொண்டிருக்கும் பசுபதிகோயிலின் கோபுரம், வெளிச்சுற்றின் மேற்குச் சுவர் இவற்றில் காணப்படும் பின்னாளைய சிற்பங்கள் சமுதாய, சமயஞ் சார்ந்த நிகழ்வு களின் வெளிப்பாடுகளாக அமைந்துள்ளன. இங்குள்ள உச்சிஷ்ட கணபதியின் சிற்பம் காலத்தால் பிற்பட்டதெனினும் தனித்தன்மையுடன் அமைந்துள்ளது. நல்லூர் உச்சிஷ்டர் சோழர் காலத்தவர். அங்குள்ள கோட்டக் கொற்றவையும் தலைச்சங்காடு சங்காரண்யேசுவரர் கோட்டக் கொற்றவையும் மாடக்கோயில் கொற்றவைகளுள் முதலில் வைத்து எண்ணத்தக்க

சோழர் காலப் படிமங்களாகும். சிற்பத்தொகுதிகளின் இணைவு பெற்ற நுழைவாயிற் கதவுகள் பெற்றிருக்கும் ஒரே கோயிலாகவும் நல்லூர் அமைந்துள்ளது. இச்சிற்பங்களும் அவை அமைந்த காலத்தின் சமய, சமுதாயச் சூழல்களைப் படம் பிடிப்பனவாய் உள்ளன.

ஆறைவடதளியில் உள்ள சோழர் கால இசைக்குழுச் சிற்பம் தப்பிப் பிழைத்திருக்கும் கலைத்தொகுதியாகும். இங்குள்ள நின்றகோலப் பிள்ளையாரும் ஆடவர் வடிவத்தைத் தளத்தில் பெற்ற நான்முகன் வடிவமும் சிறப்புக்குரியன. சேய்ஞலூரில் உள்ள சண்டேசுவரர் சிற்பமும் அக்கோயில் மகரதோரண வளைவுகளில் காணப்படும் சிவபெருமான், பிள்ளையார் சிற்பங்களும் சோழர் காலத்தன. இம்மூன்றனுள் சிவபெருமான் சிற்பம் கண்ணுள் வினைஞர் கைவண்ணமாகும்.

அம்பரின் வெற்றுத்தளத்தில் உள்ள மூன்று சிற்றுருவச் சிற்பங்களும் சோழர் காலத்தன. அவற்றுள் தேர்ச் சிற்பம் தனித்தன்மையது. மலையீசுவரத்துக் கிழக்குச் சுற்றிலுள்ள சிம்ம உமாமகேசுவரர் பிற்காலப் பல்லவர் சிற்பமாகலாம். தலைச்சங் காடு சங்காரண்யேசுவரர் கோயில் ஆலமர்அண்ணல் சோழர் காலத்தவர். அங்குள்ள பலித்தளம் சிற்பம் போல் செதுக்கப்பட்ட அரிய வேலைப்பாடுகள் கொண்ட அமைப்பாகும்.

ஆவூர்க் கோயில் வடசுற்றில் மரத்தடியில் காணப்படும் கொற்றவையும் தலைஞாயிறு வளாகத்தின் வடசுற்றில் புதைந்து கிடக்கும் நான்முகன், மகிடாசுரமர்த்தனி சிற்பங்களும் சோழர் காலத்தன. இறையாநரையூர்ச் சுற்றுமாளிகையிலும் அம்மன் கோயில் மண்டபத்திலும் உள்ள விக்னேசுவரி, சாமுண்டி, கௌமாரி, நான்முகிச் சிற்பங்களும் சோழர் காலத்தவையே. பலகைச் சிற்பங்களாக அமைந்துள்ள இவை நடுநாட்டுக் கலைவண்ணத்திற்குச் சிறந்த காட்டுகளாகத் திகழ்கின்றன. நகரியின் கோட்ட நரசிம்மர், இந்தளூர்க் கதிரவன் இவையும் குறிப்பிடத்தக்க பழஞ் சிற்பங்களாகும்.

நறையூரிலும் குடவாயிலிலும் தொடராகக் காணப்படும் ஆடற்சிற்பங்கள் தனி ஆய்வுக்கு உரியன. தலைக்கோலிகள், தளி

யிலார்கள், கூத்திகள், இசையறிஞர்கள், இசைக்கலைஞர்கள் எனப் பதின்மூன்று, பதினான்காம் நூற்றாண்டுக் கலை வரலாற்றுப் புதையலாய் அமைந்துள்ள நறையூர் ஆடற்தொருதிகள் ஆடற்கலை ஆய்வாளர்களுக்குப் பல புதிய சிந்தனைகளை வழங்கவல்லன. இங்குள்ள கல் கருடன் தமிழ்நாட்டின் வேறெந்தக் கோயிலிலும் இடம்பெறாத புதுமையாகும்.

நறையூர் போலவே கீழ்வேளூர்க் கேடிலியப்பரும் கட்டுமானம், சிற்பம், செப்புத்திருமேனிகள் எனப் பல்வகையிலும் சிறப்புடன் விளங்குகிறது. எண்திசைக் காவலர் சிற்பங்களை விமானக் கீழ்த்தளத்தின் கர்ணபத்திகளில் கொண்டிருக்கும் இவ்விமானம் முழுமையுமே கருங்கல் பணியாகும். இக்கோயிலில் உள்ள ஆலமர்அண்ணல் சிற்பம் சோழர் காலப் படிமமாகும். வெற்றுத்தளக் கோட்டங்களில் காணப்படும் சிற்பங்கள், மகரதோரண அமைப்புகள் இவையும் குறிக்கத்தக்கன. இக்கோயிலின் சுற்றுச் சுவரில் தெற்கு, மேற்கு, வடக்கு முப்புறத்தும் இடம்பெற்றுள்ள மராத்தியர் காலச் சிற்பங்கள் அக்காலகட்ட வாழ்வியல் முறைகளை விளக்குவனவாய் அமைந்துள்ளன. மாடக் கோயில்களிலேயே மிகுதியான அளவில் பாலுணர்வுச் சிற்பங்களைப் பெற்றிருக்கும் ஒரே கோயிலும் கேடிலியப்பர்தான்.

சிக்கல் கோயிலில் காணப்படும் மரங்கள், முனிவர்கள் அடங்கிய கிரந்தக் கல்வெட்டுடனான சிற்பத்தொகுதி பிற்காலத்தது எனினும் தனித் தன்மையதே. பல மாடக்கோயில் மண்டபத் தூண்களின் சதுரங்களில் காணப்படும் சிற்றுருவச் சிற்பங்களும் தனித்த ஆய்வுக்குரியன. அவற்றுள் பல அவை பிறந்த கால கட்டம் சார்ந்த சமுதாய நம்பிக்கைகளையும் வாழ்வியல் முறைகளையும் படம்பிடிப்பனவாக அமைந்துள்ளன. சேய்ஞலூர், திருப்பேர்நகர், இறையாநரையூர், பெருவேளூர், கீழ்வேளூர், சிக்கல் கோயில்களில் காணப்படும் சிற்பங்கள் குறிக்கத்தக்கன.

### சிறப்பான கட்டமைப்புகள்

அனைத்து மாடக்கோயில்களுமே சிறப்பான கட்டமைப்புகளுடன் விளங்கியபோதும் நறையூர், கீழ்வேளூர், இறையா நரையூர், தேவூர், வலிவலம், சிக்கல், நகரி, ஆவூர்க் கட்டுமானங்

கள் எழுச்சியும் செழுமையும் பெருமிதமும் ஒருங்கே வெளிப்படும் வகையில் செம்மாந்து விளங்குகின்றன. மதுரை திருமலை நாயக்கர் அரண்மனைத் தூண்களொத்த தூண் வரிசை பெற்ற பிற்கால நடைமண்டபத்துடன் தொடங்கும் நறையூரின் தென் சுற்றில் காணப்படும் திராவிட சிகரம் பெற்ற மண்டபம் கீழ்வேளூர் வெளிச்சுற்றில் உள்ள திராவிட சிகரக் கட்டுமானத்துடன் ஒப்பிடத்தக்க சிறப்புடன் திகழ்கிறது.

கீழ்வேளூர்க் கோயிலின் வெற்றுத்தளம் தமிழ்நாட்டு மாடக் கோயில்களிலேயே மிகச் சிறப்பான கட்டமைப்புப் பெற்ற வெற்றுத்தளம் எனலாம். அதில் இடம்பெற்றிருக்கும் பஞ்சரங்களும் கோட்ட அலங்கரிப்புகளும் மகரதோரண விரிவுகளும் வேறெந்த மாடக்கோயிலின் வெற்றுத்தளத்திலும் இடம்பெற வில்லை. விமான அமைப்பிலும் கீழ்வேளூர்க் கோயிலை விஞ்சும் வகையில் வேறொரு கட்டுமானம் அமையவில்லை என்றே கூறலாம். கீழ்வேளூருக்கு அடுத்த நிலையில் நல்லூர் மாடக்கோயிலின் வெற்றுத்தளத்தையும் விமானத்தையுமே முன்னிருத்த முடியும். சோழர் காலத் தாங்குதளத்துடன் கம்பீர மாக எழுந்து நிற்கும் நல்லூர் வெற்றுத்தளமே தமிழ்நாட்டு மாடக்கோயில்களிலே அதிக எண்ணிக்கையிலான கோட்டங்களைப் பெற்றுள்ளது எனலாம். இறையாநரையூரும் நகரியும் ஒன்று போல் வைத்து எண்ணத்தக்க வெற்றுத்தளங்களைப் பெற்றிருந்தபோதும் மங்கையாழ்வார் விமான வெற்றுத்தள அலங்கரிப்பு அதற்குக் கூடுதல் சிறப்புச் சேர்க்கிறது.

ஆக்கூர் அம்பலவாணர் திருமுன்னும் ஆவூரில் காணப்படும் வடகிழக்கு வளாக மண்டபமும் சிறப்பான கட்டுமானங்களாகக் குறிக்கத்தக்கன.

**கல்வெட்டுகள்**

பண்டாரவாடை, பெருங்கடம்பனூர் தவிர ஏனைய அனைத்துக் கோயில்களும் கல்வெட்டுகள் பெற்றுள்ளன. அதிக அளவிலான கல்வெட்டுகள் (83) இறையாநரையூரில் பதிவாகியுள்ளன. அவற்றுள் காலத்தால் முற்பட்டது முதலாம் இராஜராஜரின் கல்வெட்டாகும். அதற்கு அடுத்த நிலையில் இருபத்து

மூன்று கல்வெட்டுகள் பெற்றுள்ள நல்லூரில் உத்தமசோழரின் கல்வெட்டு காணப்படுகிறது. தலைஞாயிறு கோயில் வளாகத்தில் பத்தொன்பது கல்வெட்டுகள் உள்ளன. அவற்றுள் காலத்தால் முற்பட்டதாக இரண்டாம் இராஜாதிராஜரின் கல்வெட்டைக் குறிப்பிடலாம்.

குறைவான அளவில் கல்வெட்டுகள் பெற்றுள்ள கோயில்களாக ஆவூர், வடதளி, மலையீசுவரம், இந்தளூர், நன்னிலம், நகரி, கீழையூர், தட்சிணபுரீசுவரம், சட்டநாதர் கோயில்களைச் சுட்டலாம். மாடக்கோயில் கல்வெட்டுகளில் காலத்தால் முற்பட்ட இராஜகேசரியின் 24ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் முதற் பராந்தகரின் 22ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் நாலூரில் உள்ளன. முதற் பராந்தகரின் 38ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஆலம்பாக்கத்திலும் நாலூரிலும் காணப்படுகின்றன. இரண்டாம் பாண்டியப் பேரரசுக் காலக் கல்வெட்டுகள் சிக்கல், தேவூர், நறையூர், வலிவலம், பெருவேளூர் முதலிய கோயில்களில் இருந்து படியெடுக்கப்பட்டுள்ளன. கிருஷ்ணதேவராயரின் கல்வெட்டுகள் நறையூர், திருவிளையாட்டம், நகரி ஆகிய கோயில்களில் கிடைத்துள்ளன.

முப்பத்திரண்டு புதிய கல்வெட்டுகள் பதினான்கு கோயில்களில் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்பது கல்வெட்டுகள் திருவிளையாட்டத்திலும் ஏழு கல்வெட்டுகள் கீழ்வேளூரிலும் மூன்று கல்வெட்டுகள் நல்லூரிலும் உள்ளன. நறையூர், சட்டநாதர், கீழையூர்க் கோயில்களில் இடத்திற்கு இரண்டு கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. நாலூர், குடவாயில், வைகல், தேவூர், தலைஞாயிறு, தலைச்சங்காடு சண்காரண்யேசுவரர், தட்சிணபுரீசுவரர், சேய்ஞலூர்க் கோயில்களில் இடத்திற்கு ஒரு கல்வெட்டு கண்டறியப்பட்டுள்ளது. பசுபதிகோயில், ஆறைவடதளி, மலையீசுவரம், சிக்கல் கோயில்களில் புதிய கல்வெட்டுகள் இடம்பெற்றுள்ளபோதும் படித்தறியக்கூடவில்லை. நல்லூரிலும் இறையாநரையூரிலும் புதிய கல்வெட்டுகள் கிடைக்கும் வாய்ப்பு இருந்தபோதும் கால நெருக்கடி காரணமாகத் தேடித் தொகுக்க இயலவில்லை.

## பாடல் பெற்றவை

முப்பத்திரண்டு மாடக்கோயில்களில் இருபது கோயில்கள் பாடல் பெற்றுள்ளன. அவற்றுள் பதினாறு கோயில்கள் சிவபெருமானுக்கு உரியவை. நான்கு கோயில்களில் விஷ்ணு குடிகொண்டுள்ளார். பாடல் பெறாத பன்னிரண்டு கோயில்களில் சிவபெருமான் கோயில்கள் பத்து. எஞ்சிய இரண்டும் (கீழையூர், ஆலம்பாக்கம்) விஷ்ணுவிற்குரியவை. சிவபெருமான் கோயில்களில் பதினான்கு கோயில்களை சம்பந்தர் பாடியிருக்கிறார். அப்பர் ஐந்து கோயில்களையும் சுந்தரர் மூன்று கோயில்களையும் பாடிப் பரவியுள்ளனர். சம்பந்தரும் அப்பரும் இணைந்து பாடிய கோயில்களாகப் பெருவேளூர், ஆக்கூர், நல்லூர் ஆகியன அமைய, சம்பந்தரும் சுந்தரரும் இணைந்து பாடிய ஒரே கோயிலாகத் தலைஞாயிறைக் கொள்ளலாம். சம்பந்தர், அப்பர், சுந்தரர் மூவர் பதிகங்களும் பெற்ற பெருமைக் குரிய தனிப்பெரும் மாடக்கோயிலாக அமைந்துள்ளது வலிவலம். அப்பர் பெருந்தகையின் பதிகம் மட்டுமே பெற்ற கோயிலாக ஆறைவடதளி பொலிய, சுந்தரர் பதிகம் மட்டுமே பெற்றதாக நன்னிலம் மதுவனேசுவரர் கோயில் திகழ்கிறது.

விஷ்ணு கோயில்களில் நம்மாழ்வார், பெரியாழ்வார், மங்கையாழ்வார், திருமழிசை ஆழ்வார் பாசுரங்கள் பெற்ற ஒரே மாடக்கோயில் எனும் பெருமையைப் பெறுகிறது திருப்பேர்நகர். திருவாலி, திருநகரியைக் குலசேகர ஆழ்வாரும் மங்கையாழ்வாரும் பாடியுள்ளனர். நறையூரையும் நாங்கூரையும் பாடி யிருப்பவர் மங்கையாழ்வார் மட்டுமே. இந்நான்கு கோயில்களையும் பாடிப் பரவிய பெருமையும் மங்கையாழ்வாருக்கே உரியதாகும். அதிக எண்ணிக்கையில் 110 பாசுரங்களைப் பெற்றுள்ள கோயிலாக நறையூர் விளங்க, திருவாலி, திருநகரி அடுத்த நிலையில் 42 பாசுரங்கள் பெற்றுள்ளது.

## நாயன்மார்கள், ஆழ்வார்கள்

மாடக்கோயில்களுடன் தொடர்புடையவர்களாக அமர்நீதி நாயனார், சண்டேசுவரர், சிறப்புலி நாயனார் ஆகிய நாயன்மார்களும் ஆழ்வார்களுள் மங்கையாழ்வாரும் அமைந்துள்ளனர்.

அமர்நீதி நாயனார் பிறந்த இடம் பழையாறை. அவர் வணிகம் வளர்த்த இடம் நல்லூர். இவ்விரு இடங்களிலுமே மாடக்கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. இரண்டு கோயில்களிலுமே அமர்நீதியாரின் சிற்பங்கள் இடம்பெற்றிருந்தபோதும் அவை அதிக அளவில் பொலிவது நல்லூரில்தான். தராசுத் தட்டேறி அவரும் அவர் குடும்பத்தாரும் நிற்கும் காட்சியை மரச்சிற்பமாக நல்லூர் நுழைவாயில் கதவில் காணமுடிவது குறிப்பிடத்தக்கது.

சிறப்புலி நாயனாருக்கு அவர் பிறந்த ஊரான ஆக்கூரில் எழுந்துள்ள மாடக்கோயிலில் தனிச் சிற்பம் அமைக்கப்பட்டு வழிபாட்டில் உள்ளது. சண்டேசுவரரின் சிற்பம் இருபத்தொரு மாடக்கோயில்களில் இடம்பெற்றுள்ளபோதும் அவற்றுள் பல சிற்பங்கள் சோழர் காலப் படைப்பாகக் காட்சியளித்த போதும் பெருவேளூரிலும் சேய்ஞலூரிலும் காணப்படும் சிற்பங்களே சிறப்புக்குரியனவாக மிளிர்கின்றன. இரண்டுமே ஒன்றையொன்று விஞ்சும் விதமாக எழில் கொண்டுள்ளன.

பன்னிரு ஆழ்வார்களுள் ஆண்டாள் கீழையூர், நகரி ஆகிய இரண்டு கோயில்களிலும் தனி விமானம் பெற்றுள்ளார். அவற்றுள் கீழையூர் விமானம் மாடக்கோயிலாக அமைந்துள்ளது. பல ஆழ்வார்கள் வைணவ மாடக்கோயில்களில் தனி விமானங்கள் பெற்றிருந்தபோதும் மங்கையாழ்வார் ஒருவரே நகரியில் மாடக்கோயில் அமைப்புடைய தனி விமானம் கொண்டுள்ளார்.

**முடிவுரை**

நாகபட்டினம் மாவட்டத்திலுள்ள தண்டலைநீள்நெறிக் கோயிலை, 'செருவருந்திய செம்பியன் கோச்செங்கணான் நிருபர் தண்டலை நீணெறி காண்மினே' என்று சம்பந்தர் பாடியிருந்தபோதும் கோயில் பின்னாளைய திருப்பணியால் மாடக்கோயில் அமைப்பை இழந்து உருமாறியுள்ளது. அது போலவே தலைச்சங்காட்டிலுள்ள நாண்மதியப் பெருமாள் கோயில் மங்கையாழ்வாரின் பாசுரம் பெற்று, வைகல் போல் மேடை மீது வீற்றிருந்தபோதும் அம்மேடை வெற்றுத்தளத்திற்குரிய உறுப்புகள் ஏதும் பெறாமையினாலும் பாசுரத்தில்

'மாடம்' என்ற சொல் இல்லாமையினாலும் அந்தப் பழங்கோயிலை மாடக்கோயிலாகக் கொள்ளமுடியவில்லை. மேடை மீது கட்டப்பட்டிருக்கும் கோயில்களை எல்லாம் மாடக்கோயில்களாகக் கொள்ள முடியாது என்பதாலேயே புதுப்பட்டி விஷ்ணு கோயிலும் இந்நூலில் இடம்பெறக்கூடவில்லை இந்நூலைக் கண்ணுறும் அன்பர்கள் தமிழ்நாட்டின் எந்தத் திக்கிலேனும் மாடக்கோயில்களைப் பார்க்க நேரின் அன்பு கூர்ந்து தெரியப்படுத்துங்கள். எண்ணிக்கை கூடின் இன்னொரு தொகுதி கொணர முயற்சிப்போம்.

மாடக்கோயில்களிடமிருந்தும் அவற்றை இந்த மண்ணில் மலரச் செய்த மதிப்புமிகு மன்னரான கோச்செங்கணானிடமிருந்தும் விடைபெறவேண்டிய காலம் கை முன் நிற்கிறது. கோயில் ஆய்வுக்குள் நுழைந்த நாளிலிருந்து கடந்த முப்பதாண்டுகளாக என்னுள் வளர்ந்தும் தளர்ந்தும் செழித்தும் செம்மாந்தும் கருக் கொண்டிருந்த மாடக்கோயில்கள் இன்று தாள்களில் தவழ்ந்து உங்கள் கண்களுக்கும் கருத்துக்கும் விருந்தாக விளைந்துள்ளன.

ஒரு தமிழ் மன்னரின் புதிய சிந்தனை இந்த நாட்டின் கலை வரலாற்றிற்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு கட்டுமான வடிவத்தை வழங்கியுள்ளமை நினைக்குந்தோறும் பெருமை தருகிறது. இந்தப் பெருமையை முறையான தரவுகளுடன் வரலாறாகப் பதிவு செய்வதற்காகத் தமிழ்நாட்டின் கிழக்கு மாவட்டங்களில் உழைப்பில் களிக்கும் இனிய உறவுகளுடன் உலவிய காலச் சூழல்களை நினைத்துப் பார்க்கிறேன். கருத்திலும் தேடலிலும் நேர்மை இருக்குமானால், கையிணைத்து உடன்வர உரியவர்களை வரலாறே அனுப்பி வைப்பதைப் பலமுறை நான் அனுபவித்து நெகிழ்ந்திருக்கிறேன்.

மாடக்கோயில் ஆய்வுகளின் மூன்று பருவங்களிலும் என்னுடன் உழைத்தவர்கள் என் உள்ளத்தில் நிறைந்தவர்கள் வரலாறு எனக்கென்று வழங்கிக் களித்த அந்த அன்புசால் உறவுகளுடன் கடும் கோடையிலும் இரவு இறங்கிய பிறகு கை விளக்குகளின் ஒளியிலும் சாரலிலும் தூறலிலும் ஏன் ஓரிரு முறை நனைக்கும் மழையிலும்கூட மாடக்கோயில்களில்

உண்மைகளின் தேடலில் ஒன்றி உழைத்த நினைவுகள் உள்ளத்தை நிறைத்துள்ளன.

இந்த மாடக்கோயில்களின் வடிவமும் எண்ணிக்கையும் அவை தோன்றிய காலச் சூழலின் தேவைக்கேற்ப அமைந்தவையே. பௌத்தமும் சமணமும் பேரெழுச்சியுடன் தமிழ் நாட்டில் பரவித் திளைத்ததாகக் கருதப்படும் கி. பி. 300க்கும் கி. பி. 600க்கும் இடைப்பட்ட காலத்தில் உள்நாட்டுச் சமயங்களை உயிர்ப்புடன் வைத்திருக்கவும் புறச் சமயங்களின் பரவலை ஓரளவிற்கேனும் குறைக்கவும் புத்தெழுச்சியும் புத்துணர்வும் மிக்க முயற்சிகள் தேவைப்பட்டிருக்கலாம். சமுதாயம் பல்விதமான நெருக்குதல்களுக்கு உள்ளாகியிருந்த அந்தக் காலகட்டத்தில் வாழ்ந்த பெருமைக்குரிய சோழ அரசராக இலக்கியங்களும் செப்பேடுகளும் வெளிச்சப்படுத்தும் கோச்செங்கணான், காலச் சூழலைக் கருத்தில் கொண்டு, சமுதாயத்தின் தேவை கருதி உருவாக்கிய புதிய கலைவடிவமான மாடக்கோயில், இருண்ட காலமாக வண்ணிக்கப்படும் மூன்று நூற்றாண்டுத் தமிழ்நாட்டு வரலாற்றின் எழுகதிரோன் என்றால் அது மிகையாகாது.

இரா. கலைக்கோவன்

---

## துணைநூல் பட்டியல்

### 1 முதல் நிலைச் சான்றுகள்

### 1. கல்வெட்டுகள்

1. Annual Report on Indian Epigraphy Volumes: 1910,1911, 1918, 1925, 1926, 1927, 1931-32, 1951-52, 1968-69.

2. South Indian Inscriptions Volumes: 3, 7, 13, 19,26.

3. Epigraphia Indica vol. XV.

4. Travancore Archaeological Series vol. 3.

5. Archaeological Survey of Southern India vol. 4.

6. Thiruttani and Velanjeri Copper Plates, State Department of Archaeology, Government of Tamilnadu, 1979.

7. நன்னிலம் கல்வெட்டுகள், தொகுதி 2, 3.

### 2. ஆகமங்கள், அகராதிகள், களஞ்சியங்கள்

1. காசியப சில்ப சாஸ்திரம், ஸ்ரீவாணி விலாஸம் பதிப்பகம், திருவரங்கம், 1968.

2. சில்பரத்தினம், சரசுவதி மகால் நூலக வெளியீடு, தஞ்சாவூர், 1989.

3. மயமதம், ஸ்ரீவாணி விலாஸம் பதிப்பகம், திருவரங்கம், 1966, 1968.

4. ஸ்ரீதத்துவநிதி, சரசுவதி மகால் நூலக வெளியீடு, தஞ்சாவூர், 1963, 1964, 1966.

5. தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி, சாந்தி சாதனா, சென்னை, 2002.

6. மதுரைத் தமிழ்ப் பேரகராதி, இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன் வெளியீடு, மதுரை.

7 அபிதான சிந்தாமணி, கழகம், 1956.

8. சிவப்பதிகள் வரலாறு, கழகம், சென்னை.

9. தமிழ் நாவலர் சரிதை, கழக வெளியீடு, சென்னை

### 3. இலக்கியங்கள்

1.கலிங்கத்துப்பரணி, கழக வெளியீடு, சென்னை.

2. திருத்தொண்டர் புராணம், திருப்பனந்தாள் மடம் வெளியீடு, 1982.

3. திருத்தொண்டர்புராணம், மூன்றாம் பகுதி - இரண் டாம் பாகம், சேக்கிழார் நிலையம், கோயமுத்தூர், 1980.

4. நாலாயிர திவ்வியப் பிரபந்தம், திருவேங்கடத்தான் திருமன்றம் வெளியீடு, சென்னை, 1973.

5. திருமுறைகள் 1 - 7, தருமபுர ஆதீன பதிப்பு, 1953, 1954, 1955, 1957, 1961, 1963, 1964.

6. தேவார அடங்கன்முறை, முதல் பாகம், மயிலை இளமுருகனார் பதிப்பு, சென்னை, 1953.

7. புறநானூறு, கழக வெளியீடு, சென்னை.

8. மூவருலா, கழக வெளியீடு, சென்னை.


**II இரண்டாம் நிலைச் சான்றுகள்**

**1. தமிழ் நூல்கள்**


1.அகிலா, அர., கலைக்கோவன், இரா, ஒருகல் தளிகள் ஒன்பது, டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி, 2009.

2. அரசு, பெரியபுராண வசனம் அல்லது திருத்தொண்டர் வரலாறு, கழகம், சென்னை, 1979.

3. ஆசிரியர் குழு, தமிழ்நாட்டு வரலாறு, பல்லவர் - பாண்டி யர் காலம், முதல், இரண்டாம் தொகுதிகள்; சோழப் பெருவேந்தர் காலம், முதல், இரண்டாம் தொகுதிகள்; பாண்டியப் பெருவேந்தர் காலம், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை, 1990, 1997, 1998, 2000.

4. இராசமாணிக்கனார், மா, தமிழ்நாட்டு வரலாறு, இரண்டு தொகுதிகள், காவ்யா பதிப்பகம், சென்னை, 2008.

5. இராசமாணிக்கனார், மா., சோழர் வரலாறு, டுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி, சென்னை, 1952.

6.இராசமாணிக்கனார், மா., சைவ சமய வளர்ச்சி, பூங்கொடிப் பதிப்பகம், சென்னை, 1999.

7 பல்லவர் வரலாறு, கழக வெளியீடு, சென்னை, 2000.

8.இராசவேல், சு., சேஷாத்திரி, அ. கி, தமிழ்நாட்டுக் குடை வரைக் கோயில்கள், பண்பாட்டு வெளியீட்டகம், சென்னை, 2000.

9. கணபதி ஸ்தபதி, வை., சிற்பச் செந்நூல், தொழில் நுட்பக் கல்வி இயக்கக வெளியீடு, சென்னை, 1978. 10. கலைக்கோவன், இரா., காட்டுக்குள் ஒரு கலைக் கோயில், கழகம், சென்னை, 1986.

11. கலைக்கோவன், இரா, கலை வளர்த்த திருக்கோயில்கள், கழகம், சென்னை, 1984.

12. கலைக்கோவன், இரா, எழில் கொஞ்சும் எறும்பியூர், கழகம், சென்னை, 1987.

13. சதாசிவ பண்டாரத்தார், தி. வை., பிற்காலச் சோழர் சரித்திரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1974.

14. சீனிவாச ஐயங்கார், பி. தி. பல்லவர் சரித்திரம், கழக வெளியீடு, சென்னை.

15.சேதுராமன், என்., பாண்டியர் வரலாறு, இராமன் அண்டு இராமன் கம்பெனி, கும்பகோணம், 1989.

16. துடிசை கிழார், பண்டைக் காலச் சேர மன்னர்கள் வரலாறு, கழக வெளியீடு, சென்னை.

17. நளினி, மு., பாதைகளைத் தேடிய பயணங்கள், சேகர் பதிப்பகம், சென்னை, 2009.

18. நளினி, மு., கலைக்கோவன், இரா., மகேந்திரர் குடை வரைகள், அலமு பதிப்பகம், சென்னை, 2004.

19. ...பெண்தெய்வ வழிபாடு தோற்றமும் வளர்ச்சியும், டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி, 2005.

20. ...... மதுரை மாவட்டக் குடைவரைகள், டாக்டர் மா. இராச மாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி,2007.

21.பரந்தாமனார், அ. கி., மதுரை நாயக்கர் வரலாறு, பாரி நிலையம், சென்னை, 1971.

22 பாலசுப்பிரமணியம், எஸ். ஆர், முற்காலச் சோழர் கலை யும் சிற்பமும், தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1966.

23.பாலசுப்பிரமணியம், எம்., குடவாயிற் கோட்டம், வரலாற்றுப் பேரவை, சென்னை, 1978.

## 2. English Books

1. Alice Boner, Principles of Composition in Hindu Sculpture, Motilal Banarsidass Publishers Pvt. Ltd., Delhi and Indira Gandhi National Centre for the Arts, New Delhi, 1990.

2. Anne Marie Gaston, Siva in Dance, Myth and Iconography, Madras, Oxford University Press, Madras, 1982.

3. Champakalakshmi, R., Vaisnava Iconography in the Tamil Country, Orient Longman, New Delhi, 1981.

4. Daniel Smith, H., Vaishnava Iconography, Pancaratra Parisodhana Parisad, Madras, 1969.

5. Gopinatha Rao, T.A., Elements of Hindu Iconography, Two vols., Motilal Banarsidass, Madras, 1974.

6.Gravely, F.H., Sivaramamurti, C., An Introduction to South Indian Temple Architecture and Sculpture, Udaya Printers, Madras, 1992.

7. Longhurst, A.H., Pallava Architecture, Two Vols., Cosmo Publications, New Delhi, 1982.

8. Manomohan Gosh (Translator), The Natyasastra, Manisha Grantalaya Pvt. Ltd., Calcutta, 1967.

9.Michael W. Meister (Ed.), Discourses on Siva, Vakils, Feffer and Simons Ltd., Bombay, 1984.

10. ....., Encyclopaedia of Indian Temple Architecture, South India Lower Dravida Desa, American Institute of Indian Studies, New Delhi, 1983.

11. Minakshi,C., Administration and Social Life Under the Pallavas, University of Madras, 1977.

12…… The Cholas, Madras University Press, Chennai, 1955.

13. Nilakanta Sastri, K.A., A History of South India, Oxford University Press, Madras, 1975.

14. Robert Sewell, A Forgotten Empire, Asian Educational Services, New Delhi, 1984.

15. Sathyanatha Aiyar, R., History of the Nayaks of Madura, University of Madras, 1980.

16. Shanmugam, P., The Revenue System of the Cholas 850-1279, New Era Publications, Madras, 1987.

17. Soundararajan, K.V., Rock-cut Temple Styles, Somaiya Publications Pvt. Ltd., 1998.

18. Srinivasan, K. R., Cave-Temples of the Pallavas, ASI, New Delhi, 1964.

19……….Temples of South India, National Book Trust, New Delhi, 1998.

20. Stella Kramarisch, Indian Sculpture, Motilal Banarsidass, Delhi, 1981.

21. Subbarayalu, Y., Political Geography of the Chola Country, State Department of Archaeology, Chennai, 1973.

## 3. Dissertation

1.Veni Devi, K., Tamilagam - A. D. 300 - A. D. 600, Ph. D. Dissertation submitted to Bharathidasan University, Thiruchirappalli, 2002.

## 4. இதழ்கள்

1 வரலாறு ஆய்விதழ் 1-20 தொகுதிகள், டாக்டர் மா. இராச மாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி.

2. திருவைகல் மாடக்கோயில்', திருக்கோயில், மார்ச்சு,1982.

3. 'திருநன்னிலத்துப் பெருங்கோயில்', திருக்கோயில், ஜூலை ஆகஸ்டு, 1982.

4. 'திருஅம்பர்ப் பெருந்திருக்கோயில்', செந்தமிழ்ச் செல்வி, செப்டம்பர், 1982.

5. ‘நல்லூருக்கு வா', மாலை முரசு, 13. 11. 1982.

6. 'கோச்செங்கணான் யார்?' செந்தமிழ்ச் செல்வி, நவம்பர் 1982-GLD 1983.

7. 'ஆயிரத்தில் ஒருவருக்காய் அமைந்த அழகிய தான் தோன்றி மாடம்', தமிழ்ப் பொழில், ஜனவரி, பிப்ருவரி, 1983.

8. 'கோச்செங்கட் சோழனின் கோணேசர் பெருங்கோயில்', திருக்கோயில், பிப்ருவரி, 1983.

9. 'மனத்துணைநாதர் திருக்கோயில்', தினமணி சுடர், 27. 2. 1983.

10. 'திருத்தேவூர்', திருக்கோயில், மார்ச்சு, 1983.

11. 'கீழ்வேளூர் மாடக்கோயில்' திருக்கோயில், ஜூலை, ஆகஸ்டு, 1983

12. 'சைவமும் வைணவமும் தழைத்தோங்கும் தலைச் சங்காடு', செந்தமிழ்ச் செல்வி, செப்டம்பர், அக்டோபர், 1983.

13. 'அப்பர் பாடிய ஆறைவடதளி' செந்தமிழ்ச் செல்வி, ஏப்ரல் - ஜூன், 1984.

14. 'கோச்செங்கணானின் மாடக்கோயில்கள்' கல்வெட்டு, ஜூன், 1984.

15. 'பூவார் அடிச்சுவடு, கலைமகள், ஜனவரி, 1985.

16.'மோனத் தவத்திலொரு மாடமேற்றளி', தினமணிகதிர், 13. 10. 1985.

17. 'திருப்பேர்நகர்', திருக்கோயில், மார்ச்சு, 1986.

18. 'நாலூர் மாடக்கோயில்', அமுத சுரபி, ஆகஸ்டு, 1987. 19. 'ஆவூர்ப் பழம்பதி', அமுத சுரபி தீபாவளி மலர், 1999.

20. 'பொக்கணம்', கலைமகள், தீபாவளி மலர், 1999.

**5. நாளிதழ்கள்**

1. தினமணி 9.12. 2000, 29. 3. 2001, 16. 5. 2003, 1. 2. 2010, 9.7. 2010.

2. தினமலர் 12.12. 2000, 29, 3. 2001.

3.The Hindu 12. 12. 2000, 3. 4. 2001, 23. 5. 2003, 3. 2. 2010. 31. 5. 2010, 12. 7. 2010.



பசுபதிகோயில் விமானம்




பசுபதிகோயில் சாமுண்டி


நல்லூர் உச்சிஷ்ட கணபதி



நல்லூர் விமானம்




நல்லூர் வெற்றுத்தளம்




நல்லூர்க் கொற்றவை



நல்லூர் விமான மேற்றளம்



ஆவூர் ஆலமர் அண்ணல்



ஆரூர் விமானம்




ஆறைவடதளி விமானம்





ஆறைவடதளி இசைக்குழு




சேய்ஞலூர் விமானம்





சேய்ஞலூர் சண்டேசுவரர்



தலைஞாயிறு விமானம்



3 நாலூர் விமானம்




நறையூர் மண்டபப் புறச்சுவர்




நறையூர்ப் பொன்னியம்மன்



நறையூர் ஆடல்தொகுதி



குடவாயில் விமானம்





நன்னிலம் விமானம்




அம்பர் விமானம்




அம்பர் தேர்ச்சிற்பம்





வைகல் விமானம்




மலையீசுவரம் விமானம்




சட்டநாதர் விமானம்



கீழ்வேளூர் சோமாஸ்கந்தர் விமானம்




கீழ்வேளூர் கிரீவ, சிகரக் கட்டுமானம்




கீழ்வேளூர் வீணாதரர்



வலிவலம் விமானம்



தேவூர் விமானம்



சங்காரண்யேசுவரர் வெற்றுத்தளம்




சங்காரண்யேசுவரர் கொற்றவை




தட்சிணபுரீசுவரர் விமானம்



24 ஆக்கூர் விமானம்




ஆக்கூர் ஆயிரத்தில் ஒருவர்



திருவிளையாட்டம் விமானம்




பண்டாரவாடை விமானம்




பெருவேளூர் சோமாஸ்கந்தர் விமானம்




பெருவேளூர் யோக சண்டேசுவரர்





பெருவேளூர் சண்டேசுவரர்




நாங்கூர் வெற்றுத்தளம்



நகரி மங்கையாழ்வார் விமானம்



இந்தளூர் விமானம்





கீழையூர் விமானம்





கீழையூர்க் கல்வெட்டு



திருப்பேர்நகர் வெற்றுத்தளம்




ஆலம்பாக்கம் விமானம்



இறையாநரையூர் விமானம்




இறையாநரையூர்ச் சாமுண்டி




இறையாநரையூர் விக்னேசுவரி



பெருங்கடம்பனூர் விமானம்


மலைக்க வைக்கும் மாடக்கோயில்கள்
டாக்டர் மா.இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
C-87, பத்தாம் குறுக்கு, தில்லை நகர், திருச்சிராப்பள்ளி-620 018.
கோ. வேணி தேவி
இரா.கலைக்கோவன்
மலைக்க வைக்கும்
மாடக்கோயில்கள்


மலைக்க வைக்கும் மாடக்கோயில்கள்
டாக்டர் மா.இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
C-87, பத்தாம் குறுக்கு, தில்லை நகர், திருச்சிராப்பள்ளி-620 018.
கோ. வேணி தேவி
இரா.கலைக்கோவன்
மலைக்க வைக்கும்
மாடக்கோயில்கள்